அந்திவண்ணம் - சிவன், மாலைக் காலம்.

அந்து - கிணறு, நெல்லந்து, பாதகிண்கிணி.

அந்துகம் - சங்கிலி, யானைச் சங்கிலி.

அந்தேசாலம் - தேற்று.

அந்தேவாசி - சண்டாளன், மாணக்கன்.

அந்தோ - அதிசயவிரக்கச்சொல், இரக்கச்சொல்.

அந்தோர் - நெல்லி.

அந்நலார் - அழகியபெண்கள்.

அந்நிய புஷ்டம் - குயில்.

அந்நியம் - அயல், குயில், வேறு.

அந்நியர் - பிறர்.

அந்நியோந்நியம் - ஒற்றுமை.

அப - ஓருபஸர்க்கம்.

அபகரணம் - அடாதசெயல்.

அபகாரம் - களவு, தீமை, நன்மைக்குத்தீமை செய்வது.

அபகீர்த்தி - நிந்தை.

அபக்கியாதி - அவமானம்.

அபக்குவம் - பக்குவமின்மை.

அபங்கம் - ஓர் பிரபந்தவகை, கோகை பாஷாணம், பங்கமின்மை

அபசகுனம் - துர்க்குறி.

அபசத்தம் } அமங்கல மொழி,
அபசப்தம் } வழுச்சொல், வீண்சொல்

அபசயம் - குறைதல்.

அபசயம் } தோல்வி
அபஜயம் }

அபசரணம் - புறப்பாடு.

அபசரிதம் } தீயொழுக்கம்,
அபசரிதை } துர்ச்சரித்திரம்.

அபசவ்வியம் } வலது பக்கம்.
அபஸவ்யம் }

அபசாரம் - அவமதிப்பு, உபசாரமின்மை, துர்நடத்தை.

அபச்சாயை } சாயையற்றது.
அவச்சாயை }

அபட்சம் - விரோதம்.

அபட்சை - பாம்பினச்சுப்பற்களி லொன்று.

அபதூறு - பழமொழி.

அபதேசம் - தந்திரம்.

அபத்தம் - பொய்.

அபத்தி - பத்தியின்மை.

அபத்தியம் - இச்சாபத்தியம் மீறல், பத்தியத்தவறு, பிள்ளை.

அபநயனம் - அழிதல், அழித்தல், எடுத்தல், கடன் கழித்தல்.

அபநீதம் - அபகரிக்கப்பட்டது, இறுக்கப்பட்டது.

அபநோதம் - அகற்றுதல், நீக்குதல்.

அபமம் - கீழ்க்கதி.

அபமிருத்தியு - துர்மரணம்.

அபயகரம் } அபய மளிக்
அபயஹஸ்தம் } குங்கை, பயந்தீர
அபயாஸ்தம் } வமைக்குங்கை.

அபயம் - அச்சமின்மை, அடைக்கலம், தயை.

அபயர் - படைவீரர்.

அபயவாக்கு - அஞ்சாதேயெனுஞ் சொல்.

அபயன் - அருகன், கடவுள், சூரன், சோழன்.

அபரஞானம் - சிவ தத்துவமைந்திலொன்று.

அபரபக்கம் } தேய்பிறை.
அபரபக்ஷம் }

அபரமுத்தி } பதமுத்தி.
அபரமுக்தி }

அபரம் - எதிர், கவசம், நரகம், பிணக்கு, பிந்தினது, பின்பக்கம், பின், முதுகு, மேற்கு.

அபராத்திரம் - கடைச்சாமம்.

அபரவயசு - முதிர்ந்தவயது.

அபரவாக்கியம் - பீஜகணிகத்திலும் வானசாஸ்திரத்திலும் வரும் ஒரு ஸங்கேதபதம்.

அபரவிந்து - சிவதத்துவமைந்தினொன்று.

அபராசிதன் - சிவன்.

அபராணம் } அந்திப்பொழுது
அபராண்ஹம் }

அபராதம் - குற்றம், தண்டித்தல்

அபராதி - குற்றம் செய்பவன், குற்றவாளி, தோஷி.

அபரிச்சதம் - நிருவாணம், பிரிக்கப்படாதது.

அபரிமாணம் - அளவின்மை.

அபரிமிதம் - அளவின்மை, பெருமை.

அபரியந்தம் - மட்டில்லாமை.

அபரூபம் - அருமை, அவலக்ஷணம்.

அபரோட்சஞானம் } பிரம்ம சைதன்னிய தரிசனம்.
அபரோக்ஷஞானம் }

அபரோட்சம் } கடவுளுடைய தரிசனம் அல்லது ஸாந்நித்யம்.
அபரோக்ஷம் }

அபலம் - பலவீனம், பலனற்றது.

அபவம் - திமிங்கலம்.

அபவருக்கம் - நிறைவேற்றம், பலம், முடிவு, முத்தி, விடுதல்.

அபவாதம் - தூறு, மாறுகோள் பழிச்சொல், பிரதிவாதம்.

அபவாரணம் - மறைவு.

அபாகம் - பாகமின்மை.

அபாகரணம் - கடனிறுத்தல்.

அபாங்கம் - கடைக்கண், கடைக்கண் பார்வை, திலகம்.

அபாசம் - புரட்டு, விருப்பின்மை.

அபாஷணம் - மௌனம்.

அபாண்டம் - இடுநிந்தை, வீண் பழி சுமத்துதல்.

அபாதானம் - ஐந்தாம் வேற்றுமையின் எல்லைப்பொருள்.

அபாத்திரம் - ஒன்றுக்கு முதவாதது, பாத்திரமின்மை.

அபானன் - பத்து வாயுக்களிலொன்று.

அபாமார்க்கம் - நாயுருவி.

அபாயம் - அழிவு, இன்மை, எழுச்சி, ஒவ்வாமை, சதியோசனை, நஷ்டம், பிரிவு, மரணம், மோசம், வஞ்சகம்.

அபாரணை - உண்ணாமை,

அபாரம் - அளவின்மை, பரம்பொருள்.

அபாவம் - இன்மை, நியாயநூலிலோரளவை.

அபானம் - குதம்.

அபிகாதம் - அடித்தல், வருத்தம்.

அபிகாயம் - ஓர்காசம்.

அபிகாரம் - கொள்ளையிடல், தாக்கல், படையெடுத்தல்.

அபிசரன் - தோழன்.

அபிசாரம் - மந்திரவித்தை.

அபிசாரி / அபிசாரிகை } வியபசாரி, வேசி.

அபிசித்து - ஓரொட்டு நக்ஷத்திரம்.

அபிஷங்கம் - சாபம்.

அபிஷேகம் - திருமுழுக்கு.

அபிட்டம் - இரதம்.

அபிதாநம் / அபிதேயம் } பெயர்.

அபிநயம் - அபிநயநூல், கைமெய் காட்டல்.

அபிநவம் - புதுமை.

அபிநிவேசம் - தொழிற்பிரவேசம்.

அபிப்பிராயம் - உட்கருத்து, மறைபொருள்.

அபிமதம் - ஸம்மதம்.

அபிமந்திரணம் - பிரதிஷ்டை, மந்திரித்தல்.

அபிமன்யு - அருச்சுனன் மைந்தன்.

அபிமாநம் - உயர்குணம், களிப்பு, ஸம்மானம்.

அபிமுகம் - முன்னிலை.

அபியோகம் - தடை, போர், போருக்கழக்கை.

அபிரங்கி - கருநெல்லி.

அபிரக்ஷை - ஸர்வரக்ஷை.

அபிரதி - இன்பம், தொழில்.

அபிராமம் - அழகு.

அபிராமி - ஸரஸ்வதி.

அபிருசி - கீர்த்திப்பிரியம்.

அபிரூபன் - அறிவுடையோன், காமன், சந்திரன், சிவன், விஷ்ணு இவர்கள் பெயர்.

அபிலாஷம் - விருப்பம்.

அபிவியக்தம் - தெளிவு, வெளிப்படை.

அபிவியாப்தி - ஸர்வவியாபகம்.

அபிவிருத்தி - பெருக்கம்.

அபின்னம் - ஒற்றுமை.

அபின்னசக்தி - மாயை.

அபீடனம் - சாந்தம்.

அபீஷ்டம் - மிகுவிருப்பம்.

அபீரன் - இடையன்.

அபூதம் - இன்மை.

அபூபம் - அப்பவர்க்கம்.

அபேதம் - பேதமின்மை.

அப்பட்டா - வட்டத்திருப்பி.

அப்பம் - அடை, சிற்றுண்டி, புட்டுத்திருப்பி.

அப்பர் - திருநாவுக்கரையர்.

அப்பல் - சாந்துமுதலியவணிதல், மோதல், வியங்கோண் முற்று.

அப்பன் - தகப்பன்.

அப்பிரமேயம் - ஒரெண், எல்லை யின்மை.

அப்பியங்கம் } முழுக எண்ணை
அப்பியங்கனம் } பூசுதல்.

அப்யஞ்ஜநம் - எண்ணெ பூசல், மைதீட்டடல்.

அப்யாகதன் - அடுத்து வந்தவன், அதிதி.

அப்பிரகம் - ஓர்வகை யோகம்.

அப்பிரகாசம் - இருள்.

அப்பிரதக்ஷிணம் - இடசாரியாய் சுற்றுதல்.

அப்பிரதானி - ஸாமானியன்.

அப்பிரமு } கீழ்த்திசை யானைக்
அப்பிரமை } குப் பெண்யானை.

அப்பிரம் - மேகம்.

அப்பிராகிருதசரீரம் - மேலான சரீரம்.

அப்பிராகிருதம் - நூதனம்.

அப்பு-அப்பென்னுமேவல், கடல், நீர், பாதிரிமரம்.

அப்புது - யானைப்பாகன் தட்டு மோசை.

அப்புருத்தூணி - சரகாண்ட பாஷாணம்.

அப்பை - அப்பைக்கொடி, கொன்றை.

அமங்கலம் - மங்கலமின்மை.

அமங்கலி }
அமங்கலை } கைம்பெண்.

அமச்சன் - மந்திரி, வியாழன்.

அமச்சியல் - மந்திராலோசனைச் சபை, மந்திரித்தொழில், குற ளின் பொருட்பாலுளோரியல்.

அமச்சு - மந்திரி, மந்திரித் தொழில்.

அமணம்-இருபதினுயிரம், பாக்கு.

அமணர் - சமணர்.

அமண் - சமணமதம்.

அமண்டம் - ஆமணக்கு.

அமதி - மதியின்மை.

அமரசயம் }
அமராசயம் } அசனுசயம்.

அமரசிலைக்கந்தகம் - ஓர் வகைக் கந்தகம்,

அமரமாதர் - தெய்வமாதர்.

அமரம் - ஆயிரம் காலாட்படை யாட்சி, ஓர்நோய், சுவத்திரிகம், வடமொழியினோர் நிகண்டு.

அமரர் - சுரர், பகைவர், வானோர்.

அமராபதி - கடவுள், இந்திரன், தேவலோகம்.

அமராபரணன் - சண்டையையே ஆபரணமாகக் கொண்டவன்.

அமரார் - பகைவர்.

அமராவதி - தேவேந்திரநகரம்.

அமராவதியோன் - தேவேந் திரன்.

அமரி - அமிழ்து, சிறுநீர், துர்க்கை, விஷம்.

அமரியம் - குருந்து, செண்பகப்பூ.

அமரியுப்பு - சிறுநீரில் விளையுமுப்பு.

அமரேசன் - இந்திரன்.

அமர் - அமரென்னேவல், உக்கிரம், போர், மதில், யுத்தம்.

அமர்க்களம் - போர்க்களம்.

அமர்தல் - அமைதல், இருத்தல், இளைப்பாறுதல், படிதல், பெருமை, பொருந்தல், பொலிவு, மிகுதி, விரும்பல்.

அமர்த்தல் - அமர்த்துதல், பொருதல்.

அமலம் - அழகு, அழுக்கின்மை.

அமலன் - அருகன், கடவுள், சிவன், மலயிலி, விஷ்ணு.

அமலை - இலக்குமி, ஒலி, கடுக்காய், சோறு, பார்வதி, மிகுதி.

அமல் - மிகுதி.

அமளி - மக்கட்படுக்கை, மெத்தை.

அமளை - ஓர் பூடு.

அமாத்தியர் - தந்திரிகள், மந்திரிகள்.

அமார்க்கம் - வேதப்புரட்டு, துன்மார்க்கம்.

அமாவசி
அமாவாசி
அமாவாசியை } இரவிமதி யோகம்.

அமானம் - அளவின்மை.

அமிசம் - பின்னம், மேல்வாயிலக்கணம்.

அமிசு - அணு, ஒளி, சூரியன்.

அமிதம் - அளவின்மை.

அமித்திரன் - பகைவன்.

அமிர்தகலை - சந்திரகலை.

அமிர்தகிரணன் - சந்திரன்.

அமிர்தசஞ்சீவினி - உயிர்தரு மருந்து.

அமிர்தபிந்து - உபநிஷதமுப்பத்திரண்டி லொன்று.

அமிர்தம் - அமுதம், அழியாமை, இனிமை, நீர், மூர்ச்சை தீர்த்துயிர்மருந்து, மோக்ஷம்.

அமிர்தவல்லி - அமுதவல்லி.

அமிர்தன் - கடவுள்.

அமிர்தாசனர்
அமுதாசனர் } தேவர்.

அமிர்தை - அழிவின்மை.

அமிழ்தம் - அமுதம்.

அமிழ்தல் - ஆழ்தல்.

அமிழ்து - அமிர்தம், அமிழ்தம், அமுதம், இனிமை, சாவா மருந்து.

அமித்தல் - ஆழ்த்தல்.

அமுக்கல் - அழுத்தல்.

அமுசம் - சிறு செருப்படை.

அமுசு - ஒட்டடை.

அமுதகிரணன் - சந்திரன்.

அமுதங்கம் - சதுரக்கள்ளி.

அமுததாரணை - ஆகாரமில்லாத போதும் திவ்யசக்தியால் தேகத்தைத் தரித்துக்கொண் டிருத்தல்.

அமுதபுஷ்பம் - சிறு குறிஞ்சா.

அமுதம் - அமிழ்தம், அமுததா ரணை, இனிமை, சீந்தில், தயிர், திரிகடுகு, திரிபலை, தேவ ருணவு நீர், பால், பெருமை, முக்தி, மூர்ச்சை தீர்த்துயிர் தருமருந்து, வேண்டல்.

அமுதயோகம் - சுபயோகம்.

அமுதர் - இடையர்.

அமுதவல்லி - சீந்திற்கொடி.

அமுதவெழுத்து - சொல் முத லில் வரத்தகும் சுபவெழுத்து.

அமுதாரி - பூனைக்காலி.

அமுது - அமுதம், சுவை, சோறு, நீர், பால்.

அமுதுசெய்தல் - புசித்தல்.

அமுத்தம் - வசநாபி.

அமுரி - சிறுநீர்.

அமூர்த்தம் - உருவின்மை.

அமூர்த்தன், அமூர்த்தி - உருவிலான்.

அமூர்த்திசாதாக்கியம் - சிவனு டைய நடிக்கத்தக்க உருவங் களிலொன்று.

அமேத்தியம் - அழுக்கு, மலம்.

அமை - அமாவாசை, அமை யென்றுமேவல், மூங்கில்.

அமைச்சர் - மந்திரிகள்.

அமைச்சு - மந்திரி, மந்திரித் தொழில்.

அமைதல் - ஸம்மதித்தல், பொருந்தல்.

அமைதி - அடக்கம், சமயம், தன்மை, மாட்சிமை.

அமைத்தல் - சமைத்தல், செய் தல்.

அமைத்தோள் - மூங்கில்போன்ற தோள்.

அமைபவன் - பொருந்தி இருப் பவன்.

அமையம் - காலம்.

அமைவரவு - தன்அறிவினிடத்து நிறைதல்.

அமைவன் - அடக்கமுடையோன், அருகன், அறிவுடையோன், ஞானி, துறந்தோன்.

அமோகம் - குறைவில்லாதது, மிகுதி.

அம் - அழகு, இடைச்சொல், சாரியை, தன்மைப் பெயர் விகுதி நீர், மேகம், வினைப் பெயர் விகுதி.

அம்சம் - அன்னம், பகுதி.

அம்பகம் - உத்தரவு, எழுச்சி, கண், செம்பு.

அம்பகன் - சீர்பந்த பாஷாணம்.

அம்படம் - புழுக்கொல்லி.

அம்படலம் - அம்மி, இரதம், ஈயம், ஓடம், மரக்கால், வெளி, வெள்ளி.

அம்பணத்தி - துர்க்கை.

அம்பணம் - ஆமை,துலாக்கோல், நீர், மரக்கால், வாழை.

அம்பணவர் - ஓர்சாதி.

அம்பரம் - ஆகாயம், கடல், சீலை, திசை, மஞ்சம்.

அம்பரை - நிமிளை.

அம்பரைநாதம் - அப்பிரகம்.

அம்பர் - அவ்விடம்.

அம்பலத்தி - தான்றி, தில்லை.

அம்பலம் - சபை, சித்திரகூடம், வெளி.

அம்பலவிருட்சம் - தில்லைமரம்.

அம்பல் - ஓர்தேயம், சிலரறிந்து தம்முட் புறங்கூறல், பழமொழி.

அம்பாவிகை - தருமதேவதை, துர்க்கை, பாண்டுவின்தாய்.

அம்பால் - தோட்டம்.

அம்பாவனம் - சரபம்.

அம்பி - இறைகூடை, ஓடம், சலசூத்திரம், தாமணி, தெப்பம், மரக்கலம், மிடா.

அம்பிகை - காளி, தருமதேவதை திருதராஷ்டிரன் தாய், பார்வதி.

அம்பிகைதநயன் - விநாயகன்.

அம்பிகைபாகன் - சிவன்.

அம்பு - எலுமிச்சை, கணை, சரகாண்ட பாஷாணம், தளிர், நீர், பாதிரிமரம், மூங்கில், மேகம்.

அம்புஜம்
அம்புசாதம் } தாமரை.

அம்புதம் - கோரை, நீர், மேகம்.

அம்புதி
அம்புநிதி } கடல், ஸமுத்திரம்.

அம்புயத்தவன்
அம்புயன் } பிரமன்.

அம்புயம்-இறைகூடை, தாமரை, நீரில் பரப்பன, நீர், புட்டில்.

அம்புயன் - பிரமன்.

அம்புராசி - கடல்.

அம்புலி - சந்திரன், அம்புலிப் பருவம்.

அம்புவாகினி - எலுமிச்சை, பாதிரிப்பூ.

அம்புவி - பூமி.

அம்பை - காசிராஜன் புத்திரி, வெட்டுவேர்.

அம்போசம் - தாமரை.

அம்போசன் - சந்திரன்.

அம்போதம் - முகில்.

அம்போதரங்கம் - கடலலை, கலிப்பாவினோருறுப்பு.

அம்போதி - கடல், காற்று, பாட்டினருத்தம்.

அம்போருகம் - தாமரை.

அம்ம-உரையசைச்சொல்,(உ-ம்.) பயனின்று மன்றம்ம காமம், கேளெனல், (உ-ம்.) அம்ம வாழி தோழி.

அம்மம் - முலை.

அம்மனை - அம்மானைக்காய், தாய்.

அம்மா - அதிசயக்குறிப்பு.

அம்மானை - ஓர் பிரபந்தம், ஓர் விளையாட்டு.

அம்மான் - தகப்பன், மாமன்.

அம்மான்பச்சரிசி - சிற்றிலைப் பாலாவிப்பூண்டு, சிதேவியார், செங்கழுநீர்.

அம்மி - அம்மிக்கல்

அம்மியம் - கள், காளம், சிறு சின்னம்.

அம்மிளம் - புளிப்பு.

அம்முதல் - அகரமுதல், அடைத்தல், உண்டல், மூடுதல்.

அம்மெனல் - ஒலிக்குறிப்பு.

அம்மை-அழகு, தருமதேவதை, தவப்பெண், தாய், பார்வதி, பாவினெண்வகை வனப்பி ஞென்று, வசூரி, வருபிறப்பு.

அம்மையார்கூந்தல் - சவரியார் கூந்தல்.

அயகம் - சிறுகுறிஞ்சா, வசம்பு.

அயக்கிரீவன் - ஓரசுரன், திருமால்.

அயக்களங்கு - இருப்புத்துரு.

அயக்காந்தம் - ஊசிக்காந்தம்.

அயசு - பொல்லாநிலம், உருக்கு.

அயசுபடில் - வெள்ளியமணல்.

அயதி - திருநாமப்பாலை.

அயச்சிந்தூரம் - இரும்புச்சிந்தூரம்.

அயத்தின்சாரம் - இரும்புக்கிட்டம்.

அயத்தி - ஓர் பாஷாணம்.

அயநம் - பிறப்பு, வருஷப்பாதி, வருஷம், வழி, வீடு.

அயபற்பம் - இரும்பு நீறு.

அயமரம் - அலரி.

அயமாரணம் - அரச மரம்.

அயமி - வெண்கடுகு.

அயம் - அதிட்டம், அரப்பொடி, அலரி, ஆடு, இரும்பு, குதிரை, குளம், குழி, சேறு, நல்வினை, நிலம், நீர், விழா.

அயர் - வருத்தம், வாட்டம்.

அயர்ச்சி - மறதி, சோர்வு.

அயர்தல் - செய்தல், சோர்தல், தளர்தல்.

அயர்த்தல் - அயர்வு, மறத்தல்.

அயர்ப்பு - மறதி, மறப்பு.

அயர்வு - அகலம், உன்மத்தம், சோம்பு, தளர்வு, வருத்தம், வெறுப்பு.

அயர்வுயிர்த்தல்-வருத்தந் தீர்தல்.

அயல் - அருகிடம், இடம், அன்னியம், எழன் உருபு.

அயவாகனன் - அக்கினிதேவன்.

அயவாரி - வசம்பு.

அயவி - சிற்றரத்தை.

அயவு - அகலம்.

அயனசலனம் - அயனுமிசத்திற்கு முன் செல்லுதல்.

அயனமண்டலம் - அயனங்களில் சூரியன் செல்லும் வட்டம்.

அயனம் - கதி, பரிதி, பிறப்பு, பூ, வருஷப்பாதி, வழி, வேதம்.

அயற்றிருபு - ஈற்றியல் எழுத்துத் திரிதல்.

அயனாள் - உரோகிணிநாள், பிரமன், வாழ்நாள்.

அயனூருவிலுதித்தோர் - வைசியர்.

அயன் - அருகன், தசரதன் தந்தை, பிரமன்.

அயன் - கிரமமான, சரியான, சர்க்காரைச் சார்ந்த, சாதாரணமான.

அயன்பதத்துதித்தோர்-சூத்திரர்

அயன்மனைவி - ஸரஸ்வதி.

அயன்முகத்துதித்தோர் - அந்தணர்.

அயன்றோளுதித்தோர் - அரசர்.

அயிகம் - ஊமத்தை.

அயிக்கியம் - ஐக்கியம், ஒன்றுகக் கலத்தல்.

அயிணம் - ஐணம், மான்றோல்.

அயிப்பை - ஓர் செடி.

அயிரம் - கண்டசருக்கரை.

அயிராணி-இந்திராணி, பார்வதி.

அயிராவதப்பாகன் - தேவேந்திரன்.

அயிராவதம் - கீழ்த்திசையானை, தேவேந்திரன் யானை.

அயிரி - நெட்டிப்புல், மீன் முள்ளரிந்திடுகத்தி.

அயிரியம் - நெட்டிச்செடி.

அயிரை - ஓர்வகைமீன், நுண்மணல், நுண்மை.

அயிர்த்தல் - அநுமானித்தல், எழில்பிடித்தல், ஐயப்படல்.

அயிர்ப்பு - சந்தேஹம்.

அயிலல் - உண்ணல், உண்டல்.

அயிலான் - குமரன்.

அயிலிடம் - சிற்றரத்தை.

அயிலேயம் - முசுமுசுக்கை.

அயில் - அழகு, இரும்பு, உண்ணென்னேவல், கூர்மை, கைவேல், கோரை, நாஞ்சில்.

அயிறல் - உண்டல்.
அயினி - உணவு, சோறு.
அயின்றல் - உண்டல்.
அயின்றாள் - தாய்.
அயுக்தம் } ஓரலங்காரம்,
அயுத்தம் } பொருத்தமின்மை.
அயுதம் - பதினாயிரம்.
அயோற்கம் - அரப்பொடி.
அயோக்கியம்-யோக்கியமின்மை.
அயோத்தி - ஸப்தபுரியிலொன்று
அயித்தி-பிரிவினை, முறைகேடு.
அயோகம் - தகுதியின்மை, பிரிவினை, முயற்சி, வெறுப்பு.
அயோகவியவச்சேதம் -தெளிவேகாரம்.
அயோக்கிரம் - உலக்கை, சுத்தியல்.
அயோசனம் - பிரிவினை.
அய்யவி - சிறு கடுகு.
அய்யோ - துன்பச்சொல்.
அரக்கம் - நன்னாரி.
அரக்கர் - இராக்கதர்.
அரக்கல் - அரைத்தல், தேய்த்தல், புடைபெயர்ச்சி, வியங்கோள் முற்று.
அரக்காம்பல் - செவ்வாம்பல்.
அரக்கி - இராக்கதப்பெண்.
அரக்கு - அரக்கு, அரக்கென்னேவல், சாதிலிங்கம், சாராயம், சிவந்தமெழுகு, சிவப்பு, தேன்.
அரக்குக்காந்தம் - ஒருவகை காந்தக்கல்.
அரக்குதல் - அரைத்தல், அழித்தல், இருப்புவிட்டுப் பெயர்த்தல், தேய்த்தல், நெளிந்து நடத்தல்.
அரங்கபூமி - நாடகசாலை,போர்க்களம்.
அரங்கம் - ஆற்றிடைக்குறை, கல்விச்சாலை, கூத்துப்பயிலிடம், சத்திரம், சபை, சாலை, சிலம்பக்கூடம், சீரங்கம், சூதுமுதலிய பயிலிடம், நடனம், நாடகசாலை, நிறம், போர்க்களம்.
அரங்கல் - அழிதல், அழுந்தல்.
அரங்கு - அரங்கென்னேவல், அறை, இடம், ஓரில், சபை, சூதாடற்கு வகுத்தவறை, நாடகசாலை, போர்க்களம், யாற்றிடைக்குறை.
அரங்கேற்றல் - சபையேற்றல்.
அரங்கொழிசெய்யுள் - புறநாடகவுருக்களுள் இருதியுரு.
அரசங்கம் - அமைச்சு, அரண், குடி, கூழ், நட்பு, படை ஆகிய ஆறங்கங்களைக் கொண்டது.
அரசம் - மூலரோகம்.

அரசாறுதொழில் - ஈதல், உலகோம்பல், ஓதல், படையயிற்றல், பொருதல், வேட்டல்.

அரசர்குணம் - வேந்தர்க்குரிய முக்குணம், அதாவது-அூங்காமை, கல்வி, துணிவு.

அரசர்க்குக்குழு - அரசரைச்சூழ்வோர், அதாவது—புரோஹிதர், ஸேநாபதி, தூதர், வேயர்.

அரசர்க்குத்துணைவர் - அரசர்க்குப் போர்த்துணைவர், அதாவது-மந்திரியர், கருமாதிகாரர், சுற்றம், கடைகாப்பாளர், நகரமக்கள், படைத்தலைவர், இவுளிமறவர்.

அரசர்க்குறுதிச்சுற்றம் - வேந்தர்க்குயிர்த்துணைவர், அதாவது—நட்பர், அந்தணாளர், மடையர், மருத்துவர், நிமித்தகர்.

அரசர்சின்னம் - இராசசின்னம்.

அரசர் - இராசா, எப்பொருட்குமிறைவன், கார்முகிற் பாஷாணம், துரிசு, பாணகெந்தி, வியாழன்.

அரசன்வீருதி - கோவை, பூம்பருத்தி, பூவரசு.

அரசி - இராசபத்தி, தலைவி.

அரசியல் - இராசாங்கம், இராசரிகமுறை.

அரசு - அரசன், இராசா, இராசாங்கம், ஓர் மரம், துவர்பத்தினொன்று, நாடு, வியாழம்.

அரட்டம் - பாலைவனம்.

அரட்டர் - குறுநிலமன்னர்.

அரணம் - அழகு, கதவு, கருஞ்சீரகம், கவசம், காவல், காவற்காடு, கோட்டை, தொடுதோல், மஞ்சம், மதில், வேலி, வேல்.

அரணி - ஓர்பூடு, கவசம், காடு, சூரியன், தீக்கடைக்கோல், மதில்.

அரணியம் - காடு.

அரணியா - காட்டுக்கரணை.

அரணிருக்கை - கோட்டை.

அரணை - ஓர் செந்து.

அரண் - அழகு, காவல், காவற்காடு, கோட்டை, மதில்.

அரதனம் - அகன்மணி, சிலம்பணி, மிருதபாஷாணம்.

அரதி - வெறுப்பு, வேண்டாமை.

அரத்தம் - அரக்கு, இரத்தம், கடம்பு, சிவப்பு, செங்குவளை, செம்பஞ்சு, செம்பரத்தம், செம்மை, பவளம், பொன்.

அரத்தன் - செவ்வாய்.

அரத்தி - செவ்வல்லி.

அரத்தை - ஓர்மருந்து.

அரத்தோற்பலம் - செங்கழுநீர், செங்குவளை.

அரந்தை - துன்பம், மனக்கவற்சி.

அரபி - கடுக்காய், காடு.

அரமகளிர் - தெய்வமகளிர்.

அரமனை - இராசமனை.

அரமியம் - அரமனை, நிலாமுற்றம், பிரமிப்பூண்டு, வீட்டின் மேலுலாவும் வெளி.

அரமுறி - இரும்பு முறிச்செடி.

அரம் - உதை, ஓர் கருவி, கதவு, கீழறை, பாதாலம்.

அரம்பிலம் - பாதாளம்.

அரம்பை - அசமதாகம், தெய்வப்பெண், வாழை.

அரம்பையர் - தேவமாதர்.

அரரம் - கதவு, மறைவு.

அரலை - கடல், கழலை, கழலைக்கட்டி, குற்றம், கொடும்பு, கோட்டை, மரல், விதை.

அரவக்கொடியோன் - துரியோதனன்.

அரவணிந்தோன் - சிவன்.

அரவணை - ஸர்ப்பாசனம்.

அரவணைச்செல்வன் - விஷ்ணு.

அரவணைத்தல் - ஆதரித்தல், சேர்த்துக் கொள்ளுதல், தழுவிக் கொள்ளுதல்.

அரவம் - ஆயில்யம், ஒலி, ஓசை, சிலம்பு, பாம்பு, பேரொலி.

அரவிந்தம் - தாமரை, மன்மதன் கணை.

அரவினாள் - அரவுநாள்.

அரவு - பாம்பு.

அரவுநாள் - ஆயில்யநாள்.

அரவுயர்த்தோன் - துரியோதனன்.

அரவுயிர்ப்பு - பாம்பின்சத்தம்.

அரளல் - பிரமித்தல்.

அரளி - நாறு மரம், பீநாறி, பெருமரம்.

அரற்றல் - அழுதல், ஒலித்தல்.

அரற்றுதல் - ஒலித்தல்.

அரனிடத்தவள் - பார்வதி.

அரன் - எப்பொருட்கு மிறைவன், சிவன், மஞ்சள்.

அரன்மகன் - குமரன், விநாயகன், வீரபத்திரன்.

அரன்வெற்பு - கைலைமலை.

அரன்றோழன் - குபேரன்.

அரா - அராவென்னேவல், பம்பு.

அராகம் - அடங்காமை, அவா, இச்சை யின்மை, ஓர்பண், சிவப்பு, பாதவுறுப்பிலொன்று, பாலையாழ்த்திறம், பொன், முடுகியல், வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா.

அராதி - சத்துரு, பகைவன்.

அராத்தல் - அராத்துதல், கினைப் பூட்டுதல், தேய்த்தல்.

அராபதம் - போர், வண்டு.

அராநட்பு - வேண்டா வெறுப்பு.

அராமம் - சோலை, பைங்கூழ்.

அரி - அடர்பு, அரிசி, அரித்தல், அரிப்பிடி, அரியென்னுமேவல், அழகு, ஆயுதப்பொது, ஈர்வாள், உட்டுளைப் பொருள், ஐமைவடிவு, ஒளி, கடல், கட்டில், கண்வரி, கள், காற்று, கிளி, குதிரை, குரங்கு, குற்றம், கூர்மை, சக்கரம், சத்துரு, சந்திரன், சிங்கம், சிங்கவிராசி, சிலம்பின் பருக்கைக்கல், சிலம்பு, சூரியன், செம்மறியாட்டுக் கடா, சோலை, தவளை, தீ, தேர், தேவேந்திரன், நவகண்டத்தொன்று, நமன், நிறம், நெருக்கம், நெற்கதிர், பகை, பச்சை, படுக்கை, பறை, பன்றி, பாம்பு, புகை, பொன், மரகதம், மரவயிரம், மலை, மழைத்துவல், மாலை, மூங்கில், வண்டு, வரி, வலி, விசி, விஷ்ணு,

அரிகண்டம் - ஓர் விரதவேஷம்.

அரிகரபுத்திரன் - ஐயனார்.

அரிகள் - பகைவர்.

அரிகூடம் - கோபுரவாயில்.

அரிசனம் - மஞ்சள்.

அரிசா - பெருங்குமிழ்.

அரிசி - தண்டுலம்.

அரிச்சந்தனம் - ஐந்தருவிலொன்று.

அரிச்சந்திரன் - இடையெழுவள்ளலிலொருவன், சக்கரவர்த்திகளிலொருவன்.

அரிச்சிகன் - சந்திரன்.

அரிடணம் - யோகம் இருபத்தேழி னொன்று.

அரிடம் - கடுகுரோகிணி, வேம்பு.

அரிடிகம் - சிற்பநூல் முப்பத்திரெண்டி னொன்று.

அரிட்டம் - } கள், காக்கை, கேடு, ஜன்மதோஷம், வெள் வெங்காயம், முட்டை, மோர், பிரஸவிக்கும் வீடு.
அரிஷ்டம் }

அரிட்டித்தல் - கொன்றல்.

அரிணம் - சிவப்பு, பொன், மான், யானை, வெள்ளை.

அரிணி - பெண்மான், வஞ்சிக்கொடி.

அரிணை - கள்.

அரிதகி - கடுக்காய் மரம்.

அரிதம் - திசை, பசும்புன்னிலம், பச்சை, பொன்னிறம்.

அரிதல் - அறுத்தல்.

அரிதாளம் - நவதாளத்தொன்று, பொன்னரிதாரம்.

அரிதின்வயச்சி - நன்னரி.

அரிது - அரியது, பச்சை.

அரிதுணர்பொருள் - அரிதாகக் கற்றோர், அறிகின்ற பொருள்.

அரித்தல் - அரிப்பு.

அரித்திரம் - சுக்கான், மஞ்சள்.

அரித்திராபம் - பொன்னிறம்.

அரித்து - அரித்தலைச்செய்தென் னெச்சம், பச்சை.

அரித்தை - கிலேசம், துன்பம், வினைமுற்று.

அரிந்தமன் - விஷ்ணு, வெற்றி யாளன்.

அரிப்பிரியை - இலக்குமி.

அரிப்பு - அரித்தல், குற்றம்.

அரிமஞ்சரி - குப்பைமேனி.

அரிமருகன் - முருகன், விநாய கன்.

அரிமா - ஆண் சிங்கம், சிங்கம், சிங்கவிராசி.

அரிமாநோக்கம் - சிங்க நோக் கம். (முன்னும் பின்னும்பார்க் கின்ற சிங்கத்தின் பார்வை.)

அரியணை - சிங்காதசம்.

அரியணைச்செல்வன் - அருகன்.

அரியமா - சூரியன், பிதிரு தேவ தை.

அரியம் - வாச்சியம்.

அரியயற்கரியோன் - சிவன்.

அரியரபுத்திரன் - அரிகர புத் திரன்.

அரியல் - அரிதல், கள், வியங் கோண் முற்று.

அரியேறி - துர்க்கை.

அரில் - குற்றம்,சிறுதூறு, பகை, பிணக்கு, மூங்கில்.

அரிவாலுகம் - தக்கோலம்.

அரிவாள் - ஈர்வாள்,கொடுவாள்.

அரிவாள்மணைபூண்டு - ஓர்வகைப் பூண்டு.

அரிவி - அரிகதிர்.

அரிவை - இருபத்தைந்து வய துப்பெண், தெய்வப் பெண், பெண் பொது.

அரீடம் - கடுகுரோஹிணி.

அரு - அணு, அருமை, அறிவு, அரிய, உருவமற்றது, கடவுள்.

அருகசனி - பேரேலம்.

அருகணி - பிரண்டை.

அருகம் - சமணமதம், தகுதி, பரிசுத்தம்.

அருகர் - அனுசரிதர், சமணர்.

அருகல் - அணுதல், கிட்டுதல் குறைதல், சாதல், சுருங்குதல்.

அருகணைமுடிதரித்தாள் - தரும தேவதை.

அருகன் - சங்காத்தி, சினேந்திரன், யோக்கியன்.

அருகி - கள், வினையெச்சம்.

அருகியரத்தம் - பூனைக்காலி.

அருகு - அருகென்னேவல், ஓரம், ஸமீபம், தீவட்டி.

அருகுதல் - கிட்டல், அருகிவரல்.

அருக்கபுத்தி - ஆதித்தகதி.

அருக்கம் - எருக்கு, நீர்க்காக்கை.

அருக்கல் - அச்சம், சுருக்கல்.

அருக்கவிட்சேபம்
அாக்கவிக்ஷேபம் } ஸூரியாட்சம்.,

அருக்க நிலை - ஸூரியநிலை.

அருக்கன் - ஸூரியன்.

அருக்கன் வீதி - கிராந்திமண்டலம்.

அருக்கியம்
அர்க்கியம் } பூசனை முறையினென்று, மந்திரநீரிறைத்தல்.

அருக்கு - அருக்கென்னேவல், அருமை, எருக்கு.

அருங்கலை - அருமையான சாஸ்திரம்.

அருங்கலைநாயகன் - புத்தன்.

அருங்கலைவிநோதன் - அருமையான சாஸ்திரங்களைக் கற்பதிலேயே பொழுது போக்குகிறவன்.

அருங்கோடன் - அழிவில்லான்.

அருச்சகன் - பூசாசாரி.

அருசி - உருசியின்மை.

அருச்சனை - ஆராதனை.

அருச்சித்தல் - மலர் முதலியவற்றால் அர்ச்சித்தல்.

அருச்சுனம் - எருக்கமரம்,பொன்மருதமரம், வெண்மை.

அர்ச்சுனன் - கார்த்த வீரியன், விஜயன்.

அருஞ்சிறை - கடுஞ்சிறை,நரகம்.

அருட்கண் - கிருபைக்கண்.

அருட்குடையோன் - கடவுள்.

அருட்கொடிவேந்தன் - அருகன்.

அருட்சித்தி - பாதரஸம்.

அருட்சோதி - கௌரி பாஷாணம்.

அருட்டம் - கடுகுரோஹிணி.

அருட்டி - அச்சம், நடுக்கம்.

அருணம் - அருணோதயம், ஆடு, எலுமிச்சை, ஓர்தேசம், பதினெண் பாஷையிலொன்று, பொன், சிவப்பு, மான், முதுகெலும்பு, யானை.

அருணவம்
அர்ணவம் } கடல்.

அருணவூரி - இந்திரகோபம்.

அருணன் - ஸூரியன், ஸூரி யன் சாரதி, புதன், வருணன்.

அருணசலம் - திருவண்ணமலை.

அருணிதம் - நன்னரி.

அருணினவு - மனதினற்குண மூன்றிலொன்று.

அருணெறி சுரக்குஞ் செல்வன் - புத்தன்.

அருணை - அருணசலம்.

அருணோதயம் - ஸூரியோதயம் வைகறை.

அருத்தநாரீசுரன் / அர்த்நாரீச்சுவரன் } சிவன்.

அருத்தநாள் / அர்த்தநாள் } பாதிநாள்.

அருத்தபாகை - வேதநூற் பொருள்.

அருத்தம் - கருத்து, சொற்பயன், பாதி, பிரயோசனம், பொருள், பொன்.

அருத்தலோபம் - கொடாமை.

அருத்தல் - ஊட்டல், புசிப்பித் தல்.

அருத்தாபத்தி - அருத்தத்தின் வரிசை, பிரமாணங்கள் ஆறி லொன்று.

அருத்தி - ஆசை, உண்பித் தென்னு மெச்சம், கூத்து, பாதம், பாதிசெய்யென்னே வல்.

அருத்தித்தல் - பாதி செய்தல்.

அருத்தோதயம் - ஒரு புண்ய கால விசேஷம்.

அருநெறி - அருகியவழி, வாயில்.

அருந்ததி - வஸிஷ்டன் மனைவி, அருந்ததியென்னும் நக்ஷத்ரம்.

அருந்தல் - அருமை, அனுபவித் தல், உண்டல்.

அருந்தவம் - கடுந்தவம்.

அருந்தவர் - முனிவர்.

அருந்துதன் - வேதனை செய் வோன்.

அருப்பம் - ஊர், கள், காடு, கொலை, கோட்டை, துக்கம், தொடரி, நோய், பிட்டு, மருத நிலத்தூர், மா, மோர், வழுக்கு நிலம்.

அருப்பலம் - அனிச்சமரம்.

அருமதாளம் - நவதாளத் தொன்று.

அருமந்தபிள்ளை - அருமருந் தன்ன பிள்ளை.

அருமருந்து - அமிர்தம்.

அருமலதி - ஓர் பண்.

அருமறைக்கொடியோன் - துரோணன்.

அருமை - அரியதன்மை, சிறப்பு, பெருமை, மேன்மை.

அரும் - அருமையான.

அரும்பல் - பொடித்தல், முகிழ்த்தல்.

அரும்பாலை - ஓரிராகம்.

அரும்பிணி - தீரா நோய்.

அரும்பு - அரும்பென்னேவல், முகை.

அரும்புதல் - பொடித்தல், மலர்தல், முகைத்தல்.

அரும்பொருள் - அரியகருத்து, அரியபொருள்.

அருவம் - உருவின்மை.

அருவருப்பு - அசுத்தம்.

அருவாநாடு - கொடுந் தமிழ்நாட்டிலொன்று.

அருவாவடதலை - கொடுந்தமிழ் நாட்டிலொன்று.

அருவி - தமிழகம், தினைத்தாள், மலையின் வீழ் அருவி.

அருளகம் - வெள்ளெருக்கு.

அருளரசி - குடசப்பாலை.

அருளல் - ஈதல், கிருபை செய்தல், உண்டாக்கல், கற்பித்தல்

அருளவம் - அழிஞ்சில்.

அருளாழிவேந்தன் - அருகன், கடவுள்.

அருளுடைமை - கிருபையுடைமை.

அருளுறுதி - வேம்பு.

அருள் - அரிய உள்ளம், ஈயென்னு மேவல், கிருபை, கொடை, சிவசக்தி கட்டளை.

அரூபம் - அருவம்.

அரூபப்பொருள் - வடிவில்லாப் பொருள்.

அரூபி - கடவுள், கருப்பூரம், சிவன்.

அரேசகண்டு - கருணைக்கிழங்கு.

அரேசிகம் - வாழை.

அரேணுகம் - வால்மிளகு, கடுக்காய் வேர்.

அரை - அரையென்னுமேவல், இடை, உயிர், பாதி.

அரைசிலை - அம்மி.

அரைச்சதங்கை - ஓரிடையணி.

அரைத்தல் - அழித்தல், தேய்த்தல்.

அரைநாள் - பாதிநாள்.

அரைநூல் - அரைச்சதங்கை, அரைஞாண்.

அரைப்பட்டிகை - மாதரிடையணியிலொன்று.

அரைப்பூட்டு - இடைக்கட்டு, இடுப்பின் பொருத்து.

அரையன் - அரசு.

அரைவடம் - அரைஞாண், இடுப்பில் அணிந்து கொள்ளுமோராபரணம்.

அரோ - அசைச்சொல், (உ-ம். மகன்றரோ)

அரோசகம் - அருவருப்பு.

அர் - பல்லோர்படர்க்கை விகுதி.

அர்க்கம் - எருக்கு, நீர்காக்கை.

அர்ச்சனை - ஆராதனை.

அர்த்தசா - பிறைவடிவு.

அர்த்தநாள் - பாதிநாள்.

அர்த்தம் - அருத்தம்.

அர்த்தாதுரம் - பொன்னூசை.

அர்த்தாபத்தி
அர்த்தாபத்திப் பிரமாணம் } உள்ளுறைப் பொருட் குறிப்பு.

அர்த்தாந்தரநியாஸம் - வேற்றுப் பொருள் வைப்பணி.

அர்த்தி - இரப்போன்.

அர்ப்பணம் - நைவேத்யம்.

அர்ப்புதம் - ஓரெண்.

அர்ப்பிதம் - நிவேதனம், கொடுப்பது.

அலகம் - யானைத்திப்பிலி, வேப்பலகு.

அலகரி
அலகிரி } பெருக்கு.

அலகிடல் - கணக்கிடல், செய்யுட்கோசை கூட்டும் பொருட்டலகிடல், கோயிலலகிடல்.

அலகு - ஆயுதத்தினலகு, ஆயுதப்பொது, எண், கதுப்பு, செய்யுளலகு, துடைப்பம், நெல்லின்மணி, பயிர்க்கதிர், பலகறை, பறவை மகிழம் விதை, மின்மினி, மூக்கு, விசாலம்.

அலகுசோலி - அறுகு.

அலகுஞ்சம் - மின்மினி.

அலகுபனை - ஆண்பனை, ஓர் பனை.

அலகை - காட்டுக்கற்றாழை, பிசாசம், பேய்க்கும்மட்டி.

அலகைக்கொடியாள் - காளி.

அலகைமுலையுண்டோன் - கண்ணன்.

அலக்கணம் - இலக்கண வீனம்.

அலக்கண் - துன்பம்.

அலக்கழித்தல் - துன்பப்படுதல்.

அலக்கு - கிளை.

அலக்கைச்சுரம் - கீழ்க்காய் நெல்லி.

அலங்கம் - அரண், கொத்தளம், மதிலிறேருறுப்பு.

அலங்கரித்தல் - சிங்காரித்தல்.

அலங்கல் - அசைதல், இரக்கம், ஒளி செய்தல், கலுழ்தல், தளிர் பூமாலை, மாலை.

அலங்காரபஞ்சகம் - ஓர் பிரபந்தம், அதாவது—வெண்பா கலித்துறை, அகவல், ஆசிரிய விருத்தம், சந்த விருத்தம்.

அலங்காரம்-அணி, அணியிலக்கணம், அழகு, கலைஞான மறுபத்துநான்கினொன்று, பேரழகு. பேரழகினுடைய முப்பத்தைந்து வகைகள் வருமாறு-தன்மை, உவமை, உருவகம், தீபகம், பின் வருநிலை, முன்னர் விலக்கு, வேற்றுப் பொருள் வைப்பு, வேற்றுமை, விபாவனை, ஒட்டு, அதிசயம், தற்குறிப்பேற்றம், ஏது, நுட்பம், இலேசம், நிரனிறை, ஆர்வமொழி, சுவை, தன்மேம் பாட்டுரை, பரியாயம், ஸமாஹிதம், உதாத்தம், அபந்நுதி, சிலேஷை, விசேஷம், ஒப்புமைக்கூட்டம், விரோதம், மாறுபடுபுகழ்நிலை, புகழாப் புகழ்ச்சி, நிதரிசனம், புணர்நிலை, பரிவிருத்தநிலை, வாழ்த்து ஸங்கீர்ணம், பாவிகம்.

அலங்கிருதம் } அலங்காரம்.
அலங்கிருதி }

அலங்கை - துளசி.

அலசல் - அலசுதல், அலைவு, கழுவுதல், சிந்துண்டுகிடப்பது, சோம்பல், பயனற்றவேலை.

அலஞ்சரம் - தண்ணீர்க்குடம்.

அலட்சியம் - அற்பமானது, கணிசக் குறைவானது.

4099

அலத்தகம் } செம்பஞ்சு.
அலக்தம் }

அலத்தல் - துன்பம்.

அலத்தி - மின்மினி.

அலந்தலை - துன்பம்.

அலந்தல் - செங்கத்தாரி.

அலந்தை - குளம், துன்பம்.

அலந்தோர் - இரக்கப்பட்டோர்.

அலப்புதல் - அலட்டுதல், ஆரவாரித்தல், குழப்புதல், வீண் பேச்சுப் பேசுதல்.

அலமரல் - அச்சம், அஞ்சல், கலங்கல், சுழலல், துன்பம், வருந்தல்.

அலமாரி - அலமாரி, அவாவுள்ளோன்.

அலம் - அமையுமென்றல், அலமரல், கலப்பை, சஞ்சலம், சுழற்சி, நீர், விருச்சிக விராசி, தேள், தேளின் கொடுக்கு.

அலம்பல் - ஒலித்தல், கழுவல், ததும்பல்.

அலம்புசம் - உவாந்தித்தல், விரித்தகை.

அலம்புசை - தசநாடியினொன்று.

அலரி - அழகு, ஓர் பூ மரம், கண்வரி, சூரியன், தேனீ, நீராவி, பூப்பொது.

அலருதல் - மலர்தல், விரிதல்.

அலர் - நீர், பலரறிந்து பழிதூற்றல், பழிச்சொல், பூமாலை, மலர்தலைச்செய், விரிதலைச் செய்யென்னு மேவல், மலர்ந்தபூ.

அலர்தல் - அலருதல், மலர்கை.

அலர்மகள் - இலக்குமி, ஸரஸ்வதி.

அலர்முகராகம் - பரதவுருப்புகளுளொன்று.

அலலியம் - கலப்பை.

அலவன் - ஆண் நண்டு, கற்கடகவிராசி, சந்திரன், நண்டு, பூனை.

அலவாங்கு - கட்டப்பாரை.

அலறல் - அழுதல், ஒலித்தல், கதறல், கூப்பிடல், புலம்பல், விரிதல்.

அலறுதல் - புலம்பல்.

அலன்றல் - சாதல்.

அலாதம் - நெருப்புக்கொள்ளி.

அலாபம் - இடையூறு, தீமை, நஷ்டம்.

அலாபூ - சுரை.

அலாயுதன் - பலபத்திரன்.

அலாரிதா - அலரிச்செடி.

அலாரிப்பு - கூத்தின் வகை.

அலி - எமன், கள், தீ, நருவிலிமரம், நெருப்பு, பலதேவன், பேடி, வண்டு, வயிரமில்லா மரம்.

அலிகம் } நெற்றி.
அலீகம் }

அலிஞ்சரம் - மட்சாடி.

அலிந்தம் - முற்றம்.

அலிபகம் - கருவண்டு, தேள், நாய்.

அலியன் - கடுக்காய்.

அலியெழுத்து - ஒற்றெழுத்து.

அலுத்தல் - சலித்தல், வெறுத்தல்.

அலுப்பு - அயர்வு, தொய்வு, தெறுப்பு.

அலுமம் - புளிப்பு.

அலுவல் - கவ்வை, வேலை.

அலுவீகம் - வில்வமரம்.

அலேகம் - வெள்ளோடு, லோகமணல்.

அலை - அலைதல், அலையென்னேவல், கடல், கருமணல், திரை, புனற்றிரை.

அலைக்கழி - உலைவு.

அலைக்கழித்தல் - கெடுத்தல்.

அலைக்கு - கிளை.

அலைசுதல் - அலையல், சோம்பல்.

அலைதல் - அலையல், சோம்பல், துன்பம், வருந்துதல்.

அலைத்தல் - அலையச்செய்தல், அலைப்பு, அறைதல், உலைத்தல், கெடுத்தல், சலனப்படுத்தல், வருத்தல்.

அலைத்துவம் - மிகுதி.

அலைப்பு - அலைத்தல், கூத்தின் விகற்பம், வருத்தம்.

அலைவாய் - திருச்செந்தூர்.

அலைவாய்க்கரை - கடற்கரை.

அலைவு - அலைதல்.

அலோசி - பசளை.

அலோமி - பொற்றலைக்கையாந் தகரை.

அல் - அஞ்சல், அல்லென்னேவல், இரவு, இராத்திரி இருள், உடலெழுத்து, எதிர்மறை, எதிர்மறையேவலொருமை விகுதி, எதிர் காலத்தன்மையொருமை விகுதி, சாரியையிடைச் சொல், தொழிற்பெயர் விகுதி, மதில், வியங்கோள் விகுதி, வடமொழியினெற்றெழுத்து.

அல்கல் - இரா, குறைதல், சுருங்கல், தங்கல், தரித்திரம், நாள், வறுமை.

அல்குகழி - உப்புக்கழி, சிற்ருறு.

அல்குல் - அரை, நிதம்பம், பெண் குறியின் மேற்பக்கம்.

அல்நார் - கல்நார், கன்னூர்.

அல்லகண்டம் - துன்பம்.

அல்லகம் - கோவணம்.

அல்லது - இல்லாமல் போனல்.

அல்லம் - இஞ்சி.

அல்லல் - துன்பம், முடைதல்.

அல்லவை - அறனல்லாதவை, தீமை, தீயவை, பயனில்லாப் பொருள், பாவம்.

அல்லாதார், அல்லார், அல்லோர் - ஒழிந்தோர், தீயோர்.

அல்லால் - அல்லாமல்.

அல்லாரி - வெள்ளல்லி.

அல்லி - அகவிதழ், ஆம்பல், இரா, இளவேர், காயாமரம், சயம், நெய்தல், பூந்தாது.

அல்லிகம் - பேய்க்கும்மட்டி.

அல்லியம் - இடையரூர், கொட்டி, விஷ்ணுக்கூத்து.

அல்லை - ஓர் கொடி, தாய், முன்னிலை யொருமைக் குறிப்பு வினை முற்று.

அல்லோன் - ஒழிந்தோன், சந்திரன்.

அல்வழி - அல்லாதவழி, அல்வழிச்சந்தி, வேற்றுமையொழி நிலை.

அல்வழிப்புணர்ச்சி - வேற்றுமையொழி நிலைத்தொடர்.

அவகடம் - எதிரிடை, தந்திரம், வஞ்சகம்.

அவகண்டம் - முகப்பரு.

அவகதவாய் - கீழ்க்காய்நெல்லி.

அவகாசம் - இடம், சமயம், தகுதி, திராணி, பொக்கிஷசாலை, வெளி.

அவகாதம் - அவமானம், கொல்லுதல், செல்லுக்குத்துதல்.

அவகாரம் - அழைத்தல், பதிதத்துவம், யானை மீன்.

அவகீதம் - நிந்தை, வசைப்பாட்டு.

அவகேசி - பூத்துங்காயாதமரம்.

அவக்கிரசம் - காடி.

அவசகுனம் - துன்னிமித்தம்.

அவசம் - பரவசம், மயக்கம்.

அவசரம் - சமயம்.

அவசாயம் - நிச்சயம், நிறைவேற்றுதல், முடிவு.

அவசியம் - நிச்சயம், முக்கியம்.

அவச்சின்னம் - பிரிவு.

அவடி - குழி, திரைச்சீலை, துளை.

அவணம் - அமணம்.

அவணன் - திண்ணியன், புகழுடையோன்.

அவணி - நன்மை.

அவண் - அவ்விடம்.

அவதரம் - அவசரம், சமயம், தறுவாய்.

அவதரித்தல் - தங்கல், பிறத்தல்.

அவதாதம் - வெண்மை.

அவதாரணம் - நிதானம், நிச்சயம், மண்வெட்டி.

அவதாரம் - பிறப்பு.

அவதானம் - கிரஹித்தல், சாவதானம், ஞாபகம், நினைவு, பாவனை.

அவதி - அளவு, எல்லை.

அவதிகத்தம் - கடல்நுரை.

அவதிக்காரகம் - நீக்கப் பொருளுருபு.

அவதூதம் - முழுத்துறவு.

அவதூறு - நிந்தை, பழிகூறல்.

அவத்தம் - நாய்வேளை, பொய்.

அவத்தை - ஜாக்ரத் முதலாமுயிர்நிலையு பாதி, அதாவது-ஜாக்ரதவஸ்தை, ஸ்வப்னவஸ்தை, ஸுஷுப்தியவஸ்தை.

அவத்தைப் பிரயோகம் - நிகலை ஞானமறுபத் து ஞ ன் கி ெ ஞ ன்று.

அவந்தரை - குழப்பம், சேதம்.

அவந்தி - ஓர் நகர், ஓர் நாடு.

அவந்திகை - கிள்ளை.

அவபிருதம் - வேள்வி முடிவில் செய்யும் ஸ்நாநம்.

அவப்பிரபஞ்சம் - இழிசனர் மொழி.

அவமதி - நிந்தை.

அவமானம் - இழிவு.

அவம் - பயனின்மை.

அவயம் - அடை, அழுகை, இலாபிச்சை, நன்மையின்மை.

அவயவம் - அங்கம், அவயவவுருவகம், உடல், உறுப்பு.

அவயவி - உடல், பலகிளைகளுள்ள ஒரு முதல்.

அவரசன் - தம்பி.

அவரி - அவுரி.

அவரை - ஓர்கொடி, கொள்ளு, துவரை, முதிரை முதலியன.

அவரோகணம் - இறங்குதல்.

அவர்ணியம் - உவமானம், வர்ணனைக் கெட்டாதது.

அவலம் - நோய், வருத்தம், நவரஸத்தொன்று.

அவலம்பம் - தாவரம், தாங்கல், நிறுதிட்டவரி, புகலிடம்.

அவலித்தம் - புலம்பல், வருந்தல்.

அவலேகனம் - நக்குதல்.

அவலேசம் - அற்பம், அவமானம், ஆபத்து, சிறுமை.

அவலேபம் - அலங்காரம், பூசுதல், பெருமை.

அவல் - அவல், குளம், பள்ளம், விளைநிலம்.

அவளிகை - இடுதிரை

அவனி - பூமி, நிலம்.

அவனி பாலகன் } இராசா.
அவனி பாலன் }

அவன் - சுட்டுச்சொல்.

அவற்றுள் - முன்சொல்லிய பலவற்றுள்.

அவா - அவாவென்னேவல், ஆசை, ஆசைப்பெருக்கம், இறங்குதல்.

அவாசி } தெற்கு.
அவாசீனம் }

அவாசியர் - அறிவுடையோர், தென்னாட்டார்.

அவாநிலை - அவாவிய நிலை, சில சொற்களை வேண்டி நிற்குநிலை.

அவாந்தரம் - இடை, வெறுவெளி.

அவாய் நிலை - அந்வயம், தொகைநிலை.

அவாவறுத்தல் - ஆசை நீக்கல்.

அவாவின்மை - வெறுப்பு.

அவாவுதல் - இச்சித்தல், இறங்குதல், சார்தல், பேராசைகொள்ளல்.

அவி - அவியென்னேவல், ஆடு, எலி, காற்று, சூரியன், சோறு, தலைவன், தேவருணவு, நெய்.

அவிகசம் - குவிந்திருப்பது, குவிவு.

அவிகலம் - நிறைவு.

அவிகாயம் - எரிச்சல், ஓர் காசம், வேகம்.

அவிகாரம் - எழுவாய், விகாரமின்மை.

அவிகாரன் } கடவுள்.
அவிகாரி }

அவிக்கினம் - விக்கினமின்மை.

அவிசாரம் - கவலையின்மை, விசாரமின்மை.

அவிசு - உப்பில்லாமல் பால்கலந்தவெறுஞ்சோறு, தேவருணவு.

அவிச்சின்னம் - இடைவிடாமை, பிரிவின்மை.

அவிதல் - அழிதல்.

அவிச்சை - அறியாமை, மனமயக்கு, வெறுப்பு.

அவிடி - திரைச்சீலை.

அவிட்டம் - ஓர் நக்ஷத்திரம்.

அவிதல் - அடுப்பில் வேகுதல், அமைதல், அழிதல், கெடுதல், தணிதல், வருந்துதல், வேகுதல்.

அவிதி - விதி விரோதம்.

அவித்தல் - கெடுத்தல், தணித்தல்.

அவித்திருமம் - இலுப்பை.

அவித்தை - அஞ்ஞானம்.

அவிநயசாலை - நாடகசாலை.

அவிநயம் - ஓர் நூல், கூத்து, நாடகாங்கம்.

அவிநயர் - ஓர் நூலாசிரியர்.

அவிநாபாவம் - அஸாதாரண தருமம்.

அவிபாகம் - அசீரணம், இளமை

அவிமுக்தி - ஓர் புண்ணிய பூமி.

அவியல் - அவிந்தது, உஷ்ணம், வாய்ப்புண், வெப்பம்.

அவியாத்தம் - பிரிந்திருப்பது.

அவியோகம் - கூட்டம்.

அவிரதம் - இடையின்மை, எப்பொழுதும்.

அவிருகம் - அதிவிடயம்.

அவிரோதச்சிலேடை - ஓரலங்காரம்.

அவிரோதம் - விரோதமின்மை.

அவிரோதவுந்தியார் - ஓர் செய்யுள் - சாந்தலிங்கசாமி யியற்றிய நூல்.

அவிர் - பிரகாசம்.

அவிர்தல் - ஒளி செய்தல், பீறல்.

அவிர்ப்பாகம் - தேவருணவு.

அவிவாதம் - இணக்கம்.

அவிவேகம் - புத்தியின்மை.

அவிழ்தல் - கட்டவிழ்தல், நெகிழ்தல், மலர்தல், விரிதல்.

அவிழ்த்தல் - அவிழச்செய்தல், விரித்தல்.

அவினு - நீக்கமற்றது, வெளியற்றது.

அவினுபாவம் - ஒன்றற்கேயுள்ளது, ஓரளவை.

அவினுபூதம் - ஸ்வபாவஸம்பந்தம்.

அவுடதம் - ஔஷதம், மருந்து.

அவுணர் - அசுரர்.

அவுணன் - மாவலி.

அவுத்திரிதிசைக்ஷ - எழுதிசைக்ஷயி லொன்று.

அவுபலபாஷாணம் - ஓர் பாஷாணம்.

அவுரி - நீலி.

அவுறுதம்-கிரந்தி, பிதாத்திக்கம்.

அவை - அஃறிணைப்பான்மை, அம்பலம், அவையென்னேவல், அவ், கூட்டம், சபை, சுட்டுச்சொல், புலவர்.

அவைத்தல் - நெரித்தல், நென் முதலிய குத்தல், வெட்டுதல்.

அவையடக்கம் - ஸபைமுன் தன்னைத் தாழ்த்திக்கூறல், ஒரு கிரந்த கர்த்தா முகவுரையில் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுதல்.

அவையம் - திரள்.

அவையல் - திரட்சி.

அவ் - அவை, சுட்டுச்சொல்.

அவ்வியக்தம் - ஆன்மா, ஓரெண், கடவுள், விளங்கக் காணப்படாதது.

அவ்வியம் - தேவர்க்கிடப்படுவது, மனக்கோட்டம், பழமொழி, வடமொழி இடைச்சொல்.

அவ்வியாகிருதம் - பிரமத்தோடு பிரிவற்றது, மாயை.

அவ்வுதல் - அவாவிழுதல், அழுந்துதல்.

அவ்வை - தாய், தவப்பெண், ஔவையார்.

அழகர் - வெள்ளெருக்கு.

அழகாரம் - பேச்சுச்சித்திரம், மதுரம்.

அழகியவாணன் - ஓர் நெல்.

அழகு - ஒழுங்கு, சருக்கரை, நூலின்பத்தழகு, யௌவனம்.

அழகுத்தேம்பம் - படர்சுணங்கி னொன்று.

அழகுதுரைப்பெண் - இந்திர பாஷாணம்.

அழத்தியன் - சேரமனுதி, பெருங்காயம்.

அழலல் } அழலுதல் } கனலுதல்.

அழலவன் - அக்கினி, சூரியன், செவ்வாய்.

அழலாடி - சிவன்.

அழலிக்கை - பொறாமை.

அழலேந்தி - சிவன்.

அழலோன் - செவ்வாய்.

அழல் - அழலென்னேவல், எருக்கு, கள்ளி, கேட்டை நாள், செவ்வாய், கொடுவேலி, தீ, நரகம், நெருப்பு வெப்பம்.

அழல்விரியன் } அழலுகம் } எரிவிரியன்.

அழல்விரை - சேர்வாளம்.

அழற்கண்ணன் - சிவன்.

அழற்கண்வந்தோன் - வீரபத்திரன்.

அழற்காய் - மிளகு.

அழற்சி - அழுக்காறு, வெப்பம்.

அழற்பால் - எருக்கு.

அழற்பிரவை - தீநரகு.

அழற்றல் - சுடுதல்.

அழனம் - தீ, பிணம்.

அழன் - பிணம்.

அழிகை - கெடுகை, சிதைவு.

அழிஞ்சில் - ஓர் மரம்.

அழிதல் - கெடுதல், தவறல்.

அழிது - அலி.

அழித்தல் - அழிக்கப் படுபொருள், கண்டித்தல், குலைத்தல், கெடுத்தல்.

அழிபுண் - ஆறுமிகுபுண்.

அழிப்பாளி - அழிப்புக்காரன்.

அழிப்பு - அழிக்கை, தொலைப்பு.

அழிமதி - கெடும்பு, மிஞ்சின செலவு.

அழிம்பன் - ஊதாரி, புரட்டன்.

அழிம்பு - அழிவு, சேதம், நஷ்டம்.

அழிவழக்கு - கள்ள நியாயம், புரட்டு நியாயம்.

அழிவி - கழிமுகம்.

அழிவு - குற்றம், கேடு.

அழுகண்ணி - ஓர் பூடு.

அழுகல் - அழுகியது, கெடுதல்.

அழுகுசப்பாணி - ஓர்விஷநோய்.

அழுகுசர்ப்பம் - ஓர் விஷ ஜந்து.

அழுகுணி - ஓர் கரப்பான்.

அழுகை - அழுதல்.

அழுக்கணவன் - ஓர் புழு, புழுக்கூடு.

அழுக்கறல் - அழுக்காறடைதல், அழுக்கு நீங்கல்.

அழுக்கறுத்தல் - பொறாமை கொள்ளல்.

அழுக்காமை - ஓராமை.

அழுக்காறுமை - பொறாமை, அடையாளம்.

அழுக்காறு - பொய், பொறாமை.

அழுக்கு - அசுத்தம், ஆமை, ஊத்தை, ஓசை, பொறாமை, மலம், மாசு.

அழுங்கல் - அச்சம், அலையல், அழுதல், அழுந்தல், இரங்கல், ஒலித்தல், ஒளிமழுங்கல், கெடுதல்; சோம்பல், துன்பம், நோய்.

அழுங்கு - அழுங்குதலைச் செய்யென்னேவல், ஆமை.

அழுங்குதல் - அலையல், ஒளிமழுங்குதல்.

அழுதல் - இரங்கல், புலம்பல்.

அழுத்தல் - அழுந்தச்செய்யல்.

அழுந்தல் - அழுந்துதல்.

அழுந்து - அழுங்தென்னேவல், நீராழம், வெற்றிலைநரம்பு.

அழுப்பு - சோறு.

அழுப்புகம் - தேவலோகம்.

அழுவம் - அப்பவர்க்கம், அழுக்கு நிலம், கடல், தருக்கம், நடுக்கம், நாடு, பரத்தல், பெருமை, போர்க்களம், முரசு, வழுக்கு நிலம்.

அழைக்கை - கூவுகை.

அழைத்தல் - கூவுதல், வாவெனல், விளித்தல்.

அளகபந்தி - மகளிர்கூந்தல்முடி.

அளகம் - நீர், நெற்றி, பன்றிமுள், பெண்மயிர், மயிற்குழற்சி, வெள்ளெருக்கு.

அளகாதிபதி
அளகாதிபன் } குபேரன்.

அளகாபுரி
அளகை } குபேரனகர்.

அளகு - அன்னப்பெடை, கார்த்திகை நாள், கூகை கோழி மயில் இவற்றின் பெண், சேவல்.

அளகையாளி - அளகாதிபதி.

அளக்கர் - உப்பளம், கடல், கார்த்திகை, குழைசேறு, நீள்வழி, பூமி.

அளத்தி - நெய்தனிலப் பெண்.

அளத்தியர் - உப்பமைப்போர் பெண்கள்.

அளத்துப்பச்சை - மருக்கொழுந்துச் சக்களத்தி.

அளத்துப்புல் - முயிற்றுப்புல்.

அளபு - அளபெடை, அளவு, ஓரலங்காரம்.

அளபெடை - எழுத்துக்கள் தத்தமாத்திரையின் னீண்டொலித்தல்.

அளபெழல் - ஓசை நிரம்பத்தத்தம்மாத்திரையின் மேற்பட்டொலித்தல்.

அளப்பம்
அளப்பு } அளவு.

அளப்புக்கு - முடக்கற்றான்.

அளம் - உப்பளம், கூர்மை, நெருக்கம், நெய்த நிலம்.

அளவடி - நாற்சீரான் வருமடி.

அளவடிவிருத்தம் - நேரடி விருத்தம்.

அளவர் - அளப்பவர், உப்பமைப்போர்.

அளவல் - கலத்தல்.

அளவழித்தாண்டகம் - ஓர் பிரபந்தம்.

அளவளாதல்
அளவளாவல் } கலத்தல்.

அளவறுத்தல் - வரையறுத்தல்.

அளவன் - சோரபாஷாணம்.

அளவிடை - அளவிடல், நிரு வாகம், நிறைமதிப்பிடல்.

அளவியற்குண்டகம் - ஓர் பிர பந்தம்.

அளவில் - அளவுக்குத் தக்கபடி.

அளவிறத்தல் - எல்லை கடத்தல், மீறல்.

அளவு - வரையறை, அதாவது- எண்ணல்,எடுத்தல், முகத்தல், ட்டல், தெரித்தல், மாத்தி ரை, பெருமை, சிறுமை முத லிய பிரமாணங்களால் வரு பெயர்.

அளவை - அளவு, அளவைநூல், பிரமாணம், அதாவது-காட்சி அனுமானம், ஆகமம், அர்த் தாபத்தி, உவமானம், அபா வம், ஐதிஹ்யம், ஸம்பவம்; எல்லை, நாள்.

அளவையாகுபெயர் - அளவைப் பெயர் - அளக்கப்படும் பொரு ளுக்கு வருவது.

அளறு - குழைசேறு, நரகம், நிரயம்.

அளறுதல் - சிதர்தல், பிளத்தல்.

அளாவல் - ஓங்கியிருத்தல், கலத் தல்.

அளாவுதல் - கலத்தல், துழாவி யாற்றுதல்.

அளி - அளித்தலைச் செய்யென் னேவல், அன்பு, எளிமை, கள், குளிர்ச்சி, கொடை, சாள ரம், தேன், பாணம், மது, மதுரம், வண்டு.

அளிகம் - கட்டழகு, நெற்றி, பொய்.

அளிதல் - உருகுதல், கனிதல், குழைதல்.

அளித்தல் - ஈதல், ஈனல், காத் தல், கொடுத்தல், நெருங்கல், பங்கிடு.

அளிந்தம் - கோபுரவாயிற் றிண்ணை, முற்றம், வீட்டின் வெளிச்சாலை.

அளியர் - அன்புள்ளோர், எளி யோர்.

அளிய - எளிய.

அளீகம் - பொய்.

அளுக்கல் - அச்சக்குறிப்பு.

அளை - இடம், எழுனுருபு, குழை யென்னேவல், தயிர், புற்று, மலைக்குகை, மோர், வளை.

அளைதல் - அளைவு, கலத்தல், குழைதல்.

அளைமறியாப்புப்பொருள்கோள்- பொருள்கோளெட்டினொன்று

அளைவு - குழைவு.

அளையெடுத்தல் - புரைவைத்தல், வளைசெய்தல்.

அள் - அள்ளென்னேவல், உயர்திணைப்பெண்பால் படர்க்கையொருமைவிகுதி, கன்னம், காது, கூர்மை, நெருக்கம்.

அள்ளல் - அள்ளுதல், குழை சேறு, எழு நரகத்தொன்று.

அள்ளாத்தி - ஓர் மீன்.

அள்ளு - அள்ளென்னுமேவல், கூர்மை, பற்றிரும்பு.

அள்ளுதல் - அள்ளல், நெருங்கல்.

அள்ளை - பிசாசம்.

அற - அறம்படி, இல்லாமல், தீர, நீங்க, முற்ற.

அறக்காடு - சுடுகாடு.

அறக்கொடியோன் - கடவுள்.

அறங்கடை - பாவம்.

அறச்சாலை - தர்மசாலை.

அறச்செல்வி - பார்வதி.

அறத்திற்றிரியாப்படர்ச்சி - தருமத்தினின்றும் வேறு படாத நடை.

அறத்தின்மூர்த்தி - தரும தேவதை.

அறத்தின்மைந்தன் } தருமரா
அறன்மகன் } சன்.

அறத்துப்பால் } குறளில் அறத்
அறப்பால் } தைப்பற்றிச் சொல்லும் ஒரு பாகம்.

அறத்துறப்பு - அறத்தினங்கம், அழிந்தோரை நிறுத்தல், அறம் விளக்கல், ஐயப்படாமை, பழியை நீக்கல், பேரன்புடைமை, வெறுப்பின்மை, மயக்கமின்மை, விருப்பின்மை.

அறத்தைக்காப்போன் - ஐயனர்.

அறநிலை - தருமநிலை, பிரமாணம்.

அறநிலைப்பொருள் - அரசியலாறிலொன்று, நெறிவழிநின்று தேடும் பொருள்.

அறநிலையறம் - தத்தம் வருணத்திற்பிறழாது நிலைபெறப்பாது காத்தல்.

அறநிலையின்பம் - ஒழுக்கமுங் குணமுங் குலமும் பருவமுமொத்த கன்னியைத் தீவெட்டில்லத்திருத்தல்.

அறநெறி - தரும வழி.

அறப்புறம் - அறச்சாலை, வேதம் ஓதும் சாலை.

அறம் - கையறம், தருமம்— அறவைத் தூரியம், அறவைப் பிணஞ்சுடுதல், அறவைச் சோறு, அறுசமயத்தார்க்குண்டி, ஆதுலர்க்குச்சாலை, ஆவுரிஞ்சுதறி, ஏறுவிடுதல், ஓதுவார்க்குணவு, ஐயம், கண்ணாடி, கண்மருந்து, கன்னிகாதானம், காதோலை, சிறைச்சோறு, சுண்ணம், சோலை,

நாவிதர், தடம், தண்ணீர்ப் பந்தல், தலைக்கெண்ணெய், தின்பண்டம்நல்கல், நோய்மருந்து, பசுவுக்குவாயுறை, பிறர் துயர் காத்தல், பெண்போகம், மகப்பேறுவித்தல், மகப்பால்வார்த்தல், மகவுவளர்த்தல், மடம், வண்ணார், விலங்கிற்குணவு, விலைகொடுத்துயிர் காத்தல்.

அறல் - அறுதல், கடற்றிறை, கருமணல், சிறுதூறு, நாசம், நீர்.

அறவர் } துறவோர், பார்ப்பார், பெரியோர்,
அறவோர் } முனிவர்.

அறவன் - புத்தன்.

அறவாழி - தருமக்கடல்.

அறவாழிவேந்தன் - அருகன், கடவுள்.

அறவு - அறுபட்ட இடம், ஒடிவு, கடவை,

அறவுளி - முடிவு, வியாதி நீங்கும் பொருட்டு ஜபிக்கிற மந்திரம்.

அறவூதல் - புடமிடல்.

அறவோன் - அருகன், தருமநெறியோன், பார்ப்பான், முனிவன்.

அறன்கடை - பாவம்.

அறுமை - கவிழ்தும்பை.

அறிகருவி - ஞானேந்திரியம்.

அறிகுறி - அடையாளம்.

அறிக்கை - அறிவித்தல், அறிவு, கட்டுப்பாடு, விளம்பரம்.

அறிஞர் - அறிவுடையோர், புலவர், முனிவர்.

அறிஞன் - அறிவுடையோன், தேரன், புதன், புத்தன், முனிவன்.

அறிதுயிலமர்ந்தமூர்த்தி-விஷ்ணு

அறிதுயில் - யோகநித்திரை.

அறிபொருள் - அளவறியப்படுகிற பொருள்.

அறிப்பலம் - திப்பிலி.

அறிமடம் - அறிந்து மறியார் போன்றிருத்தல்.

அறியாமை - அறிவின்மை.

அறியாவினா - அறுவகை வினாவுளொன்று.

அறிவர் - அறிஞர், கம்மாளர்.

அறிவழி - கள், பிசாசம்.

அறிவறை - அஞ்ஞானம், ஞானமில்லான்.

அறிவறுள் - உத்திரட்டாதி.

அறிவன் - அருகன், அறிவுடையோன், உத்திரட்டாதி, கம்மாளன், கடவுள், சிவன், செவ்வாய், புதன்.

அறிவாகரன் - அறிவின்மிக்கோன்.

அறிவாளன் - அறிவாளி, அறிவுடையோன்.

அறிவினு - அறிவொப்புக்காண்டல்.

அறிவு - அறிதல், உணர்வு, கல்வி.

அறிவொப்புக்காண்டல் - அறுவகை வினுவுளொன்று.

அறுகால் - வண்டு.

அறுகாற்பீடம் - மதுரை மீனுக்ஷிக்குரிய ஒரு பீடம்.

அறுகு - ஆண் புலி, ஓர் புல், சிங்கம், யாளி, யானை.

அறுகுணன் - கடவுள்.

அறுகுறை - கவந்தம்.

அறுசரம் - ஓசையாழ்.

அறுசுவை - ஆறுவித உருசி.

அறுதல் - அறப்பட்டது, அறல், ஒழிதல், நீங்கல்.

அறுதி - சாவு, தீர்ப்பு, முடிவு.

அறுதிச்சொல் - தீர்ந்தசொல்.

அறுதொழிலோர் - அந்தணர்.

அறுதொழில் - அறுவகைத் தொழில், அஃது - உழவு, சிற்பம், தொழில், வரைவு, வாணிபம், விச்சை.

அறுத்தல் - அரிதல், அறச்செய்தல்.

அறுபதம் - கையாந்தகரை, வண்டு.

அறுப்பு - அறுத்தல்.

அறுமர் - எண்ணெ வாணிகர்.

அறுமீன் - கார்த்திகை நாள்.

அறுமீன்காதலன் - குமரன்.

அறுமுகன் - குமரன்.

அறும்பன் - பொல்லான்.

அறும்பு - பஞ்சம், பொல்லாங்கு.

அறுவகைப்பொருள் - வினைச்சொற்கள் கொள் பொருளாறு அது—கருவி, காலம், செயப்படுபொருள், செயல், செய்பவன், நிலம்.

அறுவிதி - தீர்ப்பு.

அறுவை - உடை, சித்திரைநாள், சீலை, துகில், பலகையறுத்தல்.

அறை - அடி, அரங்கு, அலையடிக்கை, எழுத்திறேசை, காற்றடிக்கை, சிற்றில், சொல், திரை, தூக்கங்கள், தேன் கூட்டினறை, பறையடித்தல், பாறை, மலையுச்சி, முழைஞ்சு.

அறைகுதல் - அடித்தல், கொல்லுதல்.

அறைகூவல் - பொரவழைத்தல்.

அறைதல் - அடித்தல், சொல்லல், பறையடித்தல், மோதல்.

அறைபோதல் - கீழறுத்தல், பகைவனைச்சார்தல்.

அர்கம் - காணிக்கை, திரவியம், நீர்க்காக்கை, விலை, வெண்துளஸி.

அர்கல் - அறிவுடைமை, நிலைபெறுதல்.

அர்காமை - அறிவின்மை, நிலையாமை.

அர்குதல் - நிலைபெறுதல்.

அற்பசங்கை } நீர்பாதையை நீக்
அற்பாசமனம் } கிக்கொள்ளுதல்

அற்பணம் - காணிக்கைசெலுத்துகை.

அற்பபுத்தி - கீழறிவு.

அற்பம்-இழிவு, இலேசு, சிறுமை, நாய்.

அற்பரம் - மக்கட் படுக்கை.

அற்பருத்தம் - வாழை.

அற்புதமூர்த்தி - கடவுள்.

அற்புதம் - அதிசயம், அழகு, ஓரலங்காரம், ஒரெண், ஞானம், பாவக்குணமொன்பதிலொன்று.

அற்புதர் - கம்மாளர், ஞானிகள்.

அற்புதவாதம் - ஓர் வாதரோகம்.

அற்புதவுருவகம் - ஓரலங்காரம்.

அற்புதவுவமை - ஓரலங்காரம்.

அற்புதன் - சிவன், விஷ்ணு.

அற்றம் - அச்சம், அழிவு, உண்மை, சமயம், சோர்வு மறைவு, மெலிவு.

அற்றற்றொழுகுதல் - அறுபட்டு அறுபட்டு நடக்குதல்.

அற்றான் - தரித்திரன், முனிவன்.

அற்றார் - தரித்திரர், முனிவர்.

அற்று - அதுபோல, அத்தன்மைத்து, ஓர் சாரியை.

அற்றை - அன்று, சிறுமை.

அனந்தர் - நித்திரை, பித்து, மயக்கம், மயிற்சூட்டு.

அனந்தல் - நித்திரை, மதம்.

அனந்தற்பத்தி - வெயிலில் இளைப்பாறும் கொடி மண்டபம்.

அனபரன் - பிரமன்.

அனலம் - உஷ்ணம், நெருப்பு, சிவாகமமிருபத்தெட்டினொன்று.

அனலன் - அக்கினிதேவன், அஷ்டவஸுக்களிலொருவன்.

அனலல் - வெப்புறல், எரிதல்.

அனலாசனபட்சி-தணல்விழுங்கி, நெருப்புக்கோழி.

அனலி - ஸூரியன்.

அனலேறு - இடி.

அனலோடுவேந்தன் - ஒருபாஷாணம்.

அனல் - அனலென்னேவல், உயிர் வேதனையிலொன்று, உஷ்ணம், தீ.

அனற்பொறி - தீப்பொறி.

அனற்றல் - கனலல், சுடல், புலம்பல்.

அனற்றிரள் - தீத்திரள்.

அனற்றுதல் - எரித்தல், சுடுதல்.

அனாகதம் - ஆறுதாரத்தொன்று.

அனாசாரம் - அசுத்தம், ஆசாரமின்மை, உபசாரமின்மை.

அனாதாரம் - அலக்ஷியம், ஸஹாயமின்மை.

அனாதரவு - உதவியின்மை, அலக்ஷியம்.

அனாதர் - நவசித்தரிலொருவர்.

அனாதி - ஆதிகாரணம், ஆதிக்குமுந்தினது, ஆதியில்லாதது, விஷ்ணு.

அனாதிமுக்தி - கடவுள்.

அனாரதம் - எப்பொழுதும்.

அனிச்சம் - ஓர் செடி.

அனிஷ்டம் - பிரியமில்லாமை.

அனிலன் - அஷ்டவஸுக்களிலொருவன், வாயு.

அனிலரமயம் - வாதநோய்.

அனீகம் - அனீகினி, கவலையின்மை, படை, யுத்தம்.

அனீகினி - அனீகம், சேனை, தாமரை, படையிலோர் தொகை.

அனீசன் - தலைவனில்லாதவன், திறமையற்றவன், விஷ்ணு.

அனீசு - பெருஞ்சீரகம்.

அனு - அடையாளம், அற்பம், ஒழுங்கு, கதுப்பு, கீழ், கூட, சமீபம், தனிமை, பின் மோனை இவற்றைக் காட்டுமோருபஸர்க்கம்.

அனுகதம் - ஈட்டப்பட்டது, கூடிப்போதல், பின்வருவது.

அனுகமனம் - கூடப்போதல்.

அனுகம் - செஞ்சந்தனம்.

அனுகம்பை - உருக்கம்.

அனுகரணம் - உவமை, செயல், விளக்கம்.

அனுகுணம் - ஓரலங்காரம், தகுதி.

அனுகூலம் - காரியசித்தி, கிருபை, சம்மதம், பட்சம்.

அனுகூலன் - உபகாரி, நான்குவகை நாயகரிலொருவன்.

அனுகோதம் - சின்னமூளை, துணைமூளை.

அனுக்கம் - அனுங்குதல், செஞ்சந்தனக்கட்டை, சோம்பல், பயம், பாம்பு, புலம்புதல், வருத்தம், வாட்டம்.

அனுக்கிரகம் - அருள், பஞ்சகிருத்தியத்தொன்று.

அனுக்கிரமம் - கிரமம்.

அனுங்கல் - வருந்தல், வாடல்.

அனுசந்தானம் - ஆராய்வு, விடாயோகம்.

அனுசரணம், அனுசரணை - உபசாரம், சார்பு, வழக்கம்.

அனுசரன், அனுசாரி - சார்ந்தோன், ஸஹாயன்.

அனுசாதன் - தம்பி.

அனுஷம் - ஓர் நக்ஷத்திரம்.

அனுஷ்டானம் - ஆசரித்தல்

அனுதினம் - தினந்தோறும், எப்பொழுதும்.

அனுஷ்ணம் - சோம்பு, வெப்பமின்மை.

அனுபந்தசதுஷ்டயம், அனுபந்தம் - இயைபு அதாவது-விஷயம், ஸம்பந்தம், பிரயோஜனம், அதிகாரி.

அனுபபத்தி, அனுபபத்திஹேது - காரியத்திற்குக் காரணம், ஒத்துவராமை, காரியம் கைகூடாமை.

அனுமக்கொடியோன் - அருச்சுனன்.

அனுமந்தன், அனுமன் - ஆஞ்சநேயன்.

அனுமித்தல் - அனுமானித்தல்.

அனுபல்லவி - பதத்தின் முதற்சிற்றடி.

அனுபவம் - அனுபோகம்.

அனுபாகம் - தாடைப்பாகம்.

அனுபானம் - உடன் பருகுவது.

அனுபூதி - பேரின்ப நுகர்ச்சி வரப்பெறுதல், பிரம்மஞானம்.

அனுபோகம் - அனுபவம்.

அனுமதி - கட்டளை.

அனுமரணம் - உடன்கட்டையேறுகை.

அனுமானப்பிரமாணம் - அளவையெட்டினொன்று.

அனுமானிதம் - குதிரைக் கனைப்பு.

அனுமேயம் - அனுமானித்தறியப்படு பொருள்.

அனுமை - அருத்தாபத்தி, கண்ணிமையினடி.

அனுமோதனம் - இன்பம், உவகை.

அனுயோகம் - கண்டனை, கேள்வி, தியானம், மன்றாடுதல்.

அனுரஞ்சனம் - அன்பு, உருக்கங்காட்டுதல்.

அனுரதி - அன்பு, பற்று.

அனுராகபோகம் - காமானுபவம்.

அனுராகமாலை - ஓர் பிரபந்தம்.

அனுராகம் - அன்பு.

அனுரூபம் - இணக்கம், ஒப்பு, தடை.

அனுரோதம் - பிறர் கருமம் முடித்தல்.

அனுலேபனம் - அபிஷேகம் பண்ணல், பூசுதல், வாசனையூட்டல்.

அனுலோமன் - உயர்குலத் தந்தைக்கும் இழிகுலத் தாய்க்கும் பிறந்த பிள்ளை.

அனுவக்கிரம் - வக்கிர கதியை அனுசரித்த கதி.

அனுவசனம் - ஒத்த வாக்கியம்.

அனுவாசம் - அன்பு, கூடியிருத்தல், வாசனையூட்டல், வேலைச்சாலை.

அனுவதித்தல் - சொன்னதைச் சொல்லல்.

அனுவழி - புதன்.

அனுவாதம் - சம்மதம், நிந்தை, புரோவாதம், முற்குறித்த பொருளைப் பற்றித் திரும்பச் சொல்லும் நியாயம், வழிமொழிகை.

அனுவாதி - ஞானலோலன்.

அனுவிருத்தி - உபசரணை புறனடை.

அனூகம் - ஆமோதித்தல், சாதனம், நன்னடை, வமிசம், வில்.

அனூகன் - பிறப்பில்லாதவன்.

அனூபசம் - இஞ்சி.

அனூபம் - ஈரம்.

அனூரு - அருணன், புதன், முடவன்.

அனூனம் - முழுமை.

அனேகதபம் - யானை.

அனேகம் - ஒன்றுக்கு மேற்பட்டது.

அனேடன் - அறிவில்லாதவன்.

அனைக்கியம் - ஐக்கியமின்மை, பன்மை.

அனை - அளவு, ஓர்வகை மீன், தாய்.

அனைத்து - அவ்வளவு, எல்லாம்.

அனைய - உவமையுருபு, போல, உ-ம். பவளமனையவாய்.

அன் - இன்மை, இடச்சொல், எதிர்மறை, பிறிது இவைகளைக்காட்டுமோருபஸர்க்கம், சாரியை, (உ. ம். அதன்கை) ஆண்பாற் படர்க்கை யொருமை விகுதி. தன்மை யொருமை விகுதி, பெயர் விகுதி.

அன்பகர் - சமுத்திரசோகி.

அன்பகன் - உள்ளக்கசிவுடையோன்.

அன்பன் - தோழன், பக்தன், புருஷன்.

அன்புறல் - நேசத்திலழுந்தல்.

அன்பு - ஆசை, ஆர்வம், தயை.

அன்மயம் - சந்தேகம்.

அன்மை - அல்லாமை, அல்லாத தன்மை, தீமை.

அன்மொழி - அல்லாதவார்த்தை தொக்கு நிற்பது.

அன்மொழித்தொகை - வேற்றுமை, வினை, பண்பு, உவமை உம்மை யென்னும் தொகை

நிலைத்தொடர் மொழிகளின் புறத்து அவையல்லாத பிறமொழிகள் தொக்கு நிற்பன.

அன்றி - அல்லாமல், வினையெச்சக் குறிப்பு.

அன்றில் - ஓர்புள், மூலநாள்.

அன்றினர் - பகைவர்.

அன்று - அசைச்சொல்.(உ-ம்.உயிரெனவு லாயதன்றே) அந்தநாள், வினைக்குறிப்பு முற்று.

அன்றெறிந்தான் - அண்ணெருஞ்சான் பூண்டு, சிறுபுள்ளடி.

அன்றே - அல்லவோ.

அன்ன - அத்தன்மைய, உவமையுருபு, ஒப்பன (உ-ம். மதியன்னமுகம்).

அன்னக்கொடியோன் - பிரமன்.

அன்னசுத்தி - நெய்.

அன்னப்பாகு - உணவு வயிற்றிலே உருமாறிப் பாகுபோல் ஆவது.

அன்னப்பிராசனம் - சோறூட்டல்.

அன்னமயகோசம் - பஞ்சகோசத்தொன்றாகிய சரீரம்.

அன்னம் - அன்னப்பட்சி, ஓர் புள், கவரிமா, சோறு, தானியம்.

அன்னவம் } கடல்.
அர்ணவம் }

அன்னவூர்தி - பிரமன், அன்ன வாகனம்.

அன்னவேதி - ஓர் பூடு.

அன்னாசி - பரங்கித்தாழை.

அன்னியதாகர்த்திருத்வம்-வேறு விதமாகச் செய்யும் தன்மை.

அன்னியோன்னியம் - ஒன்றுக்கொன்றுள்ள ஸம்பந்தம்.

அன்னியோன்னியாபாவம் - ஒன்றிலொன்றின்மை.

அன்னுவயம் } காரணகாரியஸம்பந்தம், சொற்றொடரியைபு.
அன்வயம் }

அன்னுவயவிலக்கணம் - அன்வயிக்கிறமுறை, விசேஷணம், விசேஷ்யம், கர்த்தா, கர்மம், கிரியை (அதாவது—அருளுடைய ஞானி கதியடைந்தான். அருளுடைய விசேஷணம், ஞானி விசேஷ்யம் கர்த்தா, கதி, கருமம், அடைந்தான் கிரியை.

அன்னை - அக்காள், தாய், தோழி.

அன்னோ - அதிசய விரக்கச் சொல், இரக்கச் சொல்.

ஆ

ஆ - அகரச்சுட்டின் நீட்டல், ஆச்சாமரம், ஆதலைச்செய்யென்னேவல், இச்சை, இரக்கம், ஓரெழுத்து, சொல்லிசை, பசுப்பொது, பெண்ணெருமை, பெண்பசு, பெண்மரை, வட

- மொழி அவ்வியயம், வியப்பு, விலங்கின் பெண்பொது, வினை விடைச்சொல், எதிர் மறை யஃறிணைப் பன்மை விகுதி, எதிர்மறைவினையெச்ச விகுதி, எதிர்மறைப்பெயரெச்சவிகுதி, வினையெச்ச விகுதி, உபஸர்க் கம், இரண்டாமுயிர், ஆக வென்னு மெச்சக் குறுக்கம்.

ஆஅ - அதிசய விரக்கச்சொல்.

ஆக - உவமையுருபு, முழுவதும்.

ஆகடியம் - அநியாயம், கொடுமை பரிகாசம்.

ஆகண்டலன் - தேவேந்திரன்.

ஆகமப்பிரமாணம் - அளவை யெட்டினொன்று.

ஆகம மலைவு - ஆகம விதிக்கு முரண்.

ஆகமம் - ஆகம நூல், உறுதிக் கடுதாசி, ஓர்சாஸ்திரம், கல்வி, சிவாகமம், மரப்பொது, முதல்வாக்கு, மிகுதல்.

ஆகமனகாலம் - சங்கிராந்தி.

ஆகமனம் - வந்து சேருதல்.

ஆகம் - உடல், சுரை, பாறை, மார்பு.

ஆகம்பிதமுகம் - சினத்தானுஞ் சம்மதியானு மேல் கீழ் தலை யாட்டல்.

ஆகம்பிதம் - சம்மதக்குறிகாட் டும் முகம், நடுக்கம்.

ஆகரணம் - எவுதல், பிடித்தல்.

ஆகரம் - உறைவிடம், குற்று வாள், சுரங்கம், திரல், மண் வெட்டி, வீடு.

ஆகரி - ஓரிராகம், திப்பிலி.

ஆகருடணம் - அழைத்தல், இழுத் தல்.

ஆகலநம் - எண்ணுதல், பிடித்தல் விருப்பம்.

ஆகவபூமி - போர்க்களம்.

ஆகவம் - சீலை, போர்.

ஆகவனீயம் - வேதாக்கினி மூன்றினொன்று.

ஆகற்பகம் - இருள், பச்சாத்தா பம், மதிகெடல், முடிச்சு.

ஆகற்பம் - அதிகப்படுத்தல், அலங்காரம், நோய்.

ஆகனம் - கன்னக்கருவி, பாறை.

ஆகனிகம் - எலி, பன்றி, மண் ணகழ் கருவி.

ஆகனிகன் - ஒட்டன், கள்வன்.

ஆகன்னம் - காதுபரியந்தம்.

ஆகா - ஆகாத எனும் பெய ரெச்ச விகுதியினிறுதி தொக் கது, எதிர்மறைப் பன்மைப் படர்க்கை வினைமுற்று, கந்த ருவன், வியப்புச்சொல்.

அஃது - முப்பத்திரண்டு பாஷா ணத்தினொன்று.

ஆகாக்களங்கு - மிறுதாறுசிங்கி.

ஆகாங்கிசை } அவாய்நிலை, மிகு
ஆகாங்கை } விருப்பு.

ஆகாசகமனம் } ஆகாயத்திற்
ஆகாயகமனம் } செல்லல்.

ஆகாச கருடன் } கொல்லங்
ஆகாய கருடன் } கோவை, சீந்தில், பேயத்தி.

ஆகாசகரை } மனோராச்சி
ஆகாசகரைக்கட்டு } யம்.

ஆகாசகாமி } ஆகாயத்திற் பாயும்
ஆகாயகாமி } குதிரை.

ஆகாசக்கத்தரி } ஓர் கத்தரி.
ஆகாயக்கத்தரி }

ஆகாசக்கல் - ஆகாயத்திற்கு பறக்கு மணு.

ஆகாசத்தாமரை - அந்தரத் தாமரை, ஓர் கிலப் பூண்டு, கொட்டைப்பாசி, பொய்.

ஆகாசபட்சி - சாதகப்புள்.

ஆகாசமண்டலம் - ஓர் கூத்து, வானமண்டலம்.

ஆகாசமயம் - சூனியம்.

ஆகாசம் } அந்தரம், ஆகாயம்,
ஆகாயம் } இடம், எண்கணத் தொன்று, பஞ்சபூதத் தொன்று, வான், வெளி.

ஆகாசவல்லி - ஓர்கொடி, சீந்தில்.

ஆகாசவாசிகள் - பதினெண் தேவகணத்திலொன்று.

ஆகாசவாணி } அசரீரிவாக்கு.
ஆகாயவாணி }

ஆகாசி - சீந்தில்.

ஆகாடம் - வெண்ணாயுருவி.

ஆகாதம் - அடி, குளம், கொலை, கொலைக்களம்.

ஆகாத்தியம் - எதிரிடை, ஒட்டாரம், பொல்லாங்கு.

ஆகாமியம் - அக்கிரமம், முக்கன்மத்தொன்று.

ஆகாசமஞ்சி } சிறுசடமாஞ்சி.
ஆகாயமாஞ்சி }

ஆகாயம் - அட்டமூர்த்தத் தொன்று, பஞ்சபூதத் தொன்று, வான்.

ஆகாயவீதி - நட்சத்திரவீதி.

ஆகாரம் - அடையாளம், உடல், உணவு, ஓரெழுத்து, நெய், மனைப்பொது, வடிவு.

ஆகாரி - உயிர், பூனை.

ஆகாமம் - நீர்தொட்டி, யுத்தம்.

ஆகிஞ்சனம் - தரித்திரம்.

ஆகிய - ஆன.

ஆகிரதம் - வணங்கல்.

ஆகிரந்தம் - புன்கு மரம்.

ஆகிருதி - அங்கம், அடிதோறு மிருபத்திரண்டு அசை கொண்டு நான்கடியாய் முடியும் பாட்டு, உடல், மாதிரி, வடிவு.

ஆகிருநந்தனம் - புன்குமரம்.

ஆகிலும் - ஆனாலும்.

ஆகு - எலி, கள்வன், கொப்பூழ் சாமரை, பன்றி, பெருச்சாளி.

ஆகுகன் - கணபதி.

ஆகுஞ்சனம் - அடக்குதல், குவித்தல், விளைத்தல்.

ஆகுண்டிதம் - கோழை.

ஆகுதம் - உயிர்க்குறுதிசெய்தல்.

ஆகுதி - ஓமாக்னியில் நெய்விடுதல், பலி.

ஆகுபாஷாணம் - வெள்ளைப் பாஷாணம்.

ஆகுபுக் - பூனை.

ஆகுபெயர் - ஆகுபெயர்ச்சொல்.

ஆகுரதன் - விநாயகன்.

ஆகுலம் - ஆரவாரம், ஒலி, கலக்கம், துன்பம், வருத்தம்.

ஆகுலி - ஆவிரை, கலக்கம், சிற்றரத்தை.

ஆகுலித்தல் - அழுதல், வருந்துதல்.

ஆகுவாகனன் - விநாயகன்.

ஆகுளி - சிறுவறை.

ஆகுனிவாதம் - ஓர் நோய்.

ஆகூதம் - அழைப்பு.

ஆகேடம் - வேட்டை.

ஆகேறு - கொன்றை.

ஆகை - சம்பவிக்கை.

ஆக்கக்கிளவி - ஆக்கச்சொல்.

ஆக்கங்கூறல் - ஆசிவசனஞ்சொல்லல்.

ஆக்கச்சொல் - ஆகுபெயர்ச்சொல்.

ஆக்கஞ்செப்பல் - பத்தவத்தையினொன்று.

ஆக்கதம் - பூதலே.

ஆக்கப்பாடு - விகுதிகள் சேரமொழி உண்டாக்கப்படுந்தன்மை.

ஆக்கப்பெயர் - இடுகுறிப்பெயர்.

ஆக்கப்பொருள் - ஆகுபெயர்ப்பொருள்.

ஆக்கம் - ஆகுதல், இலக்குமி, இலாபம், எழுச்சி, கொடிப்படை, செல்வம், தமிழ்மொழி ஆக்கம், படை, பொன், வகுப்பு வடமொழி ஆக்கம். வளர்ச்சி, வாழ்வு,

சித்திரகெண்டிகன் - வியாழன்.

சித்திரசேனன் - நரகக்கணக்கரி லொருவன்.

சித்திரதாரணை - நவதாரணையி ஞென்று.

சித்திரதாளம் - நவதாளத்தொன்று.

சித்திரபடம் - எழுத்துச்சீலை.

சித்திரபானு - ஓர் வருடம், சூரியன், தீ.

சித்திரப்பாலடை } ஓர் பூடு.
சித்திரப்பாலாடை }

சித்திரப்பாலாவி - அம்மான் பச்சரிசி.

சித்திரமூலம் - கொடிவேலி, நிலப்பனங்கிழங்கு.

சித்திரம் - அதிசயம், அற்புதம், ஆகாயம், ஆமணக்கு, ஓர்கவி, கொடிவேலி, சித்திரப்பாவை, சித்திரிக்கப்பட்டது, சிறுகுறிஞ்சா, சிறப்பு, சிற்பநூலு ளொன்று, நூதனம், பேரழகு, மெய்போற் பொய்கூறல்.

சித்திரரேகை - குபேரன்மனைவி.

சித்திரர் - சித்திரக்காரர், தச்சர்.

சித்திரவித்தாரன் - சாதுரியன்.

சித்திரவேளாகொல்லி - கொல்லித்திறத்திலொன்று.

சித்திராங்கதன் - குருகுல வரசரிலொருவன், நாகிலோர் கணக்கன், விஞ்சையர் வேந்தன்.

சித்திராங்கி - நரேந்திரன் பாரி.

சித்திரான்னம் - வண்ணச்சோறு.

சித்திரித்தல் - சித்திரஞ் செய்தல்.

சித்திரை - சித்திரைநாள், ஓர் மாதம், சித்திரப்பாலாவி.

சித்திலிகை - சீலை.

சித்தினி - சித்திரிணி, நால் வகைப் பெண்களி லொரு வகுப்பினள்.

சித்து - அரூபம், அறிவு, மாய வித்தை, யாகம், சித்தி, (எட்டு விதசித்திகள்)

சித்துடு - கிலுகிலுப்பைப்பூடு.

சித்துப்பொருள் - ஆத்துமப்பொருள், உயிராகிய பொருள்.

சித்துருபம் - அரூபம், நேர்வாளம்.

சித்தகம் - அக்கணங்குருவி, புளியமரம்.

சிந்தம் - புளியமரம்.

சிந்தனுபோகம் - மானதப் புணர்ச்சி.

சிந்தன் - குள்ளன், அக்கணங் குருவி.

சிந்தாகுலம் - மிகுவியாகுலம்.

சிந்தாசனம் - இதயாசனம்.

சிந்தாமணி - ஓர்மணி, ஓர் மாத்திரை, ஓரூர், பஞ்சகாவியத்தொன்று.

சிந்தித்தல் - நினைத்தல்.

சிந்தியம் - சிந்திக்கப்படுவது, சிவாகம மிருபத்தெட்டிலொன்று.

சிந்தியல்வெண்பா - ஓர்வகை வெண்பா, அஃது - இருவகை நேரிசைச்சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

சிந்து - ஆறு, இருவாட்சி, ஓர் தேசம், ஓர்பா, (பல்லவி அநுபல்லவி, சரணங்கள்) கடல், குள்ளன், சிந்தென்னேவல், சிந்துநதி, நீர், பதினெண் பாடையிலொன்று, முச்சீரடி, வைடூரியம், யானை.

சிந்துசாரம் - கடலுப்பு.

சிந்துதல் - கெடுதல், சிதறல், விடுதல்.

சிந்துரதம் - இந்துப்பு.

சிந்துரத்தம் - உப்பு.

சிந்துரம் - சிவப்பு, புளியமரம், யானை.

சிந்துலவணம் - கடலுப்பு.

சிந்துவாரம் - கடல், வில், வெண்ணொச்சி.

சிந்தூரம் - சிவப்பு, செங்குடை, சேங்கொட்டை, திலகம், புளியமரம், யானை, வெட்சி.

சிந்து - கருத்து, குறிப்பு, துன்பம், நினைப்பு, மனம்.

சிந்தைகூரியன் - கூர்ந்த அறிவுடையோன், புதன்.

சிபி - சூரியகுலத்தோரரசன்.

சிப்பி-இப்பி, கிளிஞ்சல், நச்சுப்பல்.

சிமந்தூரி - சிறுபுள்ளடி.

சிமம் - எல்லாம்.

சிமயம் - பொதியமலை, மலை, மலையுச்சி.

சிமி - குடுமி.

சிமிட்டி - பேய்க்கொம்மட்டி.

சிமிட்டு - இமைப்பு, சிமிட்டென்னேவல், மருட்டு.

சிமிண்டுதல் - தோற்றுமலெடுத்தல், நுன்னுதல்.

சிமிலம் - மலை.

சிமிலி - உறி, குடுமி, சிள்வண்டு, தோணி, பூளைச்செடி.

சிமிழ் - சிமிழென்னேவல், சிமிழ், செப்பு.

சிமிழ்த்தல் - கட்டல், பிடித்தல்.

சிமுக்கிடுதல் - அசைதல், சிற்றொலிக் குறிப்பு.

சிமுட்டி - கீழ்காய்நெல்லி.

சிமை - குடுமி, மலையினுச்சி.

சிம்பதை, சிம்பத்தை } சிறுபுள்ளடி.

சிம்பல்-ஒலித்தல், சிம்பு, பாய்தல்.

சிம்பு - இரும்புத்துகள், இளம்வளார், சிராய், தும்பு.

சிம்புரி - சும்மாடு, புரிமணை.

சிம்புளாளேன் - வீரபத்திரன்.

சிம்புளி - கம்பளி.

சிம்புள் - எண்காற்புள்.

சிம்பை - அவரை.

சிம்மதம் - பாம்பு.

சிம்மமுகி - ஆடாதொடை.

சிம்மு - எல்லை.

சியச்சினி - உத்தாமணி.

சியநாயகம் - தத்தபாஷாணம்.

சிரகம் - உறைத்துளி, கரகம், தலைச்சீரா, தீவலை, மழைத்துளி.

சிரக்கோழி - குழலாதொண்டை, வசம்பு.

சிரங்கு - ஓர்புண், சிரங்கு.

சிரசீவி - காகம், திருமால், நெடுங்காலம் வாழ்வோன்.

சிரட்டை - தேங்காயோடு.

சிரணி - ஓமச்செடி.

சிரத்தகாளகம் - மருக்காரை.

சிரத்தல் - அழித்தல், எழுத்திலாவோசை, ஒலித்தல்.

சிரத்துதல் - ஒலித்தல், பேசலாலெழுமொலி.

சிரத்தை - அன்பு, குருவினிடத்திலும், சாத்திரங்களிடத்திலும், மனதை நிறுத்தல், பத்தி, விச்வாசம், விருப்பு.

சிரநதி - கங்கை.

சிரபங்கம்
சிரோர்பங்கம் } சிரச்சேதம்.

சிரமம் - இளைப்பு, சிலம்பம், யுத்தப்பயிற்சி, வருத்தம்.

சிரமை - வருத்தம்.

சிரம் - ஆமணக்கு, உயர்ச்சி, கமுகு, கூகைநீறு, தலை, திப்பிலிமூலம், நெடுங்காலம், மேன்மை, வாதமடக்கி.

சிரம்பம் - சாலாங்க பாஷாணம்.

சிரல்-கிச்சிலிக்குருவி, முடிவிடம்.

சிரவணம் - காது, திருவோணநாள், கேட்டல், கேள்வி.

சிரவம் - கவுதாரி, காது.

சிராங்கம் - சிரசு, தலை, பெருகல்.

சிராபத்திரம் - விளாமரம்.

சிராய் - சிராம்பு.

சிராவணம் - ஆவணிமாதம், கல்.

சிராவணி - யாகமிருபத்தொன்றி ஞொன்று.

சிராவம் - கேட்டல்.

சிராவிருத்தம் - ஈயம்.

சிரி - அம்பு, சிரியேன்னேவல், வாள், வெட்டுக்கிளி.

சிரிதம் - கஷாயம்.

சிரித்தல் - நகைத்தல்.

சிரித்துப்பேசல் - நயச்சொல்.

சிரிப்பு - நகை.

சிரீ-அழகு, இலக்குமி, ஓரிராகம்.

சிரீடம் - குன்றி, வாகைமரம்.

சிரீமுகம்
சிரீமுகவருடம் } ஓர் வருடம்.

சிருகம் - அம்பு, காற்று, தாமரை.

சிருகாலன் - நரி, வீரமில்லான்.

சிருக்கு - நெய்த்துடுப்பு.

சிருங்கம் - மலைமுடி, விலங்கின் கொம்பு.

சிருங்கலம் - சங்கிலி, யானைச் சங்கிலி.

சிருங்கலை - ஓர்செடி, கால் விலங்கு.

சிருங்காடகம் - நாற்றெருக்கூடுமிடம்.

சிருட்டம் - சிற்பநூல் முப்பத்திரெண்டினொன்று.

சிருட்டித்தல் - பிறப்பித்தல்.

சிருட்டியாளன் - சவர்க்காரம்.

சிருணி - சத்துரு, யானைத் தோட்டி.

சிரேணி - இடையர்வீதி, ஒழுங்கு, கூட்டம், வரிசை.

சிரேணியம் - இடையர்வீதி.

சிரேவணம் - காட்டாமணக்கு.

சிரை - குரங்கு, சிரையென்னேவல், நரம்பு.

சிரைத்தல் - மயிர்கழித்தல்.

சிரோசம் } மயிர்.
சிரோருகம் }

சிரோட்டம் - கடுக்காய் மரம், தான்றிமரம், நெல்லி.

சிரோந்தம் - மயிர்ச்செறிவு.

சிலகம் - சட்டுவம்.

சிலங்கம் - வெள்ளிலோத்திரம்.

சிலதன் - ஏவல் செய்வோன், தோழன்.

சிலதி - தோழி.

சிலதியர் - ஏவல் செய்தோழியர், தோழியர்.

சிலத்தின்பிரிதிவி - கர்ப்பூரசிலா சத்து.

சிலந்தி - ஓர்புண், ஓர்பூச்சி, ஓர் பூ மரம், பரு.

சிலந்திநாயகம் - ஓர்பூடு.

சிலப்பதிகாரம் - பஞ்சவிலக்கியத் தொன்று.

சிலமான்கல் - ஓர்வகைமணி.

சிலமாற்றம் - அசுமாற்றம், சிலம் பம், பயமுறுத்துகை.

சிலமி - சிலம்பக்காரன், பகடக் காரன்.

சிலம் - இந்துப்பு, சிலம்பு.

சிலம்பம் - தந்திரோபாயம், படைக்கலப்பயிற்சி, பயப் படுத்துகை.

சிலம்பல் - ஒலித்தல்.

சிலம்பன் - குறிஞ்சி நிலத்தலை வன், முருகன்.

சிலம்பி - ஓர்பறத்தை, சிலந்திப் பூச்சி.

சிலம்பு - ஒலி, காற்சிலம்பு, சிலம் பென்னேவல், பூசாரிகள் கைச் சிலம்பு, மலை.

சிலம்புதல் - ஒலித்தல்.

சிலர் - சில பெயர்.

சிலவங்கம் - மீனெலும்பு.

சிலவர் - வேடர்.

சிலாகை - சலாகை, தேகக்கல், தொட்டிப்பாஷாணம்.

சிலாசத்து - ஓர் மருந்து, மண் தைலம்.

சிலாசாதனம் - கல்வெட்டு.

சிலாஞ்சனம் - நீலாஞ்சனம்.

சிலாதரன் - நந்திதேவன்றந்தை.

சிலாசதலம் - கற்பரப்பிய இடம், பாறை.

சிலாநதி - ஓர் நதி.

சிலாநாகம் - சூடாலைக் கல்.

சிலாந்தி - சீந்தில்.

சிலாபேசி - செருப்பு நெரிஞ்சில்.

சிலாமணி - கருப்பூரச்சிலாசத்து.

சிலாமதம் - கன்மதம்.

சிலாமனு - மனோசிலை.

சிலாமேனி - கண்டகந்திக்கல்.

சிலாவங்கம் - ஈயக்கல்.

சிலாவட்டம் - சாணைக்கல்.

சிலாவருடம் - கல்மழை.

சிலியானை - முடக்கொற்றான்.

சிலிர்த்தல் - தளிர்த்தல், புளகிதமாதல், மயிர்க்குச் செறிதல்.

சிலீமுகம் - அம்பு, காலக்ஷணமிருபத்து மூன்றிலொன்று, தேனீ, முலைக்கண், வண்டு.

சிலுகு - துன்பம், யுத்தம்.

சிலுப்பு - அசைப்பு, சிலுப்பென்னேவல், நடுக்கல்.

சிலும்பல் - அசைதல், ஒலித்தல், கிளம்புதல், பீற்றல்.

சிலேடை - ஓரலங்காரம், இருபொருட் சொற்றொடர்.

சிலேட்டர்
சிலேட்டியர் } செட்டிகள்.

சிலை - ஒலி, ஓசை, ஓர்மரம், கல், சிலையென்னேவல், சூதபாஷாணம், தனுவிராசி, மலை, மனோசிலை, மூலநாள், விக்கினம், வில்.

சிலைத்தல் - ஒலித்தல், சப்தித்தல்.

சிலையாவி
சிலைவிந்து } கல்நார்.

சிலைவைரம் - வைரமணி.

சிலோச்சயம் - மலை.

சில் - அற்பம், ஆரவாரம், ஒலிக்குறிப்பு, தேருருளை வட்டம்.

சில்லம் - அவதி, எட்டி, துண்டு, தேற்றாமரம்.

சில்லர் - வேடர்.

சில்லரை - சிதறின தொகை, சொச்சம்.

சில்லி - கண்ணரை, சிள்வண்டு, சிறுகீரை, தேருருளை, வட்டம்.

சில்லிகை - சிள்வண்டு, சீலை, சூரியகிரகணம், நல்லாடை.

சில்லிடுதல் - ஒலிக்குறிப்பு, பயப்படல், விம்முதல்.

சில்லை - இழிவு, சிவல், சிள்வண்டு, தூர்த்தை.

சில்வழி - சிலவிடம்.

சிவகதியிறைவன் - அருகன், சிவன்.

சிவகம் - சாதிக்காய், நாய்ச்சீரகம்.

சிவகரந்தை - நறுங்கரந்தை.

சிவகாமி - பார்வதி.

சிவஞானசித்தி - ஓர் சைவசித்தாந்த நூல்.

சிவணல் - அளவளாவல், கலத்தல், கிட்டல், நட்பாடல், பொருத்தல், வியங்கோண்முற்று.

சிவதத்துவம் - முப்பதாறுவது தத்துவம்.

சிவதம் - இருக்குவேதம்.

சிவதன்மம் - அட்டாதசவுப்புராணத்தொன்று.

சிவதை - ஓர் கொடி.

சிவத்தம் - செம்முருங்கை.

சிவத்தல் - கோபம், சிவக்குதல், சினக்குறிப்பு.

சிவந்தி - கொடிப்பாலை.

சிவப்பிரகாசம்-ஓர்சித்தாந்தநூல்.

சிவப்பு - சிவப்பு, சினக்குறிப்பு, செம்மைநிறம்.

சிவமது - சிறுபுள்ளடி.

சிவமரம் - ஓர் மரம்.

சிவமல்லி - கொக்கு மந்தாரை.

சிவம் - உயர்வு, ஓர் குளிகை, கடலுப்பு, கடவுள், குறுணி, சுயஞ்சிவம், சிவதத்துமைந்தி ௌென்று, நன்மை, நித்திய லோகத்தொன்று, முத்தி.

சிவலோகச்சேவகன் - காந்தம்.

சிவலோ ᵒம் - மேலுலகங்களெல் லாவ ᵒ ᵒருமேலாகியலோகம், மோக்கத்தானம்.

சிவல் - கவுதாரி, பகண்டை.

சிவவாக்கியம் - ஓர்நூல்.

சிவவாக்கியர் - ஓர் நூலாசிரியர்.

சிவனார்கிழங்கு - கார்த்திகைக் கிழங்கு.

சிவனார்வேம்பு - ஓர் செடி.

சிவன் - உருத்திரன், வைடூரியம்.

சிவா-கடுக்காய், கீழ்காய்நெல்லி, நெல்லி, பங்கம்பாலை, வன்னி.

சிவாகமம் - இருபத்தெட்டு ஆக மங்கள், அவை—காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப் பிரபேதம், விசயம், நிச்சுவா சம், சுவாயம்புவம், அனலம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், விம் பம், புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானசருவோத் தம், பரமேச்சுரம், கிரணம், பேதம், வாதுலம் என்ப.

சிவிகரம் - சாதிக்காய்.

சிவிகை - தண்டிகை, பாண்டி யன் பூண்டவூர்தி.

சிவிறி - நீர்வீசுந்துருத்தி, பெருந் துருத்தி, விசிறி.

சிவுகம் - தாடை.

சிவேதை - ஓர்கொடி, சீந்திற் கொடி, தெற்கு, பகன்றை.

சிவை - ஆணரி, உலைத்துருத்தி, உலைமூக்கு, நெல்லிக்காய், பார் வதி, வேர்.

சிவ்வல் - கடற்பாசி.

சிள்வீடு - சில்வண்டு.

சிறகு - சிறகு.

சிறக்கணித்தல் - உபேட்சித்தல், குறைதல், சுருங்குதல்.

சிறக்கணிப்பு - கடைக்கணித்த பார்வை, சுருங்குகை.

சிறத்தல் - அருமையாயிருத்தல், கீர்த்திபெறுதல், சிறப்பு, மங்கலமாதல், மேற்படல், விசேஷித்தல்.

சிறந்தகற்பகம் - நாகபாஷாணம்.

சிறந்தோர் - அழகுள்ளோர், உறவோர், உயர்ந்தோர், துறந்தோர், பெருமையிற்சிறந்தோர்.

சிறப்பகத்திணை - அகத்திணை வகையிலொன்று.

சிறப்பிலாதாள் - மூதேவி.

சிறப்பு - அருமை, அலங்காரம், அழகு, இடைப்பொருள், உபசாரம், உயர்வு, ஒன்றற்கேயுரியது, சுபம், மகிமை, மிகுதி, மேன்மை, விசேஷம்.

சிறப்புச்சூத்திரம் - சிறப்புவிதி.

சிறப்புச்சொல் - ஒன்றற்கே யுரித்தாய் வருஞ்சொல்.

சிறப்புப்பாயிரம் - பொதுப்பாயிரம், ஆக்கியோன் முதலிய பதினொருவகையு முடையது.

சிறப்புப்பெயர் - ஒருபொருளை விசேஷித்துக் காட்டுவது.

சிறப்புவிதி - விசேஷிக்கும் விதி.

சிறப்பெழுத்து - ஆரியத்திற்கே உரிய சிறப்பெழுத்துத் திரிந்த எழுத்து.

சிறார் - சிறுவர்.

சிறிட்டம் - வெள்ளிலோத்திரம்.

சிறிது - சிறுமையுடையது.

சிறியசிந்தையர் - கீழ்மக்கள்.

சிறியத்தினி-உத்தாமணி, வேலிப்பருத்தி.

சிறியர் - அற்பர், கீழ்மக்கள்.

சிறியாணங்கை - ஓர் பூடு.

சிறிவில் - அகில்.

சிறு - ஓர் விகாரமொழி, தெரிநிலைவினைப்பகுதி.

சிறுகடலாடி - நாயுருவி.

சிறுகல் - குறைதல்.

சிறுகாக்கைபாடினியம் - ஓர் நூல்.

சிறுகாப்பியம், சிறுகாவியம்.

சிறுகாரிடம் - சாதிக்காய்.

சிறுகால்-காவட்டம்புல், தென்றல்

சிறுகாஞவாழை - ஓர் பூடு.

சிறுகு - இடைஞ்சல், சிறுகென்னேவல், துன்பம்.

சிறுகுடி - குறிஞ்சிநிலத்தூர், சிற்றில்.

சிறுகுரு - உவர்மண்.

சிறுகுழி - சிறுகோளீளமகலங்கொண்டது.

சிறுகுறிஞ்சா - ஓர்கொடி.

சிறுக்கல் - குறைத்தல்.

சிறுக்குதல் - கோபித்தல், சிறியதாக்கல்.

சிறுசின்னம் - சிறுகாளம், பீலி.

சிறுசெருப்படி - ஓர் பூடு.

சிறுசொல் - பழிச்சொல்.

சிறுதாரை - நீர்வீசுந்துருத்தி.

சிறுதாளி - ஓர்செடி.

சிறுதுருமம் - வெடியுப்பு.

சிறுதூறு - மரச்செறிவு.

சிறுத்தல் - இளத்தல், சிறிதாதல்.

சிறுத்தை - சிறுபுலி.

சிறுத்தொண்டன் - அறுபத்து மூன்று நாயன்மாரிலோர் தொண்டன்.

சிறுநறளை - ஓர்வகை நறளை.

சிறுநன்னாரி - ஓர்வகை நன்னாரி.

சிறுபஞ்சமூலம் - ஓர் நூல், கண்டங்கத்தரி, சிறுமல்லி, சிறுவழுதுணை, நெருஞ்சி, பெருமல்லி, இவைகளுடைய வேர்.

சிறுபதம் - சிறுவழி.

சிறுபதி - சிற்றூர்.

சிறுபறை - ஓர்பறை, பிள்ளைக் கவியிலோர் பகுதி.

சிறுபான்மை - அருகல்வி தி, ஒரோவிடத்து அரிதாய் வருவது.

சிறுபுறம்-உயர்ந்த பக்கம், பிடரி.

சிறுபொழுது - ஐந்திணைக்குரிய முதற்பொருளினொன்று, அது - மாலை, யாமம், வைகறை, (ஏற்படு), காலை, நண்பகல் என்பது, காலநுட்பம்.

சிறுமணி - ஓர் நெல்வகை, சதங்கை, சிறுமட்டம், குன்னம், சிற்றளவு.

சிறுமல் - தண்ணீர்விட்டான்.

சிறுமாரோடம் - செங்கருங்காலி.

சிறுமி - பெண்.

சிறுமியம் - சோறு.

சிறுமூலகம் } ஓர்கிழங்கு, திப்பிலி.
சிறுமூலம் }

சிறுமை - அற்பம், இளமை, எளிமை, கீழ்மை, குறைவு, தரித்திரம், துன்பம், நோய்.

சிறுமையர் - கீழ்மக்கள்.

சிறுவரை - அற்பம், காலநுட்பம், சிறுபொழுது.

சிறுவர் - மக்கள்.

சிறுவன் - மகன்.

சிறுவி - புத்திரி, மகள்.

சிறுவிதி - தக்கன்.

சிறுவிதிமகஞ்சிதைத்தோன்- வீரபத்திரன்.

சிறுவிலை - குறுவிலை, பஞ்சம்.

சிறை - அடிமை, அழகுள்ளவள், இடம், இறகு, கட்டுப்பாடு, காவல், சிறைச்சாலை, தடை, நீர்க்கரை, பக்கம், பிணிப்பு, மதில்.

சிறைப்புறம் - மதிற்புறம், மறைவிடம்.

சிற்குணன் - கடவுள்.

சிற்சக்தி - அறிவாற்றல், பஞ்சசத்தியினொன்று, விசேஷ சக்தி.

சிற்சபை - சபையைந்தினொன்று.

சிற்சுகம் - ஞானசுகம்.

சிற்சொரூபம் - ஞானரூபம்.

சிற்பம் - அற்பம், சிற்பநூல், சிற்பத்தொழில், நுண்மை.

சிற்பரக்கூர்மை - கந்தகவுப்பு.

சிற்பரம் - கடவுள், பிரமம்.

சிற்பரன் - சிவன்.

சிற்கரை - பார்வதி, சவர்க்காரம், பொன்னிமிளை, பராசக்தி.

சிற்பர் - சித்திரக்காரர்.

சிற்பியர் - கம்மாளர்.

சிற்றம்பலம் - சிற்சபை.

சிற்றறிவு - புல்லறிவு.

சிற்றாமணக்கு - ஓராமணக்கு.

சிற்றாலவட்டம் - விசிறி.

சிற்றாள் - ஏவலாள்.

சிற்றிலக்கம் - கீழ்வாயிலக்கம், சிற்றெண்.

சிற்றிலை-குன்றி, கடுமரம், நெய்ச்சிட்டி.

சிற்றில் - குடிசை, சிலை, பிள்ளைக் கவியிலோர் பகுதி.

சிற்றினம் - அற்பச்சங்காத்தம், ஆகாத கூட்டம்.

சிற்றின்பம் - காமநுகர்ச்சி.

சிற்றுண்டி - அப்பவருக்கம்.

சிற்றுயிர் - அற்பசந்து.

சிற்றுரு - குறள், சிறுதோணி.

சிற்றூர்-சிறூர், குறிஞ்சிநிலத்தூர்.

சிற்றூரல் - சிறியவூற்று.

சிற்றெண் - கீழெண், குறளடி பதினாறுள் வருவது.

சினகரம் - தேவர்கோவில்.

சினத்தல் - கோபித்தல்.

சினத்தன் - கோபமுள்ளோன்.

சினந்தவிர்ந்தோன் - அருகன்.

சினப்பு-கோபம், பரு, விம்முதல்.

சினம் - கோபம்.

சினவரன்
சினன் } அருகன், புத்தன்.

சினவர் - பகைவர்.

சினவுதல் - கோபித்தல், சினக்குறிப்பு, பொருதல்.

சினா - பங்கம்பாலை, வட்டத்திருப்பி.

சினாவில் - தும்பை.

சினீவாலி - உமை, மதிதெரி கலையிரா.

சினேகம்-எண்ணெ, நட்பு,பட்சம்.

சினேசம் - சாதிக்காய்.

சினேந்திரம்-சைனவியாகரணம்.

சினேந்திரன் - அருகன், புத்தன்.

சினை - அவயவம், உறுப்பு, கருப்பம், கொழுப்பு, சினையென்னேவல், பூவரும்பு, பொருளாதியாறினுளொன்று, மரக்கொம்பு, முட்டை, மூங்கில்.

சினைத்தல்-அரும்புதல், எழுதல், சினைகொள்ளல்.

சினைப்பு-சினைத்தல், வியர்க்குரு.

சினைப்பெயர் - உறுப்புப்பெயர்.

சினைப்பொருள் - உறுப்புப் பொருள்.

சினைமுதற்பெயர் - சினையையும் முதலையும் பற்றிவரும் பெயர்.

சினைவினை - முதல்வினை, அவயவத்தின் றொழிலாகிய வினை.

சின் - அசைச்சொல்.

சின்னீற-சிறியதன்மையுடையன.

சின்மயம் - ஞானமயம்.

சின்மயாத்மா - ஞானாத்துமா.

சின்மாத்திரம் - ஞானமாத்திரம்.

சின்முத்திரை - ஞானமுத்திரை.

சின்மொழி - இழிந்த மொழி, வானமொழி.

சின்னப்பூ - ஓர் பிரபந்தம்.

சின்னம் - அடையாளம், அற்பம், ஈனம், காளம், சங்கு, சிறுமை, தட்டு, துண்டு, பராகம், பெண் குறி, முறம், விசித்திரம்.

சின்னுருகம் - சீந்தில்.

சின்னி - இலவங்கம், ஓர்செடி.

சின்னிவிரல் - சிறுவிரல்.

சின்னீர் - நிலையாமை.

சீ

சீ - ஓரெழுத்து, இகழ்ச்சிக் குறிப்பு, அடக்கம், இலக்குமி, காந்தி, சம்பத்து, சரச்சுவதி, சீயென்னேவல், பார்வதி, பிரகாசம், பெண், விடம், விந்து.

சீகம் - தமரத்தை.

சீகரம் - கடற்றிரை, கரகம், கவரி, தலை, திருநலம், திவலை, புனற்றிரை, மலையுச்சி, மழை, மழைத்துளி, மழைத்தூவல், வாழ்வு.

சீகரி, சீகர் - நீர்த்திவலை.

சீகாரம் - ஓர்பண்.

சீகாழி - ஓர் சிவத்தலம்.

சீக்கிரம் - அம்பு, காரம், குரூரம், கோபம், விரைவு.

சீக்கிரி - உசிலமரம்.

சீக்கு - செத்தை, நோய்.

சீக்குரு - முருங்கை.

சீக்கை - ஓர் நூல்.

சீசகம், சீசம் - ஈயம்.

சீச்சீ - இகழ்ச்சிக்குறிப்பு.

சீடர் - மாணாக்கர்.

சீடு - நூற்சீடு (குஞ்சம்)

சீணம் - பதனழிவு.

சீண்டுதல் - சருவுதல், தொடுதல்.

சீதகம் - ஈயம், குளிர்ந்தகாலம், தரா, தேள்.

சீதகன் - சந்திரன், சுக்கிரன், சோம்பன்.

சீதம் - அகில், சந்தனமரம், குளிர்ச்சி, கொடுந்தமிழ் நாட்டி ளென்று, நறுவிலி, நீர், பற்படாகம், மேகம், வெண்மை.

சீதரன் - விஷ்ணு.

சீதவாதக்கடுப்பு - சீதவாதம்.

சீதவாரம் - உத்தாமணி.

சீதளம் - ஈரம், குளிர்ச்சி, கொடி மாதளை, கோடகசாலை, சந்தனம், சிற்றகத்தி, தாமரை, துரிசு, பச்சைக் கர்ப்பூரம், முத்து.

சீதளை - ஒரு நாரத்தை, கொடி மாதளை.

சீதன் - சந்திரன்.

சீதாங்கபாஷாணம் - ஓர் பாஷாணம்.

சீதாங்கம் - ஓர் கள்ளி, சன்னி.

சீதாங்கனை - இராமன் மனைவி.

சீதாபதி - இராமன்.

சீதாளம் - தளப்பனைமரம்.

சீது - ஈயம், கள், யானைக்கண் மதம்.

சீதேவி - இலக்குமி.

சீதை - உழுபடைச்சால், சீதை, பொன்னுங்காணி.

சீதோதகம் - குளிர்ந்தநீர்.

சீத்தலைச்சாத்தன் - ஓர் புலவன்.

சீத்தல் - செப்பம்பண்ணல், தூயதாக்கல், நீக்கல்.

சீத்துவம்-சித்தம்,செம்மை,திறம்.

சீத்தை - கீழ்மக்கள், சிதம்பல், சீட்டிச்சீலை, பதனழிவு,பீழை.

சீந்தில் - ஓர் படர்கொடி.

சீந்துதல் - சீறுதல், விரும்புதல்.

சீபதி-அருகன்,கடவுள், விஷ்ணு.

சீபாதம் - குருவடி, திருவடி.

சீப்பு - எலும்புக்கோவை, கதவின்றாள், தாழ்க்கோல், தோளெலும்பு, மயிர்சீவுஞ்சீப்பு, வாழைக்குலைச் சீப்பு, விலாவெலும்பு.

சீமந்தம் - ஓர்சடங்கு, முதுகு நீர்தெசை.

சீமந்தனீ-ஓர்மாது, மூத்தபெண்.

சீமாட்டி - தலைவி.

சீமான் - அருகன், குபேரன், செல்வன்.

சீமுக - ஓர் வருடம்.

சீமுகம் - திருமுகம்.

சீமூதம் - நீருண்டமேகம்,பிடியன் யானை, மலை, மேகம்.

சீமூதன் - இந்திரன், உழவன், ஓரசுரன், துன்புறுவோன், நரகாசுரன் சாரதி.

சீமூதை-இரா, கொடிமுந்திரிகை.

சீமை-அனுஷ்டிப்பு,எல்லை, கரை, தேசம், தோண்மேல், வயல்.

சீயகங்கன் - ஓரரசன்.

சீயம் - எருக்கம்பால், சிங்கம், சிங்கவிராசி, தென்றிசைப் பாலன்குறி.

சீய்த்தல் - உரஞ்சுதல், சிறுய்த்தல், சீவுதல், செருக்குதல்.

சீரகத்தாமன்
சீரகத்தாரோன் } குபேரன்.

சீரகம் - சீரகம்.

சீரங்கம் - அரங்கம்.

சீரணம் - உண்டது சமித்தல், கேடு, பதனழிவு.

சீரணி - ஓமச்செடி, காடு, கூத்தின் விகற்பம், சிறந்த வழகு, சீரணியென்னேவல்.

சீரமோடா-காட்டெருமைப்பால், கார்ச்சீலை, விழுதி.

சீரம் - இரேகை, இலாமிச்சை, எழுத்து, கலப்பை, சீலை, பால், மரவுரி.

சீரா - கவசம், தலைச்சீரா, பலாசு.

சீராட்டல் - சிறப்புச்செய்தல்.

சீராளன் - சிறுத்தொண்டநாயனார் மகன்.

சீரி - பலதேவன், புளியமரம்.

சீரிடம் - தலை, வாகை.

சீரியர் - அறிஞர், உயர்ந்தோர், சிறந்தோர், நல்லோர், புலவர்.

சீருணம் - செம்பு.

சீருணி - சீருணம்.

சீருத்திரம் - உருத்திரம்.

சீருள் - ஈயம், காரீயம், செம்பு, செல்வம், பஞ்சலோகம்.

சீரை - சீலை, சீலைத்துணி, மரவுரி.

சீர் - அழகு, அளவு, இரைச்சல், ஒலி, ஒழுங்கு, காற்றண்டை, காவுதடி, சித்திரம், சிலம்பம், சுபாவம், செய்யுளுறுப்பு, செல்வம், சொல், தண்டாயுதம், தராசு, தாளவொத்து, துலாராசி, நடுத்தரம், நன்மை, நன்னடை, பாரம்,புகழ்,பெருமை, பொன்.

சீர்கேடி - மூதேவி.

சீர்க்கோழி - நரைக்கொள்ளு.

சீர்செய்தல் - சீராக்கல்.

சீர்த்தி - மிகுபுகழ்.

சீர்த்துழாய் - ஓர் துளசி.

சீர்பதி - கடவுள்.

சீர்பாதம் - சீபாதம்.

சீர்மை - எண்வகையூரிலொன்று, கீர்த்தி, சங்கை, சிறப்பு.

சீலம் - அழகு, குணம், சரித்திரம், சீந்தில், சுபாவம், தருமம், தன்மை, நல்லறிவு, நல்லொழுக்கம், பரிசுத்தம், நிலை.

சீலன் - குணவான்.

சீலா - இறைகூடை, இறைபட்டை, ஓர் நீர் பறவை.

சீலை - சீலை, வஸ்திரம்.

சீவகம் - இலந்தைப்பிசின், எலம்.

சீவகர் - புத்ததேவர்.

சீவகலை - இராகக்காட்சி, உயிர்ப்பு.

சீவகன் - ஓரரசன், குறவன், சீவன்முத்தன், வேலைக்காரன்.

சீவசாட்சி - அறிவுக்காதாரமாயிருப்பது.

சீவதம் - ஆமை, சன்மார்க்கம்.

சீவதேகம் - சரீரத்திரயம்.

சீவந்தி - கடுமரம், சீந்திற்கொடி, பாலைமரம், புல்லூரி, வெட்பாலை.

சீவம் - அர்த்தச்சா, சீவன், பரமாத்துமா.

சீவரத்தினம் - திருமாலணியுமணி, நாகரத்தினம்.

சீவரர் - புத்ததவத்தோர்.

சீவல் - சீவுதல், மிருதுவானது.

சீவனம் - அமுதம், உத்தியோகம், உயிர்வாழ்தல், தைத்தல், நீர், மூளை, வெண்ணெ.

சீவனுகினி - நீர், வெற்றிலை.

சீவனி - ஆடுதின்னாப்பாலை, சகநம், சஞ்சீவி, சீவகாடி, செவ்வள்ளி, பாலைமரம், மந்தாரச்சிலை, வெட்பாலை.

சீவனீயம் - நீர்.

சீவன் - உயிர், காந்தம், சிந்தை, சீவாத்துமா, பிராணி, முயற்சி, வியாழன்.

சீவன்முக்தன் - துறந்துஞானமடைந்தோன்.

சீவாளம் - வீணையின்சீர்.

சீவி - அழிஞ்சில்.

சீவிகா - சாதிக்காய்.

சீவிதம் - உயிர்வாழ்க்கை.

சீவியம் - ஆயுள், உயிரோடிருக்கை, காலக்ஷேபம், சீவனம், வாழ்நாள்.

சீவினி - சஞ்சீவி, செல்வழிப்பண், யாழிஞேசை.

சீறல் - அதட்டல், இரைதல், சினக்குறிப்பு, பெருங்கோபம், வேகம்.

சீறுதல் - கோபித்தல்.

சீறூர் - குறிஞ்சி நிலத்தூர், வேடரூர்.

சீற்றம் - கோபம், சினம்.

சீனம் - ஓர்தேசம், பதினெண்பாடையினொன்று, மான்.

சு

சு - அதட்டுமோசை, ஓரெழுத்து, நன்மை, ஒருபசர்க்கம், சுவ, நல், வியப்புக்குறிப்பு.

சுஃஃறெனல் - ஒலிக்குறிப்பு.

சுகட்டான் - நாணற்புல், முடக்கற்றான்.

சுகசிம்பி - பூனைக்காலி.

சுகதபேதம் - பேதம் மூன்றினொன்று, அது — மரத்துக்கிளை, காய் முதலிய வித்தியாசம்.

சுகதாதை - வியாசர்.

சுகதாரு - கடம்பு.

சுகதுக்கி - பிறந்திறந்தழுந்துவோன்.

சுகத்திரம் - வாகை.

சுகந்தம் - அரத்தை, கிழங்கு, சீரகம், நறுநாற்றம், வாழை.

சுகந்தி - செவ்வந்திக்கல்

சுகம் - ஆரோக்கியம், இன்பம், கிளி, தர்மம், நன்மை, முக்தி, மூலைக்கண்.

சுகம்பல் - புளிநறளை.

சுகருமம் - யோகமிருபத்தேழினொன்று.

சுகன் - ஓர் கந்தருவன், சுவர்க்க முற்ரோன், வியாசன் புதல்வன்.

சுகாந்தம் - ஈரவெண்காயம்.

சுகிதம் - பால்.

சுகிர் - உட்டுளை, உட்டுளைப் பொருள், சுகிரென்னேவல், தெரிநிலை வினைப்பகுதி.

சுகிர்தம் - அறம், இன்பம், தவஞ் செய்தல், தயவு, நற்செய்கை, நன்மை, நெய்.

சுகிர்தல் - நார்முதலிய வகிர்தல்.

சுகிர்லாபம் - நட்புப்பேறு.

சுகுமாரம் - ஓர்கரும்பு, மிருது.

சுகோடம் - நகுலருடைய சங்கு.

சுகோததி - இன்பக்கடல்.

சுகோதரம் - தாளிசபத்திரி.

சுக்கியானம், சுஞ்ஞானம் } பரமஞானம்.

சுக்கியானர் - கடவுள்.

சுக்கிரசீடர் - அஸுரர்.

சுக்கிரபகவான் - நவக்கிரஹ தேவர்களிலொருவன்.

சுக்கிரம் - ஆனிமாதம், கண்ணோய், கழுநீர், கள், நீர் பொன், விந்து, வெண்ணிறம்.

சுக்கிரன் - அஸுரகுரு.

சுக்கிரீவன் - கிட்கிந்தையரசன்.

சுக்கில - ஓர் வருடம்.

சுக்கிலசோணிதம் - விந்துநாதம்.

சுக்கிலத்தம்பம் - சுக்கிலங்கட்டல்.

சுக்கிலபட்சம் - வளர்பிறை.

சுக்கிலபுட்டா - குங்குமமரம்.

சுக்கிலம் - இந்திரியம், இரேதசு, கண்ணோயினொன்று, பழமுண்ணிப்பாலை, பாலைமரம், புளி, பூர்வபட்சம், வெண்ணெய், வெண்மை.

சுக்கிலாசயம் - சுக்கிலமுறைவிடம்.

சுக்கு - சுக்கான்கல், சுண்டி, தண்டு.

சுக்குதல் - செய்தல், புணர்தல்.

சுக்குநாறிப்புல் - ஓர்புல்.

சுக்குமம் - சிற்றேலம்.

சுக்கை - கப்பற்கேழ்வு, மாலை, விண்மீன், முசுமுசுக்கை.

சுங்கம் - ஆடுதின்ளுப்பாலை, ஆயம், களவு.

சுங்கன் - சுக்கிரன்.

சுசனம் - காற்று.

சுசி - ஆடிமாதம், இணக்கம், கழுவுகை, காமக்கவலை, கொடிவேலி, கோடைகாலம், சந்திரன், சுத்தம், சுசீலம், நெருப்பு, பாதரசம், வெண்குடை, வெண்மை.

சுசிகம் - புளியாரை.

சுசிதம் - பால்.

சுசிருடை - பணிவிடை.

சுசீலம் - நல்லொழுக்கம்.

சுசுந்தரி - நாவி, முஞ்சூறு.

சுசுருக்குமை - விந்துகலை.

சுச்சு - சுக்கு, சுண்டி, பறவை மூக்கு.

சுடரோன் - சூரியன்.

சுடர் - ஒளி, சந்திரன், சூரியன், தீ, தீச்சிகை, விளக்கு.

சுடர்க்கடை - மின்மினி.

சுடர்ச்செலவு - ஆறுவருக்கத் தோன்ற, அது—இராசியை இரண்டாகப் பகிர்தல்.

சுடர்தல் - ஒளிசெய்தல்.

சுடர்நிலை-தகழி,விளக்குத்தண்டு.

சுடர்மௌலியர் - வானோர்.

சுடர்விழியோன் - வீரபத்திரன்.

சுடலை - சவர்க்காரம், சுடுகாடு.

சுடலையாடி - சிவன்.

சுடிகை - உச்சி, கள், சடாமுடி, சூட்டு, தலை, நெற்றிச்சுட்டி, மயிர்முடி, முடி.

சுடரம் - துவாரம்.

சுடு - சுடுதல், தெரிநிலை வினைப் பகுதி, வெம்மையுறல்.

சுடுகலம் - இட்டிகை, குயக்கலம், செங்கல்.

சுடுகாடு - ஈமம், சுடலை, மயானம்.

சுடுசுண்டை - சுட்டசாந்து.

சுடுதல் - உலோகங்களை யொட்டுதல், கெடுத்தல், சூடுகாணுதல், தகித்தல், விசனமடைதல், வேகவைத்தல்.

சுடுதூரத்தம் - சித்திரப்பாலாவி.

சுடுநிலம் - மயானம்.

சுடுமண் - ஓடு, செங்கல்.

சுடுமருந்து - எரிமருந்து.

சுடுவல்
சுடுவனம்
சுடுவன் } இரத்தம்.

சுடுவு - சும்மாடு.

சுட்கம் - வறட்சி.

சுட்குதல் - வறளல்.

சுட்டல் - காட்டுதல், குறித்தல், சுடுதல், சுடல், மதித்தல்.

சுட்டி
சுட்டிகை } ஒரு வினையெச்சம், துட்டன், நெற்றிச்சுட்டி, நுதலணி.

சுட்டு - எண்ணம், குறிப்பு, சுட்டெடன்னேவல், சுட்டெழுத்து நான்கு, அவை—புறச்சுட்டு, அண்மைச்சுட்டு, சேய்மைச்சுட்டு, பொதுச்சுட்டு, என்ப; நன்கு மதிப்பு.

சுட்டுக்கோல் - உலயாணிக்கோல், தீயோன்.

சுட்டுச்சொல் - ஒன்றைக் குறித்துக்காட்டு மொழி.

சுட்டுதல்-எண்ணுதல், கருதுதல், குறித்தல், குறித்துக்காட்டல், மதித்தல்.

சுட்டுப்பொருள்-குறித்தபொருள்.

சுட்டுவிடை - சுட்டிக்காட்டும் விடை.

சுட்டுவிரல் - ஆட்காட்டி விரல்.

சுட்டுவைத்தல்-இலக்குவைத்தல்.

சுட்டெழுத்து - சுட்டிக்காட்டு கிற எழுத்து அது, அ, இ, உ என்னுமெழுத்துக்கள்.

சுணக்கம் - சோர்வு, தாமதம், பிணக்கம்.

சுணங்கன் - நாய்.

சுணங்கு - சுணங்கென்னேவல், தேமல், பூந்தாது, மெலிவு.

சுணே - அபிமானம், கூர்மை, சுணேக்கோரை, சுரணே, தினவு.

சுணேக்கோரை - ஓர்புல்.

சுணேவு - பேய்க்கடலே.

சுண்டகம் - மூங்கில்வில்.

சுண்டங்காய் - சிறுகாய், சுண்டிக் காய்.

சுண்டம்-கள், யானேத்துதிக்கை.

சுண்டல் - இறுகல், எய்தல், சுண் டற்கறி, சுண்டுதல், தெறித் தல், வற்றுதல்.

சுண்டன் - அறிவிலி, சதயநாள், மூஞ்சூறு.

சுண்டாலம், சுண்டாலி - யானே, யானேத் துதிக்கை.

சுண்டான் - கள், அளவு.

சுண்டி - கள், சுக்கு, சுண்டில், தொட்டால்வாடி, நீர்ச்சுண்டி, வினேயெச்சம்.

சுண்டிகை - உண்ணு.

சுண்டியம் - சுக்கு.

சுண்டியுண்டை - கொஞ்சி, சது ரங்கம், சிரகம்.

சுண்டு - அடிப்பற்றியது, அற்பம், ஓர் சிறு அளவு, சுண்டென் னேவல்.

சுண்டுகட்டை - நெய்வார் கருவி யினென்று.

சுண்டுவிரல் - சின்னவிரல்.

சுண்டை - கள், கிணறு, சுண் டைச்செடி, நீர்ச்சுண்டு, யானேத் துதிக்கை.

சுண்ணக்கல் - சுக்கான்கல்.

சுண்ணமொழிமாற்று, மொழி மாற்றுப் பொருள்கோல்.

சுண்ணம் - கந்தப்பொடி, சதயம் சுட்டசாந்து, சுண்ணப்பொடி, பச்சைக்கற்பூரம், பராகம், புழுதி.

சுண்ணித்தல்-நீற்றுதல், பூசுதல்.

சுதந்தி - வடமேற்றிசைப்பெண் யானே, பெண்யானே.

சுதந்திரம் - உரிமை.

சுதந்திரி - இட்டமாய் நடத்து வோன், உரிமைக்காரன்.

சுதம்-கேடு, நெருஞ்சில், பரமாக மம், மலத்துவாரம், முறைமை.

சுதரிசனம் - அமராவதி, அழகு, கண்ணுடி, சக்கரம், சம்புநாவல், தேவலோகம், மேருமலே, வலி யான்.

சுதருமம் } சுதர்மம் } சுதன்மம் } அறம், தேவஸபை.

சுதலம் - கீழேழுலகத்தொன்று.

சுதனம் - ஆயுதப்பொது, நற்பாக்கியம்.

சுதன் - இராசகுமாரன், மகன்.

சுதன்மம் - தேவேந்திரன் மண்டபம், நல்லதருமம்.

சுதன்வன் - விச்வகர்மா, வில்லாளி.

சுதாகரன் - கருடன், சந்திரன்.

சுதாச்சி } சுதர்ச்சி } சதுரக்கள்ளி.

சுதாசூதி-சந்திரன்,யாகம்,வசனம்.

சுதாநிதி - சந்திரன்.

சுதாமனு - மலை, முகில்.

சுதாவாக - தானுக.

சுதி - அறிஞன், குதத்துவாரம், சுருதி, பூருவபக்கம், பெண், யாழ்நரம்பு.

சுதினம் - நல்லதினம்.

சுதை - அக்கினிதேவி, அமிழ்து, உதைகாற்பசு, கங்கை, சுண்ணச்சாந்து, சுண்ணும்பு,சுவை, பால்,பூந்தேன்,பொருள்,மகள், மருந்து, மின், வெண்மை.

சுத்தக்காணம் - அஹங்காரம். பரதவுறுப்புளொன்று.

சுத்தகாந்தாரம் - ஓரிராகம்.

சுத்தகேவலம் - ஓரவத்தை.

சுத்தகௌடம் - பஞ்சகௌடத்தொன்று.

சுத்தசைதன்னியம் - சுத்தஸ்வரூபஞானம்.

சுத்தசைவம் - ஓர் சைவம்.

சுத்தததத்துவம் - சிவதத்துவமைந்திலொன்று.

சுத்ததாளம் - ஓர்வகைத் தாளம்.

சுத்ததினம் - சென்றநாள், புண்ணியதினம், வருடத்தின் முதனாள்.

சுத்தநிருத்தம் - சாந்திக்கூத்துளொன்றாகிய சொக்கம்.

சுத்தப்புடம் - எண்ணலிற் கலைந்தெடுத்தது.

சுத்தமாயை - ஆறுவித அத்துவாக்களுக்கும் மேலாகிய காரணமாயுள்ளது.

சுத்தமார்க்கம் - சத்தியமார்க்கம், நன்னடை.

சுத்தம் - உண்மை, கலப்பற்றது, குற்றமற்றது, சுக்கிலபக்கம், சயம், சுசி, சுத்தாவத்தை, தூய்மை, பவித்திரம், பொறிக்கறி.

சுத்தம்பண்ணுதல் - தூயதாக்கல்.

சுத்தவாசனை - நறுமணம்.

சுத்தவிக்கேபம் } சுத்தவிட்சேபம் } சுத்தவிட்சேபம்.

சுத்தவித்தை - சிவதத்துவமைந்திலொன்று.

சுத்தன் - அயன், அருகன், கடவுள், மெய்யன், நிர்மலன், யாவற்றையும் கடந்து நிற்பவன், விஷ்ணு.

சுத்தாவத்தை - ஓரவத்தை.

சுத்தி - அரைப்பலம், இரப்போர் கலம், ஓர் கருவி, கிளிஞ்சல், கும்பிடுகிளிஞ்சல், சங்கு, சுத்தியல், செய்க்குத்தி முதலியன, பரிசுத்தம், பவித்திரம்.

சுத்திகரம் - சுத்திசெய்தல்.

சுத்திகை - அகல், இப்பி.

சுத்தியல் - சிறுசம்மட்டி.

சுத்துாம் } கண்டங்கத்திரி.
சுத்துரு }

சுத்தோதகம்-சுத்தஜலம்,நன்னீர்.

சுநகன் - நாய், நிருருதிதிக்கு.

சுநச்சேபன்-ரிசிகமுனி புத்திரன்.

சுநாசீரன் - இந்திரன்.

சுநாரம் - வுடைக்கலான் குருவி, நாய்ப்பால், பாம்பின்முட்டை.

சுநி - பெண்ணாய்.

சுநிதம் - நன்னடை.

சுந்தரபாண்டியன் - ஓர் பாண்டியவரசன்.

சுந்தரமூர்த்தி - அறுபத்துமூவரிலொருவர்.

சுந்தரம் - அழகு, நன்மை, நிறம்.

சுந்தரன் - அழகன், காமன், சுந்தரமூர்த்தி.

சுந்தரி - அழகுள்ளவள், இந்திராணி, சிறுசெருப்படி, துர்க்கை, பார்வதி, பெண், மூஞ்சூறு.

சுந்தன் - ஓரரக்கன்.

சுபகதி - சந்தோஷம், மோக்கம்.

சுபகரன் - ஈகையாளன், நன்மை செய்வோன்.

சுபகிருது - ஓர் வருடம்.

சுபக்கம் } தன்பக்ஷம், பொருளிருக்கும்பக்கம்.
சுபட்சம் }

சுபத்திரை - அருச்சுனன்மனைவி.

சுபமிருத்து - நன்மரணம்.

சுபம் - காற்று, தருமம், நன்மை, நித்தியலோகத்தொன்று, பரிசம், மங்களம், மோட்சம், யுத்தம், வாழ்த்து.

சுபயோகம் - ஓர்யோகம், அமுதயோகம்.

சுபராசி - நல்லராசி, அவை—கற்கடகம், மிதுனம், இடபம், கன்னி, தனுஸு, துலாம், மீனம் என்னுமேழாம்.

சுபவாதனை - ஆன்மாவானந்தத்தழுந்தல், ஞானனுபவம்.

சுபன்னன் - கருடன், சேவல்.

சுபாசுபம் - இன்பதுன்பம், நன்மை தீமை.

சுபாலம் - உபநிடதங்களி லொன்று.

சுபாலிகை - அடுப்பு.

சுபாவஞானம் - அதிட்டானமு மாரோபமுமற்றிருத்தல்.

சுபாவமுக்தி - சுத்தமுக்தி.

சுபாவம் - இயல்பு, கபடமின்மை.

சுபாவவாதம் - ஓர் சமயநூல்.

சுபானு - ஓர் வருடம்.

சுபிட்சம் - செழிப்பு.

சுபுகம் - மோவாய்க்கட்டை.

சுபுட்பம் - கராம்பு, பவளமரம்.

சுபுத்தி - நற்புத்தி.

சுபை - அரசாட்சி, தேவகூட்டம், நியாயஸ்தலம், மூங்கில்.

சுபையதார் - ஓரதிகாரி.

சுப்பியம் - மாவிலிங்கம்பட்டை, விளாம்பட்டை, வெள்ளிலோத்திரம்.

சுப்பிரசுதை - காட்டெருமைப் பால்.

சுப்பிரதந்தி - வடமேற்றிசை யானையின் பெண்யானை.

சுப்பிரதீபம் - மிக்கவொளி, வடகீழ்த்திசையானை.

சுப்பிரபேதம் - சிவாகமத்தொன்று.

சுப்பிரமதுவா - கூகைநீறு.

சுப்பிரம் - ஒளி, ஓர்யோகம், கருடப்பச்சையின் குணம், சந்தனம், நீர்மிக்கவொளி, வெண்மை, வெள்ளி.

சுப்பிரயோகம் - பஞ்சபாணுவத்தையிலொன்று.

சுப்பெனல்-ஓரொலிக்குறிப்பு, நீர் வற்றல், விரைவின் குறிப்பு.

சுமங்கலம் - நன்மங்கலம்.

சுமங்கலை - உமை, மங்கலியப் பெண்.

சுமங்கை - ஆடுதின்னாப்பாலை, வறட்சுண்டி.

சுமடர் - அறிவிலார், கீழ்மக்கள்.

சுமடு - அறிவின்மை, சும்மாடு, சுமை.

சுமதி - அறிஞன், நற்குணமுடையாள், நற்குணன், நற்புத்தி, நன்மதி, பாரம், மிகுதி.

சுமத்தல் - கட்டளைசார்தல், தண்டஞ்சார்தல், தாங்குதல், பாரமேற்றல், பொறுத்தல்.

சுமத்திரை - பாண்டுவின் மனைவிகளுளொருவள்.

சுமத்து - சுமத்துதல், சுமத்தென் னேவல்.

சுமம் - பூ.

சுமரணம் } உணர்ச்சி, சுரணை,
சுமரணை } சொரணை, நினைப்பு.

சுமருதல் - சுமக்குதல்.

சுமனசம் - பூமலர்.

சுமாரகம் - ஞாபகம், நினைவு.

சுமார் - ஏறக்குறைய.

சுமார்த்தம் - ஞாபகத்தோடு சம்பந்தப்பட்டது, ஸ்மிருதியிலே விதிக்கப்பட்டது.

சுமாலி - ஓரரக்கன், கள்.

சுமித்திரை - தசரதன் மனைவி.

சுமை - பாரம்.

சுமைதலை - பொறுப்பு.

சுமைதாங்கி - ஏதண்டை, பொறுப்பாளி.

சுமையடை - சும்மாடு.

சும்பகம் - ஊசிக்காந்தம், தீத்தட்டிக்கல்.

சும்பகன் - ஸ்திரீலோலன்.

சும்பனம் - சூப்புதல், முத்தம்.

சும்பித்தல் - முத்தமிடல்.

சும்புதல் - வாடிச்சுருங்கல்.

சும்புன் - கடம்பு.

சும்மா-இயல்பு, உபசாரமின்மை, ஒழிவிலாமை, தொழிற்படாமை, முகாந்தரமின்மை, மௌனம்.

சும்மை - ஆவாரை, ஊர், ஒலித்தல், சுமை, நகர், நாடு, நெற்போர்.

சுயஞ்சோதி - இயற்கையொளி, கடவுள், கலப்பிலாவொளி.

சுயபுணர்ச்சி - தற்புணர்ச்சி.

சுயம் - இயல்பு, கலப்பற்றது, சொந்தம், தானுதல்.

சுயம்பாகி - சமையற்காரன், சவர்க்காரம்.

சுயம்பிரகாசன் - தற்சோதியானவன்.

சுயம்பு இயற்கை, கடவுள், சிவன், சுயாதீனம், தானாகவாதல், பிரமன்.

சுயம்வரம் - கணவனைத்தானுகத் தேர்ந்தெடுப்பது.

சுயிரகம் - குசைப்புல்.

சுயேச்சை - தன்னிச்சை, தன்னிஷ்டம்.

சுயோகி - கள்.

சுயோதனன் - துரியோதனன்.

சுரகுரு - இந்திரன், வியாழன்.

சுரங்கம் - ஒளிப்பிடம், கீழறை, சாதிலிங்கம், திலகசிந்தூரம், தேன், தோடம் பழம், தோன்றுமலுள்ளறுக்குந்துவாரம்.

சுரசம் - அரத்தை, சாறு, சிறுகிழங்கு, சுகிர்தசாரம், துளசி, நறும்பிசின், நொச்சில், பாதரசம், முறித்தசாறு.

சுரசனி - இரவு.

சுரசா - துளசி.

சுரசி - வெண்ணொச்சி.

சுரசை - சிற்றரத்தை.

சுரஞ்சனம் - கமுகு.

சுரடி - ஓர்பண்.

சுரண்டல் - கவருதல், சீண்டுதல், தூண்டுதல், விபசாரஞ்செய்யல்.

சுரதநூல் - காமநூல்.

சுரதம்-அன்பு, இசைப்பு, இரதம், ஒட்டல், பாதரசம், புணர்ச்சி, மருந்திழிசாரம்.

சுரதனு - வானவில்.

சுரதரு - கற்பகம்.

சுரத்தல் - இடைவிடாது சொரிதல், உண்டாதல், ஊறுதல், நிறைதல், பயத்தல்.

சுரத்துய்த்தல் - ஒருதுறை.

சுரநதி - ஆகாயகங்கை, கங்கை.

சுரபதம்-ஆகாயம், தேவலோகம்.

சுரபி - கந்தகத்தூள், கள்ளி, காமதேனு, சாதிக்காய், சித்திரைமாதம், துளசி, தேட்கொடுக்கி, பசு, பிரமிப்பூடு, பூமி, மது, மல்லிகை, வாசனை.

சுரபு - இல்வம்பிசின்.

சுரபுன்னகம், சுரபுன்னை } ஓர் மரம், வாழை.

சுரப்பு - சுரத்தல்.

சுரப்புவடிவு - மூலமேற்றிரன்.

சுரமதி - சிலந்தி.

சுரம் - அருநெறி, இசை, இராகத்தகுதி, இராகபேதம், உட்டுளை, இருப்பு, கள், காடு, காய்ச்சல், கொம்பினுட் குருத்து, பாலைநிலம், வழி.

சுரரிடம் - தேவலோகம்.

சுரர் - வானோர்.

சுரர்துருமம் - தேவதாரு.

சுரர்பகைவர் - அஸுரர்,

சுரர்பதி - இந்திரன்.

சுரன் - அறிஞன்; சுரம், சூரியன், பாலை நிலம்.

சுரா - கள்.

சுராட்டு - இந்திரன், சிவன், விஷ்ணு.

சுராட்புருடன் - சிவன், வாஸ்து புருடன், விஷ்ணு.

சுராபகை - கங்கை.

சுராலயம் - கள்ளுக்கடை, சுவர்க்கலோகம், மேரு.

சுராலை - சாம்பிராணி.

சுரி - ஆணரி, எட்டுத்துளை, சங்குச்சுரி, சுரியென்னேவல், சுழற்சி, சேறு, தமர், முறுக்கு.

சுரிகுழல் - அளகம், கவசம், சுருண்டகுழல், பெண்மயிர்.

சுரிகை - உடைவாள், ஒருபநிடதம், கத்தி, கவசம்.

சுரிதகம் - கலிப்பாவுறுப்பாறனுளொன்று.

சுரிதம் - கலக்கப்பட்டது, வெட்டப்பட்டது.

சுரிதல் } சுருங்கல், சுழித்தல்,
சுரித்தல் } சுழித்துள்ளே வாங்கல், சேறுதல், திரைதல்.

சுரிப்புறம் - சங்கு, துவாரமுள்ள பக்கம், நத்தை.

சுரியல் - இளைஞர் மயிர், சுரிதல், சுழலல், நீர்ச்சுழி, பெண்மயிர், மயிர், வளைவு.

சுருக்கம் - அடக்கமான செய்கை, கட்டல், குறைவு, சங்கிரகம், சிறுமை, சுருங்கல், வறுமை.

சுருக்கல் - அடக்கல், கட்டல், சுருக்குதல்

சுருக்கி - ஆமை, ஓர் வினையெச்சம், சிறுகீரை, தொட்டாற் சுருக்கி.

சுருக்கு - உருவுதடம், கட்டு, கண்ணி, கயிற்றுச் சுருக்கு, சுருக்கம், சுருக்கென்னேவல், சுருங்கப்பிடித்துக் கட்டியது, நெய்த்துடுப்பு, மடிப்பு.

சுருங்கச்சொல்லல் - நூலழகிலொன்று, அது—சொற்சுருங்கச்சொல்லுதல்.

சுருங்கல் - குறைதல், சுருங்குதல், திரைவு, நுழைவாயில், மாலை.

சுருங்கு - சலதாரை, சுருங்கென்னேவல்.

சுருங்குதல் - அடக்கமாயிருத்தல், அலைசுருங்கல், இறுகுதல், ஒடுங்குதல், ஒழுக்கந்தப்பல், குறைதல், கூம்புதல், கெடுதல், சங்கிரமாதல்.

சுருங்கை - கரந்தகற்படை, கோட்டையிற் கள்ள வழி, நுழைவாயில், மதகு.

சுருசுருத்தல் - ஊடுருவுமொழிக் குறிப்பு, விரைவுக்குறிப்பு.

சுருட்டல் - சுருட்டுதல்.

சுருட்டி - ஆலவட்டம், ஓரிராகம், மயிர்ச்சிகைப்பூடு.

சுருட்டு - உபாயம், சீலைச்சுருட்டு, சுருட்டென்னேவல், சுருள், மடக்குகை.

சுருண்டுபோதல் - சோர்ந்துபோதல், பலங்குன்றல்.

சுருணி - யானைத்தோட்டி.

சுருணை - ஓர் வளைவு, சுருண்டது, நூல் முதலியவற்றின் பந்து, மயிர்ச்சுருணை.

சுருதி - இசை, ஒலி, காது, சுதி, சுரம், மங்கலச்சொல், மந்திரம், வேதம்.

சுரும்பர் - ஆண்வண்டு, மலைவண்டு.

சுரும்பாவன் - மன்மதன்.

சுரும்பு - ஆண்வண்டு, வண்டு.

சுருவை } நெய்த்துடுப்பு.
சுருவம் }

சுருளல் - சுருளுதல், மயிர்ச் சுருள், வளைதல்.

சுருள் - ஐம்பாவிலொன்று, அஃது,—பின்னே செருகல், சுருளென்னேவல், தாமரை யுட்சுருள், நூற்சுருள் முதலி யன, பெண்மயிர், வெற்றிலைச் சுருள், வட்டாகாரமாய் மடிப் புண்ட பாத்திரம்.

சுரூபம் - உருவம், நல்லுருவம்.

சுரூபவதி - அழகுடையவள்.

சுரேசன் - இந்திரன், ஈசானன், குமரன்.

சுரேந்திரன் - இந்திரன்.

சுரேந்திரன்மைந்தன் - அருச் சுனன், சயந்தன்.

சுரை - அமுதம், அம்புத்தலை, உட்டுளை, களவு, கள், குழாய், சுரைக்கொடி, சூர்ணம், பசு, பசுவின் முலை, பூண், விலங்கின் முலை.

சுரோணராசம்வர்த்தம் - சிகப்பு இரத்தினம்.

சுரோணி - நிதம்பம்.

சுரோணிதம் - உதிரம், சிவப்பு, மகளிர் சூதகம்.

சுரோத்திரம் - காது, கேள்வி.

சுரோத்திரேந்திரியம் - ஞானேந் திரியமைந்திலொன்று.

சுலபம் - அற்பம், இலேசு.

சுலவல் - சுழலல், சுழற்றுதல்.

சுலனன் - அக்கினி.

சுலவுதல் - சுழலல், சுழற்று, சூழுதல்.

சுலுகம் - கலகம், குறைவு, சிரங் கை, சேறு.

சுலுப்பு - ஓர் மரக்கலம்.

சுலோகம் - ஆரியச்செய்யுள், பழ மொழி, புகழ், வசனம்.

சுலோகி - கள்.

சுலோசனம் - சிறந்தவிழி, மான், மூக்குக்கண்ணாடி.

சுலோபம் - அற்பம், எளிது, எறும்பு, மூதுரை.

சுல்கம் - இறையப் பொருள்.

சுல்லம் - கயிறு, தாமிரம்.

சுல்லி - அடுப்பு, மடைப்பள்ளி.

சுல்லு - வெள்ளி.

சுவ - சொந்த.

சுவகதம் - ஒன்றிற்றோன்றி அஃதை நீங்காது பலதன்மை யாயிருத்தல்.

சுவகபோலம் - தானுயுண்டு பண்ணல்.

சுவசனம் - சாதுரியம், நல்ல வசனம்.

சுவச்சம் - அழுக்கின்மை, எண் ணெய், குற்றமற்றது, சொச் சம், சௌக்கியம், நின்மலம், வெண்மை.

சுவடி - பனையோலையில் எழுதிய புத்தகம்.

சுவடு - அங்கவடி, அடிச்சுவடு, அடையாளம், இரும்புக்கவசம், கட்டு, கபடம், குறிப்பு, சுளுகு, தழும்பு, நெல்விலக்கம், பக்கரை, வண்டித்தடம்.

சுவணம் - கருடன், கழுகு, பொன்.

சுவத்தம் - சொஸ்தம், சுகம்.

சுவத்தி } ஓரடையாளம், நவா
சுவத்திகம் } சனத்தொன்று, மங்கலவடையாளம்.

சுவநம் - சண்பகம், சுவப்பநம்.

சுவநன் - சூரியன், சந்திரன், தீ.

சுவப்பிரம் - நரகம், பாதாளம், வளை.

சுவம் - ஐசுவரியம், சொந்தம்.

சுவயம் - உரிமை, சுயம், தான்.

சுவயம்வரை - தானேமாலையிட்டு மணமுடித்த பெண்.

சுவயேச்சை - தன்னிச்சை.

சுவரகழ்கருவி - கன்னக்கோல்.

சுவரொட்டி - அணைசுவர், ஆட்டின் மண்ணீரல், சுவர் முள்ளங்கி.

சுவர் - அண்டச்சுவர், அலங்காரம், ஆகாயம், காயத்திரியினொருறுப்பு, தேவலோகம், மதில், வீடு முதலியவற்றின் சுவர்.

சுவர்க்கம் - தேவலோகம், மூலை.

சுவர்க்கர் - வானோர்.

சுவர்க்கோழி - ஓர்வண்டு.

சுவர்ச்சாதி - சத்திச்சாரம்.

சுவர்ணம் - சொன்னம், பொன்.

சுவலை - அரசமரம்.

சுவலோகம் - மேலேழுலகி னொன்று.

சுவல்லி - கார்போகிவிதை.

சுவல் - குதிரைக்கழுத்தின்மயிர், தோண்மேல், பிடர், முதுகு, மேடு.

சுவல்வரி - அணில்.

சுவவு - சுவர்க்கம், பறவைமூக்கு, மூஞ்சூறு.

சுவறல் - உறிஞ்சல், ஊறுதல், காய்தல், வற்றல்.

சுவற்றுதல் - குடித்தல்.

சுவன்னகாரன் - பொற்கொல்லன்.

சுவன்னயூதி - செப்புமல்லிகை.

சுவா - நாய்.

சுவாகதம் - இள்ளை, க்ஷேமம், நல்வரவு, விசாரித்தல்.

சுவாகா } அக்கிதேவி, மந்திர
ஸ்வாஹா } முடிவினொன்று.

சுவாசகம் - எட்டி, இளி, சவட்டுமண், புருமுட்டி, பேராமுட்டி, விஷமுட்டி.

சுவாசம் - உயிர்ப்பு, சவட்டுமண், நல்லிருப்பிடம், நன்மணம்.

சுவாசிநீ - பாதிரிமரம்.

சுவாதகத்தி - இத்திமரம்.

சுவாதம்-உருசித்தல், ஒருநோய், சுவாசம், பாகஞ்செய்தல், புசித்தல்.

சுவாதி - ஓர் நக்ஷத்ரம், சோதி நாள்.

சுவாதிட்டானம் - ஆதாரங்களா றிலிரண்டாவது.

சுவாது - ஆடாதொடை, தித்திப்பு, நல்சலம்.

சுவாதுகண்டகம் - நெருஞ்சில்.

சுவாதுகந்தி - துளசி.

சுவாத்தியம் - இன்பம், சுகம், பாக்கியம்.

சுவாத்தியாயம் - அத்தியயனம், வேதமோதல், வேதம்.

சுவாந்தம் - மனம்.

சுவாபப்பிரமாணம் - ஓரளவு, அஃது— ஒருசொற்பல பொருள் விரிந்தவழி அதற்கேற்ற பொருள் கொள்ளல்.

சுவாபம் - இயல்பு.

சுவாமி - அரசன், அருகன், உவாத்தி, எசமானன், கடவுள், கணவன், கந்தன், குரு, சிவன், பொன்.

சுவாயம்பு - ஓர்மனு.

சுவாயம்புவம் - சிவாகமத் தொன்று.

சுவாரசம் - இனிமை, வெள்ளி லோத்திரம்.

சுவாரி - கப்பலின்பின்னணியம், சவாரி, சிவிகை முதலிய யானம்.

சுவார்த்தானுமானம் - தற்குறிப் பனுமானம்.

சுவாலே - சொலிப்பு.

சுவானம்-நாயுருவி, நாய், பொன்.

சுவானுபவம் } தெய்வவருள்,
சுவானுபூதி } தெய்வவறிவு.

சுவி - இத்திமரம், துளசி.

சுவிகை - கச்சோலம், கள்.

சுவீகாரம் - அங்கீகரிப்பு, அனுபவம், தனதாக்குதல்.

சுவீரியம் - இலந்தைக்கனி.

சுவேசம் - வெண்கரும்பு.

சுவேச்சை - தன்னிச்சை.

சுவுகம் - மோவாய்க்கட்டை.

சுவேதகம் - சவரிலோத்திரம்.

சுவேதகாண்டம் - வஞ்சிக்கொடி.

சுவேதகுசுதம் - வெள்ளெருக்கு.

சுவேதசம் - வியர்வையிற்பிறப் பன.

சுவேதசாரம் - நாணற்புல்.

சுவேதநீர் - சுக்கிலம்.

சுவேதமூலம் - சாரணை.

சுவேதம் - நாணல், மாவிலங்கம், வஞ்சிமரம், வியர்வை, வெண்மை, வெள்ளி.

சுவேதவராககற்பம் - ஓர்கற்பம்.

சுவேதவனப்பெருமாள் - சிவஞானபோதஞ்செய்த மெய்தேவர்.

சுவேதவனம் - திருவெண்காடு.

சுவேதவாகனன் - அருச்சுனன்.

சுவேதனை - தன்னறிவு.

சுவேதனைக்காட்சி - அபரோட்சஞானம்.

சுவேதாசுவதரம் - ஒருபநிடதம்.

சுவை - அறுசுவை, அவை— இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு, கைப்பு, இனிமை, இரசாலங்காரம், உருசி, ஐம்புலத்தொன்று, சித்திரைநாள், சுவையென்னேவல், விலங்குறுகுறிப்பினுளொன்று.

சுவைத்தல் . இன்பந்தரல், உண்டல், உருசித்தல், போகம் நுகரல், முலையுண்ணல்.

சுழலல் - கன்றுதல், சுழல்வு.

சுழலாவிரை - பொன்னுவிரை.

சுழலுதல் - கலங்குதல், சுழலல், சுற்றுதல்.

சுழல் - காற்றூடி, சுழலென்னேவல், சுழல்,சுழிநீர் முதலியன, வஞ்சனை, வளைதடி, வுளைவு.

சுழல்காற்று - சூறைக்காற்று.

சுழல்படை - சக்கரம், வளைதடி.

சுழல்வு - கலக்கம், சுற்று,சுழற்சி.

சுழற்றல் - உழற்றல், கிறுகிறுப்பு, சுற்றியாட்டல்.

சுழாரை - பொன்னுவிரை.

சுழி - அங்கச்சுழி, அக்ஷரக்சுழி, இலக்கணச்சுழி, உரோமச்சுழி, கபடம், சுழியென்னேவல், நீர்ச்சுழி முதலியன,மூர்க்கம், விந்து.

சுழிகுளம் - சித்திரக்கவியினென்று, அது—நான்கடியுஞ் சுற்றி வாசிக்கினுஞ் சரிவரத் தொடக்குங் கவி.

சுழிகை - ஓர் சிவஸ்தலம், கள், சுருள், சுழிதல்.

சுழிதல்- கபடமுண்டாதல், கலங்கல், கழித்தல்.

சுழித்தல் - அலைதல், எழுச்சி, சுழிக்குதல், மறைத்தல், வேறொரிடத்தின்றி நிற்றல்.

சுழிமுனை - ஆறுதாரத்தையு மூடுருவிநிற்குமநாடி, நடுநாடி மூன்றினொன்று.

சுழியச்சு - தட்டார் கருவியினொன்று.

சுழியல் - சுழிதல், சுருள், திருச்சுழியென்னுமோர்தலம்.

சுழிவு - ஒளிவு.

சுழுத்தி - ஐந்தவத்தையி னொன்று, அஃது—மயக்கமான நித்திரை, மூன்றுமவத்தை, அஃது இதயத்தானம்.

சுழுமுனை - மூவகைநாடியி னொன்று.

சுளகு - முறம், விசாகநாள்.

சுளி - புளியாரை.

சுளிகை - முருங்கை.

சுளிக்கு - ஊன்றுகோல்.

சுளித்தல்-கோபம், சினக்குறிப்பு. சினம், திரும்பல், வெறுப்பு.

சுளுகு-அற்பம், இலகு, உபாயம், சிறுமை.

சுளுகோதகம் - சிறங்கைநீர்.

சுளுந்து - கோரான், சூள்.

சுளுவு-இலேசு, சலக்கரணை, சுலபம், தணிவு.

சுளை - பலாக்காய் முதலியவற்றின் சுளை.

சுள் - அற்பம், உறைப்பு, கருவாடு, சூள், மெல்லியது.

சுள்ளக்கம் - கோபம், மேட்டிமை, வேர்க்குரு.

சுள்ளக்காய் - மிளகாய்.

சுள்ளம் - கோபம்.

சுள்ளாணி - மெல்லியவாணி.

சுள்ளாப்பித்தல் - அடித்தல், உறைத்தல், எரிதல், சூடுகாட்டல், வீசுதல், வேகங்கொள்ளல்.

சுள்ளாப்பு - அடி, உறைப்பு, சீக்கிரம், பழிச்சொல், வெப்பம்.

சுள்ளி - அனிச்சமரம், ஆச்சமரம், சிறுகொம்பு, சிறுவிறகு, ஞாழல், மயிர்க்கொன்றை, மாமரம்.

சுள்ளிடுதல்-உறைத்தல், நோதல்.

சுள்ளிடுவான் - ஒருபூச்சு, மிளகுக்காய்.

சுள்ளு - கோபம், கள், வெப்பம்.

சுள்ளை - காளவாய், சூளை, மட்கலஞ்சுடுசூளை.

சுறடு - வறண்டது.

சுறட்டன் - முரடன்.

சுறட்டு - சிக்கு, தலையிடுகை, துறட்டு, தொரந்தரை, மூர்க்கம்.

சுறணம் - கருணைப்பூண்டு.

சுறண்டு - கோள், சருவுதல், தூண்டிவிடுதல், புறண்டுதல்.

சுறவு - சுறா.

சுறா - தேக அழுக்கு, மகரமீன், மகரவிராசி.

சுறுளம் - கதி, கோபம்.

சுறீரெனல் - ஒலிக்குறிப்பு, விரைவுக்குறிப்பு.

சுறுக்கு - ஆத்திரம், கதி, காரம், கூர்மை.

சுறுக்கெனல் - கடுப்பின்குறிப்பு.

சுறுசுறுப்பு - சாக்கிறதைவிரைவு, வேகம்.

சுறை - கொத்தான்.

சுரேணிதவழலை - இந்துப்பு.

சுற்பம் - செப்பு, சொற்பம்.

சுற்றத்தார் - இனத்தார், துணைவர், பரிசாரகர்.

சுற்றந்தாழல் - இனந்தழுவியிருத்தல்.

சுற்றம் - அரசர்க்குத் துணையினொன்று, உறவு, உற்றார்.

சுற்றல் - உடுத்தல், எழுச்சி, சுற்றுதல், சூழ்தல், வட்டமாயோடல்.

சுற்றிக்கொள்ளுதல் - கவர்தல், சிக்குப்படுதல், சூழ்ந்து கொள்ளுதல்.

சுற்று - உழற்சி, கயிறு முதலிய சுற்றுஞ்சுற்று, கவர்தல், சுருள், சுற்றளவு, சுற்றுப்புறம், சுற்றென்னேவல், மதில், மரச்சுற்று, வட்டமாயோடல்.

சுற்றுதல் - அணிதல், கவர்தல், சுழற்றல், சூழுதல், நடத்தல், நூன் முதலிய சுற்றல், வஞ்சித்தல், வட்டமாயோடல்.

சுற்றுப்புறம் - அயல்.

சுற்றுவழி - நேரற்ற பாதை.

சுற்றுவாரி - கல்லூரி, சுவற்புறத்து நீண்டவுத்திரம்.

சுனகன் - நாய், நிருருதிமூலை.

சுனக்குடம் - சதுரக்கள்ளி.

சுனை - உரோசம், கரு, குளம், கூர், தினவு, நீரடுத்தவிடம், நீரூற்று, பசும்புற்றரை, மலைச்சுனை.

சுனைக்கரந்தை - ஓர் கரந்தை.

சுனைதல் - குழியாக்கல், குழைதல், சொரிதல், மிருதுவாதல், வாடல்.

சுனைத்தல் - சொறிதல்.

சுனைவு - பேய்க்கடலை, மலைத்தண்ணீர்.

சுன் - சனி, சுன்னை, வட்டம், வெண்மை, வெறுமை.

சுன்னச்சி - சத்திச்சாரம்.

சுன்னிதம் - நுண்மை.

சுன்றுக்குட்டி - திரட்டுப்பாற்கட்டி.

சுன்னை - பூச்சியம்.

சூ

சூ - ஓரெழுத்து, விலங்கினங்களை யோட்டுமோர் குறிப்பு, வியப்புச்சொல்.

சூகம்-அம்பு, இரக்கம், ஊர்வன, காற்று, சுனை, தவழ்சாதிப்பொது, தாமரை, நெல்வால்.

சூகரம் - பன்றி, மான்.

சூகை - ஓரெறும்பு, சுழற்சி, தலைச்சுழற்சி, யானை, வீட்டின் பின்புறம்.

சூக்கம் - சூட்சம்.

சூக்காட்டுதல் - உச்சக்காட்டுதல்.

சூக்குமசரீரம் - ஸ்தூலசரீரமல்லாதது, நுண்வடிவானவுட்சரீரம்.

சூக்குமதண்டுலம் - திப்பிலி.

சூக்குமபத்திரம் - கடுகு, கொத்தமல்லி, சீரகம், செங்கரும்பு.

சூக்குமபூதம் - ஸ்தூலபூதமல்லாதது.

சூக்குமம் - அணு, அற்பம், ஓரலங்காரம், கடவுள், சிவாகமத்தொன்று, சீந்தில், சிவதேகம் மூன்றினொன்று, தவறு, நுண்ணிய வறிவு, நுண்மை, வஞ்சகம், வானோர்வரம் நான்கினொன்று, அஃது — கண்டிப்பின்மை.

சூக்குமில் - சிலந்திப்பூச்சிக்கூடு.

சூக்குமை - நான்கு வாக்கினொன்று.

சூக்குளி - வெற்றிலை.

சூக்தம் - புகழப்படுவது.

சூங்குமம் - வேலிப்பருத்தி.

சூசகம் - உளவு, தருப்பைப்புல்.

சூசகவாயு - சூதகவாயு.

சூசகன் - உவாத்தி, ஒற்றன்.

சூசம் - துருவாட்டேறு.

சூசநம் - அறிவித்தல், பார்த்தல்.

சூசனை - சமிக்ஞை, நுண்மை, போதனை, விவேகம்.

சூசாக்கிரம் - ஊசிமுனை.

சூசி - ஊசி, குறிப்பு, துளை.

சூசிகம் - ஓர் வாச்சியம்.

சூசிகாமுகம் - சங்கு.

சூசிகை - ஊசி, குறிப்பு, யானைத்துதிக்கை.

சூசியம் - ஊசிக்காந்தம், சூட்டிறைச்சி.

சூசியாசியம் - பரதவுறுப்புகளொன்று, மூஞ்சூறு.

சூசுகம் - முலைக்கண்.

சூடகம் - கிணறு, கைவளை, சடை

சூடம் - உச்சி, தலை.

சூடல் - அணிதல், சூடுதல், முடிதரித்தல்.

சூடன் - ஓர்மீன், கருப்பூரம்.

சூடாகரணம் - குடுமிவைத்தல்.

சூடாமணி - ஓர் காப்பியம், ஓர் தேவமணி, குன்றிமணி, முடிமணி.

சூடாமணிநிகண்டு - வீரைமண்டலவர்செய்தநிகண்டு.

சூடாலம் - சணப்புவிதை, தலை.

சூடாலைக்கல் - ஓர் கல்.

சூடி - சீலை, சூடினவன், புடவை.

சூடிகை - முடி.

சூடிச்சி - எவட்சாரம்.

சூடிணர் - கோங்குமரம்.

சூடு - அரிக்கட்டு, உச்சிக்குடுமி, எருத்துத்திமில், சுடுதல், சூடுதல், சூடென்னேவல், சேவற்சூடு, தலை, நுனி, நென் முதலியவற்றினரிக்குவி யல், மயிர்சூடு, முடி, வெடி, வெப்பம்.

சூடை - ஓர்மீன், குடுமி, கைக் கடகம், வீட்டிறப்பு.

சூட்சி - உபாயம்.

சூட்சமபுத்தி - நுண்ணியபுத்தி.

சூட்சமம் - சூட்சமசரீரம், தந்தி ரம், நுட்பம்.

சூட்டல் - அணிவித்தல், ஏற்று தல், வியங்கோண் முற்று.

சூட்டு - குற்றச்சாட்டு, கூர்மை, சூட்டுந்தன்மை, சூட்டென்னே வல், தரித்தல், நுதலணிமாலை, பாம்பின் சூட்டு, மயில் முத லியவற்றின் சூட்டு, மாலை, முடிப்பு.

சூதகசத்துரு - காந்தம்.

சூதகம் - அருவருப்பு, கிணறு, தீட்டு, பழமை, பிறப்பு, மகளிர் துடக்கு, மாமரம்.

சூதத்தைப்பொன்னுக்கி - நாக பாஷாணம்.

சூதநதி - பொருனைநதி

சூதநோக்கல் - நீலாஞ்சனக்கல்.

சூதபாஷாணம் - இரசபாஷா ணம்.

சூதம் - இரசம், குறி, கேட்டல், சூதாடு கருவி, சூது, பவளமல் லிகை, பாதரசம், புளிமா, மடைத்தொழில், மன்மதன் கணை, மாமரம், வண்டு, விழு தல்.

சூதர் - சூதாடுபவர், தேர்ப்பாகர், பாணர், புகழ்வோர், வியாஸர் மாணுக்கர்.

சூதவஞ்சனம் - சூதநோக்கல்.

சூதவம் - வண்டு.

சூதனம் - அழித்தல்.

சூதன் - சமையற்காரன், சூதமா முனி, சூதாடுவோன், சூரியன், தச்சன், தேர்ப்பாகன், பாணன், புகழ்வோன், வஞ்சகன்.

சூதி - அசைவு, கதி, தைத்தல், நடை, பிள்ளைபெற்றவள்.

சூதிமம் - தைத்தல்.

சூது - ஓரிதழ்த்தாமரை, சூதாடு கருவி, சூதாட்டு, தாமரை, தாயம் விளையாடல், வஞ்சகம்.

சூதுவென்றி - ஒருதுறை.

சூத்திரதாரி - கடவுள், பதுமை யாட்டி.

சூத்திரநிலை - கருத்துத்தொடர் ந்துநிற்குநிலை, சூத்திரப்பாடல்.

சூத்திரப்பா - ஓரகவல், நூற்பா.

சூத்திரப்பாவை - கயிற்றினுலாட் டும் பாவை.

சூத்திரப்புறனடை - சூத்திரத் துக்கு விலக்கு முதலியன கூறும் விதி.

சூத்திரம் - இயந்திரம், இரகசியம், உபாயம், ஒழுங்கு, சூத்திரயாப்பு, நீர்ப்புநூல், பஞ்சிநூல், பூணூல், வழி நூல்.

சூத்திரர் - சூத்திரவேலை செய்வோர், நான்காம் வருணத்தோர்.

சூத்திரர்தொழில் - சூத்திரர்க்குரியவறுதொழில், அவை— உழுதல், காருகவினைகளாக்கல், குயிலுவத்தொழில், பசுக்காத்தல், மூன்று வர்ணத்தோர்க்குமேவல் செய்தல், பொருளீட்டல்.

சூத்திரவிருத்தி - சூத்திரர்தொழில், சூத்திரங்களுக்குரிய ஓர் உரை.

சூத்திரன் - புஷ்பராகம், வைடூரியம்.

சூநம் - இறைச்சிக்கடை, பிறப்பித்தல், பூமலர், மான், வீக்கம்.

சூநர் - ஊன்விற்போர்.

சூநியன் - முடவன்.

சூநு - சூரியன், பின்னோன், மகள், மகன்.

சூர்தூமம் - சிலர்தி நாயகம்.

சூபகாரன் - சமையற்காரன்.

சூபம் - அம்பு, ஓர் பயறு, மடைத்தொழில்.

சூப்பியம் - பாம்புகொல்லி.

சூப்புதல் - உமிந்தெடுத்தல், சுருக்குதல், சும்பனம்பண்ணால்.

சூமம் - ஆகாயம், நீர், பால்.

சூரசுதன் - சனி.

சூரசூதன் - அருணன், புதன்.

சூரசேனம் - ஓர் தேசம்.

சூரசேனன் - கண்ணன்பாட்டன்.

சூரணம் - கருணைக்கிழங்கு, பஸ்மம்.

சூரணிகை - ஒருவகைப்பா, கருத்துப்பொருள், விவரம்.

சூரணித்தல் - பொடித்தல்.

சூரபன்பன் - சூரன்.

சூரம் - அச்சம், கடலை, வீரம்.

சூரர் - படைவீரர்.

சூரலன் - பாண்டியன்.

சூரல் - சூரைப்பூ, பிரம்பு.

சூரன் - ஓரஸுரன், கரடி, கிருஷ்ணன் பாட்டன், கோழிச்சேவல், கௌரிபாஷாணம், சிங்கம், சூரபன்மன், சூரியன், தீ, நவச்சாரம், நாய், புலவன், வீரன்.

சூரி - எருக்கு, காடுகாள், காளி, கிருஷ்ணன், சூரியன், நத்தைச்சூரி, பண்டிதன், புத்தகுரு, புலவன், புளிச்சக்கீரை, மட்டுக்கத்தி, வீரமுள்ளவள்.

சூரியகணம் - அமங்கலகணம் நான்கினொன்று, நேர்நிரை நேரடுத்து வருவது.

சூரியகரந்தை-ஓர்விதக்கரந்தை.

சூரியகலை - சூரியசரம், பிங்கலை.

சூரியகாந்தம் - ஓர்பூ, சூரியமுகத்துத் தீவிடுங்கல்.

சூரியகுலம் - சூரியவமிசம்.

சூரியசங்கிரமம் } மாதப்பிறப்பு.
சூரியசங்கிராந்தி }

சூரியசரம் - பிங்கலை.

சூரியசித்தாந்தம்-ஓர்கணிதநூல்.

சூரியசித்திரம் - சூரியபுத்தி.

சூரியபுடம் - ஓர் கணிதபுடம்.

சூரியபுத்திரன்- சனி, சுக்கிரீவன், நமன், வருணன்.

சூரியபுராணம் - பதினெண்புராணத்தொன்று.

சூரியமணி - ஓர்மரம், சூரியகாந்தம்.

சூரியமண்டலம் - ஓர் மண்டலம், சூரியலோகம்.

சூரியர்-துவாதசாதித்யர், புலவர்.

சூரியவிட்சேபம் - சூரியனது பதனகேந்திரம்.

சூரியன் - ஆதித்தன், செப்புமலை, செவ்வெருக்கு, சோழன், ஞாயிறு.

சூரியாஸ்தமயம் - மாலைப்பொழுது.

சூரியாஸ்திரம் - ஓர்பாணம்.

சூரியாலோகம் - சூரியகிரணம்.

சூரியேந்துசங்கமம்-அமாவாசை.

சூரியை - புதுமணப்பெண்.

சூரியோதயம் - உதயகாலம்.

சூருமம் - குசைப்புல், மாந்தப்புல்.

சூரை-ஓர்செடி, ஓர்பயிர், ஓர்மீன், கள், தூதுளை, நெற்றிப்புல்.

சூர் - அச்சம், ஓரஸுரன், கொடுமை, சூரென்னேவல், துன்பம், தெய்வப்பெண், தெய்வம், நோய், மிளகு, யோகினி, வனதேவதை, மிளகு, வால்மிளகு.

சூர்த்தநோக்கு - கொடுங்கண், கொடுமை.

சூர்த்தல் - அச்சங்கொடுத்தல், சினத்தல், சுகிர்தல், சுழற்றல்.

சூர்ப்பகன்னம் - யானை.

சூர்ப்பகைவன் - முருகன்.

சூர்ப்பநகி } இராவணன் தங்கை.
சூர்ப்பநகை }

சூர்ப்பம் - சுளகு, தாணியென்னுமோரளவை.

சூர்ப்பு-கொடுந்தொழில், சுழற்சி, பயம், வளைந்தகடகம்.

சூர்மகள் - தெய்வப்பெண், யோகினி.

சூர்வு - சுகிர்வு.

சூலதரன் } சிவன், வயிரவன்.
சூலபாணி }

சூலம் - இரேவதிநாள், ஓராயுதம் கழு, சதுரக்கள்ளி, சாமரம், சூலைநோய், துகிற்கொடி, நித்தியயோகத்தொன்று, மரணம்.

சூலல் - அறுத்தல், தோண்டல்.

சூலி - கருப்பிணி, காளி, சிவன், துர்க்கை, யோகினி.

சூலிகம் .. கோழி.

சூலிகை - யானைக்காதடி.

சூலினி - சவர்க்காரம், வெற்றிலை.

சூலுதல் - அறுத்தல், குடைதல், தோண்டல்.

சூலை - ஓர் நோய்.

சூல் - கருப்பம், சூலென்னேவல், முகிற்கரு.

சூழல் - ஆராய்தல், ஆலோசனை, இடம், கருத்து, குறிப்பு, கூட்டம், சுற்றுப்புறம், சூழ்ச்சி.

சூழாமை-ஆராய்வின்மை, ஆலோசனையின்மை.

சூழி - உச்சி, உச்சிக்கொண்டை, கடல், குளம், சுனை, நெற்றி, யானைமுகபடாம்.

சூழிகை - கள்.

சூழுதல் - ஆலோசனைபண்ணல், சூழ்ந்திடல்.

சூழ்ச்சி - ஆராய்தல், ஆலோசனை, உபாயம், நுண்ணறிவு.

சூழ்ச்சித்துணைவர் - மந்திரிமார்.

சூழ்தல் - அறிதல், ஆராய்தல், ஆலோசனைபண்ணல், கருதல், கூடல், தரித்தல், சூழ்ந்திடல், பிற்படைட, பொருந்துதல், வட்டமிடல், வளைதல்.

சூழ்தாமை - தாமரை.

சூழ்ந்திடல் - வளைந்துகொள்ளல்.

சூழ்ந்தோர் - அடுத்தோர், உறவோர், சூழநிற்போர், மந்திரிகள்.

சூழ்வு - ஆராய்கை, உபாயம், சுற்றுகை, பக்கம்.

சூழ்வோர் - உறவினர், சூழ்ந்து நிற்பவர், மந்திரிகள்.

சூளாமணி - ஓர் நிகண்டு, சூடாமணி.

சூளி - ஆண்மயிர்.

சூளிகம் - அப்பவருக்கம்.

சூளிகை - அரமியம், உப்பரிகை, யானைச்செவியடி.

சூளுறல் - சத்தியம் செய்தல்.

சூளை - குயவன் சூளை, வேசி.

சூள் - ஆணை, சத்தியம், சபதம். சாபம், சுளுந்து, பாளை முதலியவற்றின் சூள்.

சூறல் - தோண்டல்.

சூறன் - மூஞ்சூறு.

சூறுவளி - சுழல்காற்று.

சூறை - ஆறலைத்தல், கொள்ளை, சுழல்காற்று, பனிச்சை.

சூனம் - பிறப்பித்தல், பூமலர், மான், வீக்கம்.

சூனர் - ஊன்விற்போர்.

சூனி - வேட்டைக்காரன்.

சூனியகதி - பிரபுலிங்கையிலோர் சருக்கம்.

சூனியதிசை - இயங்காத்திசை, தென்கீழ்த்திசை.

சூனியதிதி - சிரார்த்தத்திற் கொவ்வாத் திதி.

சூனியத்துவம் - நாசம்பண்ணு தல், வெறுமை.

சூனியமாதம் - ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி மாதங்கள்.

சூனியம் - அசுசி, ஆகாயம், இன்மை, பாழ், புள்ளி, பூச்சியம், பொறி, மாயை, மாரண வித்தை.

சூனியம்பண்ணுதல் - கெடுத்தல், சூனியஞ் செய்தல்.

சூனியவாதம்-கடவுளில்லை யென்னுமோர் சமயவாதம்.

சூனியார்க்கம் - இன்ன இன்ன மாதத்தில் அகவிலையேற்ற மென்பதை அறிதற் கருவியா யுள்ளதொன்று.

சூனு - சூரியன், பின்னோன், மகள், மகன்.

சூனை - குற்றம், சூனம், சொத்தை, மகள்.

சூன்முகில் - கரிமுகில்.

சூன்றல் - தோண்டல்.

சூன்றிடல் - குடைதல்.

செ

சே - ஓரெழுத்து, செம்மைப் பொருளடி.

செகதம் - பட்சித்தல்.

செகரிகம் - நாயுருவி.

செகில் - செதிள், தோண்மேல், தோள்.

செகிள் - கேழ்வரகின் கப்பி.

செகுத்தல் - அழித்தல், வெல்லுதல்.

செக்கர் - சிவப்பு, செவ்வானம், மாலைநேரம்.

செக்கர்வானிறத்தோன் - அரன், வீரபத்திரன்.

செக்கவுரி - கற்சூரை.

செக்கான்-எண்ணெய்வாணியன்

செக்கு - காணம், செக்கு, சதய நாள்.

செங்கட்டி - காவிக்கல், சாதி லிங்கம், செங்கற்கட்டி.

செங்கணன், செங்கண்மால் - விஷ்ணு.

செங்கத்தரி - அலந்தல்.

செங்கதிரோன் - சூரியன்.

செங்கதிர்நாள் } உத்திர
செங்கதிர்பிறந்தநாள் } நாள்.

செங்கமலம் - செந்தாமரை.

செங்கமலை - இலக்குமி.

செங்கல் - காவிக்கல், சுட்டகல்.

செங்கழுநீர் - செங்குவளை.

செங்களம் - போர்க்களம்.

செங்களை - குதிரைப்பற் பாஷாணம், செங்கரும்பு.

செங்காகம் - செம்போத்து.

செங்காடு - ஓர்சிவஸ்தலம், சிவந்த நிலம், செங்காட்டான்குடி.

செங்காந்தள் - சிவப்புக்காந்தள்.

செங்காரணி - கருஞ்சிவலை.

செங்கார் - ஓர்விதநெல், கருஞ் சிவப்பு.

செங்கிளுவை - ஓர் பறவை, ஓர் மரம்.

செங்கீரை - ஓர் கீரை, பிள்ளைக் கவியிலொருறுப்பு.

செங்குத்து - நேரேநிமிர்ந்தது.

செங்குந்தம் - கண்ணோயுளொன்று.

செங்குந்தர் - கைக்கோளர்.

செங்குமுதம் - செவ்வாம்பல்.

செங்குவளை - செங்கழுநீர்.

செங்கை - ஆதிரைநாள், சிவந்தகை.

செங்கையான் - ஓர்பூடு.

செங்கொடிவேலி } ஓர்கொடி.
செங்கொடுவேலி }

செங்கொல் - பொன்.

செங்கொல்லர் - தட்டார்.

செங்கோடு - ஓர்மலை, செருந்தி மரம்.

செங்கோடுபாய்தல் - மலை யுச்சியிலிருந்து பாய்தல்.

செங்கோட்டம் - ஓர் மருந்து.

செங்கோட்டியாழ் - நால்வகை யாழியொன்று.

செங்கோலம் - செம்புமணல்.

செங்கோலோச்சல் - அரசாளல்.

செங்கோல் - ஆணை நடத்துங் கோல், நீதி.

செங்கோற்கடவுள் - நமன்.

செச்சை - உதயசந்திரன், சட்டை, சிவந்தநிலம், செங்காடு, செஞ் சாந்தின் குழம்பு, செந்துளசி, சோடு, நீறு, வீட்டின் மேற் பக்கம், வெட்சிமரம், வெள் ளாட்டுக்கடா.

செஞ்ச } சேர, நிறைய,
செஞ்சவே } நேராக.

செஞ்சடையோன் - காசி நிறப் படிகம், சிவன், வயிரவன், வீர பத்திரன்.

செஞ்சால் - துப்பாக்கி முதலியன.

செஞ்சி - அரணை பட்டினம், ஓரூர்.

செஞ்சிலை - கற்காவி, சாத்திர வேதி, செங்கல்.

செஞ்சீரகம் - ஓர் சீரகம்.

செஞ்சுடர் - சூரியன், தீ.

செஞ்சுடர்ப்பகவன் - சூரியபகவான், தீ.

செஞ்செயல் - உரியபொருளையுணர்த்துவது.

செஞ்செழிப்பு - செழிப்பு, தாராளம், முகமலர்ச்சி.

செஞ்சேறு - இரத்தச்சேறு.

செஞ்சொல் - செம்மொழி, செவ்வியமொழி, நேர்மொழி.

செடல் - செடில்.

தழும்பு - காயம், குற்றம், நாத்தழும்பு, மறு.

தழுவணை - அணைக்குந்தலையணி கடலட்டை, சாய்மானமான மெத்தை,

தழுவல் - தழுவுதல்.

தழுவுதல் - ஏற்றுக்கொள்ளுதல் கட்டியணைத்தல், கலத்தல்.

தழை - இலை, தழையென்னேவல், தளிர், பீலிக்குடை, மயிற்றோகை.

தழைக்கை, தழைதல் } தளிர்த்தல்.

தழைத்தல் - செழித்தல், தளிர்த்தல், வாழ்தல்.

தளதளெனல் - இளக்கக்குறிப்பு, ஒளிக்குறிப்பு.

தளப்பம் - தளப்பற்றுமரம், தளர்வு.

தளம் - இலை, உப்பரிகை, கப்பலின் தட்டு, கூட்டம், சாடி, சார்து, தடிப்பு, நிலத்தின்றளம், படை, பூவிதழ்.

தளம்பல் - அசைதல், ததும்பல், நடுங்கல், நிலைகுலைதல், முட்டுப்படல்.

தளர்ச்சி } சோம்பல், சோர்வு,
தளர்தல் } மெலிவு, வருத்தம்.

தளவம் } முல்லைக்கொடி.
தளவு }

தளி - குளிர், கோயில், மழைத்துளி, விளக்குத்தண்டு.

தளிகை - உண்கலம், புற்கைக்கட்டி.

தளிமம் - அழகு, கட்டில், திண்ணை, மக்கட்படுக்கை, மெத்தை, வாள், வீடுகட்டு நிலம்.

தளிரடி - மெல்லடி, பெண்.

தளிரியல் - பெண்.

தளிர் - தழை, தளிரென்னேவல்.

தளிர்த்தல் - குளிர்த்தல்.

தளுக்கிடுதல் - அழுத்தமாகுதல், மினுக்குதல்.

தளுக்கு - ஒளி, தளுக்கென்னேவல், மினுக்கு, மூக்குத்தி.

தளை - ஆண்மயிர், கட்டு, கால்விலங்கு, காற்சங்கிலி, காற்றம்பு, தளையென்னேவல், பாசம், பந்தம், யாப்புறுப்பெட்டினொன்று.

தளைதட்டல் - தளைதவறல்.

தளைதல் - பிணித்தல்.

தளைப்படுதல் - தளைப்படல்.

தளைப்பொருத்தம் - செய்யுட்டளையினிணக்கம்.

தள்ளல் - தள்ளல், பொய், வியங்கோண்முற்று.

தள்ளாடல் - அசைதல்.

தறி - கட்டுத்தறி, தறியென்னேவல், ஆண், நெய்வார்கருவி, முளை, வெட்டு.

தறிகை - உளி, கோடரி, தறி, மழு.

தறித்தல் - வெட்டல்.

தறுகணாளர் - படைவீரர்.

தறுகண் } அஞ்சாமை, குரூ
தறுகண்மை } ரம், வீரம்.

தறுதல் தடைப்படல், தவறுதல்.

தறை - ஆணியின் சடை, தரை.

தற்காலம் - தற்சமயம்.

தற்காலசுத்தபுடம் - குறித்த காலத்துக் கிரகணங்களிற்கும் நிலையைச் சரியாயறியுஞ் சுத்தகணிதம்.

தற்காலமத்திமம் - குறித்த காலத்துக் கிரணங்கணிற்கு நிலையைப் பொதுவாக வறியு மத்திம கணிதம்.

தற்காவல் - கற்பு நிறை, தற் காப்பு.

தற்காத்தல் - இரட்சித்தல், தன்னைக் காத்தல், பாதுகாத்தல்.

தற்காப்பு - பாதுகாப்பு.

தற்கிழமை, ஒற்றுமையாயுரியது.

தற்குணம் - விசேஷகுணம்.

தற்குறிப்பேற்றம் - ஓரலங்காரம்.

தற்சமம் - வடமொழிக்கும் தமிழ் மொழிக்கும் பொதுச்சொல் லால்வருவது.

தற்சனி - சுட்டுவிரல்.

தற்சாட்சி - மனச்சாட்சி.

தற்சிவம் - ஈசுவரன்.

தற்சுட்டு- தன்னைக்குறிப்பித்தல்.

தற்செயல் - தானுகநிகழ்வது.

தற்செல்வம் - வலி.

தற்பதம் - கடவுள்.

தற்பம் - அகந்தை, மேனிலை, வஞ்சனை, மக்கட் படுக்கை, மனைவி, மெத்தை.

தற்பரன் - கடவுள், சிவன்.

தற்பவம் - ஆரியசிறப்பெழுத்தா னும் பொதுவுஞ் சிறப்புமாகிய இரண்டெழுத்தானுந் தமிழ் சிறந்துவருவது.

தற்பாடி - வானம்பாடி.

தற்புருடம் - சிவனை முகத் தொன்று.

தற்போதம் - தன்னையுங்கடவு ளையுமறியு மறிவு, ஈசுவரன இயற்கையறிவு.

தனகு - உள்ளக் களிப்பு.

தனஞ்சயன் - அருச்சுனன், உப வாயுக்கள் ஐந்நினொன்று, அஃது — உயிர்போகினும் போகாதுடலை வீக்கித் தலை கிழித்தகலும், தீ.

தனதன் - ஈகையாளன், குபேரன்.

தனபதி - குபேரன்.

தனம்-எண்ணிலோ ரடையாளம், சம்பத்து, தன்மை, பசுக் கன்று, பொன், முலை.

தனயன் - புத்திரன்.

தனலக்குமி } இலக்குமி.
தனலட்சுமி }

தனவைசியர் - செட்டிமார்கள்.

தனவையாதம் - தறுகாஞ்சொறி.

தனுது - தனது.

தனி - ஒப்பின்மை, ஒற்றை, கலப் பின்மை, சுத்தம், தனிமை, தனியென்னேவல்.

தனிகம் } கொத்தமல்லி.
தனிகா }

தனிக்காப்பு - ஒரேபாட்டி லடங்கிய காப்பு.

தனிக்குறில் - தனிக்குற்றெழுத்து

தனிக்கோலான் - ஏகாதிபதி. கடவுள்.

தனிச்சொல் - தனிச்சீர், தனிமொழி, வெண்பா.

தனிட்டை - அவிட்டநாள்.

தனிதம் - முழக்கம்.

தனித்தல் - உதவியற்றிருத்தல். தனிமை.

தனிநிலை - ஆய்தவெழுத்து.

தனிப்பாடு - முத்தகம், அஃது— ஒன்றன்பேரிற் சொன்ன ஒற்றைக்கவி.

தனிமுதல் - கடவுள்.

தனிமை - உவமையின்மை, ஏகாந்தம், தனிப்பு, பிரிவு.

தனிமொழி - தனியே நிற்குஞ் சொல்.

தனிவலிப்பெருமாள் - குப்பைமேனி.

தனிவீடு - மோக்ஷம்.

தனை - அளவு.

தனு - அத்தி, உடல், கசியயன் மனைவி, சிறுமை, தனுவிராசி, தக்கன் மகள், வில்.

தனுசர் - அசுரர்.

தனுசன் - மகன்.

தனுசாரி - இந்திரன், திருமால்.

தனுத்திரம் - போர்க்கவசம்.

தனுர்வேதம் - உபவேதம் நான்கினொன்று.

தனேசன் - குபேரன்.

தனை - அளவு, எண்.

தன் - தான், அசைச்சொல்.

தன்பொருட்டனுமானம் - பிறர்பொருட்டனுமானம்.

தன்மம் - அறம், தருமம்.

தன்மேம்பாட்டுரை - ஓரலங்காரம்.

தன்மாத்திகாயம் - புண்ணியபாவசரீரம்.

தன்மாத்திரை - பூதங்களினுதி.

தன்மை - ஓரலங்காரம், குணம், சுபாவம், நிலைபரம் யான் முதலிய தன்மைப்பெயர், மாதிரி, மூவிடத்தொன்று.

தன்மைச்சொல் - சொல்வோன் றன்னைக் குறிக்குஞ் சொல்.

தன்மைப்பன்மை - தன்மைப்பெயரில் அநேகம்.

தன்மைப்பன்மை வினைமுற்று - தன்னோடு சேர்ந்த பலர்பால் முற்றுவினை.

தன்மைப்பொருள் - தன்மையிடப்பொருள்.

தன்வந்திரி - சிவன், சூரியன், தேவர் மருத்துவன்.

தன்வினை - எழுவாய்க் கருத்தாவின் புடைபெயர்ச்சியாய் நிகழுந் தொழில்.

தன்னமை-இணக்கம், ஒத்தாசை, சிநேகம், தாழ்மை.

தன்னம் - அற்பம், சிறுமை, பசுவின் கன்று, மான்கன்று.

தன்னியம் - தனது, திரவியம், முலைப்பால்.

தன்னியாசி - ஓரிராகம்.

தன்னிரை மீட்டல் - எண்வகை வெற்றியிலொன்று.

தன்னிலை - சுபாவநிலை.

தன்னினி - வேங்கைமரம்.

தன்னை - இரண்டாம் வேற்றுமையுருபுடைய படர்க்கை யொருமை விரவுப்பெயர், தாய், தமையன், தமக்கை.

தா

தா-அழிவு, ஓரெழுத்து, குற்றம். கேடு, தாண்டுதல், தாவென்னேவல், பகை, பாய்தல், பிரமமன், வருத்தம், வலி.

தாகம் - ஆசை, உணவு, எரிவு, எருது, தூண், நீர்வேட்கை, அஃது — உயிர் வேதனையி லொன்று.

தாக்கணங்கு - இலக்குமி.

தாக்கம் - அதைப்பு, கனப்பு, வீக்கம்.

தாக்கல் - எதிர்த்தல், பாய்தல்.

தாக்கு - அடி, அதிர்ச்சி, உரம், கனம், தாக்கென்னேவல், பெருக்கு, போர், வலி.

தாக்குதல் - அடித்தல், எண்கூட்டிப் பெருக்கல், எதிர்த்தல், கனத்தல், தள்ளுதல், தாழுதல், பாய்தல், முட்டுண்ணல்.

தாங்கல் - காத்தல், குளம், சுமத்தல்.

தாங்கி - ஆதாரம், பூணுகக் கட்டுவது.

தாசநந்தினி - வியாசன்றாய்.

தாசபாலனம் - தயாவிருத்தி பதினான்கிலொன்று.

தாசரதி - இராமன்.

தாசன்-அடிமை, ஊழியக்காரன், தவல்கேட்போன், ஞானி, சூத்திரன், வலையன்.

தாசி - அடிமைப்பெண், பரணிநாள், மேகவன்னப்பூவுள மருதோன்றிமரம்.

தாசு - இரண்டரை நாழிகைக் கொண்ட நேரம், சூதாடு கருவி. நாழிகைவட்டம்.

தாசேரகம் - ஒட்டகம்.

தாடகை - ஓரரக்கி.

தாடங்கம் - காதணி, தோடு.

தாடனம் - அடித்தல்.

தாடாளன் - முயற்சியுள்ளோன்.

தாடி-மாடு முதலியவற்றின்கழுத்தாரம், மோவாய், மோவாய் மயிர்.

தாடிமஞ்சம் - சத்திக்கொடி.

தாடிமம் - சிற்றேலம், தாது மாதுளை.

தாட்சயம் - விவேகம்.

தாட்சாயணம் - பொன், பொன்னுபரணம்.

தாட்சிண்ணியம்-இணக்கம், இரக்கம் தாழ்மை.

தாட்டாந்தம் - திருட்டாந்தப் பட்டது.

தாட்படை - கோழி.

தாணித்தல் - தறைதல், தாளித்தல், துப்பாக்கியில் மருந்திடுதல், பலப்படுத்தல்.

தாணு-குறுந்தறி, தவன், தூண், நிலை, நிலைபெறுதல், மலை. வெற்றி.

தாண்டகம் - இருபத்தாறெழுத்தின் மிக்க வெழுத்தானடி கொண்டு வரும்பா.

தாண்டல் - ஆடல், கெலித்தல். தாண்டுதல், கடத்தல்.

தாண்டவம் - கூத்து, தவன் கூத்து, திருக்கூத்து.

தாண்டவராயன் } தவன்.
தாண்டவன் }

தாண்டி - நடனநூல்.

தாண்டுறல் - ஆடுதல், கடத்தல், பாய்தல், வெல்லுதல்.

தாதகி - ஆத்திமரம்.

தாதன் - அடிமை, தாசன், தொண்டன்.

தாதா . ஈகையாளன், தகப்பன், பிரமன்.

தாதான்மியம் - ஒற்றுமை.

தாதி - அடியவள் செவிலித்தாய்.

தாது - இரசமாதியேழு, ஏலம், ஓர் வருடம், கந்தகம் கடுக்காய், காவிக்கல், தாது மாதளை, நரம்பு, பாஷாணம், பூந்தாது, பொன்னுதியேழு, மண்ணுதியைந்து, விளைதாது.

தாதுமாதளை - பூமாதளை.

தாதுவாதம்- கலைஞானமறுபத்து நான்கினென்று.

தாதை - தகப்பன், பிரமன்.

தாதைதாதை - பாட்டன்.

தாத்திரம்-கூன்வாள், கோடாலி.

தாத்திரி, - நெல்லி, பூமி, மாதா.

தாத்துரு - பன்னிரண்டாதித்தரிலொருவன்.

தாதி - ஓர் நதி, ஓர் மரம், கொத்துமல்லி, நிதானம், வாசஸ்தானம்.

தாந்தவம் - நூற்றல், நெய்குதல்.

தாந்திரிகம் - ஓர் நோய், தந்திரத்திற்கடுத்தது, நியாயத்திற்குரியது.

தாபகம்-தூக்கம், நிலைநிறுத்தல். வெப்பம், வைத்தல்.

தாபதநிலை - கைம்மை நிலை, தவவொழுக்கம்.

தாபதம் - முனிவரிருக்கும்வாசம்.

தாபதர் - சடைமுடியர், சமண முனிவர், முனிவர்.

தாபத்திரயம்-மூவகைத்துன்பம்; அஃது — தெய்விகம், ஆன்மிகம், பௌதிகம்.

தாபநீயம் - உபநிடதத்தொன்று.

தாபம் - காடு, தாகம், துக்கம், துன்பம், வெப்பம்.

தாபரம் - ஆதாரம், உடல், கோயில், தஞ்சம், துணை, நிலைத்திணைப் பொருள், பூமி.

தாபரன் - கடவுள்.

தாபிஞ்சம் - ஆமணக்கு தமாலம், பச்சிலை மரம்.

தாபிதம் - சூடு, தாபித்தல்.

தாப்பிசை, தாப்பிசைப்பொருள்கோள் — பொருள்கோளெட்டினொன்று.

தாப்பு - ஊஞ்சல், தாம்பு என்பதின் விகாரம்.

தாமணி - தாம்பு, கயிறு.

தாமதம் - தாமதித்தல், முக்குணத்தொன்று.

தாமநிதி - சூரியன்.

தாமம் - அஞ்சத்தக்கது, அணை கயிறு, இடம், உடல், ஒழுங்கு, ஒளி, கிரணம், கீர்த்தி, கொன்றைமரம், சுகம், தாமணி, தீங்கு, நகரம், பிரபை, பிறப்பு, புள்ளினதாரம், பூ, பூமாலை, பெருமை, போர்க்களம், மகத்துவம், மணி, வடம், மலை, முடியுறுப்பு, மூவாறு கோவை மணியுள்ளமாதரிடையணி, வீடு.

தாமரசம் - செம்பு, தாமரை, பொன்.

தாமரம் - நீர், நெய்.

தாமரைக்கண்ணன் - விட்டுணு.

தாமரைச்சத்துரு-ஓர்பாஷாணம்.

தாமரைநண்பன், தாமரைநாயகன் — சூரியன்.

தாமரையாசனன் - பிரமன்.

தாமரையாசனி, தாமரையாள் — இலக்குமி.

தாமரையான் - பிரமன்.

தாமரைவாசி - அரிதாரம், ஓர் பாஷாணம்.

தாமலகி - நிலநெல்லி.

தாமிரபருணி - ஓர்யாறு, மேற்றிசையானைக்குப் பெண்யானை.

தாமிரம் - செம்பு.

தாமிரபீசம் - கொள்.

தாமோதரன் - ஆமை, திருமால்.

தாம் - அசைச்சொல், சாரியை.

தாம்பு - கயிறு, தாமணிக்கயிறு.

தாம்பூலம் - வெற்றிலை.

தாம்பூலவல்லி, தாம்பூலி — வெற்றிலை, வெற்றிலைக்கொடி.

தாயகம் - ஈகையுடைமை, பிறந்தகம்.

தாயத்தார்-ஞாதிகள், தாயாதிகள்.

தாயம் - உடைத்தல், உபகாரம், உரித்து, சூதாடுகருவி, சமய வாய்ப்பு, சுற்றம், தந்தை வழிச்சுற்றம், துன்பம், நட்டம், பங்கு.

தாயவிபாகம் - உரிமைப்பொருள் பிரித்தல்.

தாயுமானார் } ஓரடியார், செவ்
தாயுமானவர் } வந்தியீசர்.

தாய் - அன்னை, அரசன்றேவி, ஊட்டுத்தாய், மாதா, மூதற் றாம், முதன்மை.

தாரகம் - ஆதாரம், உச்சவிசை, ஓங்காரம், பிரணவம், வெள்ளி.

தாரகன்-குழந்தை தாங்குவோன், மகன்.

தாரகாகணம் - நட்சத்திரக் கூட் டம்.

தாரகாபதி - சந்திரன்.

தாரகை - கண்மணி, விண்மீன்.

தாரகைமாலை - ஓர் பிரபந்தம்.

தாரண - ஓர் வருடம்.

தாரணம் - அட்டாங்கயோகத் தொன்று, உறுதி, தரித்தல், தெப்பம், நிலை.

தாரணி - பூமி.

தாரணை - அட்டாங்கயோகத் தொன்று, அதிவாசம், உறுதி, கடன், கட்டளை, கிரமம், சரி நிலை, ஞாபகம், தரித்தல், நிலை, புலனடக்கல்.

தாரம்-அரிதாரம், அரும்பண்டம், இங்குலிகம், ஓங்காரம், தேவ தாரம், நா, பச்சைப் பாம்பி னஞ்சு, பாதரஸம், பிரணவம், மனைவி, மூக்காற் பிறக்கு மிசை, வல்லிசை, வீணைநரம்பி லொன்று, வெண்கலம், வெள்ளி.

தாரா-ஓர்புள், குருகு, விண்மீன்.

தாராகணம்-விண்மீன், கூட்டம்.

தாராதரம் - மேகம்.

தாராபதம் - வானம்.

தாராபதி - சந்திரன், வியாழன்.

தாராளம் - இஷ்டம், உதாரம், கொடை, தைரியம், பொலிவு, மிகுதி, விலாசம்.

தாரி - அரிதாரம், உடையோன், குணம், தரிப்பவன், வழி.

தாரு - பித்தளை, மரக்கொம்பு, மரப்பொது.

தாருகவிநாசனி } காளி.
தாருகற்செற்றாள் }

தாருகற்செற்றோன் } குமரன்.
தாருகாரி }

தாருகன் - ஓரசுரன்.

தாருகாரி - குமரன்.

தாருகாவனம் - ஓர் வனம்.

தாருணம் - அச்சம், பயங்கரம்.

தாருண்யம் - இளம்பருவம்.

தாரை - அபிஷேகம், ஒப்பு, ஒழுங்கு, கண், கண்மணி, காளம், கீர்த்தி, குதிரைநடை, கூர்மை, கொடிப்படை, சந்ததி, சிறுசன்னம், சீலை, சுக்கிரீவன் மனைவி, தத்தம்பண்ணுநீர், திகிரி, திரள், தேவகுரு, நா, நேரோடல், படையின் முன்னணி, பண்டியுருள், பாய்தல், மலைச்சாரல், மழை, மனைவி, வலி, வழி, விண்மீன், வியாழன்.

தார் - கிண்கிணிமாலை, கொடிப் படை, படை, படைவகுப்பு, பூ, பூவரும்பு, மாலை.

தார்க்கிகன் - தருக்கசாஸ்திரி.

தாலகி - கள்.

தார்க்கியன் - கருடன்.

தாலகேதனன் } பீஷ்மன்
தாலத்வசன் } பலராமன்.

தாலமேழுடையான் - அக்கினி பகவான்.

தாலம்- உண்கலம், கூந்தற்பனை, தட்டம், தாலம்ப பாஷாணம், தேன், நா, பனை, பூமி, யானைச் செவி.

தாலம்பபாஷாணம் - ஓர் பாஷா ணம்.

தாலவட்டம் - பூமி, யானைச் செவி, யானைவால், விசிறி.

தாலவிருந்தம் - பேராலவட்டம், விசிறி.

தாலவ்யம் - அண்ணத்தாற் பிறக்குமெழுத்து.

தாலாலம் - பழிமொழி.

தாலி - மங்கலநாண்.

தாலு - அண்ணம், நா.

தால் - தாலாட்டு, பிள்ளைக்கவி யுறுப்பினொன்று.

தாவடம் - இருப்பிடம், உருத்திர மணிமாலை.

தாவடி - பிரயாணம், போர்.

தாவட்டம் - ஒர்கல், சிற்ப நூலி னொன்று.

தாவந்தம் - இக்கட்டு, நரகம்.

தாவம் - காடு, காட்டுத்தீ, மருத நிலத்தூர், வெப்பம்.

தாவரம்-அசரம், இடம், இட்டம் உடல், உதவி, எழு பிறப்பி னொன்று, நிலை, பூமி, மரப் பொது, மலை, வின்னாண்.

தாவல் - தாண்டல், பாய்தல், பரத்தல்.

தாவளம் - இருப்பிடம், கடை. தாங்கல், பொதிகாரர், மருத நிலத்தூர்.

தாவளி - கம்பளி.

தாவனம் - அசைவு, சுத்திசெய் தல், தாபனம்.

தாவு-இளைப்பாருமிடம், குதிரை நடை, தாவென்னேவல், பகை, பற்றுக்கோடு, வருத்தம், வலி.

தாவுதல் - அழிதல், எட்டிப்பிடித்தல், தாண்டல், பரத்தல்.

தாழி - அரிதாரம் குடம், சாடி, சிவதை, பரணிநாள்.

தாழிசை - பாவினத்தொன்று.

தாழை - தாழைமரம், தென்னமரம்.

தாழ் - சுவர்ப்புறத்து நீண்டவுத்திரம், தாழ்க்கோல், தாழென்னேவல், நீளம்.

தாழ்தல் - அமிழ்ந்துதல், ஆசை, ஆசைப்பெருக்கம், குறைதல், சரிதல், தங்கல், வணங்கல்.

தாழ்த்தல்-அடக்கம் பண்ணுதல், இருத்தல், கீழ்ப்படுத்தல், குறைத்தல், தாழ்த்துதல், புதைத்தல், மந்தப்படுதல்.

தாழ்வடம் - முத்துக்கோவை முதலியன.

தாழ்வாரம் – வீட்டிறப்பு.

தாழ்வு-ஈனம், கீழ்மை, குறைவு, தவறு, பள்ளம்.

தாளகம் } அரிதாரம்.
தாளக்கம் }

தாளம் - ஓர் வாச்சியம், இலயை, சுதி, கலைஞானமறுபத்து நான்கினொன்று, பனை, பொன்னரிதாரம்.

தாளாண்மை – ஊக்கம், முயற்சி.

தாளாளர் - முயற்சியுடையோர், வைசியர் பொது.

தாவரன் --கடவுள்.

தாளி - அனுடநாள், ஓர்செடி, தாளியென்னேவல், பனைமரம்.

தாளிசம் - ஓர் செடி.

தாளிதம் - தாளிப்பு.

தாள் – அடி, அருவி, ஆதி, ஒட்டு, கதவுறுதாள், கால், சரணம், முயற்சி, நெல்முதலியவற்றின் ரூள், விற்குதை.

தாறு - அங்குசம், அளவு, இருப்புமுள், ஈந்து கமுகு வாழையிவற்றின் குலை, நூற்குழி, வில்வின்குதை.

தாறுகன்னி - வெள்ளைக்காக்கணம்.

தாற்பரியம் - எண்ணம், கருத்து, கொள்கை, நோக்கம்.

தாற்பரியவுரை - கருத்துரை.

தாற்றுக்கதிர் - கொத்தாய்க்காய்க்குங்கதிர்.

தாற்றுக்கோல் - துறட்டி, முட்கோல்.

தாற்றுதல் - தரித்தல், புடைத்தாற்றிக் கழித்தல்.

தாற்றுப்பூ - கொத்தாய்நிற்கும்பூ.

தானம் - அடித்தல், அவத்தை, இடம், இராகம், ஈகை, உயிர்நிலை, கொடை, துண்டித்தல், தேவலோகம், யானை, யானைமதம், வலி.

தானவண்ணம் - சுரவிகற்பப் பாட்டு.

தானவம்-மிருது.

தானவர் - அசுரர்.

தானவன் - அசுரன்.

தானவாரி - விட்டுணு.

தானுதிபதி - படைத்தலைவன்.

தானுபதி - தூதன்.

தானி - இருப்பிடம், தானத்தி லுள்ளது, பண்டகசாலை.

தானிகம் - கொத்துமல்லி.

தானியம் - பண்டம்.

தானியாகுபெயர் - ஓர் பொருளின் பெயர், அது இருக்குமிடத்துக்காவது.

தானு - காற்று, கொடையாளன், வெற்றியாளன்.

தானை - ஆயுதப்பொது, தூசு, படை.

தானைத்தலைவன் - படைத்தலைவன்.

தானைத்தறுகணாளர் - படைவீரர்.

தானைமாலை - ஆசிரியப்பா, ஓர் பிரபந்தம்,

தான் - தேற்றச்சொல், அசைச்சொல், படர்க்கை யொருமைப் பொதுப்பெயர்,தாதான்மியம்.

தான்றி . தான்றிமரம்.

தி

தி - ஓரெழுத்து.

திகசம் - ஓமம்.

திகந்தம் - திக்கறுதி.

திகம்பரம் - நிருவாணம்.

திகம்பரர் - சமணமுனிவர்.

திகம்பரன்-அருகன், சிவன், நிருவாணி.

திகம்பரி - பார்வதி.

திகரம் - அவா, இளைப்பு, ஓரெழுத்து, சோர்வு, முட்டுத்தொய்வு.

திகழல் - ஒளிசெய்தல்.

திகழ் - ஒளி, திகழென்னேவல்.

திகழ்ச்சி, திகழ்தல் - ஒளி,தோற்றம்,விளக்கம்.

திகனு - கொடிவேலி.

திகிரி - உருளை, சக்கராயுதம், தேர், மலை, மூங்கில், வட்டம்.

திகிரிகை - சக்கிரம்.

திகிரிக்கல்-கோரோசனை, சக்கரவாளகிரி.

திகில் - திடுக்காட்டம், பயம்.

திகு - தாளக்குறிப்பு.

திகை - திகையென்னேவல், திசை, தேமல்.

திகைத்தல் - நடுநடுங்கல், பிரமித்தல், மயங்கல்.

திக்கயம்-அட்டயானை, அவை—ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், குஞ்சரம், புட்பதந்தம், சார்வபௌமம், சுப்ரதீபம்.

திக்காரம் - தள்ளல், நிந்தை.

திக்கு - திசை. பேச்சுத்தடக்கு.

திக்குப்பாலகர் - எட்டுத்திசையுங்காப்போர், அவர்—இந்திரன், அக்கினி, இயமன், நிருருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன்.

திக்குமுக்கு - மூச்சுமுட்டு.

திக்குறு - புனமுறுக்கு.

திங்கட்குடையோன்- மன்மதன்.

திங்களாள் - மிருகசீரிடம்.

திங்கள் - சந்திரன், மாதம்.

திசாயம் - குங்கிலியம்.

திசை-ஏழனுருபு, திக்கு, நிலை, நோக்கு.

திசைச்சொல் } கொடுந்தமிழ்
திசைமொழி } மொழியாகியும், அந்நியமொழியாகியும் வருவது.

திசைமுகன் - பிரமன்.

திடம் - உறுதி, மெய், வலி.

திடர் } திட்டை, மேடு.
திடல் }

திடர்ச்சுண்டி } வறட் சுண்டி.
திடற்சுண்டி }

திடீரெனல் - ஒலிக்குறிப்பு, சீக்கிரக்குறிப்பு.

திடுக்கம் - அச்சம், துணிக்கம்.

திடுக்கிடுதல் - அச்சத்தால் மனமசைதல், பயத்தாலுடல் கம்பித்தல்.

திடுதிடெனல் - ஈடுக்கொரலிக்குறிப்பு, விரைவுக்குறிப்பு.

திட்கல் - அச்சக்குறிப்பு.

திட்டம் - உறுதி, ஒப்புரவு, கட்டளை, கணிசம், சரி, செவ்வை, திறம், நிலவரம், பூரணம்.

திட்டல் - சபித்தல், வைதல்.

திட்டனம் - இலுப்பை.

திட்டி-கண், சந்தோஷம், ஞானம், தினை, நுழைவாயில், பார்வை.

திட்டிக்கல் } அஞ்சனக்கல்.
திட்டிமணி }

திட்டித்தம்பம்-கண்கட்டுவித்தை.

திட்டு - கணையச்சுவர், சபிப்பு, சிறுதிடல், திட்டென்னேவல், மேடு.

திட்டுதல் - சயித்தல்.

திட்டை - உரல், கண், திடர், திண்ணை, மேடு.

திட்பம்-காலநுட்பம், சொல்வலி, பொருள்வலி, திண்மை, நிசம்.

திணி - திணியென்னேவல், திண்மை.

திணிகம் - போர்.

திணிதல் - திண்மையாயிருதல்.

திணித்தல் - அடைத்தல், துறத்தல்.

திணுக்கம்-திணுங்கல், நெருக்கம்.

திணுங்கல் - நெருங்கல்.

திணை - அஃறிணை, அகத்திணை, இடம், உயர்திணை, ஐந்து நிலம்—குறிஞ்சி,பாலை,முல்லை, மருதம், நெய்தல்; ஒழுக்கம், குடி, குலம், புறத்திணை, பூமி, பெருந்திணை.

திணைப்பெயர் - குறிஞ்சி முதலிய நிலங் காரணமாய் வரும் பெயர்.

திணைமயக்கம் - ஐந்திணையுமாறி வருவது, பலநிலத்தோரைக் கலந்துரைத்தல்.

திணைவழு - உயர்திணை யெழுவாய்க் கிழிதிணை விகுதியும், இழிதிணை யெழுவாய்க் குயர்திணை விகுதியுமேற்றிப் பேசுவது.

திண் - பலம், வலி.

திண்கல் - சுக்கான்கல்.

திண்டகம் - கிலுகிலுப்பை.

திண்டி - ஓரசுரன், தம்பட்டம், பசலைக்கொடி, யானை.

திண்டிமம் - தம்பட்டம்.

திண்டிரல் - அதிவீரம்.

திண்டு - வளைந்த மெத்தை.

திண்டோன் - திண்புயம்.

திண்ணகம் - செம்மறிக்கடா, தட்டார்கருவியி னொன்று, துருவாட்டேறு.

திண்ணம் - மெய், வலி.

திண்ணன் - பலவான், வேடன்.

திண்ணியன் - வலியுடையோன்.

திண்ணெனல் - தந்திநாதம்.

திண்ணை - வேதிகை.

திண்மை - உறுதி, எண்வகை யூறினொன்று, திண்ணம்,

திதத்தாபகம் } தாக்கிமீளல்,
திதித்தாபகம் } நிலைப்படுத்தல்.

திதம் - அக்கினி, உறுதி, நிலை.

திதலை }
திதனி } தேமல்.

திதளம் - மாமரம்.

திதி-இருப்பு, காசியப பிரமனின் மனைவி, காத்தல், சங்கை, சந்திரநாள், திதியென்னேவல், நிலை, நிலைபெறுதல், பாக்கியம்,

திதித்தல் - நிலைபெறுதல்.

திதிசுதர் }
திதிமைந்தர் } அசுரர்.

திதிட்சை - பொறுமை.

திதீக்கை }
திதீட்சை } ததேகநிட்டை.

தித்தகம் - மலைவேம்பு.

தித்தம் - அக்கினி, எண்ணெய், கசப்பு,நிலவேம்பு, மலைவேம்பு, வாசனை.

தித்தா - தாளக்குறிப்பு, பீதரோகிணி, வட்டத்திருப்பி.

தித்தி - ஒருதுகுழல், ஓர் பனை, குரவம், சதி, தித்திப்பு, தித்தியென்னேவல், தின்னற்குரியன, பேரீந்து, வேள்விக்குண்டம்.

தித்திரம் - அரத்தை.

தித்திரி - ஓர் கவுதாரி, ஓர்குடி, கிச்சிலிக்குருவி.

தித்திரு / தித்திருச்சி } நாணல்.

தித்திடம் / திந்திருணி } புளியமரம்.

திப்பி - கோது.

திப்பியம் - ஓமம், விளக்கம்.

திப்பிலி - அலைவு, திப்பிலி.

திமி - குத்தல், கடல், நூறு யோசனை நீளமுள்ள மீன்.

திமிங்கிலகிலம் - திமிங்கிலத்தை விழுங்குமீன்.

திமிங்கிலம் - யானையைவிழுங்கு மீன்.

திமிசம் / திமிசு } வேங்கைமரம.

திமிதிமி - திமிங்கிலம்.

திமிதிமியெனல் - ஈரடுக்கொலிக் குறிப்பு, காளக்குறிப்பு, விரைவுக் குறிப்பு.

திமிரம் - இருள், குருடு, நரகம், பாரம், விறைப்பு.

திமிராரி - சூரியன்.

திமிர்தம் - ஒலி.

திமிர்தல் - பூசுதல், வளர்தல்.

திமிர்ப்பூச்சி - வயிற்றுப்புழு.

திமிலம் - பேரொலி, யானைமீன்.

திமிலர் - நெய்தனிலமாக்கள்.

திமிலிடுதல்-ஒலித்தல், நெருக்கல்.

திமிலை - பம்பைமேளம்.

திமில்-எருத்துத்திமில், தோணி, மரக்கலம், வேங்கைமரம்.

திமிறல்-துலுக்குதல், தேய்த்தல், பறித்தல், மீறுதல், வளர்தல்.

திமைத்தல் - இளப்புதல்.

தியக்கம் / தியக்கு } அசைவு, கலக்கம், சோர்வு.

தியங்கல் - சோரல்.

தியசம் - மரமஞ்சள்.

தியர்தி - திராய்.

தியாகம் - உதாரம், கைவிடல்; கொடை, துறத்தல்.

தியாகராயர் / தியாகர் } சிவன்.

தியாகி - கொடையாளன்.

தியாச்சியம் - விலக்கு, ஒவ்வொரு நட்சத்திரத்திலுஞ் சுபகாரியங் களுக்கு விலக்கப்பட்டநேரம்.

தியாமம் - நான்முகப்புள்.

தியானசமாதி - யோகநிலையி னொன்று.

தியானம் - அட்டயோகத்தொன்று, அனுட்டானம், சிந்திப்பு, நினைவு.

தியோதம் - பிரகாசம், வெயில்.

திரகமூலகம் - முடக்கொத்தான்.

திரகத்தாரு - நிலப்பனை.

திரக்கம் - கொன்றை.

திரக்காரம் - நிந்தை.

திரங்கல் - திரைதல், மிளகு.

திரச்சினமுகம் - நாணத்தால் தலையாட்டுமுகம்.

திரடம் - வெண்ணொச்சி.

திரட்சி - உண்டை, கூட்டம், திரண்டதன்மை, முத்து.

திரட்டல் - கூட்டல்.

திரட்டு - இருது, சேர்ப்பு, கூட்டம், திரட்டென்னேவல், திரனை, முழுமை.

திரட்டுக்கோவை - ஓர் கோவை.

திரட்டுதல்-உருட்டுதல், சேர்த்தல்.

திரணபதி - வாழை.

திரணம் - துரும்பு, புல்.

திரணி - ஓர் செடி.

திரணை - கம்பி, திரண்டது, திரளை.

திரண்டகொடிச்சி - புற்றும்பழம்.

திரந்திகம் - திப்பிலிமூலம்.

திரமம் - சாதிலிங்கம்.

திரமாதம் - ஆவணி, கார்த்திகை, மாசி, வைகாசி.

திரமிடம் - தமிழ்.

திரம் - உறுதி, திரராசி, நிலை, பெலன்.

திரயோதசி- பதின்மூன்றுந்திதி.

திரராசி - இடபம், கும்பம், சிங்கம், விருச்சிகம்.

திரலடி - ஏலம்.

திரவணம் - பாய்தல், போதல், வெப்பம்.

திரவம் - சாரம், நீர்முதலியவற்றினெகிழ்ச்சி, பொசிதல்.

திரவாதி - காட்டாமணக்கு.

திரவிடம் - திரமிடம்.

திரவியம் - ஓர்மருந்து, நிதி, பாக்கியம், பித்தளை, பொருள், பொன், மூலபதம்.

திரளல் - திரட்சி.

திரள் - உண்டை, குழியம், கூட்டம், திரளென்னேவல், திரளை, படை.

திராசம் - அச்சம்.

திராட்சம் - கொடிமுந்திரிகை.

திராமரம் - பவளமல்லிகை.

திராமிடம் - திரமிடம்.

திராய் - ஓர் பூண்டு.

திராவகம் - செய்நீர்.

திராவகநீறு - வெடியுப்புச் சுண்ணம்.

திராவிடம் - ஓர்தேசம், தமிழ்.

திரி - திரிசீலை, திரியென்னேவல், மூன்று, விளக்குத்திரி.

திரிகளம் - யானை நெருஞ்சில்.

திரிகடி - இந்திரன் சங்கு.

திரிகடுகம் } ஓர் நூல், மூன்று
திரிகடுகு } காரம், அஃது — சுக்கு, திப்பிலி, மிளகு, முச்சொல்லலங்காரம்.

திரிகண்டகம் - நெருஞ்சில்.

திரிகத்தம் - ஓர் தேயம்.

திரிகரணம் - முப்பொறி, மனம், மெய், வாக்கு.

திரிகாலம் - முக்காலம், காலை, நண்பகல், மாலை.

திரிகாலோசிதம் - தருப்பை.

திருகுணம் - முக்குணம், ஸத்துவம், ரஜஸ், தமஸ்.

திரிகூடம் - ஓர்மலை.

திரிகை - இடக்கைமேளம், எந்திரம், குலாலசக்கிரம், திரிதல்.

திரிகோணம் - முக்கோணம்.

திரிகோணமிதி - முக்கோணசாத்திரம்.

திரிசங்கு - ஓரரசன்.

திரிசங்குமண்டலம் - ஓர் நட்சத்திரமண்டலம்.

திரிசாரம் - எவச்சாரம், சத்திசாரம், நவச்சாரம், மூவகையுப்பு.

திரிசூலம் - முத்தலைவேல்.

திரிசொல் - ஒருபொருள்குறித்த பல சொல்லாகியும், பலபொருள் குறித்த ஒரு சொல்லாகியும் அரிதாகக் கற்றோரறிகின்ற பொருளனவாய் வருவது, ஒருபொருட் பல பெயர், பலபொருளொரு பெயர், அரும்பதம், உவமைச்சொல், விகாரப்பட்டசொல்.

திரிச்சிரமம் - முக்காலானுட்டானம்.

திரிதண்டசந்நியாசி - வைஷ்ணவ சந்நியாசி.

திரிதண்டி - திரிதண்டசந்நியாசி, கரணமூன்று மடக்கினோன்.

திரிதரல் - சுழலல், திரிதல், மீளல்.

திரிதராட்டிரன்மைந்தன் - துரியோதனன்.

திரிதல் - உலாவல், கெடுதல், சுழலல், கடத்தல்.

திரிதியம் - செவ்வள்ளி.

திரிதியை - மூன்றாம்திதி.

திரிதேகம் - மூவகையுடல்.

திரிநேத்திரன் - சிவன், முக்கண்ணன்.

திரிபங்கி - மிறைக்கவியிலொன்று.

திரிபதாகை - பரதவுறுப்புக்களிலொன்று.

திரிபலம் } கடுக்காய், தான்றிக்
திரிபலை } காய், நெல்லிக்காய்.

திரிபாகி - ஓர் மிறைக்கவி.

திரிபு - வினையெச்சம், வேறு பாடு.

திரிபுக்காட்சி-ஒன்றை வேறொன் ருய்க் காணுதல்.

திரிபுசம் - முக்கோணவடிவம்.

திரிபுடி - மூக்குணம், ஞாதுரு, ஞானம், ஞேயம்.

திரிபுடை - ஓர் தாளம்.

திரிபுரசுந்தரி - பார்வதி.

திரிபுரதகனன் - சிவன்.

திரிபுரமல்லிகை - ஓர் மல்லிகை.

திரிபுரமெரித்தான் - சிவன், நொச்சி, மாவிலங்கு.

திரிபுரம் - முப்புரம்.

திரிபுராந்தகன் - சிவன்.

திரிபுரி - சாறடை.

திரிபுவனம் - மூவுலகு.

திரிப்பு - மாற்றுதல், முறுக்கு.

திருமூர்த்தி - மும்மூர்த்தி.

திருமூலம் - சிறுதேக்கு.

திரியம்பகன் - அரன், அருகன்

திரியாமை - இரவு, நீலக்கல், யமுனையாறு.

திரிலிங்கம் - கரலக்ஷணத்தி ஞென்று, முப்பால்.

திரிலோகம் - மூவுலகம், பூமி, அந்தரம், சுவர்க்கம்.

திரிலோகாதிபதி - இந்திரன்.

திரிலோகி - விஷ்ணு.

திரிவர்க்கம் - அகவியல் மூன்று; அஃது — அசுத்தம், அறியாமை, சுத்தம்; அரசியல் மூன்று; அஃது—ஆதாயம், நட்டம், மத்திமம்; இயல்பாய் விரும்புவது; அஃது - கடமை, செல்வம், பெண்போகம்.

திரிவேணி } கங்கை,
திரிவேணிசங்கமம். } யமுனை, ஸரஸ்வதீ இம்மூன்றும் கூடுமிடம்.

திரு - அழகு, இலக்குமி, செல்வம், தெய்விகம், மங்கல மொழியினென்று, மேன்மை, யானைப்பாகன் தட்டுமோசை.

திருகல் - முறுக்கல், வளைத்தல்.

திருகு - கள்ளம், திருகென்னேவல், முறுக்கு, வஞ்சனை.

திருகுதாழை - ஓர் தாழை.

திருக்கடைக்காப்பு - ஓர் பதிகம், கோவிற்கதவு சாத்தல், இவ்வியப்பிரபந்தத்தின் முடிவு.

திருக்கடையூர் - ஓர் சிவத்தலம்.

திருக்கழுக்குன்றம் - ஓர் சிவத்தலம்.

திருக்காளத்தி - ஓர் சிவத்தலம்.

திருக்கு - கண், குற்றம், முறுக்கு, வஞ்சனே.

திருக்கூட்டம் - சிவனடியார்கூட்டம்.

திருக்கை - ஓர்மீன்.

திருக்கோலம் - திருவேடம், துருவமண்டலம், தேவலோகம்.

திருசியம் - கண்ணுக்குத் தோன்றுவது.

திருச்செந்தூர் } ஓர் சுப்பிரமணியத்தலம்.
திருச்சிரலேவாய் }

திருடம் - இரும்பு, தத்துவம், பெலன்.

திருடல் - களவு.

திருடன் - கள்ளன்.

திருட்டம் - இட்டம், (பார்க்கப்பட்டது) தெளிவு.

திருட்டி - அறிவு, கண், பார்வை, விஷம்.

திருட்டு - அணுப்பு, களவு.

திருதம் - தரித்தல்.

திருதி - உறுதி, ஓர்யோகம், துணே, சந்தோஷம், திருப்தி.

திருத்தம் - ஒப்புரவு, ஒழுங்கு, திருந்தல்.

திருத்தம் - திருந்தல்.

திருத்தல் - திருந்தச்செய்தல்.

திருநாமச்செடி - ஓர் பூண்டு.

திருநாமத்துத்தி - ஓர் துத்தி.

திருநாளேப்போவார் - சிவனடியார் அறுபத்து மூவரிலொருவர்.

திருநாள் - உற்சவநாள்.

திருநீலகண்டன் - சிவனடியாரிலொருவன்.

திருநீறு - விபூதி.

திருநீற்றுப்பச்சை } உருத்திரச்சடைப்பூடு.
திருநீற்றுப்பத்திரி }

திருந்தகைமை - மேன்மை.

திருந்தலர் } பகைவர்.
திருந்தார் }

திருந்துதல் - செய்துமுடித்தல், திருத்தமாதல், திருந்தல், தேறுதல்.

திருப்பணி - கோவில்வேலே, தெய்விகத்தொண்டு.

திருப்பதி - வடமலே.

திருப்பரங்குன்று - ஓர் சுப்பிரமணியஸ்தலம்.

திருப்புதல் - திரும்பச் செய்தல், மாறவைத்தல், மீட்குதல்.

திருப்பூட்டுதல் - மங்கலியந்தரித்தல்.

திருமகண்மைந்தன் - மன்மதன்.

திருமகள் - இலக்குமி.

திருமயிலே - ஓர் ஸ்தலம்.

திருமரம் - அரசமரம்.

திருமலர் - தாமரை.

திருமலை - கயிலாயமலை, திருப்பதி.

திருமறுமார்பன் - அருகன்.

திருமாலுந்தி - தாமரை.

திருமால் - விஷ்ணு.

திருமால்புதல்வன் - மன்மதன்.

திருமாநகரம் - வைகுந்தம்.

திருமுகம் - கடவுள் ஸந்நிதானம், சிரீமுகம், நிருபம், பெரியோர் சமுகம்.

திருமுருகாற்றுப்படை - ஓர் இயற்பாராட்டுச்செய்யுள்.

திருமுறை - தமிழ் வேதவகுப்பு.

திருமுற்றம் - குதிரைவையாளி வீதி, கோயிற்சந்நிதானம்.

திருமேனி - குப்பைமேனி, திவ்விய தேகம்.

திரும்பல் - திரும்புதல், மீளல்.

திருவடி - திவ்வியபாதம்.

திருவட்டி - கள்ளி.

திருவணை - ஸேது.

திருவண்ணாமலை - அருணாசலம்.

திருவருட்பயன் - ஓர் நூல்.

திருவலகு - கோவில் முதலிய விளக்கும் துடைப்பம்.

திருவள்ளுவர் - ஓர் நூல், குறளாசிரியர்.

திருவாசகம் - திருவாக்கு, மாணிக்கவாசகர் செய்தருளிய திருமுறை.

திருவாதிரை - ஆதிரைநாள்.

திருவாய்மொழி - ஆழ்வார்பாடல். தெய்வவாக்கு, பெரியோரது சொல்.

திருவாவினன்குடி - பழனி.

திருவாளன் - செல்வன்.

திருவானைக்கா - ஓர் ஸ்தலம்.

திருவாலி - கள்வன், கைம்பெண், வறியன்.

திருவிளையாடல் - ஓர் புராணம், தெய்வவிளையாட்டு.

திருவுந்தியார் - திருவாசகத்தோருறுப்பு, திருவாசகம்.

திருவுரு - விக்கிரகம்.

திருவுளம் - திவ்யசித்தம்.

திருவுறுப்பு - நுதல்மேலணி.

திருவேங்கடம் - திருப்பதி.

திருவேரகம் - ஸ்வாமிமலை.

திருவொற்றியூர் - ஓர் சிவஸ்தலம்.

திருவோணம் - ஓணம்.

திருவோலக்கம் - மகாதிவ்ய சபை.

திரேக்காணம் - இராசியை மூன்றாய்ப் பகிருதல்.

திரேதம் - ஓர்யுகம், திரேதாயுகம்.

திரேதாக்கினி - முத்தீ.

திரை - அலை, இடுதிரை, கடல், திரைச்சீலை, திரைதல், திரையென்னேவல், புனற்றிரை, யாறு.

திரைத்தல் - திரைக்குதல்.

திரையல் - சுருங்கல், வெற்றிலை.

திரையன் - தொண்டைமான், நெய்தநிலத்தலைவன்.

திரைராசிகம்- முத்தொகைவினை.

திரோதம் } அறிவை மயக்கு
திரோதயம் } தல்.

திரோதானம் - அதரிசனம், மறைப்பு.

திரோபாவம் - ஐந்து தொழில் களிலொன்று.

திலகம் - கலித்துறை, சிந்தூரம், சுட்டி, பொட்டு, மஞ்சாடி மரம், மேன்மை.

திலட்சாரம் - கருந்திலாலவணம்.

திலதம் - சுட்டி, நெற்றித்திலதம், பொட்டு.

திலம் - எள், மஞ்சாடி மரம்.

திலவம் - விளாம்பட்டை.

திலீபன் - ஓரரசன்.

திலோதம் - எள்ளுநீர்.

தில் - அசைச்சொல், காலம், ஒழியிசை, விழைவு.

தில்லம் - காடு.

தில்லானா - ஓர்சந்தக்குறிப்பு, தாளக்குறிப்பு.

தில்லை - ஓர் மரம், சிதம்பரம்.

தில்லையம்பலம் - சிற்றம்பலம்.

தில்லைவனம் - சிதம்பரம்.

திவசம் - நாள்.

திவண்டல் - துவளல்.

திவம்-ஆகாயம், காடு, தோற்றம், நாள், பகல், மோக்கம், விளக்கம்.

திவரம் - நாடு.

திவலை - சிதறுந்துளி, மழை, மழைத்துளி.

திவவு - படிக்கட்டு, வீணைவலிக்கட்டு.

திவளல் - துவளல், மெலிதல்.

திவறல் - சாதல்.

திவா - பகல்.

திவாகரம் - ஓர் நிகண்டு, காலம், சூரியகாந்தப்பூ.

திவாகரன்-ஸூரியன், திவாகர நிகண்டு செய்தவன்.

திவாகீர்த்தி - ஆந்தை, சண்டாளன், நாவிதன்.

திவாமானம் - பகல்.

திவார்த்தம் - பகலிற்பாதி, மத்தியானம்.

திவேச்சுரன் - பன்னிரண்டு ஆதித்யர்களில் ஒருவன்.

திவோதாசன் - காசியரசன்.

திவ்வியம் - ஆணை, இனிமையானது, ஓர்வகைச் சந்தனம், கிராம்பு, தெய்விகமானது, மேன்மையானது.

திளைத்தல் - அழுந்துதல், அநுபவித்தல், நிறைதல், நெருங்கல்' பெருகுதல்.

திறத்தல் - திறக்குதல், வலுத்தல், வழிவெட்டிவிடுதல், விரித்தல், விளக்கல்.

திறம்-உசிதம், காரணம், குணம், குறைநரம்புள்ளவீணை, கூறுபாடு, தத்துவம், தன்மை, திறமை, பக்கம், பாக்கியம், மேன்மை, வலி.

திறம்பல் - மாறுபடல்.

திறலோன் - திண்ணியன்.

திறல் - தைரியம், பகை, போர், வலி.

திறவு - திறத்தல், வழி.

திறள் - கடன், வரலாறு.

திறனில்யாழ் - செய்தல் யாழ்த்திறம்.

திறன் - காரணம், குணம், கூறுபாடு.

திறை - அரசிறை.

திறுதிறுப்பு - அச்சக்குறிப்பு.

திறைகொள்ளுதல் - திறைவாருதல், வெல்லுதல்.

திறையளத்தல்-இறைகொடுத்தல்.

தினகரன் - சூரியன், திவாகரன்.

தினகவி - அரசர்க்குப் புகழ்ச்சியாயந்திசந்திசொல்லுங் கவி, ஓர் புலவன்.

தினமணி - சூரியன்.

தினம் - நாள், பகல்.

தினவிருத்தி - நாடோறும், நாள்வேலை, நித்தம்.

தினவு - சொறி.

திஞந்தம் - மாலைப்பொழுது.

தினை - ஓர் பயிர், ஓர் தானியம், சாமை, சிறுமை.

தினைப்புனம் - தினைவிளையுபுலம்.

தின்றல் - புசித்தல், மெல்லுதல்.

தீ

தீ - அறிவு, இனிமை, ஒரெழுத்து தித்திப்பு, தீமை, தீயென்னேவல், நரகம், நெருப்பு, பஞ்சபூதத்தொன்று.

தீகன் - சந்திரன்.

தீக்கஞ்சி - ஆரதிக்கருப்பூரம்.

தீக்கணம் - அட்டகணத்தினென்று, நேரசை நடுவும் நிரையசையிருபாலும் நிற்பன.

தீக்கதிக்கும்பச்சை-நாகப்பச்சை.

தீக்கதிர் - உலையாணிக்கோல், சூரியன்.

தீக்கருமம் - ஈமக்கிரியை, துற்கிரியை.

தீக்கல் - தீத்தட்டிக்கல்.

தீக்குணர் - கீழ்மக்கள்.

தீக்குருவி - தழல்விழுங்கி.

தீக்குவெறுங்குகை-சவர்க்காரம்.

தீக்கூர்மை-இந்துப்பு,திலாசாரம்.

தீக்கை } விரதநியமம்.
தீட்சை }

தீக்கையோன் - அரன், ஆசான், தீட்சை பெற்றவன்.

தீக்கோள் - துர்க்கிரகம்.

தீங்கிரை - தீயோர்.

தீங்கு - இனிமை,குற்றம், தீமை, கேடு.

தீச்சலம் - கடல்நுரை.

தீச்சொல் - சாபம், பழிச்சொல்.

தீட்சணம் - ஆயுதம், இரும்பு, உக்கிரம், உப்பு, உறைப்பு, கூர்மை, கொள்ளைநோய், கோபம், சீக்கிரம், நஞ்சு, போர், மரணம், வெப்பம்.

தீட்சதன் - சீடன், தீட்சைபெற்றவன்.

தீட்டல் - எழுதல், கட்டல், சித்திரமெழுதல்.

தீட்டுக்கோல் - எழுதுகோல்.

தீட்டு - அழுக்கு. ஆசௌசம், எழுதுதல், சூதகம், தீட்டென்னேவல், மகளிர் சூதகம்.

தீட்டுதல் - அழுத்துதல், எழுதுதல், கட்டுதல், கூராக்கல், சாதித்தல்,சித்தரித்தல்,மினுக்குதல்.

தீட்பு - இழிவு, கீழ்மை.

தீண்டல் - தொடல்.

தீண்டியம் - பவழக்குறிஞ்சி.

தீதல் - கருகுதல்.

தீது - குற்றம், தீமை.

தீதை - அறிவு, கன்னி.

தீத்தம் - சிவாகமத்தொன்று, பிரகாசம், பெருங்காயம், பொன்.

தீத்தாங்கி- தீ மறைக்கும்பலகை.

தீத்தி - அழகு, சரகதி, பிரகாசம், வெண்கலம்.

தீத்திரள் - ஊழித்தீ, சுவாலைக் கூட்டம்.

தீத்தீண்டல் - ஓர் சடங்கு.

தீபகம் - ஓரலங்காரம், மஞ்சள், விளக்கு.

தீபகார்தி - வைரக்கல்.

தீபக்கொடிச்சி - ஆரதிகருப்பூரம்

தீபமத்திகை - விளக்குத்தண்டு.

தீபம் - சோதிநாள், விளக்கு, தீவகம், தீவு.

தீபவதி - யாறு.

தீபவராடி - வராடித்திறத்தி ெனான்று.

தீபனம் - ஆகாரம், பசி, பிரகாசம், மஞ்சள்.

தீபாவளி - தீபாவளிப்பண்டிகை, விளக்குகளின் வரிசை.

தீபிகை - விளக்கு.

தீபம் - நெருப்பு.

தீப்படுதல் - அழிதல், எரிச்சலடைதல், எரிந்துபோதல்.

தீமான் - பண்டிதன், புத்திமான், வியாழன்.

தீமுகம் - உலைமுகம்.

தீமுறுகல் - ஓர் பாஷாணம்

தீம் - இனிமை, தித்திப்பு.

தீம்பு - கீழ்மை, பொல்லாங்கு.

தீமை - பொல்லாங்கு.

தீம்பர் - கீழ்மக்கள்.

தீம்புகை - வாசனைப்புகை.

தீயகம் - நரகம்.

தீயம் - தித்திப்பு.

தீயர், தீயோர் - கீழ்மக்கள், வேடர், மூடர்.

தீயனி - காய்.

தீயாக்கிரை - பொன்னுங்காணி.

தீயெச்சம் - அவியாநெருப்பு.

தீரம் - கரை, சிறுவரம்பு, தைரியம், வலி.

தீர்க்கசந்தி - வடமொழிச்சந்தி.

தீர்க்கம் - அந்தரம், ஆறுமேழாமிராசிகள், திட்டம், தெளிவு, நிச்சயம், நீளம், நெட்டுயிரடையாளம், நெட்டுயிரெழுத்து, பூரணம்.

தீர்தல் - எழுதல், செல்லுதல், நடத்தல், நீளம், முடிதல், விடுதல்.

தீர்த்தகரர், தீர்த்தங்கரர் - சமணமுனிவர்.

தீர்த்தம் - திருவிழா, தீநீர்.

தீர்த்தர் - கடவுளர், பரிசுத்தர்.

தீர்த்தல் - நீங்கல், முடித்தல், விடுதல்.

தீர்த்தன் - அருகன், உபாத்தியாயன், குரு, சிவன்.

தீர்த்திகை - யாறு.

தீர்ப்பு - தீர்த்தல். நியமம், நிவிருத்தி, முடிபு.

தீர்வை - இறை, கிரி, சுங்கம்.

தீவகம் - விளக்கு, ஓர் அலங்காரம், அது—முதனிலைத்தீவகம், இடைநிலைத்தீவகம், கடைநிலைத்தீவகம் என மூவகையாகும்.

தீவலஞ்செய்தல் - அக்கினியைப்பிரதட்சிணஞ் செய்தல்.

தீவி - புலி.

தீவிகை - தீபிகை.

தீவிரம் - சடுதி, சூரியகிரணம், நரகம், பெருங்கோபம், மூர்க்கம்.

தீவிரங்கும்வயிரம் - மீனம்பர்.

தீவினி - காய்.

தீவினை - பாவம்.

தீவு - இடைக்குறை, சுவை, தீவாந்தரம், தூரதேசம்.

தீவேட்டல் - யாகஞ் செய்தல், மணமுடித்தல்.

தீவேள்வி - கலியாணம்.

தீழ்ப்பு - கீழ்மை, தீட்டு.

தீற்றுதல் - ஊட்டுதல், சுத்தம் பண்ணுதல், சுவர் முதலிய மெழுகுதல்.

தீனம்-இட்டம், எளிமை, வறுமை.

தீனர் - இரப்போர், கீம்பர்,

தீனன் - தரித்திரர்.

து

து - அனுபவம், ஒழொழுத்து, சோ மானம், இருதிணை முப்பா லொருமைத்தன்மை விகுதி, துவ்வென்னேவல், பிரிவு.

துகளிதம் - தூள்.

துகன் - குற்றம், பராகம், புழுதி.

துகிரிகை - சாந்து, சித்திரம்.

துகிர் - பவளம்.

துகிலிகை - எழுதுகோல், சித்திரம்.

துகில் - சீலை, விருதுக்கொடி.

துகினம் - சந்திரகிரணம், பனி.

துகைத்தல் - இடித்தல், உழக்கல், நலங்கல், வருத்தல், வருந்துதல்.

துக்கம் - கிலேசம், குற்றம், துன்பம், நரகம், நோ.

துக்கிதன் - துன்புறவோன்.

துங்கபத்திரை - ஓர் யாறு.

துங்கம் - உயர்ச்சி, நுனி, பரிசுத்தம், பெருமை, மந்தோச்சம், மலை, வெற்றி.

துங்கன் - உயர்ந்தோன்.

துசகம் - மாதுளை.

துசம் - இருபிறப்புள்ளன, உமி, குங்கிலியம், கொடி, தவிடு, துவசம், பல்.

துச்சம் - அற்பம், கீழ்மை, கொம்மட்டி, பதர், பொய், வெறுமை.

துச்சுவனன் - இந்திரன்.

துச்சன் - அற்பன், கீழ்மகன்.

துச்சாதனன் } துரியோதனன்
துச்சாசனன் } தம்பி.

துச்சி - அனுபவம், பரீட்சை, புசிப்பு, பூநீறு.

துச்சில் - ஒதுக்கிடம், சரீரம், குட்டு, தங்குமிடம்.

துஞ்சல் - உறங்கல், சாதல், சோம்பல், நிலைபெறுதல், வாடுதல்.

துஞ்சுதல்-உறங்கல், சாதல், துஞ்சல், நித்திரைசெய்தல்.

துடக்கறுப்பான் - கொத்தான் கொடி, முடக்கொற்றான்.

துடக்கு - கட்டு, சிக்கு, மகளிர் சூதகம்.

துடங்கு - துடங்கென்னேவல், துலங்குமரம்.

துடர்ச்சி - தொடர்ச்சி, வரிசை.

துடவை - உழவுகொல்லை, பூந் தோட்டம்.

துடி - அகில், இசங்கு, உடுக்கை, உதடு, எலம், காலநுட்பம், குமரனுடல், குறிஞ்சி நிலப்பறை, கூதாளிச்செடி, ஸப்தகன்னிகைகளாடல், துடியென்னேவல், பாலைநிலப்பறை, மேன்மை, வலி.

துடித்தல் - அசைதல், அதிகப்படுதல், உருக்கங் கொள்ளல், குதித்தல், துள்ளுதல், பதறல், மின்னல்.

துடியடி - யானைக்கன்று.

துடியாஞ்சி - இசங்கு.

துடுக்கு - குறும்பு, தீக்குணம், விரைவு.

துடுப்பு - அகப்பை, துடுப்பு.

துடுமெனல் - ஒலிக்குறிப்பு.

துடுவை - நெய்த்துடுப்பு.

துடை - சுவர்ப்புறத்து நீண்ட வுத்திரம், துடையென்னேவல், தொடை.

துடைத்தல் - அழித்தல், சிய்த்தல், தள்ளுதல், துடைக்குதல், நாசம்பண்ணுதல், விட்டுவிடுதல், வீழ்த்தல்.

துடைப்பம் - வாருகோல்.

துடைவாசி - விஷமூங்கில்.

துட்கல், துட்கெனல் } அச்சக்குறிப்பு.

துட்டர் - தீயர்.

துட்டவி - ஓர் செடி.

துட்டன் - தீயன், தேன்.

துட்டு - தீமை, பணத்தின்விகிதம்.

துட்டுவம் - அற்பம்.

துட்டை - வசவி.

துணங்கறல் - இருள், திருவிழா.

துணங்கை - இருகையு முடக்கிப் பழுப்புடை யொற்றியாடல், கூத்து, திருவிழா.

துணர்-பூ, பூங்கொத்து, பூந்தாது.

துணர்த்தல் - முகைத்தல்.

துணவு - சீக்கிரம், நுணு.

துணி - ஒளி, சோதிநாள், துணியென்னேவல், துணிவு, துண்டு, தூக்கங்கள், தெளிவு, தேரிடக்கியம்.

துணிதல் - தீர்மானித்தல், தெளிதல், நிச்சயித்தல்.

துணித்தல்-அறுத்தல், வெட்டல்.

துணிநர் - அரிதிற்கொள்ளுவார்.

துணிபு - தீர்ப்பு, தெளிவு.

துணிபொருள் - நிசப்பொருள்.

துணிவு-திடன், துண்டு, தெளிவு, தீர்ப்பு, நம்பிக்கை, நோக்கம், வெட்டு.

துணிவுரை - சந்தேகப்பட நின்றவிடத்து இதற்கு இதுவே பொருளெனத் துணிந்தெழுதும் உரை, விருத்தியுரை.

துணுக்கம்-அச்சம், உள்ளோசை.

துணுக்கெனல் - அச்சக்குறிப்பு.

துணை-அளவு,ஆயுதமுனை, இணை, உதவி, ஒப்பு, சகாயம், சல்லியம், சோடு.

துணைக்கருவி - உபகருவி.

துணைக்காரணம் - உபகரணம்.

துணைமை - உதவி.

துணைவர் - மந்திரிகள்.

துணைவன் - உதவிக்காரன், கடவுள், சகோதரன், தலைவன், தோழன், மந்திரி.

துணைவி - சகோதரி, தோழி, மனைவி.

துணைவு - விரைவு.

துண்டம் - கைவாய்க்கால், சாரைப்பாம்பு, துணி, துண்டித்தல், முகம், மூக்கு, பறவை மூக்கு, யானைத்துதிக்கை.

துண்டி-கழி, கொப்பூழ், துண்டு, துண்டு நிலம்.

துண்டித்தல் - அறுத்தல், தறித்தல், வெட்டல்.

துண்டிவிநாயகன்-காசிக்கணபதி.

துண்டீரன் - ஓரரசன்.

துண்டீரபுரம் - காஞ்சீபுரம்.

துண்ணெனல் - அச்சக் குறிப்பு, விரைவுக்குறிப்பு.

துதமுகம் - பரதவுறுப்புக்களுளொன்று, அஃது—வேண்டாமைக்கு வலமிடந் தலையாட்டல்.

துதம் - அசைவு.

துதி - துதித்தல், துதியென்னேவல், தோத்திரம்.

துதித்தல் - வழுத்தல்.

துதியம் - சவரிலோத்திரம்.

துதியை - இரண்டாந்திதி.

துதை - நெருக்கம்.

துதைதல் - நெருங்கல், மிகுதல்.

துதைத்தல் - நெருக்கல்.

துத்தநா - முயற்புல்.

துத்தபாஷாணம்-ஓர்பாஷாணம்.

துத்தம் - ஏழிசையினொன்று, கண்மருந்து, சமனிசை, நாண் முகப்புல், நாய், நாவினாற் பிறக்குமிசை,பால், யாழினோர் நரம்பு, வயிறு.

துத்தல்-அனுபவித்தல்,புசித்தல்.

துத்தன் - கபடன், தப்பிலி.

துத்தி - உண்டற்குரியன, ஓர் செடி, தேமல், பாம்பின் படப் பொறி.

துத்து - கம்பளி, தப்பிதம் பொய், வஞ்சனை.

துத்தூரம் - ஊமத்தை.

துநீ - நதி, பறவைமுட்டை.

துந்தகடம் - கோதுமைநொய்.

துந்துபி - ஓர்வருடம், பேரிகை.

துந்துமாரி - முதலெழு வள்ளலி லொருவர்.

துந்துமி - ஓரசுரன், ஓர் வருஷம், பறையின் பொது, பேரிகை.

துப்பகம் - நெய்.

துப்பரவு - முழுமை, மேன்மை.

துப்பல் - உமிழ்நீர், துப்புதல்.

துப்பிரசம் - கருஞ்சொண்டி.

துப்பு - அரக்கு, அறிவு, அநுபவம், ஆயுதப்பொது, உணவு, கறை,குற்றம், சகாயம்,சாமர்த்தியம், சிவப்பு, சுத்தம், சோதித்தல், துணை, துணைக்காரணம், துப்பென்னேவல்,நெய், பகை, பவளம், பானம், பொலிவு, மிகுதி, மேன்மை, வலி.

துப்புரவாக்கல் -சுத்தஞ்செய்தல்.

துப்புரவு - அலங்காரம், ஐம்பொறிநுகர்தல், ஒப்புரவு, ஒழுங்கு, சுத்தம்.

துமானம் - ஆபரணப்பெட்டி.

துமி - சிறுதிவலை, துமியென்னேவல், மழைத்துளி.

துமிதம் - நீர்த்துளி.

துமிதல்-வெட்டுண்ணல், தொலைதல்.

துமித்தல் - அறுத்தல், வெட்டல்.

தும் - தன்மைப்பன்மை விகுதி.

தும்பகா - தும்பை, தும்பரம், தும்பராஷ்டகம், பேரரத்தை.

தும்பம் - வீணைக்காய்.

தும்பரம் - அத்தி,

தும்பராட்டகம் - பேரரத்தை.

தும்பன் - தீயன்.

தும்பி - கருவண்டு, கொத்தான், சுரை, யானைவண்டிஞண், வண்டு.

தும்பிலி - ஓர் மரம்.

தும்பு-கயிறு, குறைவு,சிம்பு, நார்.

தும்புரு - ஓர் கந்தருவன். (நாரதன் நண்பன்) வீணை, வீணைப் பயிற்சியுள்ளவன்.

தும்பை - ஓர் செடி, கறவைப்பசு, கூட்டம், பொருதல், போர், வென்றோர்க்கு மாலை, வெற்றிலை.

தும்பைமாலை - ஓர் பிரபந்தம், போர்வென்றோர்க்கு மாலை.

தும்மிட்டி - ஓர் செடி.

தும்மர் - உயிர்ப்பு, தும்முதல், விடுதல், வியங்கோண்முற்று.

தும்மு - கொசுகு, தும்மல், தும்மென்னேவல்.

துயக்கல் - தளர்த்தல்.

துயக்கு - சோர்வு, தளர்ச்சி.

துயங்கல் - தளர்தல்.

துயரம் - கிலேசம், துன்பம்.

துயரி - யாழ்நரம்பு.

துயருறுவோன் - தரித்திரன்.

துயர் - கிலேசம், துன்பம்.

துயலல் - அசைதல்.

துயவு - அறிவின்றிரிபு.

துயிலல் - நித்திரை செய்தல்.

துயிலாதார் } தேவர்.
துயிலார் }

துயிலிடம் - மக்கட்படுக்கை.

துயிலெடை - நித்திரையினின் றெழுப்புதல்.

துயிலெடைநிலை - ஓர்பிரபந்தம்.

துயில் - துயிலென்னேவல், நித்திரை.

துயில்கூரல் - நித்திரைசெய்தல்.

துயிறல் - நித்திரைசெய்தல்.

துயிற்றல்-நித்திரை செய்வித்தல்.

துயிலி - தொய்யில்.

துய் - அறிவின்றிரிபு, உணவு, துய்யென்னேவல், நூற்கும் பஞ்சிற்றொடர் நுனி.

துய்த்தல் - அனுபவித்தல், ஐம்பொறி நுகர்தல், நூனூற்றல், புசித்தல்.

துய்யனையிரவியாக்கி - பவளப்புற் றுப் பாஷாணம்.

துய்யவன் - சுத்தன், வெள்ளி மணல்.

துய்யாள் - அழகுள்ளவள், சுத்த முடையாள், ஸரஸ்வதி.

துரககதி - குதிரைப்பாய்ச்சல், குதிரைநடை.

துரகதமூலம் - நீர்முள்ளி.

துரகதம் } குதிரை, குதிரைப்பற்
துரகம் } பாஷாணம், மனம்.

துரங்கம் - குதிரை, மனம்.

துரத்தல்-அகற்றல், செலுத்தல்.

துரந்தரம் - பொதியெருது, வல்லபம்.

துரந்தரன் - பாரந்தாங்குவோன், வல்லோன்.

துரபிமானம் - வீண்பெருமை.

துரம் - சுமை, பாரம், பொறுப்பு.

துரவு - கிணறு, தூது.

துராசை - வீணாசை.

துராபம் - பெறுதற்கரியது.

துராரோகம் - பனை, பேரீந்து.

துராலேபம் - சிறுகாஞ்சொறி.

துரால் - செற்றை, துரும்பு, துன்பம்.

துரி - எழுதுகோல், நூற்பாத் திருத்தும் படைமயிர்.

துரிசி - குற்றம், துருசி, துன்பம்.

துரிசு - குற்றம். துன்பம்,

துரிஞ்சில்-உசிலமரம், வெளவால்.

துரிதம் - ஓர் தாளம், கலக்கம், காலதசப்பிரமாணத்தொன்று, அஃது துடியிரண்டு கொண்டது, கேடு, சீக்கிரம், துன்பம், பாவம்.

துரியம் - சுத்தநிலை, சுமத்தல், நான்காமவத்தை, பரமாத்மா, பொதியெருது.

துரியர் - சுத்தர்.

துரியாதீதம்-ஆன்மாக்கள் மிகத் தூய்மையாய் நிற்கும் நிலை.

துரியோதனன் - ஸுயோதனன்.

துரீ - பாவாற்றி.

துருக்கம் - ஒடுக்க வழி, கஸ்தூரி, கஸ்தூரிமிருகம், கலக்கம், காடு, குங்குமமரம், சேரற்கரிய விடம், மலைமேற்கோட்டை, மான்.

துருக்கு - மிலேச்ச ஜாதி.

துருசு - களிப்பு, சீக்கிரம்.

துருத்தி - ஆட்டிடைக்குறை, ஊதுந்துருத்தி, நீர்த்துருத்தி.

துருபதன் - துரோபதையின் தந்தை.

துருபவருணீ - காட்டாமணக்கு.

துருமம் - கற்பகம், மரப்பொது, மனக்கலக்கம்

துருமோற்பலம் - கோங்குமரம்.

துரும்பு - திரணம்.

துருவண்ணம் - வெள்ளி.

துருவமண்டலம் - துருவபதம்.

துருவம் - அசையாநிலை, உபாயம், எழு தாளத்தொன்று, இரஹ புடம், துருவ நட்சத்திரம், நிச்சயம், நித்தியயோகத் தொன்று, நிலைபேறு, பூச்சக் கரத்தில் முனை, வட்டத்தின் முனை.

துருவல் - கடைதல், துளைத்தல், தேடல்.

துருவன் - உத்தாநபாதன் மகன், அஷ்டவஸுக்களிலொருவன், துருவநக்ஷத்திரம்.

துருவாசன் - ஓர் ரிஷி.

துருவாடு - ஓராடு.

துருவாட்டி - சிற்றேலம்.

துருவாதி - காட்டாமணக்கு.

துருவை - செம்மறியாடு.

துருளக்கம் - குங்கிலியம்.

துரைச்சி - உலோகநிமிளை.

துரோகம் - கலக்கம், குற்றம், கொடும்பாவம், தப்பிதம்.

துரோணம் - எண்காற்புள், எழு மேகங்களிலொன்று, ஓர் பரம், காக்கை, தனுவிராசி, தும் பைச் செடி, பதக்கு, வில்.

துரோணாசாரியன், துரோணன் } ஓர் வில்லாசிரியன், அச்வத்தாமன் தந்தை, குரு குலத்தரசர்குரு.

துரோபதை - பஞ்ச கன்னிகை களிலொருவள், அவள் பாண்டவர் மனைவி.

துர் - கெட்ட.

துர்க்கந்தம் - தீயவாசனை.

துர்க்கம் - மலைமேற் கோட்டை,

துர்க்கை - கொற்றவை, பூரநட் சத்திரம்.

துர்த்தூரம் - ஊமத்தை.

துர்ப்பரிகம் - சிறு காஞ்சொறி.

துர்லபம் - அருமை, கிடைக்கத் தகாதது.

துர்வர்ணம் - வெள்ளி.

துலக்கல் - விளக்கல்.

துலங்கல் - ஒளிசெய்தல்.

துலம் - கனம், கோரை, நிறை, நீர்முள்ளி.

துலவம் - பஞ்சு.

துலா-ஏற்றமரம், கைமரம், நிகர், நிறைகோல்.

துலாகோடி - ஓர்நிறை, காலணியிலொன்று, பத்துக்கோடி.

துலாம்-ஏற்றவுறுப்பு, ஓர்இராசி, ஓர்நிறை.

துலாயனம் - துலாராசியில் சூரியன் வருங்காலம்.

துவிதம் - அசைவு, ஒப்பு, நிறுக்கப்பட்டது.

துலுக்கு - அசைவு, ஓர் பாஷை.

துலை - ஒப்பு, கனம், துலாராசி, நிறை, நீரிறைக்குந்துலை, நூறு பலம்.

துலோயம் - கருஞ்சுண்டி.

துல்லபம் - அருமை.

துல்லம் - பேரொலி.

துல்லியபக்கம் - உவமை.

துல்லியயோகிதாலங்காரம் - ஒப்புமை கூட்டவணி.

துவக்கல் -ஆரம்பித்தல், கட்டல், தொடங்கல்.

துவக்கு-உடல்,சங்கிலி,சம்பந்தம், துவக்கென்னேவல், தோல், பிணக்கு.

துவங்கிசம்-கேடு,சேதம், நட்டம்.

துவசம் - அடையாளம், கொடி, விருதுக்கொடி.

துவசர் - கள்விற்போர்.

துவசல் - தொடிசு.

துவசாரோஹணம் - கொடியேற்றம்.

துவட்சி - அசைவு, பலவீனம், வரட்சி.

துவட்டல் - துடைத்தல், துவட்டுதல், வியங்கோள்முற்று.

துவட்டர் - கம்மாளர், தச்சர்.

துவட்டாநாள் - சித்திரைநாள்.

துவந்துவம் - இரண்டு, ஒன்றைத் தொடர்ந்தது.

துவம் - அசையாநிலை, சத்துவம்.

துவரம் - துவர்ப்பு.

துவரை - ஓர் பயறு, துவாரகை.

துவர் - சிவப்பு, துவர்ப்பு, பகை, பவளம், விறகு.

துவர்க்காய் – பாக்கு.

துவர்ச்சிகை - கடுக்காய்ப் பிஞ்சு.

துவர்தல் - திமிர்தல், தெளிதல்.

துவர்த்தல் - துவர்ப்புக்கொள்ளுதல், பூசுதல்.

துவர்ப்பு - அறுசுவையிலொன்று.

துவலல் - துவறல்.

துவலை - துளி, மழை, மழைத்தூவல்.

துவல் - சீக்கிரம், துவலென் னேவல்.

துவளல் - அசைதல், திவளல், வியங்கோள்முற்று.

துவறல் - துவலைவிடுதல், விரைவு.

துவனி - தொனி.

துவன் - வட்டத்திருப்பி.

துவன்றல் - சாதல், நிறைதல், நெருங்கல், பொலிவு.

துவாதசம் - பன்னிரண்டு.

துவாதசாங்கிசம் - இலக்கினத் தைப் பன்னிரு கூருக்கல்.

துவாதசாந்தம் - பன்னிரண்டா மவஸ்தை.

துவாதசாத்மா - ஸூரியன்.

துவாதசி - ஓர் திதி.

துவாந்தம் - இருள், நரகம்.

துவாபரம் - ஓர் யுகம்.

துவாரகேசன் - விஷ்ணு.

துவாரகை - ஸப்தபுரிகளி லொன்று.

துவாரபாலர் - வாயிற்காப்போர், கோயில் வாசலில் வைத்திருக் கும் பேருரு.

துவாரம் - வாயில்.

துவி - இரண்டு.

துவிகாபா - வட்டத்திருப்பி.

துவிகாயாசின் - செம்முருங்கை.

துவிசம் - பல், முட்டையிற் பிறப்பன.

துவிசன் - இருபிறப்பாளன்.

துவிதகேந்திரம் - துவிதீயகேந் திரம்.

துவிதபாவனை - இரண்டாகப் பாவிக்கை.

துவிதம் - இரண்டு, மாத்வம்.

துவிதாத்மகம் - ஜாதிக்காய்.

துவிருத்தி - கூறியது கூறல்.

துவீபம் - தீவு.

துவேசம் - பகை, வெறுப்பு.

துவை - இறைச்சி, ஒலி, துவை யென்னேவல், பருகுதற்குரி யன, பிண்ணாக்கு, புளியங்கறி.

துவைதம் - இருமை.

துவைத்தல்- ஒலித்தல், பேரொலி, வாச்சியம் வாசித்தல், விடுதல்.

துவைபாயனன் - வேதவியாஸன்.

துவ்வல் - புசித்தல்.

துவ்வாதார் } தரித்திரர்.
துவ்வார் }

துவ்வாமை - பொறாமை, வெறுப்பு.

துவ்வு - அநுபவம், ஐம்பொறி நுகர்ச்சி.

துவ்வுதல் - அநுபவித்தல்.

துழைத்தல் - குழைத்தல்.

துழனி - ஒலி, பறவைகூட்டத் தொலி.

துழாய் - துளசி.

துழாய்மௌலி - திருமால்.

துழாய்வனம் - துளசிக்காடு.

துழாவல் - கலத்தல், வெட்டல்.

துளக்கம் - அசைவு, அச்சம், ஒளி, ஜோதி நாள், கலக்கம்.

துளக்கலாகாநிலை - அசைக்கப் படாதநிலை.

துளங்கல் - அசைதல், ஒளிசெய் தல், கலங்கல்.

துளங்கொளி - கேட்டைநாள், மிக்கொளி.

துளம்பிக்கிரி - ஆடுதொண்டை.

துளவம் } துளசி
துளவு }

துளவன் - திருமால்.

துளாரி - நெய்வார்கருவியி னொன்று.

துளி - திவலை, துளியென்னேவல், பெண்ணுமை, மழை, மழைத் துளி.

துளித்தல் - மழைபெய்தல்.

துளிர் - தளிர், துளிரென்னேவல்.

துளிர்த்தல் - செழித்தல், தளிர்த்தல்

துளும்பல் - அலைதல், எழுதுதல், திமிர்தல், திமிறல்.

துளுவம் - ஓர் தேசம், பதி னெட்டு பாஷைகளிலொன்று.

துளை - துவாரம், துளையென் னேவல், மூங்கில், வாயில்.

துளைத்தல் - துளைக்குதல்.

துள்ளல் - ஆடு, கலிப்பாவோசை, குதித்தல், கூத்து, கொசுகு.

துறக்கம் - தேவலோகம்.

துறட்டி - யானைத்தோட்டி.

துறத்தல் - துறவு, நீக்கல்.

துறவர் - முனிவர்.

துறவி - முனி.

துறு - உணவு, கூட்டம், துறுகல், துறுவென்னேவல்.

துறுட்டி - சிற்றேலம்.

துறுத்தல் - துறுக்குதல்.

துறுபவம் - நெருக்கம்.

துறுமல் - திரட்சி, நெருங்கல்.

துறுவல் - நெருக்கல், புசித்தல்.

துறை - ஆறு, அகப்பொருட் டுறை, இடம், இறங்குதுறை, எல்லை, காரியம், தங்குமிடம், நீர்த்துறை, நூற்பாவினத் தொன்று, வழி.

துறைபோகுதல் - நூல் கற்றறி தல், முடிவறிதல்.

துறைவல்லோர் - கற்றோர்.

துறைவன் - நெய்தநிலத்தலைவன்

துற்றல் - உண்டல், குவிதல், நிறை தல்.

துற்று - சோறு, துறுகல், துற் றென்னேவல், நெருக்கம்.

துஹவி - திப்பிலி.

துனி - அச்சம், ஆறு, கோபம், சினம், துன்பம், நோய், புலவி நீட்டம், வெறுப்பு.

துன்பு - துன்பம்.

துன்புறுவோன் - சீமூதன்.

துன்மதி - அவமதி, ஓர் வருஷம்.

துன்முகி - ஓர் வருஷம், ஓரரக்கி.

துன்றல் - நெருங்கல், கிட்டல்.

துன்னம் - தைத்தல்.

துன்மை - தின்மை.

துன்னர் - சக்கிலியர், செம்பர், தையற்காரர்.

துன்னல் - கிட்டல், தைத்தல், நெருங்கல், வியங்கோண் முற்று.

துன்னர்
துன்னுதார்
துன்னோர் } பகைவர்.

துன்னு - இறைச்சி, துன்னென் னேவல், முதுகு.

துன்னுதல் - சேர்தல்.

துன்னுநர்-அடுத்தோர்,சிநேகிதர்.

தூ

தூ-ஒரெழுத்து,சீ, சுத்தம், தசை, தூவெனனேவல்,பகை,பற்றுக் கோடு, புள்ளிறகு, வெண்மை.

தூகம் - காற்று.

தூக்கம் - ஆபரணத்தொங்கல், காதணி, சல்லியம், நித்திரை.

தூக்கு - ஆராய்தல், உவமைச் சொல், உறி, காற்றுலாம், செய்யுள், தூக்குதல், தூக்கு நூல், துலாராசி, தூக்கங்கள், தூக்கணங்குருவி, நிறை, நிறை கோல், பா.

தூங்கல் - ஆடல், உறங்கல், கூத்து, சோம்பல், தாழ்வு, யானை, வஞ்சிப்பாவினோசை.

தூங்கிசைச்செப்பல் - வெண்பா வினம்.

தூங்கிசைகவல் - கலிப்பா வினம்.

தூங்கிசைத்துள்ளல் - ஆசிரியப் பாவினம்.

தூசரம் - மங்கினவெள்ளை.

தூசர் - வெண்ணூர்.

தூசி - குதிரை, கொடிப்படை, படைவகுப்பு, புழுதி.

தூசிகம் - புளியாரை.

தூசு-சித்திரைநாள், சீலை,தூய்து, யானைகட்டுங்கயிறு.

தூசுப்பு - தண்ணீர்விட்டான்.

தூடனம்
தூஷணம் } அசப்பியம், குற்றம், நிபந்தனை, பழுது படுதல், மீறுதல்.

தூட்டி - சீலை.

தூணம் - அம்புக்கூடு, தூக்கணம், தூண், பகை.

தூணி - அம்புக்கூடு, ஓரளவு.

தூணிகர் - செட்டிகள்.

தூணியங்கம் - அத்திப்பிசின்.

தூணீரம் - அம்புக்கூடு.

தூண் - தூண், பற்றுக்கோடு.

தூண்டல்.எழுப்பல், செலுத்தல்.

தூண்டில்-தோட்டி,மீன்பிடிக்கும் கருவியிலொன்று.

தூதர் - ஒற்றர், கிங்கரர், சமாதா னம் பேசுவோர்.

தூதன் - செய்தியறிவிப்போன், தானுதிபதி.

தூது - ஓர்பிரபந்தம், தூதுசெல்வோன், புதன்.

தூதுணம் - தூக்கணங்குருவி.

தூதுவள் - தூதன்.

தூதுளை - தூதுளைச்செடி.

தூபமுட்டி - தூபக்கால்.

தூபம் - புகை.

தூபரம் - கொம்பிலாவிலங்கு.

தூபிதம் - சூடு.

தூமகேது - கேது, கொடுமை, தீ, வால் நட்சத்திரம், விண்வீழ்கொள்ளி.

தூமப்பிரவை - ஓர் நரகவட்டம்.

தூமம்-புகை, மட்கலஞ்சுடு சூளை, புளிநரளை.

தூமலம் - கருமைமிக்க சிவப்பு.

தூமான் - ஆசனம், பீடிகை.

தூமாகாரம் - புகைவடிவு.

தூமிரம் - கருமைமிக்க சிவப்பு.

தூமிராக்கன் - செங்கண்ணன்.

தூமை-தூய்மை, மகளிர் சூதகம், வெண்மை.

தூம்பிரம் - தூமிரம்.

தூம்பு - அருநெறி, இடுக்கு வழி, ஈயம், உட்டுளை, ஜலதாரை, மடை, மரக்கால், மூங்கில், வழி, வாயில்.

தூயவர் - சுத்தர், முனிவர்.

தூயவுடம்பினனுதல் - இறைவனெண்குணத்தொன்று.

தூயாள் - ஸரஸ்வதி.

தூய்தன்மை - அசுத்தம்,

தூயதாக்கல் - சுத்தமாக்குதல், செப்பம் பண்ணல்.

தூய்து - சுத்தமானது.

தூய்மை - சுத்தம்.

தூரகாரி-வருங் காரியமறிவோன்.

தூரணி - தீவிரம், பலம், மனம்.

தூரம்-இசைக்கருவி, ஊமத்தை, சேய்மை, புறம்பு, விசாலம், வித்தியாசம்.

தூரல் - துன்பம், தூருதல், வருத்தம்.

தூரி, தூரிகை, தூரிக்கோல் } எழுதுகோல்.

தூரியம்-இசைக்கருவி, உவகைப் பறை, எருது, எழுதுகோல், எறிபடை, கைவேல், நல்லாடை, பறைப்பொது, முரசு.

தூரேத்தி - கம்பந்திராய்.

தூரோணம் - ஓர் அளவை, கவிழ்தும்பை.

தூர் - சேறு, தூரென்னேவல், தூர்வை, மண்டி, வேர்.

தூர்க்கை - பூரநாள்.

தூர்த்தல் - கூட்டல், செறுத்தல், நிறைத்தல்.

தூர்த்தன் - காமுகன், வஞ்சகன், விடன்.

தூர்த்தை - தூர்த்த குணமுள்ள வள்.

தூர்மம் - தேட்கொடுக்கி.

தூர்வகம் - சுமத்தல், பொதி யெருது.

தூர்வாசம் - பதினெண்புராணங் களிலொன்று.

தூர்வு - தூர்ப்பு.

தூர்வை - அறுகு, செற்றை.

தூலம் - ஆகாயம், இலவமரம், கோரை, நஞ்சு, நீர்முள்ளி, பஞ்சு, பஞ்சபூத காரியதேகம், பருமை, வீட்டுத்திரம்.

தூவத்தி - வாள்.

தூவல் - அம்பிறகு, எழுதுமிறகு, சிந்தல், மழை, மழை பெய்தல், மழைத்துளி, மழைத் தூவல்.

தூவி - அன்னத்திறகு, இறகு, மயிற்றோகை, மீன் சிறகு.

தூவு - ஊன், தூவென்னேவல்.

தூவுதல் - சிந்துதல், தெளித்தல்.

தூவம்
தூளணம் } தூள்.

தூளி - அநுமானிதம், தூளியென் னேவல், பராகம், புழுதி.

தூளிதம் - தூளாக்கப்பட்டது.

தூள் - புழுதி, பூந்தாது, பொடி.

தூறல் - பழிச்சொல், மழை, மழைத்துளி, மழைபெய்தல்.

தூறு - கூட்டம், சிலும்பல், சிறு பற்றை, தூறென்னேவல், பழிச்சொல்.

தூறுதல் - இளைத்தல், சிதறுதல், தூறுபடுதல், மழை தூமித்தல்.

தூற்றல் - சிதறுதல், தூற்றுதல், பழிகூறல், மழை தூரல்.

தூற்றுமைக்கொற்றன் - ஓர் கொற்றன்.

தூனம் - அசைதல், வருத்தம்.

தூனனம் - அகற்றல், அசைதல்.

தெ

தெ - ஓரெழுத்து.

தெகின் - படர்கொடி.

தெகுட்டி
தெகுட்டிகை } தேட்கொடுக்கி.

தெகுளம்-நிறைதல், பெருகுதல்.

தெகுளல் - பெருகல்.

தெங்கணம் - ஓர்தேயம்.

தெங்கந்தீவு - எழு தீவுகளி லொன்று.

தெங்கு - தென்னமரம்.

தெட்டல் - வஞ்சித்தல்.

தெட்டு - எத்து, யானைக்கணையம், வஞ்சனை.

தெட்பம் - தெளிவு, முதிர்ச்சி.

தெண்டிரை - கடல்.

தெண்ணீர் - தெளிநீர்.

தெண்மை - திறமை, தெளிவு.

தெந்தி - நேர்வாளம்.

தெப்பம் - நீர்துந்தெப்பம்.

தெம்முனை - இரணகளம்.

தெய்ய - இசைநிறை, இடைச்சொல்.

தெய்வதம் - தெய்வம்.

தெய்வமந்திரி - வியாழன்.

தெய்வம்-ஊழ், கடவுள், வருடம், எண்வகை மணத்தினென்று, ஐவகையாகத்தொன்று.

தெய்வயானைகாந்தன் - குமரன்.

தெய்வவிருதன் - பீஷ்மன்.

தெரிசொல் - காரணம், சத்தியம்.

தெரிதரல் - அறிதல், தோன்றல்.

தெரிதல் - அறிதல், ஆராய்தல், ஆலோசனை, காணல், தெரிந்து கொள்ளுதல்.

தெரித்தல்-எழுதல், கொழித்தல், சொல்லுதல், மாறுபாடு.

தெரிநிலை-விளங்க நிற்பது, காலந் தெரியநிற்பது.

தெரிநிலைவினை - குறிப்புவினை.

தெரிநிலைவினைப் பெயரெச்சம் - செயலுங்காலமும் விளக்கிப் பெயரையவாவி நிற்பது.

தெரிநிலைவினைமுற்று - செயல், காலம், வினையெனு மூன்றையும் விளக்கி முற்றுப் பெற்று நிற்பது.

தெரிமா - சிங்கம்.

தெரியலர்-அறியாதார், பகைஞர்.

தெரியல் - ஆராய்தல், காணல், பூமாலை.

தெரியிழை - பெண்.

தெரிவு-அறிவு, ஆராய்வு, தெரிதல்.

தெரிவை - பெண்பொது, முப்பத்தோரு வயதுப்பெண்.

தெரு - வழி, வீதி.

தெருட்சி - அறிவு, தெளிவு.

தெருட்டல் - உறுதிப்படுத்தல், வற்புறுத்தல்.

தெருமரல் - சுழலல், நம்பிக்கையற்றிருத்தல்.

தெருளல் - தெளிவு.

தெருளுடைமை- அறிவுடைமை.

தெருள் - அறிவு, தெருளென்னேவல், தெளிவு.

தெலுங்கு-ஓர் தேசம், ஓர் பாடை.

தெல் - அஞ்சல், கலாதி, நெடுங்கிடங்கு, நெடும்பாத்தி.

தெல்லாட்டம் - இழுப்பறிப்படுதல், பாத்தி கட்டுதல்.

தெவம் - மாமரம்.

தெவிட்டல்-உமிழ்தல், ஒலித்தல், நிறைதல், நினைத்தல்.

தெவிளல் - நிறைதல்.

தெவு - கொள்ளுதல்.

தெவுட்டல் - அடைத்தல், ஒளித்தல், கொப்பளித்தல், தங்கல், நிறைதல், நினைத்தல், மறைத்தல்.

தெவுளல் - பெருகுதல்.

தெவ் - சத்துரு, பகை, போர்.

தெவ்வர் - பகைவர்.

தெவ்வர் - மூனைப்பதி, பகைவர், மேற் சென்றோருறைவிடம்.

தெவ்வினை - போர்.

தெவ்வு-சத்துரு, சந்திரன், பகை, போர்.

தெழித்தல் - அதட்டல், கோபம், சினக்குறிப்பு, துவைத்தல், பேரொலி.

தெளிஞர்-அறிவுடையோர், கல்வியிற் சிறந்தோர்.

தெளிதல் - அறிதல், ஆராய்தல், ஆலோசனை, ஊடுருவுதல், கலக்கம், கொழுக்குதல், துணைத்தல், தெளிவு.

தெளித்தல் - ஒலித்தல், கொழித்தல், துப்புரவாக்கல், தூவல், தெரித்தல், நிச்சயித்தல், விதைத்தல்.

தெளிர் - உள்ளோசை.

தெளிர்தல் - பிரகாசித்தல், பேசலாவெழுமொலி.

தெளிவு - அறிவு, குணலங்காரம் பத்திலொன்று, கொழுப்பு, தீர்க்கம், துணிவு, மனத்தேற்றம், வெளிச்சம்.

தெள்கு - தெள்.

தெள்விளி - ஓர்பண், மகிழ்ச்சியாலார்த்தல்.

தெள்ளல்-கொழித்தல், தெளிதல்.

தெள்ளி - யானை.

தெள்ளிச்சி - பூநீறு.

தெள்ளிமை - அறிவு, தெளிவு.

தெள்ளியர், தெள்ளியோர் - அறிவுடையோர்.

தெள்ளுதல் - கொழித்தல், தெரிதல், தெளிதல்.

தென்னேணம் - மகளிர் விளையாட்டிலொன்று.

தெறித்தல் - தெறிக்குதல்.

தெறிப்பு - அதைப்பு, சிந்துதல், சுண்டுகை, முறிவு.

தெறுக்கால் - தேள், விருச்சிகவிராசி.

தெறுதல் - அழித்தல், தங்கல்.

தெறுத்தல் - நெரித்தல்.

தெறுனர் - பகைவர்.

தெற்றல்-அலைத்தல், இழைத்தல், இறுக்கல்.

தெற்றி-சித்திரகூடம், திண்ணை.

தெற்று - அடைப்பு, இழைப்பு, தெற்றல், தெற்றென்னேவல், பின்னல், விரைவுக்குறிப்பு.

தெற்றெனவு - தெளிவு.

தெனாது - தெற்கிலுள்ளது.

தென் - அழகு, இசை, எதிர், கருப்பு, தெற்கு, தென்னமரம்.

தென்கலை - தமிழ்.

தென்கால் - தென்காற்று.

தென்கீழ்த்திசைப் பாலகன், தென்கீழ்த்திசையிறை - அக்கினிதேவன்

தென்குமரி - ஓராறு, கன்னியா குமரிமுனை.

தென்சார் - தென்பக்கம்.

தென்படுதல் - கிடைத்தல்.

தென்பாண்டி - கொடுந் தமிழ் நாட்டிலொன்று.

தென்பால் - தென்பக்கம்.

பரிசணித்தல் - மிருதுவாய்ப் பேசுதல்.

பரிசதன்மாத்திரை - பரிசவுணர் வின்மூலம்.

பரிசதீட்சை - ஓர் தீட்சை, அஃது—பிரளயாகலர்க்குப் பரிசத்தினுல் மலமறுத்தல்.

பரிசத்தலன் - கூட்டாளி.

பரிசம் - கற்பாஷாணம், தொடல், தொடுதலை யறியு மறிவு; இஃது--பஞ்சபுலனிலொன்று, மணவாளன், பெண்ணின் பிதா மாதாவுக்குக் கொடுக்கும் வெகுமானம்.

பரிசயம் - ஐக்கம், பரிசனை, பழக்கம்.

பரிசரம்-அகலம்,மரணம், முறை.

பரிசரன் - காவற்காரன், தோழன், படைத்தலைவன்.

பரிசருப்பம் - சூழ்தல்.

பரிசனம் - உறவு, ஏவல் செய்வோர், சூழ்வோர், தொடுதல், பரிசிப்பு.

பரிசனவேதி - இழிந்தலோகங்களைப் பொன்னுக்கு மருந்து.

பரிசனன் - காற்று.

பரிசனை - பழக்கம்.

பரிசாதனம் - செய்து முடித்தல், தீர்மானம்.

பரிசாரகம் - ஏவல் வேலை.

பரிசாரகன் - ஏவல்செய்வோன், கூடப்போகிறவன்.

பரிசாரம் - பரிவாரம், பெண் மயிர்.

பரிசாரிகை - ஏவல்செய்பவள்.

பரிசித்தல், பரிசிப்பு } தீண்டல், பழகுதல்.

பரிசிரமம் - பிரயாசம், வருத்தம்.

பரிசியம் - கூட்டம்.

பரிசிலாளர் - இரப்போர்.

பரிசில் - ஈகை, வெகுமதி.

பரிசு - ஈகை, சங்கை மண்பு, பயணச்சனம்.

பரிசுகேடு - சங்கையீனம்.

பரிசுத்தம் - முழுதுஞ்சுத்தம், முழுமை.

பரிசுத்தவான், பரிசுத்தன் } சுத்தமுள்ளோன்.

பரிசுத்தாவி - சுத்தமான ஆவி.

பரிசுத்தி - பரிசுத்தம், முற்றுக.

பரிசுத்தை - சுத்தமுள்ளவன்.

பரிசை - கேடகம்.

பரிச்சதம் - போர்வை, மூடி.

பரிச்சித்து - அருச்சுனன் பௌத்திரன்.

பரிச்சேதம் - இலக்கியச்செய்யுட்கூறுபாடு, எல்லை, துண்டிப்பு, பிரிவு, மாற்று, முற்றும், பரிச்சேதம்:--காலபரிச்சேதம்,தேசபரிச்சேதம்,வஸ்துபரிச்சேதம்.

பரிஞ்சு - வாட்பிடி.

பரிட்டினகம்-பட்சிவட்டமிடுதல்.

பரிணமித்தல் - வேறுபடல்.

பரிணயம் - கலியாணம்.

பரிணமசரீரம் - ஒன்று திரிந்துண்டான தேகம்.

பரிணமம் - வேறுபாடு, விகாரம்.

பரிதல் - அறுத்தல், அன்பு, அன்போடுபேசல், இரங்கல், ஒடிதல், தறித்தல், வெட்டல்.

பரிதாபி - ஓர் வருடம்.

பரிதி - ஒளி, சக்கராயுதம், சூரியன், சூரியசந்திரரைச் சூழ்த்தோன்றும் வட்டம், தேருருளை, யூபஸ்தம்பம், வட்டம்.

பரித்தல் - காத்தல், சுமத்தல், தரித்தல், தாங்குதல், தூபரித்தல்.

பரித்தியாகம் - முற்றும் விடல்.

பரித்தியாகி - சந்நியாசி.

பரிபவம் - அவசங்கை, துறந்தோன், இகழத்தகு பொருள், இழிவு, எளிமை, தோல்வி, வியாகுலம்.

பரிபாகம் - பக்குவம், முதிர்வு.

பரிபாகி - முத்தியடையும் பக்குவன்.

பரிபாடல் - தலைச்சங்கப்புலவர் செய்தபரிபா டலென்னும்நூல்.

பரிபாடை - குழூஉக்குறி, சங்கேதம்.

பரிபாலனம் - அருளுதல், ஆளுகை, காவல், சமாளித்தல், தற்காத்தல்.

பரிபுரம் - காற்சிலம்பு, பாதகிண்கிணி.

பரிபூரணன் - சிவன்.

பரிபூரணி - இலக்குமி, பார்வதி.

பரிப்பு - சுமை.

பரிமண்டலம் - உண்டை.

பரிமந்தம் - அற்புதம், மந்தம்.

பரிமளகந்தி - வியாசன்றாய்.

பரிமளம் - சந்தோஷம், சம்போகம், மிகுமணம்.

பரிமாணம் - அளபு.

பரிமா • குதிரை.

பரிமாவடிப்போர் - குதிரைப்பாகர்.

பரிமாறுதல் - உட்கொள்ளுதல், ஊடாடுதல்.

பரிமாற்றம் - ஊடாட்டம், கலப்பு, நடமாடுதல், புணர்ச்சி.

பரிமிதம் - அளவு பட்டது, ஒரெல்லைக்குட்டுப்பட்டது.

பரிமுகம் - அச்சுவினிநாள், கணைக்கால்.

பரிமேயம் - அளவுபட்டது, பரிமிதம்.

பரிமேலழகர் - குறளுரையாசிரியர்.

பரியகம் - காற்சரி, கைச்சரி, பாதகிண்கிணி.

பரியங்கம் - கட்டில், மக்கட்படுக்கை.

பரியந்தம் - எல்லை, முடிவு, வரைக்கும்.

பரியயம் - அசட்டை, எதிரிடை, ஒழுங்கின்மை, படுக்கை.

பரியவசானம் - முடிவு.

பரியவத்தை - எதிரிடை.

பரியவம் - பலர்சொல்லுநெறி.

பரியாயசந்தேகம் - அற்பசந்தேகம்.

பரியாத்தி - காத்தல், சம்பாதித்தல், சம்மதம், தகுதி, திருத்தி, பகுத்தறிதல் விலக்குதல்.

பரியாயச்சொல் - ஒருபொருள் குறித்த மறுசொல், பலமுறை.

பரியாயம் - ஒழுங்கு, ஒன்றற்குரியன, ஓரலங்காரம், சமயம், சுபாயம், செய்யப்படுபொருள், மாதிரி, முகவுரை.

பரியாலோசனம் - கருத்துக் கூர்ந்து யோசித்தல்.

பரியாண - சேணம்.

பரியாளம் - பரிவாரம்.

பரிவட்டம் - சீலை, தலையிற் கட்டுஞ்சீலை, நெய்வோர்கருவி யிலொன்று, விக்கிரகத்தி னுடை.

பரிவயம்- அரிசி, நெடுநாள் கூடி யிருத்தல், யௌவனம்.

பரிவருத்தனை - ஓரலங்காரம், பண்டமாற்று.

பரிவாகிதமுகம் - மதத்தாற்றலை யை ஒருபுறஞ் சாயத்துச் சிறி தாய்ச்சுற்றி யாட்டல்.

பரிவாதம் - குற்றச்சாட்டு, பழிச் சொல், வீணை வியக்கும் வில்.

பரிவாரம் - அணி செய்வோர், உறை, படை, பரிசனம்.

பரிவிருத்தி- ஓரலங்காரம், கிருக சார வாக்கியம் கிரக வட்டம், சுற்றுதல்,முடிவு, முழுவட்டம்.

பரிவு - அன்பு, இன்பம், சுகம், துன்பம், பக்குவம்.

பரிவேடம் - சூரிய சந்திரரைச் சூழத்தோன்று வட்டம், சுற் றளவு, சூழ்தல்.

பரிவேதனம் - ஆராய்வு, சம்பாத் தியம், மிகு உபத்திரவம்,விவா கம்.

பரீகம்-நித்தியயோகத்தொன்று.

பரீட்சணம் - சோதனை.

பரீட்சித்தல் - ஆராய்தல், பழகு தல்.

பரீட்சை - அப்பியாசம்,ஆராய்வு, பழக்கம்.

பரீட்டி - ஆயத்தம், ஆராய்வு, ஊழியம்.

பரீதாவி - ஓராண்டு.

பரீவாதம் - கடிந்து கொள்ளல், வீணைவாசித்தல்.

பரீவாரம் - பரிவாரம், வாளுறை.

பரு - கடல், கணு, குரு, சிலந்தி நோய், பருமை, பருவென் னேவல்.

பருகல் - உண்டல், குடித்தல், நுகருதல்.

பருகுதல் - நுககருதல், பருகல், புசித்தல்.

பருக்கை - உருண்டை, சோறு, பருக்கைக்கல், பளிங்கு.

பருணிதர் - பரிணிதர், புலவர்.

பருத்தல் - பருமையாதல்.

பருத்தி - ஓர்செடி.

பருந்தலை - பெரியதலை, பெரு மையிற் சிறந்தோர், மேட்டி மைகாரர்.

பருந்தின்வீழ்வு - சூத்திர நிலை நான்கினொன்று, அஃது — ஓரிடத்துச் சூத்திரம் பின்னோ ரிடத்துச்சூத்திரத்தை அவாவி நிற்பது.

பருந்து - ஓர் பறவை.

பருப்பதம் - மலை.

பருப்பம் - அளவு, பருத்தல், பருமை.

பருப்பதி - பார்வதி.

பருப்பு - அதிகப்படல், பருத்தல் பருப்பு.

பருப்பொருள் - நுண்மையற்ற பொருள், பரும்படியான பொருள்.

பருமம் - அங்கி, கவசம், குதிரைக் கல்லணை, மூவாறு கோவை, மணியணி.

பருமித்தல் - அலங்கரித்தல், எக்களித்தல், சிரமஞ் செய்தல்.

பருவகம் - முழந்தாள்.

பருவகாலம் - உரியகாலம், பக்குவகாலம்.

பருவசந்தி - உவாக்கடையும் பிரதமை முதலும் பொருந்துஞ் சமயம்.

பருவதம் - மலை.

பருவதவர்த்தினி - உமையவள்.

பருவதாசயம் - மேகம்.

பருவதாசிரயம் - சரபபட்சி.

பருவநாடி - அமாவாசி, பௌர்ணமி காலங்கள்.

பருவமாதல் - இருதுவாதல், தகுதியாதல்.

பருவமுயற்சி - தகுகாலமுயற்சி.

பருவம் - அமாவாசியை, இருது, இளமை, உயர்ச்சி, ஏது, கணு, காலம், தகும் வயது, நூற்கூறு, பகுதி, பக்குவம், பருவ காலம், பிரமாணம், பூரணை, பொழுது, பௌர்ணமி, முனி, வயது.

பருவயோனி - கரும்பு.

பருவரல் - அருவருத்தல், துன்பம், வருந்தல்.

பரூஉ - மருமை, பறித்தல்.

பரை - ஐந்துமரக்கால்கொண்ட ஓரளவு.

பரோட்சஞானம் - சத்தாவத்தையிஞென்று, அது—பிரமமொன்றுண்டென்று கேட்டறிதல்.

பரோட்சம் - அதிரிசியமானவை, இறந்தகாலம், புலப்படாமை.

பரோபகாரம் - பிறர்க்குபகாரம்.

பர்க்கம் - ஒளி, பிரபை, வீரியம்.

பர்க்கன் - சிவன், சூரியன், பிரமன், விட்டுணு.

பர்ணசாலை - இருடியர் ஆச்சிரமம், தழைகளால் வேயந்த குடில்.

பர்ப்பாடகம் } ஓர் பூடு.
பர்ப்படாகப் }

பர்வம் - கொப்பூழ், பொன்.

பர்வதம் - பருவதம்.

பல - அனேகம்.

பலகணி - சாளரவாயில், திட்டிவாயில்.

பலகண்டன் - உப்பரவன், மண் வேலை செய்வோன்.

பலகம் - அடுக்கு, கேடகம்.

பலகரை - கவடி.

பலகாரம் - பலபண்டம், யானை மேற்றவிசு,

பலகை - கேடகம், நெற்றியெலும்பு, பலகை.

பலசந்தமாலை - ஓர் பிரபந்தம்.

பலசிரேட்டம் - மாமரம்.

பலசூதனன் - இந்திரன்.

பலட்சயம் - பலவீனம்.

பலண்டுறுகம் - ஓர் பாஷாணம்.

பலதுறை-நானுபேதம், பலவழி.

பலதிரட்டு - பலபாடலினுமெடுத்துச்சேர்த்திருப்பது.

பலதேன் - பலபத்திரன், வாயு.

பலபூரம் - மாதுளை.

பலபெயர்த்திரிசொல் - ஒரு பொருள் குறித்த பலபெயர்.

பலபை - அயனத்தில் மத்தியான வேளையில் குறித்த சங்கின் சாயை.

பலபொருளுவமை - ஒரு பொருட்குப் பலவுவமையையெடுத்துக்காட்டுவது.

பலபொருளொருசொல் - பலவர்த்தங்கொள்ளுமொரு சொல்.

பலமுறை - நானுவிதம்,பலதரம்.

பலமூலசாகாசனர் - முனிவர்.

பலம் - அம்பலகு, ஆகாயம், ஆயுத நுனி, இலை, காய், கிழங்கு, கேடகம், கொழு, சாதிக்காய், சுரூபம், செல்வாக்கு, தாது, தொகை, நியிஷம், நிறைகல், நிறையளவினென்று, நெற்றிப்பட்டை, பயன், பருப்பம், பழம், பிரித்துக்கொண்டபேறு, பெலன், பொன், மகளிர் சூதகம், மாதிரி, மாமிசம், வட்டத்தின் பரப்பு, வெட்பாலை.

பலம்பழம் - செங்கொட்டை.

பலர் - சபை, பல்லார்.

பலர்க்கம் - கதுப்பு.

பலர்பால் - உயர்திணைப்பன்மை.

பல்லம் - சேறு, பிண்ணுக்கு, மாமிசம்.

பலவகைத்தாது - சத்ததாது.

பலவழித்தோன்மல் - மருமகள்.

பலவறிசொல் - அஃறிணைப்பன்மைச்சொல்.

பலவிதம் - நானுவிதம்.

பலவினீட்டம் - பலபொருட்கூட்டம்.

பலவினைத்திரிசொல் - ஒருவினை குறித்த பல சொல்லால் வரும் வினைச்சொல்.

பலவின்கூட்டத்தற்கிழமை - பலவினொற்றுமை.

பலவின்பால் - அஃறிணைப் பன்மைப்பால்.

பலவு - பலாமரம்.

பலன் - இலாபம், ஈரவெங்காயம், ஓரிராக்கதன், காய், பழம், பலதேவன், வினைப்பயன்.

பலா - சிற்றுமுட்டி, பலவு.

பலாகம் - கொக்கு.

பலாசம் - இலை, பச்சைநிறம், பரசு, முருக்கு.

பலாசனம் - கிளி.

பலாசி - மரப்பொது.

பலாசு - இலை, பச்சைநிறம், புனமுருக்கு, முருக்கு.

பலாண்டு - ஈரவெங்காயம்.

பலாந்தம் - ஒருகாற் காய்த்துப் படுமரம், மூங்கில்.

பலாபலம் - நயநட்டம், மிகுபலன்.

பலாபாகம் - செய்யுள் நடை நான்கினொன்று.

பலாபேக்ஷை - பயன் விருப்பம்.

பலாயனம் - தோற்றுப்புயுங்காட்டுதல், நிலைகுலைதல், புறங்காட்டுகை, போதல்.

பலாரி - இந்திரன்.

பலாலம் - வைக்கோல்.

பலி - உடற்றிரை, காகம், காய்த்திருந்தமரம், சாம்பல், சோறு, நீறு, பலியிடப்படுவது, பலிச்சக்கிரவர்த்தி, பிச்சை, பூசை, விண்ணோருணவு.

பலிகம் - சுவர், நீர்க்குடம், பளிங்கு, பிச்சைப்பாத்திரம்.

பலிதம் - கனியுள்ளது, சேறு, பலிப்பது, மயிர்நரை, வெம்மை.

பலிதை - கிழவி.

பலித்தம் - இலாபம்.

பலித்தல் - செழுத்து வளர்தல், நயப்படல், வாய்த்தல்.

பலிப்புட்டம் - காக்கை.

பலிமுகம் - குரங்கு.

பலியம் - தளிர், பூ.

பலியயனம் - சேணம்.

பலினம் } காய்த்திருக்கும் மரம்,
பலினி } கோங்குமரம், ஞாழல்.

பலி - எருது, ஒட்டகம், கடா, கோழை, பன்றி.

பலேந்திரன் - பலவான்.

பலதோயம் - ஆதரீயம், சந்தோஷம், பலம், மோக்கம்.

பலோற்பத்தி - மாமரம்.

பல் - ஆயுதக் கருக்கு, நங்கூர நாக்கு, பல, பல்லு.

பல்கல் - பெருகல், வெகுநாள்.

பல்கணி - பலகணி.

பல்காயனார் - ஓரிலக்கண வாசிரியர்.

பல்லகம் - கரடி.

பல்லணம் - குதிரைக்கல்லணை.

பல்லதி - ஓரிராகம்.

பல்லம் - அம்பு, ஓரெண், கரடி, குதிரைக்கல்லணை, சேரான் மரம்.

பல்லவதாரம் - மரக்கொம்பு.

பல்லவம் - இலை, ஓர் தேயம், கிளை, கொப்பு, கையணி, சாயம், தளிர், பதத்திறுேருப்பு, விசாலித்தல்.

பல்லவர் - கீழ்மக்கள், தூர்த்தர், பலர்.

பல்லவி - பல்லவம்.

பல்லவை - இழிவான பொருள், கீழ்மை, பல பொருள்.

பல்லாண்டு - பல வருஷம், வாழ்த்து.

பல்லாதகி - சேங்கொட்டைமரம்.

பல்லார்
பல்லோர் } பலர்.

பல்லி - இடம், இடையரூர், ஒருபெம்பு, கெவுளி, சிற்றூர்.

பல்லிக்கை - சேரான்கொட்டை, பல்லி.

பல்லிப்பூடு - கொல்லைப்பல்லி.

பல்லியம் - சங்கீதம், வாத்தியப் பொது.

பல்லுறுசெங்களை - குதிரைப் பற்பாஷாணம்.

பல்லூகம் - கரடி, பெருவாகை.

பல்வலம் - குளம், வாவி.

பவ - ஓராண்டு.

பவணந்தி - ஓர் நூலாசிரியர்.

பவணை - கழுகு.

பவநாசம் - பாவவிநாசம்.

பவநாசன் - கடவுள்.

பவபூதி-ஐசுவரியம்,ஓர்கவி,சிவன்

பவமானன் - காற்று.

பவம் - அழிவு, இருத்தல், உலகம், காற்று, சதுப்புநிலம், சம்பாத்தியம், சாணி, சிங்கக்கரணம், சுத்தம், தூர்த்தல், நிலைபரம், பலன், பாவம், பிறப்பு, மேன்மை.

பவர்-கவர்,நெருங்குகை,மூடுகை.

பவர்க்கம் - நரகம்.

பவவீதி-முடிவு,முற்றத்துறத்தல்.

பவழம் - பவளம்.

பவளக்காலி - ஓர்புள்.

பவளக்குறிஞ்சி - தீண்டியம்.

பவளக்கொடிமாலை - ஓர் நூல்.

பவளச்சோளம் - செஞ்சோளம்.

பவளநெடுங்குஞ்சியோன் - வயிரவன்.

பவளப்புற்றுப்சாஷாணம் - ஓர் பாஷாணம்.

பவளப்பூண்டு - ஓர் பூண்டு.

பவளப்பூலா
பவளப்பூல் } ஓர்வகைப்பூலா.

பவளமல்லிகை - ஓர்வகை மல்லிகை.

பவளமஞ்சேிலை - ஓர் சரக்கு.

பவளம் - நவரத்தினத்தொன்று.

பவளவங்காரவாச்சி - ஓர்பூடு.

பவனசக்கரம் - இராசிமண்டலம்.

பவனம் - அரமனை, இடம், இராசிப்பொது, ஊர், காற்று, கொழித்தல், தானியந்தூற்றல், தூய்மை, தேவலோகம், நாகலோகம், பாவனை, பூமி, பூனை, வீடு.

பவனன் - காற்று.

பவனாசனம் - பாம்பு.

பவனாத்துமசன் - அக்கினி, அனுமான், வீமன்.

பவனி - உலாப்போதல்.

பவனிக்காதல் - ஓர் பிரபந்தம்.

பவனோதரம் - உள் வீடு.

பவன் - சிவன்.

பவாகை - சுழல்காற்று.

பவாயனை - கங்கை.

பவானி - பார்வதி.

பவி - வச்சிராயுதம்.

பவிகம் - சிலாக்கியம்.

பவிடியம் - எதிர்காலம், செல்வம், பவிடிய புராணம்.

பவித்திரம் - தூய்மை.

பவித்திராரோபணம் - பூனூலணிதல்.

பவித்திரி - தருப்பை.

பவுண்டரம் - வீமன் கையிற்சங்கு.

பவுண்டரிகம் - ஓர் யாகம்.

பவுரி - கூத்தின்விகற்பம்.

பவோற்பவன் - உருத்திரர் பதினொருவரி லொருவன்.

பவ்வம் - கடல், நீர்க்குமிழி, நுரை, பௌர்ணமி, மரக்கணு.

பழகல் - பழகுதல்.

பழகுதல் - இணக்கமாதல், ஊடாடுதல், கற்குதல், பயிலல், வழங்குதல்.

பழக்கம் - அறிமுகம், சாதுத்துவம், பயிற்சி, பரிசனை, வழக்கம்.

பழங்கணாளர் - துன்புறுவோர்.

பழங்கண் - இளைப்பு, ஒலி, துன்பம், பழுது, பயனின்மை, மெலிவு.

பழங்குடி - தொன்மரவு, ஆதிகாலத்தேறியகுடி.

பழஞ்சொல் - முதுசொல்.

பழமலை - விருத்தகிரி.

பழமை - தொன்மை.

பழமொழி - ஓர் நீதிநூல், முதுசொல்.

பழம் - கனி, பலன், முதிர்ந்தது.

பழம்பஞ்சுரம் - ஓர்பண்.

பழம்பாசி - ஓர்பூடு.

பழம்பொருள் - கடவுள், புதையல்.

பழவடியார் - வழித்தொண்டர்.

பழவினை - ஊழ்வினை.

பழனம் - மருதநிலம், வயல்.

பழனி - திருவாவினன்குடி யென்னும் திருப்பதி.

பழி - குற்றம், சலஞ்சாதித்தல், நிந்தை, பழியென்னேவல், பொய், பொல்லாங்கு.

பழிகூறல் - தூற்றுதல்.

பழிச்சல் - துதித்தல்.

பழிச்சொல், பழிமொழி - நிந்தை, புறங்கூறல்.

பழிதீர்த்தல் - குற்றநீங்கல், சமாதானமாதல், பொல்லாங்கு தீர்தல்.

பழிதூறல் - புறங்கூறல்.

பழிதேடுதல் - பொல்லாங்கு செய்தல்.

பழித்தல் - நிந்தித்தல்.

பழிப்பன - பழிக்கப்படுவன.

பழிப்பு - நிந்தை, பழி.

பழு - எணிப்பழு, பழுவென்னேவல், விலா.

பழுது - குற்றம், பொய்.

பழுகை - கயிறு.

பழுத்தல் - முதிர்தல்.

பழுப்பு - அரிதாரம், இலை முதலிய முதிர்தல்.

பழுமரம் - ஆலமரம்.

பழுவம் - காடு.

பழையர் - கள்விற்போர், தொல்லோர்.

பளகம் - பவளம், மலை.

பளகு - குற்றம்.

பளபளெனல் - ஒளிக்குறிப்பு.

பளிக்கறை - பளிங்குமண்டபம்.

பளிங்கு - கண்ணடி, சுக்கிரன், தோணிக்கயிறு, படிகம்.

பளிதம் - ஒரெண், கருப்பூரம்.

பளீரெனல் - ஒளிக்குறிப்பு.

பளு - பாரம்.

பளுவு - பாரம்.

பள்ளம் - ஆழம், குழி, தாழ்ந்த நிலம்.

பள்ளி - அறச்சாலை, அறை, இடைச்சேரி, ஓர்சாதி, கல்லூரி, சிற்றூர், தேவர்கோயில், நித்திரை, பள்ளிக்கூடம், மக்கட்படுக்கை, மருதநிலத்தூர், முனிவர் வாசம்.

பள்ளிகொண்டபெருமாள் - விட்டுணு.

பள்ளியெழுச்சி - ஓர் பிரபந்தம், துயிலெழுப்புகை.

பள்ளு - ஓர்சாதி, பள்ளுப்பாட்டு.

பள்ளை - ஆடு, வெள்ளாடு.

பறங்கிப்பாஷாணம் - ஓர் பாஷாணம்.

பறட்டை - சடைவு, செழிப்பற்றது, தழைவற்றது, வளர்ச்சியற்றது.

பறத்தல் - பறக்குதல்.

பறந்தலை-சுடுகாடு, போர்க்களம்.

பறப்பன்-தேள், விருச்சிகவிராசி.

பறம்பர் - தோல்வினைஞர்.

பறம்பு - மலை, முலை.

பறவை - அவிட்டநாள், சிறகுள்ளன, புள், புள்ளிறகு.

பறவைவேந்தன் - கருடன்.

பறழ் - அணில், குரங்காதிகோட்டில் வாழ் விலங்கு, ஆடு, கீரி, நரி, நாய், பன்றி, புலி, பூனை, மான் முதலியவற்றின் குட்டி, பருப்பு.

பறளிகை, பறளை } குறடு, பற்றிரும்பு.

பறி - பறித்தல், பறியென்னேவல், பொன், மீன்படுக்குங் கருவி, மீன் பெய்யுங்கருவி.

பறிகொடுத்தல் - அழியக்கொடுத்தல், களவுகொடுத்தல்.

பறிக்கல் - இட்டகக்கல்.

பறிதலையர் - சமணரிஞோர்வகுப்பார்.

பறிதல் - பறிகுதல், வெளிப்படல்.

பறித்தல் - களைதல், கள்ளல்.

பறியவிடுதல் - தப்பவிடுதல், நெகிழவிடுதல்.

பறிவு - ஒட்டுகை, பறியல்.

பறிவை-சீந்தில்,நந்தியா வட்டம்.

பறுகு - சிறுதூறு, பறட்டை.

பறுணி - கொள்ளு, சீந்தில், பெருங்குமிழ்,பெருங்குரும்பை.

பறை - இறகு, ஓரளவு, சொல், பறையென்னேவல்,வாத்தியம்.

பறைதல் - சொல்லல், தேய்தல்.

பற்குனன் - அர்ச்சுனன்.

பற்குனி - உத்திரநாள், பங்குனி.

பற்சர் - பகைவர்.

பற்சனம்-நிந்தை.

பற்படகம், பற்படாகம், பற்பாடகம் } ஓர் மருந்துப்பூடு.

பற்பணம்-ஓர் பலம்.

பற்பநாபன் - பதுமநாபன்.

பற்பமாமுனி - முனிவர் முப்பத்தொருவரி லொருவர்.

பற்பம் - அட்டாதச புராணத்தொன்று, தாமரை, தாள், நீறு, பதுமம், விபூதி.

பற்பராகம் - பதுமராகம்.

பற்பல - பலபல.

பற்றலர் - பகைவர்.

பற்றல் - ஆசைப்பெருக்கம், குறித்தல், தொடர்தல், பிடித்தல்.

பற்றறுதல் - அன்புகெடுதல், பாசபந்தம்விடல், முழுதுமற்றுப்போதல்.

பற்றற்றூர்
பற்றற்ஞேர் } முனிவர்.

பற்றுக்கை - அம்புத்திரளைக் கட்டுங்கயிறு, கட்டுங்கயிறு.

பற்றுசு - இருகுறணேரிசை வெண்பாவிற்கிடை வருவது. உலோகங்களைப் பொருத்த விடையிடுந்துண்டு.

பற்றுதது - அலட்சியமானது, போதாதது.

பற்றூர் - பகைவர்.

பற்றிலி - துறந்தோன்.

பற்றினர்-உறவோர், சிநேகிதர்.

பற்று - அறவிட்டது, அன்பு, ஆசை, இசைவு, உலோகங்களைப்பொருத்தும் கூட்டு, சம்பந்தம், சிற்றூர், சேர்வை, தொடர்ச்சி, பசை, பற்றென்னேவல், பிடி, பொத்து, மண்டி, வாரப்பாடல்.

பற்றுக்கால் - தாவரம்.

பற்றுக்கோடு - தஞ்சம், பற்றுக்கோல்.

பற்றுக்கோல் - பற்றுக்கோடு.

பற்றுதல் - அன்பு, ஊன்றிப் பிடித்தல், தீப்பற்றுதல், நம்பிக்கை, பிடித்துக்கொள்ளுதல், பொருந்துதல், வாங்குதல்.

பற்றுவிடு - பாசம் விடல்.

பற்றை - சிறுதூறு, செங்காந்தள்.

பனசம் - பலாமரம்.

பனசை - ஓர் பாம்பு, பனையூர்.

பனந்தாமன் - பனந்தாரான்.

பனந்தாரான் - சேரன், பலபத்திரன்.

பனம்பாரனர் - அகத்தியர் மாணாக்கர்பன்னிருவரிலொருவர்.

பனம்பாரனூர்சூத்திரம் - ஓரிலக்கணநூல்.

பனி - அச்சம், இக்கட்டு, குளிர், துக்கம், துன்பம், நடுக்கம், பயம்,பனி, பனியென்னேவல்.

பனிக்கதிர் - சந்திரன்.

பனிச்சை - காட்டத்தி, மயிர்ச்சுருள்.

பனிதாங்கி - ஓர் பூடு.

பனித்தல் - சொரிதல், தூறல், நடுங்கல், வருந்துதல், விடாமழை பெய்தல்.

பனிப்பகை - சூரியன்.

பனிப்பு - அச்சம், நடுக்கம்.

பனிமலை - இமயமலை.

பனிமொழி - குளிர்ந்தசொல், பெண்.

பனுவலாட்டி - சரச்சுவதி.

பனுவல்-ஆகமம், கல்வி, சொல், நூல், பஞ்சினூல், புலமை.

பனை - அனுடநாள், ஓர் மரம்.

பனைக்கொடியோன் - பலபத்திரன், வீமென்.

பனைசை - பனசை.

பனைமீன் - யானைமீன்.

பனையூர் - ஒரூர்.

பன் - ஓர் நாணல், பத்தின் சிதைவு, பன்மை.

பன்மணிமாலை - ஓர் பிரபந்தம்.

பன்மை - பலவற்றின் றன்மை.

பன்மைப்பால் - பலவின்பால்.

பன்மைப்பொதுப்பெயர் - இருதிணைப் பொதுப் பன்மைப் பெயர்.

பன்மொழித்தொகைத்தொடர் - பலமொழி தொடர்ந்து நிற்குந் தொகைநிலை.

பன்றி - ஓர் கொடுந்தமிழ் நாடு, வராகம்.

பன்றிக்கொவ்வை - ஓர்கொவ்வை.

பன்றித்தகரை - ஓர் தகரை.

பன்றிப்புல் - ஓர்புல்.

பன்னகம் - பாம்பு.

பன்னகவயிரி - கருடன்.

பன்னகாசனன் - கருடன், விஷ்ணு.

பன்னகாபரணன் - சிவன்.

பன்னம் - இலை, ஓலை முதலியவற்றாற் பின்னும்வேலை, பத்திரி, பலாசு, வெற்றிலை.

பன்னல் - சொல்லுதல், தேர்தல் நெருங்கல், பருத்தி.

பன்னாங்குழி - பதினான்குகுழியுள்ள வோர் விளையாட்டுத் தட்டு.

பன்னாசனம் - இலையுணவு, புற்பாய், முகில்.

பன்னாடை - நெய்யரி.

பன்னான்கு - பதினான்கு.

பன்னி - சணல், மனைவி.

பன்னிருபடலம் - அகஸ்தியர் மாணாக்கர் செய்தவோர் புறப்பொருணூல்.

பன்னு - வரி.

பன்னை - ஓர் செடி, கருப்பூரம், சூடன்.

பா

பா - அழகு, ஒரெழுத்து, கடிகாரவூசி, காத்தல், கிழக்குப்பா, சுத்தம், நிழல், நெசவுபா, பஞ்சிநூல், பரப்பு, பாவுதல், பாட்டு, பாவென்னேவல், பிரபை, வெண்பா முதலியவைந்துபா; அஃது—இரண்டு முதலியவடிகளானாக்கப்பட்ட பிரபந்தம்.

பாககம் - பிரிக்குந்தொகை.

பாகசம் - ஓர்வகை யுப்பு, சூலம்.

பாகசாஸநன் - இந்திரன்.

பாகசன் - ஓரிராக்கதன்.

பாகசாஸநி } அருச்சுனன், இந்
பாகசாதனி } திரன்மகன், சயந்தன்.

பாகசாதனன் - இந்திரன்.

பாகசாலை - மடைப்பள்ளி.

பாகண்டன் - வெளி வேஷக்காரன்.

பாகதம் - எல்லாநாட்டு மேலோர் மொழி, பிராகிருதம்.

பாகதாரி - சமையற்காரன்.

பாகதானம் - மடைப்பள்ளி.

பாகபாண்டம் - சமையற் பாத்திரம்.

பாகபுடி - குயவன் சூளை.

பாகப்படுதல் - சமைக்கப்படுதல், பக்குவப்படல், பதப்படுதல்.

பாகம் - அச்சம், ஆக்கை, ஓர் கணிதம், ஓர் பிசாசம், சபித்தல், சமைத்தல், செய்யுள் நடை, தேசபயம், நரைமயிர், நான்குமுழங்கொண்ட வளவு, பக்கம், பக்குவம், பங்கு, பாகை, பாதி, பாத்திரம், பிச்சை, புயம்.

பாகம்பண்ணுதல் - சமைத்தல், பகுத்தல், பக்குவப்படுத்தல்.

பாகர் - யானை, குதிரை முதலியவற்றை நடத்துவோர்.

பாகலம் - குதிரை, யானைநோய்.

பாகலன் - உன்மத்தன்.

பாகல் - ஓர்கொடி, பலா, வெட்பாவட்டை, காரவல்லி.

பாகவதம் - பதினெண்புராணங்களுள் ஒன்று.

பாகவதர் - விட்டுணுசமயத்தவர்.

பாகவிரோதி }
பாகவைரி } இந்திரன்.
பாகசூதனன் }

பாகனம் - ஓர் வருடம்.

பாகன் - சங்கம் வாங்கி, நடத்துவோன், புதன்.

பாகாரம் - பங்கிடுதல், பிரிவு, கணக்கு.

பாகாரி - இந்திரன், வெண்பொன்.

பாகி - நாய், பக்குவன்.

பாகிடுதல் - பங்கிடுதல்.

பாகிநேயன் - மருமகன்.

பாகியம் - புறம்பானது.

பாகியேந்திரியம் - புறவுறுப்பு.

பாகீடு - பங்கீடு.

பாகீரதி - கங்கை.

பாகு - கரை, கற்கண்டு, குழம்பு, சத்தி, சருக்கரை, தலைப்பாகு, பங்கு, பரணிநாள், பாகன், பாக்கு, பால், பிச்சை, புயம்.

பாகுடம் - அரசிறை.

பாகுபடுதல் - பகுக்கப்படுதல்.

பாகுபாடு - பகுப்பு.

பாகுரி - இலக்கணி.

பாகுலம் கார்த்திகை மாதம்.

பாகுவன் - படையன்.

பாகை - தலைப்பா, பகுதி, வட்டத்தின் முந்நூற்றறுபதி லொருபங்கு.

பாகோடன் - சூரியன்.

பாக்கம் - ஊர்ப்பொது, நெய்தனிலத்தூர், மருதநிலத்தூர்.

பாக்கல்
பாக்கல்லு } பாவுகல்.

பாக்கன் - பூனை.

பாக்கானால் - பாவினால்.

பாக்கி - நிலுவை.

பாக்கியசாலி-அதிட்டமுள்ளவன்.

பாக்கியத்தானம் - சென்மத்துக்கு ஒன்பதாமிடம்.

பாக்கியம் - அதிட்டம், கஷாயம், சித்தி, செல்வம், தனம்,பேறு.

பாக்கியலட்சுமி - அட்டலக்குமியி லொன்று; இஃது—செல்வந் தருவது.

பாக்கியவதி - செல்வி.

பாக்கு - எதிர்காலவிடைச்சொல், கமுகு, துவர்க்காய்.

பாக்குக்கட்டுதல்-ஓர்விளையாட்டு.

பாக்குச்சாரம் - பாக்குச்சாறு, பாக்குவெற்றிலைத்தம்பலம்.

பாக்குப்பறித்தல் - மணமுடிக்க வருமணவாளனது சயஞ்சோதித்தல்.

பாக்குப்பை - அடைப்பை.

பாக்குவெட்டி - பாக்குச்சீவுங் கருவி.

பாக்குவெற்றிலைப்பை - அடைப் பை.

பாங்கம் - பலண்டுறுபாஷாணம்.

பாங்கர் - இடம், தோழர், பக்கம்.

பாங்கன் - தோழன்.

பாங்கி - தோழி.

பாங்கு - அழகு, இடம், இணக்கம், உரிமை, தகைமை, பக்கம், மாதிரி, முறை.

பாங்குபண்ணல் - சிறப்பித்தல்.

பாங்குமம் - கருஞ்சீரகம்.

பாசகத்திரி - சமயற்காரி.

பாசகம் - சூதாடுகருவி, மடைத்தொழில், மூலாக்கினி.

பாசகாரன் - காலன், நமன், வருணன், விநாயகன்.

பாசகர் - மடையர்.

பாசகன் - அக்கினி, சமையற்காரன்.

பாசகுசுமம் - இலவங்கம்.

பாசக்கட்டு - பிரபஞ்சக்கட்டு.

பாசக்கயிறு - பாசம்.

பாசங்களினீங்கல் - நிருமலமாதல், இது—சிவனெண்குணத்தொன்று.

பாசஞானம் - உலகஞானம்.

பாசடம் - வெற்றிலை.

பாசடை - பச்சிலை.

சண்டத்துறை - சமயக்கட்டி பாணிலை.

பாசண்டர் - சமயிகள்.

பாசதரன் - காலன், நமன், வருணன், விநாயகன்.

பாசம் - அழகு, அன்பு, இருள், ஊசித்துளை, ஓரளவைப் பிரமாணம், ஓர் படைக்கலம், கட்டு, கண்ணி, கயிறு, கவசம், கற்பாஷணம், சிவனாயுதம், சீரகம், சுற்றம், நமனாயுதம், நூல்.

பாசவைராக்கியம் - பந்தம் வெறுத்தல்.

பாசறை - துன்பம், பகை மேற்சென்றோருறைவிடம்.

பாசறைமுல்லை - ஓர் நூல் அஃது—பாசறைத்தலை மகன் றலைவியை நினைத்தல்.

பாசனம் - உண்கலம், உறவு, மட்கலம்.

பாசன்-இயமன்,சீவன், வருணன்.

பாசாங்குசன் / பாசாங்குசதரன் } விநாயகன்.

பாசி - கரியமணி முதலியன, சடைச்சி, நாய், நீர்ப்பாசி, நெட்டி, வருணன்.

பாசிதம் - ஈவு, பிரித்தானது.

பாசிலை - பச்சிலை.

பாசு - தைரியம், பசுமை, பச்சை, மூங்கில்.

பாசுபதம் - உட்சமயமாறினொன்று, பசுபதிபாணம்.

பாசுபதர் - சிவசமயத்தோர்.

பாசுபதாத்திரம் - சிவனத்திரம்.

பாசுரம் - ஞானப்பாட்டு, வசனம், வாசகநடை, வேய்ங்குழலோசை.

பாச்சல் - எழுச்சி.

பாஞ்சசன்னியம் - ஒடு, சலஞ்சலமென்னுஞ் சங்காயிரஞ்சூழ்ந்த சங்கு, விஷ்ணுவின் சங்கு.

பாஞ்சராத்திரம் - புறச்சமயமாளினொன்று.

பாஞ்சாலம் - ஓர்தேயம்.

பாஞ்சாலி - துரோபதி.

பாடகம் - ஓர் நீட்டலளவை, காலணியிலொன்று.

பாடகன் - பாடுவோன், புகழ் பாடுவோன்.

பாடணம் - பேச்சு.

பாடயம் - சமர்த்து, பாடவம்.

பாடம் - இடையர்வீதி, தெரு, பஞ்சமகாயக்கியம், பாடம், வேத பாடம்.

பாடம்போற்றல் - கேட்டபாடத்தைப் பலகாற் சிந்தித்தல்.

பாடலம் - இளஞ்சிவப்பு, குதிரை, சேரன் குதிரை, பாதிரி மரம்.

பாடலி - கள், பாடலம்.

பாடல் - சங்கீதம், செய்யுள், பாடுதல்.

பாடவம் - களிப்பு, வடவாமுகம்.

பாடவன் } மிதுனவிராசி.
பாடவை }

பாடனம் - ஒத்துப்பாடல், போதித்தல்.

பாடன்மகடூ - பாணர்மகள்.

பாடாணதாரகம் } கல்லுளி.
பாடாணதாரணம் }

பாடாணமுத்தி - கற்போற்கிடக்குமுத்தி.

பாடாணம் } கல், நச்சுச்சரக்கு,
பாஷாணம் } பிறவிப்பாஷாணம்.

பாடாண்டிணை - புறப்பொருட்டிணையினொன்று.

பாடி - ஊர், ஓரிராகம், கவசம், சேரி, நகரம், நாடு, படை, முல்லை நிலத்தூர்.

பாடிதம் } பேச்சு.
பாஷிதம் }

பாடியம் - உரை.

பாடிரம் } ஓர் கிழங்கு, சந்தனம்,
பாடீரம் } துத்தநாகம், முகில், மூங்கிலரிசி, வாதம்.

பாடிலம் - நாடு,

பாடிவீடு - பகைமேற்சென்றோருறைவிடம்.

பாடினி - பாடுவள்.

பாடு - அத்தமனம், இடம், உதயத்துக் கேழாமிடம், ஏழாம்வேற்றுமை யுருபு, ஓசை, குணம், கேடு, பக்கம், படுதல், பாடென்னேவல், பெருமை.

பாடை - ஆசுந்தி, சொல்.

பாட்சிகன் - குருவிவேட்டுவன்.

பாட்டகம் - வைஞூரி.

பாட்டம் - அச்சம், மழை, பலகாரம், பாட்டாசாரியம்.

பாட்டன் - மூதாதை.

பாட்டி - பாடுவள், பெண்பன்றி, பெண்ணாய், பெண்ணரி முதலிய ஒரு சார்விலங்கின் பெண்பொது.

பாட்டியல் - ஓர் நூல், கனம், நயம், தேசிகம், செய்யுளிலக்கணம்.

பாட்டு - இசைப்பா, செய்யுள்.

பாட்டுடைத்தலைவன் } கவி
பாட்டுநாயகன் } யுடைத்தலைவன்.

பாட்பம் - கண்ணீர்.

பாணகோசரம் - சரகதி.

பாணம் - அம்பு, பட்டு, மழைவண்ணக்குறிஞ்சி, வாணம்.

பாணர் - தையற்காரர், புகழ்ந்துபாடுவோர்.

பாணி - இசைப்பாட்டு, ஊர்சூழ்சோலை, கள், காலம், கூத்து, கை, சங்கீதம், சொல், தாமதம், நீர், பலபண்டம், பாகு.

பாணிக்கிரகணம் - கலியாணம்.

பாணித்தல்-பொழுது நீட்டித்தல்.

பாணினி - ஓரிலக்கண நூலாசிரியன்.

பாணினியம் } ஓர் வடமொழி
பாணினீயம் } யிலக்கணம்.

பாண் - இசைப்பாட்டு, கள்.

பாண்செயல் - பாடல்.

பாண்டம் - உடல், பாத்திரப் பொது, மட்கலம்.

பாண்டரங்கம் - சிவன் கூத்து.

பாண்டரங்கன் - சிவன்.

பாண்டரம் - வெண்மை.

பாண்டவர் - பாண்டுபுத்திரர், பஞ்சபாண்டவர்.

பாண்டவர்முன்பிறந்தோன் - கன்னன்.

பாண்டி - ஓர்தேயம், ஓர் பண், ஓர் விளையாட்டு, பன்றைங் குழிப்பலகை, வாகை மரம்.

பாண்டிகன் - பள்ளியெழுச்சி பாடுவோன், வைதாளிகன்.

பாண்டித்தியம் - கல்வித்திறம்.

பாண்டியம் } பாண்டியன்
பாண்டிமண்டலம் } தேயம்.

பாண்டியன் - பாண்டிதேயத்தரசன்.

பாண்டில் - அகல், இடபவிராசி, எருது, கட்டில், கைத்தாளம், நாடு, பண்டி, மூங்கில், வட்டம், வாகைமரம்.

பாண்டு - ஓர்நோய், குருகுலத் தரசருளொருவன், வெண்மை.

பாண்டுமைந்தர் - தருமராசன் முதலைவர்.

பாண்டுரம் - ஓர்நோய், வெண்மை.

பாண்மகள் - பாடுவள்.

பாதகடகம் - பாடகம்.

பாதகம் - பாவம்.

பாதகர் - கீழ்மக்கள்.

பாதக்காப்பு - செருப்பு.

பாதசன் - சூத்திரன்.

பாதசாகை - கால்விரல்.

பாதசாபலியம் - பாததாடனம்.

பாதசாரம் - கிரகநடை.

பாதசாரி - காலாள்.

பாதசாலம் - காலணிப்பொது.

பாததாடனம் - உதை.

பாததீட்சை - திருவடித்தீட்சை.

பாதபம் - மரப்பொது.

பாதபரிசம் - சிதாங்கபாஷாணம்.

பாதப்பிரகாரம் - பாததாடனம்.

பாதப்பிரட்சாளனம் - கால் கழுவுகை.

பாதப்பிரதாரணம் - பாதரட்சை.

பாதமயக்கு - அடிமயக்கு.

பாதம்-இராகு; கால், கிரணம், சம்பவித்தல், சரிதை முதலியநிலை, செய்யுட்களினடி, திடர், நாலி லொன்று, நீர்பங்கு, மரவேர், வட்டத்திலொன்கிலொன்று, வைகறை.

பாதரசம் - இரதம்,

பாதரட்சணம் } தொடுதோல்,
பாதரட்சை } மிதியடி.

பாதரதம் - இரதம், காலாட்படை, தொடுதோல்.

பாதராயணன் - வாதராயணன், வியாசன்.

பாதரோகணம் - அரசமரம்.

பாதலத்தம்பி - நிலக்காளான்.

பாதலம் - கமர், கிடங்கு, குகை, சூரியனிற்குமிராசிக்கு நாலாமிராசி, நரகம், பாதாளம்.

பாதலவாழ்நர் - நரகர்.

பாதவம் - தோப்பு, பாதபடி, மரப்பொது, மரம், மலை.

பாதனம் - இழிதல், துக்கத்தாற்றலைசாய்த்தல், விழுதல்.

பாதாளபேதி - காடி.

பாதாளமூலம் } ஆடுதின்னாப்
பாதாளமூலி } பாளை, கறையான், கோரைக்கிழங்கு, சிறுநெருஞ்சில், சீந்திற்கொடி.

பாதாளம் - கீழுலகம், தாழ்வு, நரகம், பிலம்.

பாதாளலோகம் - கீழுலகம்.

பாதி - அரைவாசி, கணவன், கூறு, தலைவன், பங்கு.

பாதிகம் - சம்பளம்.

பாதிச்சாமம் - பாதியிரா.

பாதிடுதல் - நெருக்கல், பங்கிடுதல், பாதுகாத்தல்.

பாதித்தல் - கூறுசெய்தல்.

பாதிமதி - அர்த்தசந்திரன்.

பாதிரம் - மலையாத்தி.

பாதிரி - பாதிரிமரம்; அதுதசமூலத்தொன்று, மூங்கில்.

பாதிரிவிநாயகன் - பழனி விநாயகன்.

பாதிலி - வலை.

பாதீடு - காத்தல், செறித்தல், பங்கிடுதல்.

பாது - காவல், சூரியன், பங்கு.

பாதுகம் - செங்குத்து, தொடுதோல், மிதியடி.

பாதுகன் - நடைவல்லோன், விழுமியல்புள்ளவன்.

பாதுகாத்தல் - உதவிசெய்தல், காத்தல்.

பாதுகாப்பு - காவல்.

பாதுகாவலன் - காவல் செய்வோன்.

பாதுகிருது - சக்கிலியன்.

பாதுகை - பாதுகம், சிறுசெருப்படை.

பாதேயம் - கட்டுச்சோறு, கன்னியிராசி.

பாதை - அடிப்பாடு, மரக்கலம், மிதவை, முறை, வழிவகை.

பாதோசம் - தாமரை.

பாதோதகம் - கால் கழுநீர், வழியருகிற்றண்ணீர்.

பாதோதம் - தாமரை, முகில்.

பாத்தல்-கொடுத்தல், பங்கிடுதல்.

பாத்தி - சிறுசெய், பங்கு, பயிரிடு மேடை, வீடு.

பாத்திபம்-புருமுட்டிப்பூடு, பூமி.

பாத்திபன் - அரசன்.

பாத்தியம் - உரிமை, சம்பந்தம், பகுக்கப்பட்டது, பங்கு, பாதமலம்பக் கொடுக்குநீர், பாதமலம்புதல்; இது பூசையியல்பினொன்று.

பாத்தியல் - தண்ணீர்விட்டான்.

பாத்தியன் - உரியவன், பிணைகாரன்.

பாத்திரச்சுரை - ஓர் சுரை.

பாத்திரடீரம் - காகம், நீர்நாரை, பாத்திரம்.

பாத்திரபதம் - இரேவதி, உத்திரட்டாதி, புரட்டாசிமாசம்.

பாத்திரபாலம் - சுக்கிரன்.

பாத்திரமாதுரன் - கற்புடையாள் மகன்.

பாத்திரம் - இரப்போர் கலம், இலை, உடல், உண்கலம், எண்சேர்கொண்டது, கட்டளை, தகுதி, புரட்டாதி, மந்திரி, வாய்க்கால்.

பாத்திரவாளி, பாத்திரவான் - தகுதிவான்.

பாத்திராதீரம் - அக்கினி.

பாத்தில் - வீடு.

பாத்து - கஞ்சி, சோறு, நான்கு, பங்கு, பாதி.

பாத்துதல் - பங்கிடுதல்.

பாத்துப்புலு - நாற்பது.

பாத்துமகற்பம்-பிரமனது ஆயுட்காலத்தில் முற்பாதி, வராஹ கற்பமென்பதுமிதுவே.

பாநாள் - அத்தசாமம், பாதிநாள், மத்தியானம்.

பாநிலம் - பானபாத்திரம்.

பாநியாமலகம் - நெல்லியினோர் பேதம்.

பாநுமதி - விக்கிரமார்க்கன் மனைவி.

பாநேமி - சூரியன்.

பாந்தம் - அடியாறு, ஒழுங்கு, பகரவீறு.

பாந்தல் - பதுங்கல்.

பாந்தவம், பாந்தவியம் - அடியாறு, பந்துத்துவம்.

பாந்தள் - பாம்பு.

பாந்தன் - வழிச்செல்வோன்.
பாந்து-அலை, பாந்தென்னேவல்.
பாந்துதல்-பதுங்குதல், மறைதல்.
பாந்தை - அளை, பொள்ளல்.
பாபகம் - பாவம்.
பாபகிரகம் - இராகு, சனி, செவ்வாய்.
பாபக்கிநம் - எள்.
பாபத்தி - வேட்டை.
பாபகிரதி - பொல்லாங்கு.
பாபமார்க்கம் - பாவவழி.
பாபமூர்த்திகள் - வேடர்.
பாபம் - குற்றம், பாவம்.
பாபயோனி - பாவப்பிறப்பு.
பாபரஹிதன் - பாவமற்றவன்.
பாபரோகம் - ஊழ்நோய், கொப்புளிப்பான்.
பாபரோகி - தொழுநோயாளி.
பாபர்த்தி - பாபத்தி.
பாபவியாக்கியானம்-பாப சங்கீர்த்தனம்,
பாபவிமோசனம் - பாவநாசம்.
பாபாத்துமா - பாவி.
பாபநுதி - பாபநிவிர்த்தி.
பாபி - பாவி.
பாபிவிட்டம் - கோழிப்பூடு.
பாபிஷ்டன்-பாவஞ் செய்வோன்.
பாப்பாச்சி - ஓர்வகைத்தொடு தோல்.
பாப்பு - பாத்தல், பிராமணசாதி.
பாமகள் - சரச்சுவதி.
பாமக்கினம் - கந்தகம்.
பாமடந்தை - பாமகள்.
பாமதம் - வாலுளுவை.
பாமநன் - சிரங்குபிடித்தவன்.
பாமம் - கோபம், தினவு, நுரை, பரப்பு, பிரபை.
பாமரம் - அறிவின்மை, இழிமை.
பாமரர் - அரசற்குத்துணைவர், அறிவீனர்.
பாமரன் - அறிவீனன், கீழ்மகன்
பாமன் - சூரியன், மைத்துனன்.
பாமாரி - கந்தகம்.
பாமாலை - ஒருவன் கீர்த்தியைப் புகழ்ந்துதொடுத்தபா.
பாமினி - பெண்.
பாமுதல்வி - சரச்சுவதி.
பாமை-அகங்காரி, காமி, சிரங்கு.
பாம்பரணை - ஓரரணை.
பாம்பாட்டம் - சோவி.
பாம்பாட்டல் - தொந்தரை பண்ணல், பாம்பையாடச்செய்தல்.
பாம்பாட்டி - அரவாட்டுவோன், கௌசிகன்.
பாம்பாட்டிசித்தர் - ஓர் சித்தர்.
பாம்பு - அரவு, ஆயிலியநாள், கரை, வரம்பு.
பாம்புகண்டசித்தன் - கரடி.

பாம்புகொல்லி - ஓர் பூண்டு.

பாம்புக்கல் - பாம்பின் விஷத்தை யிழுக்கும் கல்.

பாம்புக்கண்ணி - சங்கங்குப்பி.

பாம்புக்குத்தச்சன் - கறையான், செல்.

பாம்புதின்னி - முண்ணுயகி.

பாம்புமொச்சை - ஓர்பூண்டு.

பாம்புரி - அகழி, பாம்புச்சட்டை.

பாம்புவிரல் - நடுவிரல்.

பாம்போடுவெடலி - நெடுமெட்டை வடலி.

பாயசம் - பால், பாற்சோறு, பாற்சோற்றிச்செடி.

பாயமுகம் - வடவாக்கினி.

பாயம் - நீர், புணர்ச்சியைக் கருதுங் கருத்து, விருப்பமானது.

பாயல் - மக்கட்படுக்கை.

பாயிகன் - காலாள்.

பாயிரம் - பொழிப்புரை, முகவுரை, வரலாறு.

பாயிழுத்தல் - தோணியிற்பாய் தூக்கிவிடல்.

பாயு } குதம், அது—கருமேந்
பாயுரு } திரிய மைந்திஞென்று.

பாயெடுத்தல் - பாயிழுத்தல்.

பாய் - களப்பாய் முதலியன, கூறைப்பாய், பாயல், பாயென்னேவல்.

பாய்க்கோரை - ஓர்புல்.

பாய்ச்சல் - கீழ்ப்படியாமை, பாய்தல்.

பாய்ச்சல்காட்டுதல் - பாயும்படி ஏவுதல்.

பாய்ச்சல்விடுதல் - குதிரை முதலியவற்றைப் பாயவிடல்.

பாய்ச்சான்போடுதல் - இருவர் கூடி யோருலக்கையை மாறியோச்சல்.

பாய்ச்சி } சொக்கட்டான்
பாய்ச்சிக்கை } முதலியவற்றின் கவறு.

பாய்ச்சு - பாய்ச்சென்னேவல், பிளாச்சு.

பாய்ச்சுதல் - உட்செலுத்துதல், பாயச்செய்தல்.

பாய்ச்சுலக்கை - பாய்ச்சானுலக்கை.

பாய்ச்சுவலை - ஓர்வலை.

பாய்ச்சை - தத்துப்பூச்சி.

பாய்தல் - உருவுதல், ஓடல், குதித்தல், தாண்டல், நீர்முதலிய பாய்தல், பரம்புதல், பறக்குதல், பறிதல், மூட்டல்.

பாய்தூக்கல் - கப்பற்பாயெடுத்தல்.

பாய்த்தல் - பாயச்செய்தல்.

பாய்த்து - பாய்ச்சல், பாய்த்தென்னேவல்.

பாய்த்துதல் - பாய்ச்சுதல்.

பாய்மரம் - கப்பல் முதலியவற்றின் பாய்தூக்குமரம்.

பாய்மா - குதிரை, புலி.

பாய்மாறுதல் - தோணியிற்பாயை மறுபுறமாக்கிவிடல்.

பாய்வலித்தல் - கப்பற்பாயிழுத்தல்.

பாய்விரி - பசிரி.

பார்கஸ்பத்தியம் - தருமநூல் பதினெட்டிலொன்று.

பாரகம் - கடக்குதல், திரைச்சீலை, தோணி, நீந்தல், பூமி.

பாரகர் - கரைபிடித்தவர், தாங்குவோர்.

பாரங்கதன் - கல்வியிற் கரைகண்டவன்.

பாரங்கு - காட்டுப்பருத்தி, சிறுதேக்கு, பாரத்துவாசி.

பாரசவம் - ஆயுதப்பொது.

பாரசவன் - பார்ப்பானுக்குச் சூத்திரச்சி பெற்ற பிள்ளை, வேசிபிள்ளை.

பாரசிகை - பருந்து.

பாரசீகம் பாரசீகதேசம், பாரசீகதேயத்திற் குதிரை.

பாரசுவதன் - மழுவேந்தி.

பாரசுவயம் - பொன்.

பாரச்சுமை - வலுச்சுமை.

பாரஞ்சுமத்தல் - பாரமேற்றுதல்.

பாரணம், பாரணை - உண்டல், உபவாசமிருந்துண்ணல், திருத்திசெய்தல், முகில்.

பாரதகண்டம் - நவகண்டத்தொன்று.

பாரதந்திரியம் - பராதீனம்.

பாரதம்-இரதம், ஐந்தாம்வேதம், பாரத வருடம், பாதரசம், பாரதவமிசத்தரசர்கள் சரித்திரம்; இது—இதிகாசமெனப்படும்.

பாரதர் - குருகுலவேந்தர்.

பாரதவருடம் - பரதகண்டம்.

பாரதன் - குருகுலவேந்தரிலொருவன், கூத்தாடி, தீ.

பாரதாரிகன் - விபசாரன்.

பாரதாரியம் - விபசாரம்.

பாரதி - சரச்சுவதி, சொல், மரக்கலம், பைரவி.

பாரதிகொழுநன் - பிரமன்.

பாரதிதீபம் - ஓர் நிகண்டு.

பாரதிபூசை - சரசுவதி பூசை.

பாரதியாங்கம் - சுடலை.

பாரதூரம் - மிகப்பெரிது, வெகுதூரத்தது.

பாரதேசிகன் - அன்னியன், பரதேசி.

பாரத்துவாசம் - எலும்பு, கரிக்குருவி, காடை, வலியான்.

பாரத்துவாசன் - அகத்தியன், துரோணாசாரியன்.

பாரத்துவாசி - துரோணாசாரி.

பாரபட்சம் - ஓரவாரம்.

பாரபத்தியக்காரன் - அதிகாரி, உத்தியோகத்தன்.

பாரபத்தியம் - அதிகாரம், மேல் விசாரணை.

பாரப்படுதல் - பாரமாதல்.

பாரப்படுத்துதல் - பருப்பித்தல், பாரமாக்குதல்.

பாரப்பழி - மிகு குற்றம்.

பாரமார்த்திகன் - பரமார்த்த யுக்தன்.

பாரமிதம் - மேலானது.

பாரம் - இரதம், ஓர் விளையாட்டு, கடமை, கரைப்பொது, கவசம், கனம், காவுதடி, குதிரைச்சேணம், சுமை, துலாயிருபத்தெட்டுக்கொண்டது; அஃது இரண்டாயிரம் பலங்கொண்டது, தோணி, நிறை, நீர்க்கரை, பருத்திப்பூ, பூமி, பொறுப்பு, பொறுமை, முடிவு, வரம்பு.

பாரம்பரம் } ஐதிகம், கிரமங்கிரமமாய் வருவது, வழி வழியாய் வருவது.
பாரம்பரியம்
பாரம்பரை

பாரம்பரைநியாயம் - கிரமங்கிரமமாய் வருமுறைமை,

பாரவதம் - புறுப்பொது.

பாரவம் - வின்ஞாண்.

பாரவாகனம் - சுமையெடுக்கும் யானம்.

பாரவாகனன் - காக்காரன்.

பாரவி - இவர் கிராதார்ஜுநீயம் செய்தவொரு ஸம்ஸ்கிருதகவி.

பாரவிருதம் - உபகாரம், பலி.

பாரன் - பிருதுசேநன்புத்திரன்; இவன் மகன் நீபன்.

பாராசரம் - ஒருபபுராணம்.

பாராசரி - சுக்கிரன், வியாசன்.

பாராட்டல் - மெச்சுதல், தூறல்.

பாராட்டு - கொண்டாட்டம், பாராட்டென்னேவல், புகழ்ச்சி.

பாராட்டுந்தாய்-ஐவகைத்தாயாரி லொருத்தி.

பாராயணம் - கடந்துபோதல், நியமமாகப் படித்தல், முற்றுற முடித்தல்.

பாராயணி - சரச்சுவதி.

பாராயணிகன் - கற்போன்.

பாராருகம் - மலை.

பாராவதம் - கருங்காலி, கரும்புறா, குரங்கு, புறுப்பொது, மலை.

பாராவளையம் - வளைதடி.

பாராவாரம் - கடல், கடற்றிரை, கரை, சமுத்திரம்.

பாராவாரீணன் - இருபக்கஞ் சாய்ந்தவன்.

பாரி - இராக்காவல், ஓரளவு, கடையெழுவள்ளலிலொருவன், கட்டில், கள்குடிக்கும் பாத்திரம், கோட்டம், சிங்கம், சிறங்கைநீர், நல்லாடை, பாரியென்னேவல், பூந்தாது, பூமி, பெரியோன், மனைவி, யானை கட்டுங்கயிறு.

பாரிகன் - காக்காரன்.

பாரிகாரிகன் - மாலைக்காரன்.

பாரிகாரியம்-கடையம்,பிடித்தல்.

பாரிக்கை - பாரிப்பு.

பாரிசரோ - ஓர் நோய்.

பாரிசம் - ஓர்மலை, திசை, பக்கம்.

பாரிசவாயு - ஓர் நோய்.

பாரிசாதம் - ஐந்தருவி லொன்று, பவளமல்லிகை.

பாரிசேடம் - ஒழிபளவை.

பாரிஷதன் - பார்ப்போன்.

பாரிடம் - பூதகணம், பூமி.

பாரித்தல் - உண்டாக்கல், தோற்றல், பரப்பல்.

பாரியை - பாரி.

பாரை - கடப்பாரை.

பார் - உரோகிணிநாள், தேரின் பரப்பு, பாரென்னேவல், பூமி.

பார்க்கவம் - அட்டாதசபுராணத் தொன்று.

பார்க்கவன் - சுக்கிரன்.

பார்க்கவி - இலக்குமி, சிறுதேக்கு.

பார்த்தல் - காணல், வணங்கல்.

பார்த்தன் - அருச்சுனன், கார்த்தவீரியன்.

பார்த்திவம் - பூமி.

பார்த்திவன் - அரசன்.

பார்த்திப - ஓராண்டு.

பார்ப்பதி - பார்வதி.

பார்ப்பதிகொழுநன் - சிவன்.

பார்ப்பு - கோட்டில் வாழ்விலங்கின் பிள்ளை, தவழ்சாதியின் பிள்ளை, பறவைக்குஞ்சு, மான் கன்று.

பார்மகன்சாரி - பச்சைக்கருப்பூரம்.

பார்மிசையோன் - புத்தன்.

பார்வணம் - ஒவ்வொரு பருவத்திலும் செய்யும் கருமம்.

பார்வதி - பார்ப்பதி.

பார்வல் - பார்ப்பு.

பார்வை - கண், மதிப்பு.

பாலகன் } குழந்தை, பையன், காப்போன்.
பாலன் }

பாலடை - ஓர் செடி.

பாலம் - ஆற்றுப்பாலம், நெற்றி, பூமி, மரக்கொம்பு, மழு.

பாலரசம் - பொன்னிறம்.

பாலர் - இடையர், பிள்ளைகள்.

பாலலீலை-குழந்தை விளையாட்டு.

பாலலோசனன் - நெற்றிக்கண்ணன்.

பாலவம் - கரணம் பதினொன்றினொன்று.

பாலவரை - ஓரவரை.

பாலனம் - பாதுகாப்பு.

பாலனன் - காப்போன்.

பாலி - ஆலமரம், ஓர் பாஷை, கள், பாலியென்னேவல்.

பாலிகை - ஆயுதத்தின் கூர், உதடு, படைவாளின்முட்டி, பெண், முளைதெளிக்கும்பாலிகை, வட்டம்.

பாலித்தல் - ஈதல், காத்தல்.

பாலியம் - இளமை, குழந்தைப் பருவம்.

பாலுகம் - கருப்பூரம்.

பாலை - ஓர்நிலம், ஓர்மரம், ஓர் வகைப்பாடல், கலவியிற் பிரிதல், சிவந்தி, பாலைப்பண், புனர்பூச நாள், பொருள் வயிற் பிரிதல், மிருகசீரிடநாள், வெம்மை.

பாலைக்கருப்பொருள் - பாலைத் தெய்வம்: (துர்க்கை), பாலைக் குடி (வேடர்), பாலைத்தலைவன் (காளை) பாலை நிலத்தூர் (குறும்பு), பாலைநீர், பாலைப் பண், (பஞ்சரம்), பாலைப்பறை, (துடி), பாலைப்புள், (புரு பருந்து, கழுகு) பாலைப்பூ, (பூளை, பாலை, கள்ளி) பாலை மரம் (குரா, மரா) பாலை நிலை மாக்கள்தொழில் (கொள்ளையாடல்), பாலைமாக்களுண், பாலையாழ், பாலைவிலங்கு.

பாலைக்கிழத்தி - துர்க்கை.

பால் - இடம், உரிமை, ஊழ், எழனுருபு, ஐம்பால், குணம், பக்கம், பங்கு, பாதி, பால், வெண்மை.

பால்முடங்கி - ஓர் பூடு.

பாவகம் - இயல்பு, உள்ளன்பு வெளியிடல், கருத்து, கொலை, தோற்றம்.

பாவகன் - அக்கினிதேவன், சொரூபி, தூய்மைசெய்வோன், நெருப்பு.

பாவகி - முருகன்.

பாவசேடம் - ஊழின்மீதி.

பாவட்சயம் - பாவநாசம்.

பாவட்டை - ஓர் செடி.

பாவமூர்த்திகள் - வேடர்.

பாவயோனி - பாவப்பிறப்பு.

பாவலர் - கவிகள், புலவர்.

பாவல் - பாதகுறடு.

பாவனம் - தூய்மை, தூய்மை செய்வது.

பாவனுதீதம் - மனதிற்கெட்டாதது.

பாவனை - எண்ணம், தியானம், பாவனுரூபம்.

பாவாணர் - புலவர்.

பாவாபாவம் - உண்மையின்மை.

பாவார்த்தம் - பதப்பொருள்.

பாவி - தீயோன், பாவியென்னே வல்.

பாவிகம் - இறப்பெதிர்வை நிகழ் வெனக்கூறு மலங்காரம்.

பாவிதம் - கலப்பு, கூட்டு, சம் மதம், பேறு.

பாவினம் - பாக்களின்வகை.

பாவுதல் - தாண்டல், நடுதல், பரப்புதல், விரித்தல்.

பாவை - சித்திரப்பாவை,பதிமை, பெண், மதில்.

பாவோடுதல் - இழையோடுதடி, பாவோடுதல்.

பாழி - அகலம், உரை, ஊர், குகை, சயனம்,தேவர்கோயில், பகைவரூர், பெருமை, மருத நிலத்தூர், முனிவர் வாசம், வலி, விலங்கின் படுக்கை.

பாழ் - சூனியம், பாழென்னே வல், பாழ்த்தல்.

பாழ்வெளி - அந்தரவெளி.

பாளி - அடையாளம், பாசறை.

பாளிதம் - கண்டசருக்கரை, கருப்பூரம், சோறு, பட்டுச்சீலை பாற்சோறு.

பாளை - கமுகு, தெங்கு, பனை முதலியவற்றின் பாளை, பதர், பாலப் பருவத்திற்கு மூன் பருவம்.

பாளையம் - குருநில மன்னரூர், படை, பாசறை.

பாறல் - அடிப்பறிதல், இடப விராசி, எருது, ஓடல், பொதி யெருது, பொருதல், நீங்கல்.

பாறு - பருந்து, பாறென்னேவல், மரக்கலம்.

பாறை - திட்டை.

பாற்கடற்பிறந்தாள் - இலக்குமி.

பாற்கரன் - சூரியன்.

பாற்குனம் - பங்குனிமாதம்.

பாற்குனி - உத்திரநாள்.

பாற்கொவ்வை - ஓர் கொவ்வை.

பாற்சோற்றி - ஓர் பூண்டு.

பாற்பீர்க்கு - வெண்பீர்க்கு.

பாற்று - உரியது.

பாற்றுத்தம் - வெண்டுத்தம்.

பானகியார்-சமையல் செய்வோர்.

பானம் - கள் குடித்தல், நீர்த்த உணவு, பருகுவன.

பானல் - கடல், கருங்குவளை,கள் மருத நிலம், வயல், வெற்றிலை.

பானுள் - பாதிநாள்.

பானி - படை, பருகுவோன்.

பானீயம் - நீர், பருகுவன.

பானு - அரசன், அழகு, அழகுடையான், எசமான், ஒளி, கிரணம், சிற்பநூன் முப்பத்திரண்டிளென்று, சூரியன்.

பானுமைந்தன் - கன்னன், சனி, சுக்கிரீவன், யமன்.

பானுவாசரம்-ஞாயிற்றுக்கிழமை

பானே - மிடா.

பான் - எதிர்கால விடைச்சொல்.

பான்மை - குணம், தகுதியுடைமை, தன்மை, பங்கு.

பி

பி - அழகு, ஓரெழுத்து.

பிகபந்து - மாமரம்.

பிகம் - குயில்.

பிகலி - முள்ளி.

பிகு - பிகுவு, பெலன்.

பிகுதல் - வலிதாக்குதல்.

பிகுவு - இறுக்கம், பெருமை.

பிகுவேற்றுமை - இறுக்கல், பிளிதல், வில் வளைத்தல்.

பிக்கு - ஒவ்வாமை, கலக்கம், சிக்கு, பிசகு.

பிங்கதிருட்டி - சிங்கம்.

பிங்கம் - இளங்கன்று, பொன்மை கலந்த சிவப்பு.

பிங்கலந்தை - ஓர் நிகண்டு.

பிங்கலம் - அரிதாரநிறம், ஆந்தை, கிரி, நவநிதியினென்று, குரங்கு, பிங்கலந்தை, பித்தளே, பொன், பொன்மை நிறம், வடக்கு.

பிங்கலன் - ஓர் நிகண்டாசிரியன், குபேரன், சிவன், சூரியன், தீ.

பிங்கலே - ஆந்தை, சூரியசரம், தசநாடியினென்று, தென்றிசையானைக்குப்பெண்யானே.

பிங்கள - ஓராண்டு.

பிங்களம் - களிம்பு, வஞ்சகம்.

பிங்களே - தென்றிசை யானைக்குப் பெண்யானே, மக்களாயுளின் முப்பருவத்தொன்று.

பிசகு - ஒவ்வாமை, தடை, தப்பிதம்.

பிசகுதல் - தவறுதல், பிசகுபடல், விலகுதல்.

பிசங்கம் - பொன்மை கலந்த சிவப்பு.

பிசண்டம், பிசிண்டம் - வயிறு, விலங்கின் முதுகு.

பிசம் - இறகு, தாமரைத்தண்டு.

பிசனம் - செஞ்சந்தனம்.

பிசி - அரும்பொருள், சோறு, நுண்பொருள், பொய்.

பிசிதம் - ஊன், நீர், வேம்பு.

பிசிதாசனர் - இராக்கதர்.

பிசிர் - தூவல்.

பிசினம் - கோட்சொல்லல்.

பிசினன் - கோளன்.

பிசின் - சாம்பிராணி, நீர்வஞ்சி, பஞ்சினூல், பிசின், வெட்டுக் குருத்து.

பிசு - இரண்டு துலாங் கொண்டது, பருத்தி.

பிசுகம் - உத்தாமணி.

பிசுமந்தம் - பிசிதம், வேம்பு.

பிசுனம் - உலோபம்.

பிசுனன் - உலோபன், கோளன், பொய்யன்.

பிச்சடம் - ஈயம், துத்தநாகம்.

பிச்சம் - ஆண்மயிர், இறகு, பீலிக் குஞ்சம், வெண்குடை.

பிச்சர் - பித்தர், மருளர்.

பிச்சாசரன் - இரப்போர்.

பிச்சாடனம் - இரப்பு.

பிச்சாபாத்திரம்-இரப்போர்கலம்.

பிச்சி - ஓர்கொடி, கொம்மட்டி, சிறு சண்பகம், முல்லை.

பிச்சு - பித்து.

பிச்சை - இரப்பு, ஐயம், ஒழுங்கு, சோற்றுநுரை, பாக்கு, வாழை, வரிசை.

பிஞ்சகம் } இறகு, கொலை.
பிஞ்சம் }

பிஞ்சகன் - கொலைசெய்வோன், சிவன்.

பிஞ்சரம் - அரிதாரம், கருமை கலந்த சிவப்பு, பொன்.

பிஞ்சு - இளங்காய், முற்றுமை.

பிஞ்ஞகம் - தலைக்கோலம்.

பிஞ்ஞகன் - சிவன்.

பிடகம் - நூல், பிச்சை, புத்தாகமம், பெட்டி.

பிடகன் - புத்தன், வைத்தியன்.

பிடகாரி - விடவைத்தியன்.

பிடர் } பிடரி, புறங்கழுத்து.
பிடர்த்தலை }

பிடவம் - பின்புறம், முதுகு.

பிடவு - ஓர் செடி.

பிடாரச்சொல் - வைத்தியச் சொல்.

பிடாரம் - ஓர் வைத்தியவகராதி.

பிடாரி - காளி.

பிடி - ஏலம், கரமுட்டி, கால் விரல் கொண்ட அளவு, கைப்பிடி, நம்பிக்கை, பற்றுகை, பிடியென்னேவல், பெண் கவரி, பெண்ணொட்டகம், பெண்யானை.

பிடிகம் - பிள்ளைக்கைவளை.

பிடிதம் - பிச்சை.

பிடித்தல் - கட்டல், சார்தல், பற்றல்.

பிடியல் - சீலை, நல்லாடை.

பிடுக்கு - பனம்பூ, பீசம்.

பிடுங்கல் - பறித்தல், வியங்கோண் முற்று, பிடுங்கு.

பிடை - மூசை.

பிட்டம் - கடிப்பிரதேசம், சிற்றுண்டி.

பிட்டு - பிட்டம், தினைமா.

பிணக்கம் - பிணங்கல்.

பிணக்கல் - பின்னல்.

பிணக்காடு - சுடுகாடு, யுத்தகளம்.

பிணக்கு - சண்டை, நெருக்கம், பிணக்கென்னேவல்.

பிணங்கல் - குழம்புதல், தெற்றுதல், நெருங்கல், பின்னல், மாறுபடல், வெறுத்தல்.

பிணம் - பிசாசம், பிரேதம்.

பிணம்வீழ்களம் - சுடுகாடு.

பிணர் - கோங்கு, சருச்சரை வடிவு, சமமில்லா வடிவு.

பிணவு - நாய், பன்றி, புல்வாய் இவற்றின் பெண், பெண் பொது, விலங்கின் பெண் பொது.

பிணி - கட்டு, துன்பம், நோய், பிணியென்னேவல்.

பிணித்தல் - கட்டல்.

பிணிப்பு - கட்டு.

பிணிமுகம் - அன்னம், பறவைப் பொது, மயில்.

பிணியன் - நோயாளன்.

பிணியுழற்றல் - நோயால் வருந்தல்.

பிணை - ஆசை, இணை, உடன்பாடு, ஒட்டகம், கவரி, கழுதை, குதிரை, நாய், பன்றி, புல்வாய், யானை யிவற்றின் பெண்; கட்டு, பிணை யென்னேவல், பூமாலை, வதிட் பொருள், மான்.

பிணைத்தல், பிணைப்பு - இணைத்தல், கட்டல், கலத்தல், தொகுத்தல்.

பிணையல் - பின்னியமாலை, மாலை.

பிணைவு - இணைவு கலப்பு, புணர்ச்சி.

பிண்டகன் - பிண்டமிடுவோன்.

பிண்டச்சூத்திரம் - நூற்பொருட் சூத்திரம்.

பிண்டப்புறநடை - புறனடைத் தொகை.

பிண்டப்பொருள் - தொகுதி, பொழிப்புரை.

பிண்டம் - அன்னத்திரளை, இரும்பு, உடல், உண்டை, கந்தவருக்கம், கருப்பத்திலிருக்கும் பிண்டம், கவளம், கால்வட்டத்திருபத்து நான்கிலொன்று, கூட்டம், சோறு, பிச்சை, பிதிர்கட்கிடும் பிண்டம், மூலபதம், விலா.

பிண்டவுரை - பொழிப்புரை.

பிண்டாண்டம் - உடலுமுலகும்.

பிண்டி - அசோகமரம், குந்திருக்கம், கூட்டம், சில்லினுட்சுருள், தினைமா, பிண்டியென்னேவல், பிண்ணாக்கு, பொருட்கை, புனர்பூசம், மருது, மா.

பிண்டிகரணம் } திரட்டு.
பிண்டீகரணம் }

பிண்டிகை - ஆசனம், சில்லினுட் சுருள், மருக்காரை.

பிண்டித்தல் - பிண்டமாக்கல்.

பிண்டிபாலம் - எறியாயுதம்.

பிதற்றல் - குழறல், பலகாற் பேசல், பேசலாலெழுமொலி, மயக்க வார்த்தை, விடாது பேசல்.

பிதா - அருகன், கடவுள், சிவன், தந்தை, பெருநாரை.

பிதாமகன் - பாட்டன், பிரமன்.

பிதிரார்ச்சிதம் - பிதாச்சொத்து, முன்னோரீட்டிவைத்தபொருள்.

பிதிருலகம் } தென்புலம்.
பிதிர்பதம் }

பிதிரெக்கியம் }
பிதிர்மேதம் } சிரார்த்தம்.
பிதிர்யாகம் }

பிதிர் - கதை, காலநுட்பம், திவலை, நொடி, தந்தை வழி வந்த முன்னோர்கள், பராகம், பிதிரென்னேவல், பிதிர்கள், பிதா, யாகமைந்தினென்று, பொடி.

பிதிர்காதகம் - பிதாவைக் கொல்லுகை.

பிதிர்தருப்பணம் - சுட்டுவிரலடி, நீர்க்கடன் முடிக்கை.

பிதிர்தல் - உதிர்தல், சிதறுதல்.

பிதிர்தேவர் - தென்புலத்தார்.

பிதிர்நாள் - அமாவாசியை, இறந்தோர் நாள், மகநாள்.

பிதிர்பதி - யமன்.

பிதிர்பாந்தவன் - பிதிர் வழிச் சுற்றத்தான்.

பிதிர்வசனம் } தந்தை சொல்.
பிதிர்வாக்கியம் }

பிதிர்வனம் - சுடுகாடு.

பிது - இடி.

பிதுக்கல் - பிதுங்கச்செய்தல்.

பிதுரம் - இடி.

பித்தம் - கூத்தின் விகற்பம், மயக்கம், முப்பிணியிலொன்று.

பித்தல் - அருகு, பிடங்கு, விளிம்பு.

பித்தன் - கள்ளன், சிவன், பித்தன், வைரவன்.

பித்தாந்தலைக்கொட்டி - ஓர்பூடு.

பித்தி - அறுகு, ஒதுக்கிடம், சுவர், துண்டு, பங்கு, பிற்றி, வெடிப்பு, சிறு சண்பகம்.

பித்திகை - கருமுகை, சுவர்.

பித்து - பித்தம், பைத்தியம்.

பித்தை - ஆண்மயிர்.

பிந்து - புள்ளி, விந்து.

பிபீலவாதம் - பரமாணு பிரபஞ்சத்துக்குக் காரணமெனல், பைபீலவாதம்.

பிபீலிகை - எறும்பு.

பிப்பலம் - அரசமரம்.

பிப்பிலி - திப்பிலி.

பிம்பகம் - சந்திர சூரிய மண்டலம், கோவைக்கனி.

பிம்பம் - அடையாளம், ஒளுன், கமண்டலம், கோவைக்கனி, சந்திர சூரியாதி மண்டலம், பிரதி பிம்பம், யோநி, வடிவம்.

பிய்தல் - கிழித்தல், பிட்குதல், புய்த்தல்.

பிர - தோற்றம், மிகுதி, மேன்மை, விரைவு இவைகளைக் காட்டுமுபசருக்கம்.

பிரகசனம் - பெருநகை, மகிழ்ச்சி.

பிரகடம் - வெளிப்பட்டது.

பிரகசிதம் - பெருநகை.

பிரகதி - கத்தரிச்செடி.

பிரகத்தம் - விரித்தகை.

பிரகமனம் - தருக்கம், தேற்றம்.

பிரகம்பிதமுகம் - அதிசயத்தாற் சிறிதாய்த்தலையாட்டல்.

பிரகம்பிதம் - அசைவு.

பிரகரணம் - அத்தியாயம், ஒரு விடயமுடிவு, கொல்லல், சமயம், ஞானநூல், முகவுரை, யுத்தம்.

பிரகற்பதி } அட்டாதச தரும
பிரகஸ்பதி } நூலிலொன்று, வியாழம்.

பிரகாசம் - ஒளி, கீர்த்தி, வெயில்.

பிரகாண்டம் - அடிமரம், கொப்பு, மரக்குற்றி, மேன்மை.

பிரகாண்டரம் - மரம்.

பிரகாபணம் - துரத்தல்.

பிரகாமியம் - அட்டபாக்கியத்தொன்று, நிறைவு.

பிரகாரணம் - நன்கொடை.

பிரகாரம் - காயப்படுத்தல், கோயின் முதலியவற்றின் வீதி, தன்மை, மதில், வகுப்பு, வழி, விதம், விசேடணம், வித்தியாசம்.

பிரகி - கிணறு.

பிரகிதம் - அனுப்பியது, ஏவியது, நியமித்தது, வைக்கப்பட்டது.

பிரகிருட்டம் - மேலானது.

பிரகிருதம் - உண்டாக்கப்பட்டது.

பிரகிருதி - அரசாட்சிக்குரிய வுறுப்பேழு; அஃது—அரசன் ஆளுகை செல்லுமிடம், கோட்டை, சேனை, நட்பாளர், பொக்கசம், மந்திரி; ஆதாரம், இயல்பு, காரணம், பகுதி, பகுதி மொழி, பஞ்சபூதம், பிரதானம், பிரபஞ்ச மூலமாயிருக்கும் மாயை, பெண், மறைவு, மாதா, மிருகம், யோநி, வலி.

பிரகீர்ணம் - சாமரம், விசாலம்.

பிரகுஞ்சம் - ஒரு பலம்.

பிரகுடி - காட்டு மல்லிகை, புருவம்.

பிரகுலம் - யௌவனதேகம்.

பிரகேலகம் - இனிப்புப்பதார்த்தம்.

பிரகேலிகை - நொடி.

பிரகோட்டம் } தோண்மூலம்,
பிரகோஷ்டம் } முற்றம்.

பிரகோபணம் - காத்தல்.

பிரகோபம் } கோபம்,
பிரகோபனம் } மூர்க்கம்.

பிரகோவம் - கடுங்கோவம்.

பிரக்கணம் }
பிரக்கரணம் } யாழோசை.

பிரக்கரம் - போர்க்கவசம்.

பிரக்கியம் }
பிரக்கியாதம் } அறிவு.

பிரக்கியாதி - அறிவு, கீர்த்தி.

பிரக்கியாதை - ஒழுகல்.

பிரக்கியானம் - அறிவு.

பிரக்கிரமம் - அடிமை, கிரணம், சமயம், தராசுக்கயிறு, துவக்கம், நெருக்கிடை, பசுக்கட்டுங் கயிறு, பட்சம், பிடித்தல், புயம், போதல், மேற்கொள்ளுதல்.

பிரக்கிராகம் - தராசுக்கயிறு, பிடித்தல்.

பிரக்கிரீடிதம் - கிரீடை.

பிரக்கிரீவம் - கிரீடைமனை, சாளரம், மயிர்நுனி.

பிரக்கினை - அறிவு, உணர்வு.

பிரசகம் }
பிரசகனம் } இலையுணுமிருகம்.

பிரசங்கம்-உட்படுதல், கூட்டம், சொற்பொழிவு, தருக்க தீர்மானம், தெளிவு, நியாயத் தொடர்பு, பற்று, பாயிரம், பிரபலியம், வாக்கியம், வெளிப் படுத்தல்.

பிரசங்கி - ஆடம்பரகாரன், பிரசங்கியென்னேவல், வியாக்கியாணி.

பிரசங்கித்தல் - தீர்மானமெடுத்துக்காட்டல், பிராபலியப்படுத்தல்.

பிரசஞ்சனம் - சேர்த்தல், பாவித்தல், புகழ்ச்சி.

பிரசஞ்சை - புகழ்ச்சி.

பிரசண்டகதி - அதிவேககமனம்.

பிரசண்டமாருதம்-பலத்தகாற்று.

பிரசண்டம் - பெலன், மிகுதி, மிகுவெப்பம், வலி, வீரம், வேகம்.

பிரசண்டவாயு - பலத்த காற்று.

பிரசண்டவேகம் - அதிவேகம்.

பிரசண்டன் - வலியன், வீரன், வேகி.

பிரசத்தம்-சதானந்தம், நித்தியம்.

பிரசத்தி-அருத்தாபத்தி, இசைவு, கிருபை, சுத்தம், பற்று, பிரபை யுள்ளது, முயற்சி, விம்பிக்கத் தக்கது.

பிரசபம் - பிரசவம், வலோற்காரம்.

பிரசமனம் - கொலை, சமாதான மாக்கல்.

பிரசம் - கள், தேனீ, தேன், கூடு, வண்டு.

பிரசயம் - இணைவு, திரட்சி.

பிரசரணம் - ஊர் கொள்ளையிடல், சத்துருவைச் சூழல், சுற்றுதல், சூழப்போதல், பரப்புதல், போதல்.

பிரசரம் - அம்பு, இடம், கதி, சமயம், சிறுகொம்பு, திரள், பெரிதாதல், போர், வழக்கம், வழி, விசாலித்தல்.

பிரசருப்பகன் - அழைக்கப் படாது விருந்துக்கு வந்தவன்.

பிரசகருப்பணம் - விசாலித்தல்.

பிரசலாகம் - பாம்பு, மயிற்றோகை, வில்லாச்சிரமம்.

பிரசலிதம்-அசைத்தல், திரிதல்.

பிரசவபந்தனம் - பூந்தண்டு.

பிரசவம் - சந்ததி, பலம், பிள்ளைப்பேறு, பிறப்பித்தல், பிறப்பு, புட்பம்.

பிரசவவேதனை - பிள்ளைப் பேற்று வருத்தம்.

பிரசவித்தல்-பிறத்தல், பெறுதல்.

பிரசற்பம் - மழலை.

பிரசனம் - கருப்பந்தரித்தல்.

பிரசனிகை - மாதா.

பிரசன் - கணவன்.

பிரசன்னமுகம் - அலர்ந்தமுகம்.

பிரசன்னம் - காட்சி, தெளிவு, தோற்றப்படுதல், பிறப்பு, பெண்குறி.

பிரசன்னன் - கடவுள், தோற்றப் பட்டவன்.

பிரசாகிதம் - நீர்.

பிரசாக்கடை - மதகு.

பிரசானம் - ஆளுதல்.

பிரசாட்சயம் - சனவழிவு.

பிரசாதகை - கோலஞ்செய்வாள், வன்னெல்.

பிரசாதம் - அமுதம், அருள், கருப்பமுண்டாக்கும் மருந்து, களங்கமின்மை, கூட்டம், சுகசீவியம், தெளிவு, நிருமாலியம், நிவேதனப்பொருள், பட்சம், பயன், பவித்திரம், பிரதிஷ்டை, பிரார்த்தனை, பிள்ளைப்பேறு, பேறு, மனவமைதி.

பிரசாததருமம் - புத்திரதருமம்.

பிரசாதனம் - அலங்கரிப்பு, சீப்பு, சுத்தம், சோறு, மனத் திருத்தி.

பிரசாதனம் - வெள்ளி.

பிரசாதி - புணர்ச்சி.

பிரசாபகன் - அரசன்.

பிரசாபதி - அரசன், ஆண்குறி, சூரியன், தீ, பிதா, பிரமன், மருமகன்.

பிரசாரம் - நடை, பரம்புதல், போதல், வழக்கம், வேங்கை மரம்.

பிரசித்தம் - அறிவிப்பு, கீர்த்தி, பராசியம், விளக்கம்.

பிரசிரவணம் - அருவி, சிறுநீர், நீர் நிலை, பொசிதல், மலைமேற் குளம், வேர்வை.

பிரசிரயம் - உபசரணை, உருக்கம், சங்கை, நட்பு.

பிரசீவனம் - பிழைப்பு.

பிரசுரன் - சுக்கிரன்.

பிரசீவனம் - பிழைப்பு.

பிரசுரம் - மிகுதி.

பிரசுரன் - சுக்கிரன்.

பிரசூதி - பிள்ளைப்பேறு.

பிரசேச்சுவரன் - அரசன்.

பிரசோற்பதி } ஓராண்டு.
பிரசோற்பத்தி }

பிரஞ்ஞம் } பிரக்கியானம்.
பிரஞ்ஞானம் }
பிரஞ்ஞை }

பிரஞ்ஞன் } அறிஞன்.
பிராஞ்ஞன் }

பிரஞ்ஞாபங்கம் - அறிவழிகை.

பிரட்சாளகம் } கழுவுகை.
பிரட்சாளனம் }

பிரணயம் - அன்பு, கீழ்படிதல், கலவி கேட்டல், நம்பிக்கை, பழக்கம், மோக்கம்.

பிரணவம் - ஓங்காரம்.

பிரணவரூபம் - கடவுள்.

பிரணிதி - ஒற்றன், கேட்டல், தோழன்.

பிரதக்கணம் - வலம்வரல்.

பிரதமம் - ஆதி, முதன்மை.

பிரதமை - கடுக்காய், முதல், முதற்றிதி.

பிரதம் - ஈகை, கொடை, புகழ்.

பிரதரம் - அம்பு, சுருக்கு, சுழலல்.

பிரதனம் } படையிலோர் தொகை.
பிரதனை }

பிரதாபதி - பாண்டு.

பிரதாபம் - உயர்ச்சி, பிரகாசம், மகிமை, வீரம், வெப்பம்.

பிரதானம் - அங்குசம், கடவுள், கொடை, சுபாவம், புத்தி, முக்கியம், மூலம், விசேஷம்.

பிரதி - பகுதி, பதில், மூலம்.

பிரதிகதி - அதைப்பு.

பிரதிகாந்தி - பிரதிவிம்பம்.

பிரதிகாரம் - பழிவாங்கல்.

பிரதிகிரகணம் - ஈடுவாங்கல்.

பிரதிகூலம் - எதிர், கருமச்சிதைவு.

பிரதிக்கினை - அறிக்கை, தட்டாந்தம், நிர்ணயம்.

பிரதிசாயை - பிரதிவிம்பம்.

பிரதிசிகுவை - உண்ணாக்கு.

பிரதிபட்சன் - எதிரி.

பிரதிபதம் - பரியாயச்சொல்.

பிரதிபந்தம் - தடை.

பிரதிபாலனம் - காத்தல்.

பிரதிபோதம் - கற்பித்தல்.

பிரதிமண்டலம் - சுற்றளவு, மத்தியத்துக்கு விலகிய அயனம்.

பிரதிமூர்த்தி - பிரதிமை.

பிரதிலோமகன் - இழிபுயர் பாண்பெண்ணிற் பிறந்தோன்.

பிரதீகம் - அவயவம், பங்கு.

பிரதீசி - மேற்கு.

பிரதேசம் - இடம்.

பிரதை, பிருதை } அருச்சுனன்றாய்.

பிரதோடம் - அத்த மனத்திற்கு முன்னும் பின்னும் மூன்றே முக்கால் நாழிகை.

பிரத்தம் - எழுத்திலாவோசை.

பிரத்தாரம் - தாளப்பிரமாணம் பத்திலொன்று.

பிரத்தியக்கம், பிரத்தியட்சம் } காட்சி.

பிரத்தியக்கு - மேற்கு.

பிரத்தியங்கம் - உபாங்கம், மூக்கு முதலிய வுறுப்புகள்.

பிரத்தியட்சப்பிரமாணம் - கண் வாய் முதலியவற்றால் அறியும் அளவை.

பிரத்தியயம். ஸம்ஸ்கிருத விகுதி.

பிரயத்தனம் - முயற்சி.

பிரயாகை - திரிவேணி சங்கமம்.

பிரத்தியருத்தம் - எதிர்ப்பயன்.

பிரத்தியவாயம் - எதிர், குற்றம்.

பிரத்தியாகாரம் - அட்டாங்க யோகத்தொன்று.

பிரத்தியாலீடம் - நிலை நான்கினொன்று, அஃது—வலக்கான் முன்வைத்திடக்கான் மண்டலித்து நிற்கு நிலை.

பிரத்தியூஷன் - அட்டவசுக்களி லொருவன்.

பிரத்தியேகம் - தனிமை, பிற நீங்கல்.

பிரபஞ்சமூலம் - மூலப்பிரகிருதி,

பிரபஞ்சம் - உலகம், எத்து, கூட்டம், சேனை, பகிடி, மாயை, லௌகிகம், விசாலம்.

பிரபஞ்சவிருத்தி - தொழில், மாயாவிருத்தி.

பிரபஞ்சவிலாசம் - மாயாகாரிய விநோதம்.

பிரபஞ்சனன் - காற்று.

பிரபதனம் - அழிவு, மரணம், விழுதல்.

பிரபந்தம் - கதை, தொடர்பு, பத்தியச் செய்யுள்.

பிரபம் - தண்ணீர்ப்பந்தல்.

பிரபலம், பிரபல்லியம் } கீர்த்தி, தளிர், முக்கியம், வல்லமை.

பிரபலன் - கீர்த்தியுடையோன்.

பிரபவ - ஓராண்டு.

பிரபன்னம் - அடைதல், ஒதுங்குதல், சேருதல்.

பிரபாகரம் - ஆறு சாத்திரத்தொன்று.

பிரபாகரன் - அக்கினி, ஓர் நூலாசிரியன், சமுத்திரம், சூரியன்.

பிரபாகீடம் - மின்மினி.

பிரபாசன் - அட்டவசுக்களிளொருவன்.

பிரபாணி - உள்ளங்கை.

பிரபாதம் - கரை, செங்குத்து, தெரு, மலையின்வீழருவி, வைகறை.

பிரபாதிகம் - மயில்.

பிரபாவம் - ஒளி, கீர்த்தி, சமணுக்கல், மகிமை.

பிரபு - அதிகாரி, தலைவன், பெருமையிற்சிறந்தோன், வல்லவன்.

பிரபுலிங்கலீலை - ஓர் நூல்.

பிரபை - ஒளி, தண்ணீர்ப்பந்தல்.

பிரபோதம் - அறிவு, ஞானம், தெளிவு, புத்தி.

பிரப்பு - ஒருகலத்திற்பல்லுணப்பரப்பு, பேருண்டி.

பிரமகத்தி - பிராமணரைக்கொன்றதோஷம்.

பிரமகபாலம் - பிரமன் தலையோடு.

பிரமகற்பம் - ஆயிரங் கோடாகோடி.

பிரமகன்னிகை - சரச்சுவதி.

பிரமகாதகன் - பிராமணக்கொலைபாதகன்.

பிரமகாயத்திரி - ஓர் மந்திரம்.

பிரமகைவர்த்தம் - அட்டாதசபுராணத்தொன்று.

பிரமக்கியானம் - பிரமஞானம்.

பிரமசடங்கம் - ஆறங்கத்தோடு செய்யுஞ் செபம்.

பிரமசரியம் }
பிரமசாரித்துவம் } ஆச்சிரம நான்கிளொன்று.

பிரமசாரி - நான்கு வித ஆசிரமிகளிலொருவன், வீட்டுமாசாரி.

பிரமசித்தி - பரஞானசித்தி.

பிரமசூத்திரம் - ஓர் நூல், முப்புரிநூல்.

பிரமசைதன்னியம் - மூலகாரணம்.

பிரமஞானம் - பதிஞானம், சர்வமுங் கடவுள் என்னும் கொள்கை.

பிரமணம் - சுழலல், திரிதல்.

பிரமதண்டம் - யோகதண்டம்.

பிரமதம் }
பிரமத்தம் } சந்தோஷம், வெறி.

பிரமதாதிபன் - சிவன்.

பிரமதானம் }
பிரமஸ்தானம் } கர்ப்பக்கிரகம்.

பிரமபதம் }
பிரமபதவி } பிரமலோகம்.

பிரமபிந்து } ஒருப ஙிடதம்.
பிரமவிந்து }

பிரமபுத்திரி - சரச்சுவதி, சரச்சுவதியாறு,

பிரமபுரம் - சீகாழி.

பிரமமூவி - பிரமி.

பிரமம் - அட்டமணத்தொன்று, அட்டாதசபுராணத்தொன்று, அட்டாதச வுபபுராணத்தொன்று, ஆதிகாரணம், கடவுள், கலக்கம், தத்துவம், தவசு, நடு, மயக்கம், முத்தி, வேதம்.

பிரமயாகம் - பஞ்சமாவெச்சதொன்று, அஃது—வேதமோதல்.

பிரமயோனி - பிராமணப்பிறப்பு.

பிரமரந்திரம் - உச்சித்துவாரம்.

பிரமரம் - வண்டு.

பிரமரி - கூத்தின் விகற்பம், சுழலல்.

பிரமலிபி - பிரமாவினெழுத்து.

பிரமலோகம் - மேலேழுலகிற் சத்தியலோகம்.

பிரமவாதம் - வேதமதம்.

பிரமவித்து - நால்வகை முத்தரிலொருவன்.

பிரமவிந்து - பிரமபிந்து.

பிரமனுள் - உரோகிணிகாள்.

பிரமன் } அயன்.
பிரமா }

பிரமன்றந்தை - திருமால்.

பிரமாஞ்சலி - இரு கையுங் குவித்து நெஞ்சிடை வைத்து வணங்கல்.

பிரமாட்சரம் - மூலவெழுத்து.

பிரமாணம் - அத்தாட்சி, அளவு, அளவை, அனுமானம், ஆணை, இராச கட்டளை, உண்மை, கால அளவை, சாட்சி, மேற்கோள்.

பிரமாணாதீதம் - அளவை கடந்தது.

பிரமாணுபாவம் - அளவின்மை, திருட்டாந்தமின்மை.

பிரமாண்டம் - அட்டாதச புராணத்தொன்று, உலகம், காத்திரம்.

பிரமாதம் - அசட்டை, தவறல், மதீயீனம், வருத்தம், வெறி.

பிரமாதி - ஓராண்டு.

பிரமாநந்தம் - மோட்சவின்பம்.

பிரமாயுதம் - பத்திலட்சம்.

பிரமி - ஓர் பூண்டு, சுழல், தண்டசக்கரம்.

பிரமிதி - அளத்தல், அனுமானம், மெய்யறிவு.

பிரமேயம் - அறியப்பட்டது, நிச்சயிக்கப்பட்டது, பிரமாணிக்கத்தக்கது.

பிரமை - அறியாமை, காட்சி, மயக்கம், மெய்யறிவு.
பிரமோதசி - மல்லிகைக்கொடி.
பிரமோதம் - உவகை.
பிரமோதூத - ஓராண்டு.
பிரம்பு - தேரின் முட்டி, பிரம்பு, வரம்பு.
பிரயத்தனம் - எத்தினம், செயல், முயற்சி.
பிரயாகை - திரிவேணி சங்கமம்.
பிரயாசம் - வருத்தம்.
பிரயாணம் - சா, பயணம், வழிச் செல்கை.
பிரயுதம் - பத்திலட்சம்.
பிரயோகசாரம் - ஓரிலக்கண நூல்.
பிரயோகம் - உதாரணம், உவமானம், ஏவல், சாதனை, செய்தல், செலுத்துதல்.
பிரயோகவிவேகம் - ஓரிலக்கண நூல்.
பிரயோசகம் - பயன்.
பிரயோசனம் - ஏது, நோக்கம், பலன், முகாந்திரம்.
பிரலம்பம் - அசைவு, ஆட்டம், எத்து, கிளை, தளிர், தொங்கல், பூமாலை.
பிரலாபசன்னி - அலறுசன்னி.
பிரலாபம் - பயனில் சொல், புலம்பல்.
பிரலோடனம் - உருளுதல்.
பிரலோபம் - காமம்.
பிரவசனம் - பிரசங்கம்.
பிரவருத்தனம் - தீர்மானம், முயற்சி.
பிரவருத்தி - செய்கை, முயற்சி, யானை மதம், விரிவு.
பிரவாகம் - செயல், நீரோட்டம், வெள்ளம்.
பிரவாளம் - பவளம்.
பிரவிடை - பிரௌடை.
பிரவிருத்தி - வருத்தமானம், வளர்ச்சி.
பிரவேசம் - உட்படல், கூத்தினோர் விகற்பம், தோற்றுதல், மனமொன்றிற்பற்றல், முயற்சி.
பிரளயகாலம் - உலகமுடிவு.
பிரளயகாலருத்திரன் - சங்காரருத்திரன்.
பிரளயம் - அழிவுகாலம், ஓரெண், கற்ப முடிவு, படையிலோர் வகை, வெள்ளம்.
பிரளயாகலர் - மாயை நீத்தோர்.
பிரளயாக்கினி - வடவாமுகம்.
பிரளல் - எழுத்திலாவோசை.
பிராகபாவம் - முன்னின்மை.
பிராகாமியம் - அட்டசித்தியி லொன்று.
பிராகாரம் - மதில்.
பிராகிருதம் - வடமொழி, பொது.
பிராகிருதப்பிரளரம் - உலகநாசம்.

பிராகிருதன் - மானசதீட்சை யில்லாதவன்.

பிராக்ஞியன் } அறிவுடையோன்.
பிராஞ்ஞன் }

பிராக்கு - கழிந்தது.

பிராசயம் - ஆதி.

பிராசனம் - அங்குசம், சோறூட்டல்.

பிராசாதம் - கோயில்.

பிராசீ - கிழக்கு.

பிராசீனம் - பழமை.

பிராசேதசன் - வான்மீகி.

பிராட்டி - பெருமாட்டி.

பிராணத்தியாகம்-உயிர்விடுகை.

பிராணன் - உயிர், இதயத்தியங்கும் வாயு.

பிராணாயாமம் - அட்டாங்க யோகத்தொன்று.

பிராணேசன் - கொழுநன்.

பிராத - விடியல்.

பிராதக்காலம் - விடியல்.

பிராதம்மியம் - முதன்மை.

பிராதுரு - சகோதரன்.

பிராதுருசாயை } சகோதரன்
பிராதுருபத்தினி } மனைவி.

பிராத்தி } அட்டசித்தியி
பிராப்தி } லொன்று.

பிராந்தம் - அருகு, ஓரம், கடை, மதயானை.

பிராந்தி - உறுதியின்மை, கழிதல், சுழலல் தப்பிதம், நிலையின்மை, மயக்கம்.

பிராப்பியம் - பேறு.

பிராமணம்-வேதத்திேனார்பகுதி.

பிராமணன் - அந்தணன்.

பிராமாணியம் - அத்தாட்சி.

பிராமி - சரச்சுவதி.

பிராயச்சித்தம் - சாந்தி, தவம், நிவிருத்தி,

பிராயம் - அளவு, பக்குவம், மரணம், வயது.

பிராய் - ஓர் மரம்.

பிராரத்தம் } ஊழ்.
பிராரத்துவம் }

பிரார்த்தனை - வேண்டுகோள்.

பிராவம் - கொல்லை.

பிராறு - சிந்துபுனல்.

பிரான் - எப்பொருட்கு மிறைவன், கடவுள், சிவன்.

பிரி - பிரிதல், பிரியென்னேவல்.

பிரிதல் - அகலல், குலைதல், கூறுபடல், போகல்.

பிரித்தல் - நீக்கல்.

பிரிநிலை - வேறுபடுத்துநிலை.

பிரிநிலையெச்சம் - பிரிநிலையாக்கு மோரச்சம்.

பிரியகம் - கடம்பு.

பிரியலர் - சிநேகிதர்.

பிரியன் - தலைவன்.

பிரியை - பெண், மனைவி.

பிரிவாற்றாமை - பிரிவைப் பொறுக்கமாட்டாத தன்மை.

பிரீதி - பிரியம்.

பிருகதாரணியம் - ஒருபநிடதம்.

பிருகதி - கத்தரி.

பிருகு - ஓரிருடி, சுக்கிரன்.

பிருகுசுதன் - சுக்கிரன்.

பிருகுடி - புருவம்.

பிருங்கம் - வண்டு.

பிருங்கரீடன் - ஓர் சிவகணத் தலைவன்.

பிருங்கி - ஒரிருடி.

பிருங்கீசன் - சிவன்.

பிருட்டம் - பின்பக்கம்.

பிருதிவி - பஞ்சபூதத்திலொன்று, பூமி.

பிருதிவீசக்கரன்
பிருதிவீபதி
பிருதிவீபாலன் } அரசன், இயமன்.

பிருது - அங்கி, பெரியது.

பிருதுமானம் - யானைக்கொம்பி னடு.

பிருதுவி - பூமி.

பிருதை - பிரதை.

பிருத்தியர் - அடிமைகள்.

பிருந்தம் - கூட்டம், துளசி.

பிருந்தை - சலந்தரன் மனைவி, துளசி, பிருந்தம்.

பிரேதகிரகம் - பிணவறை.

பிரேதபதி - நமன்.

பிரேதம் - தெற்கு, பிசாசம், பிணம்.

பிரேதலோகம் - பிதிருலகம்.

பிரேதவனம் - மயானம்.

பிரேதான்னம் - பிதிருண்.

பிரேயம் - கள்.

பிரை - உரைமோர்.

பிரோகம்
பிரோணம் } சத்தியினியக் கம்.

பிரௌடை - பிரவிடை.

பிலகரி - ஓரிராகம்.

பிலஞ்சுலோபம் - எறும்பு.

பிலத்துவாரம் - கீழுலகிற்குச் செல்வழி, பாதாளவழி.

பிலம்-கீழறை, குகை, பாதாலம், வளை.

பிலவ - ஒராண்டு.

பிலவங்க ஒராண்டு.

பிலவங்கம் - குரங்கு, தேரை, மான்.

பிலவம் - ஆடு, ஓர் பட்சி, ஓர்புல், காப்பு, கீழ்சாதி, குரங்கு, சாயல், தவளை, தெப்பம், நீந்தல், நீர்நிலை, நெட்டிசை, பாய்தல்.

பிலன் - எறும்பு.

பிலிற்றல்
பில்கல் } கொப்பளித்தல், துளித்தல்.

பிலேசயம் - எலி, உடும்பு கீரி, சிங்கம், பாம்பு.
பில்லடை - அப்பவர்க்கம்.
பில்லி - சூனியவித்தை, பூனை.
பிழம்பு - தம்பம், திரட்சி.
பிழா - ஓலைக்கலம்.
பிழார் - இறைகூடை.
பிழி - கள், பிழியென்னேவல்.
பிழிதல் - சாரம் வடித்தல்.
பிழியர் - கள்விற்போர்.
பிழை - குற்றம், பிழையென்னேவல்.
பிழைக்கை - பிழைத்தல்.
பிழைத்தல் - உய்தல், பிழைசெய்தல்.
பிளத்தல்-அறுத்தல், போழ்தல்.
பிளவு - பிளத்தல்.
பிளிர்த்தல் - கொப்புளித்தல்.
பிளிறல் - ஒலித்தல், கிண்டல், பேசலாவெழுமொலி.
பிளிறு - ஆரவாரம், எழுத்திலாவோசை, சேறு, பிளிறென்னேவல்.
பிளிறொலி - யானைவீரிடுமொலி.
பிள்ளை - அன்றிற்குஞ்சு, இளமையோன், கரிக்குருவி, கீரி, குரங்காதி கோட்டில் வாழ் விலங்கின் பிள்ளை, தெங்கின் கன்று, நாகணவாய்ப்புள், பறவைக்குஞ்சு, பன்றி, மான், பூனை முதலியவற்றின் குட்டி, மகன், மரக்கன்று, வயிரவன்.
பிள்ளைத்தமிழ் - பிள்ளைக்கவி.
பிள்ளைப்பிறை - இளஞ்சந்திரன்.
பிற - அசைச்சொல், மற்ற.
பிறகிடல் - பின்றல்.
பிறகு - பின்புறம்.
பிறக்கம் - அச்சம், மரக்கொம்பு.
பிறக்கிடல் - பிறகிடல்.
பிறக்கு - அசைச்சொல், பின்புறம், வழு.
பிறங்கடை - மகன் வழித்தோன்றல்.
பிறங்கல் - உயர்ச்சி, ஒலித்தல், சிறுமலை, துலங்கல், நிறைதல், பெருமை, மலை, மிகுதி.
பிறங்கியல் - முதுகாடு.
பிறங்கு - பிறங்கென்னேவல், விரலிறை.
பிறத்தல் - பிறப்பு.
பிறந்தகம் - தாய்மனை.
பிறந்தவம் - பிறப்பு.
பிறந்தை - பவம், பாவம்.
பிறப்பிடம் - உறைவிடம்.
பிறப்பிலி - சிவன், சகோதரரில்லாதவர்.
பிறப்பிறப்பில்லான் - கடவுள், சிவன்.
பிறப்பு - அச்சம், உற்பத்தி, நெருக்கம்.
பிறப்பொழுக்கம் - வருணத்திற்குரிய நடை.

பிறவினை - காமம், பாவம், பிறகருத்தாவின்புடை பெயர்ச்சியாய்த்தொழிற்படுஞ்சொல்.

பிறழ்தல் - ஒழுங்கின்மையாக, ஒளிசெய்தல், சொல்லுதல், திரும்புதல், நடுக்கம், வெறுப்பு, வேறாகப்போதல்.

பிறனில் - பிறன்மனை, பிறன் மனைவி.

பிறனில்விழையாமை - பிறன் மனையாளிடத்தாசை வைக்காதிருத்தல்.

பிறன் - அயலான், அன்னியன், மற்றையான்.

பிறிதின்கிழமை - தன்னேடொற்றுமையில்லாதது.

பிறிதுபடுபாட்டு - ஓர் சித்திரக்கவி.

பிறிதுவிதி - புறனடை.

பிறிதொடுபடா அன்றன் மதங்கொளல் - நூன் மதமேழினென்று.

பிறை - கரலட்ணத்தொன்று; அஃது—பெருவிரலைப் பின் வாங்கி நீட்டி மற்றைய விரல்களை முன்னாக நீட்டுதலாம். சந்திரப்பிறை, சந்திரப்பிரவை, வாலசந்திரன்.

பிறைசூடி - சிவன்.

பிற்கொழுங்கோல் - உத்திரட்டாதி நாள்.

பிற்றல் - பிறகிடல்.

பிற்றை - பின்னை நாள்.

பிஞகபாணி - சிவன்.

பிஞகம் - சிவன்வில், திரிசூலம், மணிமாலை, மண்மாரி.

பிஞகி - ஓரிருடி, ஒருருத்திரன், சிவன், பெண்ணையாறு.

பிஞகினி - பெண்ணையாறு.

பின் - எழனுருபு, கடை, காரணம், பெருமை, வழி.

பின்பக்கம் - அபரபக்கம்.

பின்பனி - மாசி பங்குனியின் பருவம்.

பின்பிறந்தாள் - தங்கை, இலக்குமி.

பின்பு - பின்.

பின்வாங்கல் - புறங்காட்டல்.

பின்றல் - பிறகிடல்.

பின்றை - பிற்றை.

பின்னேன்றல் - தம்பி.

பின்னகம் - மயிர்முடி.

பின்னம் - உறுப்புக்குலைவு, கிழிவு, தடை, பராகம், பழுது, பிணக்கு, வேற்றுமை.

பின்னர் - பிறகு.

பின்னல் - சடை, பின்னுதல்.

பின்னவர் - சூத்திரர்.

பின்னவன் - தம்பி.

பின்னை - சிறியதாய்.

பின்னிடல் - தோல்வி.
பின்னிளவல் - பின்றோன்றல்.
பின்னை - இலக்குமி, இளையவள், இளையவன், பின்பு.
பின்னைகேள்வன் - திருமால்.
பின்னோன் - பின்னவன்.

பீ

பீ - அச்சம், ஓரெழுத்து, மலம்.
பீக்கருவேல் - ஓர் மரம்.
பீக்கலாட்டம் - பித்தலாட்டம்.
பீக்கிலாத்தி - சங்கங்குப்பி.
பீங்கான் - ஓர் பாண்டம்.
பீசகம் - யானைவிரல்.
பீசதீட்சை - ஓர் தீட்சை.
பீசநியாயம்-மூலநியாயம், வெளிப் படாதது.
பீசம் - அண்டம், ஆண்குறி, சந்ததி, சுக்கிலம், தாடி, தாம ரைப்பூச்சுருள், மூலம், விதை.
பீசாங்குரநியாயம்-காரண காரிய மிதுவதுவென முற்பிற்பாடு வரையறுக்கப்படா வழக்கு.
பீசாட்சரம் - விந்து.
பீசி - பீசத்தையுடையது.
பீச்சல் - கழிச்சல்.
பீச்சாக்கத்தி, பீச்சாங்கத்தி - சிறியகத்தி, பூச் சாத்தி.
பீச்சாங்குழல் - மலசலம்வாங்கும் ஓர் சூத்திரக் குழல்.
பீச்சாங்கொள்ளி - அச்சமுடை யோன்.
பீச்சுவிளாத்தி - ஓர் நாற்றமுள்ள மரம்.
பீச்சைச்கால் - இடக்கால்.
பீச்சைக்கை - இடக்கை.
பீஞ்சல் - பிச்சுவிளா.
பீடகேலி - வேசி.
பீடணம், பீஷணம் - அச்சம்.
பீடம் - ஆசனம், குதம், சிங்கா தனம், தருப்பைப்பாய்.
பீடரம் - தேவாலயம்.
பீடனம் - பீடை, வருத்தம்.
பீடாபஞ்சகம் - ஐவகைப்பீடை.
பீடாபயம் - பீடையினுல் வரும் பயம்.
பீடார்த்தம் - அவத்தை.
பீடிகை - அணிகலச்செப்பு, ஆச னம், நடை, வீதி, பூந்தட்டு, முகவுரை, முனிவரிருக்கு மிடம்.
பீடித்தல் - இரங்கல், துன்புறு தல், துன்புறுத்தல்.
பீடிப்பு - உருக்கம், துன்பம், வருத்துகை.
பீடு - குறைவு, பீடை, பெருமை, வலி.

பீடை-உருக்கம், துன்பம், பாழாதல், முடிமாலை.

பீடைகழித்தல் - துன்ப நிவாரணஞ்செய்தல், மார்கழி மாதத்திற் செய்யுமோர் சடங்கு.

பீடைமாதம் - மார்கழிமாதம்.

பீட்டகம் - உத்தியோகம், தொழில்.

பீட்டன் - இரண்டாம் பேரன், இரண்டாம் பாட்டன்.

பீட்டி - பாட்டி.

பீட்டிகை - பீடிகை.

பீட்டை-இளங்கதிர், இளஞ்சூல்.

பீதகதலி - செவ்வாழை.

பீதகந்தம் - பன்றி.

பீதகம் - அரிதாரம், இருவேலி, சாந்து, தேன், பித்தளை, பொன்னிறம், மஞ்சள்.

பீதகன் - வியாழன்.

பீதகாட்டம் - செஞ்சந்தனக் கட்டை.

பீதகாரகம் - வேங்கைமரம்.

பீதகாபேரம் - பித்தளை, மஞ்சள்.

பீதகாவேரம் - மஞ்சள்.

பீதசந்தனம் - பொதியையிலுண்டான செஞ்சந்தநமரம்.

பீதசம்பகம் - ஓர்வகைச் சண்பகம்.

பீதசாரகம் - வேங்கை மரம்.

பீதசாரம் - சந்தநம், வேங்கை மரம்.

பீதசாரி - சந்தனம்.

பீதசாலம் - பீதசாரம்.

பீதத்தாரு - செம்புளிச்சை, தேவதாரமரம், புன்னை.

பீததுண்டம் - பொன்வாய்ப்புள்.

பீததுத்தை - இளங்கற்று.

பீதத்துரு - மரமஞ்சள்.

பீதத்துருமம் - தேவதாரமரம்.

பீதநம் - அரிதாரம், குங்குமம்.

பீதநி - மூவிலைப்புன்னை.

பீதபத்திரம் - மலைக்காசினி.

பீதபீஜம் - வெந்தயம்.

பீதயூதம் - கொம்மட்டிமாதளை.

பீதமணி - புஷ்பராகம்.

பீதமுண்டம் - தூக்கணங்குருவி.

பீதம் - அச்சம், அரிதாரம், குடித்தல், சந்தனம், சிவப்பு, நால்வகைச்சாந்தினொன்று, நீர், நேரம், பருமை, பொன், பொன்னிறம், மஞ்சள்.

பீதயூதி - செம்மல்லிகை.

பீதராகம்-தாமரைநூல், பொன்மை.

பீதராசாவருத்தம் - ஓர்கல்.

பீதரோசனை - ஓர் மருந்து.

பீதலகம் } பித்தளை.
பீதலம் }

பீதவாசன் - ஸ்ரீ கிருஷ்ணன்.

பீதன் - அச்சமுள்ளோன், சூரியன், தீ.

பீதனேகம் - பீதலகம்.

பீதாபன் - இந்திரன், குபேரன்.

பீதாப்தி - அகத்தியமுனி.

பீதாம்பரம் - கனகவத்திரம், பொற்புடவை.

பீதாம்பரன் - திருமால்.

பீதாம்பரி } பார்வதி.
பீதாம்பரை

பீதி - அச்சம், குடிப்பு, பயம், மதுக்கடை.

பீதிகை - செம்மல்லிகை, பொன்மை, மஞ்சணிறம்.

பீதை - பொன்னிறப்பூவுள மருதோன்றி மரம், மஞ்சள்.

பீத்து - வீம்பு.

பீத்துதல் - வீம்புபேசுதல்.

பீத்தை - நாடா.

பீத்தோல் - மேற்றோல்.

பீநாறி - பெருமரம்.

பீநாறிச்சங்கு - ஓர் செடி.

பீந்தோல் - பீத்தோல்.

பீபசற்சன் } அருச்சுனன்.
பீபற்சு

பீப்பாக்கு - நுங்குப்பாக்கு.

பீமசாசனம் - பெருங்கொலை.

பீமசாசனன் - நமன்.

பீமசேனன் } பீமன், மூன்றும்
வீமசேனன் } ரிக்ஷன் புத்திரன்.

பீமநாதம் - சிங்கம், பேரொலி.

பீமபாகம் - பாகவகையிலென்று.

பீமபீசம் - அண்டநோயிலென்று.

பீமம் - அச்சம், பருமை.

பீமரதன் - (யதுகுலம்) விகிர்தி புத்திரன்.

பீமரதி - பிறந்த எழுபத்தேழாமாண்டினேழாமாதத்தேழாமிரவு.

பீமாதி - ஒருநதி, பீமநதியென்றுங் கூறுவர்.

பீமரம் - யுத்தம்.

பீமரன் - யுத்தவீரன்.

பீமன் } சிவன், விதர்ப்பதேசத்
வீமன் } தரசன், அஷ்டமூர்த்திகளுளொருவன், பாண்டு புத்திரனாகிய வீமசேனன், தமயந்தியின் தந்தை.

பீமாதேவி - துர்க்கை.

பீயாக்குதல் - கெடுத்தல்.

பீயு - ஆந்தை, காகம், காலம், சூரியன்.

பீயூஷம் - அமுதம், இளற்கற்றுப் பால்.

பீரங்கி - பெருவெடிக்குழாய்.

பீரம் - பலம், பீர்க்கு, பூவரசமரம், வாகைமரம், வீரம்.

பீராய்தல் - வீராய்தல்.

பீரிடுதல் - கம்பிபோலப் பாய்தல், நுட்பமா யாராய்தல்.

பீரிறங்கல் - பீரோடல்.

பீரு - அச்சமுள்ளோன், புருவம், புலி, வெள்ளாடு.

பீருகம் - ஆந்தை, கரடி, காடு.

பீருகன் - அச்சமுடையோன்.

பீருகா - பீதரோகிணி.

பீருதந்தி - தண்ணீர்விட்டான் கிழங்கு.

பீருரந்திரம் - அடுப்பு, சூளை.

பீரோடல் } இரத்தமுதலிய
பீரோடுதல் } விசைத்துப் பாய்தல்.

பீர் - அச்சத்தான் வேறுபட்ட நிறம், அச்சம், ஒலிக்குறிப்பு, பசலை, பீர்க்கு, முலைப்பால்.

பீர்க்கு - ஓர் கொடி.

பீர்ச்சாங்குழல் - பீச்சாங்குழல்.

பீர்ச்சுதல் - பீரிடச்செய்தல், மலங்கழித்தல்.

பீர்விழுதல் - பீரிடுதல்.

பீலகம் - எறும்பு.

பீலி - ஆலவட்டம், ஒட்டச்சீட்டு, சிறு சின்னம், பத்தல், பறைப்பொது, பனங்குருத்து, பனங்கிழங்கினுட்குருத்து, பெருஞ்சவளம், பொன், மதில், மயில், மயிற்றோகை, மாதர்காலணியிெனென்று, வாச்சியம், விசிறி.

பீலிக்கண் - மயிற்றோகைக்கண்.

பீலிக்குஞ்சம் - மயிற்றோகையிச் சோப்பி.

பீலிக்குடை - மயற்றோகைக் குடை.

பீலிக்கொட்டு - நீரிறைக்கும் பத்தல்.

பீலித்தண்டு - பிண்டிபாலம்.

பீலிப்பட்டை - பயிர்க்குநீரிறைக்கும் பூட்டை.

பீலு - அச்சமுடையோன், அச்சம், அணு, அம்பு, உள்ளங்கை, ஓர் மரம், செந்து, பூ, யானை.

பீலுகம் - கரடி.

பீலுகன் - அச்சமுள்ளோன்.

பீலுவாதம் - பைபீலவாதம்.

பீலுவாதி - பைபீலவாதி.

பீவரம் - ஆமை, பருமை.

பீவரன் - பருத்தவன்.

பீவரி - அமுக்கரு, பசு, பருவம் பெண், பெண்கிளி.

பீவுரை - பருத்தவன்.

பீவை - நீர்.

பீழித்தல் - வருந்தல்.

பீழை - துன்பம்.

பீளல் - பெண்குறி.

பீளை - கண்ணழுக்கு.

பீளைசாறி - ஓர் பூடு.

பீளைசாறுதல் - கண்ணழுக்குப் புறப்படல்.

பீன் - கருப்பம், சினை, பயிரிளங் கதிர்.

பீறல் - கிழிதல், கிழித்தல், கிழியல்.

பீறு - கிழிவு, குதம், சூறு, பீறென்னேவல்.

பீறுகை - பீறுந்தன்மை.

பீறுதல் - கிழிதல், கிழித்தல், கீறுதல்.

பீற்றல் - கிழியல்.

பீனசக்குறட்டை - ஓர் பூடு.

பீனசம் - ஓர் வியாதி.

பீனம் - பருமை, பாசி, வதக்கம்.

பீனிசம் - பீனசம்.

பீஷணன் - காசிராஜனுடைய கிங்கரன்.

பீஷ்மகன் - விதர்ப்பதேசத்தரசன், உருக்குமிணி தந்தை.

பீஷ்மன் - (குரு) சந்தனுவுக்குக் கங்காதேவியிடத்துப் பிறந்த புத்திரன், வசுக்களுளொருவன்.

பு

பு - அடுப்பின் பின் பக்கம்.

புகட்டல், புகட்டுதல் - உட்புகுதல், உட்புகுத்தல், பருகச்செய்தல்.

புகர்-அழகு, கபிலநிறம், குற்றம், சுக்கிரன், நிறம், பொறி.

புகர்முகம் - யானை.

புகர்வு - சோறு.

புகலல் - புகலுதல்.

புகலி - சீகாழி.

புகலிடம் - ஊர், தஞ்சம், பட்டினம்.

புகலுதல் - சொல்லல்.

புகலூர் - புகலி.

புகல் - உடல், உபாயம், குதிர், சொல், தஞ்சம், புகலென்னேவல், வெற்றி.

புகல்தல் - சொல்லல்.

புகழாப்புகழ்ச்சி - ஓரலங்காரம், அஃது—இகழ்தல்போற் புகழ்தல், மேன்மை.

புகழாளன் - கீர்த்தியுடையோன்.

புகழுவமை - ஒருவமை, உவமையைப் புகழ்ந்துவமிப்பது.

புகழேந்தி - வெண்பாப் பாடுவதிற் சிறந்த ஓர் புலவன்.

புகழ்-கீர்த்தி, புகழென்னேவல்.

புகழ்கூறல் - கீர்த்தியெடுத்துச் சொல்லல்; இஃது—மும்மொழியினொன்று.

புகழ்ச்சி - கீர்த்தி, துதி.

புகழ்ச்சிமாலை - ஓர் பிரபந்தம்.

புகழ்தல் - துதித்தல், பாராட்டுதல்; இஃது—புண்ணியமொன்பதினொன்று.

புகழ்நிலை - ஓரலங்காரம்.

புகழ்ந்தோத்தல் - புகழ்தல்.

புகழ்பொருள் - வன்னிக்கப்படுவது.

புகழ்வீசுசந்திரன் - பச்சைக்கருப்பூரம்.

புகழ்வு - புகழ்ச்சி.

புகழ்வோர் - கீர்த்தியுடையோர், துதிப்போர்.

புகள் - வகத்தி.

புகறல் - குளித்தல், சொல்லல்.

புகாமை - பிரவேசியாமை.

புகார் - கபிலம், கழிமுகம், காவிரிப்பூம் பட்டினம், மந்தாரம், முகில்.

புகிர்புகிரெனல் - ஈரடுக்கொலிக்குறிப்பு.

புகுடி - கழி, புருவம், மாதர் காதணியினொன்று, வாயில்.

புகுதல் - உட்செல்லுதல், சம்பவித்தல், செல்லல், தொடங்கல், நுழைதல்.

புகுதி-சம்பவிப்பு, நுழைவாயில், புகுவென்னேவல், போய்ச்சேர்தல்.

புகுத்தல் } உட்செல்லுதல், போகவிடல்.
புகுத்துதல் }

புகுபுகெனல் - ஈரடுக்கொலிக்குறிப்பு, பனி முதலிய சொரிதற்குறிப்பு.

புகை - தூபம், இஃது—தென்கீழ்த் திசைப்பாலன் குறி, நீராவி, பனிப்படலம், புகையென்னேவல், யோசனை தூரம்.

புகைகட்டுதல் - புகையூட்டுதல்.

புகைகாட்டுதல் - தூபங்காட்டுதல், புகையூட்டுதல்.

புகைக்கப்பல் - புகையின் பலத்தாலோடுங் கப்பல்.

புகைக்காடு - வேக முதலியவற்றின் மிகுதிக்குறிப்பு.

புகைக்குண்டு - நச்சுப்புகை புகைக்குங்குண்டு.

புகைச்சல் - இருள், கண்மங்கலாயிருத்தல், தீய்ந்துபுகைதல், பயிர்தீய்தல், புகையெழும்புதல், பொறாமை, வயிற்றெரிவு.

புகைச்சூழுதல் } புகைபிடித்தல்.
புகைச்சூழ்தல் }

புகைதல் - எரிச்சற்படல், எரிதல், சினக்குறிப்பு, பயிர்தீய்தல், புகையெழல்.

புகைத்தல் - சினக்குறிப்பு, புகையச்செய்தல்.

புகைநாற்றம் - புகைமணம்.

புகைநிற்காரணம் - ஏவட்சாரம்.

புகைப்படலம் - புகைச்செறிவு.

புகைப்பத்தல்-புகையச்செய்தல்.

புகைப்பு - புகைத்தல்.

புகைப்போடுதல் - புகையிடல்.

புகைமடக்கி - வெண்காடல்.

புகைமணம் - புகைநாற்றம்.

புகையாற்றி - ஒட்டறை.

புகையிலை - ஓர் செடி.

புகையுறை - ஒட்டறை.

புகையூட்டுதல்-புகைபிடிப்பத்தல்.

புகையூதுதல் - புகையூட்டுதல்.

புகையூரல், புகையூறல் - புகைப்பற்று, புகைப்பற்றுதல்.

புகைவரி - மணிவரி.

புகைவு - எரிச்சல், புகைச்சல், புகைதல்.

புக்ககம் - மாமியார்வீடு.

புக்கசன் - சண்டாளன்.

புக்கம் - உதயம்.

புக்கல் - புகுதல்.

புக்கனம் - குலைத்தல்.

புக்காரம் - உக்காரம்.

புக்கி - பிராய்மரம்.

புக்கில் - உடல், வீடு.

புக்குப்புக்கெனல்-புகுபுகெனல்.

புக்கை - புற்கை.

புக்தம் - உணவு.

புங்கம் - அம்பு, அம்புக்குதை, உயர்ச்சி, குவியல், சீலை.

புங்கசவனம் - ஐந்தாமாதச் சடங்கு, பூமுடித்தல்.

புங்கலம் - ஆத்துமா.

புங்கவம் - எருது.

புங்கவர் - கடவுளர், வானோர்.

புங்கவன் - கடவுள், குரு, சிறந்தவன், புத்தன், மூர்த்த பாஷாணம்.

புங்கவி-தெய்வப்பெண், பார்வதி.

புங்கவிருகம் - பும்விருகம்.

புங்காபுரி - அம்புகட்டும் கயிறு.

புங்கானுபுங்கம் - அம்பின்பின் அம்பு தொடர்கை, இடையறாது தொடர்ந்துவரல்.

புங்கு - புங்கமரம்.

புங்சவனம் - புஞ்சவனம்.

புங்சின்னம் - பூஞ்சின்னம்.

புசகம் - பாம்பு.

புசகதாரணம், புசகாசனன், புசகாந்தகன் - கருடன்.

புசங்கமம், புசங்கம் - பாம்பு.

புசபலம் - புயவலி.

புசம் - எருவரட்டி, தயிராடை, பதர், பாக்கியம், புயம்.

புசல் - குச்சுமட்டை, பெருங்காற்று.

புசாகண்டம் - கைநகம்.

புசாகோடி - ஏறுமிறங்குமிராசி.

புசாபலம் - புசாகோடிகளைந்த பின்மிஞ்சினதொகை.

புசி - புசியென்னேவல்.

புசிகரணம் - புசித்தல், போசன பதார்த்தம்.

புசிதம் - பூசை.

புசித்தல் - உண்டல்.

புசிப்பன - உண்டற்குரியன.

புசிப்பாளி - அனுபோகி.

புசிப்பத்தல் - உண்பித்தல், வினைப்பயனனுபவிக்கச் செய்தல்.

புசிப்பு - அனுபவிப்பு, புசித்தல், இஃது—மாயை யாக்கை பதினெண்குற்றத்தொன்று, போசனப்பொருள்.

புசியம் - தைமாதம்.

புசுண்டன் - ஓர் யோகி.

புசை - முதலாமிரண்டா மூன்றும் ஏழாம் எட்டாமொன்பதாமிராசி.

புச்சபீதலம் - பின்பக்கம்.

புச்சம் - தோள், மயிற்றோகை, வால்.

புச்சி - எருக்கு, கோழி.

புஞ்சம் - குவியல், திரட்சி, நூற்குஞ்சம்.

புஞ்சலி - வேசி.

புஞ்சவனம் - கருப்பங்கொண்ட மூன்றாந்திங்களில் செய்யுமோர் கருமம், மூன்றுமாதக் கருப்பம்.

புஞ்சிகை - ஆலங்கட்டி.

புஞ்சித்துவம் - சுக்கிலம்.

புஞ்சின்னம் - ஆண்குறி.

புடகம் - இலக்கலம், தாமரை.

புடகரம் - வடநாட்டிலுள்ளவொரு விஷ்ணுஸ்தலம்.

புடகிரீபம் - கழுத்து, சாடி.

புடகினி - தாமரைப்பூங்கொத்து.

புடபாகம் - சமித்தல், சமைத்தல்.

புடபேதம் - ஆற்றுவளைவு, நகரம்.

புடபேதனம் - பட்டினம்.

புடமிடுதல் - பொன் முதலியவற்றைத் தூய்மை செய்தல்.

புடம் - இடம், இலக்கலம், எண்ணலிற்சுத்தம், கண்ணிமை, குடவானது, கௌபீனம், சுத்தம், செம்முதல், படம், புறம், பொன் முதலானவற்றினறவைப்பு, மருந்து சுத்தி, மூடி.

புடம்வைத்தல் - புடமிடுதல்.

புடலித்தல் - திரண்டுதுதல்.

புடவிப்பு - திரட்சி.

புடல் - புடோல்.

புடவி - பூமி.

புடவித்தல் - புடைப்பு.

புடவிமூலம் - சிறுகுரட்டை.

புடவை - சீலை, வஸ்திரம்.
புடனம் - பிளத்தல்.
புடாரமுனை - செந்நாயுருவி.
புடிகை - ஏலம்.
புடிதம் - கரமுட்டி.
புடை - அடிப்பு, இடம், எல்லை, ஏழனுருபு, சார்பு, திரட்சி, பக்கம், பாழி, புடையென்னே வல், போர், மொத்தி.
புடைத்தல் - அடித்தல், குட்டு தல், குத்தல், பறவைசிறகடித் தல், புடைத்தல், வீங்குதல்.
புடைநூல் - சார்புநூல்.
புடைபெயர்ச்சி - அசைவு, கருத் தாவின்றொழில், நிலைமாறல், வழிவிலகல், வினைப்பகுதி புடை பெயர்வு.
புடைபெயர்ச்சித்தொழிற்பெயர்- பகுதியுடன் விகுதிசேர்ந்த தொழிற் பெயர்.
புடைபெயர்ச்சிவினை - விகுதி முதலியபெற்றவினை.
புடவை - சீலை.
புடோட்சம் - வெள்ளைக்குடை.
புடோடல் - (புடல்) ஓர் கொடி.
புட்கரம் - அம்பு, ஆகாயம், ஒன் றிப்பு, ஓர்தீவு, குருகு, கோஷ் டம், தாமரைப்பூ, தீர்த்தம், நிறைவு, நீர், பருந்து, பாண் டத்தின் வாய், யானைத்துதிக் கைநுனி, யுத்தம், வாளலகு, வாளுறை, வாள், வெறி.
புட்கரன் - ஓரரசன்.
புட்கரிணி - தாமரைக்குளம், நாற்சதுரவாவி, பெண்யானை.
புட்கலம் - நவமேகத்தொன்று, நிறைவு.
புட்கலாவர்த்தகம் - பொன் பெய்யும் மேகம்.
புட்கலை, புட்கலாதேவி - ஐயன் றேவிகளி லொருத்தி.
புட்கலைமணாளன் - ஐயனர்.
புட்களம் - நிறைதல், புட்கலம்.
புட்குரல் - காடை, கவுதாரி, கிளி, குயில், அன்னம், கோழி புறா இவைகளின் சையோக விநோதத்தொன்று, பறவைக் குரல்.
புட்டகம் - சீலை.
புட்டம் - காக்கை, சீலை, நிறைவு.
புட்டிகாந்தன் - கணேசன்.
புட்டில் - இறைகூடை, கூறை.
புட்டுத்திருப்பி - ஓர் செடி.
புட்பகம் - இரத்தினகங்கணம், குபேரவிமானம், சகாதேவன் சங்கு, பூந்தேர்.
புட்பகவிமானன் - குபேரன்.
புட்பகீடம் - ஓர்வண்டு.
புட்பகேது - மன்மதன்.
புட்பசயம் - பூங்கொத்து.
புட்பசயனம் - மெத்தை.

புட்பசரன்
புட்பசராசனன்
புட்பசாபன்
புட்பதன்வன் } மன்மதன்.

புட்பசாரம்
புட்பரசம் } பூந்தேன்.

புட்படுத்தல் - பட்சி பிடித்தல்.

புட்பதந்தம் - வடமேற்றிசை யானை.

புட்பத்திரவம்
புட்பத்திராவகம் } பூந்தேன், பூவில் வடிநீர்.

புட்பம் - கண்ணில்விழும்பூ, பூ, மகளிர் சூதகம்.

புட்பரதம் - பூந்தேர், பூந்தேன்.

புட்பராகம் - நவமணியினொன்று.

புட்பரேணு - பூஞ்சுண்ணம்.

புட்பலாவகன் - அந்தணர் பெண்ணுக்குஞ் சாலியனுக்கும் பிறந்து பூக்கொய்து மாலை விற்போன்.

புட்பவிமானம் - புட்பரதம்.

புட்பாசனன் - பிரமன்.

புட்பாசனி - இலக்குமி, சரசுவதி.

புட்பாஞ்சலி - பூச்சொரிந்து வந்திக்கை.

புட்பாத்திரன் - காமன்.

புட்பிதை - இருதுவானவள்.

புணரி - அலைகடல், கடற்றிரை.

புணரியல் - பதங்கள் ஒன்றோடொன்று புணரும் ஆறு உணர்த்துவது.

புணர் - சந்தி, புணரென்னேவல், புதுமை.

புணர்ச்சி - இசைப்பு, கலத்தல், சந்தி, புணர்ப்பு, விகாரம், இயல்பு எனஇருவகை; விகுதி, பதம், உருபு என மூன்று வகையுமாம்.

புணர்ச்சியின்மகிழ்தல் - அகப்பொருட்டுறையினொன்று.

புணர்ச்சிவிகாரம் - சொற்றொடரின் வரும் விகாரம், செய்யுள் விகாரம்.

புணர்தல் - கலத்தல், கூடுதல், சார்தல்.

புணர்த்தல் - இசைத்தல்.

புணர்நிலை - ஓரலங்காரம்.

புணர்ப்பு - உடல், கூடல்.

புணர்வு - இசைவு, இணைவு, உடல், கலத்தல்.

புணை - தெப்பம், புணையென்னேவல, புண் ஊன், மரக்கலம், மூங்கில், விலங்கு.

புண் - ஊன், விரணம்.

புண்டரம் - ஓரிரேகை, கழுகு, நெற்றிக்குறி, வெண்கரும்பு.

புண்டரீகக்கண்ணன்
புண்டரீகாட்சன் } திருமால்.

புண்டரீகம் - கழுகு, தாமரை, தென்கீழ்த்திசையானை, புலி, வண்டு, வெண்கொற்றக்குடை, வெண்டாமரை.

புண்ணியகருமம் - நல்வினை.

புண்ணியகாலம் - சுபகாலம்.

புண்ணியகேந்திரம் - புண்ணிய பூமி.

புண்ணியதிருணம் - வெண்டருப்பை.

புண்ணியத்தானம் - உதயத்திற் கொன்பதாமிடம்.

புண்ணியமுதல்வன் } புத்தன்.
புண்ணியமூர்த்தி }

புண்ணியம் - அறம், தூய்மை, நல்வினை, நல்வினைப்பயன்.

புண்ணியன் - அரசன், அருகன், சிவன், சுத்தன், நீதிமான்.

புண்ணியோதயம் - புண்ணியத் தோற்றம்.

புண்ணீர் - இரத்தம்.

புததாதா - சந்திரன்.

புதர் - புதர், புலவர்.

புதல் - புருவம், புல், பூடு.

புதல்வன் - மகன்.

புதவு - ஓர்வகைப்புள், கதவு, கோபுரவாயிற் கதவுவிட்டுப் புகும் வழி.

புதன் - அறிஞன், ஓர் கிரகம், சந்திரன்மகன், தேவன், புலவன்.

புதா - கொக்கு, மரக்கால்.

புதியர் } விருந்தினர்.
புதியோர் }

புதியனபுகுதல் - முற்காலத்தில் இல்லன சில பிற்காலத்திலக் கணமாதல்.

புதுக்கல் - புதுப்பித்தல்.

புதுமை - அற்புதம், நூதனம், மிகுதி.

புதுவை - புதுச்சேரி.

புதை - அம்பின் கட்டு, அம்பு, அறிவுடைமை, உடல், புதுமை, புதையென்னேவல், மறைவிடம், மறைவு.

புதைத்தல் - சேமித்தல்.

புதையல் - புதைதல், நிட்சேபம்.

புத்தகம் - எழுது புத்தகம், ஏடு, சித்திரப்படம்.

புத்தம் - போசனம், பௌத்த மதம்.

புத்தர் - பௌத்தர்.

புத்தன் - திருமாலவதாரத் தொன்று, புத்தன், பௌத்த சமயி.

புத்தி - அந்தக்கரணநான்கி ளொன்று, அறிவு, கிரகநடை.

புத்திரகாமியம் - மக்களைப்பெறு மாசை.

புத்திரகாமேட்டி - ஓர் யாகம்.

புத்திரத்தானம் - உதயத்திற்கு ஐந்தாமிடம்.

புத்திரன் - மகன்.

புத்திரேடணை - புத்திரவாஞ்சை.

புத்திந்திரியம் - அந்தக்கரண நான்கினுென்று.
புத்தேணுடு - தெய்வலோகம்.
புத்தேளிர் - தேவர், வானோர்.
புத்தேள் - தெய்வம், புதுமை.
புநர்தம், புநர்வசு } புநர்பூசநாள்.
புனிதன், புநீதன் } அரன், அருகன், இந்திரன்.
புந்தி - அறிவு, புதன்.
புந்தியர் - புலவர்.
புந்திவாரம் - புதவாரம்.
புந்திவிந்து - பச்சைக்கல்.
புமான் - ஆண்மகன், ஆன்மதத்துவத்தினென்று.
புயகடி, புயகம், புயங்கம் } பாம்பு.
புயகாசனன், புயகாந்தகன் } கருடன்.
புயகோடரம் - கக்கம்.
புயங்கநிருத்தம் - ஓர் கூத்து.
புயம் - ஒருபக்கம், தோள், முன்கை, வளைந்தவரி.
புயல் - சுக்கிரன், மேகம்.
புயவகுப்பு - கலம்பகத்தினோருறுப்பு.
புயாசலம் - மலையொத்ததோள்.
புய்த்தல் - பயத்தல், பறித்தல்.
புரசம் - அக்கினிதேவன் சங்கு.
புரசு - ஓர் மரம்.
புரசை - புரோசை.
புரட்டல் - புரளச்செய்தல்.
புரட்டாசி - ஓர் மாதம், பூரட்டாதி.
புரட்டை - பூரட்டாதி.
புரணபாவனை - சருவ வியாபகம்.
புரணம் - நிறைவு.
புரணி - ஊன், தோல்.
புரதகனன், புராந்தகன் } சிவன்.
புரத்தல் - காத்தல், கொடுத்தல், நிலைபெறுத்தல்.
புரத்துவாரம் - பட்டணவாயில்.
புரந்தரன் - இந்திரன்.
புரமூன்றெரித்தோன், புரமெரித்தோன் } சிவன்.
புரம் - இராசதானி, உடல், ஊர், நகரம், மருதநிலத்தூர், முன்.
புரவலன் - அரசன், காத்தளிப்போன், கொடையாளன்.
புரவி - அசுவதிநாள், குதிரை.
புரவிவட்டம் - குதிரை வையாளி வீதி.
புரவு - கொடை.
புரளல் - புரளுதல், புரளி, குழப்பம், சண்டை, தப்பிதம், துடுக்கு, பொய்.
புராகிருதபாவம் - ஊழ்வினை.
புராகிருதம் - முன்செய்தது.

புராடம்
புராடனம் } நகருட்சஞ்சாரம்.

புராணம் - கதை, காந்தமுதலிய புராணம், பழமை.

புராதனம் - புராணம்.

புராந்தகன்
புராரி } சிவன்.

புரி - ஆசை, இராசதானி, ஊர், கட்டு, கயிறு, கோட்டை, சங்கு, சுருள், புரியென்னேவல், மருதநிலத்தூர்.

புரிசை - மதில்.

புரிதல் - செய்தல், விரும்பல்.

புரிந்தோர் - சிநேகிதர்.

புரிமுகம் - கோபுரம்.

புரியட்டகம்
புரியட்டகாயம் } சூக்கும தேகம்.

புரியம் - கூத்து.

புரிவு - அன்பு, ஆசை.

புரீடம் - மலம்.

புரு - ஓரரசன், ஓர் தைத்தியன்.

புருகுற்சன் - ஓர் சக்கரவர்த்தி.

புருகூதன் - இந்திரன்.

புருடநாள் - இரேவதிநாள்.

புருடபரிசம் - மைதுனம்.

புருடமேதம் - மக்கட்பலி.

புருடம் - ஆளுயரம்.

புருடர் - ஆடவர்.

புருடவாகனன் - குபேரன்.

புருடன் - ஆன்மதத்துவத் தொன்று, ஆன்மா, சீவன், தசநாடியினொன்று, தலைவன், மக்களிலாண்.

புருடார்த்தம் - அறம், இன்பம், மக்களுக்குரியது, வீடு.

புருடோத்தமன் - திருமால்.

புருவமத்தியம் - ஆக்கினை.

புருவம் - குதிரை, புருவம்.

புருவை - ஆடு, இளமை.

புரூணகத்தி - சிசுவதை.

புரூணகம்
புரூணம் } கருப்பசிசு.

புரூரம் - புருவம்.

புரூரவன் - ஓர் சக்கரவர்த்தி.

புரை - உட்டுளை, உயர்ச்சி, உவமை, குற்றம், புரையென்னேவல்.

புரைதல் - போலுதல்.

புரைய - உவமைச்சொல்.

புரையுள் - வீடு.

புரையோர் - திருடர்.

புரோகதி - நாய், முன்னடப்பது.

புரோகிதன் - இந்திரன், குலகுரு, வருங்காரியஞ் சொல்வோன்.

புரோசர் - குறுநிலவேந்தர்.

புரோசை - யானைகட்டுங் கயிறு.

புரோட்சணம் - தெளித்தல்.

புரோற்கிதம் - சிவாகமமிருபத்தெட்டினொன்று.

புலங்கொளி - பொறி.

புலத்தல் - புணர்ச்சிக் கமையா ததுபோல முறைப்படல்.

புலத்தியன் - ஓரிருடி.

புலத்தியன்மைந்தர்-இராவணன், குபேரன் முதலோர்.

புலத்தியன்மைந்தன் - வியாசன்.

புலப்படுத்தல் - உணரச்செய்தல்.

புலமை - கல்வி, பாண்டித்தியம்.

புலமையர் } புலவர்.
புலமையோர் }

புலம்-அறிவு, இடம், ஒலிமுதலேம் புலம், திசை, வயல், விடயம்.

புலம்பல் - அழுதல், ஆரவாரம், இரங்கல், ஒலித்தல்.

புலம்பன் - நெய்தநிலத்தலேவன்.

புலம்பு - அச்சம், ஒலி, கலக்கம், சத்தம், தனிமை, துன்பம், புலம்பல், புலம்பென்னேவல்.

புலம்புதல் - அழுதல், ஒலித்தல், பிதற்றுதல்.

புலரி - விடியல்.

புலருதல் } காய்தல், வாடல்,
புலர்தல் } விடிதல்.

புலர்த்தல் } காய்ச்சல்,
புலர்த்துதல் } பூசுதல்.

புலர்வு-உலருகை, காய்வு, விடிவு.

புலவர் - அறிஞர், கம்மாளர், கவிவாணர், குறுநிலமன்னர், கூத்தர், தேவர், புதன், பொருநர்.

புலவன் - அருகன், அறிஞன், கம்மாளன், கவிவாணன், கூத்தன், தேவன், தேவேந்திரன், புதன், போர்வீரன், முருகன், வாஞேன்.

புலவா - பூலா.

புலவி - ஊடலின் முதிர்தல், கூடியுங் கூட்டமின்மை.

புலவிநீட்டம் - ஊடல்.

புலவு - ஊன், நரகம், புலம், புலால், மணம்.

புலன் - அறிவு, இடம், இந்திரிய வுணர்ச்சி, கருத்து, திசை, வயல், வனப்பெட்டிஞென்று.

புலன்வனப்பு - இயற்சொல்லா னியன்ற பொருடொன்றற் கூறல்.

புலன்வென்ருேர் - முனிவர்.

புலாகஜை - இந்திரதேவி.

புலாகன்-இந்திரன், மகேச்சுரன்.

புலாகம் - அழகு, சுருக்கம், சோறு, பதர், மீன்.

புலாகி - மரம்.

புலாதி - கவலே, பிராந்தி.

புலால் - ஊன், மீன், வெடில்.

புலால்கட்டி - கடலின்மீன், முதலியவற்றிறைத்தடுப்போன்.

புலால்கட்டுதல் - மீன் முதலியவற்றைத்தடுத்தல்.

புலானீர் - இரத்தம்.

புலான்மறுத்தல் - ஓர் நூல்.

புலி - அண்ணு, ஓர் மிருகம், சிங்கவிராசி, நால்வகைச்சாந்தி ஞென்று, வேங்கைமரம், வியாக்கிரபாதர்.

புலிக்கண்கள் - கோமேதகம்.

புலிக்கொடியோன் - சோழன்.

புலிங்கம் - ஊர்க்குருவி, தீப்பொறி.

புலித்தடுக்கி } கற்ருழை, சிங்
புலித்தொடக்கி } கிலி, தொடரி.

புலித்தோலுடையோன் - சிவன்.

புலிநகக்கொன்றை - ஓர் மரம்.

புலிந்தம் - தேயமைம்பத்தாறிஞென்று, அது-மிலேச்சதேசம்.

புலிந்தன் - மிலேச்சன்.

புலிபம் - பொன்ஞவிரை.

புலிப்பாணி - வியாக்கிரபாதர், போகருடைய சீடர்.

புலிமுகச்சிலந்தி-ஓர் விஷவண்டு.

புலிமெய்ச்சிலந்தி - புலிமுகச்சிலந்தி.

புலியுகிலி - புலிதொடக்கி.

புலியுறுமி-ஓர் பறை, கிறிச்சான்.

புலியூர் - சிதம்பரம்.

புலியேறு - ஆண்புலி.

புலிரிகம் - பாம்பு.

புலு - பத்து.

புலுட்டுதல் - கருக்குதல், கடல்.

புலுட்டை - தழைவற்றது, புலுண்டனிறம், புலுண்டின் தன்மை.

புலுண்டல் } கருகல், கருகி
புலுண்டுதல் } னது, கருகுதல்.

புலுதம் - அளபெடை, காலதசப்பிரமாணத்தொன்று, அஃது—இலகு மூன்று கொண்டது, குதிரை முழுவோட்டம்.

புலை - ஊன், புலால், புன்குணம், பொல்லாங்கு.

புலைச்சி - எவட்சாரம், புலைப்பெண்.

புலைச்சேரி - பறைச்சேரி.

புலைஞர் - ஈனர், சண்டாளர், பறையர், மறவர், வேடர்.

புலைத்தனம் - கொலைக்குணம்.

புலைத்தொழில் - புன்றொழில், கொலைத்தொழில்.

புலைப்பாடி - புலைச்சேரி.

புலைமகள் - புலைப்பெண்.

புலைமகன் - புலையன்.

புலைமை-கீழ்மை, புலைத்தன்மை.

புலையர் - கீழ்மக்கள், சண்டாளர்.

புலையன்-கீழ்மகன், சண்டாளன்.

புலைவினைஞர்- இழிதொழிலாளர்.

புலோமசித்து - இந்திரன்.

புலோமசை - இந்திராணி.

புலோமபிதன் - இந்திரன்.

புலோமன் - இந்திராணி தந்தை, ஓரரக்கன்.

புலோமாரி - இந்திரன்.

புலோமை - ஓரசுரன்.

புல் - அற்பம், அனுடநாள், இழிவு, கல்வி, புனை, புலி, புல்லு, புல்லெனவேல், புன்மை.

புல்கல் } புல்லல்.
புல்குதல் }

புல்மரம் - தென்னமரம்.

புல்மானம் - புன்மானம்.

புல்லகண்டம் - சருக்கரை.

புல்லகம் - நுதலணி.

புல்லணர் - தாடி.

புல்லம் - இடபவிராசி, எருது, புட்பம், மலர்ந்தது.

புல்லரிகம் - பாம்பு.

புல்லர் - கீழ்மக்கள், வேடர்.

புல்லல் - அமைதல், கூடுதல், கொண்டு முடிதல், சார்தல், புணர்தல், பொருந்தல்.

புல்லறிவாளர் - அறிவீனர்.

புல்லறிவாண்மை அறிவின்மை.

புல்லறிவு - அறிவின்மை, கீழ்மையான வறிவு.

புல்லன் - அறிவீனன், கீழ்மகன், சிறியவன்.

புல்லாங்கழி } ஒரு துகுழல்.
புல்லாங்குழல் }

புல்லாந்தி - பூவ்.

புல்லாமணக்கு - ஓராமணக்கு.

புல்லாமொய்ச்சி - புற்பற்றை.

புல்லார் - பகைவர்.

புல்லி - புறவிதழ், பூவினிதழ்.

புல்லிதம் - புறவிதழ்.

புல்லிங்கம் - ஆண்பால்.

புல்லிதழ் - பூவின் புறவிதழ்.

புல்லிது - புன்மைத்து, பூ.

புல்லியம் - புளிநறளை.

புல்லியர் - கீழ்மக்கள்.

புல்லியன் - புன்மையுடையோன்.

புல்லு - புதர்.

புல்லுக்கற்றை - புற்கற்றை.

புல்லுதல் - இணங்குதல், தழுவுதல், புணர்தல்.

புல்லுநர் - சினேகிதர்.

புல்லுருவி - குருவிச்சை.

புல்லுவர் - வேடர்.

புல்லூதியம் - பனை.

புல்லூரி - குருவிச்சை.

புல்லெடுத்தல் - புன்மிகுத்தல்.

புல்லெனல் - ஒளிமழுங்கல், பொலிவழுதல்.

புல்லை - மங்கலான மஞ்சள் நிறம், வெண்மை கலந்த சிவப்பு.

புல்வரகு - ஓர் பயிர்.

புல்வாடி-புற்கற்றையடுக்கியவாடி.

புல்வாய் - கருமான், கலைமான்.

புல்வாரி - புல்லுச்சத்தகம்.

புல்விரியன் - ஓர் பாம்பு.

புல்வெட்டிப்பல்-மாட்டின் முன் வாய்ப்பல்.

புவர்லோகம் - மேலேழுலகி ஞென்று.

புவனகோசம் - பூகோளம்.

புவனசாத்திரம் - பூமிசாத்திரம்.

புவனத்திரயம் - திரிலோகம், அது—சுவர்க்கம், மத்தியம், பாதாலம்.

புவனநாயகர்-புவனகர்த்தாக்கள்.

புவனமெண்வச்சிரம் - காலமீர்ப் படிகம்.

புவனம் - அப்பியாசம், ஆகாயம், நீர், பதினன்குலகப்பொது, பூமி.

புவனி - பூமி.

புவனியு - எசமான், முச்சுடர்.

புவனேசுவரி - பார்வதி.

புவனை - ஓர் சத்தி.

புவி - பூமி.

புவிதவிருக்கம் - பெருவாகை.

புவிபாத்திரம் - மண்கலம்.

புவிபீரு - தண்ணீர்விட்டான்.

புழக்கம் - அறிமுகம், தோற்றம், பழக்கம்.

புழங்குதல் - வழங்குதல்.

புழல் - ஓரூர், சலதாரை, துளையுடைப்பொருள்.

புழு - கிருமி, புழுவென்னேவல்.

புழுகு - நாவிப்புழுகு.

புழுகுசட்டம் - ஓர்வாசனைப் பண்டம்.

புழுகுசம்பா - ஓர் நெல்.

புழுகுபிள்ளை, புழுகுபூனை - நாவிப்பிள்ளை.

புழுக்கடி - புழுக்குத்தல்.

புழுக்கம்-உட்டணம், பொருமை, வன்மம், வெப்பம்.

புழுக்கல் - அவித்தல், சோறு, முதிரைப்பண்டம்.

புழுக்கு - அவிப்பு, புழுக்கென்னேவல்.

புழுக்குதல் - அவித்தல்.

புழுக்குத்தல் - புழு வரித்தது, புழுவரித்தல்.

புழுக்குத்தி - கொண்டலாத்தி.

புழுக்குத்துதல் - புழுவரித்தல்.

புழுக்கூடு - புழுவிருக்கும் பை.

புழுக்கை - அடிமை, ஆடுமுதலிய வற்றினொரு.

புழுக்கைச்சி - அடிமைப்பெண்.

புழுக்கையன் - அடிமை.

புழுக்கொடியல்-அவித்த ஒடியல்.

புழுங்கொல்லி - வண்டுகொல்லிச் செடி.

புழுங்கலரிசி-அவித்த நெல்லரிசி.

புழுங்கல்-உட்டணமாதல், சினக் குறிப்பு, புழுக்கின தானியம்.

புழுங்குதல் - அவிதல், உட்டணித்தல், கோபித்தல்.

புழுதி - பராகம்.

புழுதிப்படலம் - பூதூளிச்செறிவு.

புழுதிமாயம் - காரியஞ் சரிக்கட்டினதுபோற் காட்டல்.

புழுதியாடல் - புழுதிகுளித்தல், புழுதியாக்கல், இஃது—எண்வகை நாணத்தொன்று.

புழுதியார்த்தல் - பூதூளி பரப்புதல்.

புழுதிவிதைப்பு - ஈரமில்லா விதைப்பு.

புழுது - அம்புக்குதை.

புழுத்தல் - புழுவுண்டாதல்.

புழுப்பு - புழுத்தல்.

புழுமேய்ச்சல் - புழுவரித்தல்.

புழுமேய்தல் - புழுக்கடித்தல்.

புழுவதை-தேனீவைக்கும் புழுக்கூடு.

புழுவெட்டு - புழுமேய்ச்சல்.

புழுவெட்டுதல் - புழுவரித்தல்.

புழை - உட்டுளை, கதவு விட்டுப் புகும் வழி, துளையுடைப் பொருள்.

புழைக்கடை - பின்புறவாயில்.

புழைக்கை - துதிக்கை, யானை.

புளகம் - அரிதாரம், கண்ணாடி, சோறு, புடைப்பு, மகிழ்ச்சி, மயிர் சிலிர்த்தல், வெடிப்பு.

புளகாலயன் - குபேரன்.

புளகிதம்-மகிழ்ச்சி, மயிர்ச்சிலிப்பு.

புளகித்தல் - மகிழ்தல், மயிர் சிலிர்த்தல்.

புளகிப்பு - மகிழ்ச்சி, மயிர்ச் சிலிர்ப்பு.

புளப்பாகல் - சிறுவாலுளுவை.

புளம் - அண்ணம், குதிரை நடையினொன்று.

புளவை - பிளவை.

புளாகம்-கஞ்சி, சோற்றுத்திரளை.

புளி - ஓர்சுவை, புளியமரம், புளியென்னேவல்.

புளிக்கறி - புளிங்கறி.

புளிக்கீரை - ஓர் கீரை.

புளிக்குடித்திருத்தல் - பிள்ளை பெற்றிருத்தல்.

புளிக்குழம்பு - புளியிட்டுச் செய்யுங்குழம்பு.

புளிங்கறி - புளிக்குழம்பு.

புளிச்சல் - புளித்தது.

புளிச்சற்பணிகாரம் - ஓர் பணிகாரம்.

புளிச்சாறு - ஒருணவுநீர்.

புளிச்சை - ஓர் செடி.

புளிஞர் - வேடர்.

புளிஞ்சோறு - புளியோதனம்.

புளிதம் - ஊன்.

புளித்தல் - நெருங்கல், புளிப்பு.

புளித்தோடை - ஓர் தோடை.

புளிகடலை }
புளிநறளை } புளிமதுரை.

புளிந்தம் - புலிந்தம்.

புளிந்தயிர் - புளித்ததயிர்.

புளிந்தன் - வேடன்.

புளிப்பாற்றுதல்-புளிப் பிடித்தல்.

புளிப்பு - ஓர்சுவை, பொங்குகை.

புளிமண்டி - அதிகவழுக்கு, புளிப்புக்கொண்டது.

புளிமதுரை - ஓர் செடி.

புளிமா - ஓர் மரம், நிரைநேராய் வருஞ் சீர்க்கு வாய்ப்பாடு.

புளிமாங்கனி - நிரை நேர் நிரையாய் வருஞ்சீர்க்கு வாய்பாடு.

புளிமாதளை - ஓர் மாதளை.

புளிமாநறுநிழல் - நிரைநேர்நிரை நிரையாய் வருஞ் சீர்க்கு வாய்பாடு.

புளிமாநறும்பூ - நிரைநேர் நிரை நேராய்வருஞ்சீர்க்குவாய்பாடு.

புளிமாந்தண்ணிழல் - நிரைநேர் நேர்நிரையாய் வருஞ் சீர்க்கு வாய்பாடு.

புளிமாந்தண்பூ - நிரைநேர்நேர் நேராய்வருஞ் சீர்க்கு வாய்பாடு.

புளியம்பாசி - ஓர் நீர்ப்பூண்டு.

புளியறணை - ஓர் பூடு.

புளியாமணக்கு - ஓர் பூண்டு.

புளியாரை - ஓராரைக்கீரை.

புளினம் - மணற்குன்று, மணற்றிட்டை.

புளினர் - புளிஞர், வேடர்.

புள் - அவிட்டநாள், நீர்வாழ் பறவை, பறவைப்பொது, வண்டு.

புள்ளடி - ஓர் பூடு.

புள்ளம் - கொடுவள்.

புள்ளரசு - கெருடன்.

புள்ளி - ஆய்தப்புள்ளி, இலக்கப் புள்ளி, ஒற்றெழுத்து, நண்டு, பல்லி, பொறி, மதிப்பு.

புள்ளீட்டம் - பறவைக்கூட்டம்.

புள்ளுவம் - வஞ்சம்.

புள்ளுவர் - கீழ்மக்கள், பாலைநிலமாக்கள்.

புள்ளொலி - பறவைக்கூட்டத் தொலி.

புள்ளோச்சல்-பறவை துரத்தல்.

புள்ளோப்பல் } பறவை
புள்ளோம்பல் } காத்தல்.

புறக்கடல் - வெளிக்கடல்.

புறக்காவல் - வெளிக்காவல்.

புறக்காழ் - புறவயிரம்.

புறங்காடு - சுடுகாடு.

புறங்காணுதல் - தோற்றோடச் செய்தல்.

புறங்காழ் - புறக்காழ்.

புறங்காண் - முல்லைநிலம்.

புறங்கூறல் - தூற்றல்.

புறங்கொடுத்தல் - புறங்காட்டடல்.

புறச்சமயம் - அகச்சமயம் அல்லாதது.

புறச்சுட்டு - மொழிக்குப் புறத்து நிற்குஞ்சுட்டெழுத்து.

புறச்சேரி - வெளிச்சேரி.

புறணி - புறம்.

புறத்தவன் - ஐயனார்.

புறத்திணை-வெட்சி முதலிய எழுவகை யொழுக்கம்.

புறத்திலக்கணம்- எழுத்தாலாகிய பதம், பிறபொருளைத் தருகின்றமையால் புறத்திலக்கணம்.

புறத்துறப்பு - புறத்தங்கம்.

புறநானூறு - ஓர் செய்யுள்.

புறநிலை - ஓர் பிரபந்தம்.

புறநிலையகத்திணை - அகப்பாட்டுறுப்புப் பன்னிரண்டினொன்று.

புறநிலைவாழ்த்து - ஓர்பிரபந்தம்.

புறநீர்மை - ஓர் பண்.

புறந்தரல் - ஓம்பல், தோற்றல்.

புறப்பகை - வெளிப்பகை.

புறப்பக்கம் - புறத்துப்பக்கம்.

புறப்பற்று - வெளிப்பற்று.

புறப்பாட்டெல்லை-வேறு மொழியினிடம்.

புறப்பொருள்-புறத்திணைபடைத்திறம்.

புறமொழி - புறத்து வருகிற சொல், புறப்பொருள்.

புறம் - எழனுருபு, பக்கம், பின்புறம், புறத்தால் வருபெயர், மதில், முதுகு, வீரம்.

புறம்பணை } குறிஞ்சிநிலம் முல்லைநிலம்.
புறவணி }

புறவம் - காடு, குறிஞ்சி, நிலம், புறா, முல்லை நிலம்.

புறவிதழ் - பூவின் புறவிதழ்.

புறவு - புறவம்.

புறவுரை - நூல்சொல்லிய பொருள் அல்லாதவைகளைச் சொல்லுதல், பாயிரம்.

புறவொடுபுலத்தல் - அகப்பொருட்டுறையினொன்று.

புறனடை - ஒன்றன் புறத்துச் சொல்லியகுறிப்பு; அஃது— அதிகாரப் புறநடை, ஒத்துப் புற நடை, சூத்திரப்புற நடை, நூற்புறநடை, பிண்டப்புற நடை.

புறனடைச்சூத்திரம்-பிண்ட சூத்திர முதலியவற்றின் புறத்து அடையாகவரும் சூத்திரம்.

புறன் - புறம், முதுகு.

புறன்அழிதல் - மற்றவரை நிந்தித்துப் பேசுதல்.

புரூக்காலி - ஓர் பூடு.

புரூமுட்டி - ஓர் பூடு.

புற்கசன் - சண்டாளன்.

புற்கம் - குறை, சிறுமை மாயம்.

புற்கலம் - உடல்.

புற்கலன் - உயிர்.

புற்று - கபிலநிறம்.

புற்கை - கூழ்.

புற்பதி - பனைமரம்.

புற்பதம் - நீர்க்குமிழி.

புற்புல்லெனல் - விடிதற்குறிப்பு.

புற்றுளி-அனுடநாள், பனைமரம்.

புற்று - புற்று, வளை, வன்மீகம்.

புனமுருக்கு - பலாசு.

புனம் - கொல்லை.

புனராகமனம் - திரும்பிவரல்.

புனராவர்த்தம் - மறுதரம்.

புனருத்தசன்மன் - அந்தணன்.

புனருத்தம் } கூறியது
புனருத்தி } கூறல்.

புனர்பூசம் - ஓர் நட்சத்திரம், புனர்பூசம்.

புனர்ப்பவம் - நகம், மீண்டுபிறத்தல்.

புனலி-ஓர்கொடி, ஓர்பூடு, புனரி.

புனலை - நெய்க்கொட்டான்.

புனல் - ஆறு, கடல், நீர்.

புனல்முருங்கை - ஓர் முருங்கை.

புனல்வேர்தன் - வருணன்.

புனவர் - குறிஞ்சி நிலமாக்கள்.

புனற்றிரை - நீர்த்திரை.

புனனுடன் - சோழன்.

புனனாடு - சோணாடு.

புனிதம் - சுத்தம், பரிசுத்தம், புனர் பூசம்.

புனிதன் - அரன், அருகன், இந்திரன், தூயவன், புத்தன்.

புனிறு - ஈன்றணிமை, சூதகம், தோல், புதுமை.

புனிற்று - இளங்கன்றுப் பசு.

புனீதம் - புனிதம், பரிசுத்தம்.

புனை - அலங்கரிக்கப்பட்ட,கால் விலங்கு, சீலை, புதுமை, புனையென்னேவல்.

புனைகுழல் } பெண்.
புனைகோதை }

புனைதல் - அணிதல், அலங்கரித்தல்.

புனைந்துரை - அலங்கரித்துச் சொல்லல், சிறிதினைப் பெருக்கிப் பெரிதினைச் சுருக்கிக் கூறல், பாயிரம்.

புனையிழை - பெண்.

புனைவர் - கம்மாளர்.

புனைவிலி - உபமானப் பொருள்.

புனைவுளி - வருணிக்கப்படு பொருள்.

புனைவுளிவிளைவணி-ஓரலங்காரம்

புன்கண் - துன்பம், நோய், மெலிவு, வறுமை.

புன்கம் - உணவு, சோறு.

புன்காலி - காயாமரம், பாதிரி மரம்.

புன்கு - புனமுருங்கை, புன்க மரம்.

புன்செக்கர் }
புன்மாலை } மாலைப்பொழுது.

புன்சொல் - அற்பவார்த்தை.

புன்புலால் - இழிவாகியவூன்.

புன்மை-ஈனம், கீழ்மை, சிறுமை, மறதி.

புன்னாகம் - புன்னைமரம்.

புன்னாகவராளி - ஓரிராகம்.

புன்னை - ஓர் மரம்.

புன்னையங்கானல்- புன்னைக்காடு.

பூ

பூ - அழகு, இலை, ஓரெழுத்து, கண்ணில்விழும்பூ, (கொடிப்பூ, சோட்டுப்பூ, நீர்ப்பூ, புதற்பூ) கூர்மை, பிறம்பு, பூ, பூவென்னேவல், பொலிவு.

பூகதர் - புகழ்வோர்.

பூகம் - இருள், உண்டை, கமுகு, குவியல், கூந்தற்பனை, திரட்சி.

பூகம்பம் }
பூக்கம்பம் } பூமியதிர்ச்சி.
பூக்கம்பனம் }

பூகன்னம் - பூமியின் கிரகஷரேகையின் அரைவட்டம்.

பூகாமி - தரையில் வேகமாய்ச் செல்லுங்குதிரை.

பூக்கஞ்சா - ஓர் கஞ்சா.

பூக்கம் - ஊர், கமுகு, மருதநிலத்தூர்.

பூங்காரை - ஓர் காரை.

பூங்கோரை - ஓர் கோரை.

பூசகன் - பூசை செய்வோன்.

பூசம் - ஓர் நாள்.

பூசல் - பூசுதல், பெரிதொலித்தல், பொருதல்.

பூசனம் }
பூசனை } ஆராதனை.

பூசாரம் }
பூச்சாரம் } பூநீறு.

பூச்சாயை - பூமி நிழல்.

பூசித்தல் - பூசனை.

பூசுதல் - அலங்கரித்தல், சந்தனம் முதலிய பூசல்.

பூசுதன் }
பூமகன் } செவ்வாய்.

பூசுதை }
பூபுத்திரி } சீதை

பூசுரர் - அந்தணர்.

பூசை - ஆராதனை, பூனை.

பூஜை - பூசை.

பூடணம் - ஆபரணம்.

பூடன் - துவாதசாதித்தரிலொருவன்.

பூடிதம் - அலங்கரிப்பு.

பூடு - பூண்டு.

பூட்கை - தோல், மேற்கோள், யாளி, யானை.

பூச்சி - உடல், பூணல்.

பூட்டல் - பூட்டுதல்.

பூட்டு - நாணி, பூட்டும் பூட்டு, பூட்டென்னேவல்.

பூட்டுவில் - பூட்டுவிற்பொருள்கோள்.

பூட்டுவிற்பொருள்கோள் - செய்யுள் முதலினுமிறுதியினு நிற்குஞ் சொற்கள் தம்முள் பொருள்கொள்வது.

பூட்டை - இறைகூடை, ஏற்றமரம், காராம்பி, செக்கு.

பூணல் - அணிதல்.

பூணி - இடபராசி, எருது.

பூணித்தல் - சுட்டல்.

பூணூல் - உபவீதம்.

பூணை - முல்லைநிலம்.

பூண் - ஆபரணம், உலக்கை முதலியவற்றிலிடும் பூண், கிம்புரி, பூணென்னேவல்.

பூண்டி - ஊர், கடற்குட்டிடர்.

பூண்டு - பூடு.

பூதகாலம் - இறந்தகாலம்.

பூதகி பூதனை } ஓர் பெண்பேய்.

பூததயை - சீவகாருணியம்.

பூததாத்திரி - பூமி.

பூததானியம் - எள்.

பூதநாசனம் - செங்கொட்டை, சேரான்.

பூதநாதன் - சிவன்.

பூதநாயகி - உமை.

பூதநிருத்தம் - ஓர் காலைமுடக்கியாடல்.

பூதபஞ்சாக்கரம் - ஐயெழுத்து மந்திரம்.

பூதபரிணமசரீரம் - தூலதேகம்.

பூதபரிணமம்-பூதங்களின் றிரிபு.

பூதம் - ஆல், இறந்தகாலம், உண்மை, உயிர் ஐம்பூதம், சங்கு, சுத்தம், தூய்மை, பரணி, பூதக்கணம், பேய்.

பூதாம் - பொன்மலை, மலை.

பூதர் - பதினெண்கணத்தொருவர்.

பூதலம் - பூமி.

பூதவம் - ஆலமரம், மருதமரம்.

பூதவாதம் - ஓர் மதம்.

பூதவிருட்சம் - ஆலமரம்.

பூதவிருள் - மூலவிருள்.

பூதனை-கடுக்காய்மரம், குபேரன் பட்டணம் சடாமாஞ்சி,பூதனையென்றுமோரரக்கி.

பூதாத்துமன் - துறவி.

பூதாத்துமா - உடல், சீவாத்துமா, துணைக்காரணம்.

பூதாரம் - பன்றி.

பூதாரன் - அரசன்.

பூதாரி - பெருங்காயம்.

பூதி - கொடுமை, சாம்பல், செல்வம், தூர்க்கந்தம், நரகம், புலால், புழுதி, விபூதி.

பூதியம் - உடல், பூமி.

பூதேசன் - சிவன்.

பூதேவர் - அந்தணர்.

பூதை - அம்பு.

பூத்தல் - உண்டாதல், பயத்தல், மலர்தல்.

பூநளை - மொக்குள்.

பூநாகம் - நாகப்பூச்சி.

பூநாதம் - வெடியுப்பு.

பூநீர் - பனிநீர்.

பூநீறு } நிலவீரியம்.
பூவழலை }

பூந்துணர் - பூங்கொத்து.

பூந்தை - ஓரூர், பூதன்றந்தை, பூதன்.

பூந்தோடு - மலரிதழ்.

பூந்தோட்டம் - நந்தவனம்.

பூபசாலை - பணிகாரக்கடை.

பூபதி - அரசன், ஒரு குளிகை.

பூபம் - பணிகாரம்.

பூபரிதி - சூரியன் செல்வதாகத் தோன்றும் ரேகை.

பூபன் - அரசன்.

பூபாலர் - பூவைசியர்.

பூபாலன் - அரசன், வேளாளன்.

பூபாளம் - ஓரிசை.

பூபத்திரி - பூசுதை.

பூப்பகம் - பெண்குறி.

பூப்பெயர் - பூவென்னும் பல பொருளொருசொல்.

பூப்பு - மகளிர் சூதகம்.

பூமகண்மைந்தர் - வேளாளர்.

பூமகள் - இலக்குமி, பூமிதேவி.

பூமன் - செவ்வாய்.

பூமி - பூவுலகு.

பூமிகாமி - பூகாமி.

பூமிகொழுநன் - திருமால்.

பூமிக்கூர்மை - வெடியுப்பு.

பூமிசம் - பூமியிற் பிறந்தது, நரகம்.

பூமிசம்பவை - சீதை.

பூமிசன் - அங்காரகன், நரகாசுரன்.

பூமிசை - இலக்குமி, சீதை.

பூமிசைநடந்தோன் - அருகன், புத்தன்.

பூமிநாதம் - ஓருப்பு.

பூமிலேபனம் - பூமியை மெழுகுதல்.

பூமிவேர் - பூநாகம்.

பூமின் - இலக்குமி, பூமிதேவி.

பூரகம் - நிறைத்தல், பிதிர் பிண்டம், பெருக்குந்தொகை, மூச்சுள்ளே வாங்கல்.

பூரட்சகன் - அரசன்.

பூரட்டாதி - ஓர் நாள்.

பூரணகலசம் } நிறைகுடம்.
பூரணகும்பம் }

பூரணசூத்திரம் - ஓர் நூல்.

பூரணதிசை - இயங்குதிசை.

பூரணமி - பூரணை.

பூரணம் - எல்லாம், நிறைவு, பெருகுதல்.

பூரணன் - அரன், அருகன், கடவுள், விட்டுணு.

பூரணாகுதி - ஓமத்தின் முடிவு, ஓமம்.

பூரணி - இலவமரம்.

பூரணேந்து - பூரணசந்திரன்.

பூரணை - ஐயனார் மனைவி, சந்திரனைந்தாம் பக்கம்.

பூரணைகேள்வன் - ஐயனார்.

பூரம் - ஓர் நாள், ஓர் மருந்து, பூரம்.

பூரவாகினி - சரச்சுவதி.

பூராசி - பூத்திரன்.

பூராடம் - பூர்வாஷாடம், ஓர் நாள்.

பூரி - ஓரிசை, ஓரெண், கலப்பை நெல், நாணி, பூரியென்னேவல், பொன், மிகுதி.

பூரிகம் - அப்பவர்க்கம்.

பூரிகலியாணி - ஓரிராகம்.

பூரிகை - அப்பவர்க்கம், ஊதிடும் பூரிகை.

பூரிதம் - நிரப்பப்பட்டது.

பூரித்தல் - உவத்தல், நிறைத்தல்.

பூரிப்பு - மிகுகளிப்பு, மிகுதி.

பூரிமாயு - ஆணரி, பழமை.

பூரியம் - அரசிருக்கை, ஊர், மருதநிலத்தூர், வேந்தர் வீதி.

பூரியர் - கீழ்மக்கள்.

பூரு - புருவம், யயாதிமைந்தன்.

பூருகம் - மரம்.

பூருண்டி - மல்லிகை.

பூருவகணம்-சென்றகாலநுட்பம்

பூருவகவுளம் - ஓரிசை.

பூருவசனனம் } முற்பிறப்பு
பூருவசன்மம் }

பூருவசன் - தலைமகன், தமயன்.

பூருவசைலம் - உதயகிரி.

பூருவஞானம் - முன்னனுபவத்தையறியுமறிவு.

பூருவதிக்கு } கிழக்கு.
பூருவதிசை }

பூருவதுவந்தம் } ஊழ்வினைப் பயன்.
பூருவதொந்தம் }

பூருவபக்கம் } வளர்பிறைபட்சம்
பூருவபட்சம் }

பூருவபதம் - நிலைமொழி.

பூருவபற்குனி - பூரநட்சத்திரம்.

பூருவமீமாம்சை - மீமாம்சையின் முதற்பகுதி.

பூருவம் - ஆதி, கிழக்கு, சந்திரன்முன்பக்கம், பழமை, பழங்கதை, முன்பு.

பூருவவாக்கியம் - முன்வாக்கியம்.

பூருவாசாடம் - பூராடம்.

பூருவான்னம் - முற்பகல்.

பூருவோத்தரம் - வடகீழ்த்திசை.

பூரை - நிறைவு.

பூர்த்தி - நிறைவு.

பூர்வகம் - முன்னுள்ளது.

பூலதை - ஓர் படர்கொடி.

பூலத்தி - மருதமரம்.

பூலா, பூல } ஓர் செடி.

பூவசியர் - பூவைசியர்.

பூவணம் - ஓர் சிவதலம்.

பூவணை, பூவமளி } புட்பசயனம்.

பூவந்தி - ஓர்மரம், நெய்க்கொட்டான்.

பூவம்பன் - மன்மதன்.

பூவரசு - ஓர் மரம்.

பூவலயம் - பூமி.

பூவல் - சிவப்பு, துரவு.

பூவாளி - மன்மதன், மன்மதபாணம்.

பூவிதழ் - பூந்தோடு.

பூவிந்துநாதம் - அப்பிரகம்.

பூவிளம் - கற்பாஷாணம்.

பூவை - காயாமரம், கிளி, குயில், நாகணவாய்ப்புள், பெண்.

பூவைசியர் - உழவர், வேளாளர்.

பூவைவண்ணன் - காயாம்பூமேனியன்.

பூவோடு - தொட்டிப்பாஷாணம்.

பூழான்-கவுதாரி, காணுங்கோழி.

பூழி - குழைசேறு, கொடுந்தமிழ்நாட்டிடைன்று, சேற்றிலெழுங்குமிழி, பராகம், புழுதி.

பூழியன் - சேரன்.

பூழில் - அகில்.

பூழை - கோபுரவாயிற் கதவிலிட்டுப்புகும் வழி.

பூழ் - காடை.

பூழ்தி - பராகம், புலால், புழுதி.

பூளை - இலவம்பஞ்சு, ஓர்செடி.

பூனை - பூஜை.

பூனைக்கண் - ஓர்மணி.

பூனைக்கழற்சி-ஓர்கழற்சி, கழற்சி.

பூனைக்காஞ்சொறி - ஓர் காஞ்சொறி.

பூனைக்காய்வேளை - ஓர்செடி.

பூனைக்காலி - ஓர் செடி.

பூனைக்கீரை - ஓர் கீரை.

பூனைத்திசை - தென்கிழக்கு.

பூனைவணங்கி - குப்பைமேனி.

பெ

பெங்கு - கள்ளினோர்பேதம்.

பெடம் - மிகுதி.

பெடை - பறவைப்பெண்.

பெட்டகத்துத்தி - ஓர் துத்தி.

பெட்டகம் - பெட்டி.

பெட்டல் - ஆசைப்பெருக்கம், விரும்பல்.

பெட்டார் - சினேகிதர்.

பெட்டி - பேழை, மூளிவாய்.

பெட்டிக்கோரை - ஓர்புல்.

பெட்டு - பொய்.

பெட்டை - ஒட்டகம், கழுதை, குதிரை, சிங்கம், நாய், மரை யிவற்றின்பெண், பறவைப் பெண், பெண்பொது.

பெட்டைக்கடல் - சிறுகடல்.

பெட்டைக்கட்டு, பெட்டைமுடிச்சு - வளமற்ற கட்டு.

பெட்டைக்கண் - சிறுகண்.

பெட்டைக்கண்ணன் - சிறுகண் ணுள்ளவன்.

பெட்டையன்-ஆண்மையற்றவன்.

பெட்பு-அன்பு, ஆசை, பெருமை.

பெண் - ஸ்த்ரீ, மனைவி, விலங் கின்பெண் பொது.

பெண்கரு - சுரோணிதம்.

பெண்கலை - வண்ணத்தின் சிற் றின்பப்பகுதி.

பெண்குமஞ்சான் - சாம்பிராணி.

பெண்குறி - யோனி.

பெண்கேட்டல் - பெண்ணை மணம் பேசுதல்.

பெண்கொடி - பெண்.

பெண்கொடுத்தல் - பெண்ணை விவாகஞ் செய்து கொடுத்தல்.

பெண்சாதி - மனைவி.

பெண்சோடினை - பெண்வேஷ வணி.

பெண்டகர், பெண்டர் - அலியர்.

பெண்டகை - பெண்டன்மை.

பெண்டாட்டி - பெண், மனை யாட்டி.

பெண்டிர், பெண்டில் - பெண்.

பெண்டீர் - பெண்மகள்.

பெண்டு - பெண்மகள்.

பெண்ணரசி - இராசாத்தி, விவேகமுள்ளவள்.

பெண்ணரசுநாடு - பெண்ணாளு கைசெய்யு மிராச்சியம்.

பெண்ணலம் - பெண்ணினுள்ள வின்பம்.

பெண்ணழைத்தல் - பெண்ணை விவாகஞ் செய்தல்.

பெண்ணன் - ஆண்மையற்றவன்.

பெண்ணாசை - ஸ்தரீ விருப்பம், இஃது—மூவாசையினொன்று.

பெண்ணாள்-பெண் நட்சத்திரம்.

பெண்ணீலி - ஓர்பெண்தேவதை, துட்டை.

பெண்ணுறுப்பு - பெண்குறி, பெண்ணிலட்சணம்.

பெண்ணெடுத்தல்-பெண் கொள்ளுதல்.

பெண்ணெழுத்து - நெட்டெழுத்து.

பெண்ணை - அனுடநாள், ஓராறு, பனைமரம்.

பெண்தண்டு - காதினுட்புறத் தண்டு.

பெண்பழி - பெண்துரோகம்.

பெண்பனை - காய்ம்பனை.

பெண்பால்-ஸ்த்ரீலிங்கம்; இஃது —ஐம்பாலினொன்று.

பெண்பால்விகுதி - பெண்பகுதியை விளக்கி நிற்கும் விகுதி.

பெண்பாற்பிள்ளைக்கவி - ஆண்பாற் பிள்ளைக்கவி யுறுப்புள சிறுதேர், சிறுபறை, சிற்றில் எனு மூன்றொழித்து ஏனை யுறுப்பேழுடன் அம்மனை, ஊசல், கழங்கெனு மூன்றுறுப்புங்கூட்டி யுறுப்புக்குப் பத்துவிருத்தத்தான் முடிவது.

பெண்பாற்பெயர் - உயர்திணை பெண்பால் பெயர்.

பெண்பிடித்தல்-கூத்திபிடித்தல்.

பெண்பிள்ளை - சிறுமி, பெண், மணவாட்டி.

பெண்பிறந்தவள் - பெண்ணைப் பிறந்தவள்.

பெண்புத்தி - பேதைப்புத்தி.

பெண்பேசல் - பெண்ணை மணம் பேசுதல்.

பெண்பேதை - ஏழைப்பெண்.

பெண்போகம் - அறம் முப்பத்திரண்டினொன்று; அஃது— மணமுடிப்பித்தல், ஸ்த்ரீபோகம்: இஃது—அட்டபோகத்தொன்று,

பெண்மகள் - ஸ்த்ரீ.

பெண்மதி - பெண்புத்தி.

பெண்மயக்கம் } பெண்போகம்.
பெண்மயல் }

பெண்மயிர் - அளகம்.

பெண்மரம்-பிறவயிரமுள்ளமரம்.

பெண்மாயம் - பெண்மயக்கம்.

பெண்மூச்சு - பெண்மூர்க்கம்.

பெண்மை - பெண்டன்மை, பெண்மைமுதற்பெயர், பெண்மைச்சினைப்பெயர், மாட்சிமை.

பெண்மைச்சினைப்பெயர் - பெண்பான் முப்பகுதிக்கும் பொதுவான வுறுப்பானுய பெயர்.

பெண்மைச்சினைமுதற்பெயர் - பெண்பான் முப்பகுதிக்கும் பொதுவான முதற்பொருட்பெயர். உ-ம் கொற்றி.

பெண்வகை - பெண் வகுப்பு நான்கு; அஃது — பதுமினி, சித்தினி, சங்கினி, அத்தினி.

பெண்வழி } பெண்ணை
பெண்வழிச்சுற்றம் } பற்றிய
இனம்.

பெதும்பை - பதினொருவயதிற் பெண், பெண்பொது.

பெத்தகாலம் - இலயகாலம்.

பெத்தநிசை - ஆன்மா பாசத்திற் குட்பட்டிருக்குங் காலம்.

பெத்தமுத்தி - இலயமுத்தி.

பெத்தம் - ஒடுக்கம், கட்டு, சேர் மானம், நிலைபரம்.

பெத்தரிக்கம் - அகந்தை, கலம் பகம்.

பெத்தர்-அடிமைகள், பாசபந்தர்.

பெந்தம் - பந்தம்.

பெந்தர் - பந்தர்.

பெந்தனம் - பந்தனம்.

பெந்தித்தல் - பந்தித்தல்.

பெந்திப்பு - கட்டு.

பெந்து - சுற்றம்.

பெந்தை - அவலட்சணமாய்ப் பருத்தது, கலப்பையினொரு றுப்பு.

பெந்தைக்கண் - பெரியகண்.

பெந்தைக்கயிறு - படைவாளை மேழியோடிணைக்குங்கயிறு.

பெம்மான் - பெருமான்.

பெயரடி - பெயர்ச்சி, பேர்மூலம்.

பெயரன் - பாட்டன், பேரன்.

பெயராளி - கீர்த்திமான்.

பெயரிடுதல் - நாமந்தரித்தல்.

பெயரிடைநிலை - பெயர்ப்பகுதி விகுதிகளிரண்டிற்கும் நடுவி னிற்குமெழுத்து.

பெயரியல் - பெயற்சொற்பொ ருளைவிளக்குதலால்பெயரியல்.

பெயரியற்சொல் - செந்தமிழ் நிலத்து மொழிகளாய் உலக வழக்கினுஞ் செய்யுள் வழக் கினு நின்று தம் பொருளை யியல்பாக விளக்கும் பெயர்ச் சொல்.

பெயரின்னிசை - ஓர் பிரபந்தம்; அஃது—பாட்டுடைத்தலைவன் பெயரினைச் சாரவின்னிசை வெண்பாவாற் பாடுவது.

பெயருதல் - நிலைவிலகுதல்.

பெயரெச்சம் - பெயரினெச்ச வினைச்சொல்.

பெயரெச்சகம் - பெயரை யவாவி நிற்குஞ்சொல்; அஃது—அகர மும் உம்முமாகிய இரு விகுதி களையும்பெற்று கருத்தா, கார ணம், இடம், காலம் செயல், செயப்படுபொருள் எனுமாற னுள் ஒன்றைக்கொண்டு முடி யும்.

பெயரெடுத்தல்-கீர்த்தியடைதல்.

பெயரெடுப்பு-நாமப்பிராபலியம்.

பெயர் - கீர்த்தி, நாமம், பெய ரென்னேவல், பெயர்ச்சொல்.

பெயர்ச்சி - திரும்புதல், புரட்சி.

பெயர்ச்செவவெண் - பெயர்களிடத்தேவரும்செவ்விய எண்ணிடச்சொல்.

பெயர்ச்சொல் - இடுகுறியாயுங் காரணக் குறியாயும் வேற்றுமையுருபுகள் சார்தற்கிடனாய் ஒன்றன்பெயரை விளக்கி நிற்குஞ்சொல்.

பெயர்த்தல் - ஆடல், உரிஞ்சல், எடுபடல், திரும்பல், போதல், வேறு படல்.

பெயர்ததல் - கிளப்புதல், திருப்புதல், வேறு படுத்தல்.

பெயர்த்தி - பாட்டி, பெயர்ச்சி.

பெயர்த்து - பெயரையுடையது.

பெயர்த்தொகை - இரண்டுபெயர்கள் சேர்ந்து நிற்பவை, பெயரின்கண்ணேதொக்கதொகை.

பெயர்நேரிசை - ஓர் பிரபந்தம்; அஃது—பாட்டுடைத்தலைவன் பெயரினைச்சார நேரிசை வெண்பாவாற் கூறுவது.

பெயர்ப்பகுபதம் - எட்டு வேற்றுமைகளிலொன்றை யேற்று வருவது.

பெயர்போதல் - கீர்த்திபிரபலமாதல்.

பெயர்ப்பகுதி - பொருள், இடம் காலம், சினை, குணம், தொழில் எனு மறுவகை அடிகள்.

பெயர்பிரஸ்தாபம் - கீர்த்தி.

பெயர்ப்பு - பெயர்ச்சி.

பெயர்வழி - பெயர்முறை.

பெயர்விகுதி - பெயர்ச்சொல்லின் விகுதி.

பெயர்விளங்கல் - கீர்த்தியுண்டாதல்.

பெயர்வு - பெயர்தல்.

பெயர்வேற்றுமை - எழுவாய் வேற்றுமை.

பெயலை - மழை.

பெயல் - மழை, மழைத்துளி.

பெய்கலம் - கொள்கலம்.

பெய்தல் - ஏற்றுதல், செறித்தல், சொரிதல், திணித்தல், பொழிதல், போடுதல், விடுதல்.

பெய்துரை - பாயிரம்.

பெய்வளை - பெண்.

பெய்வு - பெய்தல்.

பெரிசு } கனங்கொண்டது.
பெரிது } பருத்தது.

பெரியகை - கொடைக்கரம்.

பெரியதகப்பன் - தந்தை தன்றமையன்.

பெரியதம்பிரான் - ஓர்தேவதை.

பெரியதனம் - பெருந்தன்மை.

பெரியதாய் - தாய்க்குமுன் பிறந்தாள்.

பெரியது - பெரிது.

பெரியநடை - நல்லொழுக்கம்.

பெரியபுராணம் - அறுபத்துமூவர்கதை.

பெரியப்பன் - பெரியதகப்பன்.

பெரியம்மான்பச்சரிசி - ஓர்பூடு.

பெரியம்மை - மசூரிகை.

பெரியர் / பெரியார் } பெரியோர்.

பெரியவர்-மேன்மையுடையோர்.

பெரியவன் - தத்துவசாலி, மேம்பாடுடையோன், வளர்ந்தவன்.

பெரியாணங்கை - ஓர் பூடு.

பெரியாத்தாள் / பெரியாயி } பெரியதாய்.

பெரியோர் - பெரியவர்கள்.

பெருகல் - பெருகுதல்.

பெருகியல் - இராசத்தகுதியிளென்று.

பெருகு - தயிர், பெருகென்னேவல்.

பெருகுதல் - பாய்தல், மிகுதல், விருத்தித்தல்.

பெருக்கமரம் - யப்பரப்புனிமரம்.

பெருக்கம் - செல்வம், பெருகுதல், பெருக்கிக்கண்டபேறு, மிகுதி, விசாலம், விருத்தி.

பெருக்கம்பண்ணுதல் - போகுதல், பெருமை பண்ணுதல்.

பெருக்கல் - அதிகப்படுத்தல், எண்கூட்டித்தாக்கல், சீய்த்தல், நிறைத்தல், பருத்தல், மிகுவித்தல், விசாலித்தல்.

பெருக்கன் - பருக்கன்.

பெருக்காச்சுவட்டு - கவலையீனம், வேண்டாவெறுப்பு.

பெருக்காளர் - போதியவர்கள்.

பெருக்கு - கணக்குவகை, நான்கிளென்று, பாய்ச்சல், பெருக்கென்னேவல், விசாலம், வெள்ளம்.

பெருக்குக்கணக்கு - கணக்குவகை நான்கிளென்று.

பெருக்குதல் - பெருக்கல்.

பெருக்குவேளை-உச்சிப்பொழுது.

பெருங்கடல் - சமுத்திரம்.

பெருங்கடி - தொடுகடி.

முடியல் - எல்லாம்.
முடிவு - கடை.
முடிவிடங்கூறல் - தான் சொல்லும் இலக்கணத்திற்கு இலக்கியந்தோன்றும் இடத்தைச் சொல்லுதல்.
முடுகல் - எதிர்த்தல், சீக்கிரம், மொய்த்தல், வலி.
முடுகியல் - வண்ணம்.
முடுகு-அராகம், கடமைப்பெண், முடுகென்னேவல்.
முடுகுவெண்பா - ஓர் வகை வெண்பா.
முடுக்கர் - மலைக்குகை.
முடுக்கல் - ஓட்டல், மொய்த்தல்.
முடுவல் - செந்நாய், நாய், பெண்ணாய்.

முடைவெற்படையோன் - வயிரவன்.

முடை - ஓலைக்குடை, கந்தம், தீயவாசனை, நாற்றம், புலால், முடையென்னேவல்.

முடைச்சேரி - முல்லை நிலத்தூர்.

முடைதல் - இளைத்தல், நிணைத்தல், முடைதல்.

முட்கரம் - ஒட்டாரம்.

முட்டம் - ஓரூர்.

முட்டி - எட்டிமரம், கைப்பிடி, பிச்சை, கலைக்கியானம், கரலட்சணமிருபத்து மூன்றி ளென்று.

முட்டிகை - தட்டார் குறடு.

முட்டு - கடிவாளம், குறைவு, முட்டென்னேவல், முட்டுகை, அடைப்பு.

முட்டுதல் - எதிர்த்தல், குறைவுறல், தாக்குதல்.

முட்டுப்பாடு - குறைபாடு, தீமை.

முட்டை - அண்டம், தவிடு.

முட்டைப்பாசி - ஓர் பாசி.

முட்பன்றி - முள்ளம்பன்றி.

முணங்கல் - அடங்கல்.

முணங்கு - அடக்கம்.

முண்டகம் - ஒருபகிடதம், கள், தாமரை, தாழை, நெற்றி, முட்செடி, முள்ளிச்செடி.

முண்டகன் - பிரமன்.

முண்டகாசனை - இலக்குமி.

முண்டம் - உடற்குறை, தலை, திரட்சி, மொட்டைத்தலை, நெற்றி, நிர்வாண சரீரம்.

முண்டணம் - மழித்தல்.

முண்டன் - நாவிதன்.

முண்டி - நாவிதன், முண்டியென்னேவல், மொட்டைத்தலையன்,

முண்டிதம் - மொட்டை.

முண்டித்தல் - மழித்தல்.

முண்டை - விதவை.

முண்மா - முட்பன்றி.

முதம் - உவகை.

முதல - முதற்று.

முதலல் - முதலாதல்.

முதலி - முதல்வல்.

முதலுதல் - முதலல்.

முதலெழுஞ்சனி - மகத்துச்சனி.

முதலெழுத்து - சார்பெழுத்துக்குக்காரணமான தலைமையான வெழுத்து.

முதலை - நீர்வாழ் முதலை.

முதலோன் - கடவுள்.

முதல் - ஆதி, எழனுருபு, முதலென்னேவல்.

முதல்வர் - வானோர்.

முதல்வள்ளல் - குறிப்பறிந்தீவோன்.

முதல்வன் - அரசன், அரன், அருகன், கடவுள்.

முதல்வி - தலைவி.

முதல்வினை-கர்த்தாவின்றொழில்,

முதல்வேதம் - இருக்கு.

முதற்கண் - முதலிடம்.

முதற்கருவி - செயப்படுபொருளோடொற்றுமையுடையது.

முதற்காரணம் - ஆதிகாரணம்.

முதற்குறிப்பு - ஒருபாட்டிலே முதல் நிற்குஞ் சொல்லை மாத்திரம் குறித்ததும், ஒரு சொல்லில் முதல் நிற்கும் எழுத்தை மாத்திரங் குறித்ததும்.

முதற்பா - வெண்பா.

முதற்பெயர் - சினைப்பெயரல்லாதது.

முதற்பொருள் - ஆதிகாரணப் பொருள், கடவுள்.

முதனுவிளிம்பு- அடிநாவின்ஓரம்.

முதனாள் - அசுவினி நாள்.

முதனிலை - எழுத்துக்கள் மொழிக்கு முன்னிற்கும் இலக்கணம், பகுதி.

முதனிலைத்தீவகம் } தீபகாலங்காரத்தி
முதனிலைவிளக்கு } னொன்று.

முதனிலைத்தொழிற்பெயர் - பகுதிப்பொருண்மாத்திரமாய் நிற்கும் வினைச்சொல்.

முதனூல் - ஆதிநூல், முதல்வன் வாக்கு.

முதன்மாணாக்கர்-தலைமாணாக்கர்.

முதன்மை - தலைமை.

முதிதம் - உவகை.

முதியர் - மூத்தோர், பெரியோர், கற்றோர்.

முதிரம் - மேகம்.

முதிரை - அவரை, காராமணி, துவரை யிவைமுதலியன, ஓர் மரம்.

முதிர்ச்சி - முதிர்வு.

முதிர்தல் } காய்தல், வறத்
முதிர்ந்திடல் } தல், முற்றல்.

முதிர்ப்பு - கலக்கம்.

முதிர்வேனில் - ஆனியாடியின் பருவம்.

முது - பழமை.

முதுகாஞ்சி - ஓர் பிரபந்தம்.

முதுகாடு - பிறங்கியல், சுடுகாடு.

முதுகு - பின்புறம்.

முதுகுன்று - விருத்தாசலம்.

முதுக்குறைவு - பேரறிவு, ஞானவுணர்ச்சி, பெண்புத்தியறிகை.

முதுசொல் - பழஞ்சொல்.

முதுநிலம் - களர், பெரும்பாழ் நிலம்.

முதுமகன் - சனி.

முதுமை - பழமை, பழமொழி, மூப்பு.

முதுமொழி - முதுசொல்.

முதுவர் - புலவர், மந்திரிகள், மூதுணர்ந்தோர், மூத்தோர்.

முதை - காடுவெட்டிச்சுட்ட கொல்லை.

முதைப்புனம் - பழங்கொல்லை.

முதையல் - முதுகாடு.

முத்தகம் - சுருக்குவாளிமரம், தனித்தனியே முற்றுப்பெருஞ் செய்யுள்.

முத்தக்காசு - கோரைக்கிழங்கு.

முத்தமாடல் } முத்தமிடல்.
முத்தாடல் }

முத்தகுதி-மூன்றுதகுதி வழக்கு.

முத்தமிழுரியோன்- அகத்தியன், வயிரவன்.

முத்தமிழ்-இயல், இசை, நாடகம்.

முத்தம் - உதடு, பிரியம், மருத நிலம், முத்து, முத்தாதனம்.

முத்தரையர் - செல்வர்.

முத்தர் - திடர், பக்குவர்.

முத்தலை - சூலம்.

முத்தலைவேலோன் - வயிரவன்.

முத்தன் - அரசன், அருகன், புத்தன், வயிரவன், முத்தி பெற்றோன்.

முத்தாகலாபம் - முத்தாரம்.

முத்தாகாரம் - முத்துச்சிப்பி.

முத்தாதனம் - யோகனிலையி னொன்று.

முத்தாபலம் - இசங்கஞ்செடி, முத்து.

முத்தாவலி } முத்துமாலை,
முத்தாவளி } ஓர் தருக்கநூல்.

முத்தி - மோட்சம்.

முத்திதானம் - மோட்சதலம்.

முத்திதிசை - முத்தி.

முத்திபதம்-மோட்சபதம், முத்தி வழி.

முத்திரிகை - எழுத்துப்பரித்த மோதிரம்.

முத்திரை - அடையாளம், எழுத்துப்பொறித்த மோதிர முதலி யன, ஒன்றின் மேற்பதிக்கு முத்திரை.

முத்திவிக்கினம் - முத்திக்கிடை யூறு, அறியாமை, ஐயம், திரிபு.

முத்து - முத்தம்.

முத்தை - கவளம், திரட்சி, மிக வுந்தெரிவிலாள்.

முத்தொழிலோர் - வைசியர் பொது.

முத்தொழிற்பகவன் - கடவுள்.

முந்தல் - முற்படல்.

முந்தன் - கடவுள்.

முந்திரி - ஓர் சிற்றிலக்கம்.

முந்து-முந்தென்னேவல், வெண் ணுரை.

முந்தூழ் - மூங்கில், பழவினை.

முந்தை - பழமை.

முந்தையோர் - முன்னோர்.

முந்நீர் - கடல்.

முந்நூல் - முதனூல், வழிநூல், சார்புநூல்.

முப்பழம் - முக்கனி, அஃது—வாழை பலா, மா.

முப்பகை - காமம், மயக்கம் வெகுளி.

முப்பால் - முப்பகுதி, அஃது—ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், திருக்குறள், மூன்று விதப்பால், அது—காய்ச்சுப்பால், திரட்டுப்பால், குழம்புப் பால்.

முப்பலை - திரிபலை.

முப்பான் - முப்பது.

முப்பானேழ் - முப்பத்தேழு.

முப்பிணி - வாதம், பித்தம், சிலேஷ்மம்.

முப்புடைக்காய் - தேங்காய்.

முப்புரம் - திரிபுரம்.

முப்புரிநூலோர் - அந்தணர்.

முயப்புள்ளி - ஆய்தவெழுத்து.

முப்பூரம் - பூரம், பூராடம், பூரட்டாதி.

முப்பொறி - மனம், வாக்கு, காயம்.

முமுட்சு - துறவு.

மும்மடியாகுபெயர் - ஒன்றற்கிரு மடியாகுபெயரால் நிற்பது அதனாலாய மற்றொன்றற்கும் பெயராய் வருவது.

மும்மணிக்கோவை-ஓர்பிரபந்தம்

மும்மணிமாலை - ஓர் பிரபந்தம், (வெண்பா, கலித்துறை, அகவல்)

மும்மலம் - ஆணவம், கார்மம், மாயை, முக்காலம், முப்பிறப்பு, மூன்றாயிருக்குந்தன்மை, மூன்று.

மும்மீன் மிருகசீரிடம்.

மும்மை - முப்பிறப்பு, மூன்றாயிருக்குந்தன்மை, மூன்று.

மும்மொழி - மெய்கூறல், புகழ்கூறல், பழிகூறல்.

முயக்கம் } முயங்கல்.
முயக்கு }

முயங்கல் - தழுவல்.

முயலல் - முயற்சி.

முயலின்கூடு - சந்திரன்.

முயலுதல் - முயலல்.

முயல்-போர், முயலென்னேவல், முயல்.

முயற்சி - ஊக்கம், நால்வகைத் தொழில்.

முயற்செவிக்கள்ளி - ஓர் கள்ளி.

முயற்றிசை - வடகீழ்த்திசை.

முயால் - முசல்.

முயிறு - எறும்பின் விசேடம், மந்தி.

முரசக்கொடியோன் - தருமன்.

முரசபலம் - பலா.

முரசம் - பறை.

முரசு - முரசு, வாச்சியப்பொது.

முரசறைதல் - பறைசாற்றல்.

முரசு - உத்திரட்டாதிநாள், முரசம், போர்.

முரட்கை - கலிப்பா.

முரண - மாற.

முரணுதல் - திரிக்குதல், மாறு தல்.

முரணல்-மாறுபடல், பொருதல்.

முரண் - ஓர்தொடை, பகை, போர், முரணென்னேவல், வலி, விகாரப்படுதல்.

முரண்கொள்சிந்தை - மாறுத லுள்ளமனம்.

முரண்மொழி - எதிர்மொழி.

முரதம் - பாஞ்சசன்னியம்.

முரம்பு - உப்பளம், கல்லின் மேடு, கழி, பரல் படுத்துயர் நிலம்.

முரலல் - ஒலித்தல், பேசலா லெழுமொலி.

முரலி - முரளி.

முரல்வு - உள்ளோசை.

முரளி - மூக்கால் வாசிக்கும் சிறுகுழல், வேய்ங்குழல்.

முரள் - இப்பி.

முரற்றல் - ஒலித்தல்.

முரன் - ஓரரக்கன்.

முராரி - திருமால்.

முரிதல் - ஒடிதல், கெடுதல், பறி தல்.

முரித்தல் - முறித்தல்.

முரிவு - முறிவு.

முருகன் - இளையோன், குமரன், வெறியாட்டாளன்.

முருகியம் - குறிஞ்சிநிலப்பறை.

முருகு - அகில், அழகு, இளமை, எழுச்சி, கள், திருவிழா, முருகன், வாசனை.

முருகேசன் - சுப்பிரமணியன்.

முருகை - ஓர்வகைக்கல்.

முருக்க - அழிக்க, உருக்க, கொல்ல.

முருக்கு - கிஞ்சுகம், எலுமிச்சை, கொலை, காட்டுமுருக்கு, கலியாணமுருக்கு, நரிமுருக்கு.

முருக்குதல் - கெடுத்தல்.

முருங்கல் - அழிதல்.

முருங்கு - அழிய.

முருங்கை - ஓர் மரம்.

முருடர் - வேடர்.

முருடு - ஓர் வாச்சியம், பறைப் பொது, பெருங்குறடு, வெட்டியமரத்தினடி.

முருந்து - இறகினடிக்குருத்து, கோமளாஸ்தி, வெண்மை, வெண்குருத்து.

முருமுரான் - சூரியன் குதிரையி லொன்று.

முலமுலெனல் - ஈரடுக்கொலிக் குறிப்பு.

முலாம் - பொன்வெள்ளிப்பூச்சு.

முலை-கொங்கை, விலங்கின்மடி.

முலைகுடி - முலைகுடிப்பிள்ளை.

முலைக்கச்சு - முலைக்கட்டு.

முலைக்கண் - சூசுகம்.

முலைக்காம்பு - முலைமுகம்.

முலைச்சிலந்தி - மார்பிலெழுங் கட்டி.

முலைத்தாய் - பால்கொடுப்பவள்.

முலைப்பாலெண்ணெய் - ஆமணக் கெண்ணெயோடு கலந்தமுலைப் பால்.

முலைமறந்தபிள்ளை - பால் மறந்த பிள்ளை.

முலைமார்பு - மார்பு.

முலையுண்ண - முலைகுடிக்க.

முல்லை - இசை, ஓர்கொடி, ஓர்பூ, ஐவகைத் திணையில் ஒன்று, காடுங் காடுசார்ந்த இடமும், (இது இடைநிலம்) கற்பு, மன் மதன் கணையிலொன்று, வெற்றி, வனமல்லிகை.

முல்லைக்கருப்பொருள் - முல்லைத் தலைவன், முல்லைத்தெய்வம், முல்லைத்தொழில், முல்லைநீர், முல்லைப்பண், முல்லைப்பறை, முல்லைப்பூ, முல்லை மரம், முல்லைமாக்கள், முல்லையாழ், முல்லை, முல்லையுணவு, முல்லை யூர், முல்லை விலங்கு.

முல்லைக்காலம் - ஓர் காலம்.

முல்லைக்கான்யாறு - முல்லைநிலத் தெழும் ஆறு.

முல்லைமுதற்பொருள் - கார், புறவம், புறவுசார்ந்தவிடமும், மாலையென்னும் பெரும் பொழுது சிறுபொழுதுகளுமாம்.

முல்லையர் - இடையர்.

முல்லையுரிப்பொருள் - அகப் பொருள்.

முழக்கட்டை - நீளங்குறைந்தது.

முழக்கம்-குமுறுகை, ஆரவாரம், போர்ப்பறையினொர்ப்பு, இடி முழக்கம்.

முழக்கு - ஒளி, ஓசை, கொட்டு முழக்கு.

முழக்கோல் - அளவுகோல், ஒரு முழங்கொண்டகோல், தச்சர் வழங்குங்கோல்.

முழங்க - ஒலிக்க, வானங்குமுற.

முழங்கல் - ஒலித்தல்.

முழங்காற்சில் - முழங்காற்சிப்பி.

முழங்காற்படியிட - முழந்தாட் படியிட.

முழங்கை - மணிக்கட்டின்கீழ்.

முழத்தடி - நீளமுள்ளகொம்பு.

முழந்தாட்கச்சு - ஜல்லடம்.

முழந்தாள் - முழந்து.

முழம் - இருசாண்கொண்டது.

முழல் - கழற்சிக்கொடி.

முழுவம் - குடமுழா, முரசு.

முழவு } பறைப்பொது.
முழா

முழுகல் - குளித்தல்.

முழுக்கு - முழுகல்.

முழுது - எல்லாம்.

முழுதும்
முழுவதும் } எல்லாம்.

முழுதொருங்குணர்ந்தோன் - அரன், அருகன், கடவுள்.

முழுத்தல் - மூழ்குவித்தல்.

முழுமகன் - அறிவில்லான்.

முழுமதி - பூரணசந்திரன்.

முழுமன் - எல்லாம்.

முழுமை - எல்லாம்.

முழுவலயம் - வென்றி.

முழுவெலும்பு - தசைகழிந்த வெலும்பு.

முழை - குகை, துடுப்பு, மலையினுட்குகை.

முழைஞ்சு - மலையினுட்குகை.

முழைத்தல்- எழுத்திலாவோசை.

முளரி - ஓமவிறகு, கடைக்கொள்ளி, காடு, தாமரை, நுண்மை, நெருப்பு, முட்செடி, விறகு.

முளரியான் - பிரமன்.

முளவு - முட்பன்றி.

முளி - மரமுதலியவற்றின் கரடு, முளியென்னேவல், பரடு.

முளித்தல் - காய்தல், வளத்தல்.

முளை - அங்குரம், தண்டாயுதம், தறி, மகன், முளையென்னேவல், மூங்கில்.

முளைத்தல் - முளைக்குதல்.

முள் - நுண்மை, முள்.

முள்ளி - ஓர்செடி.

முறம் - முற்றில், புடைக்குமுறம், விசாகநாள்.

முறி - இலை, எழுத்துமுறி, தளிர் முறியென்னேவல்.

முறிதல்
முறிவு } ஒடிதல்.

முறித்தல் - ஒடித்தல்.

முறியர்-விற்றற்குரியவடிமைகள்.

முறுகல்-கடுப்பு, திருகல், முறுக்குதல்.

முறுக்கல் - திருகல்,முறுக்குதல்.

முறுவல்-எயிறு, சிரிப்பு,நகைப்பு, முறுவலித்தல்.

முறை-இடைச்சொல், ஒழுக்கம், ஒழுங்கு, குணம், பழமை, புத்தகம், முறையீடு, வரிசை.

முறைதெரிந்தோன்- சிற்பாசாரி, பிரமன்.

முறைதெரிபகவன் - பிரமன்.

முறைநிரனிறை
முறைநிரைனிரை } நேர்நிரனிறை.

முறைப்பெயர் - முறைமையைப் பற்றி வரும்பெயர்.

முறைமைப்பொருள் - எழுத்துக்கள் முன்பின்னிற்கு முறையிலக்கணம்.

முறையடைதல் - ஒன்றையொன்று விசேடித்து வருதல்.

முறையிடல் - விதித்தல்.

முறையிலார் - கீழ்மக்கள்.

முறையிலுயர்புகவிற்சியணி - ஓரலங்காரம்.

முறையின்வைப்பு - நூலழகி ளொன்று. அது—அதிகார முதலானவைகளைக் காரண காரிய முறையாக வைத்தல்.

முற்கம் - பயறு, முற்கு.

முற்கரம் - படைகலம்.

முற்கலம் - ஒருபக்ஷிடதம்.

முற்கு - முற்கர்தெரித்தல்.

முற்குளம் - பூராடநாள்.

முற்கொழுங்கோல் - பூரட்டாதி.

முற்சனி - மகநாள்.

முற்றம் - முன்றில்.

முற்றல் - காழ்க்கோடல், பழுத்தல், முடித்தல், முடிவு, மூப்பு, வளைதல், வளைவு.

முற்றாய்தம் - ஆய்தக்குறுக்கம்.

முற்றியைபு - எல்லாச்சீர்க்கண்ணுமியைபு வரத்தொடுப்பது.

முற்று - இடைச்சொல்லின் பொருளில் ஒன்று, முடிவு, முற்றுகரம், முற்றுவினை.

முற்றுகரம் - குற்றுகரம்.

முற்றுதல் - முடிதல்.

முற்றுத்தொடர் - தெரிநிலை தெரியாநிலையாகிய முற்றுத் தொடர்.

முற்றுமடக்கு - ஓரலங்காரம்.

முற்றுமோனை - எல்லாச்சீர்க்கண்ணுமோனைவரத்தொடுப்பது.

முற்றும் - எல்லாம், கடை, பெயரெச்சம், மூலநாள்.

முற்றும்மை - முழுவும்மை.

முற்றுவிகுதி - முடிந்த சொல்லின் கடைநிலை.

முற்றுவினை - வினைமுற்று.

முற்றெச்சம் - வினையெச்சத்திற்காக வழங்கப்படும் வினைச்சொல்.

முற்றெதுகை - எல்லாச்சீர்க்கணுமெதுகைவரத் தொடுப்பது.

முனி - அகத்தி, தவத்தோன், முனியென்னேவல், யானைக்கன்று, வில்.

முனிதல் - சினக்குறிப்பு, சினம், வெறுத்தல்

முனிமர் - அந்தணர், சடைமுடியோர், தவத்தர்.

முனிவருமை - கோபமாருமை அஃது—உயிர் வேதனையிளென்று.

முனிவு - கோபம், சினம், வெறுப்பு.

முனீந்திரன் - புத்தன்.

முனை - நுனிவு, நுனி, பகை, முதன்மை, முனையென்னேவல், யுத்தம், வினை, வெறுப்பு.

முனைதல் - சினக்குறிப்பு.
முனைந்தோர் - பகைமர்.
முனைப்பதி - பகைவற்மேற்சென்றோருறைவிடம்.
முனைமுகம் - படைமுகம்.
முனையிடம் - பாலைநிலத்தூர், போர்க்களம்.
முனைவர் - பகைவர், முனிவர்.
முனைவன் - அருகன், கடவுள், பகைவன், பித்தன்.
முனைவு-கோபம்,சினம்,வெறுப்பு.
முன்-இனியென்பது, எழுனுருபு, பக்கம், பழமை, முதல், முன்னென்னேவல், மேல்.
முன்சொல் - பழஞ்சொல்.
முன்பனி - மார்கழிதையின் பருவம்.
முன்பிறந்தாள் - அக்காள்.
முன்பு - பழைமை, பெருமை, முன், வலி.
முன்முகப்பு - ஆசாரவாயில்.
முன்முகனே - துவக்கம்.
முன்முடுகுவெண்பா-ஓர் வெண்பா.
முன்மொழி - மூதுரை.
முன்மொழிந்துகோடல்- ஓருத்தி அது-முன் ஓரிடத்தொன்றைச் சொல்லிப் பின் வேண்டுமிடத்து அதனையெடுத்துக் கொள்ளல்.
முன்றுதை-பாட்டன்.
முன்றுய் - பாட்டி.
முன்றுனை - மேற்போர்வை.
முன்னதினுணர்தல் - குறிப்பினுற்பொருளறிதல்.
முன்றில் - முற்றம்.
முன்றேன்றல் - தமையன்.
முன்னடியான் - காவற்றேவதை.
முன்னம் - எண்ணம், கருத்து, குறிப்பு, சீக்கிரிமரம், மனம், முன்.
முன்னர் - ஆதி, இடம், நெஞ்சு, முன்.
முன்னர்விலக்கு - ஓரலங்காரம்.
முன்னல் - நினைத்தல், நெஞ்சு, வியங்கோண் முற்று.
முன்னவள் - அக்காள்.
முன்னவன் - கடவுள், சிவன், தமையன்.
முன்னவையகத்திணை - அகப்பாட்டுறுப்பினென்று.
முன்னிரவு - இரவின் முற்பகுதி.
முன்னிலை - காரணம், மூவிடத்தொன்று.
முன்னிலைச்சொல் - முன்னிற்பவனைக் குறிக்குஞ்சொல்.
முன்னிலைப்பொருள்- முன்னிலையிடப்பொருள்.
முன்னிலையசை - முன்னிலையிடத்துவருகிறஅசைச்சொல்.
முன்னிலையேவலொருமை -முன்னிற்கின்ற ஒருவனைப்பார்த்தேவுதல்.

முன்னிலையேவல்வினை - முன்னிற்பவனுக்குக் கட்டளையிடுந் தொழில்.

முன்னின்றமெய்திரிதல் - முன்னிருந்த மெய் மற்றொரு மெய்யாக விகாரப்படுவது.

முன்னிளவல் - தமையன்.

முன்னுருவு - பழையவடிவம்.

முன்னூல் - கடவுண்மொழிந்த நூல்.

முன்னூற்கேள்வன் - கடவுள்.

முன்னை - அக்காள், அண்ணன், முன்னைமரம்.

முன்னோர் - பழையோர், மந்திரிகள்.

முன்னோன் - அருகன், கடவுள், விநாயகன், தமையன்.

மூ

மூ-ஓரெழுத்து, மூப்பு, மூவென்னேவல், மூன்று.

மூகம் - ஊமை, மௌனம்.

மூகன் - ஊமை, ஓரசுரன், வறிஞன்.

மூகை - ஊமை.

மூக்கரிகத்தி - வெற்றிலைகிள்ளுங் கருவி.

மூக்கறட்டை - ஓர் பூடு.

மூக்கு - நாசி, பறவைமூக்கு.

மூங்கை - ஊமை.

மூசல் - சாதல், மொய்த்தல்.

மூச்சு-ஆண்மை, உயிர்ப்பு, பலம்.

மூஞ்சல் - மொய்த்தல்.

மூஞ்சூறு - சுசுந்தரி.

மூடர்-அறிவிலார், கீழ்மக்கள்.

மூடல் - மூடுதல்.

மூடிகம் - எலி, பெருச்சாளி.

மூட்டம் - ஆயத்தம், உலைமுகம், கம்மாளர்கருவி, மூடல், மூளல்.

மூட்டல் - இசைத்தல், ஏவிவிடுதல், கோண்மூட்டுதல், பற்றப்பண்ணுதல், வியங்கோண் முற்று.

மூட்டு - குதிரைக்கடிவாளம், சந்திப்பு, மூட்டென்னேவல்.

மூட்டை - சுமை, பொதி, மூட்டை.

மூதணங்கு - காடுகாள்.

மூதறிஞர் - பேரறிவுடையோர்.

மூதறிவு - பேறறிவு.

மூதா - தம்பலப்பூச்சி.

மூதாட்டி - முதியவள்.

மூதாதை - பாட்டன்.

மூதாய் - பாட்டி.

மூதிரி - எருமை.

மூதிரை - திருவாதிரைநாள்.

மூதுணர்வு - பேரறிவு.

மூதுரை - ஓர்செய்யுள், பழமொழி.

மூதேவி - இலக்குமி முன்பிறந்தாள்.

மூதை - வெட்டிச்சுட்டகாடு.

மூத்தத்திருப்பதிகம் - ஓர்நூல்.

மூத்தல் - முதுமையுறல்.

மூத்தாள் - அக்காள், கிழவி, தலைவி.

மூத்திரம் - சிறுநீர்.

மூத்தோர் - புலவர், மந்திரிகள், முதியோர்.

மூத்தோன் - அண்ணன், விநாயகன்.

மூப்பு - தலைமை, முதுமை.

மூய்தல் - மூடுதல்.

மூரல் - சிரிப்பு, சோறு, பல்.

மூரி - எருது, எருமை, ஓலைமூரி, சோம்பல், நெரிவு, பழைமை, பெருமை, வலி.

மூர்க்கம் - சலஞ்சாதித்தல், நாகப்பாம்பு, மூடத்தனம்.

மூர்க்கர் - கீழ்மக்கள்.

மூர்ச்சனம், மூர்ச்சை - நினைவுமயங்கிக் கிடத்தல்.

மூர்ச்சனை - இராகவோசையினிலை, நினைவுமயக்கம்.

மூர்த்தம் - இருகடிகைப்போழ்து, உடம்பு. உருவுடையது, தலை

மூர்த்தனி - தலை, சிரஸு.

மூர்த்தன்னியம் - கிளர்ச்சி.

மூர்த்தி - அருகன், உடல், உருவம், கடவுள், சிவன், புத்தன்.

மூர்த்திகரம் - தெய்விகம்.

மூர்த்திகன்-குமரன், வயிரவன்.

மூலகந்தம் - வெட்டிவேர்.

மூலகம் - கிழங்கு, முள்ளங்கி.

மூலதனம் - மூலத்திரவியம்.

மூவகைச்சீர் - நேரசையாவது நிரையசையாவது தன்னோடு தானேனும் ஒன்றோடொன்றேனும் புணர்ந்து மூன்றசை யடுக்கிவருவது.

மூலப்பிருகிருதி - பிரபஞ்ச காரணமாயை.

மூலமலம் - ஆணவமலம்.

மூலம் - ஓர்நாள், ஓர்நோய், காரணம், கிழங்கு, முதல், வேர்.

மூலாக்கிரம் - அடியுநுனியும்.

மூலாதாரம்-ஆறுதாரத்தொன்று.

மூலிகை - வேர்.

மூலியம் - விலை.

மூலைத்திசை - பெருந்திசை.

மூவரசன் - சேரன், சோழன், பாண்டியன்.

மூவழி - முதல், இடை, கடை.

மூவாட்டை - மூன்று ஆண்டு.

மூவிடம் - தன்மை, முன்னிலை, படர்க்கை.

மூவிலைவேல் - சூலம்.

மூவினம்.வல்லினம்,மெல்லினம், இடையினம்.

மூவுதல் - முடிதல்.

மூவுலகாதாரன், மூவுலகேந்தி - கடவுள்.

மூவுலகாளி - கடவுள்.

மூவுலகு - சுவர்க்கம், மத்யம், பாதாளம்.

மூவுலகுணர்ந்தோன் - அருகன்.

மூழி } அகப்பை, துடுப்பு,
மூழை } மத்து.

மூழ்கல் - முழுகல்.

மூழ்த்தல் - மொய்த்தல்.

மூளல் - மூளுதல்.

மூளுதல் - எழும்பல், நெருப்பு முதலிய மூளல்.

மூளை - தலை முதலியவற்றின் மூளை.

மெ

மெச்சல் - கொண்டாடல், துதித்தல்.

மெத்து - மென்மை.

மெத்தை - அமளி, மேல்வீடு.

மெய் - உடல், உண்மை, ஒற்றெழுத்து, ஐம்பொறியுளொன்று நிச்சயம், மெய்யெழுத்து.

மெய்கண்டதேவர் - சுவேதவனப் பெருமாள்.

மெய்காப்பாளர் - காவலர்.

மெய்க்கவசம் - மெய்யுறை.

மெய்க்கீர்த்திமாலை - ஓர் பிரபந்தம்.

மெய்நலம் - வலி.

மெய்நூலன் - துரோணசாரியன்.

மெய்புகுகருவி - கவசம்.

மெய்ப்படாம் - நிலையங்கி.

மெய்ப்பரிசம் - அட்ட மெய்ப்பரிசம்.

மெய்ப்பாடு - சரீரக்குறிப்பு.

மெய்ப்பீரம் - மேகம்.

மெய்ப்பை - சட்டை.

மெய்ப்பொறி - கர்மேந்திரிய ஞானேந்திரியங்கள்.

மெய்மயக்கம் - ஒற்றெழுத்தியைபு.

மெய்ம்மை - உண்மை, கருத்து.

மெய்யர் - அந்தணர், முனிவர்.

மெய்யன் - உண்மையுள்ளோன், மகன்.

மெய்யீற்றுப்புணரியல் - மெய்யீற்றுப்பதம் புணருகிற இயல்பு.

மெய்யுரைத்தல் - உரைசொல்லல்.

மெய்யுரை - கவசம்.

மெய்விரதம் - தருமன், பீஷ்மன்.

மெலி - மெலிவு, மெல்லெழுத்து.

மெலிதல் } இளைப்பு.
மெலிவு }

மெலித்தல் - வல்லொற்றை மெல்லொற்றாக்கல்.

மெல்கல் - இலகுவாதல்.

மெல்லன் - நெய்தனிலத்தலைவன்.

மெல்லியர் - சிறியோர், மாதர்.

மெல்லியல் - பெண், மரத்திளங்கொம்பு.

மெல்லியாள் - பெண்.

மெல்லிலை - வெற்றிலை.

மெல்லினம் - மென்கணம்.

மெல்லினவெதுகை - ஒரின வெதுகை.

மெல்லெனல் - மந்தக்குறிப்பு.

மெழுகு - மெழுகு, மெழுகென்னேவல்.

மென்கணம் - மெல்லினம்.

மென்பால் - மருதநிலம்.

மென்மை - மிருது, மெல்லினம், எட்டேறிலொன்று.

மென்றொடர்-மெல்லெழுத்தைத் தொடருந்தொடர்ச்சி.

மென்னிலை - கரலட்சணத்தி னென்று.

மே

மே - ஓரெழுத்து.

மேகநாதம் - சிறுகீரை, முழக்கம்.

மேகநாதன் - இந்திரசித்து.

மேகபந்தி - முசினிரை.

மேகபுட்பம் - நீர்.

மேகப்புள் - வானம்பாடி.

மேகம் - ஓர் நோய், முகில்.

மேகரஞ்சி - ஓரிராகம்.

மேகராகக்குறிஞ்சி ஓர்பண், குறிஞ்சித்திறத்தினென்று.

மேகலை - சீலை, மாதரிடையணியி லெழுகோவை(ஒட்டியாணம்), மலைப்புடைப்பு.

மேகவண்ணக்குறிஞ்சி - ஓர்மரம்.

மேகவண்ணன் - விஷ்ணு.

மேகவாகனன் - இந்திரன்.

மேகாரம் - மயில்.

மேக்கு - உயர்ச்சி, மேல், மேற்கு.

மேசகம் - மயிற்றோகைக்கண்.

மேடம் - ஆடு, மேடவிராசி.

மேடவீதி - சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களிற் சூரியன் செல்லும் வீதி.

மேடு-உயர்ச்சி,ஊர், சிறுதிட்டை, வயிறு.

மேடுகம் - சுவர்.

மேடை - மேடு.

மேட்டினம் - மேன்மை.

மேதகம் - மதிப்பு, மேன்மை.

மேதகையோர் - உயர்ந்தோர்.

மேதம் - கொலை, யாசகம்.

மேதாரம் - மலை.

மேதாவியர் - அறிஞர்.

மேதி - எருமை.

மேதிச்சென்னிமித்தோள் - துர்க்கை.

மேதியன் - இமயன்.

மேதினி - பூமி.

மேதை - அறிவு, இறைச்சி, கள், தோல், நரம்பு, நிணம், புதன், மேன்மை.

மேதையர் - புலவர்.

மேத்தியம் - சுத்தம்.

மேநகை - தேவதாசி, மேரு மலைக்குப் பெண்ணும், இமய மலைக்கு மனைவியுமாகிய மனோ ரமையென்பவள்.

மேநகைபுதல்வி - பார்வதி.

மேநை - மலையரையன்மனைவி.

மேம்பாடு - புகழ், மேன்மை.

மேய்தல் - உண்டல், வேய்தல்.

மேய்த்தல் - மேயச்செய்தல்.

மேரு - பொன்மலை, மலை, தேரின்மேலாசனம்.

மேருவில்லி - சிவன்.

மேலகம் - மோக்கம்.

மேலவரிறைவன் - முருகன்.

மேலவர் - மேலோர்.

மேலாலவத்தை - மேனோக்கி நிற்குமவத்தை.

மேனுலகம் - தேவலோகம்.

மேலோர் - அறிஞர், புலவர், வானோர், உயர்ந்தோர், முன்னோர்.

மேல் - அகலம், ஆகாயம், இனி, ஏழனுருபு,மிசை,மேல்,மேற்கு.

மேல்விதேகம் - நவகண்டத்தொன்று.

மேவலர், மேவார் - பகைவர்.

மேவலது - பொருந்தாதது.

மேவல்-ஆசை, சேரல், உண்டல், பிறத்தல், பொருந்தல், விரும்பல்.

மேவினர் - உறவோர், சிநேகிதர்.

மேவு - ஆசை, மேவென்னேவல்.

மேழகம் - கவசம், செம்மறிக்கடா, துருவாட்டேறு.

மேழி - கலப்பை, கலப்பையினுருப்பு.

மேழியர் - மருதநிலமாக்கள், வேளாளர்.

மேளம் - பலவாச்சியக்கூட்டம்.

மேளனம் - கூட்டம்.

மேற்கதி - மோட்சம்.

மேற்கதுவாய் - முதலயற்சீர்க்கணின்றியொழிந்த சீர்க்கண் மோனைவரத்தொடுப்பது.

மேற்கு - மேல், மேற்றிசை.

மேற்குலத்தோர் - அந்தணர்.

மேற்கோள் - ஆசிரியவசனம், எடுத்துக்காட்டுஞ் செய்யுள், சனி, மேன்மை, போர்வை.

மேற்செம்பாலை - ஓரிராகம்.

மேற்றிசைப்பாலன் - வருணன்.

மேனி-உடலுருவம், நிறம், வடிவு.

மேன்மக்கள் - பெரியோர்.

மை

மை-அஞ்சனம், கறுப்பு, குற்றம், செம்மறியாடு, நீர், மசி, மலடு, மேகம், மேடவிராசி,மையென்னேவல், பண்புப்பெயர் விகுதி.

மைதல் - மையச்செய்தல்.

மைதிலி - சீதை.

மைதுனம் - புணர்ச்சி.

மைத்திரம் } சிநேகம்.
மைத்திரியம் }

மைத்திராவருணம் - ஓர் யாகம்.

மைத்துனன் - மச்சினன்.

மைநாகன் - மலையரசனுக்கும் மேனகைக்கும் புத்திரன்.

மைந்தர் - ஆண்மக்கள், மனிதர்.

மைந்து - மயக்கம், வலி.

மைமை-மலடி, மலட்டெருமை.

மைம்மா - பன்றி.

மைம்முகன் - முசு.

மையம் - நடு.

மையல்-உன்மத்தம்,காமமயக்கம்.

மையாத்தல் - மயங்கல்.

மையுண்கண்ணி - மைதீட்டிய கண்ணுடையாள்.

மைரேயம் - கள்.

மொ

மொ - ஓரெழுத்து.

மொகமொகெனல் - ஈரடுக் கொலிக்குறிப்பு.

மொக்குள் - கொப்பூழ், நீர்க் குமிழி, மலரும்பருவத்தரும்பு.

மொச்சை - ஓர் கொடி.

மொடமொடெனல் - ஈரடுக் கொலிக்குறிப்பு.

மொட்டம்பு - உதணம்.

மொட்டு - இளம்பூவரும்பு.

மொட்டை - மழித்தல்.

மொத்தம் - பொது.

மொத்தல் - அடித்தல்.

மொந்தை - ஒரு கட்பறை, ஒரு பாத்திரம்.

மொய் - கூட்டம், யோர், போர்க் களம், மொய்த்தல், மொய் யென்னேவல், யானை, வண்டு.

மொய்கதிர் - மூலை.

மொய்த்தல்-கூடுதல், நெருங்கல், மூடுதல்.

மொய்த்தாய் - தாய்.

மொய்ம்பு - தோள்.

மொழி - சொல், மொழியென் னேவல்.

மொழிதல் - சொல்லல்.

மொழிமாற்று - பொருள்கோ ளெட்டினொன்று.

மொழிமுதலெழுத்து - சொற்கு முதனிற்கு மெழுத்து.

மொழிமை - பழஞ்சொல்.

மொழியிடையெழுத்து - சொல் லிடை நிற்குமெழுத்து.

மொழியிறுதி - மொழியீறு.

மொள்ளல் - முகத்தல்.

மோ

மோ - ஓரெழுத்து, முன்னிலை யசைச்சொல், மோவென்னே வல்.

மோகம் - ஆசை, உன்மத்தம், காமம்.

மோகர் - சித்திரகாரர்.

மோகனம் - அட்டசித்தியி லொன்று, ஓரிராகம்.

மோகனங்கனை - மோகினி.

மோகனாத்திரம்- மன்மதபாணம்.

மோகன் - மன்மதன்.

மோகினி - திருமால் பெண்ணுருக்கொண்டமோகினி.

மோக்கம் - தீர்தல், பாகதி.

மோசம் - வஞ்சனை.

மோசனம்-ஓர்வகைநெல்,தீர்தல்.

மோசிகை - உச்சிமுடி.

மோடி - காடுகாள், பிணக்கு.

மோடு - உயர்ச்சி, பெருமை, மடமை, வயிறு.

மோட்சகாலம் - கிரகணம் விடுங் காலம்.

மோட்சம் - மோக்கம்.

மோதகம் - அப்பவருக்கம், இணக்கம், தோசை.

மோதம் - உவகை, வாசனை.

மோதல் - அடித்தல்.

மோதிரம் - ஆதி.

மோத்தல் - ஆக்கிராணித்தல்.

மோத்தை - வெள்ளாட்டுக்கடா.

மோவாய் - தாடி.

மோழல் - பன்றி.

மோழை - கஞ்சி, கொம்பின்மை கொம்பில்லாவிளங்கு.

மோனம் - மௌனம்.

மோனர் - முனிவர்.

மோனை - ஆதி, ஓர்தொடை.

மௌ

மௌ - ஓரெழுத்து.

மௌஞ்சி-நாணற்புல்லாற் செய்த வரைஞாண்.

மௌட்டியம் - மூடத்தனம்.

மௌத்திகம் - முத்து.

மௌர்வி - வின்னாண்.

மௌலி - கள், சிகை, மயிர்முடி, முடி.

மௌவல் - வனமல்லிகை.

மௌனம் - பேசாமை.

மௌனியர் - முனிவர்.

ய

ய - இறந்தகால விடைநிலை, ஓரெழுத்து.

யகரவுடம்படுமெய்-வருமுயிர்க்கு யகரம் உடம்படுவது.

யக்கன் - குபேரன்.

யக்கர் - இயக்கர்.

யக்கராத்திரி-கிருத்திகா பூரணை.

யக்கியசாலை - யாகசாலை.

யக்கியசூத்திரம் - முப்புரிநூல்.
யக்கியநாபிகை - மகாநக்ஷத்ரம்.
யக்கியபுருடன் - விஷ்ணு.
யக்கியம் - துவாபரயுகம், யாகம்.
யசமானன் - தலைவன், யாககுரு.
யசனம் - யாகம்செய்தல்.
யசாகன் - கொடையாளி.
யசுரு - இரண்டாம்வேதம்.
யச்சு - புகழ்.
யட்சர் - ஓர் சாதியர்.
யட்டி - ஊன்றுகோல், தண்டு, மாலை, முத்துத்தாழ்வடம்.
யதா - ஏற்ற, சரியான, தகுதியான.
யதாசக்தி - இயன்ற மாத்திரம்.
யதார்த்தம் - சரியான, முறையான.
யதி - அடக்கம், இளைப்பாற்றி, ஒன்றிப்பு, ஓர் ரிஷி, கைம்பெண், சன்னியாசி, தாளப்பிரமாணம்பத்தினொன்று, முனி, மோனை, வாசகத்திற்றரிக்குமிடம்.
யதிபாத்திரம்-பிச்சைப்பாத்திரம்.
யது - ஓரரசன்.
யதுநாதன் - கிருஷ்ணன்.
யதேச்சை - இஷ்டம், விருப்பம்.
யதேஷ்டம் - இஷ்டப்படி, சுயேச்சை, மிகுதி.
யதேந்திரியம் - கற்புவழுவாமை.
யத்தனம் - முயற்சி.
யந்திரகிரகம் - சூத்திரம், செக்கு.
யந்திரம் - செக்கு, திரிகை, தீக்கடைகோல், தேர், பஞ்சறைக்குஞ்சூத்திரம், பொறி, மந்திர சக்கிரம்.
யந்திரலோகம் - பயறு.
யந்திரு - ஆளுவோன், குதிரைப்பாகன், தேர்ப்பாகன்.
யமகம் - வந்தசொல்லே வருதல்.
யமகிங்கரன் - நமனேவற்காரன்.
யமகீடம் - ஓர் புழு.
யமதூதன்-பாம்பி னச்சுப்பற்களிலொன்று. யமகிங்கரன்.
யமதேவதை - பரணிநட்சத்திரம்.
யமத்ருமம் - இலவமரம்.
யமப்ரியம் - ஆலமரம்.
யமம்-அடக்கம், இயமம், காக்கை, சனி, தருமநூல் பதினெட்டினொன்று, தவம், திருவிழா, பஞ்சகிருத்தியத்தொன்று.
யமவாகனம் - எருமைக்கடா.
யமராஜம் - யமுனாநதி.
யமவிரதம் - இயமானுட்டிப்பு, பட்சபாதமின்றி அரசுமுறை நடத்தல்.
யமளம் - இரட்டை.
யமனிகை - சீலைப்படல்.

யமன் - நமன்.

யமாந்தகன் - சிவன்.

யமி - ஓர் முனி.

யயாதி - குருகுலத்தரசர்களி லொருவன்.

யயு-அசுவமேதக்குதிரை,குதிரை.

யவகாரி - கிருஷ்ணன்.

யவசம் - வெடியுப்பு.

யவட்சாரம் - எவட்சாரம், வெடி யுப்பு.

யவபலம் - மூங்கில்.

யவம் - ஓர்வகைக் கோதுமை, நெல்லு.

யவகம் - ஓர் வகைத்தானியம்.

யவனப்பிரியம் - மிளகு.

யவனம் - ஓர்தேசம், சீக்கிரம்.

யவனர்-கம்மாளர்,சித்திரக்காரர், சோனகர்.

யவனாசாரியன் - ஓர் சோதிட நூலாசிரியன்.

யவனிகை - திரைச்சீலை.

யவானி - ஓமம்.

யவ்வனம் - இளமை,யௌவனம்.

யா

யா - அஃறிணைப்படர்க்கைப் பன்மைவினா, அசைச்சொல், ஓரெழுத்து, ஓர் மரம், யாவை.

யாகசாலை - வேள்விச்சாலை.

யாகசேனன் - ஓரரசன்.

யாகத்தம்பம் - வேள்வித்தூண்.

யாகத்திரவியம் - யாகப்பொருள்.

யாகபதி - ஓரரசன்.

யாகபத்தினி - துரோபதை.

யாகபாகம் - அவிர்பாகம்.

யாகபோசனர் - வானோர்.

யாகம் - பலி, வேள்வி.

யாகுவம் - சாவகம்.

யாக்குதல் - கட்டுதல்.

யாக்கை - உடல், கட்டு, சரீரம்.

யாக்கனம் - யாங்ஙனம்.

யாங்கனும் - எவ்விடமும்.

யாங்கு-இடத்தின் ஐயுற்றசொல்.

யாங்ஙனம் - எங்ஙனம்.

யாசகம் - இரப்பு, இராசயானை, மதயானை.

யாசகர் - இரப்போர்.

யாசனம் - பூசாபலி நடத்தல், வெடித்தல்.

யாசனை - பிச்சை.

யாசித்தல் - இரத்தல்.

யாஜ்ஞுவல்க்கியம் - ஓர் தருமநூல்.

யாஜ்ஞுவல்க்கியர் - ஓர் மகரிஷி.

யாடு - ஆடு.

யாணர் - அழகு, தச்சர், நன்மை, புதுமை, வளமை.

யாண்டு - இடஐயச்சொல், எந்த விடம், காலம், வருடம்.

யாண்டும் - எங்கும், மூவிடத்திலும்.

யாதம் - பசுக்கூட்டம்.

யாதயாமம் - பழயது, சீர்ணம்.

யாதவன் - இடையன், கிருஷ்ணன்.

யாதனம் - தெப்பம், மரக்கலம்.

யாதனுசரீரம் - ஆக்கினை யநுபவிக்கத்தக்க சரீரம்.

யாதனை - துன்பம்.

யாதானும் - யாது ஆனாலும்.

யாதி - ஆழியகருத்து, ஞாபகம்.

யாதிகன் - வழிச்செல்லுவோன்.

யாது - அஃறிணைப்படர்க்கை யொருமைவினா, இராக்கதர்.

யாதோ - ஓர் ஐயச்சொல்.

யாதோநாதன் - ஸமுத்திரராசன்.

யாத்தல் - கட்டல்.

யாத்திராகரணம் - பிரயாணம் புறப்படல், பொழுதுபோக்கு.

யாத்திரை - கடலேறிச்செல்லும் பயணம், கூத்து, திருவிழா, நடத்தல், பிரயாணம், வழக்கம்.

யாபனம் - இகழ்ந்துவிடல், தாமதித்தல், பொழுதுபோக்குதல்.

யாப்படி - செய்யுளடிகள்.

யாப்பருங்கலம் - ஓர் நூல்.

யாப்பியம் - அதமம், இகழ்ச்சி, எளிமை, பொழுது போக்கு.

யாப்பியயானம் - சிவிகை.

யாப்பிலக்கணம் - செய்யுளியல் புணர்த்தும்விதி.

யாப்பு - இயையு, கட்டு, செய்யுள்.

யாமகோடம் - சேவல், நாழிகைவட்டம்.

யாமநேமி - இந்திரன்.

யாமபதி - சந்திரன்.

யாமம் - இடக்கைமேளம், இராத்திரி, சாமம், தெற்கு, மாலைப்பொழுதின்பின்பத்துநாழிகை.

யாமவதி - இராத்திரி.

யாமளம் - இளமை, சோடு, பச்சை.

யாமளை - காளி, பார்வதி.

யாமி - இரா, கற்புடையாள், சகோதரி, தெற்கு, மகள், மருமகள்.

யாமிகன் - நகர்சோதனைக்காரன்.

யாமிநீ - இராத்திரி.

யாமிநீபதி - கர்ப்பூரம், சந்திரன்.

யாமியம் - ஓர் தருமநூல், சந்தனம், தெற்கு.

யாமியன் - அகஸ்தியன்.

யாமியாயனம் - தட்சிணாயனம்.

யாமுகம் - ஆலோசனை.

யாமுனம் - அஞ்சனக்கல்.

யாமை - இரா, தெற்கு, பரணி.

யாம் - நாம்.

யாரி - எதிரி, கதவு.

யாரும் - யாவரும்.

யார் - நத்தைச்சூரி, யாவர்.

யாவம் - ஆச்சாமரம்.

யாவகம்-காருளுந்து, செம்பஞ்சு.

யாவசூகம் - வெடியுப்பு.

யாவநாளம் - சோளம்.

யாவம் - அரக்கு, செம்பஞ்சு.

யாவரும் - எல்லாரும்.

யாவர் - உயர்திணைப்படர்க்கை முப்பாற்பொதுவினை.

யாவள் - உயர்திணைப் படர்க்கை யொருமைப்பெண்பால்வினை.

யாவன் - உயர்திணைப்படர்க்கை யொருமையாண்பால்வினை.

யாழ - முன்னிலையசைச்சொல்.

யாழல் - கறையான்.

யாழோர்கூட்டம் - காந்தருவ மணம்.

யாழ் - அச்வினி, ஆந்தை, திருவாதிரை, நீர்ச்சுழியின் றிரை, மீனவிராசி, வீணை.

யாழ்நரம்பு - தந்திரீ.

யாழ்ப்பாணம் - ஓரூர்.

யாழ்முரி - ஓர் கவி.

யாழ்வகை - குறிஞ்சி, நெய்தல், பாலை, மருதமென்று நானிலத்தியாழ்.

யாழ்வல்லோர் - கந்தருவர்.

யாழ்வல்லோன் - நாரதன்.

யாளி - சிங்கம், சிங்கவிராசி, மரக்கலப்பாய்க்கு நீர்வீசுங்கருவி, யாளி, யானை.

யாளியானை - பூட்கை.

யாளியூர்தி - காளி, துர்க்கை.

யாறு - ஆறு.

யாற்றுநீர்ப்பொருள்கோள் -பொருள்கோளெட்டி னொன்று, அஃது—அடிதோறும் யாற்று நீரொழுக்குப்போல நெறிப் பட்டு அற்றற்றொழுகுவது.

யாற்றுப்புனல் - யாற்றுநீர்ப் பொருள்கோள்.

யானபாத்திரம் - மரக்கலம்.

யானமுகம்-வண்டியினேர்க்கால்.

யானம்-அறைவீடு, கள், சிவிகை, போதல், மரக்கலம், வாகனம்.

யானை - இராசசின்னத்தொன்று, வடதிசைப்பாலன்குறி.

யானைக்கச்சை - யானைக்கழுத் தணி கயிறு.

யானைக்கண் - இலை காய் முதலிய வற்றில்விழும் புள்ளி.

யானைக்கம்பம்- யானைகட்டுந்தறி.

யானைச்சீரகம் - கத்தரிநாயகம்.

யானைத்திப்பிலி - ஓர் திப்பிலி.

யானைநெருஞ்சி - பெருநெருஞ்சி.

யானைவணங்கி - தேட்கொடுக்கி.

யானைவீரன் - அரசருக்குத்துணை வரிலொருவன்.

யு

யுகதருமம் - யுகபேதத்தாலுண்டாகும் நடை.

யுகந்தரம் - ஓர்மலை. தேர் முதலியவற்றைப் பிணிக்குந்தறி.

யுகபத்திரம் - கோவிதாரமரம்.

யுகபத்திரிகை - அசோகமரம்.

யுகப்பிரளயம் - யுகமுடிவு.

யுகமுடிவு - உலகமுடிவு.

யுகம் - இரண்டு, இருபொருள், ஓர் காலத்தளவு, நாலுமுழங்கொண்டது, நுகத்தடி, பூமி.

யுகளம் - இரண்டு.

யுகாதி-அருகன்,கடவுள், காந்தம், யுகமுடிவு, வருஷாரம்பம்.

யுகாந்தம் - முடிவு.

யுக்மம் - இரண்டு.

யுஜாநன் - சாரதி.

யுதகம் - இரண்டு, ஐயம், சீலைத்தொங்கல், சம்பந்தம், நன்கொடை.

யுதிட்டிரன் - தருமநந்தனன்.

யுத்தகளம் - போர்க்களம்.

யுத்தசன்னத்தன் - போருக்காயத்தமானோன்.

யுத்தசாரம் - குதிரை.

யுத்தந்தொடுத்தல் - போர்மூட்டுதல்.

யுத்தமுகம் - போர்முகம்.

யுத்தம் - உசிதம், கூடுதல், நாலுமுழங்கொண்டது, நியாயம், பொருத்தமானது, போர்.

யுத்தவேது - ஓரலங்காரம்.

யுத்தி - அருத்தாபத்தி, உபாயம், ஓரலங்காரம், கூடுதல், தகுதி பொருத்தம், மேற்கோள் கூறல், யோசித்தல், வழக்கம்.

யுபம் - சாமர்த்தியம், புத்தி.

யுயு - குதிரை.

யுயுதானன் - இந்திரன், ஸாத்யகி.

யுவ - ஓராண்டு.

யுவதி - பதினாறுவயதுப்பெண்.

யுவநாச்வன் - சூரியகுலத்தரசரிலொருவன்.

யுவராசன் - இளவரசன், ஓர் சமண குரு.

யுவன் - பதினாறு வயதுக்கு மேல் முப்பது வயதிற்குட்பட்டவன்.

யூ

யூகம் - அகப்பொருளறிதல், ஓர் புல், கருங்குரங்கு, கவந்தம், காந்தி, கோட்டான், தருக்கம், படை, படைவகுப்பு, பெண் குரங்கு, பெண்முசு, பேன், யோசிப்பு, விவேகம்.

யூகவான் - புத்திமான்.

யூகி - யூகியென்னேவல், விவேகி.

யூகித்தல் - ஆராய்தல், யோசித்தல்.

யூகை - கல்வி, பேன்.

யூதபம் - இனத்தைக்காக்கும் யானை, யானைக் கூட்டத்திற்றலை யானை.

யூதம்-பசுக்கூட்டம், பட்சிசாலம், யானைக்கூட்டம், விலங்கின் கூட்டம்.

யூதர் - ஓர் சாதியார்.

யூதி - அம்பட்டன், காட்டுமுல்லை.

யூபம்-உடற்குறை, படைவகுப்பு, யாகப் பசுவைக் கட்டுந்தறி, யாகம், வேள்வித்தம்பம், வெற்றித்தம்பம்.

யோ

யோகசத்தி - நவச்சாரம்.

யோகசமாதி - ஆத்மதரிசனம்.

யோகசம் - சிவாகமமிருபத்தெட்டினொன்று.

யோகசாதனை - யோகபரீட்சை.

யோகசாத்திரம் - கலைஞானமறுபத்து நான்கினொன்று.

யோகக்ஷேமம் - சமாசாரம், செய்தி.

யோகசைவம் - ஓர் சைவம்.

யோகஞ்செய்தல் - தியானஞ் செய்தல்.

யோகதீட்சை - ஓர் தீட்சை.

யோகநித்திரை - அறிதுயில்.

யோகபாதம் - யோகநிலை.

யோகபீடம் - யோகாசநம்.

யோகப்பிரத்தியட்சம் - யோகக் காட்சி.

யோகமாயை - பகவதி, விஷ்ணு மாயை.

யோகமார்க்கம் - யோகநிலை.

யோகம் - அட்டயோகம், அதிட்டம், உபாயம், உயர்ச்சி, உற்சாகம், எத்து, கூடல், கூட்டம், கூட்டல், சாவு, சிவிகை, சூத்திரம், தகுதி, தியானம், பக்கம், பஞ்சாங்கவுறுப்பினொன்று, பலன், பொருத்தம், போர்க்கவசம், வரம்.

யோகரங்கம் - கொளுஞ்சிமரம்.

யோகருடி - காரணக்குறி.

யோகர்-சமணமுனிவர், முனிவர்.

யோகாசாரியன் - யோகபோதகன், யோகாப்பியாசி.

யோகாதிசயம் - சுகம், நிலைபரம்.

யோகி - அரன், அருகன், ஐயன், முனிவன்.

யோகினி - காளி.

யோகினி திசை - யோகினி தேவதையாலாளப்பட்டது.

யோகீசுவரன் - யாஞ்ஞவல்க்ய முனி, யோகஞ் செய்வோன்.

யோகேசன் - சிவன், முனிவன்.

யோகேசுவரன் - கிருஷ்ணன்.

யோக்கியதை - யோக்கியம்.

யோக்கியம் - ஆசாரம், தகுதி.

யோக்கியர்-தக்கவர், பெரியோர்.

யோசனம் - யோசனை.

யோசனன் - கடவுள்.

யோசனை - ஆலோசனை, ஓசை, ஒரெல்லையளவு, தியானித்தல், புத்தி.

யோசனை-ஆலோசனை, கூட்டுதல்.

யோசியம் - சோதிடம்.

யோசியர் - சோதிடர்.

யோதனன் - போர்வீரன்.

யோது - அளவு.

யோதேயன் - போர்வீரன்.

யோத்திரம் - நுகக்கயிறு.

யோனி - ஆண்குறி, காரணம், நீர், பிறவி, பெண்குறி.

யோனிக்கலப்பு - சாதிக்கலப்பு.

யோனிசங்கரன் - பிறப்பினுலிழிந்தோன்.

யோனிபேதம் - பிறவிபேதம்.

யோனிப்படுத்தல் - பிறத்தல்.

யோனிப்பொருத்தம் - மணப் பொருத்தம் பத்திஞென்று.

யோனிமுத்திரை - யோனியாகாரமாகச்செய்யு முத்திரை.

யோனிரஞ்சநம் - பூப்பம்.

யௌ

யௌகிகம் - பகுபதம்.

யௌதகம் - சீதனம்.

யௌதம் - ஓரளவு, பெண்கள் கூட்டம்.

யௌவதம் - யௌவநம்.

யௌவனகண்டகம் - முகப்பரு.

யௌவனதசை - வாலிபம், இளமைப் பருவம்.

யௌவனம் - அழகு, இளமை, களிப்பு, மகளிர்கூட்டம்.

யௌவனலட்சணம் - அழகு, கொங்கை.

யௌவநாசுவன் - மாந்தாதா.

வ

வ - ஓரெழுத்து.

வஃகான் - வகர, வெழுத்து.

வகம் - காற்று வழி, வாகனம்.

வகரவுடம்படுமெய்-வருமுயிர்க்கு வகர ஒற்றுச்சம்பந்தப்படுவது.

வகித்தல் - சுமத்தல், சகித்தல்.

வகிர் - நரம்பு, பிளவு, வகிரென்னேவல், வழி, வார்.

வகிர்தல் - அறுத்தல், கோதல், பங்குசெய்தல், போழ்தல்.

வகுண்டம் - கவிழ்த்தும்பை.

வகுண்டிகம் - கஞ்சாங்கோரை.

வகுதி - வகுப்பு.

வகுத்தல் - நூற்செய்தல், வகுத்துக்காட்டல், வகைப்படுத்தல்.

வகுத்திரம் - தெப்பம்.

வகுத்திராபிகாரம் - ஐம்பொறி.

வகுத்துக்காட்டல் - ஒருத்தி, அது — தொகுத்துக்காட்டிய வைகளைஒவ்வொன்றாய்ப்பிரித்துக் காட்டுதல்.

வகுந்து - வழி.

வகுப்பு-அழகு, பகுப்பு, பொலிவு.

வகுலி - மீன்.

வகுளம் - மகிழமரம்.

வகுளாபரணர் - சடகோபர்.

வகுளி - ஒலி.

வகுள் - சமுத்திரப்பச்சை.

வகுளிநாதர் - நவநாதசித்தரிலொருவர்.

வகை - இனம், உபாயம், ஏது, கூறுபாடு, தரம், பகுப்பு, முதல், முறை, வகுப்பு, வழி, வகை.

வகைச்சூத்திரம் - அது தொகையினை வேறு வேறு வகைப்படக்கூறும் வகைச்சூத்திரம்.

வகையகத்திணை - தொகையாயுரைத்தபொருளை வகையறுத்துரைத்தல்.

வகையுளி - அவ்வச்சொன் முடிவே சீர்முடிவாக்கித் தளை கொள்ளாமல் வேண்டியவிடத்துச் சீர்முடிவு செய்து தளை கோடல்.

வக்கணம் - நாகரிகம், நிந்தை, பட்டப்பெயர், மார்பு, வர்ணனை, விற்பன்னம்.

வக்கணத்தி - ஓர் செடி.

வக்கா - ஓர் பறவை.

வக்கிரகண்டம் - அனந்தை.

வக்கிரக்கிரீவம் - ஒட்டகம்.

வக்கிரசஞ்சு - கிளி.

வக்கிரம் - கலக்கம், கொடுமை, நிமிர்தல், பொய், பொறாமை, மீளமடங்குதல், மீளுதல், வஞ்சனை, வட்டம், வளைவு.

வக்கிரன் - உருத்திரன், குரூரன், சனி, செவ்வாய், தந்தவக்கிரன்.

வக்கிராங்கம் - அன்னம்.

வக்கிராத்தமனம் - திரும்புதலோடத்தமனம்.

வக்கிரித்தல் - திரும்புதல்.

வக்கிரோதயம் - திரும்புதலோடுதித்தல்.

வக்கு - தொட்டி, தோல், வழி.

வக்த்ரு - சொல்லுவோன்.

வங்கசிந்தூரம் - ஈயபஸ்பம்.

வங்கசேனகம் - வெள்ளகத்தி.

வங்கணம் - உற்றநேசம், ஓர் தேசம், சிநேகம், வணக்கம்.

வங்கம் - ஆற்றுமடக்கு, ஈயம், ஓர்தேசம், கத்திரிச்செடி, கருத்து, சிறுகத்திரி, துத்தநாகம், பதினெண் பாடையிலொன்று, மரக்கலம், வளைவு, வெள்ளி.

வங்கர் - ஓர் சாதியர், சண்டாளர்.

வங்கனம் - செம்பு.

வங்கனூர் - ஓர் சங்கப்புலவர், ஆலங்குடி வங்கனூர்.

வங்காரம் - உலோகக்கட்டி, பொன் வணிதம்.

வங்காளத்திப்பிலி - ஓர் திப்பிலி.

வங்காளப்பச்சை - ஓர்பூடு, ஓர் வண்ணம்.

வங்காளம்-ஓரிராகம், ஓர்தேசம்.

வங்கி - கைவளை, துடிவேலி, துறடு.

வங்கியம்-இசைக்குழல், மூங்கில், வளைவு.

வங்கிலம் - முள்.

வங்கு - அளை, கழுதைப்புலி, கற்புழை, சந்து.

வங்கூழ் - காற்று, வாதம்.

வங்கை - பகை.

வசகம் - கொறடு.

வசக்கட்டு - ஆட்சி.

வசக்குதல் - படியப்பண்ணல், வசையப்பண்ணல்.

வசக்கேடு - சரீரமெலிவு.

வசதி - இடச்சுகம், இரா, இருப்பிடம், நல்லிடம், மருதநிலத்தூர், வீடு.

வசத்திற்சோதினி - எலுமிச்சை.

வசநாவி - நஞ்சு.

வசநீயம் - வார்த்தை.

வசந்தகாலம்- இளவேனிற்காலம்.

வசந்தசகன் - மன்மதன்.

வசந்தபைரவி - ஓரிராகம்.

வசந்தமாலை - ஓர் பிரபந்தம்.

வசந்தம் - இந்திரன் மாளிகை, இளவேனில்,ஓரிராகம்,சின்னமுத்து, சுகந்தம், தென்னற்காற்று, வாசனை.

வசந்தன் - ஓர்கூத்து, குரங்கு, தென்னற்காற்று, மன்மதன்.

வசந்திகை - தேமல்.

வசம் - அமைச்சல், ஒழுங்கு, கீழ்ப்படிதல்,கைவசம்,துரைத்தனம், நிலவரம், பிறப்பு.

வசம்பு - ஓர் மருந்து, மிளகு, வசா.

வசவி - அசதி, துட்டை.

வசவு - இழிவுரை.

வசனம் - சொல், பழமொழி, பேச்சு, வாக்கியம், வாசகம்.

வசனித்தல் - சொல்லல், விவரித்தல்.

வசி - இருப்பிடம், குற்றம், கழுமுள், கூர்மை, சூலம், தழும்பு, திரட்சி, மழை, வசியம், வசியென்னேவல், வாள்.

வசிகம் - மிளகு.

வசிட்டன் - பிரமன் மானதபுத்திரன்.

வசித்தல் - தங்கல், வசனித்தல்.

வசித்துவம் - அட்டமாசித்தியி லொன்று, வசமாக்கல்.

வசநி - வன்னிமரம்.

வசியம் - எண்கருமத்தொன்று, கராம்பு, கைவசம், மணப் பொருத்தம் பத்திலொன்று.

வசிரம் - ஆனைத்திப்பிலி, கடலுப்பு.

வசிவு - வளைவு.

வசீகரணம் - கீழ்ப்படுத்தல், புணர்ச்சிக்கிணக்கம், வசம்.

வசு - அஷ்டவஸுக்கள், ஓரரசன், ஓர்மணி, கிரணம், குபேரன், சிவன், சூரியன், செல்வம், தேவர், நீர், நெருப்பு, பசுவின் கன்று, பொருள், பொன், மரப்பொது, வெள்வெங்காயம்.

வசுக்கள் - அஷ்டவஸுக்கள், அவர்கள்—தவன், துருவன், ஸோமன், விஷ்ணு, அநிலன், அநலன், பிரபாஸன், ப்ரபவன்.

வசுசேனன் - கர்ணன்.

வசுதேவன் - கண்ணன்றந்தை.

வசுதை
வசுந்தரை } பூமி.
வசுமதி

வசுநாள் - அவிட்டநாள்.

வசுபை - புனர்பூச நட்சத்திரம்.

வசை - இகழ்ச்சிச்சொல், கணவன் சகோதரி, குற்றம், பசு, பெண், பெண்யானை, மகள், மலட்டுப்பசு, மனைவி, மூழை.

வச்சகம் - மலைமல்லிகை.

வச்சநாபி - வற்சநாபி.

வச்சலமணி - கோரோசனம்.

வச்சி - காயாமரம்.

வச்சிரகம் - தாமரைக்காய்.

வச்சிரதாரணை - நவதாரணையி லொன்று.

வச்சிரதுண்டம் - கருடன், கொசுகு, வலியான்.

வச்சிரபாணி - இந்திரன்.

வச்சிரபாதம் - இடியேறு.

வச்சிரபீசம் - கொடிப்புன்கு.

வச்சிரம் - அத்திரபேதி, இடி, எட்டி; ஓர்பிசின், குலிசம், கொடுஞ்சொல், சதுரக்கள்ளி, சிற்பநூல் முப்பத்திரண்டி லொன்று, தருப்பை, நித்திய யோகத்தொன்று, பசுமை, மாட்டுத்தோலின் றெடுக்கும் பசை, வச்சிராயுதம், வயிரமணி, வயிரம்.

வச்சிரவல்லி - பிரண்டை. பொழுது வணங்கிப்பூச்செடி,

வச்சிராங்கம் - சதுரக்கள்ளி.

வச்சிராவர்த்தம் - இராமன்வில்.

வச்சிரி - இந்திரன்.

வச்சிரீகரணம் - இடைபிங்களை சுழிமுனை.

வச்சைசயம் - கலைமான்.

வஞ்சகம் - அணுப்பு, சூத்திரம், நரி, மடிப்பு, மறைவு, வஞ்சனை.

வஞ்சகன் - தூர்த்தன், வஞ்சிப்போன்.

வஞ்சப்பெண் - காளியெவல் செய்வோள்.

வஞ்சம்-கபடம்,கொடுமை,சிறுமை பொய், வடிப்பு, மாயம்,வாள்.

வஞ்சலம் - பாம்பு.

வஞ்சனம்-வஞ்சித்தல்,வஞ்சினம்.

வஞ்சனி-இடாகினி, காளியேவல் செய்வாள், பெண்.

வஞ்சனை-ஆணை, தெய்வப்பெண், பொய், மாயம், வஞ்சம்.

வஞ்சி - ஓர்கொடி, ஓர்பா, கருவூர், சீந்தில்கொடி, தருமதேவதை, பகைவர்மேற்செலவு, பகைவர்மேற் செல்வார்க்கு மாலை, பெண், வஞ்சியென்னேவல், வஞ்சித்தலை.

வஞ்சிச்சீர் - வஞ்சியுரிச்சீர்.

வஞ்சித்தல் - வஞ்சனைசெய்தல்.

வஞ்சித்தளை - கனிநிழலென்னும் வாய்பாடுகளின் பின் நேரசையேனு நிரையசையேனும் வருவது.

வஞ்சித்தாழிசை - நிரையசையோடேனு நேரசை யோடேனும் புணர்ந்து இருசீரடி நான்கு கொண்டொரு பொருள்மேல் மூன்றடுக்கி வருவது.

வஞ்சித்துறை - இருசீரடிநான்கு கொண்டு வருவது.

வஞ்சிப்பா - ஐந்துபாவினொன்று; அது—பெரும்பான்மை வஞ்சித் தளையுஞ் சிறுபான்மை பிறதளையுந் தழுவி இருசீரடியானேனு முச்சீரடியானேனு மூன்று முதலிய பல அடிகளைக் கொண்டு தனிச்சொற்பெற்று அகவற்சுரிதகத்தான்முடிவது.

வஞ்சியர் - பெண்கள்.

வஞ்சியுரிச்சீர் - நேரசையுநிரையசையுந்தம்முள் விரவிமூன்றடுத்து நிரையசை முடிவு பெற்று நிற்பது.

வஞ்சிவிருத்தம்-முச்சீரடி நான்கு கொண்டு வருவது.

வஞ்சிவேந்தன் - சேரன்.

வடகம் - உல்லாசம், ஓர் பணிகாரம், தோல், போர்வை, மேலங்கி, வற்றல்.

வடகிரி-பொன்மலை, மஹாமேரு.

வடகீழ்த்திசைப்பாலன் - ஈசானன்.

வடகோடை - குன்றுவாடை.

வடக்கு - வடதிசை.

வடதிசைப்பாலன் - குபேரன்.

வடந்தை - வடகாற்று.

வடமரம்
வடவிருக்கம் } ஆலமரம்.

வடமீன் - அருந்ததி.

வடமேற்றிசைப்பாலன் - வாயு.

வடமொழி எதிர்மறை - எதிர்மறைப்பகுபதம்.

வடமொழிச்சந்தி - தீர்க்கம், குணம்,விருத்தி என்ற மூன்று சந்திகள்.

வடம் - ஆணிவடம், ஆலமரம், ஊர், ஓர் பணிகாரம், கயிறு, நாணி, பூவரும்பு, மணிவடம், வட்டம்.

வடாம் - தலைச்சீலை, பாய்.

வடவாசி - இயக்கன், ஆலடியில் வசிப்போன்.

வடவாநலம் / வடவாமுகம் / வடவாமுகாக்கினி } ஊழித்தீ.

வடவேங்கடம் - திருப்பதி.

வடவை - அச்வினீ, அடிமைப் பெண், ஊழித்தீ, எருமை, பெண்குதிரை, பெண்யானை.

வடி - கயிறு, குசைக்கயிறு, கூர்மை, நாய், வடியென்னேவல்.

வடிகயிறு - குதிரைவாய்க்கயிறு.

வடிகதிர் / வடிக்கருவி } நூல்முருக்குமோர் கருவி.

வடிக்குதல் - களங்கமறுத்தல், வடியச்செய்தல்.

வடிதல் / வடிதல் } நீளம், நீளல், வடியல், வற்றுதல்.

வடித்தல் - கூராக்குதல், வடிக்குதல், வசமாக்குதல்.

வடிப்பம்-அழகு, செப்பம், திறம்.

வடிப்பு - சலாகை, வடித்தல்.

வடிம்பு - நுதி, விளிம்பு.

வடிம்புக்கழி - எதிர்ச்சட்டம், குறுக்கு விட்டம்.

வடிவம் - உடல், உருவு.

வடிவு - அல்குல், அழகு, உருவு, வட்டஞ்சதுர முதலிய உருவங்களால் வருபெயர்.

வடிவுப்பண்தொகை - உருவுப் பண்பைக்காட்டி நிற்குந்தொகைநிலை.

வடு - இளங்காய், குற்றம், செம்பு, தழும்பு, பிரமசாரி, மச்சம், மருதயாழ்த்திறம், வசை, வடுவென்னேவல், வண்டு, வாலிபன், வாள்.

வடுகச்சி - வடுகப்பெண்.

வடுகன் - பிரமசாரி, மூடன், வயிரவன், வாலிபன்.

வடுகன்றாய் / வடுகி } காடுகாள்.

வடுகு - உபநயனம், இந்தளராகம், ஓர்சாதி, ஓர்தேசம், ஓர்பாஷை, மருதயாழ்த்திறம்.

வடுத்தல் - இளங்காயரும்பல்.

வடுப்படுதல் - ஏறுபடுதல், குற்றமடைதல், வசைபூணுதல்.

வடுவரி - வண்டு.

வடகல் - கெடுதல், வெட்கம்.

வட்கார் - பகைவர்.

வட்சத்தலம் / வக்ஷஸ்தலம் } மார்பு.

வட்டகை - அடைப்புநிலம், சிறுகிண்ணம்,

வட்டணம் - பரிசை.

வட்டணிக்கை-சுற்றுகை, வட்டவடிவு.

வட்டணை - தாளம், வட்டம்.

வட்டணையுறுத்தல் - தாளம் போடல்.

வட்டத்திருப்பி - பங்கம்பாளை, மலைதாங்கி.

வட்டப்பாலை-நால்வகைப்பாலையி னொன்று.

வட்டமிடுதல் - சுற்றுதல்.

வட்டம் - குளம், கேடகம், கைமணி, கொள்கலம், சக்கரம், சீலை, தாழ்வு, திரிகை, நாணய மாற்றுதலின் கழிவு, நீர்ச்சால், பரிவேடம், பீடம், பொற்காசு முதலியவற்றின் வட்டம், வளை தடி, வாகுவலயம்.

வட்டா - ஓர் பாத்திரம், தட்டம், தாம்பாளம்.

வட்டாரம் - சுற்றுப்புறம், தானியக்களஞ்சியம், வீடு.

வட்டி - கூடை, பலகறை, முதற் பொருட்கு வருமூதியம், வட்டி யென்னேவல்.

வட்டிகை - கூடை, கைம்மணி, சித்திரம், நால்வகைச்சாந்தி னொன்று, வட்டம்.

வட்டித்தல் - ஆணையிடல், ஊணி டுதல், தாளம்போடல், வட்ட மாதல்.

வட்டில் - ஒருண்கலம், கிண்ணம், கூடை, சூதாடுகருவி, புட்டில், வழி.

வட்டு - ஓர்செடி, விளையாட்டு, கறிமுள்ளி, சூதாடுகருவி, திரட்சி, மரவட்டு.

வட்டுடை - சீலை.

வட்டை - இரதம், புலியினதுடல் வரி, வழி.

வட்புலி - சிங்கம்.

வணக்கம் - கீழ்ப்படிதல், சங்கித் தல், தொழுதல்.

வணக்கல் - வளைத்தல்.

வணங்கல் - தொழுதல், வளைதல்.

வணங்காமுடியினன் - துரியோ தனன்.

வணர் - வளைவு.

வணிகம் - செட்டு, வியாபாரம்.

வணிகன் - செட்டி, துலாராசி, வியாபாரி.

வணிச்சியம் - வாணிச்சியம்.

வணிதம் - செப்பம்.

வண் - ஈகை.

வண்களமர்-சூத்திரர், வேளாளர்.

வண்சிறை - மதில்.

வண்டரம் - நாய், நாய்வால், மார்பு, முகில்.

வண்டர் - கடிகைமாக்கள், கவி கள், கற்றோர், மங்கலபாட கர், மிண்டர்.

வண்டல் - மகளிர் விளையாட்டு, வண்டல்.

வண்டன் - குள்ளன், திண்ணி யன், திட்டன்.

வண்டானம் - நாரை.

வண்டு-அம்பு, குற்றம், கைவளை, சங்கு, பூசநாள், வண்டு.

வண்டுகொல்லி - ஓர்மரம், தேவதாரம்.

வண்டுணுமலர்மரம்-சண்பகமரம், வேங்கைமரம்.

வண்டுரை-எழுத்தில்லாவோசை.

வண்டோதரி - பஞ்சகன்னிகைகளிலொருத்தி.

வண்ணகம் - கலிப்பாமுடுகியல்.

வண்ணக்குழிப்பு - ஓரோசை.

வண்ணமகள்-கோலஞ்செய்வாள்.

வண்ணம் - அழகு, இராகம், ஒப்பனை, குணம், சந்தம், சந்தனம், சாந்துப்பொது, நன்மை, முடுகியல், நிறம், வகை, வடிவு, வாசனை.

வண்ணூர் - ஏகாலியர்.

வண்மை - அழகு, ஈகை, குணம், புகழ், மெய்மை, வளமை, விதம்.

வதந்தி - கதை, பேச்சு.

வதம் - கொலை.

வதரி - இலந்தை.

வதனம் - முகம், முக்கோணத்தின்மேற்கோணம்.

வதானியன் - குபேரன், வரையாது கொடுப்போன்.

வதி - சேறு, வழியென்னேவல், வழி.

வதிதல் - தங்கல்.

வதிரன் - செவிடன்.

வதிவு - இருத்தல்.

வதின்மொழி - பிரதிவாக்கு.

வதி - கொலைகாரன்.

வது - மகன் மனைவி, மனைவி, பெண்.

வதுகை - மனைவி.

வதுவடி - பாலை.

வதுவர்-குதிரைப்பாகர், யானைப்பாகர்.

வதுவை - கலியாணம், வலுவந்தம், வாசனை.

வதூ - புதுமணப்பெண், பெண், மனைவி.

வதூடி - மருமகள்.

வதை - உபத்திரவம், கொலை, துன்பம், தேவதை, வதையென்னேவல்.

வதைத்தல் - கொல்லல்.

வதோபாயம் - கொலைக்கேதுவான உபாயம்.

வத்தகமை } வத்திப்பு, வியா
வத்தகம் } பாரம்.

வத்தகன் - செட்டி, வியாபாரி.

வத்தசாலம் - நிகழ்காலம்.

வத்தகானம் - கருமம், சங்கதி, நிகழ்காலம், நிகழ்ச்சி.

வத்தர் - வத்திரு.

வத்தல்-சிறுவெள்ளல், செத்தல்.

வத்தனை - பெருக்கம், வமிசம்.

வத்தாக்கு } ஓர்கொடி.
வத்தாலை }

வத்தி - இரத்தினத்தின் கீழ்ப் பதிக்குந்தகடு, சீலைத்தொங் கல், திரிச்சீலை, திரிவாய்ப் பெட்டி, பரிமளத்திரவியங் களைக்கூட்டி யரைத்துச்செய்த வத்தி, வத்தியென்னேவல், வரி, விளக்கு, விளக்குத்தகழி.

வத்தித்தல் - பெருகல்.

வத்தியதானம் } கொலைக்களம்.
வத்தியபூமி }

வத்தியபாலன் - சிறைச்சாலைக் காவற்காரன்.

வத்தியம் - மரணம்.

வத்தியன் - வதைக்கப்படுவதற் குரியவன்.

வத்திரசோதினி - எலுமிச்சை.

வத்திரபட்டம் - நெற்றிப்பட்டம்.

வத்திரபுத்திரிகை - சித்திரப் பாவை.

வத்திரபேதகன் - தையற்காரன்.

வத்திரம் - சீலை, போர்க்கருவி, முகம்.

வத்திரி - தோல்வார்.

வத்து } பொருள்.
வஸ்து }

வத்துதாரணை - நவதாரணை யொன்று.

வத்துநிச்சயம் - பிரபஞ்சகாரண மாய கடவுளுண்டென்றும் அவன் யாவன் என்றுங்கண்ட தீர்ப்பு.

வத்துபரிச்சேதம் - ஒருபொரு ளிஃதாகும், ஒருபொருளிஃ தன்றென்பது.

வத்துவித்யாபதி - ஓர் சிற்பநூல்.

வத்தூரம் - பொன்னூங்கண்ணி.

வத்தேந்தி - கதவு நிலைக்குமேல் வைக்குஞ் சுவர்தாங்கி.

வத்தை - ஓர் மரத்தோணி, சோற்றி.

வத்தைவெட்டு - சோற்றிவெட்டு.

வநசகர்ப்பன் - பிரமன்.

வநசந்தனம் - அகில், தேவதாரம்.

வநசந்த்ரிகை - மல்லிகை.

வநசன் - பிரமன்.

வநசாகம் - காட்டாடு.

வநஜாசனன் - பிரமன்.

வநஜாசனை - இலக்குமி, திரு மகள்.

வநஜநாபி - திருமால்.

வநமல்லிகை - காட்டுமல்லிகை.

வந்தனமாலை - வாயிலிற்கட்டுந் தோரணம்.

வந்தனம் - சாஷ்டாங்கமாகப் பணிதல், பணிதல், முகம், விநயம்.

வந்தனை - ஆராதனை, வணங்கல்.

வந்தி - ஏணி, மலடி, வந்தியென்னேவல், வருத்தம், வாராவதி.

வந்திகட்டுதல் - கட்டாயம்பண்ணுதல்.

வந்திகன் - கவிஞர், புகழ்வோர், மங்கலபாடகர்.

வந்தித்தல் - பங்கம்பாளை, புகழ்தல், வணங்கல்.

வந்தியர் - புகழ்வோர், மங்கலபாடகர், மலடிகள்.

வந்தியாபுத்திரன் - மலடிமகன், (இல்பொருளுவமை)

வந்து - காற்று.

வந்தை - பெருமை, மலடி.

வந்த்ரம் - கலியாணம்.

வந்த்ரன் - பூசித்தற்குரியோன்.

வபனம் - சுக்கிலம், மழித்தல். முண்டிதம், விதைத்தானியம்.

வபிலன் - பிதா.

வபு - உடல்.

வபை - வயிற்றிணுபிக்குள் வெண்டுகில்போன்ற புரையாகியநிணம்.

வப்பிரம் - ஈயம்.

வப்பு - இடைவேற்று.

வமநம் - சத்திபண்ணல், வாந்தியெடுத்தல்.

வமநீ - அட்டை, பருத்தி.

வமம் - வமநம்.

வமி - அக்கினி, ஆர்த்தன்,வாந்தி.

வமிசம் - சந்ததி, சுற்றம், பரம்பரை.

வம்படித்தல் - சரசம்பண்ணல், தீங்குசெய்தல், தீதுபேசுதல், நிந்தித்தல்.

வம்பம் - சாலங்கபாஷாணம்.

வம்பலர் - அயலோர், புதியோர்.

வம்பல் - திசை.

வம்பன் - சோரபுத்திரன், துஷ்டன்.

வம்பி - கருவண்டு, சோரபுத்திரி, துஷ்டை.

வம்பு-அசப்பியம். கயிறு,சண்டை, தீச்சொல், நிலையின்மை, புதுமை, மிடா, முலைக்கச்சு, வாசனை, வீம்பு.

வம்புத்தனம் - நேரின்மை படிப்பு.

வம்புப்பாளை - பருவந்தப்பி வரும் பாளை.

வம்புப்பேச்சு - வீண்வார்த்தை.

வயங்குதல் - வசக்குதல்.

வயங்கல் - ஒளிசெய்தல், நடத்தல்.

வயசு - வயது, வாலிபம்.

வயணம் - வகை.

வயது - வயசு, யௌவனம்.

வயந்தம் - வசந்தம்.

வயப்படுதல் - வசப்படுதல்.

வயப்படை - வெற்றிப்படை.

வயக்கொடி - வெற்றிக்கொடி.

வயப்புலி - சிங்கம்.

வயமா - குதிரை, சிங்கம், புலி, யானை,

வயம் - ஆடு, இரும்பு, குதிரை, நீர், பறவை, வசம், வலி.

வயல் - கழனி, மருதநிலம், வெளி.

வயல்செட்டி - ஓர் செட்டி.

வயவரி - புலி.

வயவர் - படைவீரர்.

வயவன் - கரிக்குருவி, காதலன், தலைவன், திண்ணியன், வலியன், வீரன்.

வயவீரர் - வெற்றிவீரர்.

வயவு - ஆசை.

வயவை - வழி.

வயளை - பசளை.

வயற்கல் - வெள்ளைச் சுக்கான்கல்.

வயற்சார்பு - மருதநிலம்.

வயற்சுள்ளி - பொரிப்பூண்டு.

வயற்செம்பை - ஓர் செம்பை.

வயன்கட்டு - வசன்கட்டு.

வயா - ஆசை, கருப்பநோய் நடுக்கம்.

வயாவு - ஆசை, கருப்பம், வருத்தம்.

வயானம் - பறவை.

வயிரமணி - ஓர்வகைப் பொன் மணி, வச்சிரம்.

வயிரம் - கூர்மை, சலஞ்சாதித்தல், சினம், தண்டாயுதம், திருவோணம், பூணைக் கட்டுவது. மரவயிரம், வச்சிரமணி, வச்சிராயுதம், வாளியின் தகடு.

வயிரவன் - ஓர் கடவுள்.

வயிரவூசி - முத்துத்துளைக்குமூசி.

வயிரித்தல் - வயிரமாதல், வலுத்தல்.

வயிரியம் - மயிர்ச்சீலை.

வயிரியர் - கூத்தர், பாணர்.

வயிர் - ஊதுகொம்பு.

வயிறு - உதரம்.

வயினம் - பறவை.

வயின் - இடம், ஏழனுருபு, வயிறு, வீடு.

வயுநம் - ஞானம், தேயாலயம்.

வயோதிகம்-கிழத்தன்மை, விருத்தாப்பியம்.

வயோவங்கம் - ஈயம்.

வரகவி - தேவருட்பெற்றுப் பாடும் புலவன்.

வரகு - ஓர் தானியம்.

வரகுதிரி - வகுரியிலோர் வகை.

வரங்கொடுத்தல் - வரமருள்தல்.

வரடம் - அன்னம், ஓர் புழு மாட்டு. முல்லை.

வரடி - அன்னப்பேடை.

வரட்சி - வரள்வு.

வரட்சுண்டி - ஓர் செடி.

வரணசி - வாரணசி.

வரணம் - ஒட்டகம், சூழ்தல், நியமித்தல், பால், மதில், மறைத்தல்.

வரண்டகம் - உண்டை, சுவர் முகப்பரு, யானைமேற்றவிசு.

வரண்டம் - சாலை, தூண்டிற் கயிறு, புற்குவியல், முகப்பரு.

வரண்டாலு - ஆமணக்கு.

வரதகம் - அனுக்கிரகக் குறிப்பாக இதயத்துக்குச் சமீபமாய்க் கையுறுவித்தல்.

வரதனு - அழகு.

வரதன் - அரன், அரி, உபகாரி, வரமருளத்தக்கோன்.

வரதாநம் - விரும்பின வரங்களைக் கொடுத்தல்.

வரதாரு - தேக்குமரம்.

வரத்து - வருகை, வருமானம்.

வரநதி - கங்கை.

வரத்தருவான் - வில்லிப்புத்தூரான்.

வரப்பார்த்தல் - வரவுகாத்தல்.

வரப்பிரதானம் - நன்கொடை.

வரப்பிரதை - அகத்தியன்மனைவி.

வரப்பு - எல்லை, வரம்பு.

வரப்புள் - வயல்.

வரம் - அடைக்கலாங்குவி, ஆசீர்வாதம், எறும்பு, கையிட்டுக் கொள்ளல், சூழல், தேவவீதை, நவநிதியிலொன்று, மஞ்சள், மேன்மை, விருப்பம்.

வரம்பு - அணை, எல்லை, ஒழுங்கு, வழி.

வரம்புகட்டுதல் - அணைகட்டுதல், எல்லைகட்டுதல், முடித்தல்.

வரயோகம் - நித்தியயோகத் தொன்று.

வரருசி - ஓர் புலவன்.

வரர் - மேலோர், வானோர்.

வரலாறு - ஒழுங்கு, மூலம்.

வரலாற்றுவஞ்சி - ஓர் பிரபந்தம்.

வரல் - வருதல்.

வரவர்ணினி - இலக்குமி, ஓர் நிறம், கற்புடையாள், கௌரி, சரசுவதி. பெண், மஞ்சள்.

வரவர-மேலும்மேலும், வழிபாடு.

வரவிடுதல் - அனுப்புதல்.

வரவிருத்தன் - சிவன்.

வரவு - வருங்காலம்.

வரவுகாத்தல் - வருதலைக் காத்திருத்தல்.

வரவை - விளையுட்பாத்தி.

வரளாரை - ஓர் செடி.

வரள்தல் - காய்தல்.

வரன் - கணவன், சிவன், மருமகன்.

வரன்முறை - ஊழ், வரலாறு.

வரன்றல் - கொழித்தல்.

வராகம் - திருமாலவதாரத்தொன்று. பதினெண் புராணத்தொன்று, பன்றி, போர், மலை.

வராகனிடை - ஒன்பது பணவிடை கொண்ட நிறை.

வராகன்-ஓர் நாணயம், திருமால்.

வராகாதனம் - காலுங்கையுமூன்றிக் கவிழ்ந்துநிற்பது.

வராகி - ஓர் சத்தி.

வராகிமாலை - ஓர் பிரபந்தம்.

வராங்ககம் - லவங்கப்பட்டை.

வராங்கி - மஞ்சள்.

வராங்கம் - உடல், தலை, யானை.

வராங்கனை - உருவிற் சிறந்தவள், கூந்தற்பனை.

வராசனன் - வாயிற்காப்போன், வேசிக்கள்வன்.

வராடகம் - ஓர் தேயம், கயிறு, தாமரைக்காய், பலகறை.

வராடி - ஓரிராகம், பலகறை, முறுக்கு நூற் சீலை.

வராரோகன் - யானைப்பாகன்.

வராலகம் - லவங்கம்.

வராலி - ஓர் செடி.

வராளி - ஓரிராகம், சந்திரன்.

வரி - அக்கினி, இசைப்பாட்டு, எழுத்து, கடல், குடியிறை, தேமல், நிரை, நீளம், நெல், வடிவு, வண்டு, வரியென்னேவல், வழி, விரலிறை.

வரிக்கடை - வண்டு.

வரிக்குதிரை - கல்லணையில்லாதேறு குதிரை.

வரிக்கோரை - ஓர் புல்.

வரிசந்தி - நாற்றெருக் கூடுமிடம்.

வரிசி - தூண்டில்.

வரிசிலை - வரிந்தசிலை.

வரிசை - ஒழுங்கு, சங்கை, முறைமை.

வரிசைக்குப்பச்சை - நாகப்பச்சை.

வரிசைகொண்டாடல் - சங்கை கொண்டாடல்.

வரிச்சல் - கலாகை.

வரிட்டன் - சிரேஷ்டன்.

வரிதல் - எழுதல், கட்டல், சித்திரமெழுதல்.

வரித்தல் - கட்டல், நியமித்தல், பூசுதல்.

வரிப்பணம் - வீதமாயிருக்கும் இறை.

வரிப்புலி - ஓர் புலி.

வரிப்புறம் - அணில்.

வரியான் - சித்தியயோகத்தொன்று.

வரிவடிவு - எழுதியவடிவு.

வரிவடிவெழுத்து - வட்டஞ்சதுர முதலியவாக வெழுதிக்கொள்ளப்பட்டது, கட்புலனுலறியப் படுவது.

வரீயான் - ஓர் யோகம், சிறு பெண், யோக்யன்.

வருகம் - இலை, பரிவாரம், மயிற்ருேகை.

வருகாலம் - எதிர்காலம்.

வருகை - வரவு.

வருக்கம் - கூட்டம், உயிர்வருக்கம், மெய்வருக்கம், உயிர்மெய் வருக்கம்.

வருக்களம் - கனவருத்தம்.

வருக்கக்கோவை - ஓர் பிரபந்தம்.

வருக்கமாலை - ஓர் பிரபந்தம்.

வருக்கமூலம் - வருக்கத்தொகையினின்றதன் மூலமறிதல்.

வருக்கம் - அத்தியாயம், இனம், ஒழுங்கு, குலம், கூட்டம், சதுரம், சமமாகிய வீரெண்ணின் பெருக்கம், வகை.

வருக்கவெதுகை - சேர்வையினவெழுத்துக்களாளுகு மெதுகைத் தொடை.

வருக்கவெழுத்து - சேர்வையினவெழுத்து.

வருக்கு - கஞ்சி.

வருக்கை - பலா.

வருடபலம் - வருஷத்திற்குக் கண்ட பலன்.

வருடப்பிறப்பு - புதுவருஷத் தோற்றம்.

வருடம், வருஷம் - ஆண்டு, கண்டம், மழை.

வருடல் - தடவல்.

வருடவான் - அண்ணகன்.

வருடன் - மிலேச்சன்.

வருடாகாலம் - மழைகாலம்.

வருடாங்கம் - மாதம்.

வருடுதல் - வருடல்.

வருடை - எண்காற்புள், குறும்பாடு, மேடவிராசி, வரையாடு.

வருட்டம் - வேம்பு.

வருட்டல், வருட்டுதல் - வற்புறுத்தல.

வருணசுதா - யமன் மனைவி.

வருணதருமம் - அந்தந்த வருணத்திற்குரிய கிருத்தியம். அஃது; அந்தணர்க்கு—ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்; க்ஷத்திரியர்க்கு—வேட்பித்தல், ஈதல்; வைசியர்க்கு—கொள்ளல், விற்றல்; பசுக்காத்தல், கிருஷிபண்ணல், வேட்டல்; சூத்திரர்க்கு — சுயங்கிருஷியால் வந்த பயனீதல், கிருஷிபண்ணல், பயிரிடுதல், கோக்காத்தல்.

வருணம் - எழுத்து, கீர்த்தி, குலம், சாதி, நிறம், நீர், பிரகாசம்-பொன், பொன்னுரை, மஞ்சள், மாதிரி, யானை, வாசனை, விதம், வேஷம்.

வருணவித்து - முத்துச்சிப்பி.

வருணவில் - வானவில்.

வருணநாள் - சதயநாள்.

வருணனை-தோத்திரம், புகழ்ந்து கூறல், வன்னிப்பு, விரித்துக் கூறல்.

வருணன் - சமுத்திரம், துவாதசாதித்தரிலொருவன், மேற்றிசைப்பாலன்.

வருணாசாரம் - சாதியொழுக்கம்.

வருணாஸ்திரம் - வருணபாணம்.

வருணித்தல் - வன்னித்தல்.

வருதல் - நடத்தல், பிறத்தல், வருகை.

வருத்தகம்-வியாபாரம், வத்தகம்.

வருத்தகன்-வத்தகன், வியாபாரி.

வருத்தப்படுதல் - துன்பப்படுதல்.

வருத்தம் - உள்ளக்களிப்பு, துன்பம்.

வருத்தல் - துன்புறுத்தல்.

வருத்தனம் - உண்டை, சம்பளம், சீவனம், தொழில், பெருகுதல், வத்திப்பு, வழி.

வருத்தனி - நீர்க்குடம், விளக்குமாறு.

வருத்தனை - பெருகுதல்.

வருத்தி - இரத்தினங்களின் கீழ்ப்பதிக்குந் தகடு, வருத்தியென்னேவல்.

வருத்தித்தல் - வளர்தல்.

வருத்துதல் - வருத்தல். வருவித்தல்.

வருத்துலம் - வட்டவடிவம்.

வருத்தல் - துன்புறல், பிரயாசம்படல்.

வருபிறப்பு - மறுபிறப்பு.

வருபுனல் - யாறு. வேற்றுநீர்.

வருமதி } வரவு.
வருமானம் }

வருமொழி - நிலைமொழிக்கும் பின்மொழி.

வருவாய் - வரலாறு, வரவுகட்கான வேது, வருமானம்.

வருவித்தல் - வேண்டியதொன்றைப் பொருந்த விரித்துக் கொள்ளல்.

வரூதம் - இருப்பிடம், கவசம், காவலான இடம், தேரைப் பாதுகாக்கும் புலித்தோன் முதலிய தோல்.

வரூதினி - சேனை, படை.

வரேண்யம்-குங்குமம், சிரேஷ்டம்.

வரை - அளவு, கரை, சிறுவரம்பு, மலை, மூங்கில், வரை யென்னேவல், வரைவு. விரலிறை

வரைகம்பி - கம்மாளர் கருவியி ஹென்று.

வரைதல் - எழுதல், கொள்ளல், சித்திரமெழுதல், சுற்றிவரை தல், நீக்கல், மாற்றல், விவா கஞ்செய்தல்.

வரைப்பு - எல்லை, மதில்.

வரையறமகளிர்-மனையில் வாழுந் தெய்வப்பெண்கள்.

வரையறவு - வரையறை.

வரையறுத்தல் - எல்லைப்படுத் தல், மதித்தல், வளைத்தல்.

வரையாதுகூறல் - குறியாது சொல்லல்.

வரைவிடைவைத்துப் பொருள் வயிற்பிரிதல் - அகம்பொருட் டுறையினென்று.

வரைவின்மாது - வேசி.

வறைவு - அளவு எல்லை, நீங்கல், பிரிவு, மணம், மாறுபாடு, வரைதல், வரையப்பட்டது.

வரைவுமலிவு - வரைவிற்குரிய கிளவித்தொகை.

வர்ஜநம் - துன்பம், மரணம், விடுதல்.

வர்ஜநீயம் - விலக்கத்தக்கது.

வர்ணகம் - சந்தநம், திலகமரம், மண்டலம்.

வர்ணகாரன் - சித்திரக்காரன்.

வர்ணகாரிகை - கிலத்திலிடுங் கோலம்.

வர்ணதம் - ஓர்வகைச் சந்தனம்.

வர்ணப்ரசாதநம் - அகில்.

வர்ணரூபிணி - சரசுவதி.

வர்ணவதி - மஞ்சள்.

வர்ணி - பொன்.

வர்த்தகம் - ஜீவனோபாயம்.

வலக்காரம் - பொய்.

வலங்கமர் - ஓர் சாதியர்.

வலங்காரம் - மேளத்தின் பசை யிட்டபுறம்.

வலங்கை - வலக்கை, வலப்புறம்.

வலங்கொள்ளல் - வலம்வருதல், வெற்றியடைதல்.

வலசல் - அந்நியகிரகப்பிரவேசம்.

வலசாரி - வலமாய் சுற்றிப் போதல்.

வலசு } கூட்டம்.
வலசை }

வலது - செயல், வலப்பக்கம், வல்லமை

வலத்தல் - சொல்லல், நினைத்தல், வளைத்தல்.

வலத்திடல் - சொல்லல்.

வலநாடு - ஒரூர்.

வலந்தம் - வசனம், வளைவு.

வலந்திரி - ஓர் கொடி, வலத்துக் குச் சுற்றுங் கொடி.

வலப்பாரிசம் - வலப்புறம்.

வலமன் - வலப்பக்கம்.

வலம் - இடம், எழுமுருபு, கனம், மேல், வலப்பக்கம், வலி, வெற்றி.

வலம்பம் - நிறுதிட்ட வரி.

வலம்புரி - நந்தியாவட்டம். வலப் புரி, வலம்புரிச்சங்கு.

வலயம் - எல்லை, கடல், குளம், கைக்கடகம், சுற்று, வட்டம், வட்டவடிவு.

வலவன் - சமர்த்தன், தேர்ப் பாகன், வெற்றியாளன்.

வலவை - இடாகினி, காளி, காளி யேவல் செய்வாள், வல்லவள், வல்லோன், விநாயகன்றேவி.

வலவோட்டு - சூரியன் முத லிய சத்தக் கிரகங்களின் சுற்று.

வலன் - ஓரஸுரன், வலப்பக் கம், வலி, வல்லவன், வெற்றி.

வலாகம் - கொக்கு, நீர்.

வலாசகம் - குயில், தவளை.

வலாட்டியன் - தத்துவசாலி.

வலாரி - இந்திரன்.

வலாற்காரம் - பலாத்காரம்.

வலி - இரேகை, ஓரலங்காரம், ஓர் நோய், குரங்கு, பற் றிரும்பு, வரி, வலியென்னே- வல், வல்லமை, வல்லெழுத்து.

வலிக்கட்டு - வீணையிலோருறுப்பு.

வலிக்கென - தெளிவாய்.

வலிசம் - தூண்டில்.

வலிச்சலன் - அறமெலிந்தவன், பிடித்தது விடாதோன்.

வலிச்சல் - சாய்ந்தது, வரிச்சு.

வலிச்சற்கொடி - ஓர் செடி.

வலிதம் - அசைவு, சூழ்வு.

வலிதல் - தங்கல், துணிதல் வலிந்து கோடல்.

வலிது - வலியது.

வலித்தல் - இழுத்தல், உடன் படல், ஏங்கல், கடினமாய் வாங்கல், காய்தல், தோணி தூண்டல், நினைத்தல், மரக் கலப்பாயுயர்த்தல், மெல் லெழுத்தை வல்லெழுத்தாக் கல், வயிற்றுள் முறுக்குதல், வலிவலித்தல், வளைத்தல், வன்மையாயுச்சரித்தல்.

வலித்துக்கோடல் - அருமையிற் கருத்துக்கொள்ளல்.

வலிபம் - கீழேழுலகத்தொன்று.

வலிப்பு - இழுப்பு, வலி.

வலிமுகம் - குரங்கு.

வலிமை - வன்மை.

வலிமைசெய்தல் - பலபந்தம் பண்ணல்.

வலிய - தாளுக.

வலியன் - கரிக்குருவி, வலிபத மானது, வலியுடையோன், வல்லவன்.

வலியான் - ஓர் பருந்து, கரிக் குருவி, வலியுடையோன்.

வலியுறுத்தல் - உறுதிப்படுத்தல், பலப்பித்தல், வல்லமைப்படுத்துதல்.

வலீகம் - தாழை.

வலீசம் - தேன்.

வலீமுகம் - குரங்கு.

வலு - எட்டு, ஓர் பசைமருந்து, கனம், கொசுகு, பலம், பற்று.

வலுத்தல் - திரப்படுத்தல், பலத்தல்.

வலுப்பு - திரம், பலப்பு.

வலுவந்தம் - பலாத்காரம்.

வலூகம் - தாமரைக்கிழங்கு.

வலைச்சி - நெய்தநிலப்பெண்.

வலைஞர் - நெய்தநிலமாக்கள்.

வலைப்படல் - சிறைப்படல், மயக்கிலகப்படல், வளையிலகப்படல்.

வலைச்சேரி - நெய்தனிலம்.

வலையர் - நெய்தனிலமாக்கள்.

வலையன்-ஓர்சாதியன், ஓர்சாமை, பரதவன்.

வல் - கச்சு, சீக்கிரம், சூதாடு கருவி, மேடு, வலி.

வல்கி - வீணை.

வல்லகி - வீணை.

வல்லடி - வலுபந்தம், வல்லபம்.

வல்லதம் - கொலை, மூடுதல்.

வல்லபம் - கதியுள்ள குதிரை, பிரியம், வல்லமை.

வல்லபன் - இடையரிற்றலைவன், குதிரைமேல் விசாரிப்புக்காரன், நாயகன், பிரியமுள்ளோர், மேல்விசாரணைக்காரன், வல்லோன்.

வல்லபை - பிரியநாயகி, மனைவி.

வல்லமை - வல்லபம்.

வல்லவரி - கொடி, தளிர், பசுங்காய், பூங்கொத்து.

வல்லவன் - இடையன், புருஷன், வல்லான், வீமன்.

வல்லாரை - ஓர் பூடு, கேட்டை நாள்.

வல்லார்-சமர்த்தர், மாட்டாதவர்.

வல்லாளன் - திண்ணியன், வல்லான்.

வல்லாறு - வல்லெழுத்தாறு.

வல்லி - அளவு, ஆய்ப்பாடி, கலியாணம், கால்விலங்கு, நீங்கல், படர்கொடி, பிரிதல், பூமி, பெண், வள்ளிக்கொடி.

வல்லிகம் - கொடி, மிளகு.

வல்லிகை - காதணி, யாழ்.

வல்லிசம் - மிளகு.

வல்லிசை - உச்சவிசை, பாம்பு.

வல்லியம் - இடையரூர், கொல்லிமலை, புலி.

வல்லினம் - வலிதாயுச்சரிக்குமெழுத்தின் பகுதி, வன்கணம்.

வல்லுயிர் - அரிதாய்ப்பிழைத் திருக்குமுயிர்.

வல்லூரம் - காடு, காட்டுப்பன்றி யிறைச்சி, தனிமை, பாழ் நிலம், புற்றரை, பூங்கொத்து, மணல், வயல், வஞ்சரம்.

வல்லுவம்-அடைப்பை, கைப்பை.

வல்லுளி - பன்றி.

வல்லுனர் - வல்லோர்.

வல்லூகம் - ஆண்குரங்கு, கரடி, மூசு.

வல்லூறு - ஓர் பருந்து.

வல்லெழுத்து - வன்மையாயுச்சரிக்குமெழுத்து, வலி, வன்மை, வன்கணம், பரிசம், வல்லினம்.

வல்லெனல் - அனுகரணவோசை.

வல்லை - ஓர் நோய், கருப்பு, காலவிரைவு, கோட்டை, பெருங்காடு, மேடு, வட்டம், வருத்தம், வலிமை.

வல்லையம் - எறியீட்டி.

வல்லொற்று - வல்லினமெய்.

வல்லோரொழிப்பு-ஓரலங்காரம், (அபந்நுதி யுருவகத்தொன்று)

வல்லோன்-செய்யுள் செய்ய வல்லவன், வலிமையுடையோன்.

வல்வினை - வலியவினை.

வவ்வல் - வாருதல்.

வவ்வுதல் - கிரஹித்தல்.

வழக்கச்சொல் - இயற்சொல்.

வழக்கம் - நடைபடி, வழங்குதல்.

வழக்கறிதல் - நடையறிதல்.

வழக்காடுதல் - வழக்குச்செய்தல்.

வழக்கிடுதல் - வழக்காடுதல்.

வழக்கியல் - வழக்குநடை.

வழக்கு - அறப்பான் மூன்றனுளொன்று, அது—பொருள் காரணமான வியாச்சியம், நியாயம்பேசுதல், உலகவழக்கு, செய்யுள் வழக்கு, வழக்கம், வியவகாரம்.

வழக்குக்கேட்டல் - நியாயம் விசாரித்தல்.

வழங்கல் - ஆட்சிபண்ணல், இயங்குதல், ஈதல், உலாவல், சொல்லல், நடத்தல், மழைபொழிதல்.

வழங்காநடை - புதுநடை.

வழங்காமொழி- சொல்லத்தகாத சொல்.

வழங்காவழி - புதுக்கட்டு.

வழங்குதல் - வழங்கல்.

வழட்டுதல் - வழுந்துதல்.

வழப்பம் - வழக்கம்.

வழலிக்கை - சோர்பு.

வழலுதல் - வழுந்தல்.

வழலை - ஓர் பாம்பு, ஓர்மருந்து, கோழை, சவுக்காரம்.

வழலையுப்பு - சவுக்காரவுப்பு.

வழாநிலை - இலக்கணவிதிப்படி நிற்பது, இலக்கணம், திணை பாலிடங் கால முதலிய வழு வாது வழங்குவது.

வழாறு - நிறைபுனல்.

வழி - இடம், உண்டானவகை, எழுனுருபு, காரணம், திரட்சி, கடவை, பழமை, பின், மகன், மார்பு, முறைமை, வழிநூல், வழியென்னேவல்.

வழிகட்டுதல் - எத்தனம் பண்ணுதல், வகைபண்ணுதல், வழி மறித்தல்.

வழிகாட்டி - முன்மாதிரி வைப் போன், வழிநடத்துவோன்.

வழிகாணுதல் - நேர்வருதல், வயணம் பிடித்தல்.

வழிக்கரை - வழியருகு.

வழிக்குதல் - துடைத்தெடுத்தல்.

வழிக்கொள்ளுதல் - பயணப்படுதல்.

வழிச்செலவு - பயணச்செலவு, பயணம்.

வழிச்செல்வோன் - பதிகன்.

வழிதல் - மிகுந்து வடிதல்.

வழிதுறை - பயணப்போக்கு.

வழித்தல் - வழிக்குதல், மெழுகுதல், துடைத்தெடுத்தல்.

வழித்துணை - பாரம்பரியமான துணை, வழிநடையிற்றுணை.

வழித்தெய்வம் - குலதெய்வம்.

வழித்தோன்றல் - மகன்.

வழிநடை - பிரயாணம்.

வழிநாள் - பின்னைநாள், பின்வரு நாள்.

வழிநாற்பது - ஓர்செய்யுள்.

வழிநிற்றல் - பின்னிற்றல்.

வழிநூல் - முதனூல் வழியேவி கற்பித்துரைத்தநூல்.

வழிபடல் } கீழ்ப்படுதல், வணங்கல்.
வழிபடுதல் }

வழிபடுத்தல்-நேர்ப்படுத்தல், பயணப்படுத்தல்.

வழிபாடு-அப்பியாசம், ஆராதனை, தாழ்மை, வணக்கம், வழிபடல்.

வழிபாடுமறுத்தல் - அகப்பொருட்டுறையினொன்று.

வழிபார்த்தல் - வகைபார்த்தல், வரவு பார்த்தல்.

வழிப்படுதல்-நேர்ப்படுதல், வழி நடக்கத்துவக்கல், கீழ்ப்படுதல்.

வழிப்படுத்தல் - உட்படுத்துதல், ஒழுங்காக்கல், சரிவழியினடத்தல்.

வழிப்பறி - ஆறலை.

வழிமுறை - தலைமுறை, வழி முதல்.

வழிமொழிதல் - பின்னெடுத்துக் கூறல், வழிபாடுகூறல்.

வழிமோனை - மோனைகளி னொன்று.

வழியுரைப்போர் - தூதர்.

வழியெதுகை - ஒவ்வோரடிக் கண்ணும் முறையே சீர் களொன்றற்கொன்று எதுகை யாய் வருவது.

வழிவகை - இடம்பாடு, ஏது.

வழிவழியாய் - வமிசபரம்பரை யாய்.

வழு - இன்மை, ஈனக்கேடு, கேடு, தப்பு, பாதகம், வழுவென்னே வல்.

வழுக்கல் - அடித்தல், இழுக்கல், மறத்தல், மோதல்.

வழுக்காய் - இளங்காய்.

வழுக்கு - தவறு, நிணம், மறதி, வழுக்கென்னேவல்.

வழுக்குப்பாசி - ஓர் நீர்ப்பூடு.

வழுதலை - கத்தரி, புனத்திடு பொய்க்கழு, கண்டங்கத்தரி.

வழுதி - பாண்டியன்.

வழுது - பொய், வைக்கோல்.

வழுதுணை - கத்தரி.

வழுத்தல் } சொல்லல், துதித்
வழுத்துதல் } தல்.

வழுநிலை - திணைபாலிடங்கால முதலிய வழுவி வழங்குவது.

வழுந்தல் - காய்ப்பேறல்.

வழும்பு-அழுக்கு, நிணம், விலங் கின் குட்டிகள் பிறக்கும்போ திருக்கும் வழுவல், குற்றம்.

வழுவமைதி - திணைபாலிடம் முதலிய மாறுபட்டு வரினு மமைத்துக் கொள்ளத்தக்கது.

வழுவல் - இளநீர் வழுவல், சாய் தல், தப்புதல், வழும்பு, வழு வுதல்.

வழுவாளம் - நேர்மை.

வழுவிலி - குற்றமற்றவன்.

வழுவு - குற்றம், தவறு, வழு.

வழுவுடைக்காமம் - துரிச்சை, பிறர் பொருள் விரும்பல்.

வழுவுதல் - நீக்கப்படுதல்.

வழுவை - யானை.

வழூஉ - இலக்கணக் குற்றம், குற் றம்.

வழூஉ - வழுவிநிற்பது.

வழூஉச்சொல் - பிழைமொழி.

வழூஉச்சொற்புணர்த்தல் - குற்ற மான சொற்களைச்சேர்த்தல், நூற்குற்றம் பத்திலொன்று.

வழை - சுரபுன்னை.

வழைச்சு - இளமை.

வளகு - ஓர்செடி, இலை.

வளந்து - பெரியமிடா.

வளப்படுதல் - சீர்ப்படுதல், நேரா தல்.

வளப்பம் - கொழுப்பு, நன்மை, மாட்சிமை, வளமை.

வளப்பாடு - வளமை.

வளமடல் - ஓர்பிரபந்தம்.

வளமை - உபகாரம், கொழுப்பு, செல்வப்பொலிவு, நன்மை, மாட்சிமை.

வளமையர் - பூவைசியர், மாட்சிமையுள்ளோர், வேளாளர்.

வளம் - அழகு, கொழுப்பு, செல்வம், செவ்வை, செழிப்பு, தகுதி, நன்மை, பக்கம், பதவி, பலபண்டம், மாட்சிமை, வலி, வழி, வாறு.

வளயம் - வளையம்.

வளர்தல் - உண்டாதல் உயர்தல், கதித்தல், விர்த்தி.

வளர்த்தல் - உண்டாக்கல், வளரச்செய்தல், பரப்பல்.

வளர்த்துதல் - கிடத்துதல், சயனிப்பித்தல், பருப்பித்தல், உறங்கச்செய்தல்.

வளர்பிறை-பூருவபக்கச்சந்திரன்.

வளர்மயிர் - மயிற்குழற்சி.

வளவளத்தல் - பயனின்றிப்பிதற்றல்.

வளவளப்பு - பயனில்சொல்.

வளவன் - சோழன்.

வளவி - வீட்டிறப்பு.

வளவு - கொல்லை, வளைவு, வீடு.

வளவுதல் - கலத்தல், சூழ்தல்.

வளன் - வளம்.

வளாகம் - இடம், ஓர் நரகம், சூழ்ந்திடல், தினைப்புனம், வளைந்தவிடம்.

வளார் - இளங்கொம்பு.

வளாவல் - கலத்தல், வளைவு, வளைதல், சூழ்தல்.

வளி - ஓதம், காற்று, சூறைக்காற்று.

வளிசம் - தூண்டில்.

வளிமறை - கதவு.

வளு - இளமை, இளையது.

வளுந்தல் - தோல்வவ்வப்படல்.

வளுவல் - இளமை, வழுக்கத்தக்கது.

வளை - உத்திரம், கங்கணம், களங்கம், கைவளை, சக்கிரம், சங்கு, நுழைவளை, புற்று, வளையென்னேவல்.

வளைக்குதல் - கட்டல், கோணச்செய்தல், சூழுதல், தடுத்தல், நளினஞ்செய்தல், வாருதல்.

வளைச்சல் - சூழ்வு.

வளைதடி - பாராவலயம்.

வளைதல் - கட்டல், சுற்றுதல், சூழ்தல், தடுத்தல், வாருதல், கோணச்செய்தல்.

வளைபோழ்நர் - சங்கறுப்போர்.

வளைப்பு - உழவுசால், மதில், காவல், தடை, வளைத்தல்.

வளைமணி - அக்குமணி, சங்குமணி.

வளையகம் - சங்கு.

வளையக்கொடி - அண்ணந்தாள்.

வளையமிடுதல் - குமிழமாடுதல், சூழ்தல்.

வளையம் - எல்லை, குளம், கைவளை, சிதாங்கபாஷாணம், தவளை, தாமரையுட்சுருள், வட்டம்.

வளையல் - கண்ணாடிக்கரு, கைவளை, வளைவுள்ளது.

வளையாபதி - ஓரிலக்கியநூல், பஞ்சகாவியத்தொன்று.

வளைவாணி - துண்டல்.

வளைவு - பணிதரவு, வட்டம், வணக்கம், வணங்கல், வளைந்தது, வளைதல்.

வள் - ஒலிக்குறிப்பு, காது, காதுபற்றிரும்பு, நெருக்கம், வலி, வளம், வார், வாளுறை, வாள்.

வள்ளடி - செவிமூலம்.

வள்ளம் - ஓர்வகைச்சிறுதோணி, சிறுவட்டில், நாழிகைவட்டில், மரக்கால், வட்டில்.

வள்ளல் - அரசன், கிண்ணம், சிரேஷ்டம், பாம்பு, வரையாதுகொடுப்போன், வலியன், வள்ளைக்கீரை.

வள்ளன்மை - கொடைக்குணம்.

வள்ளி - ஆபரணம், ஓர் கூத்து, ஓர்கொடி, கைவளை, சுப்பிரமணியன்தேவி, படர்கொடி, பிரப்பங்கேடகம், திருவள்ளுவர் சகோதரி.

வள்ளிக்கண்டம் - சீந்தில்.

வள்ளிசு - நேற்றிமுழுதும்.

வள்ளியம் - ஊதுகுழல், மரக்கலம், மிளகு, மெழுகு.

வள்ளியோன் - வரையாதுகொடுப்போன்.

வள்ளூரம் - ஆட்டிறைச்சி, ஆவிளிறைச்சி, சூட்டிறைச்சி, தசை, புலால்.

வள்ளுவர் - திருவள்ளுவர்.

வள்ளுவர்குறள் - திருக்குறள்.

வள்ளுவன் - ஓர்சாதியான், புரோஹிதன், நிமித்தகன், வருங்காரியம்சொல்லுவோன்.

வள்ளுறு - வல்லூறு.

வள்ளை - உலக்கைப்பாட்டு, ஓர்கொடி.

வறகாலி - வெள்ளாடு.

வறகுசல் - கார்போகவரிசி.

வறக்காலன் - துடைகாலன்.

வறசமம் - குடசப்பாலை.

வறசுண்டி - செங்கருங்காலி.

வறடு - வரடு.

வறட்காமாலை - வரட்சி, வறள்வு.

வறட்சுண்டி - ஆடுதின்னாப்பாலை.

வறட்டல் - காயச்செய்தல், வறுத்தல்.

வறண்டி - குப்பைவாரி, வழிக்குங்கருவி.

வறத்தல் - காய்தல், சுருங்கல், வறுமையாதல்.

வறப்பு - குறைவு, வற்று, வற்றுதல், வறுமை.

வறல் - உலர்தல், வறுமை.

வறவு - கஞ்சி.

வறள் - வறுநிலம், பஞ்சம்.

வறிஞர் - தரித்திரர்.

வறிது - அற்பம், அறியாமை, குறைவு, சிறுமை, பயனின்மை, வீண்.

வறிதுநகைதோற்றல் - அகப்பொருட்டுறையிலொன்று.

வறியர் - தரித்திரர்.

வறுதல் - தீயாலுலர்தல்.

வறுநகை - புன்னகை.

வறுநிலம் - பாழ்நிலம்.

வறுமை - தரித்திரம், வெறுமை.

வறுமொழி - வீண்சொல்.

வறும்புனங்கண்டுமறுகல் - அகப்பொருட்டுறையிலொன்று.

வறும்புனம்-பாலைநிலம், விளைவு, கொள்புனம்.

வறுவிலி - அகதி.

வறை - துவட்டடற்கறி, பிண்ணாக்கு, பொரிக்கறி.

வற்கசங்கலிகிதம் - வருக்கசங்கலிகிதம்.

வற்கடம் - பஞ்சகாலம், வறப்புக்காலம்.

வற்கம் - கஞ்சி, குதிரைவாய்வார், சமமாகியவீரெண்ணின்பெருக்கம், மரப்பட்டை, மரவுரி.

வற்கராடம் - நகக்குறி, மத்தியானக்கிரணம்.

வற்கலம் - மரப்பட்டை, மரவுரி.

வற்கலை - மரவுரிச்சீலை.

வற்கித்தல் - ஓர் தொகையையத்தொகையாற் பெருக்கல்.

வற்கு - அழகு, ஆடு, கஞ்சி, சந்தனம்.

வற்சகம் - பசுக்கன்று, பிள்ளை.

வற்சநாபி - ஓர்மருந்து.

வற்சநீயம் - தள்ளத்தக்கது, நேரற்றது.

வற்சவம்-எருமை, பசுவிவற்றின் கன்று, ஓர்தேயம், குதிரைவாய்வார், மார்பு.

வற்சரம் - வருடம்.

வற்சித்தல் - தள்ளுதல், விலக்குதல்.

வற்சை - குழந்தை, மலட்டுப்பசு.

வற்பம் - அருமை, ஒறுப்பு, பஞ்சம், வன்மை.

வற்பு - உறுதி, வலி, வற்பம்.

வற்புறுத்தல் - உறுதிப்படுத்தல்.

வற்றம்-வறட்சி, வற்று, வறுமை.

வற்றல் - அடைகாய், உலர்தல், காய்ந்தது, ஒடிதல்.

வற்று - நீர்ச்சுருக்கம், வன்மை யுடையது.
வனகந்தம் - காட்டுக்கருணை.
வனகுத்தல் - ஒற்றன்.
வனகோசரன் - வனவாசி, வேட்டைக்காரன்.
வனசம் - தாமரை.
வனசரம் - பெருங்காடு, மூவின யானையிலொன்று.
வனசரர் - வனவாசிகள், வேடர்.
வனசரோசினி -காட்டுப்பருத்தி.
வனச்சார்பு - முல்லைநிலம்.
வனதம் - முகில்.
வனதித்தம் - குடசப்பாலை.
வனதீபம் - சண்பகம்.
வனபலம் - யானைத்திப்பிலி.
வனபிப்பிலி - காட்டுத்திப்பிலி.
வனப்பிரியம் - குயில்.
வனப்பு - அலங்காரம், அழகு.
வனமல்லி - காட்டுமல்லி, மௌவல்.
வனமா - கொடிவேலி, முதிரை.
வனமாலி - திருமால், பிரமி.
வனமூதம் - முகில்.
வனம் - அழகு, ஊர்சூழ்ந்த சோலை, காடு, குடியிருப்பு, சுடுகாடு, துளசி, நீர், புற்று, மலையருவி, மிகுதி, வழி, வீடு.
வனருகம் - தாமரை.
வனவிலங்கு - காட்டுமிருகம்.
வனூகி - முயல்.
வனிதம் - சிறப்பு.
வனிதை - பெண், மனையாள்.
வனீகன் - யாசகன்.
வனீரம் - காட்டுத்திப்பிலி.
வனைதல் - அலங்கரித்தல், செய்தல்.
வனோற்சாகம் - காண்டாமிருகம்.
வன்கட்பேதை-பாலைநிலப்பெண்
வன்கட்பேதையர்-குறிஞ்சி நிலப் பெண்கள், பாலைநிலப் பெண்கள்.
வன்கணம் - வலியுடையவருக்கம், வல்லெழுத்து வழுக்கம்.
வன்கண் - அசைவின்மை, கொடுமை, கொடும்பார்வை, பொறுமை, வீரத்தன்மை, வைரம்.
வன்கண்ணர் -வைராக்கியமுள்ளவர்.
வன்காய் - கடுங்காய்.
வன்கிழம் - அறமுதுமை
வன்குணம் - வைரத்தனம்.
வன்கை - வைராக்கியம்.
வன்சுரம் - பாலைவனம்.
வன்சொல் - கடுஞ்சொல்.
வன்சொல்விலக்கு- ஓரலங்காரம்.
வன்பகை - கடும்பகை.
வன்பரணர் - ஓர் புலவர்.

வன்பாடு - வலியது.

வன்பால் - குறிஞ்சிநிலம், பாலை நிலம்.

வன்பு - வன்மை, பொல்லாங்கு.

வன்புலம் - முல்லைநிலம்.

வன்புறை - வற்புறுத்தல்.

வன்பொறை - கடும்பாரம், பெரும்பாரம்.

வன்மத்தானம்-உயிர்நிலை,நொய்ய விடம்.

வன்மம் - வைராக்கியம், வர்மம்.

வன்மனம் - கல்நெஞ்சு.

வன்மி - பகைஞன்.

வன்மீகி - வால்மீகி.

வன்மீன் - முதலை.

வன்முகிழ் - தேங்காய்க்காம்பி னடி.

வன்மை - கடினம், கனமாயிருப் பது, இஃது—எண்வகையூறு களிலொன்று, கருத்து, பலம், வலி, வலோற்காரம், வல் லெழுத்து.

வன்மொழி - உறுதிப்பேச்சு, கடுஞ்சொல்.

வன்றி - பன்றி.

வன்றொடர் - வல்லெழுத்துத் தொடர்ந்து வருவது.

வன்னக்கல் - மந்தாரச்சிலை.

வன்னம் - அழகு, எழுத்து, சித் திரிப்பு, நிறம், வர்ணம்.

வன்னி - ஓர்மரம், கிளி, கொடி வேலி, சேங்கொட்டை, தீ, பிரம்மசாரித்துவம்.

வன்னிகருப்பம் - இலிங்கம், மூங் கில்.

வன்னிகர் - பொடுதிலை.

வன்னிசகாயன் - காற்று.

வன்னித்தல் - உவமித்தல், சிறப் பித்தல், வர்ணித்தல்.

வன்னித்தீ - நவசாரம்.

வன்னிப்பு - வர்ணனை.

வன்னிமை - ஓர்சாதி, வன்னி யருக்குரியமேன்மை.

வன்னியர் - ஓர்சாதியார், காட் டில் வசிப்பவர்.

வன்னிலம் - உரநிலம்.

வன்னிலோகம் - செம்பு.

வன்னிவண்ணம் - செந்தாமரை, செவ்வாம்பல்.

வன்னிவீரம் - பொன்.

வன்னெஞ்சன் - வயிரநெஞ்சன்.

வன்னெஞ்சு - வயிரநெஞ்சு.

வன்னெத்து - நத்தைச்சூரி.

வா

வா - ஓரெழுத்து, வாவென்னே வல்.

வாககன் - காக்காரன், குதிரைக் காரன்.

வாகசம் - நீர்ப்பாய்ச்சல், பெரும் பாம்பு.

வாகசி - குத்திரப்பேச்சு.

வாகடம் - ஓர்வைத்தியநூல்.

வாகம் - இடபம், எருமைக்கடா, ஓரளவு, காற்று, குதிரை, செங்கீரை, பலண்டுறுவபாஷாணம், புயம், வாகனம்.

வாகரம் - கோணும், சாணைக்கல், தடை, நிச்சயம், வடவாமுகம்.

வாகரன் - பண்டிதன், வீரன்.

வாகனத்தானம் - நான்காமிடம்.

வாகனம் - ஏறிநடத்தப்படுபவை, சிலை, பரி, முயற்சி.

வாகன் - அழகன், காவாள்.

வாகாசனி - புத்தன்.

வாகிடி - நீர்ப்பன்றி.

வாகித்தம் - யானைக்கதுப்பு.

வாகியம் - வாகனம், வெளி, புறத்தது, புறத்திற்குரியது.

வாகிருவன் - அருகன், சாதுரியன்.

வாகினி - படை, படையிலோர் தொகை, அது—கணகமூன்று கொண்டது, பாதிரி.

வாகினிநிவேசம் - பாசறை.

வாகினீபதி - சமுத்திரம், சேனுபதி.

வாகிகம் - பண்டி, பெரும்பாறை.

வாகீசன் - அப்பர், ஆக்கியோன், திருநாவரசன், பிரமன், வாக்குத்தலைவன்.

வாகீசுவரன் - வாகீசன்.

வாகீசுவரி - ஓர் சக்தி, சரசுவதி.

வாகு - அழகு, ஒழுங்கு, தோள், பக்கம், முக்கோணத்திறெரு பக்கம்.

வாகுசம் - எள், கிளி.

வாகுசன் - அரசன், க்ஷத்திரியன்.

வாகுமூலம் - அக்குள், கைக்குழி, தோண்மூலம்.

வாகுயுத்தம் - மல்யுத்தம்.

வாகுரம் - வலை.

வாகுரிகன் - வேட்டைக்காரன்.

வாகுரை - கண்ணி, பொறி.

வாகுலம் - மகிழங்கனி.

வாகுலிகன் - அடைப்பக்காரன்.

வாகுலேயன் - முருகன்.

வாகுலை - கார்த்திகைப்பெண்.

வாகுவம் - வஞ்சி.

வாகுவளையம் . தோளணி.

வாகுனி - கீழ்க்காய் நெல்லி.

வாகெடுத்தல் - உச்சிவகிருதல்.

வாகை - அறத்தின்றுறை, ஈகை உண்மை, ஒழுக்கம், ஓர்மரம், அஃது — தசமூலத்தொன்று, குணம், தலம், நலன், மாட்சிமை, மிகுதி, முயற்சி, வாகைமாலை, வெற்றி.

வாகைமாலை - ஓர் பிரபந்தம், அஃது — மாற்றுரைவென்று வாகைமாலை சூடுவதை ஆசிரியப்பாவாற் கூறுவது, வெற்றிமாலை.

வாக்காடல் - வாதுபண்ணல்.

வாக்கி - அறம்பொருளின்பம் வீடென்னு நாற்பொருட் பயன்களைக்கேட்க வேட்கை விரித்துக்கூறுவோன், மாறுகண்ணி, வரகவி.

வாக்கியதம் - மௌனம்.

வாக்கியப்பொருட்காட்சியணி - ஓரலங்காரம்.

வாக்கியம் - உரையிலக்கணமைந்தினொன்று, அஃது-வினைமுதற்செயப்படுபொருள் பயனிலையோடு முடிந்த சொல், மறை,வசனம்,வாசகம்,வெளி, வைணவாகமத்தொன்று, வாக்கியசித்தாந்தம்.

வாக்கியார்த்தம் - பொழிப்புரை.

வாக்கு - சொல், திரும்பினபார்வை, நேரிலக்கற்றவளைவு, பக்கம், முப்பொறியினொன்று, மெய்ம்மை, வாக்கென்னேவல் வாய்—அஃது ஐம்பொறியினொன்று, விதம், ஜன்மத்திற் கிரண்டாமிடம், திருத்தம், வடிவம்.

வாக்குக்குற்றம் - சொற்குற்றம்.

வாக்குக்கொடுத்தல் - உறுதி சொல்லல், நிசஞ்சொல்லல்.

வாக்குச்சகாயம் - சொற்றுணை.

வாக்குச்சித்தி - சொற்படியனுகூலமாதல், சொல்பலிக்கப் பெறுதல்.

வாக்குதல் - வார்த்தல்.

வாக்குதேவதை - வியாழம்.

வாக்குதேவி - சரசுவதி.

வாக்குதோஷம் - நிந்தனை, பேச்சுக்குற்றம், வழூஉச்சொல்.

வாக்குத்தத்தம்- வாக்குக்கொடுத்தல்.

வாக்குத்தம்பம் - பேச்சைத்தடைபண்ணல், அஃது—கலைஞானமறுபத்து நான்கினொன்று.

வாக்குத்தானம் - ஜன்மத்திற் கிரண்டாமிடம், வாக்குக் கொடுத்தல்.

வாக்குத்தீட்சை - தீட்சைபேதத்தொன்று, அஃது—உபதேசம்.

வாக்குநாணயம் - பேச்சுறுதி.

வாக்குமாறுதல் - புத்திமழுங்கல், பேச்சுத்தவறல்.

வாக்குமூலம் - சொற்கருத்து, முகாந்தரம், வார்த்தை.

வாக்குவந்தனம் - அவையடக்கம்.

வாக்குவலலபம் -பேச்சுவல்லபம்.

வாக்குவியாபாரம் - பேச்சுவிதம், வழக்கமானபேச்சு.

வாக்கெடுத்தல் - உச்சிவகிருதல்.

வாங்கம் - கடல்.

வாங்கல்-அடித்தல், அழைத்தல், இழுத்தல், ஏற்றுக்கொள்ளல், தழுவல், நீளம், பெற்றுக் கொள்ளல், போதல், வளைத்தல், வளைவு.

வாங்கா - ஒருதுகுழல்.

வாங்கு - ஓராசனம், கிறிசு, பிச்சுவா, வாங்கென்னேவல்.

வாங்மயம் - சொல் வடிவம்.

வாசகத்தமிழ் - கொடுந்தமிழ்.

வாசகபதம் - வழக்கச்சொல், வெளிப்படைமொழி.

வாசகப்புணர்ச்சி - வாசகப்பொருத்தம்.

வாசகம் - வசனம், வார்த்தை.

வாசகன் - தூதன்.

வாசகிரகம் - உள்வீடு.

வாசங்கட்டுதல் - மணமூட்டுதல்.

வாசஞ்செய்தல் - இருத்தல், மணமூட்டுதல்.

வாசதேயி - இரவு.

வாசத்தலம் - இருப்பிடம்.

வாசந்தம் - ஒட்டகம், குயில், தென்காற்று, வசந்தகால மல்லிகை.

வாசந்தி - ஆடாதொடை, குருக்கத்தி, திப்பிலி.

வாஜபேயம்-ஓர்யாகம்.

வாஜஸநேயம் - சுக்ல யஜுர் வேதம்.

வாசம் - அம்பு, அரிசி, இருப்பிடம், இலாமிச்சை, இறகு, உணவு, ஊர், சரசுவதி, சீலை, நாள், நீர், நெய், பூமணம், பேச்சு, மந்திரம், மருதநிலத்தூர், யோசனை, வசிக்குமிடம், வாக்கியம், வாக்கு, வாசனை, வீடு, வேகம்.

வாசரம் - நாள்.

வாசரம்யமன்-முனி, மௌநவிரதி.

வாசல் - வாயில்.

வாசவர் - பஞ்சவாசம் விற்போர்.

வாசவன் - இந்திரன்.

வாசற்காவல் - காவலாளன், காப்பு.

வாசனம்- அறிவு, குரல், புடைவை, வாசனை, வாசித்தல்.

வாசனை - அறிவீனம், அறிவு, இடம், நம்பிக்கை, மணம், பரிமளம், நினைவிற்குக் காரணமான பயிற்சி.

வாசாடன் - வாயாடி.

வாசாதி - ஆடாதொடை.

வாசாமகோசரம் - வாக்குக்கெட்டாமை.

வாசாலகம் - வாக்கு வல்லபம்.

வாசாலகன் - வாய் வல்லபன், பேச்சில் வல்லவன்.

வாசாலம் - அதிகம்பேசல், வாக்குவல்லபம், வாக்குவிற்பன்னம்.

வாசி - அசுவினிநாள், அதிகம், அம்பு, அளவு, இசைக்குழல், இசைப்பாட்டு, இருப்பிடம், உயர்வு தாழ்வு, குதிரை, சுவாசம், சௌக்கியம், தன்மை, திட்டம், நிமித்தம், நியாயம், பணம், பறவை, பாணம், மிகுதி, வட்டிக்குமேல் அதிகமாய்க் கழித்தெடுக்குங்கழிவு, வட்டமாகக் கழிக்கும்பணம், வாசஞ்செய்கிறவன், வாசியென்வல், வாயு.

வாசிகந்தம் - ஓர்பூடு.

வாசிகபத்திரம் - திருமுகம்.

வாசிகம் - செய்தி, சொல்லாமற் செய்யும் தவம்.

வாசிகரணம் - அன்புடைக்காமம்.

வாசிகன் - தூதன்.

வாசிகை - கோத்தமாலை, தொடுத்தமாலை, மாலை.

வாசிக்கல் - காக்கைக்கல்.

வாசிட்டம் - அட்டாதச தருமநூலினென்று, அட்டாதசோபபுராணத்தொன்று, இரத்தம்.

வாசிதம் - அறிவு, ஒலி, குடியேற்றுதல், புட்குரல், மிருகக்குரல்.

வாசிதாரணை - வாயுதாரணை.

வாசிதை - பெண், பெண்யானை.

வாசித்தல் - படித்தல், மணத்தல் வீணை முதலிய வாசித்தல்.

வாசிரம் - நாற்றெருக்கூடுமிடம், பகல், வீடு.

வாசினி - வெண்குதிரை.

வாசு - இருவேலி, கடவுள், திருமால்.

வாசுகி - அட்டநாகத்தொன்று.

வாசுதேவன் - கண்ணன்.

வாசுரை - இரவு, பூமி, பெண், பெண்யானை.

வாசை - ஆடாதொடை.

வாச்சல்லியம் - தயை.

வாச்சியம் - குற்றம், சொல்லப்படத்தக்கது, சொல்லாமற் பெரும்பொருள் சொல்லல், நிந்தை, பறை முதலியன, வெளிப்படை.

வாஞ்சனம் - வாஞ்சை.

வாஞ்சனீயம் - விரும்பத்தக்கது.

வாஞ்சாபோகம் - இச்சித்த போகம்.

வாஞ்சிதம் - விரும்பியது.

வாஞ்சித்தல் - ஆசைப்படுதல்.

வாஞ்சை - ஆசை.

வாடகை - குடிக்கூலி, கொல்லை, சத்தம், தெரு, மட்சுவர், வாகனசாலை, வீட்டுக்கூலி.

வாடம் - சுவர், மதில், மிகுதி.

வாடல்-சாதல், மெலிதல், வதங்கல்.

வாடாக்குறிஞ்சி - குரங்கம்.

வாடாமாலை - பொன்னரிமாலை.

வாடி, வாடிகை - அடைப்பு, ஓர்பூடு, கொல்லை, தங்குமிடம், தொட்டால்வாடி, பூந்தோட்டம், மதில், முற்றம், வீடு, வேலி.

வாடை - இடைச்சேரி, இடையர் வீதி, காற்று, குடிக்கூலி, தெரு, நிரை, மணம், வட காற்று, வடக்கு, வரிசை, வாசனை, வீட்டுக்கூலி, வேடர் வீதி.

வாடைக்கச்சான் - வடமேல் காற்று.

வாடைக்காற்று - வடகாற்று.

வாடைக்கொண்டல் - வடகீழ் காற்று.

வாட்டம் - குறைவு, சாய்வு, சோர்வு, தெரு, தோட்டம், மெலிவு, வதக்கம், வழி, வாடல், வாகு.

வாட்டல் - மெலிவித்தல், வாட்டுதல்.

வாட்டாழை - கடற்றாழை.

வாட்டி - முறை, வசட்டி, தடவை.

வாட்டியபுட்பம் - சந்தனம், மஞ்சள்.

வாட்டியம் - தோட்டம், வீடு.

வாட்டு - நன்மை, நீதி, வாட்டென்னேவல், பொரியல்.

வாட்டுதல் - கெடுத்தல், துன்புறுவித்தல், வாடப்பண்ணுதல்.

வாட்படையாள் - துர்க்கை.

வாட்யாயநி - அதிபலை.

வாணகந்தி - அரசமரம், ஓர்கந்தகம்.

வாணகம் - அக்கினி, அம்பு, தனிமை, பசுமடி, வேய்ங்குழல்.

வாணகன் - திருமால்.

வாணதண்டம் - புடவைநெய் சூத்திரம்.

வாணம் - அம்பு, தீ; பாணம், மத்தாப்பு முதலியன.

வாணவாரம் - மார்க்கவசம்.

வாணன் - ஓரசுரன், கார்த்திகை நாள், வாழ்நாள்.

வாணன்கோவை - ஓர்நூல்.

வாணக்கம்பு - சிலம்பக்கோல்.

வாணாசனம் - வில்.

வாணாசிரயம் - அம்பு.

வாணாரி - திருமால்.

வாணி - அசமதாகம், ஓர்கூத்து, சரசுவதி, சொல், சொல்லல், மனோசிலை.

வாணிகம்-இலாபம், வியாபாரம்.

வாணிகன் - செட்டி, துலாராசி.

வாதாபிசூதனன் - அகத்தியன்.

வாதாபோதம் - மான்மதம்.

வாதாயனம்-பலகணி, மண்டபம்.

வாதாயு - மான்.

வாதாலி - சுழல்காற்று.

வாதானுவாதம் - வினவிடை.

வாதி - காரணமு மேற்கோளு மெடுத்துக்காட்டிப் பிறன் கோள் மறுத்துத் தன்மத நிறுத்திப் பாடுவோன், காற்று, முறைப்பாடுகாரன், வாதஞ் செய்வோன், வாதியென்னே வல்.

வாதிகம் - ஓர்நோய், சேம்பு.

வாதித்தல் - தருக்கித்தல், பேசுதல், வருத்தப்படுத்துதல்.

வாது - சண்டை, சபதம், தருக்கம், வாக்குவாதம்.

வாதுலி - வெளவால்.

வாதுவர் - குதிரைப்பாகர், யானைப்பாகர்.

வாதுமை - ஓர் மரம்.

வாதுளம் - சிவாகமமிருபத்தெட்டினென்று.

வாதூகம் - வேம்பு.

வாதூலம் - சுழல்காற்று, ஓர்ரிஷி.

வாதூலன் - உன்மத்தன்.

வாதை - துன்பம், வேதனை செய்யும் நோய், வருத்தம், வதைத்தல்.

வாதோரணமஞ்சரி - ஓர் பிரபந்தம்.

வாத்தி - கற்பிப்போன், உபாத்தியான்.

வாத்தியபாண்டம் - வாத்தியப்பொருது, வீணை.

வாத்தியம்-கஞ்சக்கருவி, துணைக்கருவி, தோற்கருவி, நரம்புக்கருவியெனு மிசைக்கருவிகள், மத்தளம் முதலிய இசைக்கருவிகள்.

வாத்து - வாஸ்துபுருஷன், வீடு, வசித்தற்குரிய பூமி, நீரிற்செல்லக்கூடிய ஒரு பறவை, வாரா.

வாத்துபோதம் - ஓர் சிற்பநூல்.

வாத்துமாதனம் - இருகாலுமொருகையுநீட்டியொருமுழங்கையூன்றித் தலை நிமிர்த்திக்கிடப்பது.

வாந்தி - சர்த்திபண்ணல்.

வாந்திசோதநி - கருஞ்சீரகம்.

வார்த்தியம்-தான்றி, வாலுளுவை.

வாபம் - சௌளஞ்செய்தல், நெய்குதல், வாத்து.

வாபி - வாவி, குளம், தடாகம்.

வாபீகம் - சாதகப்புள்.

வாப்பியம் - கோஷ்டம்.

வாமக்கோன் - சந்திரன்.

வாமசுக்கிலம் - பொன்னுவிரை.

வாமதந்திரம் - வர்மசமயநூல்.

வாமதேவம் - சிவபெருமான் ஐந்து திருமுகங்களிலொன்று, இது-வடக்குமுகமாய் விளங்குவது.

வாமதேவன் - ஓர்முனி, சிவன்.

வாமபாகம் - இடப்பக்கம்.

வாமபுரகோபம் - துத்தம்.

வாமம் - அழகு, இடப்பக்கம், உட்சமயமாறினொன்று, ஒளி, ஓர் பாம்பு, குறுமை, கூன், சிவனைம்முகத்தொன்று, செல்வம், தீமை, தொடை, பசு மூலை, முலை, விரோதம்.

வாமலூரம் - புற்று.

வாமலூருதனயன் - வான்மீகி.

வாமலோசனன் - அழகியவிழியுடையான், திருமால்.

வாமலோசனை - அழகிய விழியுடையாள், இலக்குமி.

வாமலோசிகம் } கற்றாழை.
வாமல்

வாமனம் - குறள், திருமால், தசாவதாரத்தொன்று, தென்திசை ஆனையானை, பதினெண் புராணத்தொன்று.

வாமனன் - குள்ளன், குறளுருக்கொண்ட திருமால்.

வாமனர் - புத்தனர்.

வாமனவதாரம் - திருமாலவதாரத்தொன்று இது—பலிசக்ரவர்த்தியை யடக்கு நிமித்தம் அதிதியின் கர்ப்பத்திற்றோன்றியது.

வாமன் - அருகன், காமன், சிவன்.

வாமாசாரம்-வாமாசமயாசாரம்.

வாமாட்சி - வாமலோசனை.

வாமாவர்த்தம் - இடம்புரிச்சங்கு.

வாமி } சிவனுடைய பஞ்சசக்திகளிலொன்று.
வாமை

வாமிலம் - அகந்தை, அழகு.

வாம் - வாவும்.

வாயசம் - காக்கை.

வாயில் - ஐம்பொறி, கடை, கதவு, காரணம், திறம், தூது, வாய்தல்.

வாயில்வேண்டல் - அகப்பொருட்டுறையினொன்று.

வாயிற்காட்சி - காட்சிபேதத்தொன்று.

வாயு - காற்று, இஃது—அட்டமூர்த்தத்தொன்று, மூச்சு.

வாயுகோணம் - வாயுமூலை.

வாயுசகன் - நெருப்பு.

வாயுதாரணை - வாயுவை நிறுத்துதல்.

வாயுத்தம்பனம் - வாயுவைத்தடுத்தல், இது—கலைஞான மறுபத்து நான்கினொன்று.

வாயுபகவான் - வாயுதேவன்.

வாயுமூலை - வடமேற்கு.

வாயுமைந்தன்-அனுமான், வீமன்.

வாயுவம் - நவமேகத்தொன்று.

வாயுவின்கூறுபாடு - ஓடல், கிடத்தல், கூடல், போதல், வருதல்.

வாயுவிளங்கம் - ஓர் மருந்து.

வாயுறைவாழ்த்து - ஓர்பிரபந்தம்.

வாய் - இடம், உதடு, எழுனுருபு, சொல், துவாரம், நுதி, பேச்சு, மெய், வாக்கு, வாயில், வாயென்னேவல், வாய்மை.

வாய்க்கால் - நீரோடுங்கால், மகநாள்.

வாய்ச்சொல் - வாய்மொழி.

வாய்தல் - அமைதல், சிறத்தல், வாயில்.

வாய்த்தல் - கிடைத்தல், பொருந்தல், மாட்சிமை, நேரல், தப்பாமை.

வாய்பாடு - உதாரணம், வாயிலாட்சிப்பட்டுவரும் பேச்சு, வாய்படுதல்.

வாய்ப்ப - பொருந்த.

வாய்ப்பு - சித்தி, சிறப்பு, தகுதி, நயம், பேறு, மாட்சிமை, வளமை.

வாய்ப்புள் - நிமித்தம், சொற்சகுனம்.

வாய்மை - உண்மை, சொல், மெய், அஃது — சாத்திவிககுணத்தொன்று, வலி.

வாய்வட்டம் - குதிரைவாய்க்கயிறு.

வாரணம் - ஆனை, உன்மத்தம், கடல், கவசம், காத்தல், கேடகம், கோழி, சங்கு, சட்டை, தடை, பன்றி, மாவிலங்கை, விடுதல்.

வாரணசி - காசி.

வாரணவதம் - பிரயாகை.

வாரணை - தடுத்தல், தடை.

வாரம் - அன்பு, உரிமை, எழுகிழமை கொண்டது, ஓர் நடனவிகற்பம், கடல், கரை, சமயம், சிறு வரம்பு, சுரிதகம், தடை, தாம், திரள், திரை, துவாரம், தெய்வப்பாடல், நாள், பக்கபாதம், பங்கு, பஞ்சாங்கத்தொன்று, பிற்பாடு, மலைச்சார்பு, மிகுதி, வாயில்.

வாரல் - அள்ளுதல், ஓலைமுதலிய வாருதல், கொள்ளையிடல், கோலுதல், தடவுதல், நீளல், மயிர்கோதல், முகத்தல், வடிதல், வாரவென்னேவல்.

வாரவாணம் - பஞ்சுபெய்துதைத்த மெய்ப்பை, மார்க்கவசம்.

வாரவாணி - குயிலுவன், நியாயாதிபதி, வருடம், விறலி, வேசை.

வாரவாரம் - கவசம்.

வாராகி - ஓர் கிழங்கு, சத்தமாதர்களிலொருத்தி, பூமி,பெண்பன்றி.

வாராணசி - காசி.

வாரானை-வரவழைத்தல், இது—பிள்ளைக்கவியுறுப்புப் பத்தினொன்று.

வாரி - இசைக்குழல், கடல், கதவு, சரசுவதி, சீப்பு, தானியம், நிறைபுனல், நீர், மடை, மதில், மதிற்சுற்று, மிகுதி, யானைகட்டுங்கயிறு, யானைக்கொட்டம், யானை படுகுழி, வழி, வாயில், வாரியென்னேவல், விளைவு, வெள்ளம், வருவாய், வருமிடம்.

வாரிசம் - உப்பு, சங்கு, தாமரை.

வாரிதம் - மேகம்.

வாரிதி - கடல்.

வாரித்தல் ஆணையிடல்,தடுத்தல்.

வாரிவாகம் - மேகம்.

வாருகம் - ஆற்றுத்தும்மட்டி, வெள்ளரி.

வாருகோல் - துடைப்பம்.

வாருணம் - அட்டாதசவுபபுராணத்தொன்று, கடல், மாவிலங்கு, மேகம், மேற்கு, சலம், வருணாஸ்திரம்.

வாருணி - அகத்தியமுனி, ஆட்டாங்கொடி, கள், காய்ச்சிவடித்தமது,சதயநாள், மேற்கு.

வாருண்டகம் - எண்காற்புள், குறும்பி.

வாருதல் - கவர்தல், கொழித்தல், கொள்ளல், திருடல், வரன்றல், வாரல்.

வாரை - காத்தண்டு, திராந்தி, மரவுத்திரம்.

வார் - கச்சு, கயிறு, தோல்வாய், நீர், நீளம், நுண்மை, நேர்மை, பறையின்வார், புயல், வாவென்னேவல்.

வார்தல் - உயர்ச்சி, ஒழுகல், தெரிதல், நீளல், வாருதல், நேரிதாதல்.

வார்த்தகம் - கிழத்தன்மை, கிழவர்குழு, வர்த்தகமை, விருத்தியுரை.

வார்த்தல் - வார்க்குதல்.

வார்த்தாகம் - கத்தரிக்காய், கத்தரிச்செடி.

வார்த்தாகி - சிறுவழுதலை.

வார்த்தாவகன் - ஓலைச்செய்திகள் கொண்டுபோகுவோன், தூதன்.

வார்த்தை-செய்தி,சொல்,வசனம்.

வார்த்தைத்தொழிலோர் - வேளாளர்.

வார்ப்பு - வார்த்தல்.

வார்மை - நன்னடை.

வாலகம் - கடையம், மோதிரம், வால்.

வாலகில்லியர் - அறுபதினாயிரம் ரிஷிகள்.

வாலதி - யானைவால், வால்.

வாலதின் - தூய்தாக.

வாலபத்திரம்-கதிரம்,கருங்காலி.

வாலம் - கம்தைத்துணி, தலை மயிர், வால்மயிர்.

வாலரசம் - சாதிலிங்கரசம்.

வாலவாசன் - வைடூரியம்.

வாலவியசனம்-கவரிமயிர் விசிறி, சாமரை.

வாலறிவன் - கடவுள், மெய்யறி வுடையோன்.

வாலறிவு - பேரறிவு.

வாலாமை - அசுத்தம், மகளிர் சூதகம்.

வாலாயம்-வாலவாயசம்,வழக்கம், வைடூரியம்.

வாலி - இந்திரன்மகனாகிய வான ரன்.

வாலிசம் - தலையணை.

வாலிது - அயது, வெளியது, நன்று.

வாலு - சாளை, பசுப்பட்டம், ப்ர வாஹம்

வாலுகம் - வெண்மணல்,மணல்.

வாலுங்கி - ஓர் மருந்து, கக்கரி.

வாலுவர் - மடையர்.

வாலூகம் - நஞ்சு.

வாலேயம் - கழுதை.

வாலை - இரசம், இளையது, ஓர் சத்தி, சுத்தம், திராவகம் வடிக்கும் பாத்திரம், பன்னிரு எயதுப்பெண், பெண்.

வால்-இளமை,ஓர்உறுப்பு சுத்தம், தோகை, மிகுதி, வெண்மை.

வால்மிளகு - ஓர் வாசனைச்சரக்கு.

வால்மீகம் - இராமாயணம்.

வால்வெள்ளி - ஓர் நட்சத்திரம்.

வாவயம் - துளசி.

வாவல் - கடத்தல், நசை, வெள வால், பாய்தல்.

வாவி - குளம்.

வாவுதல் - கடத்தல், தாண்டல், பாய்தல்.

வாவெனல் - அழைத்தல்.

வாழி - இடைச்சொல், வாழிய, வாழ்த்து.

வாழிய - முன்னிலையசைச்சொல்.

வாழுதல் - வாழ்தல்.

வாழை - வாழைமரம், கதலி.

வாழ்க்கை - ஊர், சந்தோஷ நிலை, ஜீவிதம், செல்வம், மருத நிலத்தூர், மனைவி.

வாழ்க்கைத்துணை - இல்லாள்.

வாழ்தல் - ஜீவித்தல், செல்வத்தோடிருத்தல், வாழ்வு.

வாழ்த்தல் - துதித்தல், மங்களங்கூறல், வாழ்த்துதல்.

வாழ்த்து - ஆசீர்வாதம், ஓரலங்காரம், சுபவசனம், துதி, மங்களாசரணை மூன்றினொன்று.

வாழ்த்துரை - வாழ்த்து.

வாழ்நள் - வாழ்வோன்.

வாழ்வு - முறைமை, வாழ்தல், செல்வம், வாழ்வதற்குரிய இடம், பெருமை.

வாளம் - சக்கரவாளகிரி, வளைவு, வாள்.

வாளகம் - குந்துருக்கம், வெட்டிவேர்.

வாளா - வீண், சும்மா.

வாளாண்மை - வாட்போர்.

வாளாமை - கேளாமை, பயனின்மை, மௌனம்.

வாளி - அம்பு, ஓர் காதணி, வட்டமாயோடல்.

வாளுழவர் - படைவீரர்.

வாளேந்தி - தூர்க்கை, வாட்படையாள்.

வாளை - ஓர்மீன்.

வாள் - அரிவாள், ஈர்வாள், ஒளி, பட்டயம், கொலை, வாட்படை.

வாள்கைக்கொண்டாள் - தூர்க்கை.

வானகத்தமரர் - தேவர்.

வானகம் - ஆகாயம், தேவலோகம், பரலோகம், மஞ்சாடி, விண்.

வானதி - ஆகாயகங்கை.

வானபத்தி-பூவாதுகாய்க்கு மரம்.

வானப்பிரத்தன் - காட்டிற்றவஞ்செய்வோன்.

வானம் - அத்திபாரம், ஆகாயம், உலர்ந்தமரம், கோபுரத்தினுருப்பு, சீவனோடிருத்தல், சுவாரரை, நீர்த்திரை, புற்பாய், போதல், மழை, வாசனை.

வானரக்கொடியோன் - அருச்சுனன்.

வானரம் - குரங்கு.

வானவரம்பன் - சேரன்.

வானமருறையுள்-தேவர்கோயில்.

வானவர் - தேவர்.

வானவர்கோன் - இந்திரன்.

வானவர்முதுவன் - சேரன், பிரமன்.

வானவல்லி - மின்னற்கொடி.

வானவன் - சேரன், பிரமன், தேவன், சூரியன்.

வானவில் - இந்திரவில்.

வானுகி - கார்போகவரிசி.

வானி - ஓமம், கூடாரம், படை, மேற்கட்டி, விருதுக்கொடி, காற்றிற் செல்லும் பட்டம்.

வானிதம் - கள்.

வானீரம் - நீர்ப்பிறப்பு, நீர்வஞ்சி.

வானுலகம் - தேவலோகம்.

வானேறு - இடி.

வானோர் - தேவர்கள்.

வானோர்கோமான் - இந்திரன்.

வானோர்மாற்றலர் - அசுரர், இராக்கதர்.

வானோர்வரம் - வானவர்பேறு, அஃது—இலகு, சூட்சுமம், அட்சயம், பிரகாசம்; இவை முறையே கனமின்மை, கண்டிப்பின்மை, கேடின்மை, விளக்கம்.

வான் - அமுதம், ஆகாயம், எதிர்கால விடைச்சொல், புயல், பெருமை, மகத்துவம், மழை, முகில், வலி.

வான்கோழி - ஓர்புள்.

வான்பாடுபுள் - வானம்பாடி.

வான்பொருள் - சிறந்தபொருள்.

வான்மிகம் - இந்திரவில், புற்று.

வான்மீகி - ஓர் முனி.

வான்மீகியார் - தலைச்சங்கப் புலவரிலொருவர்.

வான்மீன் - நட்சத்திரம், உடு, சோதி, தாரகை, தாராகணம்.

வான்முளை - சிறியமுளை.

வான்மை-சுத்தமுடைமை,வெண்மை.

வான்மைந்தன் - வாயு.

வான்யாறு - ஆகாய கங்கை.

வி

வி - ஓரெழுத்து, ஓர் விகுதி.

விகங்கம் - அன்னம், பறவை.

விகசம் - மலர்ந்தது.

விகசிதம் - மலர்தல்.

விகடகவி - சரசப்பாட்டு.

விகடம் - அழகானது, உன்மத்தம், தொந்தரை, பெரியது, வேறுபாடு.

விகடிகை - விநாடி.

விகணிதம் - தீர்ப்பு.

விகமணம் - தீயொழுக்கம்.

விகர்த்தனன் - சூரியன்.

விகலம் - குறைபாடு.

விகலிதம் - சிந்தல், நெகிழ்ந்தது, முடியப்பட்டது, வடிதல, விழுந்து போனது.

விகலை - காலநுட்பம், நாழிகை.

விகற்பக்காட்சி - பேதங்களைக் கண்டறியுங்காட்சி.

விகற்பத்தின்முடித்தல் - ஒருத்தி; அது — தலை தடுமாற்றமாகச் சொல்லி முடித்தல்.

விகற்பநடை-வேறு பாட்டுநடை.

விகற்பம் - ஐயம், ஒன்றற்கே ஓர்கால் மிகாமை, ஓர்கால் மிகுத்தல்; சந்தேகம், தவறு, பிழை, வேற்றுமை.

விகற்பித்தல் - வேறுபடுதல்.

விகற்பு - வேறுபாடு.

விகாசம் - மலர்ந்தது.

விகாதம் - விரோதம்.

விகாரப்புணர்ச்சி - நிலைமொழி வருமொழிகள் விகாரத்தோடு புணர்வது.

விகாரம் - அலைந்து திரிதல், உலர்த்துதல், காமக்கவலை, மூவகை விகாரம், வலித்தல் முதலியசெய்யுள் விகாரங்கள், வேற்றுமை.

விகாரி - ஓராண்டு, மோகி.

விகாரித்தல் - வேறுபடுதல், மோகித்தல்.

விகிரம் - இறைத்தல், பறவை, கண்டம்.

விகிர்தம் - பொய், வேறுபாடு.

விகிர்தி - ஓராண்டு, கடைநிலை, விகுதி.

விகுணம் - குணமின்மை.

விகுணி-கள், குணங்கெட்டவன்.

விகுதி - பகுதிப்பொருளைத் தன்னகப்படப்பின்னின்றுவிகாரப் படுத்தலால் விகுதியாம், பகுபதவுறுப்பினுளொன்று, வேறுபடுதல்.

விகூணம்-கடைக்கண் பார்வை.

விக்கல் - விக்குதல்.

விக்கியாதன் - பிரசித்தன்.

விக்கியாபனம் - அறிக்கை, விண்ணப்பம்.

விக்கியானம் - கல்வி.

விக்கியானி - கல்விமான்.

விக்கிரமம் - உடல், கலைத்தல்.

விக்கிரம - ஓராண்டு.

விக்கிரகம் - பராக்கிரமம், மிகுபலம், முறைபிழைத்தல்.

விக்கிரமார்க்கன் - ஓரரசன்.

விக்கிரயம் - விற்றல்.

விக்கினம் - இடையூறு, தீமை.

விக்கினேசுவரன் - விநாயகன்.

விக்குள் - விக்கல்.

விக்கேபம் - சிதறல்.

விங்களம் - திரிபு, கபடம்.

விசதம் - அழகு, நிருமலம், வெண்மை, விஸ்தாரம்.

விசய - ஓராண்டு.

விசயகோதண்டம் - வெற்றிவில்.

விசயச்சந்தம் - எழுநூறுகோவை முத்துத் தாழ்வடம்.

விசயநகரம் - ஓர் பட்டணம்.

விசயம் - அடைக்கலம், ஆராய்வு, ஐயம், ஓர் சிவாகமம், சருக்கரை, சூரியமண்டலம், வெற்றி, தேவவிமானம்.

விசயன் - அருச்சுனன், கலிக்காத்தன், திருமால் வாயில் காப்போன்.

விசயார்த்தம் - கைலைவலை.

விசயை - துர்க்கை, மூன்றும் எட்டாம்பதினோராம் திதிகள்.

விசரம் - கூட்டம், கொலை.

விசர்க்கம் - கொடை, தள்ளுதல், கழிதல், தக்ஷிணயனபாதை, பிரவை, பிரிதல், போதல், விடுதல்.

விசர்ச்சனம் - ஈகை, விடுதல்.

விசர்ச்சிகை - கூத்தினோர் விகற்பம்.

விசலம் - கஞ்சி, தளிர்.

விசலனம் - உறுதியின்மை, தற்புகழ்ச்சி.

விசளை - சட்டி, நீற்றுப் பெட்டி கொண்ட அளவு.

விசனம் - துன்பம், பேராசை, மனித சஞ்சாரமில்லாதவிடம், விசிறி.

விசாகம் - அநிலநாள், வைகாசி.

விசாகன் - குமரன்.

விசாதி - வேறுசாதி.

விசாரதர் - புலவர்.

விசாரம்-ஆலோசனை, எண்ணல், கிலேசப்படல்.

விசாரிதம்-ஆலோசிக்கப்பட்டது.

விசாலம் - ஓர் சிற்பநூல், கடம்பு, விரிவு.

விசாலாக்கன்
விசாலாட்சன் } கருடன்.

விசாலாட்சி - பார்வதி.

விசி - அலை, கட்டில், கட்டு, பறையிருக்கும்வார்.

விசாலை - சத்தபுரியிலொன்று.

விசிகம் - அம்பு, புனற்றிரை.

விசிகை - கச்சு, கருத்து, தெரு.

விசிட்டம் - மேன்மை.

விசிதம் - விபூதி.

விசிதை- அட்டசித்தியிலொன்று.

விசித்தல் - கட்டல்.

விசித்தி - அழிவு, இழத்தல், எல்லை, தரிப்பு, பிரித்தல், விசுத்தி, வெட்டல்.

விசித்திரம் - அதிசயம், பேரழகு.

விசித்திரவீரியன் - சந்திரகுலத்தரசன்.

விசித்திராவேளாகொல்லி - கொல்லித்திறத்திலொன்று.

விசிராமம் - இளைப்பாறுதல்.

விசிரி - சிற்றாலவட்டம்.

விசுத்தி - ஆறாதாரத்தொன்று, ஐயம், ஒப்பு, நீர்தல், திருத்தம்.

விசும்பு - ஆகாயம், திசை, தேவலோகம், மேகம்.

விசும்புத்திசை - உச்சி.

விசுவகருமன் - தேவதச்சன்.

விசுவசித்து - ஓர்யாகம்.

விசுவதேவர் - சிராத்தகாலத்தில் அர்ச்சிக்கப்படும் தேவர்கள்.

விசுவநாதன் - சிவன்.

விசுவநாள் - உத்திராடநாள்.

விசுவம் - உலகம், எல்லாம், பூமியின் சமரேகையுஞ் சூரியன் பாதையுஞ் சந்திக்குமிடம்.

விசுவம்பரன் - திருமால்.

விசுவம்பரை - பூமி.

விசுவரூபம் - பிரபஞ்சரூபம்.

விசுவரூபன் - திருமால்.

விசுவாசம் - நம்புதல், உண்மை, பத்தி.

விசுவாமித்திரன் - ஓரிருடி.

விசுவாவசன் - ஓர் கந்தருவன்.

விசுவாவசு - ஓராண்டு.

விசுவான்மா - பிரமன்.

விசுவி - கள்.

விசேடம் - ஓரலங்காரம், சூத்திரத்துட் பொருளன்றி அங்கே வேண்டியிருந்தால் பெய்துரைப்பது விசேட வுரை, மேன்மை.

விசேடணம் - குணத்தை விளக்குவது.

விசேடித்துநிற்றல் - ஒரு பொருளுக்குரிமையாய் நிற்குதல்.

விசேடியம் - அடையடுத்த பொருள்.

விசை - சீக்கிரம், விசையென்னேவல்.

விசைத்தல் - வேகமுறல்.

விசையன் - செயத்தையுடையவன்.

விச்சாதரர் - வித்தியாதரர்.

விச்சிராமம் - மலங்கழிக்கை

விச்சின்னம் - வேருக்கப்பட்டது.

விச்சுவரேகை - வானவரை.

விச்சுவர் - சிற்பர், தேவரிலோர் பிரிவு.

விச்சுவேசம் - ஓர் சிற்பநூல்.

விச்சை - தெரு.

விச்சொரூபம் - விகாரவடிவம்.

விஞ்சை - கல்வி, வித்தை.

விஞ்சையரூர் - நாகலோகம்.

விஞ்சையர் - புலவர், வித்தியாதரர்.

விஞ்ஞானகலர் - மூவகையாத்துமாக்களிலொருவர்.

விஞ்ஞானமயம் - ஞானேந்திரியமும் புத்தியும்.

விஞ்ஞானம் - அறிவு, வாத்தியம், வேலை.

விடக்கு - ஊண்.

விடங்கம் - அழகு, ஆண்மை, கொடுங்கு, சுவர்ப்புறத்து நீண்ட வுத்திரம், புறாக்களுக்குத் தூண்மேற் செய்யப்பட்ட கூட்டின் வரிசை, முகடு, வீதியிற் கட்டிய கொடி.

விடங்கர் - சிறுவழி.

விடகுசகம் - சகோரப்புள்.

விடதம் - முகில், துரிசு.

விடதரம் - பாம்பு, மேகம்.

விடதரன் - சிவன், ஆலகண்டன்.

விடதாரி - வைத்தியன்.

விடதாளம் - நவதாளத்தொன்று.

விடந்தை - ஓரூர்.

விடபகதி - தாரகதியைந்தி னொன்று.

விடபம் - அலர்வு, இடபவிராசி, எருது, சிவநூர்தியுங் கொடியும், சிறுதூறு, தளிர், மரக் கொம்பு, விலாசம்.

விடபி - மரப்பொது.

விடப்பு }
விடம்பு } கமர்.

விடம் - எத்து, நஞ்சு, ஆர்த்த விருத்தி, பாஷாணம், மலை.

விடயக்காட்சி - ஐம்பொறிகளி னலறிதல்.

விடயஞானம் - உலகஞானம்.

விடயபஞ்சகம் - கண்டுகேட் டுண்டுயிர்த்துற்றறிதல்.

விடயபரித்தியாகம் - துறத்தல், நீங்கல்.

விடயம்-அடைக்கலம், அறியப்பட பத்தக்கது, உரியது, உலகப் பொருள், காணப்பட்டது, காரணம், சுக்கிலம்.

விடயவாசனை - விஷயப்பற்று.

விடருகம் - பூனை.

விடர் - கமர், காடு, ஆர்த்தர், மலைப்பிளப்பு.

விடர்வு - வெடிப்பு.

விடலை - ஆண்மகன், இளங் காளை, திண்ணியன், பாலை நிலத் தலைவன், மணவாளன், நடுவயதுடையோன்.

விடல் - குற்றம், சாதல், விடுதல்.

விடவம் - அயனவரி, விசுவம்.

விடவிடெனல் - நடுக்கக்குறிப்பு.

விடவு - விடர்.

விடன் - ஆர்த்தன்.

விடாணம் - விலங்கின் கொம்பு.

விடாதவாகுபெயர் - கவியின் பெயரே கருத்தாவைக் காட்டி நிற்பது.

விடாந்தகன் - சிவன்.

விடாலகம் - பூனை.

விடி - திரைச்சீலை, விடியென் னேவல்.

விடிதல் - அனுகூலமாதல், உதய மாதல்.

விடியல் - விடியற்காலம்.

விடுதலை - இட்டம், தன்னிட்டம், நீக்குதல், முடிவு, விடுந் தலைப்பு.

விடுதல்-எறிதல், ஒழிதல், நீக்கல்.

விடுத்தல் - அனுப்பல், உத்தரஞ் சொல்லுதல், தங்கல், நடத் தல், பிரிதல்.

விடுந்தலைப்பு - கொய்யகம், முன் றானை.

விடிவம் - விசுவம்.

விடுவாய்ச்செய்தல் - அறுத்தல்.

விடுசி - அம்பு.

விடுதி - ஆறியிருத்தல், தங்குமிடம்.

விடுத்தல் - அனுப்பல், தங்கல், தள்ளுதல், நடத்தல், பிரித்தல்.

விடேயம் - திரிபு.

விடேலெனல் - அனுகரணவோசை.

விடை - இடம், இடபவிராசி, உத்தரம், இஃது—உரையிலக்கணமைந்தினொன்று, எதிர்மொழி, எருது, வலிமை, விடுதல்.

விடைதல் - கோபம், சினம், பிரிதல், பிளத்தல்.

விடைத்தல் - சினக்குறிப்பு; சீறுதல், பெருங்கோபம்.

விடையோன் - சிவன்.

விட்கம்பம் - தூண், நித்தியயோகத்தொன்று, விட்டம்.

விட்சேபம் - எறிதல், ஒன்றைச் சொல்லத் தொடங்கி வேறு ஞாபகத்தாற் சொல்லாமல் விட்டு விடுதல், கலக்கம், கூத்தினொன் விகற்பம், பயம், பொய்யென்று ரூபித்தல், வானுட்சரேகை.

விட்டம் - உத்திரம், குறுக்களவுவரி.

விட்டரம் - ஆசனம், ஓர் பிடி, தருப்பை, ஓர் மரம், கொள்கலம், தவத்தோர் பீடம்.

விட்டவர் - துறந்தோர், பகைவர்.

விட்டவாகுபெயர் - மொழிக்கியன்ற பொருளை விட்டுக் குறிக்கப்படுபொருட்கிடனாய்ப் பிறிதொன்றை விளக்குவது.

விட்டார்த்தம் - பாதிவிட்டம்.

விட்டிசைத்தல்-பிறிந்திசைத்தல்.

விட்டில் - ஓர் வண்டு, பிராய்மரம், விட்டிற்பறவை, வெட்டுக்கிளி.

விட்டுணு - திருமால், ஓர் தருமநூல்.

விட்டுணுக்கிராந்தை - ஓர்கரந்தை.

விட்டுணுகாந்தி - ஓர் பூண்டு.

விட்டுணுபதம் - பாற்கடல், வைகுந்தம்.

விட்டுணுவல்லபை - இலக்குமி.

விட்டேறரணம், விட்டேறு - வேல்.

விட்டை - கட்டி, மலம், திரளை.

விணிகை - கச்சு.

விண் - ஆகாயம், இளமை, மேகம், வானம்.

விண்டலம் - ஆகாயம்.

விண்டல் - மூங்கில்.

விண்டு - ஓர் தருமநூல், காற்று, திருமால், மலை, மூங்கில், மேகம், வினையெச்சம்.

விண்ணதி - ஆகாயகங்கை.

விண்பெதம் - ஆகாயம்.

விண்ணவர் - வானோர்.

விண்ணவன் - அருகன், தேவன்.

விண்ணுலகம் - தேவலோகம்.

விண்ணுலார் - விண்ணோர்.

விண்ணேறு - இடி.

விண்ணோர் - தேவர்.

விண்மணி - சூரியன்.

விண்மண் - ஆகாயமும் பூமியும்.

விண்மீன் - நட்சத்திரம்.

விண்முழுதாளி - இந்திரன்.

விண்வீழ்கொள்ளி - உற்கை.

விதண்டை - வாக்குவாதம்.

விதத்தல் - சிறப்புவிதி கூறல், மிகுத்துரைத்தல்.

விதப்பு - அதிசயம், சீக்கிரம், பின் கூறப்படுஞ் சிறப்புவிதி, மதி லுருப்பு, மிகுதி.

விதப்புக்கிளவி - விதப்புமொழி.

விதம் - சம்பளம், சாயல், சூத்திரம், செயல், புட்பொது, விதித்தில், விதப்பு, விலங்குணவு.

விதரணம் - அழகு, ஈகை, போதல், விடுதல், விவேகம்.

விதரணன் - ஈகையாளன்.

விதர்க்கம் - உத்தேசம், ஐயம், நியாயம் பேசல்.

விதார்ப்பம் - ஓர் தேயம்.

விதர்ப்பு - அச்சம், நெருக்கம், போர், வெற்றி.

விதலம் - கீழுலகத்தொன்று.

விதலை - நடுக்கம்.

விதவாகாமி - கைம்பெண்ணை விரும்புவோன்.

விதவாதன - எடுத்துச்சொல்லாதன.

விதவை - கைம்பெண்.

விதனம் - வேதனை.

விதாதா - அருகன், பிரமன்.

விதாரணம் - பிளப்பு.

விதானம் - இளைப்பாற்றி, உபாயம், ஓர்பண்கற்பனை, குவியல், கூட்டம், சாரமின்மை, செயல், செல்வம், பாக்கியம், மந்தம், மாதிரி, முறைமை, மேற்கட்டி, யாகம், யானையுணவு, வணக்கம், வன்மம், விடுதி, விதம், விரிவு.

விதி - உண்மை, குணம், செயற்கை, செய்தொழில், செல்வம், நியமித்தல், பிரமன், முறை, விதியென்னேவல், வேதாகமவிதி.

விதிக்கு - கோணத்திசை.

விதிதம் - தெரியப்பட்டது.

விதித்தல் - உண்டாக்கல், செய்தல், சொல்லல், வருத்தல்.

விதித்தோன் - கடவுள்.

விதிபாதம் - நித்தியயோகத் தொன்று.

விதிப்பாள் - மகள்.

விதியர் - கணக்கர், தந்திரிகள், மந்திரிகள்.

விதியுளி-ஓமம், தூதன், விவாகம்.

விதியை - இரண்டாந்திதி.

விதிர்ப்பு - அச்சம், நடுக்கம்.

விதிர்விதிர்த்தல் - துடிதுடித்தல்.

விதிவசம் - விதியின் வழி.

விதிவிலக்கு - செய்வதுந் தவிர்வதும்.

விதிவினை - உடன்பாட்டு வினை.

விது - கருப்பூரம், சந்திரன், பிரம்மா, விஷ்ணு.

விதுடி (ஷி) - படித்தவன்-ள்.

விதுட்சயம் - தேய்பிறை.

விதுதமுகம் - உணவணி முதலிய வேண்டாதற்குத் தலையசைத்தல்.

விதுப்ரியை - உரோகணி.

விதுப்பு - ஆசை, சீக்கிரம்.

விதும்பல் - ஆசைப்படல்.

விதுரன் - அறிஞன், குருகுலவரசருளொருவன், திண்ணியன், வாழ்க்கைத்துணையிழந்தோன்.

விதேகமுக்தி - கைவல்யம்.

விதேகம் - தேகவிமோசனம்.

விதேகை - மிதிலைநகரம்.

விதேயன்-சொற்படிகேட்போன்.

விதை - அறிவு, புத்தி, பெருமை, வினையென்னேவல், வித்து.

விதைத்தல் - வித்திடுதல்.

விதைப்புனம் - புதுக்கொல்லை.

வித்தகம் - அதிசமயம், ஞானம், நன்மை.

வித்தகர் - அறிஞர், கம்மாளர், தூதர், பெரியோர்.

வித்தகன் - அறிஞன், வயிரவன், ஞானி.

வித்தம் - ஞானம், பொன்.

வித்தன் - வித்துவான்.

வித்தாரகவி-நாற்கவியிலொன்று.

வித்தாரம் - அகலம், ஓர்கவி, ஓர் சிற்பநூல், வித்தாரகவி.

வித்தியர் - கம்மாளர்.

வித்தியாசம் - ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்துறல், வேறுபாடு.

வித்தியாதத்துவம் - தத்துவத்திரயத்தொன்று, காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன் அல்லது ஆன்மா, மாயை.

வித்தியாதரர் - விஞ்சையர்.

வித்தியாதானம் - கல்விகற்பித்தல்.

வித்தியாபாரகன் - கற்போன்.

வித்தியாரம்பம் - இஃது—பிள்ளைச் சடங்குகளிலொன்று, கற்கத்தொடங்கல்.

வித்தியார்த்தி - கற்போன்.

வித்தியாவந்தன் - கல்விமான்.

வித்தியை - அறிவு, கமன குளிகை, தூர்க்கை.

வித்தீரணம் - விரிவு.

வித்திருதி - அகலம், விசாலம், விட்டரேகை.

வித்து-விதை, வித்தென்னேவல்.

வித்துதல் - விதைத்தல்.

வித்துரு - மின்னல்.

வித்துருமம்-இளந்தளிர், பவளம்.

வித்துவேடணை - அட்டசித்தியிலொன்று.

வித்துவிடேம் - விரோதம்.

வித்துனர் - விதைத்தார்கள்.

வித்தை - கல்வி, ஞானம்.

விநதை - கருடன்றாய், சத்தபுரியிலொன்று.

விநயம் - மரியாதை, வணக்கம்.

விநாசம் - கொலை, நாசம்.

விநாசன் - கொலை செய்வோன்.

விநாடி - காலநுட்பம்.

விநாயகன் - அருகன், புத்தன், விநாயகன்.

விநிபாதம் - இகழ்ச்சி, இக்கட்டு, மரணம், விழுதல்.

விநிமயம் - அடகு, மாற்றுதல்.

விநியோகம் - தடை, நியமிப்பு, பிரிதல், விடுதல்.

விநீதம் - அழகு, அனுப்புதல், சாந்தம், தண்டிப்பு, கடத்துதல், நன்னடை, படியப்பண்ணுதல், மரியாதை.

விநீதன் - தண்டிக்கப்பட்டவன், விநயமுள்ளவன்.

விநோதம் - அழகு, விளையாட்டிற் பொழுது கழித்தல், சந்தோஷம்.

விநோதன் - பொழுது கழித்து விளையாடுபவன்.

விந்தம் - ஒருமலை, ஒரெண்.

விந்தர் - இடையர்.

விந்தியம் - அட்டகுலபருவதத்தொன்று.

விந்து - ஓர்புள்ளி, நீர்த்துளி, நவபேதத்தொன்று.

விந்தை - ஆச்சரியம், ஓரகத்தி, தூர்க்கை, விற்பன்னம், வீரலட்சுமி.

விபகரி - வழக்குப்பேசு.

விபகலனம், விபகலிதம் } கழித்தல்.

விபக்கம், விபட்சம் } எதிர் பக்கம்.

விபக்கன், விபட்சன் } பகைவன்.

விபசாரம் - வேசித்தனம்.

விபஞ்சீ, விபஞ்சிகம் } வீணை.

விபணம் - விலை.

விபணி - கடை, கடைவீதி.
விபதம் - கெடுவழி.
விபத்தம் - பஞ்சம்.
விபத்தன் - கிலேசமுடையோன்.
விபத்தி - அபாக்கியன், கலக்கம், குற்றம், தரித்திரம், துன்பம், பங்கு, மரணம், வேதனை, வேற்றுமை.
விபத்து - கலக்கம், துன்பம்.
விபங்கம் - நஷ்டம், பாம்பு.
விபம் - செல்வம், மேலான தத்துவம், மேன்மை.
விபரீதம் - அதிசயம், வேறுபாடு.
விபலம் - பயனின்மை.
விபவ - ஓராண்டு.
விபவம் - காதல், செல்வம், பொருள், மகத்துவம், வாழ்வு, வரம்.
விபன்னன் - மெலிந்தோன்.
விபாகம் - செல்வம், பக்குவம், பங்கு, பழுத்தல், மாறுதல், வேறுபாடு.
விபாகரன் - சூரியன், தீக்கடவுள்.
விபாதம் - உதயகாலம்.
விபாவரி - இராத்திரி, சங்கம் வாங்கி, வேசி.
விபாவனை - ஆராய்வு, ஓரலங்காரம், பகுத்தறிவு.
விபினம் - காடு.

விபீடணன் - இராவணன் சகோதரன்.
விபீதகம் - தான்றிமரம்.
விபு - ஆகாயம், ஆன்மா, இடம், எசமானன், கருத்தா, சிவன், தலைவன், நித்தியம், நேரம், பரிபூரணம், பிரமன், விஷ்ணு, வேலைக்காரன்.
விபுதர் - அறிஞர், மிகக்கற்றோர், வானோர்.
விபுதன் - சந்திரன், தேவன், பண்டிதன்.
விபுத்துவம் - பரிபூரணம்.
விபுலம் - அகலம், பூமி, பெருமை, விரிவு.
விபுலை - பூமி.
விபூடணம் - அலங்காரம், ஆபரணம்.
விபூதி - அணிமா முதலியன, உத்தம குணம், குற்றம், சாம்பல், செல்வம், திருநீறு, பெருமை.
விப்பிரமம் - அழகு, தலைவன் தலைவி விளையாட்டு, மயக்கம்.
விப்பிரம் - அழகு, ஐயம், சந்தேகம், சீக்கிரம், சுழலுதல், தவறு, பிழை.
விப்பிரயோகம் - பிரிதல், பஞ்சபாணவத்தையி லொன்று.
விப்பிரர் - அந்தணர்.
விப்பிரலம்பம் - சண்டை, பிரிவு.
விப்பிலவம் - அநியாயப்போர், அந்தக்கொள்ளை, கலக்கம், சீக்கிரம், நாட்டுக்குற்றம்.

விப்புருதி - அரிபுண், ஓர்சிலந்தி.

விமதன் - பகைவன்.

விமர்சம்
விமரிசனம்
விமரிசை } ஆராய்வு, யூகம்.

விமர்த்தனம் - அரைத்தல், அழித்தல், கிரகணம், தூளாக்குதல், தேய்த்தல்.

விமர்த்தார்தம் - கிரகண பரிசன காலந் தொடங்கி விமோசனம் வரைக்கும்.

விமலம் - அழகு, அழுக்கின்மை, சிவாகமமிருபத்தெட்டினொன்று, பொன்மலாம், வெண்மை.

விமலன் - கடவுள், சிவன்.

விமலாகாசம் - ஞானாகாசம்.

விமலி - சரசுவதி.

விமலை - இலக்குமி, துர்க்கை, பார்வதி.

விமார்க்கம் - துன்னடை, விளக்குமாறு.

விமானம் - அவசங்கை, அளவு, இராசமாளிகை, உரோகணி நாள், ஏழ்நிலைமேடை, குதிரை, தேர், தேவர் கோயில், தேவலோகம், வாகனம்.

விமுகம் - எதிரிடை.

விமுத்தி - பிரிவு, முத்தி.

விமுத்திரம் - தளிர், பூந்தளிர்.

விமோசனம் - ஒழிதல், தீர்தல், நிவிருத்தி, விட்டுநீங்கல்.

விம்பம் - உருவம், ஒளி, கொவ்வைக்கொடி, பிரதிவிம்பம், வட்டம், சாலங்க பாஷணம், சிவாகம மிருபத்தெட்டினொன்று, நிழல், வட்டம்.

விம்பிகை - விம்பம்.

விம்பித்தல் - சாயை வீசுதல்.

விம்பு - கமுகு.

விம்மல் - அழுதல், ஏங்கல், ஒலித்தல், கலக்கம், சந்தோஷம், பருத்தல்.

விம்மிதம் - அச்சம், அதிசயம், உடல்.

விம்முதல் - விம்மி அழுதல்.

விய - ஓராண்டு.

வியக்கம் - பெருமை.

வியங்கம் - தவளை, பிறவிமறு.

வியங்கியம் - குறிப்பு, குறிப்புப் பொருள், குற்றுவார்த்தை.

வியங்கோள் - ஏவல், ஐம்பான் மூவிடத்து வருமேவல், மரியாதை யேவல்.

வியசனம் - அரிட்டம், உபத்திரவம், காற்று, குற்றம்.

வியஞ்சகம் - அபிநயம்.

வியஞ்சனம் - அடையாளம், ஒற்றெழுத்து, தாடி, பருப்பு, திரளை, யோனி.

வியட்டி - வேறுதல்.

வியட்டிரூபம் - ஸ்தூலரூபம்.

வியதிபாதம் - கலகம், துன்னிமித்தம், நித்திய யோகத்தொன்று.

வியதிரேகம்-எதிர்மறை, ஓரலங்காரம், விகற்பம்.

வியத்தம் - அறிவு, எதிர், கலக்கம், பிரதானம், மூலம், விளக்கம், வெளிப்படை.

வியத்தல்-அதியசயித்தல், துதித்தல்.

வியத்திகை - பெருமை.

வியநெறி - பெரும்பாதை.

வியந்தரம் - பிசாசம்.

வியப்பு - அதிசயம்.

வியம் - உடல், ஏவல், பறவை, பெருமை.

வியர்த்தம் - பயனின்மை.

வியர்த்தல் - சினக்குறிப்பு, வேர்வை.

வியர்ப்பு - கோபம், சினம், வேர்வை.

வியயம் - செலவு.

வியர்வு - வியர்த்தல்.

வியலிகை - பெருமை.

வியலிடம் - அகலம்.

வியல் - அகலம், காடு, பெருமை, விரிவு.

வியவகாரம் - பிணக்கு, வழக்கு, வியாபாரம், வினோதம்.

வியவன்-ஏவுவான், திண்ணியன், வழிச்செல்வோன்.

வியாஜநிலையுருவகம்-ஓரலங்காரம்.

வியனுலகு - தேவலோகம்.

வியன் - ஒற்றை, பெருமை, விஸ்தாரமான.

வியன்சங்கலிகிதம் - ஓர் சங்கலிகிதம்.

வியாகரணம்-கிரந்த விலக்கணம், கலை ஞான மறுபத்துநான்கினொன்று, விபரம், வேதாங்கத்தொன்று.

வியாகாதம் - இடையூறு, அழிவு, ஓர் யோகம்.

வியாகாரம், வியாகிருதி - அவலட்சணம், சத்தம், சருவுதல், பேச்சு, மாறுதல்.

வியாகுலம் - கலக்கம், துக்கப்படல்.

வியாக்கியாதா - உரைகாரன்.

வியாக்கியானம் - உரை.

வியாக்கிரம் - சிறந்த பெரும்புலி.

வியாக்கிராசனம் - புலித்தோலாசனம்.

வியாசம் - உவமை, ஓர் தருமநூல், நியம், தந்திரம், தாரணம், பகுத்தறிதல், விரிவு.

வியாசன் - வேதவியாசன்.

வியாச்சியம் - வழக்கு.

வியாதம் - துயரம், வேறுபாடு.

வியாதன்-வியாசமுனி, வேடன்.
வியாதாகாரம் - துயர்தீர்க்கை.
வியாதி - நோய்.
வியாதுதம் - அசைவுள்ள சரம்.
வியாத்தம் - உறுதி, கீர்த்தி, சூழ்வு, நிறைவு, பரவுதல், வியாப்தியோடு கூடியது.
வியாத்தி-பெறுதல், வியாபிப்பது.
வியாபகம் - எங்குமிருப்பது.
வியாபாதம் - வஞ்சமனம்.
வியாபாதனம் - கொல்லல்.
வியாபாரம் - அப்பியாசம், செட்டு, தொழில், காரியம்.
வியாபாரி-செட்டுச் செய்வோன், தொழிற்படுவோன்.
வியாபி - எங்குமிருப்போன்.
வியாபித்தல் - எங்கும்நிறைந்தது.
வியாப்பியம் - அருத்தாபத்திப் பொருள், காரணம், வியாப்தியையுடையது.
வியாமம் - இக்கட்டு, இளைப்பு, ஒளி, சாந்த குணம், நான்குமுழ வளவு, நிந்தை, புகை, முரஞ்சு, வருத்தம், வழி.
வியாயோகம் - நாடகவகை பத்தினொன்று.
வியாவத்தம் - சுழலல், சூழ்தல்.
வியாவிருதி - புறம்பு, மறைவு.
வியாவிருத்தி - தள்ளுதல், தெரிதல், புகழ்ச்சி, மறைத்தல்.
வியாழம் - ஓர்கிரகம், ஓர்நாள், தேவகுரு.
வியாளகிராகி - பிடாரன்.
வியாளம் - கெட்டயானை, பாம்பு, புலி.
வியானன் - தசவாயுக்களிலொன்று, அது — சரீரமுழுதும் வியாபித்திருப்பது.
வியுட்டம்-நாள், பலன், வைகறை.
வியுட்டி - கீர்த்தி, பலன், வத்தி.
வியுற்பத்தி - சொற்புணர்ச்சியிலக்கணம்.
வியூகம் - உடல், திரள், யூகம், படைவகுப்பு, விலங்கின் கூட்டம்.
வியோகம் - பிரிதல், விடுதல்.
வியோமம் - ஆகாயம்.
விரகம் - காமநோய், பிரிவு, புலவி, விடுதல்.
விரகு - அழித்தல், உணர்வு, உபாயம், கதி, புத்தி.
விரணம் - புண், விழல்.
விரதம் - ஆணை, தவம். இது— புண்ணியமேழினொன்று.
விரதர் - தவத்தோர்.
விரதி - ஒழிவு துறவி, துறவு முறை.
விரத்தம், விரக்தம் - துறவறம், வெறுப்பு.
விரத்தன் - விரதி.
விரத்தி - துறவு, விரக்தன்.

விரலணி - மோதிரம்.

விரலம்-தூரம், நெகிழ்வு, நெற்றி, புளித்த தயிர்.

விரவல் - கலத்தல்.

விரவாசினைமுதல் - சினைமுதலும் ஒற்றுமை கருதி மயங்கச்சொல்லப்படாவாம்.

விரவியபொருள்-கலந்தபொருள்.

விரவு-கலப்பு, விரவென்னேவல்.

விரவுதல் - கலத்தல்.

விரவுத்திணை - பொதுத்திணை.

விரளம்-நீக்கம், நெகிழ்வு, மிருது, விசாலம்.

விராகம் - விருப்பின்மை.

விராகன் - அருகன், ஆசையொழித்தவன்.

விராடம் - ஓர்தேயம்.

விராட்டு - பரப்பிரமம், புள்ளரசு.

விராதம் - எதிரிடை, கலக்கடி, கூட்டம், கைவேலை, தடை, நாள் வேலை.

விராத்தியன் - சாதிதருமம் விட்டவன், பிரதிலோமத்தந்தைக்கும் அநுலோமத்தாய்க்கும் பிறந்தோன்.

விராமம் - இளைப்பாற்றி, ஒற்றெழுத்து, தரிப்பு, முடிவு.

விராய் - விறகு.

விராலி - ஓர்செடி.

விராவம் - ஒலி.

விராளி - விரகம்.

விராறு - காக்கணம்.

விரி - விரிவு, தொகையின்விரிவு, மாட்டுவிரி, விரியென்னேவல்.

விரிசிகை - முப்பத்திருகோவை மணியுள்ளமாதரிடையணி.

விரிச்சி - நன்னிமித்தம்.

விரிச்சிகன் - சூரியன்.

விரிஞ்சனன் }
விரிஞ்சன் } சிவன், பிரமன், விஷ்ணு.
விரிஞ்சி }

விரிதல்-அலர்தல், ஒளி செய்தல், பரவல், விசாலம்.

விரிதூறு - புதர்.

விரித்தல் - ஓசை குறைந்தால் எழுத்தாயினுஞ் சாரியையாயினும் பெய்து விரிப்பது, சொல்லல், தொகுத்துக் கிடந்ததை விரித்து முடித்தல், பரப்பல், பூசுதல்.

விரித்துரை - விரியுரை.

விரியலர் - மலர்ந்தபூ.

விரியல் - ஒளி, பரவல், மலர்தல், வியங்கோண்முற்று.

விரிவு-அகலம், வேற்றுமையுருபு முதலியன தொக்கு நிற்பின் அவற்றை விரித்தெழுதுவது, விரிவுரை.

விருகம் - ஓநாய், செந்நாய், நரி.

விருகு - விருகந்தண்டு.

விருகோதரன் - பிரமன், பீமன்.

விருக்கம் - மரப்பொது.

விருச்சிகம் - ஓரிராசி, தேள்.

விருடணம் - பீசம்.

விருடம் - இடபம், எலி, ஓரிராசி, சன்மார்க்கன், தருமம், மயிற்றேகை, மேன்மை.

விருட்சம் - மரப்பொது.

விருட்டி - மழை.

விருதர் - படைவீரர்.

விருதா - பயனின்மை.

விருத்தகங்கை - கோதாவரி.

விருத்தகிரி - விருத்தாசலம்.

விருத்தம் - அறிவு, ஆமை, ஒவ்வாநியாயம், ஒவ்வாமை, கடினம், கிழத்தன்மை ,குவியல், சிற்பநூல் முப்பத்திரெண்டினென்று, சூழ்ந்தது, செய்தி, தடை, தெரிந்து கொள்ளப்பட்டது, தொழில், நடக்கை, நடந்தேறினது, நூதனம், படித்தது, பழமை, பாவினத் தொன்று, மூப்பு, வட்டம், வேறுபடல்.

விருத்தர் - கிழவர், மேலோர்.

விருத்தவிலக்கணம் - ஓர்பிரபந்தம்.

விருத்தாசலம் - ஓர் சிவதலம்.

விருத்தாந்தம் - கதை, செய்தி, வர்த்தமானம்.

விருத்தி - அடிமை, அபராதம், இலாபம், ஏறுதல், ஒழுக்கம், ஓரலங்காரம், ஓருரை, செல்வம், தொழில், நித்தியயோகத் தொன்று, வளர்தல்.

விருத்திசந்தி - எழுத்துக்களின் ஐவகைப் புணர்ச்சிகளிலொன்று. அது—நிலைமொழியிறுதியும் வருமொழி முதலும் கெடத்தோன்றல்.

விருத்தியுரை - விரிவான உரை, அஃது—பதினன்கு உறுப்புக்களைக்கொண்டு வருவது.

விருத்தை - கிழவி.

விருந்தம் - கூட்டம், விலங்கின் கூட்டம்.

விருந்தர் }
விருந்தினர் } புதியர்.

விருந்தனை - மனைவி.

விருந்து - புலமை, எண்வகை வனப்பினென்று, அதிதியர்க்கிடுமுண்டி.

விருந்துபுறந்தரல் - விருந்தினர்க்கீயவஞ்சல்.

விருந்தை - துளசி, சலந்தரன் மனைவி.

விருந்தோம்பல் - வேளாண்மை மாந்தரியல்பினென்று.

விரும்பன் - வெள்ளெலி.

விருப்பம் }
விருப்பு } ஆசை.

விருப்பின்மை - அவாவின்மை, இஃது-அறத்துறுப்பினொன்று.

விரும்பல் - ஆசைப்பெருக்கம், கருத்து.

விருவிருப்பு - நஞ்சு முதலிய வேறுங் குறிப்பு.

விருளை - கடிவாளப்பூண்.

விரூபம்-விகாரரூபம்,வேற்றுமை.

விரூபாக்கன் } சிவன்.
விரூபாட்சன் }

விரேசனம் - பேதிமருந்து, விடுதல்.

விரேசித்தல் - கழிதல்.

விரை - சாந்து, அயம், பூந்தேன், வாசனை; விரையென்னேவல், விதை.

விரைதல் - விரைவு, வெயில், வேண்டல்.

விரைவு - வேகம்.

விரோசனன் - சூரியன், பலிச்சக்கரவர்த்தி தந்தை.

விரோதசிலேடை - முன்சிலேடித்து வந்தவற்றைப் பின்னும் விரோதிப்பச் சிலேடிப்பது.

விரோதம் - ஒவ்வாமை, ஓரலங்காரம், பகை, வன்மம், வேற்றுமை.

விரோதி - எதிரி, ஓராண்டு, விரோதியென்னேவல்.

விரோதிகிருது - ஓராண்டு.

விர்த்தி - விருத்தி.

விலகல் - எறிதல், நீங்கல்.

விலக்கல் - மாற்றல்.

விலக்கு - தவிர்ப்பு, மறிப்பு,வழு, விலக்கென்னேவல்.

விலங்கரசு - சிங்கம்.

விலங்கலோசை - ஈரமடங்கல், ஐகாரம் அவ்வோசையுள்ளது.

விலங்கல் - கலங்கனீர், மலை, விலகுதல்.

விலங்கு - காற்றளை, தடை, தளை, குறுக்கு, மிருகம், விலங்கென்னேவல்.

விலங்குதல் - எறிதல், விலகல்.

விலசிதம் - இலீலா விநோதம்.

விலட்சணம்-மேன்மை, பின்னம்.

விலட்சத்துவம் - அடையாளமின்மை, அதிசயம், பகுத்தறிவின்மை, வெட்கம்.

விலட்சயம் - அபாவவியல்.

விலயம் - அழிவு, உருக்குதல், உலகாந்தம்.

விலயனம் - அகற்றுதல், அழிந்தல், உருக்கல்.

விலா - பழு.

விலாசம் - அழகு, ஆடவர் மகளிர் விளையாட்டு, ஓர் பிரபந்தம், நாடகக்குறிப்பு.

விலாசனை - மகளிர் விளையாட்டு.

விலாபம் - கனவு கண்டிரங்கல், புலம்பல்.

விலாழி - குதிரை வாய்நுரை, யானைத்துதிக்கை நீர்.

விலாளம் - ஆண்பூனை, பூனை.

விலேபனம் - பூசுதல், வாசனைச் சாந்து, சந்தனத்தைலம்.

விலேபி - கஞ்சி.

விலை - கிரயம், விற்றல்.

விலைஞர் - செட்டிகள்.

விலைமகள் - வேசி.

விலையாளர் - விற்போர்.

விலோசனம் - கண், பார்வை.

விலோடனம் - உருளுதல், கலக்குதல்.

விலோதம் - பெண்மயிர், மயிர்க்குழல்.

விலோதனம் - துகிற்கொடி, பெருங்கொடி.

விலோமம் - முறைபிறழ்த்தல்.

வில்-ஒளி, சேரன்கொடி. த.நுஸு, மூலநாள், வில், வில்லென்னேவல்.

வில்லம் - குகை, பெருங்காயம், வில்வம்.

வில்லவன் - சேரன்.

வில்லார் / வில்லியர் } வில்லுடையோர்.

வில்லி - மன்மதன், விசையன், விற்போராளன், வீரபத்திரன்.

வில்லிப்புத்தூரன் - பாரதம்பாடியவோர்கவி.

வில்லியர் - வில்வல்லோர்.

வில்லுவம் / வில்வம் } கூவிளை, தசமூலத்தொன்று, வில்வமரம்.

வில்லேருழவர் - படைவீரர், வேடர்.

வில்லை - அடை, அண்டை, தகட்டுவட்டம், வட்டித்தது, வில்வம்.

வில்வித்தை - வின்னூல்.

விவகரித்தல் - நியாயம் பேசல்.

விவகாரம் - நிதிபதித்துவம், பிணக்கு, முப்பொருளினொன்று, அது—பொருளீட்டல், தொழில், வழக்கு, வளமை.

விவசம் - கீழ்ப்பட்டது பரவசம், பற்றின்மை.

விவரணம் - விபரம்.

விவரம் - உட்டுளை, குகை, குறை.

விவர்த்தம் / விவர்த்தனம் } ஆடல், கூட்டம், புரளல்.

விவாகம் - கலியாணம்.

விவாதம் - சொற்கலகம், வாது.

விவிதம் - பலவிதம்.

விவேகம் - பகுத்தறிவு, புத்தி, மனத்தெளிவு.

விவேசனம் - விவேகம்.

விழம்பு - சேறு.

விழலர் - அறிவிலார்.

விழலாண்டி - வீணன்.

விழல் - ஓர்புல், விழுதல், வீண்.

விழவு - திருவிழா, மிதுனவிராசி.

விழா - மங்கலச் சடங்கு, விழவு, வினையெச்சம்.

விழி - கண், விழியென்னேவல்.

விழித்தல் - கண்டித்தல்.

விழுகை - விழுதல்.

விழுக்காடு - குறைவு, தூக்கம், வசக்கேடு, வீதம்.

விழுக்கு - நிணம்.

விழுங்கல் - விழுங்குதல்.

விழுதல் - விழுகை.

விழுது - ஆலமராமுதலியவற்றின் விழுது, விழுநூல்.

விழுத்தம் - கருஞ்சீரகம்.

விழுத்தல் - வீழ்த்தல்.

விழுப்பம் - ஆசை, குலம், சிறப்பு, நன்மை, மேன்மை.

விழுப்பு - தீட்டு.

விழுமம் - இரும்பை, சிறப்பு, சீர்மை, நன்மை.

விழுமியதுபயத்தல் - சிறந்தபயனைத்தருதல்.

விழுமியோர்-நல்லோர், மேலோர்.

விழைச்சு - இளமை, புணர்ச்சி.

விழைதல் - ஆசைப்பெருக்கம்.

விழைந்தோர் - சிநேகிதர்.

விழைவு - ஆசைப்பெருக்கம், உள்ளோசை, கலத்தல், விருப்பம்.

விளக்கம் - விந்திரனுள், தெளிவு, விசாரணை.

விளக்கு - சோதிநாள், தீபம், தீபிகை, விளக்கென்னேவல்.

விளக்குதல் - விளங்கச்செய்தல்.

விளக்குநிலை - ஓர் பிரபந்தம்.

விளங்கல் - ஒளிசெய்தல், பிரகாசித்தல்,

விளங்கவைத்தல் - யாவருக்கும் பொருள் விளங்கித் தோற்ற வைத்தல்.

விளங்குதாரணத்தாகுதல் - தெரியத் தக்க வுதாரணங்களையுடையதாதல்.

விளங்குதிங்கள் - சுக்கிரன்.

விளம்பம் - தாமதம்.

விளம்பல் - சொல்லல்.

விளம்பனம் - தாமதம்.

விளம்பி - ஓராண்டு.

விளம்புதல் - சொல்லுதல்.

விளம்பிதம் - ஓர் தாளப்பிரமாணம்.

விளரி - இளமை, ஏழிசையினொன்று, அது— நெஞ்சாற் பிறக்குமிசை, நெய்தனிலத்தியாழ், மிகுதி, யாழினோர் நரம்பு, வேட்கை.

விளரிப்பாலை - ஓரிராகம்.

விளர் - இளமை, கொழுமை, வெண்மை.

விளர்தல் - வெளுத்தல்.

விளவு - கமர், விளவென்னேவல், விளாமரம்.

விளா - விளவு.

விளாகம் - போர்க்களம்.

விளாவல் - கலத்தல்.

விளி - எட்டாம்வேற்றுமை, விளியென்னேவல்.

விளிதல் - கெடுதல், சாதல், மறிதல், வருந்தல், கோபித்தல்.

விளித்தல் - அழைத்தல்.

விளிப்பெயர் - அழைத்தலாகிய எட்டாம் வேற்றுமை.

விளிம்பு - கண்ணிமை, கரை.

விளிம்புதெற்றி - கரைத்திண்ணை.

விளிவித்தல் - அழைப்பித்தல், கொல்லல்.

விளிவு - கோபம், சாவு.

விளிவேற்றுமை - எட்டாம் வேற்றுமை,

விளை - கொல்லை.

விளைஞர் - மருதநிலமாக்கள்.

விளைதல் - உண்டாதல், தானியம் விளைதல்.

விளைநிலம், **விளைபுலம்**, **விளையுள்** - வயல்.

விளைவு - சம்பவிப்பு, தானியம், சொல்லல், பயன், மேகம், வயல், வேறுபடல், வெடித்தல்.

விள்ளுதல் - வேறுபடல்.

விறப்பு - அச்சம், நெருக்கம், பெருக்கம், போர், வெற்றி.

விறலி - பதினாறு வயதுப்பெண், பாடன்மகடூ.

விறலிவிடுதூது - ஓர் நூல்.

விறலோன் - அருகன், திண்ணியன்.

விறல் - பெருமை, வலி, வீரம், வெற்றி.

விறைத்தல் - பயப்படல்.

விற்பத்தி - கல்வி வல்லபம்.

விற்பன்னம் - கல்வி, பிரசங்கம்.

விற்பன்னர் - கற்றோர்.

விற்பன்னித்தல் - வருணித்தல்.

விற்றல் - விற்குதல்.

வினகம் - சேங்கொட்டைமரம்.

வினவல் - வினாவல்.

வினவுதல் - வினவல்.

வினா - அவதானம், உரையிலக்கணமைந்தினொன்று, கேள்வி, சொல், கேள்வியைக் கொண்டு முடித்தல், புத்தி, வினாவென்னேவல்.

வினாசன் - கொலைசெய்வோன்.

வினாதல் - கேள்வி கேட்குதல்.

விஞ்ஞதகற்பனை - தெளிவில்லாத கற்பனை.

வினுவெழுத்து-முதலிலும் கடையிலும் நின்று கேள்விசெய்கிற வெழுத்து.

வினியோகக்காரன் - கொடையாளன்.

வினியோகம்-கைம்மாறு நோக்கியீதல்.

வினீதன் - தண்டிக்கப்பட்டவன், வினயமுள்ளவன்.

வினை - ஊழ், கருத்து, தீவினை, தொழில், நல்வினை, போர், மூவகைவினைச்சொற்கள்.

வினைக்குறிப்பு - குறிப்புவினை.

வினைக்குறிப்புமுற்று - குறிப்பாகக்காலங் காட்டுஞ்சொல்.

வினைக்குறை - வினையெச்சம்.

வினைசாதித்தல் - வினைபாராட்டல்.

வினைச்சொல் - இடம், கருவி, செயப்படுபொருள், செயல், காலம் எனுமிவைகளை விளக்கிநிற்குஞ் சொல்.

வினைஞர் - கம்மாளர், கூத்தர், சூத்திரர், மருதநிலமாக்கள்.

வினைதீர்த்தான் - விநாயகன்.

வினைத்தொகை - பெயரெச்சத்தின் விகுதியிடை நிலைகடொக்கு நிற்கப் பதம் வந்து புணரும் புணர்ச்சி.

வினைப்பகுதி - வினையிற் பகாப் பதமாய் முதனிற்குமுறுப்பு.

வினைப்பகாப்பதம் - செய்யென்னும் வாய்பாட்டால் வருமுதனிலை வினை.

வினைப்பகுபதம் - பகுதி முதலிய வுறுப்பக்களாற் பிரிக்கத்தக்க வினைச்சொல்.

வினைப்பயன் - முன் வினைப்படி வந்த பலன்.

வினைப்பெயர் - தொழிற்பெயர்.

வினைமாற்றுவது - தொழிலை மாற்றுவது, வினைமாற்றுப் பொருள்.

வினைமுதல் - எழுவாய், கர்த்தா, செய்பவன்.

வினைமுதற்பொருள் - தனதுபுடைபெயர்ச்சியாகிய தொழிலில் சுதந்தரமுடையபொருள்.

வினைமுற்று - தெரிநிலை வினைமுற்றுச்சொற்கள்.

வினையழுத்தல்-வினையாராட்டல்.

வினையாண்மை - வினையையாளுந் தன்மை.

வினையாலணையும்பெயர் - காலம் நின்ற வினையால் உண்டாகும் பெயர்.

வினையாளர் - ஏவல் செய்வோர்.

வினையியல் - வினைச்சொல்லின் பங்கு.

வினையின்விகுதி - வினைப்பகுபதங்களின் கடைநிலை.

வினையுருபு - விகுதி முதலிய வினையுருபுகள்.

வினையுரைப்போர் - தூதர்.

வினையுவமை - தொழிலையே யுவமையாக வெடுத்துக் கூறுவது.

வினையெச்சக்குறிப்பு - தொழில் தோன்றாது வினையெச்சம் போல நின்று பிறிது வினையோடு முடிவது.

வினையெச்சம் - வினைக்குறை, வினையைக்கொண்டு முடிப்பவை.

வினையெஞ்சணி - ஓரலங்காரம்.

வினையிற்பிரிதல் - அகப்பொருட்டுறையினொன்று.

வினைவசம் - கர்மவசம்.

வினைவழிச்சேறல்-அகப்பொருட்டுறையினொன்று.

வினைவிநாசன் - கடவுள்.

வின்னாண் - வானம்பு.

விநோதம் - அவா, அழகு, எதிரிடை, சந்தோஷம், தள்ளுதல், தொழில், பொழுதுபோக்கல், மகத்துவம், விளையாட்டு.

வின்னூலாளன் - துரோணாசாரியன்.

வீ

வீ - ஓரெழுத்து, சாவு, நீக்கம், பறவை, பூ, வீயென்னேவல்.

வீகம் - காற்று, பூட்டு, மோதிரம்.

வீக்கம் - மிகுதல், வீங்கல்.

வீக்குதல் - அழித்தல், கட்டல், வீங்கச்செய்தல்.

வீங்கல் - நித்திரைசெய்தல், வீக்கம்மிடுதல்.

வீங்கி - சேங்கொட்டை.

வீங்கிய - பூரித்த.

வீசகணிதம் - அட்சரகணிதம்.

வீசகா - வேங்கை.

வீசம் - அவசியம், ஓரெண், ஓர்கணிதம்,நெல்லெடைப்பொன்.

வீசல் - அடித்தல், ஈதல், எறிதல், சிதறல், சுழற்றல்.

வீசனம் - சிற்றால வட்டம், பொருள், விசிறி.

வீசு - வீச்சு.

வீசி - அலை,அற்பம்,இளைப்பாற்றி, கிரணம், சந்தோஷம்.

வீசை - ஓர்நிறை.

வீடல் - சாதல்.

வீடி - கொத்தான்.

வீடிகை - தாம்பூலம்.

வீடு - மனை, மோட்சம், வீடென்னேவல்.

வீடுபேறு - முத்தி.

வீட்சணம், **வீட்சணை** } பார்வை.

வீட்டுதல் - கொல்லல்.

வீட்டுமம் - வைராக்கியம்.

வீட்டுமாசாரி - சந்தனு.

வீட்டுள்ளார் - இல்வாழ்வார்.

வீணாதண்டம் - முன்னெலும்பு, வீணைக்கழுத்து.

வீணை - ஓசையாழ்.

வீணைவல்லோர் - கந்தருவர்.

வீண் - பயனின்மை.

வீதம் - அளவு, முறை.

வீதராகம் - பற்றின்மை, வைராக்கியம்.

வீதல்-கெடுதல், சாதல், வறுமை.

வீதி - ஒழுங்கு, கடைவீதி, நாடகவகை பத்தினொன்று, நேரோடல், வழி.

வீத்துமம் - சதகுப்பை.

வீபணி - கடைவீதி.

வீபத்து - சந்திரன்.

வீபற்சு - அருச்சுனன்.

வீப்பகழி - மன்மதன்கணை.

வீமசேனன் - தமயந்தி பிதா வீமன்.

வீமதேவன் - பதினோரு உருத்திரரிலொருவன்.

வீமம் - பயங்கரம், பருமை.

வீமன் - பஞ்சபாண்டவரிலொருவன்.

வீயா - தொலையாத.

வீரகங்கணம் - வீரர்களுக்குக் கொடுக்கும் கைவளை.

வீரசாகி - செங்கொட்டைமரம்.

வீரசேனன் - நளன்றந்தை.

வீரசைவம் - ஓர் சைவம்.

வீரட்டாணம்-கூத்தின் விகற்பம்.

வீரணம் - இலாமிச்சம்வேர்.

வீரதச்சுவன் - மன்மதன்.

வீரதுரந்தரன் - மகாவீரன்.

வீரபத்திரன் - சிவகணத்தொருவன், வயிரவன்.

வீரப்பாடு - வெற்றி.

வீரமாகாளர் - ஐயன்படைத்தலைவர்.

வீரமார்த்தாண்டன் - நவவீரரிலொருவன், சிறந்தவீரன்.

வீரமுட்டி - வீரசைவத்துருத்திரவேடம்பூண்டுசமயப்பாதுகாவலனாயிருப்பவன்.

வீரமுத்திரிகை-சுண்டுவிரலணி.

வீரம் - ஓர்சுவை, ஓர்மருந்து, வீரியம், சிவாகமமிருபத்தெட்டினொன்று, யோகநிலையினொன்று.

வீரர் - படைவீரர்.

வீரவெட்சிமாலை - ஓர் பிரபந்தம்.

வீரவெண்டையம் - வீரகண்டாமணி.

வீரவெறி - வீரத்தாலாயமதர்ப்பு.

வீரன் - அருகன், திண்ணியன், வீட்டுமாசாரி.

வீராணம் - ஒருவகைப்பறை, ஓரூர், நீர்க்கரை.

வீராவேசம் - குணலே, வீரவெறி.

வீரி - காளி, வீரமுடையவள்.

வீரியத்தம்பனம் - வீரியமடக்குதல்.

வீரியம்-சுக்கிலம், பறைப்பொது, வீரம், வலி.

வீரியர் - வீரர்.

வீருதம் - மிடைதூறு.

வீரை - ஓர்மரம், கடல், துன்பம்.

வீவு - சாவு.

வீழி - ஓர்செடி.

வீழ்-மாவிழுது, வீழென்னேவல்.

வீழ்கதி - நரகம்.

வீழ்தல் - ஆசை, ஆசைப்பெருக்கம், மேவல், விழுதல்.

வீழ்த்தல் - விழுவித்தல்.

வீறல் - தனித்தல், பிரிதல், பெருமையாதல், விளங்கல், வெறுப்பாதல்.

வீறு - தனிமை, புண்ணியம், பெருமை, விளக்கம், வீறென்னேவல், வெறுப்பு.

வீற்றம் - வேறுபாடு.

வீற்றிருக்கை - அரசிருக்கை.

வீற்றிருத்தல் - எழுந்தருளியிருத்தல், தனித்திருத்தல், மகிழ்ந்திருத்தல்.

வீற்று - தனிப்பாடு, வேறுபாடு.

வெ

வெ - ஓரெழுத்து.

வெஃகல் - ஆசைப்பெருக்கம்.

வெஃகா - விரும்பாத.

வெஃகாமை - வேண்டாமை.

வெஃகி - விரும்பி.

வெஃகுதல் - விரும்புதல்.

வெகுச்சுருதம் - ஓர் சிற்பநூல்.

வெகுதானிய - ஓர் வருடம்.

வெகுத்துவம் - பன்மை, மகத்துவம்.

வெகுநாயகம் - பலர்தலைமை.

வெகுளாமை - சினமின்மை.

வெகுளி-கோபம்,சினம்,இஃது முக்குற்றத்தொன்று, மாயையாக்கை பதினெண்குற்றத்தொன்று.

வெகுளிவிலக்கு - ஓரலங்காரம்.

வெகுளுதல் - சினத்தல்.

வெக்காலி - ஓர்மரம்.

வெங்கண் - பொறாமை.

வெங்களம் - போர்க்களம்.

வெங்கோல் - கொடுங்கோல்.

வெச்செனல் - வெப்பமாதல்.

வெஞ்சமம் - பாலைநிலத்திராகம், போர்.

வெஞ்சமன் - இயமன்.

வெஞ்சம் - பழி.

வெஞ்சிலைச்செல்வன் - வீரபத்திரன்.

வெஞ்சுடர்க்கிரணன் - சூரியன்.

வெடி - அச்சம், இடி, கள், சிற்றேலம், நறுமணம் நறும்புகை, வெடியென்னேவல், வெளி.

வெடித்தல் - பிளத்தல்.

வெடிப்பு - பிளப்பு.

வெட்கம் - நாணம்.

வெட்கல் - அச்சக்குறிப்பு, நாணுதல்.

வெட்சி - ஓர் பூஞ்செடி, பகைநிரை கவர்ந்தவருக்குமாலை.

வெட்டல் - கொலைசெய்தல், தறித்தல்.

வெட்டி - வழி, இருவேலி.

வெட்டெனல் - கடுமைக்குறிப்பு.

வெட்டெனவு - கடுமை.

வெட்டை - உட்டணம்.

வெட்பாலை - ஓர் மரம்.

வெண் - வெண்மை, வெண்சீர்.

வெண்கதிரோன் - சந்திரன்.

வெண்கலம் - ஒருலோகம்.

வெண்கலி-கலித்தளையும் வெண்டளையும் விரவியும் அயற்றளையருகியும் வந்து ஈற்றடி முச்சீராணிறுவது.

வெண்கவி-பொருளாழமில்லாத பாட்டு, வெண்பா.

வெண்காந்தள் - ஒருகொடி.

வெண்குமுதம் - வெள்ளாம்பல்.

வெண்குன்றி - அதிமதுரம்.

வெண்கூதாளம் - நீர்த்தாளி.

வெண்கொடிவேலி - ஓர்பூடு.

வெண்கோட்டம் - ஓர் மருந்து.

வெண்கலசமுற்றாள் - சரச்சுவதி.

வெண்சாமரம் } வெள்ளைச்சாமரம்.
வெண்சாமரை }

வெண்சாரை - இந்திரியம், வெள்ளைச்சாரை.

வெண்சீர்-நேரீற்று மூவகைச்சீர்.

வெண்சீர் - வெண்டளை.

வெண்சுடர் - சந்திரன்.

வெண்டகரை - ஓர்தகரை.

வெண்டலை - தலையோடு.

வெண்டளை - வெண்பாவிற்குரிய பந்தம்.

வெண்டாது - வெள்ளி.

வெண்டாமரை - வெள்ளைத்தாமரை.

வெண்டாமரையாள் -வெண்கலசமுற்றாள்.

வெண்டாழிசை - வெண்பாவினங்களிலொன்று.

வெண்டாழை - ஓர்தாழை.

வெண்டிங்கள் }
வெண்ணிலவு } வெண்கதிரோன்.
வெண்மதி }

வெண்டுகில்-வெள்ளை வஸ்திரம்.

வெண்டுறை - வெண்பாவினங் களிலொன்று.

வெண்டேர் - கானல்.

வெண்டோன்றி - வெள்ளைக்காந் தள்.

வெண்ணுயுருவி - ஓர்செடி.

வெண்ணுரை - ஓர்நாரை.

வெண்ணிலம் - வெறுந்தரை.

வெண்ணெய்தல் - ஓர் நீர்ப்பூ.

வெண்ணைநல்லூர்-ஓர்சிவஸ்தலம்.

வெண்ணொச்சி - ஓர்நொச்சி.

வெண்பலி - சாம்பல்.

வெண்பா - ஓர்பா, அஃது—ஈற் றடி முச்சீரடியாகவும், ஏனை யடி நாற்சீரடியாகவும்பெற்றுக் காயச்சீறு மகவற்சீரும், வெண் சீர் வெண்டளையுமியற்சீர் வெண்டளையுங் கொண்டு வரு வது.

வெண்பாப்புலி - ஓர் புலவன்.

வெண்புணர்ச்சிமாலை - தண்டக மாலை.

வெண்பொன் - வெள்ளி.

வெண்மணி - முத்து.

வெண்மயிர் - சாமரம்.

வெண்மலை - கைலை.

வெண்மை-அறிவின்மை,இளமை, வெள்ளை.

வெதிரேகம் - எதிர்மறை, விகற் பம்.

வெதிரேகவநுமானம் - ஓரள வைப் பிரமாணம்.

வெதிர் - செவிடு, மூங்கில்.

வெதிர்த்தல், வெதிர்ப்பு - கலக்கம், சினக் குறிப்பு, நடுக்கம்.

வெதுப்படக்கி - ஓர்பூண்டு.

வெதுப்பல் - வாட்டல்.

வெதுப்பு - ஓர்நோய், வெதுப் பென்னேவல்.

வெதும்பல் - சினக்குறிப்பு, வாடல்.

வெந், வெரிந் - முதுகு.

வெந்தை - பிட்டு.

வெந்நிடல் - புறங்காட்டல்.

வெந்நீர் - சுடுநீர்.

வெப்பம் - ஆசை, வெம்மை.

வெப்பு - வெம்மை.

வெம் - வெம்மையான.

வெம்பல்-பெருங்கோபம்,வாடல்.

வெம்மை - ஆசை, உட்டணம், கடுமை.

வெயிலெறித்தல் - ஒளிவீசுதல்.

வெயில் - ஒளி, கானல், சூரியன், சூரியப் பிரகாசம்.

வெய்து - விரைவாக, வெம்மை யுடையது.

வெய்துயிர்த்தல் - நெடுமூச்சு விடல்.

வெய்துறல் - அச்சக்குறிப்பு, சினக்குறிப்பு.

வெய்தெனல் - விரைவுக்குறிப்பு.

வெய்யவன், வெய்யோன் - கொடியோன், சூரியன், மிருகசீருடம், விருப்புற்றோன்.

வெய்யோன்கதி - ஸௌரியகதி.

வெரு - அச்சம், வெருவு.

வெருகம் - வாலின் கீழிடம்.

வெருகு - ஆண்பூனை, ஓர்செடி, பூனை.

வெருட்சி - அச்சம், மயக்கம்.

வெருட்டல் - அச்சமுறுத்தல்.

வெருட்டி - அச்சம், அச்சுறுவிப்போன்.

வெருவந்தம் - அச்சம்.

வெருவரல்-அஞ்சல், பயப்படல்.

வெருவு - அச்சம், வெருவென்னேவல்.

வெருவுதல் - அஞ்சுதல்.

வெருளி - வெருட்டு, புல்லுரு.

வெருளுதல் - மருளுதல்.

வெருள் - அச்சம், உன்மத்தம், பயம், வெருளென்னேவல்.

வெவிகம் - கற்றாழை.

வெல்லம் - கரும்பின்கட்டி.

வெல்லல் - செயித்தல், வெல்லுதல்.

வெல்லுமர் - புலி.

வெல்லுதல் - வெல்லல், செயங்கொள்ளல்.

வெல்வி - வெற்றி.

வெவ் - வெம்மையான.

வெவ்வியன் - கோபி.

வெவ்வினை - போர்.

வெவ்வுரை - கடுஞ்சொல்.

வெவ்வேறு - வேறுவேறு.

வெளி - ஆகாயம், பிரசித்தம்.

வெளிசம் - தூண்டில்.

வெளிது - வெண்மையானது.

வெளிப்படல் - தோன்றல்

வெளிப்படவில்லது - மறைந்து நிற்பது.

வெளிப்படை - தெளிவு, விரி; விரிவாகியசொல்.

வெளிப்படைச்சொல் - இயல்பாய் விளங்கி நிற்குமொழி.

வெளிப்படையுவமம் - வினையும் பயனும் உவமையுருபும்வெளிப்பட விளங்கி நிற்குமுவமம்.

வெளிப்பாடு-காணிக்கை, வெளிப்படல்.

வெளிமான் - பெண்மான்.

வெளியடை - திரைச்சீலை.

வெளில் - அணில், கட்டுத்தறி, தயிர்கடைமத்து, யானைத்தூண், வெண்மை.

வெளிவிருத்தம் - வெண்பாவினங்களிலொன்று.

வெளிறு - அறிவின்மை, நறுவிளிமரம், வயிரமில்லாமரம், வெண்மை, வெளிறென்னேவல்.

வெளிற்றமரம் - அலிமரம், முருக்கு.
வெளிற்றுரை - பொருணயமில் லாச்சொல்.
வெள் - வெண்மையான.
வெள்கல் - அச்சம், வெட்குதல்.
வெள்குதல் - அஞ்சல்.
வெள்வரி - பலகறை.
வெள்வேல் - ஓர்வேல்.
வெள்ளம் - ஓரெண், கடல், நீர்ப் பெருக்கு, மிகுதி.
வெள்ளரசு - ஓரரசு.
வெள்ளரி - ஓர்செடி.
வெள்ளலரி - ஓர் பூமரம்.
வெள்ளல்லி - வெள்ளாம்பல்.
வெள்ளறிவன் - அறிவீனன்.
வெள்ளறிவு - அவிவேகம்.
வெள்ளறுகு - ஓர்புல்.
வெள்ளாந்தை - ஓர் மலைப்பாம்பு.
வெள்ளாமை - ஓராமை.
வெள்ளாம்பல் - ஓர் ஆம்பல்.
வெள்ளாவிரை - ஓராவிரை.
வெள்ளி-சுக்கிரன், வெண்பொன், வெண்மை.
வெள்ளிடை - வெளி.
வெள்ளிமலை - கைலைமலை.
வெள்ளிலை - வெற்றிலை.
வெள்ளிலோத்திரம் - வெள்ளாம்பட்டை.
வெள்ளில் - பாடை, விளாமரம்.
வெள்ளீயம் - ஓரீயம்.
வெள்ளீரல் - மணிக்குடர்.
வெள்ளூமத்தை - ஒரூமத்தை.
வெள்ளெருக்கு - ஓரெருக்கு.
வெள்ளை - ஆழமான கருத்தில் லாதது, சங்கு, பலபத்திரன், வெண்பா, வெண்மை, வெள்ளாடு, வெள்ளாட்டுக்குட்டி, வெள்ளி.
வெள்ளைக்கவி - புன்சொற்கவி.
வெள்ளைக்காக்கணம் - ஓர்கொடி.
வெள்ளைக்குன்றி - அதிமதுரம், வெண்குன்றி.
வெள்ளைச்சாரணை - ஓர்சாரணை.
வெள்ளைச்செவ்வந்தி - ஓர் செவ்வந்தி.
வெள்ளைச்சொல் - வெளிப்படையானசொல்.
வெள்ளைச்சோளம் - ஓர்சோளம்.
வெள்ளைத்தமிழ் - சுத்தத்தமிழ்.
வெள்ளைத்தினை - ஓர்தினை.
வெள்ளைநிறத்தான் } சரசுவதி.
வெள்ளைமெய்யான் }
வெள்ளைப்பாஷாணம் - ஓர்பாஷாணம்.
வெள்ளைப்பொன்னாவிரை - ஓராவிரை.
வெள்ளைப்போளம் - ஓர்மணி, ஓர்மருந்து.
வெள்ளைமந்தாரை - ஓர் மந்தாரை.

வெள்ளைமாதளை - ஓர் மாதளை.

வெள்ளையானையூர்தி - இந்திரன், ஐயனார்.

வெள்ளொத்தாழிசை - ஓர் பாவினம். அது—வெண்டாழிசை.

வெள்ளோந்தி - ஓரோந்தி.

வெறி - அச்சம், ஆடு, கலக்கம், கள், சீக்கிரம், நாற்றம், பிசாசம், வெறியென்னேவல், வேலனாடல்.

வெறிதல் - நெருங்கல்.

வெறிது - அறிவின்மை, வெறுமையானது.

வெறித்தல் - மயக்குதல்.

வெறியாடல் - தேவர்க்காடு கூத்து.

வெறியாட்டாளர் - தேவர்க்காடுவோர்.

வெறியோடல் - திகைத்தல், நம்பிக்கையறல், வெறுமையாதல்.

வெறுக்கை - கள், செல்வம், பொன், விழுப்பொருள்.

வெறுத்தல் - கோபித்தல், கைத்தல், சினத்தல், மறுத்தல்.

வெறுநுகம் - சோதிநாள்.

வெறுப்பு - அச்சம், கலக்கம், சினம், செறிவு, துன்பம், வேண்டாமை.

வெறும்புறங்கூறல் - அலர்தூற்றல்.

வெற்பன்-குறிஞ்சிநிலத்தலைவன்.

வெற்பு - மலை.

வெற்றம் - செயம்.

வெற்றி - வெற்றம்.

வெற்றிக்கரந்தைமஞ்சரி - ஓர் பிரபந்தம்.

வெற்றிக்கொடி- விருதுக்கொடி.

வெற்றித்தம்பம் - வென்றோர் நிறுத்துந்தூண்.

வெற்றிமாலை - போர்வென்றோர் சூடுமாலை.

வெற்றிவேற்கை - ஓர் நீதிநூல்.

வெற்றெனத்தொடுத்தல்-பொருளொன்றுங் கருதிக்கொள்ளாமல் வெளிறபடச்சொற்களைச் சேர்த்து வைத்தல்.

வென் - முதுகு.

வென்றி - செயம்.

வென்றிமாலை - போர் வென்றோர் சூடுமாலை.

வென்றியன் - செயங்கொண்டவன்.

வென்றோன் - அருகன், செயித்தோன்.

வே

வே - ஓரெழுத்து, வேயென்னேவல், வேவு.

வேகசரம் - குதிரை.

வேகடம் - ஓர் மீன், மணியழுக்ககற்றல், போலிவேலை, யௌவனம்.

வேகடன் - மணியொப்பஞ்செய்வோன், வாளபன்.

வேகம் - கடுமை, கதி, கோபம், சினம், தீவிரம்.

வேகரோதம் - மலபந்தம்.

வேகவதி - கம்பாநதி, வைகையாறு.

வேகவத்தமம் - மிருகதி.

வேகவிதாரணம் - தடை.

வேகி - வேகமுடையோன்.

வேகிதை - விரைவு.

வேகுதல் - அவிதல், எரிதல்.

வேங்கடம்- அழகர்மலை, ஓர்மலை, திருப்பதி, வடவேங்கடம். இது — தமிழ்நிலத்தெல்லை நான்கினொன்று.

வேங்கை - ஓர்மரம், புலி, பொன்.

வேசகம் - யானை நுனிவால், வால்.

வேசந்தம் - குளம்.

வேசம் - வேடம்.

வேசரம் - ஒட்டகம்.

வேசரி - கழுதை, கோவேறு கழுதை.

வேசனம்-மருதநிலத்தூர், வாயில்.

வேசி - விலைமகள்.

வேசிகை - வாயில்.

வேடகம் - காதணி.

வேடம் - காதணி, வேறுகோலம் கொள்ளல்.

வேடை - அபேட்சை, மரக்கலம், வெப்பம்.

வேட்கை - ஆசை.

வேட்கைத்துணைவி - ஆசைநாயகி.

வேட்கைப்பெருக்கம்- பேராசை.

வேட்கோவன் - குயவன்.

வேட்டகம் - தலைப்பா, புத்தகம், மாமியார் வீடு.

வேட்டல் - ஆசைப்பெருக்கம், விருப்பம், விவாகம், வேள்வி செய்தல்.

வேட்டனம் - காது, சூழ்தல்.

வேட்டார் } சிநேகிதர், மண
வேட்டோர் } முடித்தோர்.

வேட்டான் - மணம் புரிந்தவன்.

வேட்டி - விருப்பம்.

வேட்டுவன் - குளவி, மகநாள், வேடன்.

வேட்டை - அவா, துன்பம், வேட்டம்.

வேட்டோன் - சிநேகிதன், புருடன்.

வேணகை - மதில், வேட்கை.

வேணவா - ஆசைப்பெருக்கம்.

வேணி - ஆகாயம், ஆறு, இடையர் வீதி, சடை, ம்ரவேர்.

வேணீர் - தாகநீர்.

வேணு - உட்டுளை, கலைஞான மறுபத்து நான்கினொன்று, மூங்கில், வாள், வில், வேய்ங் குழல்.

வேணுகன் - வேய்ங்குழலூது வோன்.

வேண்-அவர்; கொடுந்தமிழ்நாட்டி லொன்று, வேட்கைப்பெருக் கம்.

வேண்டல்-ஆசை, ஆசைப்பெருக் கம், இரத்தல், விரும்பல்.

வேண்டாமை - வெறுப்பு.

வேண்டார் - பகைவர்.

வேண்டுழி - வேண்டுமிடம்.

வேதகம் - கருப்பூரம், பேதகம்.

வேதகார் - பொருந்தார்.

வேதக்கொடியோன் - துரோணா சாரியன்.

வேதசம் - நாணல்.

வேதண்டம் - கைலை, பொதிய மலை, மலை, யானை.

வேதபாரகர் - அந்தணர்.

வேதபாராயணம் - வேதமோது தல்.

வேதமுதல்வி - சரச்சுவதி, பார் வதி.

வேதம்-அறிவு, ஆழம், கலைஞான மறுபத்து நான்கிலொன்று, துளைத்தல், முதனூல், விபரம்.

வேதரஞ்சனன் - பிரமன்.

வேதல் - வேகுதல்.

வேதவியாசன் - வியாஸமகரிஷி, வேதம் வகுத்தோன்.

வேதனம்-அறிவு, கூலி, சம்பளம்.

வேதனை - அலைத்தல், உபத்திர வம், நோய், வருத்தம்.

வேதன் - அருகன், கடவுள், வியாழம்.

வேதா - கடவுள், பிரமன்.

வேதாகமம் - வேதம்.

வேதாக்கினி - கார்ஹபத்யம், ஆஹவரீயம், தக்ஷிணாக்கினி.

வேதாங்கம் - சிட்சை, வியாகர ணம், சந்தோவிசிதி, நிருக்தம், சோதிடம், நிகண்டு, மந்திரம்.

வேதாந்தசூடாமணி - சிவப்பிர காசர் செய்த ஓர் நூல்.

வேதாந்தம்-வேதத்துட்பொருள்.

வேதாளம் - ஓர் பிசாசம், வேதா ளக்கிரகம்

வேதாளி - காளிபெயர்.

வேதாளியர்- புகழ்ச்சிபாடுவோர்.

வேதி - ஓமகுண்டம், கேட்டை நாள், சதுரமேடை, திண்ணை, மதில், யாகமேடை.

வேதிகை - கேடகம், திண்ணை, பலிபீடம், வேதி.

வேதிதம்-துளையுடைப் பொருள்.

வேதித்தல் - விகாரப்படுத்தல்.

வேதியர் - அந்தணர்.

வேதினம் - ஈர்வாள்.

வேது - வெய்து, வேறு மருந்து, கார மருந்து.

வேதை - இரேகை, துன்பம், பொன்னாக்கல், வேதித்தல்.

வேத்திரதரன் - வாயிற் காப்போன்.

வேத்திரம் - அம்பு, இலந்தை, பிரம்பு.

வேந்தவை - அரசசபை.

வேந்தன் - அரசன், இந்திரன், சந்திரன், சூரியன், வியாழம்.

வேந்து - இறைமை, வேந்தன்.

வேந்தோன்றி - கார்த்திகைப்பூ.

வேப்பம்பாசி - ஓர் பூடு.

வேமம் - நெய்வார் கருவியி னொன்று.

வேம்பின்றாரோன் -பாண்டியன்.

வேம்பு - ஓர் மரம்.

வேயர் - வேவுகாரர்.

வேயல் - மூங்கில், வியங்கோண் முற்று.

வேயாம் - இலந்தை.

வேயுள் - மாடம், வீடு.

வேய் - அலங்காரி, உட்டுளைப் பொருள், ஒற்று, மூங்கில், மேய, மூட.

வேய்கள் - வேவுகாரர்.

வேய்ங்குழல் - மூங்கிற்குழல், மூங்கிலாலான ஊதுகுழல்.

வேய்தல் - அணிதல், அலங்கரித்தல், சூடுதல், மூடுதல், வீடு.

வேரம் - சரீரம்,சலஞ்சாதிப்பு, மேகக்கூட்டம்.

வேரல் - மூங்கில்.

வேரி-கள்,வாசனை, வெட்டிவேர்.

வேர் - காரணம், கோபம், மூலம், வேர்வை.

வேர்க்கடலை - ஓர்வகைக்கடலை.

வேர்க்குச்சு - நெய்வார்கருவியி னொன்று.

வேர்க்கொம்பு - இஞ்சி, சுக்கு.

வேர்த்தல் - கோபித்தல், வியர்த்தல்.

வேலனாடல் - குமரனாடல்.

வேலன் - குமரன், முருகன் வெறியாட்டாளன்.

வேலாயுதம் - வேல்.

வேலாயுதன் - வேலன்.

வேலாவலயம் - கடல், பூமி.

வேலி-ஊர்,கிராமம்,காவல், நிலத் தளவு, மதில்.

வேலிக்கால் - வேலிக்கு நடுங் கொம்பு.

வேலிப்பருத்தி - உத்தாமணி.

வேலிமூங்கில் - ஒருவகைச்செடி

வேலியிறையோன் - கார்த்தி கேயன்.

வேலை - இளைப்பாற்றி, எல்லை, கடல், தொழில்,செய்பொருள், நிகழ்காலம், வேளை, நோய், பனி, புணற்திரை, பொழுது.

வேல் - ஆயுதப்பொது, ஒருவகை மரம், கைவேல்.

வேவித்தல் - வேகவைத்தல்.

வேவு - ஒற்று, வேகுதல்.

வேவுகாரன் - ஒற்றன், வேவாள்.

வேழம் - கரும்பு, கொறுக்கை, மூங்கில், யானை.

வேழம்பர் - கழைக்கூத்தர்.

வேளான் - குயவன்.

வேளா - ஓர்மீன், வேளாச்சுறு.

வேளாண்மை - ஈகை, உபகாரம், பயிர்த்தொழில், மெய்.

வேளாண்மைமாந்தரியல்பு - ஆணை வழிநிற்றல், அழிந்தோரை நிறுத்தல், கைக்கடனாற்றல், கசிவகத்துண்மை, ஒக்கல் போற்றல், ஓவாமுயற்சி, மன்னிறை தருதல், ஒற்றுமை கோடல், விருந்து புறந்தருதல், திருந்திய வொழுக்கம்.

வேளாவளி - ஓர்ராகம்.

வேளாளர் - ஈகையாளர், பூவைசியர்.

வேளிர் - குறுநிலத்தரசர்.

வேளை - ஓர்பூடு, காலம்.

வேள் - ஆசை, ஆண்மகன், உபசாரம், காமன், குமரன், மன்மதன்.

வேள் - யாகஞ்செய்ய, பேராசைகொள்ள, விவாகஞ் செய்ய.

வேள்புலவரசர் - சாளுவர்.

வேள்வி - ஆராதனை, ஈகை, ஓமகுண்டம், பலி, மகாரன், யாகம்.

வேள்விக்குண்டம் - ஓமகுண்டம்.

வேள்வித்தறி - யூபஸ்தம்பம்.

வேள்விநாயகன் - இந்திரன்.

வேள்வியாளர் - அந்தணர், ஈகையாளர்.

வேள்வியோம்பல் - யாகஞ்செய்தல்.

வேள்வு - மணவரிணப்பொருள்.

வேள்வெடுத்தல் - பலபண்டங் தேடிக்கொண்டு போதல்.

வேறல் - வெல்லல்.

வேறிடம் - ஏகாந்தம், தனிமை.

வேறு - வேற்றுமையுடையது, மற்று, விதம்.

வேறுபாடு - வேறுபடல்.

வேற்றலம் - காற்று.

வேற்று - வேறு.

வேற்றுநிலைமெய்ம்மயக்கு - கசதப வொழிந்த பிறமெய்ம்மயக்கம்.

வேற்றுப்பொருள் - வேறு பொருள்.

வேற்றுப்பொருள்வைப்பு - ஓரலங்காரம்.

வேற்றுமை - ஓரலங்காரம், பதங்கள் புணருமிருவகைச் சந்தியு ளொன்று. அது—எழுவாய் முதலிய வுருபுகள், பெறநிற்பது, வேறுபடல்.

வேற்றுமைத்தொகை - வேற்றுமையுருபுத்தொக்கு நிற்பது.

வேற்றுமைப்புணர்ச்சி - பெயரும் வினையுமல்லாதவாறுருபும்விரிக் தேனும் தொக்கேனும் புணர்வது.

வேற்றுமைமயக்கு - வேற்றுமை யுருபுகளுளொன்றபிறிதொன் றற்காக மயங்கி கிற்பது.

வேற்றுமையுருபு - ஐமுதலிய வேற்றுமையுருபு.

வேற்றுமைவிரி - வேற்றுமை யுருபு விரிந்து கிற்பது.

வேற்றுரு - மாற்றுரு.

வேற்றொலிவெண்டுறை - பல ஓசைத்தாய்வரும்வெண்டுறை.

வேனல் - கானல், கோடைக் காலம், வேனிற்காலம்.

வேனிலாளி, **வேனிலாள்** - காமன்.

வேனின்மாலை - ஓர் பிரபந்தம், அஃது — இருவேனிலை யுஞ் சிறப்பித்துப் பாடுவது.

வேன் - வியன்.

வை

வை-ஓரெழுத்து, கூர்மை, வைக் கோல், வையம், வையென் னேவல்.

வைகடிகன் - இரத்தினங்களைச் சாணை தீர்ப்போன்.

வைகரி - திட்டம், நால்வகை வாக்குகளினொன்று, வைகரி யகங்காரம்.

வைகலும் - தினந்தோறும்.

வைகல் - கழிவுநாள், தங்கல், நாள், விடியல்.

வைகல்லியம் - கலக்கம், குறைவு, குணியம், தகுதியின்மை.

வைகறை - இரவினிருபது நாழி கை முதன் முப்பது நாழிகை யளவுஞ் செல்லும்பொழுது.

வைகாசி - ஓர் மாதம், விசாகம்.

வைகாநசம் - வைணவ ஆகமத் தொன்று.

வைகாநசன் - வனவாசி.

வைகுண்டஅம்மானை - ஓர் பிர பந்தம்.

வைகுண்டம், **வைகுந்தம்** - திருமாலுலகம்.

வைகுண்டன், **வைகுந்தநாதன்**, **வைகுந்தன்** - விஷ்ணு.

வைகுதல் - இருத்தல், ஏசுதல் தங்குதல்.

வைகுல்லியம், **வைகூலியம்** - எதிரிடை.

வைகை - ஓராறு.

வைகைத்துறைவன்-பாண்டியன்

வைக்கிராந்தம் - ஓர் பாஷாணம்.

வைங்கியாரம் - பகை.

வைசாகம் - விசாக நாள், வைகாசி மாதம்.

வைசிகம் - வேசித்தனம், மூலம்.

வைசியர் - இடையர், ஏருழவர், செட்டிகள்.
வைசியன் - மூன்றாங்குலத்தான்.
வைசூரி - அம்மைநோய்.
வைசேடிகம் - ஆறு சாத்திரத் தொன்று.
வைசிரவணன் - குபேரன்.
வைடம்மியம் }
வைஷம்மியம் } பகை.
வைடூரியம் - நவமணியிலொன்று.
வைணவம் - ஓர்சமயம், அட்டாதச புராணத் தொன்று, மூங்கி லரிசி.
வைணவர் - விஷ்ணுசமயத்தோர்.
வைணவாகமம் - விஷ்ணு சமய நூல் அது—பாஞ்சராத்திரம், வைகானசம்.
வைணவி - ஸப்தமாதாக்களி லொருவள், மூங்கிற் குழல்.
வைணிகன் - வீணை வாசிப்போன்.
வைணுகம் - கழிகோல், யானைத் தோட்டி.
வைதரணி - இயமபுரத்தியாறு.
வைதர்ப்பம் - கொடத்திற் கெதிர்.
வைதர்ப்பி - தமையந்தி.
வைதல் - திட்டல், நிந்தித்தல்.
வைதனிகம் - அற்றைக்கூலி.
வைதாளிகன் - பள்ளியெழுச்சி பாடுவோன்.
வைதிகம் - வேதமார்க்கம்.
வைதிகர் - வேதமார்க்கத்திடை நிற்போர்.
வைதிருதி - நித்தியயோகத் தொன்று.
வைதூரியம் - வைடூரியம்.
வைதேகன் - துதித்துய்வோன், வியாபாரி.
வைத்தல் - வைக்குதல்.
வைத்தியசாத்திரம் - கலைஞான மறுபத்து நான்கினொன்று, அது—வாகடம்.
வைத்தியம் - பரிகாரம்.
வைத்தியன் - பண்டிதன், பரி காரி, வேதாப்பியாசி
வைத்தூறு - வைக்கோற்போர்.
வைநதேயன் }
வைனதேயன் } கருடன்.
வைநம் - பருத்தல்.
வைநாசிகம் - நித்திய யோகத் தொன்று.
வைநாசிகன் - அடிமை, சிலம்பி, புத்த சமயத்தினோர் பிரிவி னன்.
வைநீதகம் - ஓரிணை, ஈரிணை அல்லது மூவிணை யெருதே னுங்குதிரையேனுங் கட்டிய வண்டி.
வைபவம் - விபவம்.
வைப்பு - இடம், ஊர், உண்டாக் கல், பெருமை, வைத்தல்.
வைமாத்திரேயன் - சக்களத்தி மகன்.

வையகம் - பூமி.

வையம்.உரோகணிநாள்,சிவிகை, தண்டிகை, தேர், பூமி, மாட்டு வண்டி, வண்டி, வாகனம்.

வையாகரணன் - இலக்கணம் ஆக்கியோன், வியாகரணம் படித்தோன்.

வையாசம் - வியாசம்.

வையாபுரி - பழனி.

வையாளி - குதிரையின் மிருகதி.

வைரசுத்தி - பகை தீர்த்துக் கொளல்.

வைரம் - நவமணியிலொன்று, பகை, விரோதம், வீரம் வீரத் தின்றன்மை.

வைரவம் - பைரவம், பயம்.

வைராகி - துறவி.

வைராக்கியம் - ஆசையின்மை.

வைரி - சத்துரு.

வைரியம் - வீரியம்,வைராக்கியம்.

வைரூப்பியப் - அவலட்சணம்.

வைரோசனன்-சூரியன், மாவலி, வாலி.

வைலட்சியம் - எதிரிடை, வித்தி யாசம்.

வைவச்சுதன் - ஓர்மனு, சனி, சமன்.

வைனம் - பகுத்தல்,

வெள

வெள - ஓரெழுத்து.

வெளவம் - தாமரை.

வெளவல் - கொள்ளையிடல், திருடல், பிடித்தல், வூருதல்.

வெளவால் - ஓர் பறவை, துரிஞ் சில்.

வெளவி - மான்.

வெளவு - பிடிக்க, கொள்ளையிட...

அனுபந்தம் (க)

குறிற்கீரெழுதுகையகராதி

அ - ஓரெழுத்து, அஃறிணைப் பன்மைப்பெயர், விகுதிவினை முற்று விகுதி, சுட்டிடைச் சொல், அன்மை, இன்மை, மறுதலை என்னும் நஞ்ஞிப் பொருள் காட்டுவது, ஆறும் வேற்றுமை யுருபினிடைச் சொல், சாரியை யிடைச் சொல்.

க - ஆகாயம், ஓரெழுத்து, பிரமன், தலை.

ச - ஓரெழுத்து, கூடிய, (உ-ம்- சோமாக்கந்தர் சோமன்.)

ந - இன்மை, அன்மை, எதிர் மறை இவற்றிற்கு முறையே உதாஹரணங்களாவன — இன்மைப்பொருளுக்கு — அரூபம், அன்மைப்பொருளுக்கு — அத்துவிதம், எதிர் மறைப்பொருளுக்கு — அதன்மம்.

இ - ஓரெழுத்து, ஆண்பாற் பெயர் விகுதி, (உ-ம்-பிறைசூடி, மானேந்தி,) பெண்பாற் பெயர் விகுதி, (உ-ம்-கண்ணி, தோளி,) முன்னிலையொருமை வினைமுற்றுவிகுதி, ஏவலொருமை வினைமுற்றுவிகுதி, சுட்டிடைச்சொல், செய்தென்னும் வினையெச்சவிகுதி, சாந்தம்.

நி - ஓரெழுத்து, செலுத்தலென்னும்பொருட்டு, நீயென்னும் முன்னிலைப்பெயர், இன்மையன்மை எதிர்மறைபொருட்டு, (உ-ம்-நிமலன், மற்றைய வந்தவழிக்காண்க.)

வி - ஓரெழுத்து, புட்பம், பறவை, நஞ்(இன்மை)தத்புருஷஸமாஸபதம், (உ-ம-விமலன் முதலியவற்றிற்காண்க.)

உ - ஓரெழுத்து, சுட்டு, (உ-ம்- உக்கொற்றன், உவன்.)

கு - நான்கனுருபு, (உ-ம்-அறத்திற்குப்பொருள்.) பூமி.

சு - நன்மை, (உ-ம்-சுபத்தி, சுமதி.) சொந்தம், (உ-ம்-சுதேசம்.)

து - ஓரெழுத்து, துவ்வென்னேவல்.

ஒ - ஓரெழுத்து, ஒழிதல், ஒவ்வுதல்.

நொ - ஓரெழுத்து, துன்பப்படு.

* குறிப்பு — இவ்வோரெழுத்தொருமொழிகள் பெரும்பாலும் வடமொழிப் பொருளேகொண்டு கொள்ளப்பட்டன.

க

அகச்சுவை - உட்சுவை, நாடக வுறுப்பினென்று.
இகச்சுவை - இப்பூமியின்பம்.
ககச்சுவை - விண்ணுலகபோகம்.
தகச்சுவை - தகுதியான இன்பம்.
மகச்சுவை - வேள்விப்பயன்.
அகடம் - பொல்லாங்கு.
சகடம் - உரோகணி, ஊர்க் குருவி, பண்டி, வட்டில்.
பகடம் - வெகுட்டல், பரிகாசம்.
விகடம் - வேறுபாடு.
அகடு - உள், ஈடு, பொல்லாங்கு, வயிறு.
சகடு - உரோகணி, சந்தேகம், பண்டி.
தகடு - அடர்பு, இலை, ஐம்மை வடிவு.
பகடு - ஆண்யானை, இடபம், எருமைக்கடா, ஓடம், தெப்பம், பெருமை, பொதியெருது.
மூகடு - சுவர்ப்புறத்து நீண்டவுத்திரம், மலையுச்சி.
அகட்டல் - நிமிட்டல்.
நகட்டல் - திருகல்.
பகட்டல் - மயக்கம், ஆடம்பரஞ் செய்தல்.
புகட்டல் - செலுத்துதல், போதித்தல்.
அகண்டம் - எல்லாம்.
சிகண்டம் - மயிற்றோகை.
நிகண்டம் - உடை.
விகண்டம் - வேறுபாடு, பிரிவு.
அகண்டி - ஓர் வாச்சியம்.
சிகண்டி - ஆமணக்கு, ஓர்பண், பேடு, மயில்.
சகண்டை - முரசு, வாத்தியம்.
பகண்டை - சிவில்.
இகத்தல் - கடத்தல், போதல்.
உகத்தல் - உயர்தல்.
மூகத்தல் - மொள்ளல்.
அகநிலை - ஊர், உண்ணிலைமை.
உகநிலை - இரண்டினிற்றல், தலைப்பாட்டுநிலை.
ஏகநிலை - கூடியநிலை, யோகமார்க்கம்.
சுகநிலை - முத்தி.
தகநிலை - தகுதியான நிலைமை.
நகநிலை - மலையிடம், நகத்தினிடம்.
பகநிலை - யானைப்படுக்கையிடம், எருமைக்கொட்டில்.
மகநிலை - யாகசாலை, இந்திரபதவி.
முகநிலை - முகத்திற்படுந்தரவு.
அகப்பா - மதில், மதிலுண்மேடை.
குகப்பா - குயிற்பத்தி, குகையிடம்.
அகமனம் - கடவாமை.
சகமனம் - ஒற்றுமை.
அகம் - இடம், உள், ஏழனுருபு, (உ-ம்-பல்லாரகத்து) பள்ளம், பாவம், பூமி, மரப்பொது, மனம், மனை.
இகம் - இப்பிறப்பு.
உகம் - நாள், பாம்பு, பூமி, முடிவு.
ககம் - அம்பு, பறவை.
குகம் - மலைக்குகை.

சகம் - ஓர்தேசம், சட்டம், பூமி, மார்கழிமாதம்.
சுகம் - இன்பம், களி, தருமம், நன்மை, மூலக்கண்.
செகம் - பூமி.
தகம் - உஷ்ணம், எரித்தல்.
ஞகம் - நகம்.
நகம் - உகிர், பூமி, மரம், மலை.
நிகம் - ஒளி.
நுகம் - சகடத்தடி.
பகம் - அவாவின்மை, ஈச்சுரத் தன்மை, காந்தி, கீர்த்தி, செல்வம், ஞானம், வீரியமாகிய வறு குணம், கொக்கு, பெண்குறி.
பிகம் - குயில்.
மகம் - ஓர்நாள், யாகம்.
முகம் - இடம், கழிமுகம், முகம்.
யுகம் - இருபொருள், ஓர்காலத் தளவு, நுகத்தடி, பூமி.
விகம் - வழியீற்றுப்பசும்பால்.
அகரம் - அந்தணர்சேரி, மருத நிலத்தூர், முதலெழுத்து.
இகரம் - ஓரெழுத்து, சந்தம்.
ஒகரம் - ஓரெழுத்து, மயில்.
சிகரம் - உயர்ச்சி, ஓரெழுத்து, தலை, திரை, மலை, மலையுச்சி, வட்டி, வீடு.
தகரம் - ஈயம், ஓரெழுத்து, தகரம், மயிர்ச்சாந்து, வாசனைப் பண்டம்.
திகரம் - இளைப்பு, ஓரெழுத்து.
நகரம் - ஓரெழுத்து, மருதநிலத் தூர், மருதப்பதி.
நிகரம் - ஓரெழுத்து, கூட்டம்.
பகரம் - அலங்காரம், ஓரெழுத்து, சிறப்பு.
மகரம் - ஒரு நிதானம், ஓரிராசி, ஓரெழுத்து, சுறுமீன், பூந் தாது, முதலை.
விகரம் - இடைப்பின்மை, நோய், பிரிவு.
சிகரி - எலி, கருநாரை, மலை, மலைமுடி.
நகரி - ஒரூர், நகரம், மலை.
முகரி - வீட்டுமுன்பத்தி.
அகரு - அகில்.
தகரு - உடைந்து போவென்னு மேவல்.
பகரு - சொல்லென்னேவல்.
முகரு - மணவென்னேவல்.
குகர் - சுப்பிரமணியக்கடவுள், மலைக்குகையில் வசிப்பவர், இரகசியப் பொருளறிந்தவர், இருடிகள், இருதயத்தில் வசிப் பவர்.
சுகர் - ஓர் இருடி, இன்பமனு விப்போர்.
தகர் - சுறு, செம்மறியாட்டுக் கடா, தகரென்னேவல், தரு வாட்டேறு, பராகம், பூமி, மேடவிராசி, யானையினுண்.
நகர் - உவமை, ஒளி, நகரென் னேவல், நிகர், நிகரென்னே வல், மருதநிலத்தூர், வீடு.
நுகர் - உண்ணென்னேவல்.
புகர் - கபிலநிறம், குற்றம், சுக் கிரன், நிறம்.
முகர் - மணந்தறியென்னேவல்.
தகர்தல் - நிறைதல்.

நுகர்தல் - ஊர்ந்து செல்லல்.
நுகர்தல் - அனுபவித்தல், புசித்தல், விழுங்குதல்.
புகர்தல் - சொல்லல், விற்றல்.
அகலம் - மார்பு, விரிவு.
சகலம் - எல்லாம்.
திகலம் - தோண்மேல்.
விகலம் - குறைபாடு, கலக்கம், விகலை.
அகலல் - பிரிதல், வியங்கோண் முற்று.
இகலல் - பொருதல், வியங்கோண்முற்று.
அகல் - அல்குல், தகழி, நீங்கென்னுமேவல்.
இகல் - பகை, பொருதென்னேவல், போர், வலி.
சகல் - கொதுகு.
திகல் - குறைதல், கெடுதல்.
தொகல் - கூடல், வியங்கோண் முற்று.
நகல் - இணைப்பிரதி, நகுதல்.
பகல் - ஒளி, சூரியன், நடுகோள், நண்பகல், நுகத்திலாணி, பகுத்தல், பிரிதல், பிளத்தல்.
புகல் - உடல், குதிர், சொல், தஞ்சம் புகலென்னேவல், வியங்கோண்முற்று, வெற்றி.
மிகல் - மிகுதி, வியங்கோண் முற்று.
அகவை - உட்பட்ட பிராயம்.
சுகவை - சுகதுண்டக்கை.
முகவை - பொலிபாடும் பாட்டு.

அகழி - ஓபெண், நீர்க்கிடங்கு, விளக்கு.
சிகழி - கோத்தமாலை, தொடுத்த மாலை, மயிர்முடி.
தகழி - தீபத்தகழி.
பகழி - அம்பு.
அகழுதல் - தோண்டுதல்.
இகழுதல் - நிந்தித்தல், மறத்தல்.
திகழுதல் - விளங்கல், பிரகாசித்தல்.
நிகழுதல் - ஒளிதல், சம்பவித்தல், நடத்தல்.
புகழுதல் - துதித்தல்.
அகழ்-அகழி, அகழென்னேவல்.
திகழ் - ஒளி, திகழென்னேவல்.
புகழ்-கீர்த்தி, புகழென்னேவல்.
இகழ்ச்சி-ஈனம், நிகழ்தல், நிந்தை, மறதி.
திகழ்ச்சி - விளக்கம்.
நிகழ்ச்சி - துதி.
அகழ்தல் - தோண்டல்.
இகழ்தல் - நிந்தித்தல்.
திகழ்தல் - விளங்கல்.
நிகழ்தல்-ஒளிசெய்தல், நடத்தல்.
புகழ்தல் - துதித்தல்.
அகளம்-அருவுருவம், தாரு, மிடா.
சகளம் - வடிவு
நிகளம் - கால்விலங்கு, சங்கிலி, யானைச்சங்கிலி.
யுகளம் - இரண்டு.
அகனம் - கனமில்லாதது.
ககனம் - ஆகாயம், காடு, படை,
சகனம் - ஆசனம், தொடையினுட்பக்கம்.

தகனம் - ஈடல்.
அகாதம் - நீந்துபுனல், வஞ்சகம்.
திகாதம் - வஞ்சனை.
விகாதம் - விரோதம்.
அகாதி - வரவழைப்போன்.
உகாதி - அருகன், உகத்தின் முதல், உருத்திரபகவான்.
அகாரி - கடவுள்.
சகாரி - ஓர் வள்ளல்.
முகாரி - ஓர் இராகம்.
விகாரி - ஓர் ஆண்டு.
உகார் - சொரியர், உத்தமேகம்,
நகார் - சிரிக்கார், சிந்திக்கமாட்டார்.
புகார் - போகார், காவிரிப்பூம் பட்டினம், பிரசித்தம்.
மகார் - பிள்ளைகள்.
அகி - இரும்பு, பாம்பு.
சகி - சகியென்னேவல், தோழி.
சிகி - கேது, தீ, மயில்.
சுகி - காசியபன்மனைவி, சுகபோகி, சுகியென்னேவல், சுகானுபவம், சௌக்கியம்.
தகி-தகியென்னேவல், நெருப்பு.
நகி - மலையிலிருப்பது, மலைப் பாம்பு.
மகி - பூமி.
முகி - முகத்தல், முடித்தல், இவ்விரண்டினேவல், கிலாமுகிப் புள், பாயிரநூல்.
வகி - தரித்துக்கொள்.
உகிர் - நகம்.
சுகிர்-உட்டுளை, சுகிரென்னேவல்.
துகர் - பவளம்.

பகிர் - பகிரென்னேவல், பருப்பு.
வகிர் - வகிரென்னேவல், வழி, வார்.
அகில் - ஓர்மரம்.
செகில் - தோண்மேல்.
திகில் - திடுக்காட்டம், பயம்.
துகில் - சீலை, விருதுக்கொடி.
நகில் - முலை.
முகில் - மேகம்.
மகிழ் - ஓர்மரம், மகிழென்னேவல்.
முகிழ் - அரும்பு, கண்ணி, முகிழென்னேவல்.
அகுடம் - கடுகுரோகணி.
சகுடம் - சேம்பு.
நகுடம் - மூக்கு.
மகுடம் - முடி, முடியுறுப்பு.
முகுடம் - முடி.
அகுதி - ஆகுதி, அதிதி.
ஏகுதி - அறிவு, உரிமை, ஒழுக்கம், குணம், பெருமை, வினைமுற்று.
தொகுதி - கூட்டம், திரட்சி, வினைமுற்று.
பகுதி - இயல்பு, குடியிறை, படுத்தல், பகுபதத்தோருறுப்பு, படை.
புகுதி - நுழை வாயில், வினைமுற்று.
மிகுதி - அநேகம், திரட்சி, பூரிப்பு, பொலிவு, வினைமுற்று.
விகுதி - பகுபதவுறுப்பினுளொன்று, வேறுபடுத்தல்.

விகுதிதல்-அழைத்தல், இரிந்தல், ஈதல், எறிதல், குழைந்தல், கொல்லல், தாழ்த்தல், துடைத்தல், மறித்தல், வருந்துவித்தல், வீழ்த்தல்.

உகுத்தல் - சிந்தல், சொரிதல்.

செகுத்தல் - அழித்தல்.

தொகுத்தல் - கூட்டல்.

பகுத்தல் - ஈதல், தறித்தல், பங்கிடல், வெட்டல்.

புகுத்தல் - புகவிடல்.

மிகுத்தல் - மிகச்செயல்.

வகுத்தல் - வகைப்படுத்தல்.

தகுளம் - மகளிர் விளையாட்டு.

தெகுளம்-நிறைதல், பெருகுதல்.

வகுளம் - மகிழமரம்.

குகை - மலைமுழை, முனிவர் வாசம்.

சிகை - குடுமி.

தகை - அழகு, அன்பு, கவசம், தகையென்னேவல், தளர்வு, பெருமை, முதகு.

திகை - திகையென்னேவல், திசை, தேமல்.

தொகை - கூட்டம்.

நகை - ஆபரணம், இகழ்ச்சி, இன்பம், எயிறு, ஒளி, களிப்பு, சிரிப்பு, நகையென்னேவல், பல், பூவரும்பு, மகிழ்ச்சி.

பகை-பகை, பகையென்னேவல்.

புகை - தூமம், தென் கீழ்த் திசைப்பாலன்குறி, புகையென்னேவல், யோசனை, தூரம்.

மிகை - கேடு, துன்பம், மிகுதி.

முகை - கூட்டம், மலரும் பருவத்தரும்பு, மிடா, முகையென்னேவல்.

வகை - வகுப்பு.

அகைத்தல் - அடித்தல், அறுத்தல், எழுச்சி, ஒடித்தல், செலுத்தல், முறித்தல், வருந்துதல்.

இகைத்தல் - கொடுத்தல், நடத்தல்.

உகைத்தல்-எழுதல், செலுத்தல்.

தகைத்தல்-ஆணையிடல், இளைத்தல், தடுத்தல்.

திகைத்தல் - மயங்கல்.

துகைத்தல் - வருத்துதல்.

நகைத்தல்-சிரித்தல், சிந்தித்தல்.

பகைத்தல் - முரணல்.

புகைத்தல் - சினக்குறிப்பு, பகையச்செய்தல்.

முகைத்தல் - அரும்புதல்.

தக்கணம் - தெற்கு, வலப்பக்கம்.

பக்கணம் - ஊர், வேடர்வீதி.

அக்கம் - கண், கயிறு.

உக்கம் - ஆலவட்டம், எருது, கோழி, தீ, பசு, மருங்கு.

சிக்கம் - உறி, குடுமி, சிறைச்சாலை, சிப்பு, மெலிவு, வண்டு.

சொக்கம் - தூய்மை.

துக்கம்-குற்றம், துன்பம், நரகம்.

பக்கம் - அருகு, இடம், இறகு, சந்திரனுள், நட்பு.

பொக்கம் - பொய், பொலிவு, மிகுதி.

அக்கரம் - எழுத்து, ஓர்நோய்.

சக்கரம் - ஓராயுதம், கடல், சக்கர வாகப்புள், தேருருளை, பிறப்பு, பூமி, பெருமை, மலை, மலை மல்லிகை, வட்டம்.
எக்கர் - சொரிதல், மறைத்த சொல், மேடு.
சிக்கர் - கள்.
செக்கர் - சிவப்பு.
பக்கர் - சுற்றத்தார்.
உக்கல் - பக்கம்.
எக்கல் - ஏறுதல், பொருதல், வியங்கோண்முற்று.
ஒக்கல் - இடைப்பக்கம், உறவு, ஒத்தல், குடி, மூட்டுதல், வியங் கோண்முற்று
கக்கல் - சர்த்திபண்ணல், வியங் கோண்முற்று.
சிக்கல் - இளைத்தல், கிடைத்தல், வியங்கோண்முற்று.
சொத்தல் - மயங்கல், வியங் கோண்முற்று.
நக்கல் - நகைத்தல், நக்குதல், வியங்கோண்முற்று.
புக்கல் - புகுதல்.
முக்கல் - பேசலாலெழுமொலி, வியங்கோண்முற்று.
விக்கல் - விக்குதல், வியங்கோண் முற்று.
அக்கன் - நாய்.
குக்கன் - நாய்.
தக்கன் - அட்டநாகத்தொன்று, நவப்பிரமாவிலொருவன்.
நக்கன் - அருகன், சிவன், நிரு வாணி.
அக்காரம் - சருக்கரை.
உக்காரம் - சர்த்திபண்ணல்.
திக்காரம் - தள்ளல்.
அக்கி - கண்.
குக்கி - வயிறு.
பக்கி-பக்கியென்னேவல், பறவை.
புக்கி-பிராய்மரம், வினையெச்சம்.
உக்கிரம் - கொடுமை, தலைக்கா வல்.
சுக்கிரம் - ஆனிமாதம்.
தக்கிரம் - மோர்.
வக்கிரம் - கொடுமை, பொய், பொருமை, மீனமடங்குதல், வட்டம், வளைவு.
அக்கு - எருத்துத்திமில், சங்கு மணி.
இக்கு - கரும்பு, கள்.
கொக்கு - ஓர்புள், குதிரை, செந் நாய், மாமரம், மூலநாள்.
சக்கு - கண்.
சுக்கு - சுண்டி.
செக்கு - சதயநாள், செக்கு.
சொக்கு - அழகு, சொக்கென் னேவல், சோர்வு, பொன்.
திக்கு - திசை.
தொக்கு - உடல், தோல், வினை யெச்சம்.
பொக்கு - குற்றம்.
அக்கை - முன்பிறந்தாள்.
சக்கை - கோது.
சுக்கை - மாலை, வான்மீன்.
தக்கை - காதிடுந்தக்கை, தெப் பம், பம்பைவாத்தியம், பல வகைப்பறை, வினைமுற்று.

அஃகல்-குறைதல், வியங்கோண் முற்று.
எஃகல் - ஏறுதல், வியங்கோண் முற்று.
வெஃகல் - ஆசைப் பெருக்கம், வியங்கோண்முற்று.

ங

அங்கணம் - சலதாரை, சேறு, முற்றம்.
கங்கணம் - கடகம், வளை.
கொங்கணம் - ஓர் தேசம், பதினெண்பாடையிலொன்று.
தெங்கணம் - ஓர் தேசம்.
வங்கணம் - சினேகம்.
அங்கதம் - தோளணி, பழிச்சொல், பாம்பு, யானையுணவு.
சங்கதம் - நட்பு, பொருந்தல்.
அங்கம் - அடையாளம், அவயவம், உடல், எலும்பு, ஓர் தேயம், ஓர் பாடை, கட்டில், பாவனை, வேதாங்கம்.
கங்கம் - சீப்பு, தீப்பொறி, பருந்து.
சங்கம் - ஓர் நிதி, கணைக்கால், கூடுதல், கூட்டம், சங்கு, சவை, நூறுயிரங்கோடி, நெற்றி, படையிலோர்தொகை, புலவர்.
சிங்கம் - ஓரிராசி, சிங்கம்.
சுங்கம் - ஆயம்.
தங்கம் - பொன்.
துங்கம் - உயர்ச்சி, பரிசுத்தம், பெருமை.
பங்கம் - அலை, குழைசேறு, குளம், துண்டு, தோல்வி, பாவம், புழுதி, வேறுபாடு.
பிங்கம் - பொன்மை கலந்த சிவப்பு.
புங்கம் - அம்பு, அம்புக்குதை, உயர்ச்சி, சிலை.
வங்கம் - ஈயம், ஓர் தேயம், கத்தரிச்செடி, பதினெண்பாடையிலொன்று, மரக்கலம், வெள்ளி.
கிங்கரர் - ஏவல் செய்வோர், ஓர் சாதி.
சங்கரர் - போர் செய்வோர், உருத்திரர்.
அங்கர் - அங்கதேயத்தார்.
பொங்கர் - இலவமரம், மரக்கொம்பு, மலை.
வங்கர் - ஓர் தேயத்தார், சண்டாளர்.
பிங்கலம் - பிங்கலந்தையென்னு நூல், பொன், பொன்மைநிறம், வடக்கு.
மங்கலம் - தருமம், பொலிவு, விவாகம்.
சிங்கல் - இளைத்தல், குறைதல், வியங்கோண்முற்று.
செங்கல் - காவிக்கல்.
தங்கல் - தங்குதல், வியங்கோண் முற்று.
தொங்கல்-ஆண்மயிர், ஆபரணத்தொங்கணி, காதணி, தூக்கங்கள், பீலிக்குடை, பூமாலை, மயிற்றோகை, வியங்கோண் முற்று, வெண்குடை.

நுங்கல் - வியங்கோண்முற்று, விழுங்கல்.
பொங்கல் - உயர்ச்சி, பொலிதல், மிகுதி, வியங்கோண்முற்று.
மங்கல் - கெடுதல், வியங்கோண் முற்று.
சிங்களம்-ஓர் கூத்து, ஓர் தேயம், பதினெண்பாடையிலொன்று.
செங்களம் - போர்க்களம்.
மங்களம் - வாழ்த்து.
வெங்களம் - கொல்லுமிடம், போர்க்களம்,
கொங்காரம் - குங்குமமரம்.
சங்காரம் - அழித்தல்.
சிங்காரம் - அலங்காரம்.
வங்காரம் - உலோகக்கட்டி.
கங்காளம் - முழுவெலும்பு.
வங்காளம்-ஓரிராகம், ஓர் தேயம்.
அங்கி - கார்த்திகை நாள், சட்டை, நெருப்பு
சிங்கி - நஞ்சு, வினையெச்சம்.
பங்கி - ஆண்மயிர், பிறமயிர்.
வங்கி - துறடு.
அங்கு - அவ்விடம்.
இங்கு - இவ்விடம், பெருங்காயம்,
உங்கு - உவ்விடம்.
எங்கு - எவ்விடம்,
கங்கு-இருள்,கருந்தினை, பருந்து, வயலின் வரம்பு, வரம்பின் பக்கம்.
கொங்கு - ஓர் தேயம், கள், பூந் தாது, வாசனை.
சங்கு - கணைக்கால், கூடுதல், கைவளை சங்கு, நெற்றி, படைக்கலம்.
தெங்கு - தென்னமரம்.
பங்கு - சனி, பாதி, முடவன்.
கங்குல் - ஆகாயம், இருள்,பரணி நாள்.
மங்குல்-ஆகாயம், இரவு, மேகம்.
அங்கை - உள்ளங்கை.
எங்கை - தங்கை.
கங்கை - ஓராறு.
கொங்கை - முலை.
சங்கை - அச்சம், ஐயம்.
செங்கை - ஆதிரைநாள், கை.
தங்கை - இளையாள்.
நங்கை - பெண்ணிற் சிறந்தாள்.
மங்கை - பதின்மூன்று வயதுப் பெண், பெண்.

ச

அசதி - சிரித்துப்பேசல், வசவி.
வசதி - மருதநிலத்தூர், வீடு.
அசம் - ஆடு, மூவருடநெல்.
எசம் - நரம்பு.
கசம் - ஓரளவு, கயம், யானை.
கிசம் - தளிர்.
குசம் - தருப்பைப்புல், நீர், மரப் பொது, முலை, வெறும்புறங் கூறல்.
சசம் - முயல்.
தசம் - சிவிகை, பத்து.
நிசம் - மெய்.
வசம் - தனதாக்கல்.
அசலம் - அசையாநிலை, பூமி, மலை.
கிசலம் - தளிர்.
குசலம் - மிக்ககல்வி, சௌக் கியம், திறமை.

முசலம்-இருப்புலக்கை,உலக்கை,
அசலை - பூமி.
கிசலை - தளிர்.
பசலை - துன்பத்தால் வேறுபட்ட நிறம்.
அசனம்-உணவு, சோறு,வேங்கை மரம்.
உசனம் - அட்டாதசவுபபுராணத் தொன்று.
தசனம் - பல்.
பிசனம் - செஞ்சந்தனம்.
யசனம் - யாகம்.
வசனம் - சொல்.
விசனம் - துன்பம், பேராசை, மனிதரில்லாதவிடம், விசிறி.
அசி - அவமதிச்சிரிப்பு, ஆயுதப் பொது, வாள்.
இசி - இசியென்னேவல், இணங்குதல், சிரித்தல்.
உசி - கூர்மை.
சசி - இந்திராணி, கர்ப்பூரம், சந்திரன்.
சுசி-ஆடிமாதம், சுத்தம்,நெருப்பு, வெண்குடை, வெண்மை.
நிசி - இரா, இருள், பொன், மஞ்சள்.
பசி - உதரக்கனல், பசியென்னேவல்.
பிசி - அரும்பொருள், சோறு, பொய்.
வசி - கூர்மை, சூலம், தழும்பு, வசியம், வசியென்னேவல், வாள்.
கசிவு - அழுகை, அன்பு, வருத்தம், வெயர்வை.
வசிவு - வளைவு.
உசிதம் - தகுதி.
கசிதம் - பதித்தல், பூச்சு.
நிசிதம் - கூர்மை.
பிசிதம் - உதாஹரணம், ஊன், நீர், வேம்பு.
ஒசிதல் - அசைதல், ஒடிதல், முறிதல்.
கசிதல் - அழுதல்.
பொசிதல் - நீரரும்பல்.
ஒசித்தல் - அசைத்தல், ஒடித்தல், முறிதல்.
நசித்தல் - கெடுத்தல்.
பசித்தல் - உதரக்கனலெழும்பல்.
புசித்தல் - உண்டல்.
முசித்தல் . மெலிதல்.
வசித்தல் - தங்கல், வாசகம்.
விசித்தல் - கட்டல்.
உசு - உளு.
சிசு - குழந்தை.
பசு-இடபவிராசி, உயிர், எருது, பசு.
முசு - குரங்கு.
வசு - கிரணம், நெருப்பு. பசுவின் கன்று, பொருள், பொன்.
அசும்பு - கிணறு, பொல்லாநிலம், வழுக்குநிலம்.
தசும்பு - குடம், கொப்பரி, பொன்.
விசும்பு - ஆகாயம், திசை, தேவலோகம், மேகம்.

அசை - அசை நிலை, அசையென்னுமேவல், செய்யுளுறுப்பிலொன்று.
இசை - இசைப்பாட்டு, இசைப்பு, இசையென்னுமேவல், ஒலி, கூடி நிற்றல், சொல், புகழ்.
கசை-கவசம், குதிரைச்சம்மட்டி.
குசை-கடிவாளம், குதிரைகட்டுங் கயிறு,குதிரைமயிர், தருப்பை.
தசை - ஊன், புலால்.
திசை - திக்கு.
நசை - ஆசை, ஒழுக்கம்.
பசை - இலாபம், பசை.
மிசை - உயர்ச்சி, சோறு, தரித்திரம், மிசையென்னேவல், மேடு, மேல்.
வசை - குற்றம்.
விசை - சீக்கிரம், விசையென்னேவல்.
இச்சகம் - இதம் பேசல்.
கச்சகம் - குரங்கு.
வச்சகம் - மலைமல்லிகை.
அச்சம் - அகத்தி, இலேசு, பயம்.
உச்சம் - உயர்ச்சி, வல்லிசை.
எச்சம் - எச்சில், குறைபாடு, சேஷம், மகள், மகன், யாகம்.
கச்சம் - அளவு, கடன், குதிரையங்கவடி, துணிவு, மரக்கால், முன்றானை, யானைக்கழுத்திடு கயிறு, வார்.
குச்சம் - வெறும்புறங்கூறல்.
பிச்சம்-ஆண்மயிர், இறகு, பீலிக்குஞ்சம், வெண்குடை.
புச்சம் - தேள், வால்.
மச்சம் - அஷ்டாதசபுராணத்தொன்று, ஓர் தேயம், மீனவிராசி, மீன்.
நச்சல் - வியங்கோண்முற்று, விரும்பல்.
மெச்சம் - கொண்டாடல், துதித்தல், வியங்கோண்முற்று.
அச்சி - ஓர் தேயம்.
உச்சி - ஆண்மயிர், தலை, நடுத்தலை, நடுப்பகல், நாய்.
கச்சி - காஞ்சிபுரம்.
கொச்சி - ஓர் தேயம்.
நொச்சி - ஓர் செடி, சிற்றூர், தன்னரண் காப்பார்க்குமாலை, மதில்.
பிச்சி - ஓர் செடி.
முச்சி - உச்சி, மயிர்முடி.
வச்சி - காயாமரம்.
எச்சில் - எச்சம்.
துச்சில் - ஒதுக்கிடம், கூடு.
மிச்சில் - எச்சில், ஒழிபொருள்.
முச்சில் - சிறுமுறம்.
அச்சு - அடையாளம், உயிர், பண்டியச்சு.
கச்சு - முலைக்கட்டு.
கிச்சு - நெருப்பு.
குச்சு - குற்றி, சிறுகுடில், பாவாற்றி.
சச்சு - நீர்ச்சுண்டி, பறவைமூக்கு.
சுச்சு - சுண்டி.
தச்சு - தச்சுத் தொழில்.
நச்சு - ஆசை, நச்சென்னேவல், விஷம்.
பிச்சு - பித்து.

வச்சு - குற்றம், மேனிலை.
இச்சை - அஞ்ஞானம், ஆசை, இடித்தல், பொய்.
கச்சை - கயிறு, கவசம், தழும்பு, யானை கட்டுங்கயிறு.
கொச்சை - இளைத்தல், வெள்ளாடு.
செச்சை-காடு, சாந்தின் குழம்பு, சோடு, நீறு, வெட்சி, வெள்ளாட்டுக்கடா.
பச்சை-ஓர்வகைப் புதர், தோல், பசுமை, பரிமளம், புதன், மரக்தம், விஷ்ணு.
பிச்சை - ஐயம்.
பொச்சை - கரிகாடு, காடு, சிறுமலை, மலை.
மிச்சை-அஞ்ஞானம், தரித்திரம்.
மொச்சை - ஓர்வகைக் கொடி.
விச்சை - தெரு, வித்தை.

ஞ

அஞ்சம் - அன்னப்புள்.
கஞ்சம் - அப்பவர்க்கம், கஞ்சா, கைத்தாளம், தாமரை, நீர், வஞ்சம், வெண்கலம்.
கிஞ்சம் - சிறுமை.
குஞ்சம் - ஈயோட்டி, குறள், குன்றிக்கொடி,கூன்,கொத்து, கோட் சொல்லல், நாழி.
கிஞ்சம் - புளிமரம், புளிமா.
தஞ்சம் - எளிமை, தாழ்வு, துணை, பற்றுக்கோடு, பெருமை.
பிஞ்சம் - இறகு.
புஞ்சம் - திரட்சி.
மஞ்சம் - கட்டில்.
வஞ்சம் - கொடுமை, சிறுமை, பொய், வாள்.
குஞ்சரம் - யானை.
பஞ்சரம் - கழுகு, செருந்திமரம், பறவை வளர்க்குங்கூடு, மட்கலம் வனையுங்கூடம். ஐ
அஞ்சல் - தோல்வி, பயப்படல், வியங்கோண்முற்று.
எஞ்சல் - குறைதல், வியங்கோண்முற்று.
கொஞ்சல் - கெஞ்சுதல், வியங்கோண்முற்று.
துஞ்சல் - உறங்கல், சாதல், சோம்பல்,நிலைபெறுதல்,வியங்கோண்முற்று.
முஞ்சல் - சாதல், முற்றல், வியங்கோண்முற்று.
விஞ்சல் - மிகுதி, வியங்கோண்முற்று.
அஞ்சனம் - கறுப்பு, மேற்றிசை யானை, மை.
கஞ்சனம் - கண்ணடி, கரிக்குருவி,கைத்தாளம்,வலியான்.
மஞ்சனம் - குளித்தல், நீரின்முழுகல்.
அஞ்சனை - அநுமன்றாய், வடதிசையானைக்குப்பெண்யானை.
கஞ்சனை - கண்ணடி, கலசப்பானை.
வஞ்சனை - தெய்வப்பெண், வஞ்சம்.
இஞ்சி - இஞ்சி, கேடகம், மதில், வாவி.

கஞ்சி - கஞ்சி, காஞ்சி.
குஞ்சி - ஆண்மயிர் குஞ்சியென்னேவல், வினையெச்சம்.
செஞ்சி - ஓர் ஊர்.
முஞ்சி - ஓர் வகை நாணற்புல், வினையெச்சம்.
பஞ்சி - தூறு, பருத்தி.
வஞ்சி - ஓர்வகைக் கொடி, ஓர் வகைப்பா, கருவூர், தருமதேவதை, பகைவர்மேற் செல்லுஞ் சேவகர்க்குமாலை, பெண், வஞ்சியென்னேவல்.
கஞ்சிகை - அரதனச்சிவிகை, சீலை, திரைச்சீலை.
மஞ்சிகை - காதணி, குண்டலம், தாளிக்கொடி, பேழை.
அஞ்சிதம் - உண்டாதல், பொருக்தல்.
சஞ்சிதம் - ஈட்டியது.
சிஞ்சிதம் - அசையுமாபரணங்களாலெழுமொலி.
பஞ்சிதம் - விண்மீன்.
மஞ்சிதம் - அழகுரிமை.
குஞ்சு - பறவைக்குஞ்சு.
சஞ்சு - பறவைமூக்கு.
நஞ்சு - விடம்.
நெஞ்சு - மனம், மார்பு.
பஞ்சு - சீலை, நூற்கும் பஞ்சு, பருத்தி.
பிஞ்சு - இளங்காய்.
மஞ்சு - அழகு, ஆபரணம், இளமை, கட்டில், பனி, முகடு, மேகம், யானை முதுகு, வலி.
கஞ்சுகம் - சட்டை.
சிஞ்சுகம் - கேகயப்புள், சிவப்பு, முண் முருக்கு.
மஞ்சுகம் - கொக்கு.
உஞ்சை - அவந்திநகர்.
தஞ்சை - தஞ்சாவூர்.
பஞ்சை - தரித்திரன்.
விஞ்சை - கல்வி.

ட

கடகடெனல் - ஈரடுக்கொலிக் குறிப்பு.
சடசடெனல் - ஈரடுக்கொலிக் குறிப்பு.
நெடநெடெனல் - ஈரடுக்கொலிக் குறிப்பு.
படபடெனல் - ஈரடுக்கொலிக் குறிப்பு.
கடகம் - கங்கணம், கூத்தின் விகற்பம், கெண்டிகை, கேடகம், கைவளை, மதில், மலைப் பக்கம், யானைக்கூட்டம், வட்டம்.
குடகம் - ஓர் தேசம்.
கடகம் - ஊர்க்குருவி.
படகம் - கவரிமா, தம்பட்டம், திரைச்சீலை, பரண்.
பிடகம் - நூல், பிச்சை, புத்த நூல்.
வடகம் - உல்லாசம், தோல்.
அடக்கம் - ஒடுக்கம்.
தொடக்கம் - ஆதி.
நடக்கம் - ஆட்டம், துவளல்.
முடக்கம் - முடங்குதல்.
இடக்கு - இழிசொல்.
குடக்கு - மேற்கு.

தொடக்கு - மகளிர்சூதகம்.

மடக்கு - ஒருவகைச் சித்திரக் கவி, மடக்கென்னேவல்.

முடக்கு - முடக்கென்னேவல், முடக்கல், விரலணி.

வடக்கு - வடதிசை.

விடக்கு - ஊன்.

இடங்கம் - உளி.

சடங்கம் - வேதத்தின் ஆறு அங்கங்கள். அவை—சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம்.

விடங்கம் - அழகு, ஆண்மை, கொடுங்கை, சுவர்ப்புறத்து நீண்டவுத்திரம், புறவுகட்டுத் தூண்கண்மேற் செய்த கூட்டின் வரிசை, முகடு, வீதியிற் கட்டிய கொடி.

இடங்கர் - குடம், நீர்ச்சால், முதலை.

குடங்கர் - குடம், குடிசை, கும்பவிராசி.

விடங்கர்-சிறுவழி, தியாகராஜர்.

அடங்கல் - அடக்கம், எல்லாம், குத்தகை, சுருங்கல், வியங்கோண்முற்று.

குடங்கல் - குடங்குதல், வளைவு.

தடங்கல் - அடைப்பு, தடை, தாமதம், வறிதிருக்கை.

தொடங்கல் - துவக்கல், வியங்கோண்முற்று.

நடங்கல் - ஆடல், துவளல், முடங்கல்,வியங்கோண்முற்று.

காந்தன்-அரசன், எப்பொருட்குமிறைவன், தலைவன்.
சாந்தன் - அருகன், புத்தன்.
சேந்தன் - நிகண்டு செய்வித்தோன், முருகன்.
பாந்தன் - வழிச்செல்வோன்.
வேந்தன் - அரசன், இந்திரன், சந்திரன், சூரியன், வியாழம்.
ஓந்தி - ஓணான்.
காந்தி - அழகு, ஒளி, வினையெச்சம்.
சாந்தி - கழிப்பு.
மாந்தி - மாமரம், வினையெச்சம்.
வாந்தி - சர்த்திபண்ணல்.
ஆந்திரம் - ஒருதேசம்,ஓர்பாடை.

கேந்திரம் - உதயராசிக்கு ௪-௭-௧௦-மிராசிகள்.
சாந்திரம் - நிறைவு, நெருக்கம்.
ஈந்து - ஈந்துமரம்.
சாந்து - சந்தனம், சாந்தம், பராகம்.
சேந்து - அசோகு, சிவப்பு, தீ, வினையெச்சம்.
வேந்து - அரசு.
ஆந்தை - ஓர்வகைப்புள்.
காந்தை - பெண், மனைவி.
சாந்தை - கங்கை, பூமி.
பூந்தை - ஓர்வகையூர்.
போந்தை - அனுஷநாள், இளம்பனை, பனை.

ப

ஆபதம் - ஆபத்து.
தாபதம்-முனிவரிருக்கும் வாசம், விரதம்.
குணபதி - இடபம், இந்திரன்.
சீபதி-அருகன், கடவுள், திருமால்.
பூபதி - அரசன், ஒருகுளிகை.
கூபம் - கிணறு.
கோபம் - சினம், தம்பலப்பூச்சி.
சாபம் - சபித்தல், தனுவிராசி, வில்.
சோபம் - அழகு, கள், சோம்பல், சோர்வு.
தாபம்-காடு, துன்பம், வெப்பம்.
தீபம் - சோதிநாள், விளக்கு.
தூபம் - புகை.
நீபம்-உத்தரட்டாதிநாள், கடப்பமரம், வெண்கடம்பு.
நூபம் - எருது.
பாபம் - பாவம்.
யூபம் - உடற்குறை, யாகப்பசுவைக்கட்டுந்தறி, யாகம்.
கூபரம் - முழங்கை.
தூபரம் - கொம்பிலாவிலங்கு.
வாபரம் - மதில்.
சாபலன் - ஆட்டுவாணிபன்.
மாபலன் - காற்று.
காபாலர் - சிவன்.
கோபாலர் - இடையர்.
சாபாலர் - உபநிடதவழியொழுகுவோர், ஓரிருஷி.
பூபாலர் - வேளாளர்.
நேபாளம் - ஓர்தேயம்.
பூபாளம் - ஓர்வகையிராகம்.
காபி - ஓர்வகையிராகம்.
கோபி-ஓர்மண், சினமுள்ளோன்.
நாபி - ஓர்மருந்து, கொப்பூழ்.
பாபி - பாவி.
தாபிதம் - சூடு, தாபித்தல்.
தூபிதம் - சூடு.
கோபுரம் - நகரின்வாயில்.
நூபுரம் - காற்சிலம்பு, பாதகிண்கிணி.
காப்பு - ஆடை, கதவு, காவல், திலகமணிதல், மதில்.
சிப்பு - சிப்பு, தாழக்கோல், வாழைக் குலைச்சிப்பு.
சேப்பு - சிவப்பு.
தோப்பு - சோலை.
நீப்பு - துறவு, பிரிவு.
பூப்பு - மகளிர்சூதகம்.
மூப்பு - தலைமை, முதுமை.
யாப்பு - கட்டு, செய்யுள்.

ம

கோமகள் - தலைவி.
நாமகள் } ஸரஸ்வதி.
பாமகள் }
பூமகள் - இலக்குமி, மூதேவி.
சாமந்தம் - ஓர்வகையிராகம்.
சீமந்தம் - கர்பாதானம் முதலிய கருமம் பதினாறிலொன்று.
ஈமம் - சுடுகாடு, விறகு.
ஏமம் - இன்பம், உன்மத்தம், களிப்பு, காவல், திரைச்சீலை, புதையல், பொன், விபூதி.
ஓமம் - ஓர்பூண்டு, யாகம்.
காமம் - அன்பு, ஆசை, ஊர், காமநோய், குடி,
சாமம்-ஓர்வகையுபாயம், கருமை, பச்சை, மூன்றாம் வேதம், யாமம்.
சேமம்-இன்பம், காவல்,புதையல்.
சோமம் - கள்.
தாமம் - அணைகயிறு, இடம், உடல், ஒளி, கீர்த்தி, கொன்றைமரம், சுகம், தாமணி, பிறப்பு, பூமாலை, மணிவடம், முடியுறுப்பு, மூவாறுகோவை மணியுளமாதரிடையணி, வீடு.
தூமம் - புகை, மட்கலஞ்சுடு, சூளை.
நாமம் - திருமண், பெயர்.
நீமம் - ஒளி.
நேமம் - நியமம்.
யாமம்-இடைக்கைமேளம்,இராத்திரி, தெற்கு.
வாமம் - அழகு, இடதுபக்கம், குறுமை, சிவனைம்முகத்தொன்று, தொடை.
வீமம் - பயங்கரம்.
வேமம் - நெய்யுங்கருவியிலொன்று.
ஆமயம் - நோய்.
கோமயம் - ஆநீர், சாணம்.
காமரம் - அடுப்பு, அத்தநாள், இசை, இசைப்பொது,சோலை.
சாமரம் - கவரி.
சேமரம் - அழிஞ்சில்.
தோமரம் - கைவேல், பெருஞ்சவளம்.
பாமரம் - அறிவின்மை.
கோமளம் - இளமை, இளமைச்செல்வி, பசு.
சாமளம் - பச்சை.
ஊமன் - ஊமை, கூகை.
ஏமன் - யமன்.
சீமன் - விண்டு—விஷ்ணு.
காமன் - திப்பிலி, மன்மதன், வண்டு.
சாமன் - காமன்றம்பி, புதன்.
சோமன் - ஓர்வகைவள்ளல், சந்திரன், அசு.
பூமன் - செவ்வாய்.
மாமன் - அம்மான்.
வாமன் - அருகன்.
வீமன் - பஞ்சபாண்டவரிலொருவன்.
ஆமா - காட்டுப்பசு.
தேமா - தித்திப்புள்ளமரம்.
கோமாட்டி - தலைவி.
சீமாட்டி - செல்வி.

கோமாள் - தலைவி.
சீமாள் - தலைவி.
ஆமான் - காட்டுப்பசு.
ஓமான் - ஓந்தி.
கோமான் - அரசன், குரு, சிறந்தோன், பன்றி, மூத்தோன்.
சீமான் - அருகன், பெருஞ்செல்வன்.
தூமான் - பீடிகை.
ஏமி - உடனிகழ்வான்.
சாமி-அருகன், கடவுள், குரத்தி, குரு, தலைவன், பொன், முருகன், மூத்தோன்.
நேமி - கடல், சக்கரம், திருமால், தேருருளை, பூமி, மூங்கில், வட்டம்.
பூமி - பூவுலகு.
மாமி - மாமன் மனைவி.
வாமி - சக்திபூசைசெய்பவன்.
காமியம் - இச்சிக்கும்பொருள்.
யாமியம் - தெற்கு.
ஆமிரம் - மாமரம்.
தாமிரம் - செம்பு.
தூமிரம் - கருமைமிக்கசிவப்பு.
ஏமுறல் - ஏமாப்புறல், வியங்கோண்முற்று.
காமுறல் - ஆசைப்படல், வியங்கோண்முற்று.
ஆமை - கூர்மம்.
ஊமை - மூகம்.
ஓமை - ஓர்மரம்.
சாமை - ஓர்வகைப்பயிர்.
தீமை - பொல்லாங்கு.
தூமை - தூய்மையின்மை.
மாமை - அழகு, நிறம்.
ஆம் - ஆமெனல், இடைச்சொல், ஈரம், நீர்.
தாம் - அசைச்சொல்.
தீம் - இனிமை, தித்திப்பு.
தேம்-எழுனுருபு, கள், தித்திப்பு, வாசனை.
தோம் - குற்றம்.
நாம் - அச்சம், தன்மைப்பெயர்.
போம் - அசைச்சொல், அச்சம், பெயரெச்சம், வினைமுற்று.
காம்பர் - நரம்பு.
சாம்பர் - சாம்பல்.
சோம்பர்-தாமதகுணமுடையவர்
தீம்பர் - கீழ்மக்கள்.
ஆம்பல்-அடைவு, அல்லி, இசைக்குழல், ஊதிடுகொம்பு, ஓரெண், கள், சந்திரன், பண், மூங்கில், யானை.
ஓம்பல் - பாதுகாத்தல், வியங்கோண்முற்று.
கூம்பல் - ஒடுங்கல், குமிழமரம், குவிதல், வியங்கோண்முற்று.
கோம்பல்-சினக்குறிப்பு, பெருங்கோபம், வியங்கோண்முற்று.
சாம்பல் - ஒடுங்கல், சாம்பர், பழம்பூ, வியங்கோண்முற்று.
சோம்பல் - அழுங்கல், மடிமை, வியங்கோண்முற்று.
தேம்பல் - இளைத்தல், பழம்பூ, மெலிதல், வாடல், வியங்கோண்முற்று.
நாம்பல் - இளைத்தல், வியங்கோண்முற்று.
ஆம்பி - ஒலி, காளான்.
காம்பி - இறைகூடை.

கோம்பி - பச்சோந்தி, வினை யெச்சம்.
ஆம்பிரம் - புளிப்பு, புளிமா, மாமரம்.
சாம்பிரம் - செம்பு.
தாம்பிரம் - கருமைமிக்க சிவப்பு.
காம்பு - பட்டுச்சீலை, பூந்தாள், மரக்கொம்பு, மூங்கில்.
கூம்பு - கூம்பென்னேவல், தேர்க் கொடிஞ்சி, பாய்மரம்.
சாம்பு-சாம்பென்னேவல், பறை.
சேம்பு - சேம்பு.
சோம்பு - அழுங்கல், சோம்பல், சோம்பென்னேவல்.
தாம்பு - கயிறு, தாமணிக்கயிறு.
தூம்பு - அருநெறி, உட்டுளை, சலதாரை, மடை, மரக்கால், மூங்கில், வழி, வாயில்.
நாம்பு - நரம்பென்னேவல், மெல் லியது.
பாம்பு - அரவு, ஆயில்யநாள்.
வீம்பு - மேன்மை.
வேம்பு - ஓர்மரம்.

ய

சாயகம் - அம்பு, வாள்.
தீயகம் - நரகம்.
நாயகம் - தலைமை.
மீயகம் - மோக்கம்.
பாயசம் - பாற்சோற்றுச்செடி, பாற்சோறு.
வாயசம் - காக்கை.
ஆயம் - ஆதாயம், சங்கம், சூதாடு கருவி, தாய், தோழி, நாணி, நீளம், மகளிர்கூட்டம்,மல்லரி.
ஈயம் - பஞ்சலோகத்தொன்று.
காயம் - ஆகாயம், உடல், கார்ப்பு, பெருங்காயம், மிளகு, வெண் கலம்.
சாயம் - அந்திநேரம், நிறம்.
சீயம் - சிங்கம், சிங்கவிராசி, தென்றிசைப்பாலன்குறி.
ஞாயம் - காட்சிப்பொருள்.
ஞேயம்-அன்பு, காட்சிப்பொருள், சிநேகம், நெய்.
தாயம் - உரித்து, சூதாடுகருவி, தந்தை, வழிச்சுற்றம், துன்பம்.
தீயம் - தித்திப்பு.
தேயம் - இடம், உடல், களவு, நாடு.
தோயம் - நீர்.
நேயம் - அன்பு, நன்மை, நெய்.
மாயம் - அழுகு, கறுப்பு, தீமை, பொய், வஞ்சம்.
வாயம் - நீர்.
ஆயர் - இடையர்.
தீயர் - கீழ்மக்கள், வேடர்.
வேயர் - வேவுகாரர்.
ஈயல் - ஈதல், தம்பலப்பூச்சி, வியங்கோண் முற்று.
காயல்-உப்பளம், ஒருபட்டணம், கழி, கழிமுகம், வியங்கோண் முற்று.
சாயல் - அழகு, ஒப்பு, நிறம், நுண்மை, மேன்மை, வியங் கோண்முற்று.
தோயல் - தயிர்.
பாயல் - மக்கட்படுக்கை, வியங் கோண்முற்று.
வாயல் - பக்கம், வாசல்.

வேயில் - மூங்கில், வியங்கோண் முற்று.
ஆயிரம் - ஓர்வகையெண்.
பாயிரம் - முகவுரை.
ஆயில் - ஆயில்யநாள்.
கோயில் - அரசன்மனை,கோயில்.
ஞாயில் - மதிலுருப்பு.
வாயில் - ஐம்பொறி, கடை, காரணம், காது, வாயில்.
ஆயு - வாழ்நாள்.
தேயு - நெருப்பு.
பாயு - குதம்.
வாயு - காற்று.
ஆயுள் - வாழ்நாள்.
கேயுள் - மாடம்.
கேயூரம் - தோளணி.
மாயூரம் - ஓரூர்.
சாயை - சூரியன்தேவி, நிழல், நிறம்.
சூயை - பொறாமை.
மாயை - இந்திரசாலமுதலிய, இரதிதேவி, இலக்குமி, காளி, ஸப்தபுரியிலொன்று, பொய், மாயாசக்தி, வஞ்சம்.
ஆய் - ஆய்தல், ஆராயென்னேவல், தாய், வருத்தம்.
காய் - காயென்னேவல், காய்.
சாய் - ஓர்வகைக்கோரை, சாயென்னேவல்.
சேய்-இளமை, குழந்தை, சிவப்பு, செவ்வாய், தூரம், நீளம், முருகன், மூங்கில்.
தாய் - மாதா.
நாய் - சுணங்கன், தென்மேற்றிசைப்பாலன்குறி.
நோய் - துன்பம், வருத்தம், வியாதி.
பாய் - கப்பலில் விரிக்கும்பாய், படுக்கும்பாய்.
பேய் - பிசாசம்.
வாய் - இடம், உதடு, ஏழனுருபு, மெய், வாக்கு, வாயில், வாயென்னேவல், வாய்மை.
வேய் - உட்டுளை, மூங்கில், வேயென்னேவல்.
ஆய்தல் - ஆராய்தல், தேர்தல், நுண்மை.
எய்தல் - பொருந்தல்.
ஓய்தல் - ஒழிதல், தளர்தல்.
காய்தல் - கோபம், சினக்குறிப்பு, வெட்டல்.
சாய்தல் - இரிதல், நுண்மை.
தேய்தல் - இளைப்பு, குறைதல்.
பாய்தல் - குதித்தல், தாண்டல், தாவல், பரவுதல்.
மாய்தல் - சாதல், மறைதல்.
மூய்தல் - மூடுதல்.
மேய்தல் - உண்டல், வேவுதல்.
வாய்தல் - வாயல்.
வேய்தல் - அணிதல், அலங்கரித்தல், சூடுதல், மூடுதல்,வேயுள்.
ஏய்த்தல்-உவமித்தல், ஏமாற்றல்.
காய்த்தல்-மரமுதலியகாய்த்தல்.
சாய்த்தல் - சாயச்செய்தல்.
தேய்த்தல் - அழித்தல், உரைத்தல், கொல்லல்.
தோய்த்தல் - துவைத்தல்.
பாய்த்தல் - பாயச்செய்தல்.
மாய்த்தல் - கொல்லல்.
மேய்த்தல் - மேயச்செய்தல்.

வாய்த்தல்-கிடைத்தல், பொருந்தல், மாட்சிமை.
ஏய்ப்பு - எய்தல்.
காய்ப்பு - காய்த்தல், தழும்பு, வெறுப்பு.
சாய்ப்பு - தாழ்வு.
தேய்ப்பு - தேய்த்தல்.
மேய்ப்பு - வளமை.
சேய்மை - தூரம், நீளம்.
தூய்மை - சுத்தம்.
வாய்மை - சொல், மெய், வலி.
ஆய்வு - அகலம், ஆராய்தல், நுட்பம், வருத்தம்.
ஓய்வு - சாதல், தளர்வு, முடிதல்.
சாய்வு - சாய்தல்.
தேய்வு - குறைபாடு, மெலிவு.
தோய்வு - சார்தல், தோய்தல்.
மாய்வு - சாவு, மறைவு.

ர

ஆரகம் - இரத்தம்.
ஏரகம் - சுப்பிரமணியர் முக்கியத் தலமாறிலொன்று.
காரகம் - வினைகொண்டு முடிவது, வெப்பம்.
கோரகம் - இளம்பூவரும்பு, வட்டில்.
சீரகம் - சீரகம்.
தாரகம் - உச்சவிசை, பிரணவம், வெள்ளி.
பாரகம் - திரைச்சீலை, பூமி.
பூரகம் - மூச்சுள்ளேவாங்கல்.
மாரகம் - மரணம்.
கோரகை-இளம்பூவரும்பு, குயில்.
தாரகை - விண்மீன்.
சாரங்கம் - ஓர் இசை, சாதகம் புள், மான், மேகம், யானை, வண்டு.
சீரங்கம் - அரங்கம்.
தாரங்கம் - கொடிப்படை.
தேரங்கம் - தேர்ப்படை.
நாரங்கம் - நாரத்தை.
கோரங்கி - ஒரு பட்டணம்.
சாரங்கி - ஓர்வகையாழ்.
பீரங்கி-ஓராயுதம்.
கோரசம் - கவுதாரி.
சாரசம்-குருகு, தாமரை, வெண்ணுரை.
நீரசம் - தாமரை, வெண்ணுரை.
பாரசம் - மரப்பொது, பாவின் சுவை.
வாரசம் - முத்து.
ஆரணம் - ஆகமம், வேதத்தின் ஞானபாகம், வேதம்.
ஏரணம்-நியாயநூல், இலக்கணம்.
காரணம் - கருத்தாமுதற் பல காரணம்.
சீரணம் - பதனழிவு.
சூரணம் - கருணைக்கிழங்கு, தூள்.
தாரணம் - அட்டாங்கயோகத்தொன்று, உறுதி, தரித்தல், நிலை.
தோரணம்-தலைவாசலின்வாயில், தெருவிற்கட்டுந்தோரணம்.
பாரணம் - சோறுண்டல்.
பூரணம் - எல்லாம், நிறைவு, பெருகுதல்.
மாரணம் - கொலை.

வாரணம் - கடல், கவசம், கேடகம், கோழி, சங்கு, சட்டை, தடுத்தல், யானை, விடுதல்.
வீரணம் - இலாமிச்சம்வேர்.
ஆரணன் - பரமன், பிரமன், வேதபுருடன்.
காரணன் - அரசன்.
நாரணன் - விஷ்ணு.
ஆரணி - காளி.
காரணி - சிவை.
சிரணி-காடு,சிரணியென்னேவல்.
தாரணி - பூமி.
நாரணி - துர்க்கை.
பூரணி - இலவமரம், சாம்பவி.
தாரணை - தாரணம்.
பூரணை - சந்திரனைந்தாம்பக்கம், சாஸ்தாவின்தேவி.
வாரணை - தடுத்தல்.
ஏரண்டம் - ஆமணக்கு.
கேரண்டம் - காக்கை.
கோரண்டம் - குறிஞ்சி, மருதோன்றிமரம்.
சாரதம் - தகணம்பூ.
நாரதம் - மேகம்.
பாரதம்-இரதம், ஐந்தாம்வேதம், பாரதவருடம்.
காரதி - செய்வோன்.
சாரதி - தேர்ப்பாகன், புலவன்.
பாரதி - ஸரஸ்வதி.
ஆரம் - ஆத்திமரம், ஆபரணம், ஓர் பாணம், கடம்பு, சந்தனமரம், சந்தனவனம், பதக்கம், பித்தளை, பூமாலை, மாதரணிவடம், முத்து, முத்துமாலை.
ஈரம் - அழகு, அறிவு, அன்பு, குளிர்ச்சி, பகுதி, பண்பு.
ஓரம் - பக்கவாதம், விளிம்பு.
காரம் - எழுத்தின்சாரியை, காரியம், கார்த்தல், மாவயிரம்.
கீரம் - கருங்கிளி, கிளி, பால்.
கூரம் - ஓர்வகையூர், கொடுமை, பாகல், பொருமை.
கோரம் - அச்சம், உஷ்ணம், குதிரை, கொடுமை, சீக்கிரம், சோழன், வட்டில்.
சாரம் - இனிமை, ஓர்மருந்து, கிரகசாரம், நடை, நிலாமுகிப்புள், மாவயிரம், மேடு.
சீரம் - மரவுரி.
சூரம் - அச்சம், கடலை, வீரம்.
சோரம் - களவு.
தாரம் - அரும்பண்டம், இங்குலிகம், நா, பச்சைப்பாம்பினஞ்சு, பாதரசம், பிரணவம், மனைவி, மூக்காற்பிறக்குமிசை, வல்லிசை, வீணைநரம்பிலொன்று, வெண்கலம், வெள்ளி.
தீரம் - கரை, சிறுவரம்பு, வலி.
தூரம் - சேய்மை.
நாரம் - அன்பு,கயிறு, நாரத்தை, நீர், பாசி.
நீரம் - நீர்.
நேரம் - காலம்.
பாரம் - கரைப்பொது,கல்லணை, கவசம், சுமை, நிறை, பூமி, வரம்பு.
பீரம் - பீர்க்கு, பூவரசு, வாகைமரம்.
பூரம்-ஓர்நாள், ஓர்மருந்து, பூரம்.

வாரம் - அன்பு, உரிமை, எழு கிழமை, கடல், கரை, சிறு வரம்பு, திரை, பங்கு, மலைச் சாரல்.
வீரம் - ஓர்மருந்து, மலை, வலி, வீரியம்.
வேரம் - சலஞ்சாதித்தல்.
காரர் - அச்சமுள்ளோர்.
சாரர் - வேவுகாரர்.
சூரர் - படைவீரர்.
சேரர் - ஓர்தேசத்தவர்.
சோரர் - திருடர்.
தீரர் - வலியுடையோர்.
தேரர் - புத்தர்.
வீரர் - படைவீரர்.
சாரலர் - மலைவாணர், பகைவர்.
சேரலர் - சேரதேசத்தார், பகைவர்.
நேரலர் - பகைவர்.
ஆரல் - ஆரான்மீன், கார்த்திகை நாள், செவ்வாய், நெருப்பு, பதில்.
ஈரல் - ஈருள், வியங்கோண் முற்று.
ஊரல் - உரிஞ்சல், ஊர்தல், கிளிஞ்சில், வியங்கோண்முற்று.
ஏரல் - கிளிஞ்சில்.
காரல் - பல்லினாற் கடித்தல்.
கூரல் - புள்ளிறகு, பெண்மயிர், வியங்கோண்முற்று.
சாரல் - கிட்டல், மருதயாழிசை, மலைப்பக்கம், வியங்கோண் முற்று.
சூரல் - பிரம்பு, வியங்கோண் முற்று.
சேரல் - கிட்டல், வியங்கோண் முற்று.
தூரல் - துன்பம், வியங்கோண் முற்று.
மூரல் - சிரிப்பு, சோறு, பல்.
வாரல் - அள்ளுதல், கொள்ளையிடல், வியங்கோண்முற்று.
வேரல் - மூங்கில்.
ஆரவாரம் - ஒலி, பேரொலி.
கோரவாரம் - சந்தனம்.
வாரவாரம் - கவசம்.
ஊரன் - மருதநிலத்தலைவன்.
கீரன் - நக்கீரதேவன்.
கூரன் - நாய்.
சூரன் - ஓரசுரன், சூரியன், தீ, நாய், வீரன்.
சேரன் - சேரலன்.
சோரன்-ஆட்டுக்குட்டி, திருடன்.
தேரன் - ஆயுர்வேதமுணர்ந்தவொரு புலவன்.
மாரன் - மன்மதன்.
வீரன் - அருகன், திண்ணியன், பீஷ்மன்.
தாரா - ஓர்வகைப்புள், குருகு, விண்மீன், வினைமுற்று, வினையெச்சம்.
சீராட்டல் - சிறப்புச்செய்தல், வியங்கோண்முற்று.
பாராட்டல் - கொண்டாடல், வியங்கோண்முற்று.
ஊராண்மை - மிக்கசெயல்.
ஏராண்மை - உழவு.
பேராண்மை - அரியசெயல்.
நாராயணம் - அரசமரம், உபநிஷதங்களிலொன்று, மீன்.

பாராயணம்-நியமமாகப்படித்தல்.
சேரார் - பகைவர்.
தேரார் - கல்லாதார், கீழ்மக்கள், பகைவர்.
நேரார் - பகைவர்.
ஏராளர் - வேளாளர்.
சீராளன் - சிறுத்தொண்டநாயனார்மகன்.
பேராளன் - மிருகசிருடநாள்.
ஆரி - சோழன், மேன்மை.
ஊரி - இளமை, சங்கு, மேகம்.
ஏரி - குளம், புநர்பூசம்.
ஓரி - ஆணரி, ஆண்மயிர், ஆண்முசு, காளிவாகனம், கிழநரி, புறமயிர், விலங்கேற்றின்பொது.
காரி - இந்திரன், ஐயனார், கடையெழுவள்ளலிலொருவன், கரிக்குருவி, கருமை, களர்நிலம், காக்கை, கிளி, சனி, நஞ்சு, வயிரவன், வினைசெய்யிடம்.
கீரி - கீரிப்பிள்ளை.
சாரி - உலாப்போதல், சூதாடுகருவி, சூறைக்காற்று.
சூரி - சாடுகோள், காளி, புலவர்.
சேரி - ஊர், தெரு.
சோரி - இரத்தம், மழை.
தாரி - வழி.
தோரி - சோறு.
நாரி - நாணி, பன்னாடை, பார்வதி, பெண், வாசனை.
பாரி-கடையெழு வள்ளலிலொருவன், கட்டில், நற்சீலை, பாரியென்னேவல், பூமி, மனைவி.
பூரி - ஓர்வகையிசை, கலப்புநெல், காணி, பூரியென்னேவல், பொன், மிகுதி.
பேரி - பறைப்பொது, முரசு.
மாரி - கள், சாவு, நீர், பற்பலரிறக்குநோய், மழை, மேகம், வடுகி.
மூரி-எருது, எருமை, சோம்பல், நெரிவு, பழமை, பெருமை, வலி.
யாரி - கதவு.
வாரி - இசைக்குழல், கடவுள், கடல், கதவு, நிறைபுனல், நீர், மதில், மதிற்சுற்று, யானை நிற்குங் கூடம், யானைபடுக்குங்குழி, வழி, வாயில், வினையெச்சம், வெள்ளம்.
வீரி - காளி, துர்க்கை.
வேரி - கள், வாசனை, வெட்டிவேர்.
காரிகம் - காவிக்கல்.
பூரிகம் - அப்பவர்க்கம்.
காரிகை - அழகு, ஓர்வகையாப்புநூல், கலித்துறை, பெண்.
கோரிகை - அகப்பை.
சாரிகை - கவசம், சங்கம், சுழல், காற்று, சூதாடுகருவி, நாகணவாய்ப்புள், வட்டமாயோடல்.
பூரிகை - அப்பவர்க்கம், ஊதிடும்பூரிகை.
பேரிகை - ஓர்வகை வாச்சியம்.
பாரிசம் - பக்கம்.
வாரிசம் - தாமரை.

ஆரிடம் - ஆகமம், எட்டுவகை மணங்களிலொன்று, நூல், பூசை, வழுக்குநிலம்.
ஓரிடம் - ஏகாந்தம்.
பாரிடம் - பூதகணம், பூமி.
பூரிதம் - நிரப்பப்பட்டது.
வாரிதம் - மேகம்.
பாரித்தல் - உண்டாக்கல்,தோற்றல், பரப்பல்.
பூரித்தல் - உவத்தல், நிறைத்தல்.
வாரித்தல்-ஆணையிடல், தடுத்தல்.
ஆரியம் - அழகு, இமயமலைக்கும் விந்தியமலைக்கும் நடுத்தேயம், பண்டம், ஸம்ஸ்க்ருத மொழி.
காரியம் - தொழில்.
சீரியம் - அகமுடிவு.
தூரியம் - உவகைப்பறை, எருது, எழுதுகோல், எறிப்படைப் பொது, கைவேல், நல்லாடை, பறைப்பொது, முரசு.
பூரியம் - அரசிருக்கை, ஊர், மருதநிலத்தூர், வேந்தர் வீதி.
வீரியம்-சுக்கிலம், பறைப்பொது, வீரம்.
ஆரியர் - ஆசிரியர், புலவர், வைத்தியர்.
காரியர் - கருநிறமுடையவர், கருமகாரர்.
சீரியர் - அறிஞர், புலவர்.
சூரியர் - புலவர்.
தோரியர் - ஆடிமுதிர்ந்தமகளிர்.
பூரியர் - கீழ்மக்கள்.
வீரியர் - வீரர்.
ஆரியன் - அறிவுடையான், ஐயனார், குரு, சூரியன், புலவன், வைத்தியன்.
கூரியன் - புதன், புத்தியிற் சிறந்தோன்.
சூரியன் - சோழன்,ஞாயிறு,பிராமணன், பூரிகொடுப்பவன்.
ஆரியை - காளி, துர்க்கை, பார்வதி.
சாரியை சாரியை என்னுமிடைச்சொல்.
பாரியை - மனைவி.
ஊரு - அச்சம், தொடை.
காரு - பல்லாங்கடி.
சாரு - கிளி.
தாரு-மரக்கொம்பு, மரப்பொது.
பீரு - அச்சமுள்ளோன், புருவம்.
பூரு - புருவம்.
மேரு - பொன்மலை, மலை.
காருகன் - நெய்பவன்.
சாருகன் - கொலைசெய்வோன்.
தாருகன் - ஓர்வகையசுரன்.
பீருகன் - அச்சமுள்ளோன்.
சீருணம் - செம்பு.
தாருணம் - அச்சம், பயங்கரம்.
வாருணம் - அட்டாதசவுபபுராணத்தொன்று, கடல், மேற்கு.
ஊருணி - ஊரடுத்தகுளம்.
காருணி - வானம்பாடி.
வாருணி - அகத்தியமுனி, கள், சதயநாள், மேற்கு.
மாருதம் - காற்று.
வீருதம் - மிடைதூறு.
ஆருவம் - நீர்.

பூருவம் - ஆதி, கிழக்கு, பழமை, முன்பு.
ஈருள் - ஈரல்.
சீருள் - ஈயம், செம்பு, பஞ்சலோகங்கள்.
ஆரூடம் - ஏறுதல்.
காரூடம் - பதினெண்புராணத்தொன்று.
ஆரூபம்-அமையாமை, நீங்காமை.
சாரூபம் - ஓர்வகைப்பதவி.
ஆசை - நீருணாரை, புற்பாய், மதில்.
ஓரை - இராசிப்பொது, கலன்கள், சமயம், தோழி, மகளிர்கூட்டம், மாதர் விளையாடுங்களம், விளையாட்டு.
காரை - ஓர்வகைச்செடி.
கூரை - சிற்றில்.
கோரை - கோரைப்புல்.
சாரை - ஓர்வகைப்பாம்பு.
சீரை - சீலை, மரவுரி.
சூரை - ஓர்வகைச்செடி.
தாரை - ஒழுங்கு, கண், கண்மணி, காளம், கூர்மை, கொடிப்படை, சீலை, சுக்கிரீவன் மனைவி, திகிரி, தேவகுருவின் மனைவி, நா, நீரோடல், மழை, வலி, வழி, விண்மீன்.
தேரை - தவளையிலோர்பேதம்.
தோரை-அரைப்பட்டிகை, இரத்தம், ஒறுன், ஓர்வகைநெல், கை, மூங்கிலரிசி, விரலிறை.
நாரை - ஓர்வகை நீர்ப்புள்.
பாரை - கட்டப்பாரை, (இதனை அலவாங்கு என்பர்.)
வாரை - மரவுத்திரம்.
வீரை - ஓர்வகைமரம், கடல், துன்பம்.
ஆர் - ஆத்தி, ஆர்தலைச்செய்யென்னுமேவல், ஐந்துருவாணி, கூர்மை, சோதி, தேர்வண்டியகவாய், நிறைவு, பலர்பால்விகுதி, பாகு, பூமி, ஆரென் விளுப்பெயர், விஞ வினைக் குறிப்புமுற்று.
ஈர்-ஈர்தலைச்செய் யென்னேவல், மயிற்பற்றுமீர்.
ஊர் - ஊரென்னேவல், ஊர்.
ஏர் - அழகு, உழுமாடு.
ஓர் - ஒன்று, ஓரென்னேவல்.
கார் - ஆவணி, புரட்டாசியின் பருவம், இருள், கருங்குரங்கு, கருமை, காரென்னேவல், கார்நெல், நீர், மேகம், வெள்ளாடு.
கீர் - சொல்.
கூர் - கூரென்னேவல், நுனி, மிகுதி.
சார் - அழகு, காற்றண்டை, சித்திரம், செய்யுளுறுப்பு, செல்வம், தண்டாயுதம், தாளவொத்து, துலாராசி, நன்மை, பாரம், புகழ்.
சூர் - அச்சம், சூரென்னேவல், துன்பம், தெய்வப்பெண், தெய்வம், நோய்.
தார் - கிண்கிணிமாலை, கொடிப்படை, படை, பூ, பூவரும்பு, மாலை.
தூர் - பாரம், தூரென்னேவல்.

தேர் - இரதம், உரோகணிநாள், தேரென்னேவல்.
நார் - அன்பு, கயிறு.
நீர் - குணம், நீர், முன்னிலைப் பெயர்.
நேர் - உடன்பாடு, உவமை, ஓர் வகையசை, செவ்வை, நீளம், நுட்பம், நேரென்னேவல், பாதி.
பார் - உரோகணிநாள், தேரின் பரப்பு, பாரென்னேவல் பூமி.
பீர் - அச்சம், பசலை, பீர்க்கு, முலைப்பால்.
பேர் - நாமம், பெருமை, பெயரென்னேவல்.
போர் - சதயநாள், நெற்போர், பொருதல், போரென்னேவல்.
யார் - யாரென் வினு வினைக் குறிப்பு முற்று, வினுப்பெயர்.
வார் - கச்சு, நீர், நீளம், நேர்மை, வாரென்னேவல்.
வேர் - மூலம்.
ஊர்கோள் - சூரியனைச்சூழத் தோன்றும் வட்டம்.
கார்கோள் - கடல்.
ஆர்க்கம் - இரத்தம்.
தீர்க்கம் - நிச்சயம், நீளம், நெடில்.
மார்க்கம் - நெடுந்தெரு, மார்கழி மாதம், வழி.
மூர்க்கம்-சலஞ்சாதித்தல், நாகப் பாம்பு.
ஈர்க்கு - ஈர்க்கு.
பீர்க்கு - ஓர்வகைக்கொடி.
ஊர்ச்சம் - கார்த்திகைமாதம்.
கூர்ச்சம் - தருப்பை.
சார்ச்சி - சார்தல்.
தேர்ச்சி - எண்ணல், கல்வி, தெளிவு.
ஆர்தல் - குடித்தல், தங்கல், நிறைதல், புசித்தல்.
ஈர்தல் - பிளத்தல்.
ஊர்தல் - ஊருதல், செலுத்தல், பரத்தல்.
ஓர்தல் - ஆராய்தல்.
கூர்தல் - ஆராய்தல், மிகுதல்.
சார்தல் - கலத்தல், கிட்டல்.
சேர்தல் - அடுத்தல்.
சோர்தல் - வாடல் விழுதல்.
தீர்தல் - கடத்தல், நீளம், முடித்தல், விடுதல்.
தேர்தல் - ஆராய்தல், சொல்லல், தெரிதல்.
நேர்தல் - ஈதல், உடன்படல், எதிர்த்தல், கிட்டல், பொருதல், வேண்டல்.
பேர்தல் - அகலல், பெயர்தல்.
வார்தல் - உயர்ச்சி, தெரிதல், நீளல், வாருதல்.
சூர்த்தம் - அச்சம்.
தீர்த்தம் - புண்யநதி.
நீர்த்தம் - திருவிழா, நீர்.
மூர்த்தம்- இருநாழிகைப்பொழுது உடல்.
ஆர்த்தர் - துயருறுவோர்.
தீர்த்தர் - கடவுளர்.
தூர்த்தர் - வஞ்சகர், விடர்.
ஆர்த்தல் - அணிதல், ஒலித்தல், கட்டல், பொருத்தல்.
ஈர்த்தல் - அறுத்தல், இழுத்தல், பிளத்தல்.

கார்த்தல் - காழ்த்தல்.
கூர்த்தல் - உவர்த்தல்.
சூர்த்தல் - சுழலல்.
சேர்த்தல் - சமைத்தல், சேர்த்திடல்.
தீர்த்தல் - முடித்தல், விடுத்தல்.
தூர்த்தல் - செறுத்தல்.
நீர்த்தல் - நீர்மையுளதாதல்,
பார்த்தல் - காணல், வணங்கல்.
பேர்த்தல் - பெயர்தல்.
போர்த்தல் - மூடுதல்.
வார்த்தல் - வார்க்குதல்.
வேர்த்தல் - கோபம், வியர்த்தல்.
தீர்த்தன் - அருகன், உபாத்தியாயன், குரு, சிவன்.
தூர்த்தன் - வஞ்சகன், விடன்.
பார்த்தன் - அருச்சுனன்.
ஆர்த்தி - ஆசை, ஆராதனை, நிறைவு.
கீர்த்தி - புகழ்.
சீர்த்தி - மிகுபுகழ்.
பூர்த்தி - நிறைவு.
பேர்த்தி - பெயர்த்தி.
மூர்த்தி - அருகன், உடல், உருவம், புத்தன்.
கார்த்திகை - ஓர்வகைமாதம், நூர்க்கை.
கூர்த்திகை - ஆயுதப்பொது.
தீர்த்திகை - ஆறு.
தூர்த்தை - தூர்த்தகுணமுள்ளவள்.
வார்த்தை - வசனம்.
சார்ந்தார் - உறவோர்.
சேர்ந்தார் - சிநேகிதர்.
ஏர்பு - எழுச்சி.
சார்பு - சார்வு, வினையெச்சம்.
சேர்பு - வினையெச்சம், வீடு.
தேர்பு - தேர்தல்.
நேர்பு - எழுச்சி, நீளம், வினையெச்சம்.
மார்பு - அகலம், நெஞ்சு.
ஆர்ப்பு-கட்டு, சிரிப்பு, பேரொலி, போர்.
ஈர்ப்பு - ஈர்த்தல்.
ஓர்ப்பு - கருமமுடிக்குந் துணிவு, பொறுமை.
கார்ப்பு - மிளகுமுதலியகாரம்.
கூர்ப்பு-உள்ளது சிறத்தல், கூர்த்தல்.
சேர்ப்பு - கலப்பு, தொகுதி, புணர்ச்சி.
தீர்ப்பு - ஆர்த்தல்.
பார்ப்பு - கோட்டில் வாழ்விலங்கின் பிள்ளை, தவழ்சாதியின் பிள்ளை, பறவைக்குஞ்சு.
போர்ப்பு - போர்த்தல்.
வார்ப்பு - வார்த்தல்.
ஆர்மை - கூர்மை, மதில்,
கூர்மை - நுண்மை.
சீர்மை - சிறப்பு.
நீர்மை - ஒப்புரவு, குணம்.
நேர்மை - நுண்மை, நேர்வழி.
ஆர்வு - ஆராய்தல்.
சார்வு - ஆசைப்பெருக்கம், இடம் சார்வு, பற்று.
சேர்வு - திரட்சி, மருதநிலத்தூர், வீடு.
சோர்வு - அசதி, களவு, மறதி.
சேர்வை - கூட்டம்.
தீர்வை - இறை, கிரி.

ஆர்வை - அறுகு, செத்தை.
பார்வை - கண், மதிப்பு.
போர்வை - தோல், மூடுதல்.
வேர்வை - வியர்வை.

ல

சால - மிகுதிப்பொருளைத்தரும் வினையெச்சவுரிச்சொல்.
போல - உவமைப்பொருளைத் தரும்வினையெச்சவிடைச்சொல்
ஆலகண்டன் - சிவன்.
காலகண்டன் - காலகாலன், சிவன்.
நீலகண்டன் - சிவன்.
சாலகம் - அதலலோகம், இளம்பூ வரும்பு, சலதாரை, சிலந்திப் பூச்சி, வலை, பலகணி, பற வைக்கூடு.
மூலகம் - கிழங்கு, முள்ளங்கி.
மேலகம் - மோக்கம்.
வாலகம் - வால்.
மாலதி-சிறுசண்பகம், மல்லிகை, முல்லை.
வாலதி - யானைவால், வால்.
ஆலம் - அன்புக்கூடு, ஆலமரம், நீர், பாம்பினஞ்சு, மலர்ந்தபூ, மழை.
ஏலம் - மயிர்ச்சாந்து, வாசனைப் பண்டம்.
ஓலம் - ஒலி, கடல், பாம்பு.
காலம் - பொழுது, விடியல்.
கீலம் - ஆணி, சுவாலை, பிசின்.
கூலம் - கடற்கரை, கடைவீதி, கரை, காராமணி, பசு, பல பண்டம், பாகல், மந்தி, மரை, வரம்பு, விலங்கின்வால்.
கேலம் - மகளிர் விளையாட்டு.
கோலம் - அழகு, இலந்தைக் கனி, ஒப்பனை, தெப்பம், நீரோட்டம், பலகோலம், பற வை, பன்றி, பாக்கு, பீர்க்கு, மருட்பன்றி, விந்தைநகர்.
சாலம் - அரண், ஆச்சாமரம், இளம்பூவரும்பு, கூட்டம், செடி, பலகணி, மரப்பொது, மாயவித்தை, வலை, விலங்கின் கூட்டம்,
சீலம்-குணம், சரித்திரம், சீந்தில், தருமம், நல்லறிவு, நல்லொழுக் கம்.
சூலம் - இரேவதிநாள், ஓர்வகை யாயுதம்.
சேலம் - ஓரூர், வஸ்திரம்.
ஞாலம் - பூமி.
தாலம் - உண்கலம், கூந்தற்பனை, நா, பனை, பூமி, யானைச்செவி.
தூலம் - பஞ்சி, பருமை, வீட்டுத் திரம், பஞ்சீகிருதபூதம்.
நீலம் - இருள், கருங்குவளை, கறுப்பு, காற்று, நஞ்சு, நீல நிறம், நீலமணி, பனைமரம்.
பாலம் - ஆற்றுப்பாலம், நெற்றி, பூமி, மரக்கொம்பு, மழு.
மாலம் - குங்குமமரம், பேய்.
மூலம் - ஓர்வகைநாள், ஓர்வகை நோய், காரணம், கிழங்கு, முதல், வேர்.
வாலம் - தலைமயிர், வால்.
சாலர் - செய்தநிலமாக்கள்.
பாலர் - இடையர், பிள்ளைகள்.

மாலர் - கவசம், பிரதிலோமன், புலையர், வேடர்.
ஆலல் - ஆடல், ஒலித்தல், மயிற் குரல், வியங்கோண்முற்று.
ஏலல் - இயலல், வியங்கோண் முற்று.
காலல் - கொப்புளித்தல், சர்த்தி பண்ணல்,வியங்கோண்முற்று.
கோலல்-சூழ்ந்திடல், வளைத்தல், வியங்கோண்முற்று.
சூலல் - அறுத்தல், வியங்கோண் முற்று.
நாலல் - தாழ்தல், தொங்கல், வியங்கோண்முற்று.
ஆலவட்டம் - தாலவிருந்தம்.
தாலவட்டம்-பூமி, யானைச்செவி, யானைவால்.
காலன் - சனி, நமன்.
நீலன்-சனி, வானரப்படைத்தலை வரிலொருவன்.
வேலன் - முருகன், வெறியாட் டாளன்.
ஏலாமை - கூடாமை, தகாமை.
தோலாமை - தோல்வியின்மை.
நோலாமை - தவமின்மை, பெருமை.
வாலாமை - அசுத்தம், மகளிர் சூதகம்.
ஆலாலம் - விஷம், வெளவால்.
கீலாலம் - உதிரம், காடி, நீர்.
தாலாலம் - பழமொழி.
ஆலி - அமுதம், ஆலாங்கட்டி, களிபென்னேவல், கள், காற்று, மழை, மழைத்துளி.
ஏலி - கள்.
காலி - கழிவுநாள், கள், பசுக் கூட்டம்.
கூலி - நாட்கூலி.
கோலி - இலந்தைமரம், மயிர், வினையெச்சம்.
சாலி - அருந்ததி, கவசம், கள், நெல்.
சூலி - கருப்பிணி, காடுகாள், காளி, சிவன், துர்க்கை.
தாலி - மங்கலநாண்.
தூலி - பெருத்தவள், பெருத்த வன்.
நாலி - முத்து.
நீலி-அவுரி, கறுப்பு, காளி, துர்க் கை, பார்வதி,மேகவண்ணப்பூ வுளமருதோன்றிமரம்.
பாலி - ஆலமரம், கள், பாலி யென்னேவல்.
பீலி - ஆலவட்டம், சிறுசின்னம், பெருஞ்சவளம், பொன்மதில், மயில், மயிற்றோகை, மாதர் காலணி, வாச்சியம்.
போலி - ஒன்றுபோலொன்றிருத் தல்.
மாலி - ஓர்வகையரக்கன், கள், மாலையணிந்தவன்.
மூலி - மரம், மருந்து.
மௌலி - கிரீடம்.
வாலி - இந்திரன்மகனாகிய வான ரன்.
வேலி - ஊர், ஓரளவை, நிலம், காவல், மதில்.
சாலிகை - கவசம்.
தூலிகை - எழுதுகோல்.

பாலிகை - உதடு, படைவாளின் முட்டி, முளைதெளிக்கும் பாலிகை, வட்டம்.
மாலிகை - நிரல்பட நிற்குங்குழு மாலை.
மூலிகை - வேர், ஓடதி.
ஆலித்தல் - களித்தல்.
பாலித்தல் - ஈதல், காத்தல்.
காலியம் - விடியல்.
மூலியம் - விலை.
சாலினி - கள்வாணிச்சி, தேவர்க்காடுவாள்.
பாலுகம் - கர்ப்பூரம்.
மாலுகம் - வேம்பு.
வாலுகம் - வெண்மணல்.
ஆலுதல் - அசைதல்.
ஏலுதல் - பொருந்தல்.
ஞாலுதல் - நாலல்.
நாலுதல் - தூங்குதல்.
போலுதல் - ஒத்தல்.
காலூரம் - தவளை.
சாலூரம் - தவளை, மேன்மை,
மாலூரம் - வில்வமரம்.
காலேகம் - நால்வகைச்சாந்து.
சாலேகம் - சந்தனம், சிந்தூரம், பலகணி, பூவரும்பு.
சேலேகம் - சந்தனம், சிந்தூரம்.
காலேயம் - கஸ்தூரி மஞ்சள், பசுக்கூட்டம், மோர்.
சாலேயம் - நெல்விளையுநிலம்.
ஆலை - கரும்பாலை, கள்.
ஓலை - ஒலி, தென்னோலை, பனையோலை.
காலை - பொழுது, விடியற்காலம்.
சாலை - அரசன்மனை, அறத்தின்சாலை, குதிரைப்பந்தி, சாலை.
சீலை - சேலை.
சூலை - ஓர்வகைநோய்.
சோலை - தோப்பு.
பாலை - ஓர்வகைநிலம், ஓர்வகைமரம், ஓர்வகைப்பாடல், கடல், புனர்பூசநாள், மிருகசீரிடநாள்.
மாலை-அந்திப்பொழுது, அரசன்மனை, இயல்பு, இரா, ஒழுங்கு, சொல்லாலும் பூவாலும்பொன்னாலுமணியாலுந் தொடுத்த தொடை, நோய்.
மூலை - கோணம்.
வேலை - கடல், கடற்கரை, தொழில், நிகழ்காலம்.
நூலோர் - அந்தணர், அறிஞர், மந்திரிகள்.
மேலோர் - அறிஞர், வானோர்.
ஆலோலம் - நீரொலி, புள்ளோச்சல்.
காலோலம் - அண்டங்காக்கை.
ஆல் - அசைச்சொல், ஆமெனல், ஆலமரம், எதிர்மறை ஏவல் விகுதி, ஆலென்னேவல், வேற்றுமையுருபு.
ஓல் - ஒலித்தல்.
கால் - அளவு, ஏழனுருபு, காலன், கால் காற்று, குறுந்தறி, கையூன்றுகோல், தூண், தேருருள், பூந்தாள், பொழுது, மகன், மரக்கால், முளை, வழி, வாய்க்கால்.
கில் - சந்து.

கூல்-பதினெண்வகைத்தானியம்
கோல் - அஞ்சனக்கோல், அம்பு, அளந்திடுகோல், இலந்தை, ஊன்றுகோல், எழுதுகோல், குதிரைச்சம்மட்டி,செங்கோல், துலாம், துலாராசி,தூண்டில், தெப்பம், மரக்கொம்பு, யாழி னரம்பு.
சால்-சாலென்னேவல், நீர்ச்சால், படைச்சால், மிகுதி.
சூல் - கருப்பம், சூலென்னேவல்.
சேல் - கெண்டைமீன்.
தால் - பிள்ளைக்கவியிலோர் பருவம்.
தோல் - அழகு, எண்வகைவனப் பினிலொன்று, துருத்தி, தோலாற்செய்த கேடகம், தோல், யானை.
நால் - தூங்குதல், நான்கு.
நீல் - காற்று, நீலம்.
நூல் - எண்ணல், கருத்து, கல்வி நூல், நூலென்னேவல், பஞ்சி நூல்.
பால் - இடம், உரிமை, குணம், பக்கம், பங்கு, பாதி, பால், வெண்மை.
பூல - ஓர்வகைச்செடி.
பேல்-மலங்கழித்தல், அவ்வேவல்
போல்-பதர், போலென்னிடைச் சொல், மூங்கில்.
மால் - அருகன், இந்திரன், கருமை, காற்று, சோழன், திருமால், புதன், பெருமை, மயக்கம், மேகம், வேட்கை.
மேல் - அகலம், ஆகாயம், இனியென்பது, ஏழனுருபு, மேல், மேற்கு.
வால் - சுத்தம், மிகுதி, வால், வெண்மை.
வேல்-ஆயுதப்பொது, ,கைவேல், மூங்கில், வேலமரம்.
ஏல்பு - பொருந்தல், இயைதல்.
சால்பு - ஊக்கம், கல்வி, மாட்சிமை, மேன்மை.
மால்பு - கண்ணேணி.
கால்வாய் - வாய்க்கால்.
நால்வாய் - யானை, வினைமுற்று.

வ

சாவகச்சேரி - ஓரூர்.
யாவகச்சேரி - யாவகரூர்.
காவகம் - சோலை.
சாவகம் - பதினெண்பாஷையி லொன்று.
சேவகம் - சேவகத்தொழில், யானைத்துயிலிடம், வீரம்.
பாவகம் - இயல்பு, நருத்து.
யாவகம் - ஓர்தேயப்படை.
சாவகர் - சமணர்.
சீவகர் - புத்ததவத்தோர்.
சேவகர் - வீரர்.
சர்வகன் - சனி.
சீவகன் - ஓரரசன்.
சேவகன் - வீரன்.
பாவகன் - தூய்மைசெய்வோன், நெருப்பு.
யாவகன் - ஓர்தேயத்தான்.
சாவகி-சமணப்பெண், ஓர்தேயப் பெயர்.

தேவகி - கண்ணன்றாய்.
பாவகி - முருகன்.
ஆவணம்-அடையாளம், உரிமை, கடை, தெரு, தேர்மொட்டுப் பொருந்தியபீடம், புநர்பூசம், முறிச்சீட்டு.
காவனம் - பந்தல்.
கேவனம் - மணியைப்பதிக்குங் குழி.
கோவணம் - கௌபீனம்.
சாவணம் - ஓர்கருவி.
நாவணம் - உண்ணாக்கு.
ஆவம் - அம்புக்கூடு, நாணி.
கூவம் - ஓர் சிவஸ்தலம், கிணறு.
கோவம் - கோபம், பொன்.
சாவம் - சப்தமொழி.
தாவம் - காடு காட்டுத்தீ, மருத நிலத்தூர்.
தேவம் - தெய்வத்தன்மை.
பாவம் - கருத்து, பாபம்.
ஓவர் - கம்மாளர், பாடற்கீழ் மக்கள்.
கூவர் - கீழ்நீர்க்குறியறி நூலார்.
கோவர் - இடையர்.
சீவர் - ஆன்மாக்கள்.
தேவர் - அண்டர்.
கேவலம் - ஒருங்கு, தனிமை, மோக்கம்.
ஆவலர் - காதலர், கொண்கர்.
காவலர் - அரசர், புருடர்.
கூவலர் - நூல்வல்லோர்.
கோவலர் - இடையர்.
நாவலர் - கற்றவர், புலவர்.
பாவலர் - கவிகள், புலவர்.
மாவலர் - குதிரைப்பாகர், யானைப்பாகர்.
மேவலர் - பகைவர்.
காவலன் - அரசன், தலைவன்.
கோவலன் - கண்ணகி கணவன்.
சேவலன் - கந்தக்கடவுள்.
ஆவல் - ஆசை, வளைவு.
ஏவல் - ஆணைசெலுத்தல், வியங்கோண்முற்று.
ஓவல் - ஒழிதல், வருந்தல், வியங்கோண்முற்று.
காவல்-அரண், காத்தல், சிறைச்சாலை, மதில், வியங்கோண்முற்று.
கூவல் - அழைத்தல், கிணறு, சொல்லுதல், பள்ளம், வியங்கோண்முற்று.
கோவல் - திருக்கோவலூர்.
சீவல் - சீவுதல், வியங்கோண்முற்று.
சேவல் - காவல், கோழி, மயிலொழிந்த பறவையாண்.
தாவல் - தாண்டல், பாய்தல், வியங்கோண்முற்று.
தூவல் - சிந்தல், மழைபெய்தல், மழைத்துளி, மழைத்தூவல், வியங்கோண்முற்று.
நாவல் - ஒருவகைமரம், நெற்போர் தெழிக்கும் பகட்டினங்களைத்துரப்பதோர் சொல்.
நீவல் - தடவல், துடைத்தல், வியங்கோண்முற்று.
பாவல் - பாதக்குறடு, வியங்கோண்முற்று.
பூவல் - சிவப்பு, தூரவு.

மேவல் - ஆசைப்பெருக்கம், உண்டல், வியங்கோண்முற்று, விரும்பல்.
வாவல்-தாண்டல், வியங்கோண் முற்று, வெளவால்.
வேவல் - வெந்தழிதல், எரிதல்.
சீவனம் - உயிர்வாழ்தல், நீர்.
பாவனம் - தூய்து, தூய்மை செய்வது.
காவலன் - இந்திரன்.
சீவன் - உயிர், வியாழம்.
தேவன் - அருகன், கடவுள்.
பாவல் - கவி.
நாவாய் - இரேவதிநாள், மரக் கலம்.
மோவாய் - தாடி.
ஆவி - உயிர், உயிர்ப்பு, குளம், கொட்டாவி விடுவென்னே வல், பிட்டு, புகை, வாசனை.
காவி - கருங்குவளை, காவிக்கல்.
சாவி - உலர்ந்தபயிர், பதர்.
தீவி - புலி.
தூவி - அன்னத்திறகு, இறகு, மயிற்றோகை, வினையெச்சம்.
தேவி - காளி, துர்க்கை, பார்வதி, மனைவி.
நாவி - கஸ்தூரி மிருகம்.
நீவி - கொய்சகம், சீலை, வினை யெச்சம்.
ஓவியம் - சித்திரம்.
காவியம் - காப்பியம்.
நீவியம் - சீலை.
ஆவியர் - வேடர், வேளாளர்.
ஓவியர் - சித்திரக்காரர்.
கூவியர் - மடையர்.

ஆவிரம் - இடையரூர்.
கூவிரம் - தேரிடக்கியம், தேர், தேர்க்கொடிஞ்சி, வில்வமரம்.
தீவிரம் - சூரியகிரணம், நரகம், பெருங்கோபம்.
காவிரி - காவேரி.
கூவிரி - தேர்.
கூவிளம் / மாவிளம் } வில்வமரம்.
எவ்வு - அம்பு, செலுத்தென்னே வல், வருத்தம்.
சாவு - பிசாசம், மரணம்.
தாவு - குதிரை, நடை, தாவென் னேவல், பகை, பற்றுக்கோடு, வருத்தம், வலி.
தீவு - ஆற்றிடைக்குறை, கடலி டைக்குறை, சுவை.
தூவு - ஊன், தூவென்னேவல்.
நோவு - நோய்.
மேவு - ஆசை, மேவென்னேவல்
வீவு - சாவு.
வேவு - ஒற்று, வேதல், வேவென் னேவல்.
தாவுதல் - தாண்டல், பரத்தல்.
வாவுதல் - கடத்தல்.
கோவெனல்- அநுகரணவோசை.
மாவெனல் - அழைத்தல்.
வாவெனல் - அழைத்தல்.
கோவை - அணிவடம், ஓர்வகைக் கொடி, ஓர்வகைநகர், ஓர் வகைப்பிரபந்தம், கோத்தல்.
தேவை - ஓர்வகையூர்.
பாவை - சித்திரப்பாவை, பெண், மதில்.

பூவை-காயாமரம், நாகணவாய்ப் புள், பெண்.

ழ

ஏழகம் - செம்மறிக்கடா, துருவாட்டேறு.
காழகம் - ஆடை, கடாரமென்னு மூர், கருமை.
மேழகம் - ஆழ்தல்.
ஈழம்-கள், சிங்களதேசம், பொன்.
சோழம் - ஓர்தேசம்.
தோழம் - தொழுவம்.
வேழம் - கரும்பு, கொறுக்கை, மூங்கில், யானை.
ஆழல் - ஆழ்தல், கறையான், வியங்கோண்முற்று.
கேழல் - பன்றி.
சாழல் - ஓர்வகை விளையாட்டு, கரடி.
குழல்-ஆராய்தல், இடம், கருத்து, குறிப்பு, வியங்கோண்முற்று.
ஞாழல் - குங்குமமரம், கோங்கு மரம், புலிநகம்.
நீழல் - ஒளி, நிழல், நோய்.
மோழல் - பன்றி.
சோழன் - தமிழ் மூவேந்தரி லொருவன்.
தோழன் - பாங்கன்.
ஆழி-கடல், சக்கரம், தேருருளை, மோதிரம், யானைக்கைநுனி, வட்டம்.
ஊழி - உறைகாலம், பூமி, யுக முடிவு.
காழி - சீகாழி.
கோழி - உறையூர், கோழிப் பறவை.
குழி - உச்சி, உச்சிக்கொண்டை, கடல், குளம், சுனை, யானை முகபடாம்.
சோழி - ஓர்வகைக்கல்.
தாழி - குடம், சாடி, பரணிநாள்.
தோழி - பாங்கி.
நாழி - அளக்குநாழி, உட்டுளை, பூரட்டாதி.
பாழி - அகலம், உரை, ஊர், குகை, சயனம், தேவர்கோவில், பகைவரூர், பெருமை, மருத நிலத்தூர், முனிவர்வாசம், வலி.
பூழி-குழைசேறு, சேற்றிலெழுங் குமிழி, பராகம், புழுதி.
மூழி - அகப்பை, துடுப்பு, மத்து.
மேழி - கலப்பையிலோர்கருவி.
வாழி - இடைச்சொல், வியங் கோண்முற்று.
வீழி - ஓர்வகைச்செடி.
நாழிகை-உத்திரட்டாதி, நாழிகை
நோழிகை - நூலின்றூர்.
காழியர் - வண்ணார்.
மேழியர் - மருதநிலமாக்கள், வேளாளர்.
நூழில் - குவிதல், கொடிக்கொத் தான், கொலை, படர்கொடி, யானை.
பூழில் - அகில்.
ஏழை - அறிவில்லான், தரித் திரன்.

கூழை - இறகு, கடையின்மை, சேறு, நடு, படைப்பின்னணி, படைவகுப்பு, பெண்மயிர், பொன், மயிற்றோகை.
கோழை - கொடுமை, கோழை.
தாழை - தாழைமரம், தென்னமரம்.
நூழை - நுண்மை.
பீழை - துன்பம்.
பூழை - கோபுரவாயிற்கதவு விட்டெப்புகும்வழி.
பேழை - பெட்டி.
மாழை - அழகு, அறிவின்மை, உலோகக்கட்டி, ஓலை, திரட்சி, புளிமா, பொன், மாமரம்.
மூழை - துடுப்பு, மத்து, முகவை.
மோழை - கஞ்சி, கொம்பின்மை.
வாழை - வாழைமரம்.
ஊழ் - ஊழ்த்தலைச்செய்யென்னேவல், குணம், பகை, பழமை, முறை, வெயில்.
எழ் - ஓர்வகையெண்.
காழ் - ஒளி, காழெனேவல், பருக்கைக்கல், பளிங்கு, மணிவடம், வைரம், விதை.
கீழ் - ஈனம், எழனுருபு, கடிவாளம், கிழக்கு, கீழெனேவல், பள்ளம், மறதி.
கூழ் - சோறு, பயிர், பொன்.
கேழ் - உவமை, ஒளி, நிறம்.
தாழ் - சுவர்ப்புறத்து நீண்டவுத்திரம், தாழ்க்கோல், தாழெனேவல்.
பாழ் - பாழ்த்தல்.
பேழ் - பெருமை.
யாழ் - அச்சுவினிநாள், திருவாதிரை நாள், மிதுனவிராசி, வீணை.
வீழ் - மரவிழுது, வீழெனேவல்.
மாழ்கல் - சாதல், மயக்கம், மேவல், வியங்கோண்முற்று.
மூழ்கல் - முழுகல், வியங்கோண்முற்று.
வாழ்க்கை - ஊர், செல்வம், மருதநிலத்தார், மனைவி, வாழ்தல்.
வீழ்க்கை - சோதிநாள், வீழ்த்தல்.
ஆழ்தல் - அழுந்தல், தாழ்தல்.
கீழ்தல் - கிழித்தல், பிளத்தல்.
சூழ்தல் - கருதல், சூழ்ந்திடல், பிற்படை.
தாழ்தல் - ஆசை, ஆசைப்பெருக்கம், தங்கல், வணங்கல்.
போழ்தல் - பிளத்தல்.
மாழ்தல் - சோம்பல், மயக்கம்.
வாழ்தல் - வாழ்வு.
வீழ்தல் - ஆசை, ஆசைப்பெருக்கம், மேவல், விழுதல்.
ஆழ்த்தல் - கட்டல், தாழ்த்தல், வியங்கோண்முற்று.
ஊழ்த்தல் - ஊன், செவ்வி, நினைதல், பதனழிவு, புலால், மடித்தல்.
காழ்த்தல் - கார்த்தல்.
தாழ்த்தல் - தாழ்த்துதல், மந்தம், வியங்கோண்முற்று.
பாழ்த்தல் - பாழாதல்.
மூழ்த்தல் - மூழ்குவித்தல், மொய்த்தல், வியங்கோண்முற்று.

வாழ்த்தல் - துதித்தல், வியங்கோண்முற்று.
வீழ்த்தல் - வியங்கோண்முற்று, விழுவித்தல்.
கீழ்வாய் - தாடி
பேழ்வாய் - பெருவாய்.
தாழ்வு - ஈனம், பள்ளம்.
வாழ்வு - முறைமை, வாழ்தல்.

ள

காளகம் - காளம்.
கோளகம்-பட்டுச்சீலை, மண்டலிப்பாம்பு, மிளகு
தாளகம் - ஓர்வகைமருந்து.
காளம் - எட்டிமரம், கருமை, சிறுசின்னம், சூலம், நஞ்சு, மேகம்.
கோளம் - திரண்டவடிவு.
சோளம் - ஓர்வகைப்பயிர்.
தாளம் - ஓர்வகைவாச்சியம்.
நாளம் - உட்டொளை.
நீளம் - தூரம்.
மேளம் - பலவாச்சியக்கூட்டம்.
வாளம் - சக்கரவாளகிரி, சக்கரவாகப்புள், வளைவு, வாள்.
சாளரம் - பலகணி.
வாளரம் - படையராவுமரம்.
ஆளல் - ஆளுதல், வியங்கோண்முற்று.
கீளல் - கிழித்தல், வியங்கோண்முற்று.
சூளல் - சபித்தல்.
நீளல்-ஓடல், தூரம், வியங்கோண்முற்று.
மாளல் - சாதல், வியங்கோண்முற்று.
மீளல் - திரும்பல், வியங்கோண்முற்று.
மூளல் - மூளுதல், வியங்கோண்முற்று.
எளனம்-அவமதிச்சிரிப்பு, நீக்கல்.
மேளனம் - கூட்டம்.
ஆளன் - கடவுள், தலைவன், நிருபன், புருஷன்.
ஊளன் - ஆணரி.
கேளன் - தோழன்.
கோளன் - கோளுரைப்போன்.
தாளாண்மை - புயவலி.
வாளாண்மை - படைவலி.
வேளாண்மை - ஈகை, உபகாரம், மெய்.
தாளாளர் - வைசியர்.
வேளாளர்-ஈகையாளர், காராளர்.
ஆளி - ஆளுவோன், ஒழுங்கு, கரைப்பொது, சிங்கம், செய்கரை, யாளி.
ஒளி - ஒழுங்கு, யானைக்கூட்டம்.
காளி - அட்டாதசவுபபுராணத்தொன்று, காளி, சிங்கம், பார்வதி.
கீளி - ஓர்வகைமீன், திருமால்.
கூளி - உறவு, எருது, குற்றம், தொகுதி, பூதம், பெருங்கழுகு, பேதம் பேய், பொலியெருது.
கேளி - தெங்கு, மகளிர் விளையாட்டு.
கோளி - அத்திமரம், ஆலமரம், கொள்வோன்.

சாளி - சாளிப்பை, பெருச்சாளி.
சூளி - ஆண்மயிர்.
சோளி - இறுங்கு, பை.
ஞாளி - கள், நாய்.
தாளி - அனுடநாள், ஓர்வகைக் கொடி, தாளியென்னேவல், பனைமரம்.
தூளி-குதிரையினுர்ப்பு, பராகம், புழுதி.
தேளி - ஓர்வகைமீன்.
நாளி - கள், நாய்.
நீளி - நெடியவன், பதுமநாபன்.
பாளி - அடையாளம், ஓர்பாஷை, பாசறை.
போளி - அப்பவர்க்கம்.
மீளி - அரசன், திண்ணியன், பாலைநிலத்தலைவன், பெருமை, மேன்மகன், வலி.
மூளி - நெருப்பு, விகாரி.
யாளி - சிங்கம், சிங்கவிராசி, யாளி.
வாளி-அம்பு, ஓர்வகைக்காதணி, வட்டமாயோடல்.
ஞாளிகம்
நாளிகம் } வள்ளைச்செடி
கோளிகை-பெண்கழுதை, பெண் குதிரை.
சாளிகை-சாடி, பணப்பை, வண்டு.
சூளிகை - யானைச்செவியடி.
சோளிகை - ஓர்வகைக்கூடை.
மாளிகை - அரசன்மனை, வீடு.
தாளிதம் - தாளிப்பு.
தூளிதம் - தொளையுடையதாகப் பண்ணப்பட்டது.
பாளிதம் - கண்டசருக்கரை, கருப்பூரம், சோறு, பட்டுச்சீலை, பாற்சோறு.
ஆளியூர்தி - காளி, துர்க்கை.
ஞாளியூர்தி - வைரவன்.
ஊளை - மரியூளை.
காளை - ஆண்மகன், இளையோன், ஏறு, கட்டிளமையோன், பாலை நிலத்தலைவன்.
கூளை - குறுமை, சிறுமை.
சூளை - குயவன்சூளை, வேசி.
பாளை - கமுகுதெங்குபனைமுதலியவற்றின் பாளை.
பூளை - இலவம்பஞ்சு, ஓர்வகைப் பூடு.
மூளை-தலைமுதலியவற்றின்மூளை.
வாளை - ஓர்வகைமீன்.
வேளை - ஓர்வகைப்பூடு, காலம்.
ஆள் - அடிமை, ஆடவர், ஆறு தலைச்செய்யென்னேவல்.
கேள் - உறவு, கேளென்னேவல், சிநேகம்.
கோள் - இடையூறு, குணம், கொலை, கொள்ளல், கோள், தீமை, நவக்கிரகம், நாள், புறங்கூறல், பொய், வலி.
சூள் - ஆணை.
தாள் - ஆதி, கால், முயற்சி.
தூள் - புழுதி, பூந்தாது.
தேள் - அனுடநாள், தேள், விருச்சிக விராசி.
தோள் - கை, புயம்.
நாள் - அச்வினிமுதலியவிருபத்தேழுநாள், காலம்.

நீள் - உயர்ச்சி, ஒளி, நீளென்னேவல்.
பீள் - கருப்பம், பயிரிளங்கதிர்.
மாள் - இறவென்னேவல், மாட்சிமை.
வாள் - ஒளி, கத்தி.
வேள் - ஆண்மகன், குமரன், மன்மதன்,
கேள் - கல்வி, காது.
வேள்வி - ஆராதனை, ஈகை, ஓமகுண்டம், மகநாள், யாகம்.

ற

ஆறல் - ஆறுதல், வியங்கோண்முற்று.
ஊறல் - திருவூறல் என்னுஞ் சிவஸ்தலம், தக்கோலம், வியங்கோண்முற்று.
ஏறல் - ஏறுதல், வியங்கோண்முற்று.
கீறல் - எழுதல், கிழித்தல், வியங்கோண்முற்று.
கூறல் - சொல்லுதல், வியங்கோண்முற்று.
கோறல் - கொல்லல்.
சாறல் - உழக்கல்.
சீறல் - அதட்டல், சினக்குறிப்பு, பெருங்கோபம், வியங்கோண்முற்று.
தேறல் - தங்கல், நிச்சயம், வியங்கோண்முற்று.
நாறல் - தோன்றல், மணத்தல், முளைத்தல்.
நூறல் - அழித்தல், வியங்கோண்முற்று.
பாறல் - இடபவிராசி, எருது, ஓடல், பொதியெருது, பொருதல், வியங்கோண்முற்று.
வீறல் - வியங்கோண்முற்று, வீறுதல்.
சூறன் - மூஞ்சூறு.
மாறன் - திருமாலடியாருள் ஒருவர், பாண்டியன்.
ஆறு - ஆறுதலைச்செய்யென்னேவல், ஒழுக்கம், ஓர்வகையெண், நதி, வழி.
ஈறு - உப்பளம், முடிவு.
ஊறு - இடையூறு, ஊறென்னேவல், கொலை, தீண்டல், தீமை.
ஏறு - அச்வினிநாள், இடபவிராசி, இடி, எருது, எருமை, ஏறென்னேவல், கவரி, சங்கு, சுறா, பசு, பன்றி, புல்வாய், மரைமானிவற்றினாண், வியங்கோண்முற்று.
காறு - அளவு, கொழு.
கீறு - எழுத்து, கீறென்னேவல், பிளப்பு.
கூறு - கூறென்னேவல், பங்கு, பாதி.
சாறு - கள், குலை, கொத்து, திருவிழா.
சூறு - குதம், மூஞ்சூறு.
சேறு - இனிமை, கள், கும்பி, தித்திப்பு, திருவிழா, வினைமுற்று.
சோறு - சாதம், பரணிநாள்.
தாறு - அளவு, இருப்புமுள், ஈந்து கமுகுவாழையிவற்றின் குலை, வில்லின்குதை.

தூறு - கூட்டம், சிறுசெடி, தூறென்னேவல், பழிச்சொல்.
தேறு-தேறென்னேவல், தேற்று மரம்.
தோறு - தொழிற்பயில்வையும் காலப்பொருளையும் தருமோ ரிடைச்சொல்.
நாறு - நாற்றுமுடி, நாறென்னே வல்.
நீறு - திருநீறு, நீறென்னேவல், பராகம்.
நூறு - ஓர்வகையெண், நூறென் னேவல்.
பாறு-பருந்து, பாறென்னேவல், மரக்கலம்.
பீறு - உருவென்னேவல், பிற வென்னேவல்.
பேறு - இலாபம்.
மாறு - கைம்மாறு, சிறுகொம்பு, துடைப்பம், மாறென்னேவல்.
யாறு - ஆறு.
வீறு - தனிமை, புண்ணியம், பெருமை, விளக்கம், வீறென் னேவல், வெறுப்பு.
வேறு - குறிப்பு, வினைமுற்று, வேற்றுமை.
ஆறை - ஆற்றூர்.
கூறை - சீலை.
சூறை - கொள்ளை, சுழல்காற்று.
நூறை - மலங்குமீன்.
பாறை - திட்டை.
ஊற்றம் - அசைவின்றிநிற்றல், அறிவுடைமை, ஆற்றல், பற் றுக்கோடு, புகழ்.
ஏற்றம் - ஏற்றமரம், சினம்.
தேற்றம்- கருமமுடிக்குந் துணிவு, நிச்சயம்.
தோற்றம் - ஏற்றமொழி, சொல், பிறப்பு, மகன், வலி.
நாற்றம் - கள், வாசனை.
மாற்றம் - சொல், பகை, வேற்று மை.
வீற்றம் - வேறுபாடு.
ஆற்றல் - அதிகம், செய்தல், ஞானம், நிலையுடைமை, பரித் தல், பொறை, மிகுதி, முயற்சி, வலி, வியங்கோண்முற்று.
ஊற்றல்-பெய்தல், வியங்கோண் முற்று.
ஏற்றல் - அடுக்குதல், இரத்தல், உணர்த்தல், எதிர்த்தல், எழும் பல், கொள்ளல், வியங்கோண் முற்று.
சாற்றல் - சொல்லுதல், வியங் கோண்முற்று.
தீற்றல்-உண்பித்தல், மேற்பூசல்.
தூற்றல் - தூற்றுதல், பழிகூறல், வியங்கோண்முற்று.
தேற்றல் - தேற்றுதல், வியங் கோண்முற்று.
தோற்றல்-தோல்வி, தோன்றல், பிறத்தல், முளைத்தல், வியங் கோண்முற்று.
நூற்றல் - நூற்குதல்.
நோற்றல் - தவஞ்செய்தல், பொ றுத்தல்.
போற்றல் - பாதுகாத்தல், புகழ் தல், வணங்கல், வியங்கோண் முற்று.

மாற்றல் - கொடாமை, மாற்று
தல், வியங்கோண்முற்று.
ஆற்றார்-தரித்திரர், விருந்தினர்.
போற்றார்
மாற்றார் } பகைவர்.
ஆற்று - ஆற்றென்னுமேவல்,
தலைக்கடை.
ஊற்று - ஊற்றென்னேவல்,
ஊன்றுகோல், நீரூற்று.
காற்று - சோதிநாள், வாயு.
கீற்று - கீரல்.
கூற்று - காலன், சொல், நாள்.
வீற்று - தனிப்பாடு, வேறுபாடு.
ஆற்றுவித்தல் - உறுதிசெய்தல்,
தணிப்பித்தல், வலிதருதல்.
தோற்றுவித்தல் - உண்டாக்கல்.

ன

ஆனகம் - தம்பட்டம், துந்துபி,
தேவதரு, மேளம்.
ஊனகம் - உடல்.
கானகம் - காடு.
சானகம் - வில்.
சோனகம்-ஓர்தேசம், பதினெண்
படையிலொன்று.
பானகம் - குடிப்பன.
போனகம் - சோறு.
வானகம் - சுவர்க்கம், வெளி.
கானமா - காட்டுப்பசு, காட்டு
விலங்கு.
நானமா - கஸ்தூரிமிருகம்.
மானமா - கவரிமா.
ஈனம் - இழிவு, குறைபாடு.
ஊனம் - ஈனம், குறைபாடு.
ஏனம் - எழுத்தின்சாரியயை,
ஓலைக்குடை, கருவி, பன்றி,
பாவம்.
ஓனம் - எழுத்தின்சாரியை.
கானம் - இசைப்பாட்டு, காடு,
வாசனை, வானம்பாடி.
சீனம் - ஓர்தேயம், பதினெண்
பாடையிலொன்று.
சூனம் - பூமலர், மான்.
சேனம் - பருந்து.
ஞானம் - அறிவு, கல்வி, நல்லொ
ழுக்கம்.
தானம் - இடம், கொடை, தேவ
லோகம், யானைமதம், வலி.
நானம் - கஸ்தூரி, கவரிமா,
குளித்தல், வாசனை.
நூனம் - குன்றல், நிச்சயம்.
பானம் - கள், குடித்தல், துவை,
பருகுவன.
பீனம் - பருமை, பாசி.
பேனம் - நுரை.
மானம் - அபிமானம், அளவு,
உவமை, குற்றம், பெருமை,
வலி, வெட்கம்.
மீனம் - மீனவிராசி, மீன்.
மோனம் - மௌனம்.
யானம்-கள், சிவிகை, மரக்கலம்.
வானம் - ஆகாயம், உலர்ந்தமரம்,
மழை.
ஈனர் - இழிந்தவர்.
ஊனர் - ஆன்மாக்கள், ஊனின்
போர், ஊன்விற்போர்.
கானர் - கந்தருவர், பாணர்,
வேடர்.
சீனர் - ஓர்தேயத்தவர்.

ஞுனர் - ஊன்விற்போர்.
தீனர் - இரப்போர்.
தேனர் - திருடர்.
மோனர் - முனிவர்.
ஈனல் - ஈன்றல், கதிர், வியங்கோண்முற்று.
ஏனல் - செந்தினை, தினைப்புனம், பைந்தினை.
கானல் - உப்பளம், ஒளி, கடற்கரைச்சோலை, கழி, சூரியகிரணம், பேய்த்தேர்
கூனல் - கோணல், சங்கு, பிறை, வியங்கோண்முற்று.
பானல் - கருங்குவளை, மருதநிலம், வயல்.
மானல் - ஐயம், ஒத்தல், மயக்கம், வியங்கோண்முற்று.
வேனல் - குறிஞ்சிநிலமாக்கள், முல்லைநிலமாக்கள், வேடர்.
தானவர் - அசுரர்.
மானவர் - படைவீரர், மனிதர், மானமுடையோர்.
கானவன் - கானவன், குரங்கு.
தானவன் - அசுரன், சந்திரன்.
மீனவன் - பாண்டியன்.
வானவன் - சேரன், பிரமன்.
ஆனனம் - முகம்.
ஊனம் - குறைவு வெள்ளி.
கானனம் - காடு.
ஊனன் - குறைவுள்ளோன்.
ஈனன் - குலமில்லான்.
கூனன் - கூனுள்ளோன்.
சேனன் - ஓர்தேயத்தான்.
ஞானன் - ஞானமுள்ளோன், பிரமன்.
தீனன் - தரித்திரன்.
வேனன்- பிருதுமன்னன்தந்தை.
ஆனுமை-உத்திராடம், நீங்காமை.
கோனுமை - தவஞ்செய்யாமை, பொறுமை
கோனார் - இடையர்.
மானார் - பகைவர், மாதர்.
ஆனி-ஓர்மாதம், கேடு, கேட்டை, பொருந்தநதி, வேட்டுக்குருத்து.
கூனி - ஓர்மீன், கூனுள்ளாள், வசவி.
ஞானி - அருகன், பிரமன்.
தானி - தானத்தையுடையது.
பானி - படை, பானஞ்செய்வோன்.
மானி - மானமுடையோன்.
மேனி - உடலுருவம், நிறம், வடிவு.
யோனி - காரணம், பெண்குறி.
வானி - கூடாரம், படை, மேற்கட்டி, விருதக்கொடி.
ஆனியம் - நாள், பருவம், பொழுது, மூலநாள்.
சூனியம் - பாழ்.
தானியம் - பண்டம்.
பானியம் - நீர்.
மானியம் - அரசர்கள் சம்மானத்தால் விடுநிலம், மரியாதைக்குரியது.
ஆனு - இனிமை, நன்மை.
சானு - மலைச்சாரல், முழக்கம்.
சூனு - மகன்.

தேனு - எருமை, களவு, காமதேனு, குதிரை, தேவப்பசு, பசு.

பானு - சூரியன்.

ஆனேறு - இடபம்.

தேனேறு - ஆண்வண்டு.

மானேறு - உத்திரநாள், கலைமான்,

மீனேறு - மகரமீன்.

வானேறு - இடி.

ஆனை - யானை.

எனை - மலங்குமீன், மற்று.

கூனை - கருப்பஞ்சாறகூன், வேள்விக்குண்டம்.

சேனை - ஆயுதம், கடைவீதி, படை.

சோனை - சொரிதல், திருவோணநாள், விடாமழை.

தானை - ஆயுதப்பொது, அசு, படை.

பானை - மிடா.

பூனை - பூசை.

மேனை - மலையரையன்தேவி.

மோனை - ஆதி, ஓர்வகைத்தொடை.

யானை - வடதிசைப்பாலன் குறி, வாரணம்.

ஆன் - ஆண்பால்விகுதி, (உ-ம். வேளாளன்) சாரியை, (உ-ம் ஒருபான்) பசுப்பொது, பெண்பசு, வேற்றுமையுருபு, (உ-ம். உரனென்னுந்தோட்டியானோரைந்துங்காப்பான்.)

ஊன் - தசை.

கான் - எழுத்தின்சாரியை (உ-ம் ஐகான்) காடு, மணம்.

கூன்-ஆந்தை, கூனென்னேவல், நத்தை, வளைவு.

கோன் - அரசன், எப்பொருட்குமிறைவன்.

தான் - அசைச்சொல், (உ-ம்-நீதான்) படர்க்கைப்பொதுப்பெயர்.

தீன் - உணவு.

தேன்-கள், பெண்வண்டு, வண்டு, வாசனை.

நான்-தன்மையொருமைப்பெயர்.

நோன் - பெருமை, வலிமை.

பான் - எதிர்காலவிடைச்சொல், (உ-ம் உண்பான் வந்தான்.)

பேன் - ஓருயிர்.

மான்-உருவம், நவ்வி, மகரமீன், மகரராசி, விலங்கின்பொது.

மீன் - நெய்தற்பறை, மகரமீன், மச்சம், விண்மீன்.

வான் - ஆகாயம், எதிர்காலவிடைச்சொல் (உ-ம். கொல்வான் குடித்தானை கொண்டெழுந்தான்) பெருமை, மழை மேகம்.

ஆன்மா - உயிர்.

கான்மா - பன்றி.

கோன்மை - தலைமை.

நோன்மை - தவம், பெருமை, பொறுமை, கலி.

பான்மை - குணம்.

மேன்மை - பெருமை.

ஆன்றல் - அகலம், மாட்சிமை, மிகுதி.

ஈன்றல் - உண்டாதல், பெறுதல்.
ஊன்றல் - சார்தல், தள்ளல், நடல், வியங்கோண் முற்று.
கான்றல் - கக்கல்.
கீன்றல் - கிழித்தல்.
கூன்றில் - தோண்டல்.
தோன்றல் - ஆண்மகன், இராசா, தமையன், மகன், முல்லைநிலத் தலைவன், வியங்கோண் முற்று.
நான்றல் - நாவல்.
நோன்றல் - தள்ளல், நிலைநிறுத் தல், பொறுத்தல்.
மான்றல் - மயக்கம்.
ஆன்றவர் - புலவர்.
ஈன்றவர் - இருமுதுகுரவர்.
சான்றவர் - அறிஞர்.
ஊன்றி - பாம்பு, வினையெச்சம்.
தான்றி - தான்றிமரம்.
தோன்றி - இரத்தம், காந்தள், வினையெச்சம்.
ஆன்று - அகன்று.
ஊன்று - சிறுத்தென்னேவல்.
சான்று - நடுச்சொலல், சாக்ஷி, வினையெச்சம்.
ஞான்று - இடைச்சொல், நாள், வினையெச்சம்.
ஆன்றோர் - அறிவுடையோர், புலவர்.
ஈன்றோர் - பெற்றவர்.
என்றோர் - சிநேகிதர்.
சான்றோர் - அறிஞர்.